தாய்வீடு

THAIVEEDU JUNE 2020 ஜூன் HOME & LIVING One Dollar www.thaiveedu.com info@thaiveedu.com

NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
Email: info@ramanhomecomfort.com
Scarborough : C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7

15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage 416.568.4301
VettyvelLaw Professional Corporation
Rishani Vettyvel
BARRISTER AND SOLICITOR BBA, LLB, LLM
Real Estate Law
416.261.1544

AEREN Thiyagarajah BEng
Realtor
aeren.realtor@gmail.com
Dir: 647-888 3500
DILEEP Thangavel
Realtor
dileep.realtor@gmail.com
Dir: 416-666 2300
BUS: 905 201 9977 | FAX: 905 201 9229
HomeLife/ Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும்
BonaFide Mortgage Solutions Inc.
Brokerage Lic# 10216
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca, 7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
வீடு என்பது தொடுவானம் அல்ல
கலங்கரை விளக்கு...
Thana Yoganathan
Sales Representative
416.418.5749 www.thanahomes.com
HOMELIFE LANDMARK REALTY INC.BROKERAGE* OFFICE: 905-305-1600

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440,
E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

RL RAMACHANDRAN LAW
PROFESSIONAL CORPORATION
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
J.D., B.Com (Honours)
Barrister & Solicitor
416-902-8225
VITHU@RAMACHANDRAN.LAW | FAX: 416-391-6056

Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage
7595 Markham Road, Unit 19 Markham, ON L3S 0B6
RE/MAX ROYAL PROPERTIES

UTHAYAN SIVARAJAH**
416.301.5555
SUGAN SIVARAJAH* 416.890.9999
RAJ SIVARAJAH** 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH*** 416.453.7777
ROYAL LEPAGE ignite
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com

நூலகம்

இணையத்தில் ஒரு நூல் உலகம்

www.noolaham.org

Your Trusted Realtor
Selling Investing
RE/ON Homes Realty Inc.
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
416.803.7344
www.reon.ca

விசேட சலுகை விலையில்
UNLIMITED INTERNET
TV - HOME PHONE
SMART HOME MONITORING
SAVE UP TO $1350
சுந்தர் சின்னத்தம்பி
416.908.6845
ROGERS

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd.,

www.inayam.net
inayam.net
416-400-6406
முற்றிலும் இலவசம்
தமிழ் நிகழ்வுகளின் சங்கமம்

MLT
RENTALS FOR HOUSEPARTY
416-625-1826
647-955-1721
Chair, Round Table, Tent, Square Table
Cake Table & Etc.

SRI NADARAJASUNDARAM
Sales Representative
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

Dr. Rajkumar Arulthasan
Forestbrook Pet Hospital
3-1105 Finch Ave, Pickering, ON L1V 1J7
Phone: 905-831-1118
Fax: 905-831-4119
info@forestbrookpethospital.com
www.forestbrookpethospital.com

RE/MAX ACE REALTY INC. BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

உடனடி வேலை வாய்ப்பு!
Toronto தொழிற்சாலையில்
காலை, மாலை, இரவு நேர வேலை வாய்ப்புகள்
Shinol inc.
போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு - 416-286-6375
(திங்கள் முதல் வெள்ளி 9:00மணி முதல் 5:00மணி வரை)

VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental · Commercial · Investment

Maliny Bridal
Bridal makeup, Arangretram makeup
And for all your makeup needs
for auspicious ceremonies
Maliny Bridal
H 416 497 0052 | C 416 670 6942
malinyb@hotmail.com
Specialized in saree pleating
Professional makeup expert with 25 years

"It's your Journey. I am Here to Help."
Ragu Mahesu
Cell 416-450-6833
Home Life Top Star Realty Inc. Brokerage
PHONE 905-209-1400 FAX 905-209-1403

MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent FSCO Lic: M08008759
1193A Brimley Rd. #7
Toronto, Ontario, M1C 5G3
T: 416.939.8789
F: 416.439.1965
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com

Uthayan Iyampillai
Sales Representative
Dir. : 416-827-1366
E-Mail : luk2410@gmail.com
Website : www.iyamhomes.com
Century 21
Century 21 Green Realty Inc.,
Off : 905-565-9565 Fax : 905-565-9522

Nadodi
EVENTS & TOURISM (India)
இந்தியாவில் உங்கள் இன்னிதுமனர்கள் மற்றும் அனைத்து சுதிசுற்று சம்பந்தமான தேவைகள் உங்களுக்காக ஆயிக்கப்படும்! மருத்துவ உதவிகள் வழி காட்டல்கள் அனைத்துவிதமான வசதிகளுடன் சுற்றுலாக்களும் மற்றும் வாகனவசதிகள் இவை அனைத்தும் உங்கள் நிதிநிலைக்குற்றார் போல் மிகச்சிறந்தமுறையில் செய்துதரப்படும்.
- Thusiyanthan K
+91 9677089577
+91 9941030100
- nadodiind@gmail.com
உங்கள் தேவைகள் அனைத்தும் எங்கள் சேவைகளில் மிளிரட்டும்

நம்பி வாங்க தம்பி பிரபாவிடம்
திரும்பி சந்தோசமா போங்க...
வங்கிகளில் MORTGAGE பெற்றுக்கொள்ள அழையுங்கள்
தம்பி பிரபா (416) 645 3027
அதிகுறைந்த வட்டி விதத்தில் ஆரம்பித்து
over $1 Million
வரை பெற்றுக்கொள்ளலாம்
TD Canada Trust · NATIONAL BANK · Manulife Bank · ICICI Bank · Scotiabank · B2B BANK · HomeEquity Bank · EQUITABLE BANK
MATRIX MORTGAGE GLOBAL LIC# 11108

தாய்வீடு
THAIVEEDU HOME & LIVING

வரலாற்றை வடிவமைக்கும் மறப்பும் நினைப்பும்

ஓரினத்தின் இருப்பையும் வரலாற்றையும் வலிமைப்படுத்திச் செல்வது நேர்த்தியான ஆவணப் பேணலே.

ஓரினத்தின் அசைவியக்கமானது, செயற்பாடுகளின் வழியே நிகழ்வுற்றுச் செய்திகளையும் தகவல்களையும் உருவாக்குகின்றது. இவை முறையாகப் பதிவுற்ற பின்னர் ஒரு வரலாற்றின் சான்றுகளுக்குரிய ஆவணங்களாகின்றன. ஆண்டுகள் தோறும் உருவாகும் இவை ஒழுங்கு நிரலில் சேகரிக்கப்பட்டு, கோர்வையாக்கப்படல் வேண்டும். தொடர்ந்து, வரலாற்று வழித்தடங்களுடன் இணைவுறும் உரிய இடங்களில் பாதுகாக்கப்பட வேண்டும்.

தமிழினம் தொடர்பாக, வரலாற்றாசிரியர்கள் சுட்டிக்காட்டும் பாரிய தவறுகளுள் ஒன்று, போதிய ஆவணப்பதிவுகளை உரிய காலங்களில் மேற்கொள்ளவில்லை என்பதுதான். இருந்த ஆவணங்கள் பலவற்றையும் முறையாகப் பேணத் தவறியதாற்றான் தமிழர் நிலத்தையும் பண்பாட்டையும் கையகப்படுத்த முயன்றோர் அவ்வாவணங்களை அழிக்கவும் மாற்றியெழுதவும் முற்பட்டனர். இந்நிலை இன்றுவரை தொடர்கின்றது.

இலங்கையில் அகழ்ந்தெடுக்கப்படும் பல தொல்லியற் சான்றுகள் இலங்கையின் பூர்வீக குடிகள் தமிழர்கள் என்பதைப் பல வழிகளிலும் நிறுவுகின்றன. கண்டெடுக்கப்படும் கல்வெட்டுகள், நாணயங்கள், முதுமக்கள் தாழிகள் என்பவற்றில் பண்டைய தமிழி எழுத்துகளே காணப்படுகின்றன. எல்லாளன் காலத்துத் தமிழ் நாணயங்களும் இப்போது கிடைத்திருக்கின்றன.

பலவினங்கள் வாழும் ஒரு நாட்டைப் பெரும்பான்மையினரின் அரசு ஆளும்போது, அந்நாட்டின் சட்டங்கள் பெரிதும் பெரும்பான்மையினரின் நலன்களையே பாதுகாக்கும். இவ்வாறான அரசுகள் சட்டங்கள் வாயிலாகவே சிறுபான்மையினரின் வரலாற்றை மாற்றியெழுத முற்படும். கனடாவின் பழங்குடி மக்கள் வரலாறு இதற்கு நல்ல சான்று.

இன்று, பலவிடங்களில் பௌத்த சின்னங்களைக் கண்டெடுப்பதாக இலங்கைத் தொல்லியற்றுறை கூறுவது ஐயத்துக்குரியது. உண்மையாக இருந்தாற்கூட, 2ம் 3ம் நூற்றாண்டுகளில் கணிசமான தமிழர் பௌத்தத்தைப் பின்பற்றியிருந்தனர். அந்தச் சான்றுகள் வடக்கிலும் உள்ளன. இதனால் இந்த நிலங்கள் சிங்களவருடையதாகிவிடா. ஆனால் பெரும்பான்மை அரசு தன்னினத்தின் நலன்களைப் பேணவே முயலும். ஆவணப் பேணலில் எம் தவறுகளுக்கு இது ஒரு சான்று.

எனவேதான் தமிழர் தமது வரலாறு சார்ந்த ஆவணங்களைப் பேணுவதில் தீவிரமாக இயங்கவேண்டும்.

சந்தித்த அவலங்களையும் பேரிடர்களையும் ஆவணப்படுத்துதல் மட்டுமல்ல, அவற்றைத் தொடர்ந்து நினைவுகளில் காவிச் செல்வதும் அவசியமாகும். ஓர் இனத்தின் தனித்துவ அடையாளம் மிக்க இருப்பு, சிறுகச் சிறுகச் சிதறுவதற்கு மறத்தலே பெரும் காரணமாகும். எப்போதுமே எதிரிகளுக்குச் சாதகமாக அமைவது இனத்தின் மறதியே.

யாழ். நூலகம் எரிக்கப்பட்டு 39 ஆண்டுகளாகின்றன. மறந்து கடந்து செல்வதற்குரிய துயரமல்ல அது. தலைமுறைகள் தோறும் அணையாது பேணப்பட வேண்டிய நினைவுத் தீ.

புலம்பெயர் தமிழர் மாறாத நினைவுகளோடே தம்மையும் தமது தலைமுறைகளையும் கட்டமைக்க வேண்டியவர்களாக உள்ளனர். தாயகத்துடனான இணைப்பைத் தொடர்ச்சியாகப் பேணவும் பல வடிவங்களில் அழிவுகளை எதிர்கொள்ளும் தாயக மக்களுக்கு உதவவும், மறத்தல் என்ற இயல்பை நாம் மறக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

■ ■ ■

முகப்பில்: பேராசிரியர் ப. புஸ்பரட்ணம்

Publisher & Editor : PJ. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜெ. டிலிப்குமார்

நிறுவன வரைகலைஞர் : கருணா

ஆலோசகர் குழு : அருண்மொழிவர்மன், சேரன், துஷி ஞானப்பிரகாசம், ஞானம் லெம்பட், கந்தசாமி கங்காதரன், பொன்னையா விவேகானந்தன், ரவிச்சந்திரிகா.

ஓவியங்கள் : ஆசை இராசையா (இலங்கை), டிராட்ஸ்கி மருது (இந்தியா), ஜீவா (இந்தியா), K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), ரமணி (இலங்கை), சௌந்தர் (இங்கிலாந்து), றஷ்மி (இங்கிலாந்து). எஸ். தர்மதாஸ் - செல்வன் (இலங்கை),

புகைப்படங்கள் : K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), சர்வேசன், துசியந்தன் துரைரத்தினம்.

தட்டச்சு : ஜீவா, சாம் டானியல்.

ஒப்புநோக்கல் : கௌரி, கந்தசாமி கங்காதரன்.

பொது உறவுத் தொடர்பு : குமணன் தம்பிஐயா

ரொறன்ரோ விநியோகம் : இராமநாதன் ரூபன், சசி, மெய்யழகன்.

மொன்றியால் தொடர்பு : சுகுமாரன் சின்னையா.

ஒட்டாவா தொடர்பு : அலெக்ஸ் சிவசம்பு: 1-613 -276-7253

அஞ்சல் முகவரி : Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0
Tel : 416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

Printed on recycled paper

எல்லாள மன்னன் வெளியிட்ட தமிழ் நாணயம்



- ப. புஸ்பரட்ணம்

இலங்கையில் கண்டெடுக்கப்படும் பண்டைய நாணயங்களில் பொறிக்கப்பட்டிருக்கும் தமிழ் எழுத்துகள் தமிழரின் குடியியல் தொன்மையை வெளிப்படுத்தும் வரலாற்றுச் சான்றுகள் ஆகின்றன.

சிறீலங்காவில் சர்வாதிகார ஆட்சி நிறுவனமயப்படுத்தப்படுகிறது
- நேரு குணரத்தினம்
படையதிகாரிகளின் பொறுப்புக்குமாறும் இலங்கையின் சிவில் நிர்வாகம்.

தொற்றுநிலை நெருக்கடியும் பணக்கவலையும்
- புஷ்பா கனகரட்ணம்
உள நெருக்கடியை உண்டுபண்ணும் தொற்றுநிலைக்காலப் பண நெருக்கடி.

தலையில் நிற்கும் ஆசனம்
- பாதுசா ஆனந்தநடராசா
ஆசனங்களின் அரசனான இவ்வாசனத்தை கற்பதற்கு சில காலங்கள் எடுத்தாலும் இவ்வாசனத்தின் பயன் அளப்பரியதாகும்.

கனடியத் தமிழ்ச் சமூகத்தின் ஓர் ஆளுமை - ஒட்டாவா சுரேஷ்
- பரா பார்த்தீபன்
சமூக செயற்பாட்டாளர் ஒட்டாவா சுரேஷ் பற்றிய நினைவுப் பகிர்வு.

'கவிஞன்' கவிதை இதழ்களின் முழுத் தொகுப்பு நூல் 57
தெளிவத்தை ஜோசப்

ஆறு சிறுகதைகள்: ஒரு பகுப்பாய்வு 59
தேவகாந்தன்

கண்ணீர் உறையும் கணங்கள் 64
சாம்ராஜ்

காஞ்சனையும் புகையில் தெரிந்த முகமும் 68
மைதிலி தயாநிதி

இலெமூறியா அல்லது குமரிக் கண்டம் 74
அ. கணபதிப்பிள்ளை

இலங்கையின் தொல்லியல் வரலாறு - முக்கியமான ஆய்வு நூல்கள் சிலவும் கட்டுரைகளும் 78
க. சண்முகலிங்கம்

அகஸ்தியர் இரண்டாயிரமும் செகராசசேகரமும் 82
பால. சிவகடாட்சம்

புதிய உலக ஒழுங்கில் தமிழ்த் தேசியத்தின் வகிபாகம் 87
ந. இரவீந்திரன்

வேரறுந்த நீரின் வரலாறு 90
உமை பற்குணரஞ்சன்

ஈழத்துத் துறைமுக இலக்கிய மரபு 94
செல்லத்துரை சுதர்சன்

ஒளிமயமான எதிர்காலம் 100
P. விக்னேஸ்வரன்

தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும் 108
நா. சுப்பிரமணியன்

இறுதி இலை 110
ஓ'ஹென்றி
தமிழில் என்.கே. மகாலிங்கம்

பனி விழும் பனை வனம் 113
செல்வம் அருளானந்தம்

மேலும் ஆக்க விபரங்கள் 7ம் பக்கம்

Funded by the Government of Canada | Canada

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு.
ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

நிறுவனமயப்படுத்தப்படும் சிறீலங்காவின் சர்வாதிகார ஆட்சி

- நேரு குணரட்ணம் -

சரியாக இரண்டரை மாதங்களுக்கு முன்பாக, அதாவது மார்ச் 17ம் நாள் பின்வருமாறு தலைப்பிட்டு ஒரு ஆய்வுக் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தேன். 'சிறீலங்கா இராணுவ ஆட்சியை நோக்கி நகர்வதை மேலும் வலுப்படுத்துகிறதா கொரொனா', என்பதே அந்தத் தலைப்பு. இன்று 75 நாட்களின் பின் திரும்பிப் பார்க்கையில், இராணுவத்தை மையப் படுத்திய சர்வாதிகார ஆட்சி ஒன்று நிறுவனமயப்படுத்தப்படுவதையே கண்கூடாகக் காணமுடிகிறது.

கடந்த ஆண்டு பிற்பகுதியில் கோத்தபாயா சனாதிபதியானதும், சிறீலங்கா சர்வாதிகார ஆட்சிக்கு மீண்டும் திரும்புகிறது என்றே பல வெளிநாட்டு ஆய்வுகளும் சுட்டி நின்றன. ஆனால் அது குறித்த பார்வையோ அல்லது அதை எதிர்கொள்வதற்கான மார்கமோ தமிழர் தரப்பிடம் என்றும் வெளிப்படவில்லை என்பது தான் பெரும் துயர்தரும் விடயம்.

சிறீலங்காவின் அரசியல் யாப்பிற்கான 19அ திருத்தச்சட்டம் சனாதிபதி ஒருவர் அமைச்சரவைப் பதவி ஒன்றை தன்வசம் வைத்திருப்பதைத் தடைசெய்கிறது. ஒரு வித்தில் சொல்வதானால் 1978ல் சர்வ அதிகாரம் கொண்ட சனாதிபதியாக ஜே.ஆர் ஜெயவர்த்தனா கொண்டுவந்த அரசியல் அமைப்பில் இருந்து, மாறுபட்டு சற்று பல்லுப் புடுங்கப்பட்ட சனாதிபதியாக முதன்முறையாக இன்று கோத்தாவே சனாதிபதியாக உள்ளார் என்பதே உண்மை. ஆனால் அவரோ இதுவரை இல்லாத அதிகாரங்களைக் கொண்டவர் போலவே நடந்து கொள்கிறார்.

தமது தமையனார் மகிந்தா தலைமையில் அமைச்சரவை கடந்த ஆண்டின் இறுதியில் அமைந்தபோது, அதில் யாரும் பாதுகாப்பு அமைச்சராகப் பதவி ஏற்கவில்லை. 28 அமைச்சுப் பொறுப்புக்கள் அறிவிக்கப்பட்டாலும், அவற்றை 16 அமைச்சர்களே பொறுப்பெடுத்துக் கொண்டனர். சமீபத்தில் காலமான ஆறுமுகம் தொன்டமான் மற்றும் டக்லஸ் தேவானந்தா உட்பட ஐவரைத் தவிர, ஏனையவர்கள் ஒன்றிற்கு மேற்பட்ட அமைச்சர்களாக பதவியேற்றனர். மகிந்தா மூன்றைப் பொறுப்பேற்றார். பாதுகாப்பு அமைச்சராக இன்றுவரை ஒருவர்கூடக் கிடையாது.

பின்னர் இணை அமைச்சர்களாக 38பேர் பதவியேற்றபோது மட்டும், தனது மூத்த சகோதரர் சாமல் ராஜபக்சவை பாதுபாப்பு இணையமைச்சராக பெயருக்கு கோத்தா பதவிப்பிரமாணம் செய்துவைத்தார். ஆனால் இன்றுவரை பாதுகாப்பு அமைச்சு விவகாரங்கள் குறித்து அவர் எதற்கும் வாய் திறந்ததே கிடையாது. மறுபுறத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக, முள்ளிவாய்கால் விவகாரத்தில் ஒரு போர்க்குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டுள்ள, இளைப்பாறிய மேஜர் ஜெனரல் கமல் குணரட்னவை நியமித்து, தானே அறிவிக்கப்படாத பாதுகாப்பு அமைச்சராக கோத்தா உள்ளார்.

அதபோன்று அமைச்சுக்களின் செயலாளர்களாக, இரு மேஜர் ஜெனரல்களை நியமித்தது, இராணுவ, கடற்படை மற்றும் விமானப்படை முன்னாள், இந்நாள் தளபதிகள் பலரை, அரச மற்றும் அரசி யல் கட்டுமானங்கள் பலவற்றில், பல்வேறு பதவிநிலைகளில் அமர்த்தியது என தன்னைச் சுற்றி பல்வேறு படிமானங்களில், பாதுகாப்புத்துறை சார்ந்த தன் விசுவாசிகளால் இன்று தனக்கு வலுச்சேர்க்கும் வகையில் அரணமைத்துள்ளார் கோத்தா.

இந்நிலையில்த்தான், மார்ச் மாதத்தில் கொரானா வைரஸ் தொற்று சிறீலங்காவிலும் தன் தடத்தைப் பதித்தது. இங்கும் மீண்டும் போர்க் குற்றவாளிகளில் முதன்மையானவராகக் கருதப்படும், இராணுவத் தளபதி சுவேந்திர டி சில்வாவை தலைமையாகக் கொண்ட, கோவிட்-19 செயலணி ஒன்றையும் கோத்தா அமைத்தார். அதை மையப்படுத்தி பாதுகாப்பு அங்கங்கள் அனைத்தும் அதில் ஒருங்கிணைக்கப்பட்டன.

இதில் பிரதமர் மட்டுமல்ல, அமைச்சரவை ஒன்றே முழுமையாகக் காணாமல் போனது. அனைத்து விவகாரங்களிலும் அமைச்சராக பாதுகாப்பு அமைச்சினூடாக தன் பாதுகாப்புப் படை விசுவாசிகள் சகிதம் கோத்தாவே எங்கும் நிறைந்திருக்கிறார். விஞ்ஞானம், சுகாதாரம் சம்பந்தப்பட்ட ஒரு விடயம், ஒரு பாதுகாப்பு விடயம் போன்றே கையாளப்படுகிறது. அதே வேளை அரசியல் அமைப்பிற்கோ அல்லது சட்டவாட்சிக்கோ தாம் மதிப்பளிக்கவோ அல்லது கட்டுப்படவோ போவதில்லை என்பதை மறைமுகமாகவும், அவ்வப்போது வெளிப்படையாகத் தெரிவிக்கவும் கோத்தா தயங்கவில்லை.

அதேபோன்று எந்தவொரு சர்வதேச அமைப்பையும் அனுசரிக்கப்போவதில்லை என்பதை வெளிக்காட்டு முகமாக, ஐ.நா மனித உரிமைகள் கவுன்சிலுடன், 2015ல் பொறுக்கூறல் விடயத்தில் சீறீலங்கா கொண்டிருந்த உடன்படிக்கையில் இருந்து வெளியேறியது மட்டுமன்றி, அவ்வாறான சர்வதேச அமைப்புக்கள் அனைத்திலும் இருந்து, அழுத்தம் கொடுக்கப்படுமானால் முழுமையாக வெளியேறவும் தயங்கப்போவதில்லை எனவும் வெளிப்படையாகவே மிரட்டியுமுள்ளார் கோத்தா.

இச்சூழலில் - கோவிட்-19 வைரஸ் தொற்று உலகை அரசியல், பொருளாதார மற்றும் சமூக ரீதியாக புரட்டிப் போட்டுள்ளதால், எழுந்துள்ள புதிய அசாதாரண சூழலை தமக்கு சாதகமாக பயன்படுத்த கோத்தா முனைவதையும் காண முடிகிறது. புதிய சூழலை தமக்கு சாதகமாப் பயன்படுத்தி, பல ஆட்சித் தலைமைகள் சர்வாதிகார ஆட்சி முறைமைக்குள் ஒளிந்து கொள்ள முயல்கின்றன. அதே வேளை, மக்கள் நலனைப் பாதுகாக்க என உருவாக்கப்பட்ட பல சர்வதேச நிறுவனங்கள் தற்போதைய நிலையில், மோசமான பலவீன நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

இவை அனைத்தையும் தனக்கான வலுநிலையாகக் கொண்டுவர, கோத்தா முனைகிறார். இவரது சர்வாதிகார ஆட்சி விரிவாக்கத்தில் முதன்மைக் குறியாக இம்முறை முஸ்லீம் சமூகமே இருந்தாலும், அவரால் ஏற்கனவே மோசமாக பலவீனப்படுத்தப்பட்டு, சிதைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழினத்தையும், அதன் இருப்பையும் தொடர்ந்தும் இல்லாதொழிக்கும் முயற்சிகளும், பல வடிவங்களில் தொடரவே செய்கின்றன. வல்லவனும் அடி சறுக்குவான் என்பது போல், அவரது செயற்பாடுகள் மற்றும் முன்னெடுப்புகளில் பல குறைபாடுகளும் பலவீனங்களும் வெளிப்படவே செய்கின்றன.

அவற்றை அடையாளம் கண்டு, அதில் பயணித்து தம்மை முன்நகர்த்தும் ஆற்றலை இன்றைய தமிழ்த் தலைமைகள் கொண்டிராததே பேரச்சம் தருகிறது. ஆகவே இன்று வேகமாக நிறுவனமயப்படுத்தப்பட்டுவரும் கோத்தாவின் சர்வாதிகார ஆட்சியை எதிர்கொள்ளும், அதனை சவாலுக்கு உட்ப்படுத்தும் முறைமை, ஆற்றல் சர்வதேச தளத்தில் வாழும் அறிவார்ந்த ஈழத்தமிழர் சமூகத்தில், குறிப்பாக இளைய சமூகத்திடம் உண்டு. அவர்களாவது இதில் உறுதியாக பயணிப்பார்களா? என்பதற்கான விடையைக் காலம் தான் சொல்லும்.

nehru.g@thaiveedu.com



இலங்கையில் கொரோனா: மறைந்து வருகிறதா? மறைக்கப்பட்டு வருகிறதா?

- கண்ணன் ராஜ் -

இலங்கைக்குள் கொரோனா நோய்த் தொற்று ஏற்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேலாகின்றது. கடுமையான நோய்த்தொற்று ஏற்படும் முன்னரே முன்னேற்பாட்டுடன் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்தது அரசு. முழுமையான ஊரடங்கு ஒரு மாதத்திற்கு மேல் நடைமுறையில் இருந்தது. சில அதி முக்கிய நோய்த் தோற்று வாய்ப்புள்ள பிரதேசங்கள் தவிர நாட்டின் பிற பிரதேசங்கள் கிழமையில் ஒரு தடவை சில மணி நேரங்கள் ஊரடங்கு தளர்வுடன் கண்காணிக்கப்பட்டன. அக்காலத்தில் ஏற்பட்ட உடனடியான உணவு நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு பல்வேறு தன்னார்வ அமைப்புகள் களத்தில் நின்று பணியாற்றின. அரசும் இறுதியில் சில உதவிகளை செய்தது. எவ்வாறெனினும் குறித்த காலம் மிகுந்த கட்டுப்பாட்டுடனேயே இருந்தது. விதிகளை மீறியதன் பெயரில் ஆயிரக்கணக்கானோர் நாடு முழுவதும் கைது செய்யப்பட்டனர். அரசின் தலைமை இராணுவ ஒழுங்குள்ளது, தற்போதைய தலைமை இராணுவத்தின் சகல பலங்களையும் அறிந்தது, ஆகவே இராணுவமயப்படுத்தப்பட்ட ஒழுங்கை உடனடியாக அதனால் நடைமுறைப்படுத்த முடிந்தது.

கடந்த சில வாரங்களாக ஊரடங்கு படிப்படியாக தளர்த்தப்பட்டு வந்திருக்கிறது, சிங்கள, முஸ்லீம் மக்களின் பண்டிகைக் காலங்களில் ஊரடங்கு மீண்டும் அமுலுக்கு வந்து, மக்கள் கூட்டமாகக் கூடுவதைத் தவிர்த்தது. இன்றுவரை அதிகம் மக்கள் கூடுமிடங்களில் இராணுவம் அல்லது பொலிஸ் கடமையிலிருக்கிறது. மக்களும் மெல்ல மெல்ல இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப வருகிறார்கள். பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள் இன்னமும் இயங்கத்தொடங்கவில்லை. உயர்தர மற்றும் சாதாரணதர மாணவர்களுக்கு பாடசாலைகள் தொடங்கும் வாய்ப்பு எதிர்வரும் நாட்களில் இருக்கிறது. மக்கள் திருமண வீடுகளுக்குச்செல்கிறார்கள், திருமண வீடுகள் பெருமெடுப்பில் இடம்பெறவில்லையாயினும் அனைத்து இடங்களிலும் முறையான சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படும் வாய்ப்பில்லை. இருபத்தி ஐந்து பேர் வரையில் தான் திருமண வீட்டில் பங்குபற்றவேண்டும் என்ற கோரிக்கை அரச தரப்பால் வைக்கப்பட்டிருந்தது, பின்னர் மண்டபங்களில் நடைபெறும் திருமணங்களுக்கு நூறு பேர் வரையில் பங்குபற்றலாம் என்று அறிவித்திருக்கிறார்கள். சுகாதார நடைமுறைகளை மக்கள் தான் அவதானமாகக் கண்காணிக்க வேண்டிய நிலை.

வைத்தியசாலைகளில் கொரோனா தவிர்ந்த பிற நோய்களால் பாதிக்கப்பட்டிருந்த பலரும் கடுமையான ஊரடங்குக் காலத்தில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்தனர். தற்போதுள்ள நிலையிலும் மிக அவசியம் தவிர்த்து மக்கள் வைத்தியசாலைகளுக்குச் செல்வதைக் குறைத்திருக்கிறார்கள். உள்ளூர் பஸ் போக்குவரத்துகள், மற்றும் வெளியூர் போக்குவரத்தும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது, முன்பு பனங்கிழங்கு அடுக்குவது போல் மக்களை அடுக்கிச் செல்லும் மினி பஸ்களில் எல்லாம் தனியிருக்கையில் ஒருவர் என்ற கணக்கில் செல்லும் மக்களை பார்க்க முடிகிறது. தேவையற்ற பயணங்களை முடிந்தளவு மக்கள் தவிர்க்கிறார்கள் என்றே அவதானிக்க முடிகிறது. இவ்விடர்காலம் மக்களின் கையிருப்பைக் கரைத்திருக்கிறது. அவர்களை இன்னும் இன்னும் கவனமாகக் காசைக் கையாளவும் சேமிக்கவும் பழக்கியிருக்கிறது. மக்கள் கொரோனாச் செய்திகளில் இப்போது மூழ்கியிருப்பதில்லை, அதிக பட்சம், எத்தனை பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், எப்பொழுது ஊரடங்கு என்ற கேள்விகளோடு சரி.

தற்போதுள்ள பெரும் கேள்வி பசி தான். சுற்றுலாத்துறையை நம்பி வாழும் இலங்கையர்கள் அதிகம் உள்ளனர். சிறு சிறு பொருட்கள் விற்பவர்கள் முதல் பெரும் விடுதிகளை வைத்திருப்பவர்கள் வரை திண்டாடும் நிலை. நிறைய வணிக முயற்சிகளும் தேக்கமடைந்துள்ளன. மக்கள் அத்தியாவசியமற்ற எதையும் வாங்கவில்லை. அத்தியாவசியம் என்பதற்குள் உணவும் மருந்தும் தான் அதிகம் கொள்வனவு செய்யப்படுகிறது. நீண்ட இடைவெளியின் பின் மதுச்சாலைகள் திறக்கப்பட்டபோது இரண்டு நாட்கள் முண்டியடித்தார்கள், பின்னர் அவை சாதாரணமாகவே இயங்கிக் கொண்டிருக்கின்றன. மக்களின் கொள்வனவு வீதம் மட்டுப்பட்டிருக்கும்போது பல்வேறு முயற்சியாளர்களின் நிலையில் தளம்பல் ஏற்படும், அவற்றை விற்க முடியாதபோது புதிய முயற்சியாண்மையாளர்களை நாம் இழக்க வேண்டி வரும். ஆனால், இந்த நிலைமைகளைக் கணக்கிலெடுத்துக் கொள்ளும் முயற்சியாளர்கள் காலத்திற்கேற்ற முயற்சிகளைக் கண்டுபிடிப்பதும் அவற்றை மக்களை நோக்கிக் கொண்டு செல்லவும் சிந்திப்பதே ஒப்பீட்டளவில் பலனளிக்கக் கூடியது. எவ்வாறிருப்பினும் பெருமளவு வணிக நிலையங்கள் விற்பனை குன்றியே உள்ளன. இவற்றை உடனடியாக மீட்டு எடுப்பது கடினம்.

மக்களின் கொள்வனவு வீதம் குறைவதும், கொள்வனவு செய்வதற்கான ஆற்றல் குறைவதும் வரும் காலங்களில் சில பண்பு மாற்றங்களை மக்களில் ஏற்படுத்தச்செய்யும் வாய்ப்பு உள்ளது. வருமானங்கள் குன்றிய நிலையில் உள்ள பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் எண்ணிச் செலவு செய்யும் நிலையிலிருக்கிறார்கள், நிவாரணப்பணிகளும் பெருமளவு குறைந்த நிலையில், மக்கள் தம்மாலான வழிகளில் தம் வாழ்க்கையைக் காப்பாற்ற உழைக்க வேண்டியிருக்கிறது. இந்த நிலைமைகள் சீராகும் போக்கை வரும் நாட்களை வைத்தே நாம் மதிப்பிட முடியும்.

இந்த நிலவரங்களின் பின்னணியில் மக்கள் அல்லாடும் போது, வழிகாட்டிகள் அற்று தாமே தம் திசை வழிகளைத் தீர்மானித்துக் கொண்டிருக்கும் போது, தமிழர் தரப்பின் அரசியல் நிலைமைகளை அவர்களின் பேசு பொருளாக்களையும் பிரச்சினைகளையும் நாம் பார்க்க வேண்டும். அவர்களுக்கு மக்கள் நலன் சார்ந்து என்ன பார்வையிருக்க முடியும் என்பதை இக்கால கட்டங்களை வைத்தே நாம் அவதானிக்க முடியும். அண்மைய வாரங்களில் இரண்டு முக்கிய கட்சிகளைச் சேர்ந்த இரண்டு பிரமுகர்கள் அளித்த இரண்டு வெவ்வேறு செவ்விகளில் அவர்கள் விடுதலைப் போராட்டம் சார்ந்து சொன்ன சில கருத்துக்கள் சமூக ஊடகங்களிலும் பொது வெளிகளிலும் பேச்சாய் மாறியிருக்கிறது. குறித்த கருத்துக்கள் தொடர்பில் கண்டங்கள், அறிக்கைகள், விவாதங்கள் என்று அனல் பரப்பிக் கொண்டிருந்தார்கள். யார் விடுதலைப் போராட்டத்தின் குத்தகைக்காரர்கள் என்ற இவ்விவாதங்கள் இக்காலச் சூழலில் எவ்வளவு அவசியம் என்பதை தலைமைகள் உணர வேண்டும். ஆனால் அவர்களின் ஆதார அரசியல் இலாபங்களில் தங்கியிருக்கும் இப்பேச்சுக்களை அவர்கள் கைவிடப் போவதில்லை. கொரோனாவைவிட மோசமான காலம் இலங்கைக்கு நெருங்கிக்கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் மக்களுக்குச் சொல்வதற்கு அறிக்கைகள் விடமாட்டார்கள். ஆம், இலங்கை அரசு மெல்ல மெல்ல எல்லாத் துறைகளிற்குள்ளும் இராணுவத்தினரை உள்ளெடுக்க ஆரம்பித்து விட்டது. மெல்ல மெல்ல இராணுவமயப்பட்ட இலங்கைக்கு நாம் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறோம். வடக்குமாகாண புதிய ஆளுநராக மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க அவர்கள் நியமிக்கப்படலாம் என்ற தகவல்கள் கூட அரசியல் வட்டாரங்களில் உலவ ஆரம்பித்திருக்கிறது.

தற்போதைய அரச தலைவர் ஒரு முன்னாள் இராணுவத் தலைவர், பாதுகாப்புச் செயலாளர். அதிகமும் இராணுவ ஒழுங்கின் மேல் நம்பிக்கையுள்ளவர், இலங்கை இராணுவமும் அவரை ஒரு பெருந்தலைவராகவே கணிக்கிறது. இராணுவத்தின் நன்மதிப்பை பெற்றவர். தற்பொழுது ஒத்திவைக்கப்பட்டிருக்கும் தேர்தல், இன்னும் நீண்டகாலம் ஒத்திவைக்க வாய்ப்புகள் குறைவு, நீதிமன்றம் சென்று தேர்தல் தொடர்பில் வேறு முடிவுகளை எடுக்க முனையும் எதிர்த்தரப்புகளை அரச தலைவர் மதிப்பார் என்று சொல்லும் அளவிலும் இல்லை. நீதிமன்ற முடிவுகளைக் கூட மீறும் வல்லமையும் சக்தியும் அவருக்கிருப்பதாகவே படுகிறது. எல்லாவற்றிலும் இராணுவமயமாக்கத்தினை வெற்றிகரமாகச் செய்வதன் மூலம் அவர் தன்னை ஒரு இரும்பு மனிதராக்கிக்கொள்கிறார், அவர் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு மட்டும் அரசியல் செய்பவராகவோ அதற்காகக்காய் நகர்த்துபவராகவோ தெரியவில்லை, அவர் அதற்கும் மேல் தன்னைப் பலப்படுத்திக் கொள்ள தனது நகர்வுகளைச் செய்து வருகிறார். இவற்றை எதிர்ப்பதற்கோ கேள்வி கேட்பதற்கோ அல்லது மக்களை அது குறித்து விழிப்புணர்வடையச் செய்யவோ போட்டி போட்டுக்கொண்டு அறிக்கை விடும் தலைமைகள் நம் மத்தியில் உள்ளனவா? மக்கள் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிகளை, உள நெருக்கடிகளைக் களைந்து ஆற்றுப்படுத்தும் தலைமைகள் நம்மத்தியில் உள்ளனவா? அல்லது தேர்தல் நெருங்கப்போகிறது எப்படியாவது வென்று விட வேண்டும் என்ற ஆசைகள் அற்ற மக்கள் நலன்களை நோக்கிய தலைமகள் நம்மிடம் உள்ளனவா? இந்தக் கேள்விகளை நாம் எழுப்பிப் பார்த்தல் சென்ற மாதம் நாம் எவை பற்றி அதிகம் தீவிரமாக உரையாடியிருக்கிறோம் என்பதை நாம் பார்க்க முடியும்.

மக்களின் நலனே அரசியலில் பிரதானம். நீருக்கு வெளியில் தெரியும் டைனோசரின் வால் நுனியை மக்களுக்கு காட்டியபடி, அதன் உள்ளே பதுங்கியிருக்கும் பயங்கர மிருகத்தை நாம் மக்களுக்குக் காட்டத் தயங்குகிறோம். இது என்ன வகையான அரசியல்? பாராளுமன்றத்திற்குச் சென்றால் எல்லாம் சரியாகிவிடுமா, என்ன?

முடிவெடுக்கும் அதிகாரமுள்ள தரப்புகள் பலமடையவே வாய்ப்புகள் அதிகமுள்ள தேர்தலிது. இத்தனை அவசரமாக கொரோனாக் காலத்தை கட்டுப்படுத்தியதாகத் தோற்றுவிக்கப்படும் சூழல், உண்மையானது தானா? அல்லது தேர்தல் அவசரத்துக்கு மறைக்கப்பட்டிருக்கிறதா? அல்லது கொரோனாவுடன் வாழப் பழகிக்கொள்ளுங்கள் என்கிறார்களா?

எது எப்படியோ, எதிர்வரும் நாட்கள் இராணுவமயப்படுத்தப்பட்ட இலங்கைக்குள் எப்படி வாழப்போகிறாம் - இது போன்ற தலைவர்களை வைத்து? என்று தான் விளங்கவில்லை. உணர்ச்சி அரசியலையும் கடந்த காலத்தையும் முதலீடாகக் கொண்ட அரசியல் தரப்புகள் எதிர்காலம் கருதிய மக்கள் நலன்களை எவ்வாறு கையாளப்போகின்றது என்பதை நாம் பொறுத்திருந்து தான் பார்க்க முடியும்.

■ ■ ■

தொற்றுநிலை நெருக்கடியும் பணக்கவலையும்

- புஷ்பா கனகரட்ணம் -

நீண்டுகொண்டு செல்லும் தொற்றுநிலைக் கட்டுப்பாடுகளால், பலரும் வேலை இழந்திருக்கிறார்கள். பல வியாபாரங்கள் முடக்கப்பட்டிருக்கின்றன. ஆரோக்கியம் சார்ந்த கவலைக்கும் மேலாக பொருளாதாரக் கவலையும் அதிகரித்துக்கொண்டு செல்கிறது.

பொருளாதாரத் துறையை சார்ந்த வல்லுநர்கள் மக்கள் பழக்கவழக்கங்களை வைத்து முக்கியமான 3 ஆலோசனைகளை தெரிவிக்கிறார்கள்.

திடுதிப்பென முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்:

இந்த COVID-19 தொற்றுநிலை பாரதூரமானதாக இருக்கிறதென்றாலும், இதற்கு ஒரு முடிவு இருக்கத்தான் போகிறது என்கிறார் பொருளாதார உளவியலில் பேராசிரியராக இருக்கும் Dr. Brad Klontz. மேலும், உங்கள் பொருளாதார நிலை சார்ந்த அச்சத்தைப் போக்க பரந்த கண்ணோட்டம் தேவை என்கிறார் Klontz. காலப்போக்கில் இந்த பிரச்சினைக்கு ஒரு தீர்வு இருக்கும் என்பதை நீங்கள் நினைவில் கொள்ளவேண்டும். அதோடு, அனாவசிய பீதி உங்கள் பொருளாதார நிலைமையை மேலும் மோசமாக்க வாய்ப்பிருக்கிறது என்றும் எச்சரிக்கிறார். முன்னொருபோதும் இப்படியான பொருளாதார நெருக்கடி ஏற்படவில்லை என்று நாங்கள் எண்ணலாம். ஆனால் பின்னோக்கி பார்த்தோமானால், நம் இப்படியான நெருக்கடிகளை காலம் காலமாக அனுபவித்துத்தான் வந்திருக்கிறோம் என்பது புரியும். 2008ம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது, பலரும் உலகம் முடிவுக்கு வரப்போகிறது என்பது போல் உணர்ந்தார்கள். பீதியால் பல தற்கொலைகள்கூட நிகழ்ந்தன. ஆனால் அந்த நெருக்கடிக்குள் இருந்து மீண்டு வந்தவர்கள் பலர். ஆரோக்கியம் சார்ந்த கவலையோடு பணக்கவலையும் சேர்ந்து கொண்டால், அச்சம் இரட்டிப்பாகிவிடும். அந்த பீதியோடு நாம் போடும் மனக்கணக்கு ஒரு அபாயமான பாதைக்குள் எம்மை தள்ளிவிடும் என்கிறார் Klontz. Catastrophic thinking அதாவது பேரழிவுச் சிந்தனை, எம்மை பாரதூரமான முடிவுகளுக்கு தள்ளிவிடும். சிலர் பங்குச்சந்தையில் தம் பங்கினை எல்லாம் அவசரமாக விற்பதில் இறங்கிவிடுவார்கள். இதே சிந்தனை தான் இன்னொருவரை ஒரு வருடத்திற்கு தேவையான toilet paper இனை வேண்டி அடுக்கத் தூண்டுவது. லண்டன் business school பேராசிரியர் Dr. Alex Edmans இதே கருத்தை முன்வைக்கிறார். எங்கள் உணர்வுக் குழப்பங்கள் எம் பொருளாதார நிலைமையில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன என்கிறார்.

பொதுவாகவே, பொருளாதார உலகத்தில், நேர்மறையான நிகழ்வுகளை விடவும், எதிர்மறையான நிகழ்வுகளுக்கு நாம் அதிக முக்கியம் கொடுக்கிறோம், என்கிறார் Edmans. தன் ஆய்வுக்கட்டுரை ஒன்றை மேற்கோள் காட்டி அவர் சொல்லும் ஒரு உதாரணம் என்னவென்றால், ஒரு நாட்டின் கால்பந்தாட்ட அணி உலக கோப்பைக்கான ஆட்டத்தில் தோற்ற பொழுது, அவர்கள் பங்குச்சந்தை அடுத்த நாளே பெரும் வீழ்ச்சி கண்டது. ஆனால் ஒரு அணி வெற்றி பெற்ற பொழுது, எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்கவில்லை. அணியின் வெற்றியினால் பங்குச்சந்தையில் ஒரு மாற்றமும் ஏற்படவில்லை. ஆகவே, உங்கள் உணர்வுகள் உங்களை பிழையான முடிவுகளுக்கு இட்டுச்செல்வதை நீங்கள் தவிர்க்க வேண்டும். அதீதமான செய்தி நுகர்வை தவிர்த்தல், அவசர கதியில் முடிவுகள் எடுத்தலை தவிர்த்தல் முக்கியம். நம்பிக்கையான தகவல் தளங்களை வாசியுங்கள். புதிய வழிகளில் பணம் கொண்டுவர எத்தனிக்கலாம். அத்தியாவசியமற்ற செலவுகளை குறைக்கலாம். உங்கள் வரவு செலவுகளை மீளாய்வு செய்ய இந்த காலகட்டத்தை நீங்கள் பயன்படுத்தலாம்.

சாத்தியப்படக்கூடிய மோசமான பொருளாதார நிலை:

சாத்தியப்படக்கூடிய மிக மோசமான ஒரு பொருளாதார நிலையை கற்பனை செய்து பாருங்கள். அப்படியான ஒரு சந்தர்ப்பத்தில், நீங்கள் என்ன செய்யலாம் என திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

இந்த COVID-19க்கு முன்பே பணம் பலருக்கும் ஒரு மன உளைச்சலை தரும் விடயமாகத்தான் இருந்திருக்கிறது. ஏனென்றால், ஒரு பண நெருக்கடி வரும் போது, அது எம்மை உச்சக்கட்ட நிலைக்கு தயாராக்கிவிடும். இதனை உளவியலில் fight-or-flight response மூலமாக விளக்கலாம். அதாவது, எம் முன்னோர்கள், வேட்டையாடி வாழ்ந்த காலம் ஒன்று இருந்தது. அப்பொழுது, காட்டுக்குள் போனால், ஒரு சிங்கத்தை கண்டால், உங்களை நீங்களே காப்பாற்றிக் கொள்ள, ஒன்று நீங்கள் தப்பி ஓட வேண்டும் அல்லது நின்று சண்டையிட வேண்டும். அதற்கு உங்கள் உடலையும் மனதையும் தயாராக்க, உங்கள் இதயம் படபடவென அடிக்கும். அது இரத்த ஓட்டத்தை அதிகரிக்க செய்து உங்களை சுறுசுறுப்பாக்கும். தசைகள் இறுகும். உடல் வியர்க்கும். நீங்கள் சிங்கத்தோடு சண்டையிடவோ அல்லது தப்பி ஓடவோ இந்த தயார் நிலை முக்கியம். இது இயல்பாகவே எம்மை நாம் காப்பாற்றிக்கொள்ள உதவுகிறது.

இப்படி சிங்கத்தை பார்த்து பீதி கொள்வது போல், பண கஷ்டம் வரும்போதும் எம் உடலும் மனமும் தயார் நிலைக்கு செல்கிறது. சில பணச்சிக்கல்கள் உயிராபத்தான நிலைக்கு எம்மை இட்டுச்செல்லலாம். அப்படியான சந்தர்ப்பங்கள் எம்மில் அந்த fight-or-flight responseஇனை தூண்டுவது நியாயமானதே. ஆனால், இந்த மனிதரோடு கூடப்பிறந்த இயல்பு நிலை, பணச்சிக்கல் வரும்போது, வாழ்வா சாவா என்ற மனநிலைக்கு எம்மை தள்ளி, அவசர முடிவுகளை எடுக்க தூண்டிவிடுகிறது.

உங்களை ஒரு சிங்கம் துரத்துகிறதென்றால் அந்த மனித-மிருக உள்ளுணர்வு மிக முக்கியம். ஆனால், பல சந்தர்ப்பங்களில், சிக்கலான பணம் சார்ந்த முடிவுகளை எடுப்பதற்கு இந்த உள்ளுணர்வு ஒரு பிரச்சினையாகி விடுகிறது என்கிறார் Klontz. உணர்வுகள் எல்லைமீறும் போது, மனம் விவேகமாக சிந்திப்பதை மறந்துவிடுகிறது. இந்த உணர்வுகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர என்ன செய்யலாம்? எதிர்காலம் பற்றிய பயங்களை தவிர்க்காமல், நீங்கள் கற்பனையில் அப்படியான சந்தர்ப்பங்களை எப்படி அணுகுவீர்கள் என்று திட்டமிட்டு பார்க்கலாம். உதாரணமாக, வேலையை இழந்தால் என்ன செய்யலாம்? வீட்டு mortgage இனை கட்டமுடியாமல் போனால், என்ன செய்யலாம்? சில தீர்வுகளை ஆராய்ந்து பார்ப்பது, உங்கள் நிகழ்கால நிம்மதிக்கு உதவியாக இருக்கும்.

மற்றவர்களுக்கு உதவுவதன் மூலம் ஒரு புதிய கண்ணோட்டத்தை பெறுங்கள்:

தற்பொழுது பொருளாதார நிலை மோசமாக இருந்தாலும், நாளடைவில் அது பழைய நிலைக்கு திரும்பும் என்பது நிபுணர்கள் நம்பிக்கை. அதே வேளை, பணக்கவலையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது எங்கள் உடல் மற்றும்

தொடர்தல் 7ம் பக்கம்

தொற்றுநிலை...

6ம் பக்கத் தொடர்ச்சி...

உள ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது. சமூகத்தில் சிறு சிறு உதவிகளை செய்வதும் உங்கள் தயாள குணத்தை நடைமுறைப்படுத்துவதும், உங்களுக்குள் ஒரு மன நிறைவையும், பணக் கவலை சார்ந்த ஒரு புதிய கண்ணோட்டத்தையும் கொடுக்கும். கொடுக்கல் வாங்கலில் நாம் எப்பொழுதும் சரிக்கு சரி இருக்கவேண்டும் என எதிர்பார்ப்போம். ஆனால், மற்றவர்களுக்கு நீங்கள் செய்யும் சிறு சிறு உதவிகள் கூட பெரிய அளவிலான மாற்றங்களை கொண்டுவரும் என்பது தான் உண்மை. Food bank ற்கு நன்கொடை வழங்குவதாக இருக்கட்டும், அல்லது வயது முதிர்ந்த ஒரு அயலவருக்கு பல சரக்கு வேண்டிக்கொடுப்பதாக இருக்கட்டும், 'சிறு துளி பெரு வெள்ளம்' ஆகும்.

இந்த தொற்றுநிலை பலரையும் பல்வேறு விதத்தில் பாதித்துக்கொண்டிருக்கிறது. எல்லோருக்கும் பொதுவான ஒரு நெருக்கடியாக இருக்கிறது. எப்படி இன்னொருவருக்கு நாம் உதவ முடியும் என்று நாம் சிந்திக்கவேண்டிய ஒரு காலமாக இது இருக்கிறது.

இந்த பேராசிரியர்கள் மனித மனங்களின் பேராற்றலை பற்றி சொல்கிறார்கள். தற்போதைய நெருக்கடி நிலை அச்சத்தை கொடுத்தாலும், அமைதி கொள்ளுங்கள். மனிதர்களுக்கு எந்த ஓர் இடரில் இருந்தும் மீண்டு வரக்கூடிய வலிமை இருக்கிறது. மனிதர்களுக்கு இருக்கும் ஓர் அற்புத சக்தி இது - தாக்கப்படுகிறோம், நொருங்கிப்போகிறோம், பின் மீளஎழுகிறோம். ஒரு புதிய யதார்த்தத்துக்கு இசைவாக்கப்படுத்திகொள்கிறோம். அதுவே பின் எங்கள் புதிய இயல்பு நிலை என ஆகிவிடும். இது நிச்சயம் நடக்கத்தான் போகிறது என்கிறார் Klontz.

•

COVID-19: சிறுவர்களை தாக்கும் MIS-C அரிது. ஆனால் அவதானிக்க வேண்டியது

குழந்தைகள்/சிறுவர்களில் COVID-19 சார்ந்த அரிதான ஒரு நோய்நிலை அடையாளம் காணப்பட்டிருக்கிறது. இந்த அழற்சி நிலை (inflammation) COVID-19 உடன் தொடர்புடையதாக கருதப்படுகிறது. வேறு நாடுகளில் அறிவிக்கப்பட்டிருப்பது போலவே, தற்பொழுது கனடாவிலும் இந்த multi-system inflammatory syndrome (MIS-C) கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மிக அண்மையில் ரொறன்ரோவின் Hospital for Sick Children சில சிறுவர்களில் இந்த நோய்நிலையை அடையாளம் கண்டிருக்கிறது.

முன்னரே அறியப்பட்ட Kawasaki நோய்க்கு ஒப்பிடப்படுகிறது MIS-C. 'கடந்த 2-3 வாரங்களில், வேறு நாடுகளில் அறிவித்திருப்பது போல், அதிக காய்ச்சல் மற்றும் உறுப்புகளில் அழற்சியோடு, கிட்டத்தட்ட 20 சிறுவர்களை நாம் பரிசோதித்திருக்கிறோம்' என்கிறார் Hospital for Sick Children வைத்தியர் Dr. Jeremy Friedman.

Kawasaki Disease Canada நிறுவனத்தின் அனுமானிப்பின்படி, 10,000 சிறுவர்களில் 30 பேருக்கு என்ற விகிதத்தில் Kawasaki Disease சிறுவர்களை பாதிக்கிறது. இதில் 80% மானவர்கள் 5 வயதுக்கு குறைந்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அண்மைத் தரவுகளின்படி குழந்தைகள் மட்டுமல்லாமல் சில பதின்மவயதினரும் MIS-C யினால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்கிறார் Friedman. நோய்வாய்ப்பட்டவர்கள் சராசரி வயது 9 ஆக இருக்கிறது. Friedman கருத்துப்படி, எல்லோரும் அதிக காய்ச்சல் காரணமாக வந்தாலும், பின்னர் உடலில் தடிப்புகள் (rashes), உள்ளங்கைகளில் வீக்கம், வாந்தி போன்ற பரந்த அளவிலான அறிகுறிகளை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். இருபதில் ஒருவருக்கு அவசர சிகிச்சை அளிக்கப்பட்டது. மற்றவர்களுக்கு மருந்துகள் போதியதாக இருந்தது. ரொறன்ரோவில் அவதானிக்கப்பட்ட நோயாளிகள், நாம் கேள்விப்பட்டதுபோல் பாரிய பாதிப்புகளுக்கு உள்ளாகவில்லை என்கிறார் Friedman.

> **"தற்போதைய நெருக்கடி நிலை அச்சத்தை கொடுத்தாலும், அமைதி கொள்ளுங்கள். மனிதர்களுக்கு எந்த ஓர் இடரில் இருந்தும் மீண்டு வரக்கூடிய வலிமை இருக்கிறது. மனிதர்களுக்கிருக்கும் ஓர் அற்புத சக்தி இது - தாக்கப்படுகிறோம், நொருங்கிப்போகிறோம், பின் மீளஎழுகிறோம். ஒரு புதிய யதார்த்தத்துக்கு இசைவாக்கப்படுத்திகொள்கிறோம். அதுவே பின் எங்கள் புதிய இயல்பு நிலை என ஆகிவிடும்."**

British Columbia வில் கிட்டத்தட்ட 6 பேர் MIS-C நோய்க்காக பரிசோதிக்கப்பட்டு வருகிறார்கள். COVID-19 உடன் இது தொடர்புடையதா என இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. தற்பொழுது வரை கனடாவில் MIS-C, அறிக்கையிடத்தக்க நோயாக அங்கீகரிக்கப்படவில்லை, ஆனால் விரைவில் இது நடக்கலாம். COVID-19 உடன் MIS-C யின் தொடர்பு பற்றி அப்பொழுது தான் தெளிவாக சொல்லமுடியும் என்கிறார்கள் வைத்தியர்கள். இந்த நோய்நிலை முன்பு குறிப்பிட்டது போல், அரிதான ஒன்றாக கணிக்கப்படுகிறது. USஇல் இதுவரை மூவர் இதனால் இறந்திருக்கிறார்கள்.

The Canadian Paediatric Surveillance Program (CPSP) கனடிய மருத்துவர்களுக்கு அண்மையில் விடுத்த ஒரு எச்சரிக்கையில் குறிப்பிட்டிருப்பது என்னவென்றால், MIS-C; COVID-19 உள்ளவர்கள், இல்லாதவர்கள் என இரு சாராரிலும் அவதானிக்கப்பட்டிருக்கிறது. அதன் அறிகுறிகள் Kawasaki நோய், மற்றும் toxic shock syndromeபோன்ற அரிதான நோய் நிலை அறிகுறிகளை ஒத்திருக்கிறது என்பதுதான். இந்த நோய் உலகளாவிய ரீதியில், இதுவரை ஐரோப்பாவில் குறைந்தது 50 பேரை தாக்கி இருக்கிறது. பாதிக்கப்பட்ட நாடுகள், Italy, Switzerland, France, Britain மற்றும் Spain ஆகும். New Yorkல் இதுவரை 102 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த நோயின் மர்மமான விடயம் என்னவென்றால், பெரும்பான்மையோர் COVID-19 பாதிப்பை காண்பிப்பதில்லை. ஆனால், பின்பு அவர்கள் உடலில்COVID-19 இனை எதிர்ப்பதற்கான antibodies இனை அடையாளம் காணக்கூடியதாக இருக்கிறது என்பது தான் என்கிறார் Friedman. 'COVID-19 நாசிச் பரிசோதனையில் 20 பேருமே எதிர்மறையான விளைவையே காண்பித்தார்கள்...இதுவே எமக்கு தற்போது இருக்கும் பெரிய கேள்வி!'

ஆக, SickKidsற்கு வந்த சிறுவர்கள் COVID19 பரிசோதனையில் எதிர்மறை விளைவை காட்டினாலும், பல வாரங்களுக்கு முன்பே இந்த வயிரஸினால் தொற்றப்பட்டிருக்கிறார்கள் என்பது தான் அர்த்தம் என்பது Friedman வாதம். மருத்துவர்கள் MIS-C பாதிப்புற்ற தம் நோயாளிகளிடம் இருந்து பரிசோதனைக்காக இரத்த மாதிரிகளை எடுத்திருக்கிறார்கள். ஒரு நம்பகரமான சோதனை கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் antibodies இனை அடையாளம்காண இந்த இரத்த மாதிரிகளை பயன்படுத்துவார்கள், என்கிறார் Friedman.

பெற்றோர்களுக்கு மருத்துவர்கள் சொல்வதென்னவென்றால், இது ஒரு அரிதான நோய், அத்தோடு குணப்படுத்தக் கூடிய நோய் என்பது தான். இரண்டு நாட்களுக்கு மேல் அசாதாரண காய்ச்சல் இருப்பின் தம் பிள்ளைகளை வைத்தியரிடம் அழைத்துச்செல்லும் படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.

MIS-C அறிகுறிகள் (21 வயதுக்கு உட்பட்டவர்களில்):

- விடாத காய்ச்சல்/அழற்சி (persistent fever and inflammation).
- அசாதாரண, திடீர் அல்லது துரிதமான இதய துடிப்பு (abnormal, sudden or rapid heart rhythm).
- தோல் தடிப்பு (rash).
- வயிற்றோட்டம், வாந்தி (diarrhea and vomiting).
- மந்தமான நாடித்துடிப்பு, துரித சுவாசம் (weak pulse and rapid breathing).
- தலைச்சுற்று அல்லது மயக்கம் (dizziness or loss of consciousness).

சிகிச்சை அளிக்கப்படாவிட்டால், MIS-C இருதயத்தை தாக்கும் சாத்தியம் இருக்கிறது என அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

Ohio தொற்றுநிலை துறைசார் நிபுணர் Dr. Camille Sabella அறிவுறுத்தலின்படி, அசாதாரண காய்ச்சலுடன், தடித்த தோல் (rashes) அல்லது சிவந்த கண்கள் (pink eye), நிணநீர் முனைகளில் வீக்கம் (lymph nodes) அல்லது கை கால்களில் வீக்கம் இருப்பின், நிச்சயமாக உங்கள் குடும்ப வைத்தியரை உடனே நாடுங்கள்.

pushpa.k@thaiveedu.com

வீட்டினுள்ளே...

இலங்கையில் கொரோனா: மறைந்து வருகிறதா? மறைக்கப்பட்டு வருகிறதா? 5
கண்ணன் ராஜ்

கொரோனா முகக்கவசமும் அம்மணமான அமெரிக்காவும் 8
பொன் பாலராஜன்

வைரசோடு வாழப் பழகலாம் வாங்க 11
போல் ஜோசேப்

பெற்றோரும் பிள்ளைகளும் 20
த. சிவபாலு

சிறுவர்கள் தமது உரிமைகளை அனுபவித்து வாழவேண்டும் 22
சி. நற்குணலிங்கம்

புதிய வீடுகளைக் கொள்வனவு செய்தலும் தரம் உயர்த்துதலும் 24
வேலா சுப்ரமணியம்

காலநிலை மாற்றம் 26
- கிரேதா தன்பேர்க்
தமிழில்: மணி வேலுப்பிள்ளை

விமானங்களில் கூடுகட்டும் சிட்டுக்குருவிகள் 28
குரு அரவிந்தன்

ஜப்பானில் சில நாட்கள் 29
சி. நற்குணலிங்கம்

குடிசார் பொறியியல் - தோற்றமும் வளர்ச்சியும் 30
அகணி சுரேஸ்

மேரி கியூரி: முதலாவது பெண் விஞ்ஞானி 35
எஸ். பத்மநாதன்

G.U. போப் - இருநூறு ஆண்டுகள் 37
குமார் புனிதவேல்

இலக்கணவித்தகர் பண்டிதர் இ. நமசிவாய தேசிகர் 40
வே. விவேகானந்தன்

அண்ணாவியார் V.T. செல்வராஜா 41
ப. ஸ்ரீஸ்கந்தன்

மொழித்தடத்தின் விடியல் 43
சர்வேசுவரி சோமசுந்தரம்

கணியன் பூங்குன்றனாரின் சமதர்ம சிந்தனை 46
இனியவன் இசார்தீன்

தொல்காப்பியம் - செய்யுளியல் - செய்யுள் உறுப்புகள் 48
சி. சண்முகராஜா

ஒரு யாழ்ப்பாணத்து வீடு - திரைப்படம் 50
மு. புஷ்பராஜன்

உயிரின் மெய் மயக்கம் 52
தீ. தாரணி

காலம் உனக்கொரு பாட்டெழுதும் 55
மல்லியப்புசந்தி திலகர்

நீண்டகாத்திருப்பு வாழ்கையின் அல்பம் 56
யதார்த்தன்

கொரோனா முகக்கவசமும் அம்மணமான அமெரிக்காவும்

- பொன். பாலராஜன் -

மருத்துவம் என்பது பராமரிப்பும் ஆதரிப்பும் அளிக்கும் ஓர் ஒழுங்குமுறை ஆகும். அத்துடன் மருத்துவ விபரங்கள், தரக்கட்டுப்பாடு, ஆய்வகவியல் சார்ந்த ஒழுங்கு முறையும் அதனுள் அடங்கும்.

1997ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1ம் திகதி அதிகாலை 4.18 மணியளவில் ஜப்பானின் தென்மேற்கு டோக்கியோவின் காரயாவில் (Kariya) அமைந்துள்ள ஆய்சின் Aisin Seiki நிறுவனத்தின் உற்பத்திச்சாலை ஒன்றில் பாரிய தீவிபத்து ஒன்று இடம் பெற்றது. இந்த தொழிற்சாலையில் பி வால்வுகள்(P-Valves) உற்பத்தி செய்யப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. வாகன பிரேக்கின் அழுத்தங்களை சமநிலை செய்யவும், குடைசாய்வைத் தடுக்கவும் இந்த வால்வுகள் உதவுகின்றன. இந்த வால்வுகள் மிகவும் மலிவானவை. சுமார் 10 டொலர்களே இதன் சந்தைப் பெறுமதியாகும். வாகனத்திற்கு மிகவும் அத்தியாவசியமான உதிரிப்பாகங்களில் இதுவும் ஒன்று. ஆய்சின் தொழிற்சாலையில் நாள் ஒன்றுக்கு சுமார் 33,000 வால்வுகள் உற்பத்தி செய்யப்படுவது வழமையாகும். டொயோட்டா மோட்டார் வாகன உற்பத்தி நிறுவனத்திற்கு இந்த வால்வுகளை விநியோகம் செய்யும் ஒரே நிறுவனமாக ஆய்சின் நிறுவனம் விளங்குகின்றது.

டொயோட்டா நிறுவனம் தனது அன்றைய உற்பத்தித் தேவைக்கு ஏற்பவே ('just in time' - J.I.T.) இந்த வால்வுகளை பெற்றுக்கொண்டு வந்தது. மேலதிகமாக டொயோட்டா நிறுவனம் இந்த வால்வுகளை சேமித்து வைக்கவில்லை. ஆய்சின் நிறுவனத்தில் ஏற்பட்ட தீவிபத்து காரணமாக ஒட்டுமொத்த மோட்டார் வாகன உற்பத்தித்துறையே பெரும் சவால் நிலைக்கு உட்பட நேரிட்டது. இந்த வால்வுகள் இல்லாது உற்பத்தி நடவடிக்கைகளை டொயோட்டா நிறுவனத்தினால் முன்னெடுக்க முடியாத நிலைமை காணப்பட்டது.

எனினும் டொயோட்டா நிறுவனம் இந்த நிலைமையை சமாளிப்பதற்கு எடுத்துக் கொண்ட சிரத்தை ஆச்சரியமானது. தீப்பற்றிக்கொண்ட தொழிற்சாலையில் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு இன்னும் புகை முழுமையாக அகன்று செல்லாத நிலையில், நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரிகள் உடனடியாக கூடி, வேறு தொழிற்சாலைகளில் இந்த உற்பத்தியை முன்னெடுப்பதற்கு தீர்மானித்தனர். நிறுவனத்தின் சகோதார நிறுவனங்கள் - குறிப்பாக மோட்டார் வாகன கைத்தொழிற் துறையைச் சாராத தட்டச்சு இயந்திர உதிரிப்பாக உற்பத்திச்சாலைகள், மற்றும் தையல் இயந்திர உற்பத்திச்சாலைகள் என்பன உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் வால்வு உற்பத்தியில் ஈடுபட்டன. ஆரம்பத்தில் வால்வு உற்பத்தியில் வினைத்திறன் புலப்படாத காரணத்தினால் 70,000 வாகனங்களை உற்பத்திசெய்ய முடியாத நிலைமை ஏற்பட்ட போதிலும், ஒருவார காலத்தில் ஓரளவு வழமைக்கு திரும்பிய டொயோட்டா நிறுவனம் முழு வலுவுடன் மீள இயங்கத் தொடங்கியது.

அனைத்து நிறுவனங்களும் தமது பலம் மற்றும் பலவீனங்கள் குறித்த பாடங்களை 'ஆய்சீன் தீவிபத்து' மூலம் கற்றுக் கொள்ள முடியும்.

கொவிட்-19 தாக்கத்தின் மூலம் நாம் மருத்துவத் துறையில் பல்வேறு அனுபவங்களைக் கற்றுக்கொள்ளக் கூடியதாக வுள்ளது. மருந்து என்பது உண்மையில் கறுப்புப் பையுடன் ஓர் மருத்துவரின் வருகையை குறிப்பதாகாது. முறைமை மற்றும் செயன்முறையின் சிக்கல் மிகுந்த ஒரு கலவையாகவே அது நோக்கப்பட வேண்டும். அது நலவாழ்வை ஈயும் முறையாகும்.

தொண்டை அழற்சியினால் பாதிக்கப்பட்ட சிறு குழந்தைக்கான நுண்கொல்லி மருந்துகள் முதல் சிறுநீரகம் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு புதிய சிறுநீரகம் ஒன்றை வழங்குதல் வரையிலான பரந்துபட்ட விடயங்களை தன்னகத்தே கொண்டது. இது ஓர் ஆய்வு நிகழ்ச்சித் திட்டமாகும்.

ஆய்வுகூடம் ஊடாக புதிய கண்டுபிடிப்புக்கள், நோயாளிகள் பராமரிப்பில் தொடர்ச்சியான முன்னேற்றத்தை பதிவு செய்யும் மருத்துவ நடைமுறைகள், அதற்கான ஆலோசனை வழிகாட்டல்கள், மருத்துவ சாதனங்களுக்கான அனுமதி என்பனவும் இதில் அடங்கும்.

நோய்த்தொற்று பெருகிப் பரவும்பொழுது மெய்யான சாதனைகள் நிகழ்த்தப்படுவது ஒருபுறம். மறுபுறம் மறைமுகமான முறிவுகள், குருதி நாள நெளிவு போன்ற பல்வேறு விடயங்கள் வெளிவருகின்றன. நிலைமை எப்போது வழமைக்கு திரும்பும் என பலரும் கேள்வி எழுப்புகின்றனர். வழமைக்கு திரும்புவது என்பது கற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை இழப்பதாகவே அமையும். நாம் வழமைக்கு திரும்புவதைப் பற்றிச் சிந்திக்கும் அதே வேளை எங்களை மாற்றியமைத்தல் இன்றியமையாதது.

சுகாதாரத் துறையை ஒரு விநியோக முறைமையாக ஆரம்பிக்க வேண்டும். இந்த அவசர நிலைமையில் மருத்துவ தரப்பினருக்கு தனிப்பட்ட தற்காப்பு கருவிகள்(முகக்கவசங்கள், கவுன்கள், கையுறைகள்) மற்றும் நோயாளிகளுக்கான வென்டிலேட்டர்கள் மற்றும் ஒட்சிசன் போன்றனவற்றை விநியோகம் செய்ய வேண்டும். நோய்க்கு இதுவரையில் தகுந்த மருந்து கண்டு பிடிக்கப்படாத நிலையில் பராமரிப்பே மிகவும் முதன்மையான சிகிச்சையாக காணப்படுகின்றது. நோய் தொற்றிப் பரவும் நிலையில் மருத்துவ உபகரணங்கள், சாதனங்கள் என்பவற்றை விநியோகம் செய்தல் கிரமமான முறையில் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமான ஒன்றாக கருதப்படுகின்றது. டொயோட்டா நிறுவனத்தின் விநியோகச் சங்கிலி (Supply Chain) எவ்வாறு சில நாட்களில் மீள உருவாக்கப்பட்டு வீரியத்துடன் செயற்பட்டதோ அவ்வாறே மருத்துவ விநியோக முறைமை கட்டமைக்கப்பட வேண்டும். செல்வந்த நாடுகளே இந்த விநியோக முறைமையை கிரமாக மேற்கொள்வதில் திணறியதனை கண்கூடாக அவதானிக்க முடிந்தது.

இரண்டு நாடாக்களைக் கொண்ட N95 கனரக முகக்கவசங்களே இந்த ஆய்வின் பிரதான பொருளாகும். நோய்த் தொற்றிப் பரவ ஆரம்பிக்க முன்னதாக இந்த ரக முகக் கவசங்களின் சாதாரண விலை 50 சதம் முதல் ஒரு டொலர் வரையிலாகும். பலவறு வடிவங்களில் பல்வேறு அளவுகளில் ஆண்டு தோறும் சுகாதாரத் துறை பணியாளர்களுக்காக இந்த முகக்கவசங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்கப்படுகின்றது. என்.95 ரக முகக்கவசங்கள் ஒரு தடவை பயன்பாட்டுக்காக விசேடமாக தயாரிக்கப்படுபவை. இவை 0.3 மைக்ரோன் விட்டத்தைக் கொண்ட ஒரு துகளைக் கூட உள்ளே விடாது பாதுகாக்கும் தன்மையுடையவை. சளிக்காய்ச்சல் அல்லது காசநோய் இருக்கும் என சந்தேகிக்கப்படும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் போது இந்த வகை முகக்கவசத்தை அணிந்து நோயாளிகளை பரிசோதனை செய்து அதன் பின்னர் முகக்கவசத்தை கெடுதிக் கழிவுக் குப்பையில் (Hazardous waste) இடுவார்கள்.

நோய் தொற்றிப் பரவத் தொடங்கியதைத் தொடர்ந்து மருத்துவத் துறையினருக்கு இந்த முகக்கவசங்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை உருவாகியிருந்தது. நியூ ஜெர்சியில் ஒரு நாள் முழுவதிலும் ஒரே முகக்கவசத்தைப் பயன்படுத்துமாறு பணிக்கப்படுவதாகவும், தாதியருக்கு ஒன்று கூட கிடைக்கப் பெறுவதில்லை எனவும் கூறுகின்றனர். மார்ச் மாத இறுதி வரையில் தமக்கு முகக்கவசங்கள் கிடைக்கவில்லை என பொஸ்டனைச் சேர்ந்த பணியாளர் ஒருவர் கூறினார். கையிருப்பில் இருக்கும் முகக்கவசங்கள் கூட மிகவும் அத்தியாவசியமான தேவை உடையவர்களுக்கு மட்டும் வழங்குவதற்கான ஏற்பாடுகளுடன் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. தற்காப்பு அங்கிகளை நுண்ணுயிரி தொற்று நீக்கி, கழுவி மீண்டும் மீண்டும் பயன்படுத்தியதாகவும் தெரிய வருகிறது.

மருத்துவமனைகளில் முகக்கவசங்களுக்கு தட்டுப்பாடு நிலவிய சம்பவங்கள் பற்றி நாம் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது, இந்த முகக்கவசங்களுக்கான மூலப் பொருட்கள் சீனாவிடமிருந்து பெற்றுக்கொள்ளப் பட்டவை ஆகும். இந்த 75 கனடிய சதம் பெறுமதியான முகக்கவசங்களுக்கான தட்டுப்பாடு மருத்துவ பணியாளர்களை பெரும் ஆபத்தில் ஆழ்த்தும் வகையில் அமைந்துள்ளது.

டெக்ஸாஸ், ரிச்லான்ட் ஹில்ஸ் (Texas, North Richland Hills) பகுதியைச் சேர்ந்த முகக்கவச உற்பத்தியாளர் மைக் போவன் தனது அனுபவங்களை பகிர்ந்து கொள்கின்றார். சத்திர சிகிச்சைகளின் போது அணியும் முகக்கவசம் மற்றும் என்95 முகக்கவசங்கள் உள்ளூரில் அதிகளவில் உற்பத்தி செய்யும் நிறுவனத்தின் உரிமையாளராக போவன் திகழ்கின்றார். வெளிநாடுகளில் உற்பத்தி செய்யப்படும் முகக்கவசங்கள் விலை குறைவு என்பதனால் உள்நாட்டுச் சந்தையில் போட்டியிடுவதில் சிரமங்கள் காணப்படுவதாகவும், வைத்தியசாலைகள் உள்ளிட்ட மருத்துவ நிறுவனங்கள் நேரடியாக உற்பத்தியாளர்களிடம் சாதனங்களை கொள்வனவு செய்யாது விநியோகர்களிடமிருந்தே கொள்வனவு செய்வதாகவும் அவர் குறிப்பிடுகின்றார். விலை குறைவான நிறுவனங்களிடமிருந்தே விநியோகர்கள் கொள்வனவு செய்கின்றனர் என அவர் குறிப்பிடுகின்றார். 2009ம் ஆண்டில் H1N1 (எச்.1.என்.1) சளிக்காய்ச்சல் தொற்றிப் பரவியபோது கூடுதலாக முகக் கவசங்களை உற்பத்தி செய்யுமாறு கோரப்பட்டதாகவும், கிராக்கி அதிகரிக்கும் என்ற அடிப்படையில் தாம் கூடுதல் பணியாளர்களை பணிக்கு

தொடர்தல் 9ம் பக்கம்

கொரோனா முகக்...

8ம் பக்கத் தொடர்ச்சி...

அமர்த்தி பெரும் எண்ணிக்கையில் உற்பத்தியை மேற்கொண்ட போதிலும் இறுதியில் தம்மிடமிருந்து கொள்வனவு செய்யாது வெளிநாட்டு முகக்கவசங்கள் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் இதனால் தாம் வங்குரோத்து நிலையை அடைந்ததாகவும் போவன் தெரிவிக்கின்றார்.

மீண்டும் ஒரு நோய் இவ்வாறு தொற்றிப் பரவினால், முகக்கவசம் உள்ளிட்ட தற்காப்பு சாதனங்களுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்படும் எனவும், சீனாவில் வெகுவாக தங்கியிருக்க நேரிடும் எனவும் முன்னாள் அரச தலைவர் பரக் ஒபாமா, தற்போதைய அரச தலைவர் டொனால்ட் ட்றாம்ப், பாதுகாப்புச்செயலாளர்கள் உள்ளிட்ட வெள்ளை மாளிகையின் உயர் அதிகாரிகளுக்கு பல தடவைகள் கடிதங்களை அனுப்பிய போதிலும் உரிய பதில் எதுவும் கிடைக்கவில்லை எனவும் தமது கரிசனைக்கு நன்றி என வெள்ளை மாளிகையிடமிருந்து பதில் கிடைக்கப் பெற்றதாகவும் அனைவரும் உதாசீனம் செய்து விட்டதாகவும் போவன் குற்றம் சுமத்துகின்றார்.

கொவிட்-19 தொற்று பரவுகை ஆரம்ப மானவுடன் சீனா தனது உற்பத்தி நிறுவனங்களை மூடி, முகக்கவசம் உள்ளிட்ட பொருட்களை தனது தேவைக்காக மட்டும் சேமித்து வைத்துக்கொண்டது. போவன் தற்பொழுது தனது உற்பத்தியை நான்கு மடங்காக உயர்த்தியுள்ளதுடன், நாள்தோறும் ஆகக்குறைந்து 10 இலட்சம் முகக்கவசங்களை உற்பத்தி செய்கின்றார். எனினும் இது மொத்த தேவையின் ஒரு சிறு பகுதி மட்டுமேயாகும். கோடிக்கணக்கான முகக்கவசங்களை வழங்குமாறு விடுக்கப்படும் கோரிக்கைகளை அவர் நாள்தோறும் நிராகரித்து வருகின்றார்.

அமெரிக்காவின் மூலோபாய தேசிய கையிருப்பு நிறுவனத்திடமிருந்தும் தற்காப்பு அங்கிகளான முகக்கவசங்கள் உள்ளிட்டவற்றை பெற்றுக்கொள்ள முடியும். எனினும் 18 மாதங்களில் 60 கோடி முகக்கவசங்களை கொள்வனவு செய்வதாக நிறுவனம், தனது விநியோகர்களுக்கு அறிவித்திருந்தது. எனினும், தற்போதைய தேவைக்கு இந்த நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ள போதியளவு கையிருப்பு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முகக்கவசங்களைப் பெற்றுக்கொள்ள முன்னதாகவே நுண்மித் தொற்றின் அபாயம் தீவிரமடைந்து பெரும் பாதிப்புகள் ஏற்படத்தொடங்கியது. போதியளவு முகக்கவசங்கள் உள்ளிட்ட பாதுகாப்பு அங்கி கையிருப்பு எந்த தரப்பிடமும் இருக்கவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

பேரழிவைக் கட்டுப்படுத்த எடுக்கப்படும் முயற்சிகளின் காரணமாக விநியோக சங்கிலி நிலைகுலைந்துள்ளது. நோயைக் கண்டுபிடிப்பதே நோயை கட்டுப்படுத்துவதற்கான சிறந்த வழிமுறையாகும். அந்த வகையில் பரிசோதனைக் கருவிகளின் அவசியம் அதிகளவில் எழுந்தது.

பரிசோதனைக் கருவிகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை கடந்த ஜனவரி மாதமே கனடா ஆரம்பித்தது. கொரோனா தொற்றை கண்டு பிடிப்பதற்கான புதிய கருவிக்கு கனடா, அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகப் பிரிவு அனுமதி வழங்கியிருந்தது. எனினும், இந்த நிறுவனத்தின் கருவிகளைக் கொண்டு மேற்கொண்ட பரிசோதனைகளில் சரியான விபரங்கள் வெளியாகவில்லை, மாறாக சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை கருவியில் ஊற்றிய போதும் கொரோனா தொற்று இருப்பதாகவே பரிசோதனையின் பெறுபேறு அமைந்தது.

எவ்வாறெனினும் தமது ஆய்வுக் கருவிகள் சரியானவை என்பதனை நிரூபிப்பதில் நிறுவனம் அதிக கரிசனை எடுத்துக்கொண்டது, அதற்காக பல நாட்கள் செலவிடப்பட்டன. அவசர நிலைமைகளில் மக்கள் பிழையான பரிசோதனைகளை செய்து பாதிப்புக்கு உள்ளாக்க கூடாது என்பதற்காகவே 'Emergency Use Authorization' என்ற நெறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது.

பல கனடிய பல்கலைக்கழக தொற்று நோய்ப் பிரிவு பணிப்பாளர்கள் கோவிற்-19 தொற்று தாக்கம் உண்டா என்பதனை கண்டறிவது சுலபமான விடயமல்ல எனக் குறிப்பிட்டுள்ளனர் ஆரம்பத்தில் குறிப்பிட்ட சில இடங்களில் மட்டுமே நோயாளிகளைக் கண்டறிவதற்காக கூட்டு பரிசோதனைகளை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

பத்திரமான, வேகமான பரிசோதனைகளை நடத்த அனுமதி அளிப்பதில் அரசாங்க நிறுவனங்கள் பல்வேறு சவால்களை எதிர்நோக்கியிருந்தன. இன்று வரையிலும் துரிதகதியில் துல்லியமான பரிசோதனைகளை நடத்துவதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுவதை மறுக்க முடியாது.

நோய்த்தொற்று போன்றே நோய்க்கான மருந்து கண்டு பிடிப்பது தொடர்பிலும் பல்வேறு பிரச்சினைகளையும், நடைமுறைச்சிக்கல்களையும் எதிர்நோக்க நேரிட்டுள்ளது. நோய் தொற்றியவர்களின் நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பது உள்ளிட்ட பல வழிகளில் மருந்து கண்டு பிடிப்பதற்கான முனைப்புக்கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

ஏனைய நாடுகளைப் போன்று அல்லாது அமெரிக்காவில் மருத்துவ விவகாரங்களில் காணப்படும் பல்வேறு நெறிமுறைகள் மற்றும் சட்ட திட்டங்களினால் உரிய நேரத்தில் உரிய தீர்மானங்களை மேற்கொண்டு நோய் தொற்றிப் பரவுவதை கட்டுப்படுத்தவோ, மருத்துவ சாதன விநியோக முறைமையை சீராக முன்னெடுக்கவோ முடியாத நிலைமை காணப்படுகிறது. அத்துடன் புதிய மருந்துகளைக் கண்டுபிடித்து பயன்படுத்துவதிலும் அநேக நெருக்கடி நிலைமைகள் நீடித்து வருவதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தென்கொரியா போன்ற நாடுகளில், மருத்துவ சாதனங்களை விநியோகம் செய்யும் நிறுவனங்களை தரப்படுத்தி, குறித்த துல்லியமான மதிப்பீடுகளை செய்து, சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவ்வாறான நிறுவனங்கள் அமெரிக்காவிற்கு தங்களது உற்பத்திகளை ஏற்றுமதி செய்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மருத்துவ தரவுகள், தகவல்களை டிஜிட்டல் முறையில் சேகரித்து பேணிப் பாதுகாப்பதன் மூலம் எதிர்காலத்தில் பல்வேறு தேவைகளுக்கு அவற்றைப் பயன்படுத்தி பயன்பெறும் சாத்தியங்கள் காணப்படுகின்றன.

மீட்சியை இழந்து எய்தும் வினைத்திறன் மெல்ல வெடிக்கப்போகும் குருதிக்கலத்தை ஒத்தது.

ஆய்சீன் தீ விபத்தின் பின்னர் டொயோட்டா நிறுவனம், தட்டச்சு உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை மாற்றியமைத்து பீ-வால்வுகளை உற்பத்தி செய்து மோட்டார் வாகன உற்பத்தியை இடையறாது முன்னெடுக்க மேற்கொண்ட சிரத்தையை ஏன் முகக்கவச விநியோகம் செய்யும் தரப்புக்கள் எடுக்கவில்லை என்பதே எமது கேள்வி.

pon.balarajan@thaiveedu.com


தாய்வீடு
THAIVEEDU
HOME & LIVING
செல்வனின்
வெடிமுத்தர்
01
02
03
கொரோனாவுடன் வாழப் பழக வேண்டும்....
-அரசு
04
பழச எல்லாம் மனசில வைச்சுக் கொள்ளாது.
01.06.2020

வைரசோடு வாழப் பழகலாம் வாங்க

- போல் யோசேப் -

கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக, தொடர்ச்சியாக உலகமே பேசிக்கொண்டிருப்பது என்னைப் பற்றித்தான் என்பதைப் போல கொரோனா வைரசும் பெருமை பேசிக் கொண்டிருக்கிறது.

எனக்கும் நான் சார்ந்த வைரஸ் குடும்ப உறவுகளுக்கும் உயிர் இருக்குதா? அல்லது நாம் உயிரற்ற சடப் பொருளா? உயிரினமா? என்றுகூட இன்னும் கண்டு பிடிக்க முடியாத நீங்களா எனக்கெதிராக மருந்து கண்டுபிடிக்கப்போகிறீர்கள்? என்றும் வைரசும் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு தன் கொலை வெறியைத் தொடர்கிறது.

மரணத்தைக்கண்டு இதுவரை மனிதம் இப்படிப் பயந்து போனதில்லை. நான்கு சுவர்களுக்குள்ளே உயிர்காக்க முடங்கிப் போனது தலைக்கனம் தாங்கிய மனிதங்கள். தொடக்கத்தில் 'ரொய்லட் பேப்பரும்' கூட புனிதம் பெற்றது கொரோனா வால். கக்கா துடைக்கிற இந்தப் பேப்பருக்காக அக்காவைக்கூட பகைத்துக் கொண்டது நம்முறவுகள், அதைக்கொண்டு போய் வங்கி லாக்கரில் வைக்காத குறையொன்று தான்.

விஞ்ஞானத்தின் உச்சம் கண்டு மெச்சியவர்கள், உலகத்தின் வல்லரசுகளுக்கே வல்லவன் என்றவர்கள், இன்று செய்வதறியாது மரண எண்ணிக்கையில் உச்சம் தொட்டு... வல்லரசுகளையே தலைகுனியச் செய்துள்ள இன்றைய ஒரே வல்லரசு.

குண்டு துளைக்காத வாகனங்களில் சென்றவர்களையும் நுழைந்து சென்று தாக்கி வருகிறது கொரோனா. பல லட்சம் பேரைத் தாக்கி, சில லட்சம் பேரைக் கொன்று வரும் உயிராயுதம். இனிவரும் உயிரியல் ஆயுதப் போர்களுக்கான ஒரு முன்னோட்டமாகக் கூட இருக்கலாமா?

செவ்வாய் கிரகத்தில் குடியேறப் போகிறோம் என்று விஞ்ஞான விந்தைகள் செய்தவர்கள் கண்ணுக்குத் தெரியாத நுண்மி வைரசால் செவ்வாய் தோசம் பிடித்து, மரணத்தையே தள்ளிப் போடுகிறோம் என்ற மமதையிலிருந்த மருத்துவ ஞானம்... இன்று மருந்துகளில்லை, தடுப்பூசியில்லை, தடுமாறுகிறது. தொற்று நோயின் தொடக்கத்தில் யாருக்கு மரணம், யாருக்குச் சிகிச்சை என்று தீர்மானிக்கும் நிலையில் மனித நேயம் மருத்துவர்களே செயற்கைச் சுவாச் கருவிகளின்றி, பேச்சு மூச்சின்றி இயற்கை எய்த அனுமதித்த கொடிய நிலை.

கடந்த பதினொரு ஆண்டுகளுக்கு முன்பும் இதே காலப் பகுதியில் தை முதல் மே வரை அந்த முள்ளிவாய்க்காலின் நந்திக் கடல் இனப்படுகொலையால் பல்லாயிரம் உயிர்களில் இறுதி மூச்சினை உள்வாங்கி இன்னும் சாட்சி சொல்ல மறுத்து மௌனமாகிப் போயிருக்கிறது. கொத்துக் கொத்தான கோர மரணங்களின் வலிகண்டு நரகம் கடந்து பூமிக்கிரகத்தில் சிரமம் கண்டது மரபுத்தமிழினம். மரண பயம் அறியா மேற்குலக மானிடம் சரணமானதின்று வெறும் புரதம் கொண்ட கொரோனா கண்டு, யுத்தமில்லை, குண்டு மழையில்லை வீடுகளே பதுங்கு குழிகளாகிப் போக சத்தமில்லாமல் நித்தமும் நிசப்த்தமாய் ஊரடங்கி மரணபாடம் நடத்துகிறது கொரோனா! (ஏனோ, என் மனதின் ஆதங்கம் இப்படி வெளிப்படுகிறது...).

வல்லரசுகளின் தலைமைகள் ஆளுக்காள் ஒருவரையொருவர் சாடிக் கொள்ளும் 'கோல்ட் வார்' அரசியல் தொடங்கி விட்டது. இதன் நீட்சி எங்கு எதுவரை என்பதும் இதன் விளைவுகள் இனிவரும் காலப்பகுதிகளில் எப்படிப் பிரதிபலிக்கப் போகிறது என்பதும் ஒரு ஆபத்தான விடயமாகும்!

பூமிப்பந்தில் இயற்கையிலும் மனிதர்களிலும் மற்ற உயிரினங்களிலும் இந்த காலப்

பகுதியில் அளப்பரிய மாற்றங்கள் நடைபெற்று வருவதாக ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றது. கோவிட்-19 தொற்று இறப்பு மரணங்களைத் தவிர, உலக அளவில் பிற மரணங்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. உதாரணமாக விபத்து மரணங்கள், மருத்துவமனைகளில் இறப்பவர்களின் எண்ணிக்கை என்பன குறைந்துள்ளது.

தமிழகத்தில் மக்கள் தொகை மிக அதிகமாகவுள்ள நகரமொன்றின் மத்தியில் அமைந்துள்ள கல்லறைகள் மற்றும் இடுகாடு பராமரிக்கும் ஊழியர் ஒருவர் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய செவ்வியொன்றினைப் பார்க்கநேரிட்டது. அதில் அவர் நாள் தோறும் விபத்துக்கள், தற்கொலைகள், மருத்துவமனை மரணங்கள் என்று ஏராளமான உடலங்களை எரிக்கும் அல்லது அடக்கம் செய்யும் பணியிலுள்ள எனக்கு கடந்த ஊரடங்கு நாட்களில் பாதியளவு வேலைப்பழு குறைந்துள்ளது என்று குறிப்பிட்டார்.

பல மிருக காட்சிச் சாலைகளில் நீண்ட காலமாக கருத்தரிக்காமல் இருந்த விலங்குகள் தற்போது தங்கள் வாரிசுகளை உருவாக்கியிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. இப்படி பல சுவாரஸ்யமான தகவல்கள் இருந்தாலும் இனி நாம் என்ன செய்யப் போகின்றோம்? என்பதை மருத்துவ ஆரோக்கிய ரீதியாக கொஞ்சம் அலசலாமா!

இன்னொரு சுவாரஸ்யமான விடயத்தையும் குறிப்பிட மறந்துவிட்டேன். அது தான்... May 6, 2020 Unicef Report இன்படி, இந்த ஆண்டு முடிவு காலப்பகுதிகளில் 116 மில்லியன் குழந்தைகள் பிறக்க வாய்புள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 'கொவிட்-19 நிழலில்' இது நடைபெறப் போவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவில் கொரோனாவினால் பலியானோர் தொகை ஒரு லட்சத்தை தாண்டியுள்ளது. அதிபரோ முகக்கவசம் அணிய மறுக்க, CNN தொலைக்காட்சியும் FOX செய்தி நிறுவனமும் போட்ட குடுமிச் சண்டை குழாயடிச் சண்டைகள் போல அரங்கேறியது.

பரவும் கொடிய நோய் பற்றியும் இறப்புக்கான காரணம் பற்றியும் சமூகவலைத் தளங்களில் யூனியர் மருத்துவர்களுக்கும் சீனியர் மருத்துவர்களுக்கும் விஞ்ஞானிகளுக்கும் இடையே நடைபெறும் காரசாரமான கருத்துப் பரிமாறல்களும்... இதற்கிடையில் அகப்பட்டு 'அந்தோனி ஃபவுச்சி' அங்குமிங்கும் உருளுவதும், கொடிய மரணங்களையும் பொருட்படுத்தாத அநாகரீகமான செயலாக ஆட்டிப்படைக்கிறது.

உலக சுகாதார நிறுவனம் முதல் அறிக்கையில் இந்த நோய் மனிதர் மூலம் பரவாது என்ற ஒரு தவறான அறிக்கையை வெளியிட்டு பின்னர் அதற்கு மன்னிப்புக் கோரியும் அதன் பிறகு நிபுணர் குழுவை அமைத்து அவர்களும் இது ஒரு Pandemic என்ற உலகப் பரவலாக மாறும் என்பதை தாமதமாக வெளியிட இப்படிப் பல குழப்பங்களினூடே பயணித்து... தற்போது இந்த கொரோனாவோடு போராடிப் பயனில்லை என்று 'கைகழுவுதல் தொடங்கி சமூக - தனிமனித இடைவெளி' என்று பலவற்றையும் கடந்து இப்போது தான் ஒரு முடிவை வெளியிட்டிருக்கிறார்கள்.

ஆம். Epidemic ஆக இருந்து, Panemic ஆக உருவெடுத்து, தற்போது Endemic நிலையில் நிலை கொண்டுள்ளது என்று. என்ன தலை சுற்றுகிறதா?

இதைகொஞ்சம் ஆழமாகப் புரிந்துகொள்ள எனது ஏப்ரல் மாதக் கட்டுரையை மீண்டும் படித்துப் பாருங்கள். Epidemic என்றால் ஒரு தொற்று நோய் பெருவாரியாக ஒரு குறிப்பிட்ட பகுதியில் பரவிக்கொண்டிருந்தல் என்பதாகும். Pandemic என்பது ஒரு தொற்று நோய் சர்வதேசப் பரம்பலாக பல நாடுகளுக்கும் பரவுதலாகும். Endemic என்றால் ஒரு குறிப்பிட்ட தொற்று வியாதி சமூகத்தில் எப்போதும் நிலை கொண்டிருத்தல். சில நாடுகளில் சில வியாதிகள் உதாரணமாக மலேரியா, டெங்கு, புளுக்காய்ச்சல் போன்று இன்னும் பல இருக்கின்றன.

ஆனால் 'கொவிட்-19' இப்போ 'World Endemic' ஆக மாறப் போகிறது என்று உலக சுகாதார ஸ்தாபனம் உறுதி செய்

தொடர்தல் 12ம் பக்கம்

STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
- Unfiled Tax Returns - Last ten years (2010 - 2019)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM
VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272

வைரசோடு வாழப்...

11ம் பக்கத் தொடர்ச்சி...

துள்ளது. Influense Virus என்ற ஃபுளு தொற்றுப் போல எப்போதுமே நம்மோடு வாழப் போகிறதாம். இனி ஓடவும் முடியாது, ஒழியவும் முடியாது. இந்த வைரசோடு வாழப் பழகுவதே ஒரே வழி.

எப்படி இது சாத்தியமாகுமா? என்பது தான் எல்லாரின் கேள்வியும் வைரசுகளோடான யுத்தம் மருந்து, மாத்திரைகள் மூலம் செய்ய நினைத்தால் நாம் தோற்பது உறுதி. வாக்சின் என்று தடுப்பு மருந்துகள் மூலம் ஓரளவு வெற்றிகாண வாய்ப்புகள் உண்டு, ஆனால் அதற்கு 12 முதல் 18 மாதங்கள் பொறுத்தாக வேண்டும். இதற்காக உலகின் பல நாடுகளிலும் ஆய்வுகளுக்கு இன்று போட்டிகள் தொடங்கிவிட்டன. பில்கேட்ஸ் முதல் பலர் இதில் முதலீடுகள் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். இதன் வியாபாரத் தந்திரங்கள் பற்றியும் இதிலுள்ள பின்புலங்கள் பற்றியும் பிறிதொரு கட்டுரையில் அலசலாம்.

அவசரகதியில் தடுப்பூசிகள் தயாரிக்கப்பட்டால் அதனால் வரும் ஆபத்துகள் மிகப் பாரிய விளைவுகளை ஏற்படுத்தலாம். இதற்கான வரலாற்று ஆதாரங்கள் மருத்துவத்தில் நிறைய உண்டு. உதாரணமாக டெங்கு வைரஸ் நோய்க்கான தடுப்பூசி 2017 கண்டுபிடிக்கப்பட்டு அது பலரிலும் பரிசோதனை செய்யப்பட்டு அமெரிக்காவின் CDC, FDA போன்ற அமைப்புகளால் அங்கீகரிக்கப்பட்டு முதன் முறையாக பிலிப்பைன்ஸ் தேசத்தின் சிறுவர்கள் சில லட்சம் பேருக்கு செலுத்தப்பட்டது. சில நாட்களின் பின்னர் சில ஆயிரம் சிறுவர்களில் தீவிர ஒவ்வாமை ஏற்பட்டு, பல உறுப்புகள் பாதிக்கப்பட்டு, இன்றும் குறைபாட்டோடு வாழ்ந்து வருகிறார்கள். கொடுமை என்னவென்றால் பல நூறு சிறுவர்கள் பலியாகிப் போனதுதான். இதை Lancet மருத்துவ இதழ் வெளியிட்டுள்ளது.

என்ன காரணம் என்று ஆய்வுகள் மேற்கொண்டதில் அந்த சிறுவர்களுக்கு டெங்கு வைரஸ் தொற்று ஏற்கனவே ஏற்பட்டு அவர்களின் நோய் எதிர்ப்பு ஆற்றல் காரணமாக எந்த அறிகுறிகளுமின்றி இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கு உள்ளே இந்த வைரசை எதிர்க்கும் Antibodies என்ற நோய் எதிர்ப்பு புரதங்கள் இருந்ததால் தடுப்பூசி செலுத்தும் போது அதி தீவிர ஒவ்வாமை (Anaphylactic Reaction) ஏற்பட்டு இறப்புகளும் நேரிட்டது.

எனவே கொரோனாவுக்கு எதிரான அவசரகதி தடுப்பூசிகளின் பின் விளைவுகள் எப்படி இருக்கும் என்பதை திட்டமிட்டு கூறமுடியாது. இந்த சூழ்நிலையில் இனி என்ன செய்யலாம். தற்போது கட்டுப்பாடுகள் சற்றுத் தளர்ந்து, மக்களின் செயற்பாடுகள் முன்புபோல பழைய நிலைக்கு கொஞ்சம் கொஞ்சமாக திரும்பத்தொடங்குகின்றது.

இனிவரப்போகும் பேராபத்துகளிலிருந்து எங்களைத் தற்காத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. சர்வதேச அளவிலும் நாடுகள் ரீதியாகவும் தொற்றுக்கு ஆளானவர்களின் எண்ணிக்கை நாள்தோறும் வெளிவந்து கொண்டிருக்கிறது. இது முற்று முழுவதுமாக துல்லியமான புள்ளி விபரங்கள் என்றால் இல்லை. கடந்த கட்டுரையில் குறிப்பிட்டதுபோல 'Asymptomatic Carriers' அதாவது வைரஸ் தொற்று ஏற்பட்டு எந்தவித அறிகுறிகள் இல்லாமல் நம்மிடையே சுற்றித்திரிவோர் இப்போதுள்ள எண்ணிக்கையைவிட பல மடங்கு அதிகம் என்கிறது சில ஆய்வறிக்கைகள். இவர்கள் தான் மற்றவர்களுக்குப் பேராபத்தானவர்கள். ஏனென்றால் அவர்களின் நோய் எதிர்ப்பாற்றல் பலமாக இருப்பதால் அவர்கள் தப்பித்துக் கொள்வார்கள். ஆனால் அவர்கள் மூலமாக மற்றவர்களுக்கு எளிதாக பரப்பிவிடும் காவிகளாக இருப்பர். இனி மக்கள் மத்தியில் சர்வசாதாரணமாக இவர்களின் நடமாட்டம் இருக்கும். அவர்கள் மீதும் தவறில்லை, ஏனென்றால் காவிகள் என்பது அவர்களுக்கே தெரியாது.

ஆகவே எங்களின் நோய் எதிர்ப்பாற்றலை வளர்த்துக்கொள்வது தான் பாதுகாப்பானதாகும். உலகுமெங்கும் பாதிப்புள்ளானவர்களின் இரத்த மாதிரிகளின் ஆய்வுகள் பல உண்மைகளை வெளிப்படுத்தியிருக்கிறது. கனடா, அமெரிக்கா உட்பட பல உலகநாடுகளில் தொற்றுக்குள்ளாகி இறந்தவர்களில் 80 வீதமானோர் முதியோர் இல்லங்களில் இருந்தவர்கள் தான். தொற்றுக்குள்ளான 80 வீதமானவர்கள் 70 வயதிற்கு மேற்பட்டோர். மற்றவர்கள் ஏதோ ஒரு விதத்தில் பல்வேறு நோய்களுக்கு ஆளாகி நோய் எதிர்ப்பு ஆற்றல் குறைபாடு கொண்டவர்கள்.

மேலும் முதியோர் பராமரிப்பு இல்லங்களில் அவர்களின் வாழ்க்கைமுறை, உணவுப் பழக்கம், பதப்படுத்தப்பட்ட உணவுகள் என்பதால் சத்துக்குறைபாடுகள், புகைப் பழக்கம், மதுபானப் பழக்கம், தொடர்ந்து படுக்கையில் இருத்தல், போதிய உடற்பயிற்சியின்மை, காற்றோட்டமின்மை, சூரிய ஒளி படுவதில்லை, பல்வேறு நோய்களுக்கு அவர் எடுத்துக் கொள்ளும் மருந்துகளின் பக்கவிளைவுகள், போதிய தூக்கமின்மை, மன அழுத்தம், மனவழுத்த மருந்துகள், வலி மாத்திரைகள், அல்சைமர், டிமென்சியா போன்ற மறதி நோய்கள்... இப்படி இன்னும் பல காரணங்களினால் அவர்களின் இயற்கையான நோய் எதிர்ப்பாற்றல் இல்லாமல் மேலும் இவர்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் சில விற்றமின்கள் உதாரணமாக விற்றமின் A, D, C, E, போன்றவையும் துத்தநாகம்(Zn) போன்ற தாதுக்களும் போதுமான அளவில் இருக்கவில்லை. நமது உடலிலுள்ள போர்வீரர்களாக செயற்பட்டு வைரஸ் கிருமிகளை எதிர்த்துப் போராடும் பல விதமான வெள்ளை அணுக்களின் ஆற்றலுக்கும், அவற்றின் போதுமான உருவாக்கத்திற்கும், அவற்றினுள்ளே உள்ள இரசாயணங்கள், நொதியங்கள், புரதங்களின் கட்டமைப்பு வலுவாக இருக்க இந்த விற்றமின்கள் தான் முழுமுதற்காரணமாக இருக்கின்றன.

இந்த அவசரமான நேரத்தில் உடனடியாக இதன் தேவையை நிறைவு செய்ய...

- விற்றமின் A ,
- விற்றமின் D3,
- விற்றமின் C
- விற்றமின் E
- Zinc

போன்றவை நாளொன்றுக்கு ஏதோ ஒரு வேளை மட்டும் உணவிற்குப்பின்பு எடுத்துக் கொள்வது நல்லது. இத்தொற்று குறைந்துள்ளது எனக் கருதும்போது, இவற்றின் அளவைக் குறைத்து இந்தச் சத்துக்கள் உள்ள உணவினை தேவையான அளவு எடுத்துக் கொள்ளலாம். 60 வயதிற்கு மேற்பட்டோர் நோய்த் தோற்று நின்ற பிறகும் தொடர்ந்து எடுத்துக் கொள்வது நல்லதாகும். முக்கியமாக, தகுந்த வைத்திய ஆலோசனையைப் பின்பற்றுவது முக்கியமானது.

மேற்குறிப்பிட்ட சத்துகள் நிறைந்த உணவுகளை நாள்தோறும் போதுமான அளவுகளில் தொடர்ந்து எடுப்பவர்கள் மாத்திரைகளின் அளவையும் குறைத்துக்கொள்ளலாம்.

இந்த நோயின் பரிமாணம் முன்பிருந்த நிலையைவிட சற்று மாற்றம் பெற்றுள்ளதும் நோயின் அதி தீவிரத்தன்மைக்கு ஒரு காரணமாகும். சுவாசப்பையினை தாக்கி நீர்தேங்கி நுரையீரல் வீக்கம் மற்றும் நிமோனியாவினால் தான் மூச்சுவிடுவதில் சிரமம் ஏற்பட்டு இறப்புகளுக்கு காரணமானது.

தற்போது குருதிக்குழாய்களுக்குள்ளே இரத்தம் உறைதல் (Thrombosis) சிறுசிறு துகள்களாக உண்டாகி பல உறுப்புகளையும் தாக்கி (Multi Organ Failure) உறுப்புகள் செயலிழந்து மரணம் உண்டாகிறது. மேலும் இந்த நோய் தாக்கியவர்களுக்கு வழங்கப்பட்ட சில மருந்துகளாலும் பாதிப்புகள் உண்டானது ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. அதில் குறிப்பாக Ibuprofen நம் எல்லோருக்கு பரீட்சயமான ADVIL. குறிப்பாக இந்த நோய் தொற்றுள்ளவர்களில் நோய் எதிர்பாற்றலை படுமோசமாக குறைப்பதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்த வைரஸ் தன்னை உருமாற்றம் செய்கிறது. ஆனாலும் ஒரு நல்ல விடயம் மற்ற வைரசுகளைப் போலல்லாமல் மிகவும் குறைவான தன்மையில் தான் இந்த உருமாற்றம் நடைபெறுகிறதாம். அது மட்டுமல்ல Hepatitis – B மற்றும் HIV (எய்ட்ஸ் நோய் வைரஸ்) போன்றவை மனிதரில் நீண்டகாலம் இருந்து நாட்பட்ட தொற்றுக்களை உண்டாக்குவதுடன் அது மனிதரை விட்டு வெளியேறுவதில்லை. ஆனால் கொரோனா அப்படியல்ல 7 - 15 நாட்கள் மட்டுமே உயிர் வாழ்ந்து இறந்து போனாலும், மனிதரில் நாட்பட்ட பாதிப்புகளை ஏற்படுத்துவதில்லையாம் என்பது மனதிற்கு நிம்மதி.

கொரியாவின் CDC ஆய்வுகள் ஒரு முறை தொற்று ஏற்பட்டவருக்கு மீண்டும் தொற்று உருவாக வாய்ப்பில்லை எனச் சொல்லுகிறது. ஆனாலும், வைரஸ் அழிந்த பின்பு அதன் புரதப் பாகங்கள் சிலமாதங்களுக்கு உடலுக்குள்ளே இருப்பதால் பரிசோதனைகளில் கிருமி இருப்பது போல (False Positive) முடிவுகள் தெரியலாம். அதனால் அஞ்சத்தேவையில்லை என்பதை உறுதிபடக் குறிப்பிடுகிறார்கள்.

கனடாவிலும் மற்றும் நாடுகளிலும் முதியோர் பராமரிப்பு இல்லங்களில் இறப்பு விகிதம் ஏன் அதிகமாக ஏற்படுகிறது என்பதற்கான காரணங்களை கட்டுரையில் முன்பு குறிப்பிட்டிருந்தேன். அதோடு அண்மைக்காலங்களில் முதியோர் இல்லங்கள் சரியான முறையில் பராமரிக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுகள் ஏற்கனவே எழுந்தவைதான். கனடாவில் மட்டும் இறப்பு வீதத்தில் 82% முதியோர் பராமரிப்பு இல்லங்களில் தான் ஏற்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல அவர்களுக்கு நோய்த் தொற்று உறுதி செய்யப்பட்டு அவதிப்படும் சூழ்நிலையிலும் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படுவதில்லை என்ற குற்றச் சாட்டுகளும் கனடா உட்பட பல நாடுகளிலும் முன்வைக்கப்படுகின்றன.

இவற்றிற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க கனடாவில் சில நாட்களுக்கு முன்னர் முதியோர் இல்ல பணிகளுக்காக இராணுவத்தினர் களமிறக்கப்பட்டனர் என்பது எல்லாராலும் வரவேற்கப்பட்டது. அங்கு சென்று பார்த்த அவர்கள் அதிர்ந்து போனார்கள். அதன் பின்பு சில நாட்களில் அவர்கள் அரசுக்கு அளித்த அறிக்கைகள் வெளிவரத் தொடங்கியபின் நாடே அதிர்ந்து போயுள்ளது.

பணியாளர்கள் எவரும் இல்லாத காரணத்தினால், நீண்ட நாட்களாக அவர்கள் சரியாக பராமரிக்கப்படாமல் டயப்பர் மற்றும் ஆடைகள் மாற்றாது உணவின்றி நம் மூத்த தலைமுறை தூய்மையற்ற சூழலில் இருந்த செய்தி அனைவர் கண்களிலும் ஈரம் கசியச் செய்ததுமட்டுமல்ல நாகரீகம் பேசும் இந்த தலைமுறை வெட்கித் தலை குனிய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

paul.joseph@thaiveedu.com

கோவிட்-19 பரவலைத் தடுக்க நாம் ஒன்றாக இணைந்து மாற்றத்தை உருவாக்குகிறோம்

வணிகங்களும் பணியிடங்களும் மீண்டும் திறக்கப்படுகையில், நாம் அனைவரும் தொடர்ந்து அனைவரின் பாதுகாப்புக்காக நமது பங்களிப்பை அளிக்கவேண்டும்.

சமூக இடைவெளியைக் கடைபிடிப்போம். மற்றவர்களிடமிருந்து இரண்டு மீட்டர்கள் தள்ளியிருப்போம்

உடல்ரீதியான இடைவெளி கடினமாக இருந்தால், முகக்காப்பு அணிவோம்

கைகளை நன்றாகவும் அடிக்கடியும் கழுவுங்கள்

மேலும் விபரங்களுக்கு **ontario.ca/coronavirus** தளத்துக்கு வருகை தருக

ஒன்டாரியோ அரசாங்கத்திற்காக ஒன்டாரியோ அரசாங்கத்தால் வழங்கப்பட்டது

Ontario

Lower rates.
Exceptional service.

Connect with an insurance company that puts clients first.
Discover why The Co-operators is the right choice
for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour
Emergency Claims Service, free Identity Theft coverage
with our Home policies, and Accident Forgiveness
Endorsement option. All backed by our
Claims Guarantee.

Senthooran Punithavel

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

797 Milner Avenue, Unit 200
Scarborough, ON M1B 3C3

குறைந்த கட்டணங்கள்
பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators®
A Better Place For You®

தலையில் நிற்கும் ஆசனம்

- பாதுசா ஆனந்தநடராசா -

மிகக் கடினமானது எனக் கருதப்படும் தலையில் நிற்கும் ஆசனமானது பார்ப்பதற்குக் கடினமாக இருந்தாலும் பயிற்சி செய்வதற்கு மிக எளிமையான ஒரு ஆசனம் ஆகும். இவ்வாசனத்தை கற்பதற்கு சில காலங்கள் எடுத்தாலும் இவ்வாசனத்தின் பயன் ஆனது அளப்பரியதாகும். பொதுவாக உடலை முன்னாலோ பின்னாலோ பக்கவாட்டிலோ வளைத்து செய்யக்கூடிய ஆசனங்கள் மற்றும் உடலை முறுக்கி செய்யக்கூடிய ஆசனங்களில் நீண்ட நேரம் நிலை பெற்றிருப்பது கடினமான ஒரு செயலாகும். ஆனால், இவ்வாசனத்தின் படிமுறைகளின்படி செய்யக் கற்றுக்கொண்டால் இவ்வாசனத்தில் நிலையாக நிற்பது மிக எளிமையான பயிற்சியாகும். மிக முக்கியமான ஆசனமான தலையில் நிற்கும் ஆசனம் ஆனது 84 ஆயிரம் ஆசனங்களுக்கு எல்லாம் முதன்மையான ஆசனமாகவும் விளங்குவதால் இதனை ஆசனங்களின் அரசன் எனவும் குறிப்பிடுவர். இந்த ஆசனத்திற்கு எல்லாவிதமான நோய்களையும் தீர்க்கும்வல்லமை உண்டு என்ற ஒரு நம்பிக்கை சார்ந்த கூற்றும் உண்டு. இதனால் வடமொழியில் சர்வ ரோக நிவாரணி என்றும் குறிப்பிடுவர். உடலோடு சேர்ந்து மனதிற்கும் சக்தி கிடைக்கக்கூடிய ஆசனமாகவும் விளங்குகின்றது.

உடலின் முழு இயக்கமும் தலைப்பகுதியை சார்ந்து உள்ளதால் உடலின் செயல்பாடு முழுவதும் தூண்டப்பட்டு செயல்படுத்தபடுவதனால் உடலின் இயக்கத்திற்கு முக்கியமானதொரு ஆசனமாக விளங்குகின்றது. இந்த ஆசனம் ஆனது உடலில் நாள்தோறும் நடக்கக்கூடிய செயல்பாடு சார்ந்த சுழற்சியை ஒழுங்குபடுத்தும் மூளையின் நடுப்பாகத்தில் உள்ள பட்டாணி அளவிலான முக்கோண வடிவிலான நாளமில்லா சுரப்பியான பினியல் (pineal) சுரப்பியையும், உடலின் எல்லா சுரப்பிகளுக்கும் தலையாய சுரப்பியான மற்றொரு நாளமில்லா பிட்யூட்டரி(pituitary) சுரப்பியையும் தூண்டுவதோடு மற்றைய சுரப்பிகளின் செயற்பாட்டையும் தூண்டி ஒழுங்கு படுத்துகின்றது. அத்துடன் உணர்ச்சிகளுக்கும் இயற்கை கடன் உந்துதல்களுக்குமாக அமையும் மூளையின் ஒரு பகுதியான ஹைப்போதலாமஸ் (hypothalamus)இன் செயல்பாட்டையும் தூண்டி இயங்க செய்கின்றது. இவ்வாறாக இவ்வாசனத்தைப் பயிற்சி செய்வதன் மூலம் உடல் முழுவதையும் கட்டுப்படுத்தக்கூடிய மூளையின் செயல்பாட்டு திறனை அதிகரிக்கின்றது.

இவ்வாசனத்தை செய்வதற்கு பலரும் தயக்கம் காட்டுவர். ஆனால் மன உறுதியுடன், ஒரு யோகா ஆசிரியரின் துணையுடன், உடல் மனம் இரண்டின் ஒருங்கிணைந்த செயல்பாட்டின் மூலமும், இவ்வாசனத்தை செய்வதற்குத் தேவையான 8 படிநிலைகளையும் விளங்கிக்கொண்டு படிப்படியாக இந்த ஆசனத்தை அணுகினால் இவ்வாசனத்தைச் செய்துவிடமுடியும்.

பயிற்சிக்கு தயார்படுத்தல்:

சிசு ஆசனப் பயிற்சியில் முழங்கால்களை மடித்து, கால் பெருவிரல்கள் ஒன்றோடு ஒன்று தொட்டவாறு இருகுதிகால்களை பக்கவாட்டுக்கு கொண்டு வந்து வைத்தபடி, இடுப்பை குதிக் கால்களுக்கு நடுவில் வைத்து இருந்து, உடம்பை முன்னால் வளைத்து நெற்றியை நிலத்திற்கு கொண்டு வந்து, கைகளை பக்கவாட்டில் நீட்டியபடி, உள்ளங்கைகளை மேல் நோக்கி வைத்தபடி இருக்க வேண்டும். நெற்றியை நிலத்திற்கு கொண்டு வர முடியாதவர்கள் கைகளைப் பொத்திப் பிடித்து, ஒரு கைக்கு மேல் இன்னொரு கையை வைத்து நெற்றியை மேல் வைத்துக்கொள்ளலாம். ஆனால் இடுப்பை குதிக் கால்களுக்கு நடுவில் இருத்தி வைத்திருப்பது முக்கியமாகும்.

தலைகீழாக நிற்பதற்கு முன் சிசுவாசத்தில் ஓய்வாக இருக்கையில் தலைக்கு போகக்கூடிய இரத்தத்தின் அளவு சிறிது சிறிதாக அதிகரித்து தலைகீழாக நிற்கையில் ஏற்படும் மேலதிகமான இரத்தப் பாய்ச்சலை எதிர்கொள்வதற்கு உடலை தயார் படுத்துகின்றோம்.

ஆசனத்திற்கு செல்லும் முறை:





இவ்வாசனத்தை எளிமையாக அணுகுவதற்கு பொதுவாக எட்டுப் படிநிலையாக அணுகுவர். எல்லா படிநிலைகளிலும் எமது ஆளுமையைச் செலுத்த சில காலம் தேவைப்படும். ஒவ்வொரு படிநிலையில் முக்கியத்துவத்தையும் விளங்கி உணர்ந்து கொண்டு இந்த எட்டுப் படிநிலைகளையும் பயிற்சி செய்து வந்தால் இவ்வாசனத்தைக் கற்பதில் உள்ள சிக்கல்களை எளிமையாக கடந்து இவ்வாசனப் பயிற்சியை செய்வதில் வெற்றி காணலாம். இவ்வாசனத்தைச் செய்வதற்கு நாம் அறிந்து கொள்ள வேண்டிய எட்டுப் படி நிலைகளும் பின்வருமாறு:

- சிசு ஆசனத்திலிருந்து முழங்கால்களையும் பாதங்களையும் ஒருங்கிணைத்தபடி குதிகால்களில் இருக்கவும். இரு கைகளாலும் எதிரெதிராக முழங்கைகளை பிடித்து தோள்களின் அகலத்திற்கு அளந்து நிலத்தில் வைக்கவும் முழங்கால்களுக்கு சிறிது முன்னால் முழங்கைகளை நிலத்தில் வைத்திருக்கவும்.
- கை விரல்களை கோர்த்து நிலத்தில் வைத்திருக்கவும். இவ்வாறு செய்கையில் கைகள் முக்கோண வடிவில் இருக்கும். இந்நிலையில் நாம் கவனிக்க வேண்டிய விடயங்களில் ஒன்று இரு முழங்கைகளும் நன்றாக நிலத்தில் அழுத்தி வைத்திருப்பதிலும், கோர்த்திருக்கும் கை விரல்களை உறுதியாக வைத்துக் கொண்டும் உள்ளங்கைகளின் பக்கவாட்டு பகுதியை நிலத்தில் அழுத்தி வைத்துக் கொண்டிருப்பது முக்கியம். பின்பு முழங்கைகளையோ விரல்களையோ நகர்த்தக் கூடாது.
- கோர்த்து வைத்திருக்கும் கைகளுக்கு உள்பக்கத்தில் தலையின் உச்சி பகு

தொடர்தல் 16ம் பக்கம்

தலையில் நிற்கும்...

15ம் பக்கத் தொடர்ச்சி...

திதியை நிலத்தில் வைத்து, பிடரியை நிலத்தில் வைத்திருக்கும் உள்ளங் கைகளால் பிடிக்கவும்.

- தலையையும், முழங்கைகளையும் அசைக்காது பின்பக்கமாக நீட்டி இருக்கும் கால் விரல்களை உள்நோக்கி மடித்து நிலத்தில் அழுத்தி, முழங் கால்களை நேராக்கி, இடுப்பை மேல் நோக்கித்தூக்கவும். உடற்பாரம் முழம் கைகளில் இருக்குமாறு பார்த்துக்கொள் ளவும். நிலத்தில் இருக்கும் உச்சிப் பகுதியில் மேலதிகமான அழுத்தத்தைக் கொடுக்கக்கூடாது.
- நீட்டி இருக்கும் கால்களை மெதுவாக எடுத்து வைத்து இடுப்பு பகுதியை தோள்களுக்கு பின்னால் தள்ளிக் கொண்டு சென்று கால் பாதங்கள் நிலத்தை விட்டு எழும்பும்வரை பாதங் களை முன்னோக்கிக் கொண்டு செல் லவும். முதுகுப் பகுதி நேராகவும் இடுப்புப்பகுதி தலைக்கு மேலாக நேராகக் கொண்டுவருதல், கால்களை மேலே தூக்கி ஆசனத்திற்குள் வருவதை எளிமையாக்கும். ஐந்தாம் நிலையில் எமது முழங்கைகளும், உச்சிப் பகுதி யும், கோர்த்திருக்கும் கைவிரல்களின் கடைசி விரலும், உள்ளங்கைகளின் வெளிப்பக்கப் பகுதியும், கால் விரல்க ளுமே நிலத்தில் இருக்கும்.
- ஒவ்வொரு முழங்காலாக மடித்து நெஞ் சுக்கு கொண்டுசென்று இடுப்பைத் துரிதமாக தூக்கி, வளைந்திருக்கும் முதுகை நேராக்கவும். தொடைப் பகு தியை மேல்நோக்கி தூக்கி குதிகால் களை புட்ட தசைகளை தொடுமாறு கொண்டு செல்லவும். இந்த நிலையில் முழங்கால்கள், முகம் எத்திசையில் உள்ளதோ அத்திசையில் இருக்கும்.

முதுகும் தொடைகளும் 90 பாகையில் இருக்கும். இந்நிலையில் உடம்பின் பாரம் முழுவதும் முழங்கைகளிலும் சிறிதளவான பாரம் தலையிலும் இருக் கும். கவனித்துப் பார்க்கையில் உடம்பு இந்தநிலையில் கைவிரல்களில் இருந்து முழங்கைகள் வரையும், தலையிலி ருந்து இடுப்பு வரையும், புட்ட தசைக- ளிலிருந்து முழங்கால்கள் வரையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் பக்கவாட்டில் திரும்பியிருக்கும் 'ப' வடிவத்தோடு ஒப்பிடலாம்.

இந்த ஆறாம் நிலைக்கு வருவதே இவ்வாசனத்தின் கடினமான ஒரு செயற் பாடாகும். இந்த நிலைக்கு வருகை யில் பின்னோக்கி விழுவதை தவிர்க்க முழங்கைகளை நன்றாக நிலத்தில் அழுத்தி வைத்திருப்பதும், பிடரியை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டிருப் பதும், அத்துடன் தோள்களை காதை விட்டு மேல் நோக்கி தள்ளி வைத்தி ருப்பதிலும் மேலதிகமான கவனத்தைச் செலுத்த வேண்டும்.

- இரு முழங்கால்களையும் ஒன்றாக மேல்நோக்கி கொண்டு சென்று மெது வாக இடுப்புப் பகுதியை நேராக்க வும். இவ்வாறு செய்கையில் முழங் கால்கள் மேல் நோக்கி இருக்கும். இந்த நிலைக்கு வருகையிலும் பின்பு றமாக விழாமல் தவிர்ப்பதற்கு முழங் கைகளில் கவனத்தைச் செலுத்தி, நிலத் தில் நன்றாக அழுத்தி வைத்திருக்க வேண்டும். அதே நேரத்தில் பிடரியை அழுத்திப் பிடித்திருக்க வேண்டும். இவ்வாறு நிற்பது அரை நிலையில் தலையில் நிற்றல் எனப்படும். குதிகால் கள் புட்ட தசைகளை நோக்கியே இருக்கும். இந்த நிலையில், உடம்பு 'ட' வடிவத்தில் இருக்கும்.
- கடைசியாக முழங்கால்களை நேராக்கி பாதங்களை மேல்நோக்கிக் கொண்டு வந்து, முழுமையான ஆசன நிலைக்கு வரவும்.

ஆசனத்தில் நிலை கொள்ளல்:

இந்த ஆசனத்தில் நிலையாக இருப்ப தற்கு, எமது கவனத்தை ஒருநிலைப்ப டுத்தி வைத்திருப்பது மிக முக்கியம். இந்த ஆசனத்தில் இருந்து நிலைதடுமாறி



விழுந்துவிடாமல் இருப்பதற்கு ஆரம்ப பயிற்சியாளர்கள் மனதை ஒரு நிலைப் படுத்தி, அவர்களுக்கு முன்னால் நிலை யாக இருக்கும் ஒரு பொருளைப் பார்த்து, கவனத்தை ஒருநிலைப்படுத்தி ஆசனத் தில் நிலை கொள்ளலாம். பயிற்சியில் நன்கு தேர்ச்சி பெற்றவர்கள் மெதுவாக கண்களை மூடி கவனத்தை மூச்சிலேயோ அல்லது தலைப்பகுதியிலேயோ செலுத்தி ஆசனத்தில் நிலை கொள்ளலாம். தலை கீழாக நிற்கையில் மூச்சின் தன்மை தீவி ரமாக இருக்கும்.

ஆசனத்தில் நிலை கொள்ளும் பொழுது நாம் கால்களை ஒன்றாக வைத்திருப்ப திலும், முதுகை நேராகவும் நிலையாகவும் வைத்திருப்பதிலும் வயிற்றுத் தசைகளை நன்கு பயன்படுத்தியவாறும், தோள்களை காதை விட்டு மேல்நோக்கி தள்ளி தூக் கியவாறு வைத்த படியும், முழங்கை களை நிலத்தில் அழுத்தி வைத்திருப்ப திலும், பிடரியை அழுத்தமாக பிடித்து இருப்பதிலும் கவனத்தைச் செலுத்தவேண் டும்.

ஆசனத்தை விட்டுவெளி வரும் முறை:

தலைகீழாக நிற்கும் ஆசனத்திலிருந்து வெளிவருவதற்கு, ஆசனத்திற்கு உள் செல்லும் பொழுது எவ்வாறு படிநிலைக- ளில் உள் சென்றோமோ அவ்வாறு படி நிலைகளில் மெதுமெதுவாக வெளியே வரவேண்டும்.

முழங்கால்களை மடித்து, குதிகால்களை புட்டத் திசையை நோக்கி கொண்டு வந்து, பின் முழங்கால்களை நெஞ்சை நோக்கி கொண்டு வந்து, கால் விரல்களை நிலத் தில் வைத்து, இடுப்பை இரண்டு குதி கால்களுக்கும் நடுவில் வைத்து, சிசு ஆசனநிலைக்குள் வந்து ஓய்வாக இருத் தல் வேண்டும். சிசு ஆசன நிலைக்கு வந்து ஓய்வு எடுத்த பின், சவாசன நிலைக்கு வரவும். சவாசனத்தில் சில நிமி டங்கள் ஓய்வாக இருந்த பின்பே, மற்றைய பயிற்சிகளை தொடர்ந்து செய்ய வேண் டும்.

மாற்று ஆசனம்:

தலையில் நிற்கும் ஆசனத்திற்கு மாற்று / எதிர் ஆசனம் சிசு ஆசனமாகும். தலை யில் நிற்றல் பயிற்சியை முடித்த பிறகு நேராக சிசு ஆசனத்திற்குள் வந்து சில

தொடர்தல் 17ம் பக்கம்

தலையில் நிற்கும்...

16ம் பக்கத் தொடர்ச்சி...

வினாடிகள் இருத்தல் முக்கியம். இவ்வாறு செய்கையில் தலைகீழாக நிற்கும் பொழுது மேலதிகமாக தலைக்குப் பாயும் இரத்தத்தின் அளவை படிப்படியாக குறைத்து ஆறுதல்படுத்த முடிகிறது. பின்பு, உடலை நாம் நேராக கொண்டு வரலாம்.

பயிற்சியின் கால அளவு:

ஆரம்பநிலையில் 15 வினாடிகள் வரை ஆசன நிலையில் இருக்கலாம். படிப்படியாக நேரத்தை அதிகரிக்கலாம். தினம் ஐந்து முதல் பத்து நிமிடங்கள் வரை ஆசனத்தில் நிலை கொள்ளலாம்.

பொதுவான தவறுகள்:

- உடல் பாரத்தை தலையில் வைக்கக் கூடாது. உடல் பலவீனம் உடையவர்கள் தோள்களை வலுப்படுத்தும் (டால்பின்) பயிற்சியை தொடர்ந்து செய்த பின் இந்த ஆசனத்திற்கு முயற்சி செய்யலாம்.
- முழங்கைகளை தவறான அளவில் வைத்திருக்கக்கூடாது.
- மேல் முதுகு பகுதியை வளைத்து வைத்திருத்தல் கூடாது.
- தலையிலோ கழுத்திலோ உடல் பாரம் முழுவதையும் போடக்கூடாது. 90 வீத மான உடற் பாரம் முழங்கைகளில் இருக்க வேண்டும்.
- படி முறைகளின்படி இவ்வாசனத்தை செய்ய வேண்டும். திடீரென பாய்ந்து தலையில் நிற்கக்கூடாது.
- தலையை அதிகமாக முன்னால் நீட்டி வைத்திருக்கக்கூடாது.
- ஆசனத்தை விட்டு வெளிவரும் பொழுது திடீரெனக் குதித்து வரக்கூடாது.
- தோள்களை வளைத்து வைத்திருக்கக் கூடாது.
- கால்களை பின்பக்கமாக கொண்டு செல்லவோ முழங்கால்களை மடித்து பக்கவாட்டில் திருப்பி வைத்திருக்கவோ கூடாது.
- ஆசனத்தை விட்டு வெளிவரும் பொழுது அவசரமாக வரக்கூடாது.

ஆசனத்தின் பயன்கள்:

- முதுகுத் தசைகள், வயிற்றுத் தசைகள், தோள் தசைகள், கை தசைகள், யாவும் வலிமை பெறுகின்றன. நெஞ்சுப் பகுதித் தசைகள் நெகிழ்வுத் தன்மை அதிகரித்து நுரையீரலின் சுருங்கி விரியக் கூடிய தன்மையை அதிகரிக்க உதவுகின்றது.
- முதுகெலும்பு, கால் எலும்புகள் நன்கு நீட்டப்படுகின்றன, கை எலும்புகள் நீட்டி வளைக்கப்படுவதனால் உறுதி அடைகின்றன. கீழ் முதுகுப் பகுதியில் உள்ள முதுகெலும்பின் கீழ்ப்பகுதி முள்ளெலும்புகள் அழுத்தம் பெற்று ஆறுதல் அடைகின்றன.
- உடலானது தலைகீழான நிலையில் நேராக இருப்பதனால் இரத்தச் சுற்றோட்டம் அதிகரித்து இருதயத்திற்கு உள்வரும் இரத்தத்தின் அளவு அதிகரிக்கின்றது. இதனால் இதயத்துடிப்பு சீராகவும் ஆறுதலாகவும் இயங்குகின்றது.
- நாள்தோறும் இவ்வாசனத்தை செய்வதன் மூலம் இரத்தஓட்டம் இதயப் பகுதியை நோக்கிச் செல்வதனால் இதயப் பகுதி நெகிழ்வுத்தன்மை அடைவதோடு வலிமையும் அடைகின்றது.
- மூச்சின் தன்மையை ஆழமாக்குவதோடு மூளைப் பகுதிக்கும், மூளையோடு சேர்ந்து இசைவாக இயங்குகின்ற நரம்புகளுக்கும் பிராணவாயு அதிகப்படுத்துகின்றது.
- இரத்தச்சுற்றோட்டம் அதிகரிப்பதனால் உடலின் கலன்களுக்கு ஊட்டச்சத்து சீராக கிடைப்பதனால் உடலின் செயல்பாடு சீர்படுத்தப்படுகின்றது.
- வெரிகோஸ் எனப்படும் கால் நரம்பு சிரைகளின் வீக்கமானது தலை கீழாக நிற்பதனால் அசுத்தமாக தேங்கியிருக்கும் இரத்தமானது நன்கு வடிகட்டப்பட்டு சரி செய்யப்படுகின்றது.
- சிறுநீரக பாதிப்பினால் வயிற்றில் ஏற்படும் வலி, மற்றும் கடினமான மலச்சிக்கல் இவற்றிற்கு ஆறுதல் கிடைக்கின்றது.
- வயிற்றுப்பகுதி கீழ்பக்கமாக திருப்பப்படுவதனால் கல்லீரல் பகுதியில் செயற்பாடு அதிகரிக்கின்றது.
- உடல் முழுவதற்கும் இரத்த ஓட்டம் சீராக கிடைப்பதனால் சமிபாட்டுத் தன்மை அதிகரிப்பதோடு உடல் கழிவுகளும் அகற்றப்படுகின்றது. ஒழுங்கற்ற நிலையில் இருக்கும் நரம்புகள், கண்கள், காதுகள் மூக்கு, தொண்டைப் பகுதி போன்ற உறுப்புகளுக்கு நன்மை கிடைக்கின்றது.
- கண்களில் வரும் நோய்களான பார்வை குறைவை உண்டாக்கும் கண் அழுத்த நோய், இரத்த அழுத்தம் இவற்றை வராமல் தடுக்கின்றது.
- கடுமையான ஒரு பக்கத் தலைவலி மற்றும் தலைவலி இவற்றிற்கு ஆறுதல் கிடைக்கின்றது.
- கழுத்து, தோள் இவற்றில் ஏற்படும் காயங்களின் வலிகளை போக்குகின்றது.
- ஐம்புலன் உணர்வுகளையும் திறம்பட செயற்படுத்துகின்றது. பார்த்தல், கேட்டல் போன்ற உணர்வுகளை அதிகப்படுத்துகின்றது.

மனதிற்கான பயன்கள்:

- எல்லா நரம்புகளும் ஊட்டம் அடைவதனால் மனச்சோர்வு, அதிக மன அழுத்தம், மனப்பயம், இல்லாமல் ஆக்கப்படுகின்றது.
- மனது அமைதி நிலையை அடைந்து உணர்ச்சிவசப்படும் தன்மையை ஒழுங்குபடுத்துகிறது.
- ஞாபகசக்தியும் புத்திக்கூர்மை திறமையும் அதிகரிக்கின்றது.
- முக்கியமாக மாணவர்கள், அரசியல் வாதிகள், கலைஞர்கள், விஞ்ஞானிகள் இவர்கள் தமது வேலைகளில் கவனத்தைச் செலுத்தி சிந்தித்து செயலாற்றுவதற்கு அதிக சக்தியைகொடுக்கின்றது.
- நரம்புகளால் ஏற்படும் சமநிலையற்ற தன்மையினால் வரும் மனக் குழப்பங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கின்றது.
- பொதுவாக இந்த ஆசனமானது உடலுக்கும் மனதிற்கும் மிகவும் சக்தி வாய்ந்த ஆசனமாகவும், மனித உடலின் எல்லா நோய்களுக்குமான உன்னதமான மருந்தாகவும் விளங்குகின்றது.

உடல்நலம் கருதி மனதில் கொள்ள வேண்டியவை:

ஆசனங்களைச் செய்வதற்கு முன் கடைப்பிடிக்க வேண்டிய விதி முறைகளும் முக்கியமானதாகும்.

- உடல்கழிவுகளை அகற்றப்பட வேண்டும்
- பயிற்சி செய்யும் பொழுது உணவோ நீரோ அருந்தக்கூடாது.
- உணவுக்குப்பின் நான்கு மணி நேரம் சிற்றுண்டிக்கு பின் இரண்டு மணி நேரமும் இடைவெளி அவசியம்.
- எளிமையான மூட்டுப் பயிற்சிகளைச் செய்து உடலை ஆசனப் பயிற்சிக்கு தயாராக வேண்டும்.
- ஒவ்வொரு ஆசனத்திற்கும் மாற்று ஆசனம் அல்லது எதிர் ஆசனம் அவசியம்.
- தலைகீழ் ஆசனத்தைப் பொறுத்த வரையில் சில விதிமுறைகள் முக்கியமானது. உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களும், கண் சத்திர சிகிச்சை செய்தவர்களும், 4 மாதத்திற்கு மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்களும், மிக அண்மைக்காலத்தில் கழுத்து அறுவை சிகிச்சை செய்தவர்களும் இந்த ஆசனத்தைச் செய்வதை தவிர்க்கலாம்.

தலையில் நிற்கும் ஆசனத்தை பயிற்சிக்குக் கொண்டுவருவதற்கு சிறிது காலம் தேவைப்படும். ஆயினும், நாம் பொறுமையாக இவ்வாசனத்தை படிநிலைகளில் ஒரு யோகா ஆசிரியரின் உதவியுடன் பயின்றால் இவ்வாசனத்தை செய்வதில் வெற்றி காணலாம். இவ்வாசனத்தை செய்வதால் தன்னம்பிக்கை இயல்பாகவே அதிகரிக்கும். மனப் பயங்களை எதிர்கொள்ளும் தன்மையும் அதிகரிக்கும். சிந்தனையில் தெளிவும் கூர்ந்து கவனிக்கக்கூடிய தன்மையும் இயல்பாகவே வளரும்.

pathusha@thaiveedu.com



BUYING OR SELLING

Residential, Commercial, Land & Investment Properties

For Sellers:

- Free Market Evaluation Available
- Competitive Commission Packages Available
- Will pay for Staging & Condition
- WIll pay the Professional Photographer
- Virtual Tour
- Color Brochure
- Will do open house until house get sold
- Will market your home with social medias

SATHY & NITHY REAL ESTATE TEAM

For Buyers:

- Will find the home in any area within your budget
- Get you the lowest mortgage. rate

NITHY
SATHYAKUMAR
Sales Representative
Dir: 416.728.2454
Email: realtornithy@gmail.com

SATHY
SIVASUBRAMANIAM
Broker
Dir: 416.624.5044
Email: realtorsathy@gmail.com

16th Avenue / 9th Line $1,550

FOR LEASE BEDROOMS:2 WASHROOMS:1

Morningside / Finch $1,200

FOR LEASE BEDROOMS:1+1 WASHROOMS:1

Pharmacy Ave/Lawrence Ave $1,600

FOR LEASE BEDROOMS:3 WASHROOMS:1

Victoria Park / Ellesmere $2,000

FOR LEASE BEDROOMS:2 WASHROOMS:1

Rossland/Wilson $599,900

FOR SALE BEDROOMS:3+2 WASHROOMS:2

Crowder Blvd / Leslie St $549,900

FOR SALE BEDROOMS:3+1 WASHROOMS:2

Simcoe/Britannia $509,000

FOR SALE BEDROOMS:4 WASHROOMS:3

Yonge/Front $659,000

FOR SALE BEDROOMS:1+1 WASHROOMS:1

King/Blue Jays $699,000

FOR SALE BEDROOMS:1 WASHROOMS:1

Lawrence Ave E/Orton Park $699,000

FOR SALE BEDROOMS:3+1 WASHROOMS:3

Finch / Victoria Park $759,000

FOR SALE BEDROOMS:3 WASHROOMS:2

Hoover Park/Tenth Line $769,900

FOR SALE BEDROOMS:3+1 WASHROOMS:3

Brock/Hwy 2 $799,000

FOR SALE BEDROOMS:3 WASHROOMS:4

Dufferin/Summeridge $889,000

FOR SALE BEDROOMS:3 WASHROOMS:4

Markham/Sheppard $799,000

FOR SALE BEDROOMS:4+2 WASHROOMS:3

Pharmacy/N.Eglinton $838,000

FOR SALE BEDROOMS:3+2 WASHROOMS:2

RE/MAX Remax Realtron Realty Inc., Brokerage
Independently Owned And Operated
Bus: 905 470 9800

Web: realtorsathy.com

TRUE HAIR
REPLACEMENT

LET US MAKE YOU FEEL
YOUNGER AND MORE CONFIDENT
WITH VISIBLE RESULTS FOR YOUR HAIR LOSS.

WE USE ONLY TOP-QUALITY HUMAN HAIR
BEING IN THE BUSINESS OVER 30 YEARS WE TAKE GREAT PRIDE IN OUR WORK.
LET US TRANSFORM YOUR LOOK!!!

பண்டிகைக் காலப் பரிசாக உங்கள்
அன்புக்குரியவர்களுக்கு பரிசளியுங்கள்.

CALL US TO BOOK YOUR FREE CONSULTATION
416-492-7873



RESIDENTIAL SECOND MORTGAGES
FROM 8.99% QUICKLY AND EFFICIENTLY
Residential 1st & 2nd Mortgages
Commercial 1st & 2nd Mortgages
Refinance & Home Equity Line of Credit
Renovation and Debt Consolidation Loan

DON'T FORGET,
WE CAN CLOSE
YOUR RESIDENTIAL
MORTGAGE WITHIN
48 HOURS

PURCHASE AND REFINANCE
- ✓ Gas Stations, Restaurants and Retail Plazas, Auto Body Shop, Churches, Motels and Cottages
- ✓ Business Loan for Existing and New Business
- ✓ Start up Business and Business Line of Credit
- ✓ Construction Financing for Commercial and Residential
- ✓ Store with Apartment, Duplex, Triplex and Rental Properties
- ✓ Vacant Land & Farm Financing and more...

We can arrange
COMMERCIAL
MORTGAGES
with 10% down
(some conditions may apply)

"Every great business is built on friendship"
CALL FOR FREE CONSULTATION OR VISIT MY OFFICE

T. Antony Ponrajah
Mortgage Agent License: M08004007
Brokerage License# 10216

416.457.0651
Email: antonyres@gmail.com

40 New Delhi Dr. Unit 107A, Markham ON, L3S 0B5
Tel: 416.431.5115

பெற்றோரும் பிள்ளைகளும்

வீட்டிற்கு வெளியே செல்ல முடியாத அகச் சிறையில் அடைபட்டுக்கிடக்கும் இந்த வேளை குழந்தைகளின் கல்வியை எப்படி ஊக்குவித்து, முன்னேற வைப்பது என்பது ஒவ்வொரு பெற்றோரிடம் எழும் கேள்வி. அதற்கான அடிப்படைப் பண்புகள், தன்மைகள் பற்றி நோக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

பிள்ளைகளைப் பெற்று, வளர்ப்பது என்பது ஒரு சாதாரணமான விடயம் என்பது பெரும்பாலான பெற்றோரிடையே நிலவும் பொதுமைக் கருத்து. ஆனால் உளவியல், மருத்துவ, கல்வியியல் ஆய்வாளர்களின் கூற்றுப்படி மனிதப்பிறவியின் வளர்ச்சிப் பருவங்கள் ஒவ்வொன்றிலும் கற்றல் நடவடிக்கைகள் பாரிய தாக்கத்தினை உளத்தில் ஏற்படுத்துகின்றது. கல்வி என்பது உள்ளார்ந்த ஆற்றலைக் கோதிக்கோதி (கல்லி) எடுப்பது அல்லது வெளியே கொண்டு வருவது என்பது கல்வியின் பொருளாயின் எல்லாக் குழந்தைகளும் கற்றுத் தேறமுடியும் என்பது உண்மை. உள்ளார்ந்த அறிவாற்றலை வெளியே கொண்டுவருவது கல்வியின் பணி என்பதால், கற்றலுக்குரிய அகப் புறத் தூண்டிகளின் செயற்பாடுகள் முக்கியம் வகிக்கின்றன. உளவிருத்தி என்பது குழந்தை தாயின் வயிற்றில் இருக்கும்போதே ஆரம்பிக்கின்றது. எனவே, கற்றல் நடத்தையும் அங்கேயே தொடங்குகின்றது என்பது வெளிப்படை. பிள்ளைகளின் உடலியல் வளர்ச்சிக்கு மாத்திரம் அல்ல, உளவியல் வளர்ச்சிக்கும் ஆதாரமானவர்கள் அவர்களைப் பெற்றெடுத்து வளர்க்கும் பெற்றோர்களே ஆவர்.

குழந்தைகள் உருவாக்கம்:

மனித உயிராக்கம் வியப்பிற்கு உரிய தொன்றாகும். பெண்ணின் முட்டையைச் சுற்றி நீந்திவரும் இலட்சக்கணக்கான விந்தணுக்களில் ஒன்று மாத்திரமே பெண்ணின் முட்டையை(கருவை) சென்றடைந்து கருவாகி, மனித உயிராக உருவாகி, உடலமைப்பைப் பெற்றுப் பிறப்பெடுக்கின்றது. இதனை மிக அழகாக பட்டினத்தார் 11ம் நூற்றாண்டிலேயே பாடியுள்ளார்.

ஒரு மட மாதும் ஒருவனும் ஆகி
இன்ப சுகம் தரும் அன்பு பொருந்தி
உணர்வு கலங்கி ஒழுகிய விந்து
ஊறு சுரோணித மீது கலந்து

பனியிலோர் பாதி சிறு துளி மாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதுமரரும்பு கமடம் இதென்று
பார்வைமெய் வாய்செவி
கால்கைகள் என்ற

உருவமும் ஆகி உயிர் வளர் மாதம்
ஒன்பதும் ஒன்றும் நிறைந்து மடந்தை
உதரமகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமும் நாளும் அறிந்து

ஒளிநகை ஊறல் இதழ் மடவாரும்
உவந்து முகந்திட வந்து தவழ்ந்து
மடியில் இருந்து மழலை மொழிந்து
வா இரு போ என நாமம் விளம்ப

உடைமணி ஆடை அரைவடம் ஆட
உண்பவர் தின்பவர் தங்களொடுண்டு
தெருவினிலிருந்து புழுதி அளைந்து
தேடிய பாலரடோடி நடந்து
அஞ்சு வயதாகி விளையாடியே ...

எனப் பாடியுள்ளவற்றை பார்க்கும்போது பிள்ளைகள் மண்ணில் பிறக்குமுன் - அன்னை வயிற்றில் உருவாகும் தன்மையை எடுத்துரைக்கின்றார்.

குழந்தை தாயின் கருவறையில் இருந்தே கற்றுக்கொள்ள ஆரம்பிக்கின்றது என்பதனை உளவியல், விஞ்ஞான ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. குழந்தை வளர்ச்சிப் படிகள் எவை? குழந்தைகளை நாம் ஏற்றவாறு பேணி வளர்க்கின்றோமா? அவர்களின் தேவைகளை நாம் உரிய காலத்தில் பூர்த்தி செய்கின்றோமா? என்பன போன்ற கேள்விகள் எம்முன்னே எழுகின்றன. பிள்ளைகளை கற்கவைப்பதற்குப் பாடசாலைக்கு அனுப்பிவைப்பதே எமது கடமை, மற்றயது எல்லாம் பாடசாலையைப் பொறுத்தது. அல்லது, தனிப்பட்ட முறையில் மேலதிகமாகக் கற்க (Tution) ஒழுங்கு செய்து கொடுப்பதுதான் பெற்றோரின் கடமை என்று எண்ணும் பெற்றோர்கள் மிக அதிகம் பேர் எம்மிடையே வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். தமது பிள்ளைகளைத் தாமே அறியாமல் தவறாக வழிநடத்துகின்றார்கள் என்பதனை அவர்கள் உணர்வதில்லை. எனவே, பிள்ளைகளை எவ்விதம் வழிநடத்த வேண்டும், அதற்குப் பெற்றோர் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி சற்றுச் சிந்தித்துச்

படம்: ரூபன் திரு.

செயற்பட வேண்டியது ஒவ்வொரு பெற்றோரினதும் கடமையும் பொறுப்புமாகும். தாயின் வயிற்றில் இருக்கும் குழந்தை அங்கேயே கற்கத் தொடங்குகின்றது என்பது மருத்துவவியலாளர்கள், உளவியலாளர்களின் கூற்று. தாயின் ஆரோக்கிய வாழ்வு, அவரது பழக்க வழக்கங்கள், மதுப்பழக்கம், புகைபிடித்தல் போன்ற பழக்கவழக்கங்கள் மற்றும் மனவெழுச்சி நிலைகள் போன்றன குழந்தைகளின் உடலிலும், உளத்திலும் தாக்கம் விளைவிக்கின்றன என்பது நிரூபணமான உண்மையாகும். தாமதமாகக் கல்வி கற்கின்ற பிள்ளைகள் அல்லது மூளைவளர்ச்சி குன்றிய பிள்ளைகள் எனப்படுவோரில் பலர் தாய்மார் குழந்தைகளை வயிற்றில் வைத்திருக்கும் போது ஏற்படும் மனத்தாக்கங்கள், ஏக்கங்கள், இழப்புக்களால் பாதிக்கப்படுவதினால் இடம்பெறுகின்றன. அல்லது அவர்களது மதுப்பழக்கம், புகைபிடித்தல் போன்றனவும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. கற்பம் உற்ற தாய்மாருக்கு 'வளைகாப்பு' விழா எடுத்து வளையல் அணிந்து அவரை மகிழ வைக்கும் ஒரு வைபவம் தமிழ் மக்களிடையே பண்டைக் காலத்திலிருந்தே பின்பற்றப்பட்டு வந்துள்ளமைக்கும் குழந்தை உளவியலுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளமையை உளவியல் உலகம் எடுத்துக் காட்டுகின்றது. தாய் மகிழ்வாக இருப்பதனால் பிள்ளையின் உளவளர்ச்சியும் நேர்த்தியானதாக இருக்கும் என்பதோடு மட்டுமல்லாது, வளையல் ஓசை கருவில் உள்ள குழந்தைக்கு இன்பக்கிளர்ச்சியை ஏற்படுத்துகின்றது என்பதும் அறியப்பட்ட உண்மையாகும். எனவே குழந்தை கருவுற்றதிலிருந்தே பேணி வளர்க்க வேண்டியது முக்கியமானதாகும். தாய்மார் தமது வயிற்றில் இருக்கும் குழந்தைக்காக நல்ல உணவுகளை உண்பது மட்டுமல்லாது, மனமகிழ்ச்சிதரும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வைப்பதோடு அதிர்ச்சிதரும் செய்திகளையும் அவர்கள் கேட்டுத் துன்பமடையாமலும் இருத்தல் குழந்தையின் உளவிருத்திக்கு மிகமிக முக்கியமானதாகும்.

குழந்தை பிறக்கையிலே:

குழந்தைகள் இந்த மண்ணைத்தொடும் போது அவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள், கஷ்டங்கள், ஆபத்துகள் என்பன தொடர்ந்தவண்ணமே உள்ளன. எவ்வளவு தான் மருத்துவத்தில் தொழில் நுட்பங்கள் வளர்ந்துள்ளபோதிலும் குழந்தைப் பிறப்பினை தகுந்த முறையில் கவனிக்கப்படாமையால் அந்ததருணம் மிக ஆபத்தானதாக மாறுகின்றது. பிரசவ வேதனையை அனுபவிக்கும் தாயர் மரணப்பீதியை அடைகின்றனர். புயலுக்குப் பின்னர் அமைதி போன்று பிள்ளை பிறந்த பின்னர் அவர்கள் அமைதியடைகின்றனர். மனப்பயம் அகன்று இன்பப் பிரவாகம் பிறக்கின்றது. குழந்தைப் பிரசவ காலத்தில் ஆலோசனையும், அரவணைப்பும் தேவையானது. அத்தோடு பிரசவத்திற்கு உரிய குழந்தைப் பேற்று மருத்துவர் மற்றும் மருத்துவ நிலையம் என்பனவற்றைத் தேர்ந்தெடுப்பதில் மிகுந்த கவனமும் ஆலோசனையும் பெறப்படுதல் வேண்டும்.

பிரசவ காலத்தில் கூட வைத்தியர்களின் கவனக்குறைவால் குழந்தைகளின் உடலியல், உளவியல் தாக்கங்கங்கள் ஏற்படுவதும் உண்டு. எடுத்துக்காட்டாக: எனக்குத் தெரிந்தவருக்கு குழந்தை ஒன்று பிறந்தபோது, அக்குழந்தையின் பிரவசத்தின்போது மருத்துவர்களால் பாவிக்கப்பட்ட ஆயுதத்தின் தாக்கம் அக்குழந்தையின் மூளையில் உள்ள நரம்பைத் தாக்கியுள்ளமையால் அக்குழந்தைக்கு ஒரு பக்க வளர்ச்சி சற்றுக்குறைவாகக் காணப்பட்டது. அவர் வளரும் போது ஒரு காலும் ஒரு கையும் ஏன் ஒரு கண்ணுமே சற்று வித்தியாசமானதாகக் காணப்பட்டது. இது பெற்றோரின் கவனக்குறைவல்ல. ஆனாலும், அக்குழந்தை வளர வளர ஏற்ற பயிற்சிகள் கொடுத்து அவரது தன்மையைச் சீர் செய்தமையும் வைத்தியர்கள் தான் என்றாலும், பெற்றோரின் பங்களிப்பு இங்கு மிக அதிகம் என்பதனைக் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும். பயிற்சியளித்தல், என்பது கிரமமான முறையில் செய்வதற்கு எந்தவித தயக்கமும் இன்றி அவர்கள் தமது பிள்ளையுடன் தமது நேரத்தைச் செலவு செய்தமையை நான் நன்கு அறிவேன். எனவே இது வைத்தியர்களின் பங்களிப்பிலும் பார்க்க பெற்றோரின் பங்களிப்பே முக்கியம் என்பதனைப் பார்த்து தெரிந்துகொண்டவன் என்பதனால் அதனை ஆதாரமாகத் தரவிளைகின்றேன்.

குழந்தை வளர்கையிலே:

குழந்தை ஒன்று, தான் பிறந்த உடனேயே யாரும் சொல்லித்தராமலே தானாகவே சுவாசித்து தனது சுவாசப்பையை நிறைத்துக் கொள்கின்றது. அதன் பின்னர் அழவும் தொடங்குகின்றது. குழந்தையின் அடிப்படை அழுகையின் தன்மை அல்லது வடிவம் அதன் ஆரம்ப ஆண்டுகளைப் பொறுத்ததாக அமைகின்றது. அதாவது குழந்தை மற்றவர்கள் மீது கொண்டுள்ள நம்பிக்கை அல்லது சந்தேகம், தனது தகைமையைப் பற்றி உணரவும் மூளையின் தொழிற்பாட்டுத் தரத்தின் கொள்ளளவு என்பனவற்றைப் பொறுத்ததாகும். சுவாசித்தல், தொட்டு உணர்தல், பார்த்து அறிந்துகொள்ளுதல், உண்ணுதல், சுவையறிதல் என்பனவற்றைக் குழந்தை யாரும் சொல்லித்தராமல் தானாகவே கற்றுக்கொள்கின்றது.

'மனித வாழ்வில் மூளை அணுக்களுக்கிடையேயான தொடர்புகளின் மிக நெருங்கிய தொகுதி மிக உச்சக்கட்டமான வளர்ச்சியினை பிறந்த முதலாவது மாதத்தில் கொண்டுள்ளது. அதாவது வளர்ந்தவர்களின் சராசரி மூளைத் தொகுதியின் வளர்விலும் பார்க்க மிகக்கூடதலான அளவு முதல் இரண்டு ஆண்டுகளிலுமே - மனித வாழ்வின் காலத்தில் அண்ணளவாக 50 விழுக்காடுகள் வரையான வளர்ச்சியினை அடைகின்றது. இரண்டு வயதிற்கும் பதினாறு வயதிற்கும் இடையில் மூளை வளர்ச்சிப்பாங்கு குறைவடைந்து செல்

தொடர்தல் 21ம் பக்கம்

பெற்றோரும்...

20ம் பக்கத் தொடர்ச்சி...

கின்றது. அதன்பின்னர் 72 வயது வரைக் கும் ஒரே சீரானதாக அமைகின்றது' என ஹவாட் காடினர் (Haward Gardner) என் னும் பல்திறன் பற்றி ஆய்வுசெய்த உள வியலாளர் குறிப்பிட்டமையினை நாம் இங்கு அவதானிக்கமுடியும். எல்லா மனி தர்களும் அனைத்து திறன்களையும் வெவ் வேறு அளவுகளில் கொண்டுள்ளனர். அவர்களுக்கு பல்திறன்களை அறிந்து அவர்களின் கல்வியினை வளர்க்கமுடி யும் என்பதனை அவர் முன்வைக்கின்றார்.

தவழ்ந்து, தத்தித் தடுமாறி நடைபயிலும் பருவத்தே தொடுதல், ருசித்தல், இழுத்தல், தள்ளுதல், மேலே ஏறுதல், கீழே இறங் குதல் போன்றவற்றினூடாக உலகின் தன் மையையும் சக்திகளையும் ஒரு குழந்தை அறிந்துகொள்கின்றது. இவையனைத்தி- னையும் தனது சூழலில் இருந்தே குழந்தை பெற்றுக் கொள்கின்றது. இக்காலகட்டத் தில் பெற்றோர், பாதுகாவலர், பராமரிப் பாளர்களது பங்களிப்பு மிகமுக்கியமான- தாகும். பல விடயங்களைக் குழந்தைகள் கற்றுக்கொள்ளும் காலமாக இது அமை கின்றது. பல பிள்ளைகள் தொலைக்காட் சிக்கு முன்பாக அல்லது தொட்டிலில், தள்ளு வண்டியில் வைத்துப் பூட்டப்பட்டே காலத்தைக் கழிக்க விடப்படுகின்றார்கள் இதனால் அக்குழந்தைகள் உடல் விருத் தியோ, உளவிருத்தியோ அடையாதவர்க ளாக அல்லது குறைந்த விருத்தியையே பெற்றவர்களாக வளர்கிறார்கள். எடுத்துக் காட்டாக: ஒருவரின் ஆண்குழந்தையை அவர்கள் மிகவும் கவனமாக வளர்ப்பதாக ஓடி ஆடி விளையாடவிடாது தொலைக் காட்சிக்கு முன்பாகவும் தள்ளு வண்டிலி லுமாக வைத்துக் கண்காணித்து வந்தார் கள். பாடசாலைக்காலம் வந்தது. அப் பிள்ளையைப் பாடசாலையில் சேர்த்த போது ஆசிரியையிடம் அக்குழந்தை தன்னைத் தூக்கிச்செல்லும்படி கேட்டு அடம்பிடித்துள்ளது. மற்றய பிள்ளைகள் நூல்நிலையத்திற்குச் நடந்து சென்று திரும்பி வந்த போதிலும் இப்பிள்ளை நடப்பதற்குச் சிரமப்பட்டதென்றால்... தவறு எங்கே இருக்கின்றது. உரியகாலத்தில் பிள்ளைகளுக்கு ஏற்றவற்றை நாம் செய்து தான் ஆகவேண்டும் என்பதனைப் பல பெற்றோர்கள் உணர்ந்து கொள்வதில்லை. நாம் எம் பிள்ளைகளை நோகாமல் வளர்க் கின்றோம் எனக்கூறி அவர்களின் எதிர்கா லத்தை, வாழ்வை பாழடிப்பதைத்தான் செய்கின்றார்கள். பிள்ளைகளுக்கு எழுத் துப்பயிற்சிக்கு முன்னர் அவர்களின் கைவி ரல் நரம்புகள் எழுதுவதற்குரிய பக்குவத் தைப் பெற்றுக்கொள்ளுதல் இன்றியமை யாதது. இவற்றைப் பாடசாலைக் காலத் திற்கு முன்பே பிள்ளைகளுக்கு அளிக்க வேண்டியர்கள் பெற்றோர்களே. இவ்வித பயிற்சிகளைப் பெரும்பாலான பெற்றோர் கள் தமது பிள்ளைகளுக்குச் சொல்லித் தருவதில்லை. குழந்தைகளுக்கு 'விளை யாட்டு பாடசாலைகள்' அவர்களின் பாட சாலைக்கு முன்னய ஆண்டுகளில் பயன் படுத்தக்கூடிய வாய்ப்புகள் இருப்பினும், பல பெற்றோர் அவற்றைப்பற்றித் அறிந் திராதவர்களாக அல்லது அவற்றில் அக்கறை அற்றவர்களாக இருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. ஓடி, ஆடி விளையாடி உளவலுவையும் உடல் வலு வையும் வளர்த்துக் கொள்ளவேண்டிய பருவத்தில் வீட்டினுள் பூட்டி வைக்கும் விந்தை மனிதர்களின் நிலையே இது. தொலைக்காட்சி பார்ப்பதன் மூலம் பல பிள்ளைகள் தமது கைவினைத் திறன் களை வளர்த்துக் கொள்ளத் தவறுகி- றார்கள் என்பது உளவியலாளர்களாலும் கல்வியியலாளர்களால் வலியுறுத்தப்பட்டு வருகின்றபோதிலும் இந்நிலைமையில் பெரிய மாற்றம் கண்டுள்ளமை காணப் படவில்லை.

பண்பாட்டு உயிரியல் கலப்பின் எண் ணங்கள், உணர்வுகள் பற்றிய விசார ணைகள் மனித விருத்தியில் சிக்கல் நிறைந்ததும், ஆரோக்கியமானதும், பூர ணமாக வரவேற்கப்படுவதும், எதிர்க்கப்ப டுவதுமான வெளிப்பாடுகளின் பல நிலை களைத் தோற்றுவிக்கின்றன.

இவ்வித தன்மைகளைக் கொண்ட மனித வளர்ச்சிப் பருவங்களுக்கேற்ப நடத்தைக ளும் மாறுபாடடைந்து செல்லவதினை அவதானிக்கலாம். பாலர் முதல் முதி- யோர்வரை மனித இயல்புகளுக்கும் வய திற்கேற்பவும் பாகுபடுத்திப் பார்க்கப்படு கின்றது. குழந்தைப் பருவம், பிள்ளைப் பருவம், கட்டிளமைப் பருவம், குமரப்பரு வம், முன் மனிதப் பருவம், மனிதப் பரு வம், வயோதிபப் பருவம் எனப் பலவா- றாக உளவியலாளர்கள் மனித வளர்ச்சிப் பருவங்களை வகைப்படுத்துகின்றனர்.

மனித வளர்ச்சிப்பருவத்தில் முதல் இரண்டு ஆண்டுகளும் மிகவும் முக்கியம் வாய்ந்த காலமாகும். இக்காலப் பகுதியில் முதல் நான்கு மாதங்களில் கேட்டல், பார்த்தல், என்பவற்றோடு ஒலி எழுப்பும் செயற்பா டுகளைக் குழந்தைகள் மேற்கொள்கிறார் கள். பொருட்கள், ஒலிகளை ஞாபகத்தி லிருத்தல், தமது கைகள், விரல்களால் பரீட்சித்தல், கண்டு அறிதல். சமூகத் தொடர்பாடல், விளையாட்டுக்களை ஆரம் பித்தல், முக்கியமாக பெற்றோர் அல்லது கவனிப்போரின் செயல்கள், ஒலிகளை பாவனை செய்தல் போன்றனவற்றை மேற் கொள்கின்றார்கள்.

எட்டுமாதத்தில் பரிட்சயமானவர்களையும், புது முகங்களையும் அடையாளம் காணு தல், புதியவர்களில் பயத்தினை வெளிப் படுத்துதல், மறைத்துவைக்கப்பட்ட பொருட் களைக் கண்டுபிடித்தல், விருத்தியடைந்த சமூகத் தொடர்பாடல் விளையாட்டுக்களை விளையாடுதல், வளர்ந்தவர்களின் நடிப் புக்களையும் செய்கைகளையும் பாவனை பண்ணுதலோடு அம்மா, அப்பா போன்ற அடிக்கடி சொல்லப்படுகின்ற சிக்கலான சொற்களையும் சொல்லத் தொடங்குகி- றார்கள்.

குழந்தைகள் தமது பன்னிரண்டாவது மாதத்தில் சொற்களின் கருத்துக்களைப் புரிந்துகொள்கிறார்கள், ஆம், இல்லை போன்ற சொற்களின் பொருளை விளங் கிப் பேசவும் முனைகிறார்கள். இக்காலத் திலேயே உதவியோடு எழுந்து நின்று நடக்கவும் தொடங்குகின்றார்கள். பராம ரிப்பாளருக்கும் தனக்குமுள்ள வேறுபாட் டைப் பிரித்துணரவும் தனது வழமையான வேலைகளைச் செய்யவும் முனைகிறார் கள். உதாரணமாக குடித்தல், உண்ணு தல், உறங்குதல் போன்றவற்றைச் செய்ய முற்படுகின்றார்கள். தான் முன்னர் கண்ட இடத்தில் பொருட்களைக் கண்டுபிடிக்க வும் செய்கிறார்கள்.

பதினெட்டு மாதங்களில் துணையின்றி நடக்கத் தொடங்குகிறார்கள், தாங்களா கவே உண்கிறார்கள். பொருட்களின் உண் மைத்தன்மை எண்ணக்கருவை விளங்கி வளர்த்துக் கொள்கிறார்கள். பொருட்களை அதன் குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் பிர யோகிக்கத் தொடங்குகிறார்கள். வேறு ஒருவரையும் கற்பனை விளையாட்டில் கலந்துகொள்ள வைத்து விளையாடுதல், வாசித்தல் போன்ற பாவனை விளையாட் டுக்களிலும் ஈடுபடுகிறார்கள்.

இருபத்தி நான்கு மாதக் குழந்தைகள் அதாவது குழந்தமைப் பருவ இறுதியில் நடத்தல், ஓடுதல், படிகளில் ஏறுதல், முச்சக்கர வண்டி ஓட்டுதல் போன்ற செயல்களில் ஈடுபடுவதோடு, இலகுவான வழிகாட்டல்களைப் பின்பற்றவும், இரண்டு அல்லது மூன்று சொற்கூட்டத்தைப் பயன் படுத்தவும் தொடங்குகிறார்கள்.

இப்பருவத்தில் பெற்றோரின் அல்லது கவனிப்பாளரின் பங்களிப்பு மிக மிக முக்கியமானதாகக் காணப்படுகின்றது. குழந்தையின் உள, உடலியல் வளர்ச்சி யில் மிக முக்கியமான காலகட்டமாகக் கொள்ளப்படுவதனால் இப்பருவம் கருத் தூன்றிக் கவனிக்கப்பட வேண்டியதே. குழந்தைகளிடம் இயல்பாகவே உள்ள நுண்மதி ஆற்றலை வெளிக்கொண்டு வரும் அறிவியல் விருத்தியில் அவர்களுக்கு உள்ள உள்ளார்ந்த உந்துதலைவிட பிற உந்துசக்திகள் அல்லது புறத் தூண்டி களின் பங்களிப்பு அறிவாற்றலை வளர்க்க முக்கியம் வாய்ந்தது என்பது உளவிய லாளர்களின் துணிபு.

'சில பெற்றோர், பெற்றோரின் பெற்றோர், குழந்தைப் பராமரிப்பாளர்கள், ஏன் சில விளையாட்டுப் பொம்மை உற்பத்தியா ளர்களின் நம்பிக்கைக்கு மாறாக பராம ரிப்பாளர் அல்லது பெற்றோரின் தனித் துவ தொடர்புகள் குழந்தைகளின் உள விருத்திக்கு முக்கிய பங்களிக்கின்றது. உணவளித்தல், நீராட்டுதல், உடைமாற் றுதல் போன்ற நேரங்களில் பெற்றோர் அல்லது பராமரிப்பாளர்கள் குழந்தைக- ளுடன் தொடர்ச்சியான புறத் தூண்டிக களைச் செய்கின்றனர். குழந்தையுடன் கதைத்தல் விளையாடுதல் போன்றவற்றால் பொருட்களுக்கும், மக்களுக்குமிடையே யான தொடர்புகளை தெளிய வைக்கி றார்கள். இவை இயல்பாகவே பிள்ளை- களின் உளத்தினை யாரும் அறியாத வகையில் விருத்தி செய்கின்றது' என்பது உஷ்கிறிஸ் (1984) என்பவரது ஆய்வின் முடிவாகும். மிகத் துரிதமாகவும் இடை- வெளியற்றதாகவும் விருத்தியடையும் உளத் திற்குத் தீனிபோட்டு வளர்ச்சியடையச் செய்வது யார்? என்னும் கேள்வி எழு கின்றது. பெரும்பாலும் பெற்றோருடன், அல்லது பராமரிப்பாளருடன் பொழுதைக் கழிக்கும் குழந்தையின் அறிவுப்பசிக்கு தங்களை அறியாமலே உணவளிப்பவர் கள் பெற்றோர்களே. பெரும்பாலான பெற் றோர்கள் வேலைக்குச் செல்வதால் சில வேளைகளில் முதியோர்களான பெற்றோ ரின் பெற்றோர் பிள்ளைகளைப் பராம ரிக்கின்ற நிலை காணப்படுகின்றது. அல் லது பராமரிப்பாளர் ஒருவரை நியமித்து அல்லது பராமரிப்பு நிலையத்தில் குழந் தையை ஒப்படைத்து விட்டுச் செல்லு கின்ற நிலைமையையும் காண்கின்றோம். இப்பருவத்தில் உள்ள குழந்தையின் உள வியற் தேவைகள் என்ன என்பதனை அறியாவிட்டாலும் அவற்றை ஈடுசெய்யும் வகையில் பெற்றோர் குழந்தையின் மீது பாசம் சொரிந்து அளவளாவி உறவாட வேண்டிய கடப்பாடு உடையவர்கள் என் பதனை மறுக்கமுடியாது. ஆனால் பெற் றோர்களின் வேலைப்பழு காரணமாக குழந்தைகளுடன் நேரத்தைக் கழிக்கின்ற தன்மை மிக அரிதாகக் காணப்படுவத னையும் மறுப்பதற்கில்லை. தாயைக் கண் டால் பயந்து வீரிட்டு அழும் குழந்தை கள், தந்தையைக்கண்டால் அழும் குழந் தைகள், சில நிறங்களைக் கண்டால் அல்லது சில பொருட்களைக் கண்டால், அல்லது அந்நியரைக்கண்டால், அல்லது மீசை, தாடியுடன் வருபவர்களைக் கண் டால் அழும் குழந்தைகளைப் பற்றி நாம் அறிந்திருக்கின்றோம். இவற்றின் காரணம் என்ன? யாரும் குழந்தைக்கு இவற்றைச் சொல்லிக் கொடுக்காவிட்டாலும் அவர்கள் அழுவதற்குக் காரணம் என்ன? தந்தை யின் முகமோ தாயின் முகமோ பரிட்சயம் இல்லாத குழந்தை அழுவது இயல்பே. அதற்கு யார் காரணம்? குழந்தையா? அல்லது பெற்றோரா?

இவற்றிற்கான காரணங்கள் ஏன் என்பத னைப் பெற்றோர்கள் சற்றுச் சிந்தித்துத் தான் பார்க்கவேண்டும்.

எடுத்துக்காட்டாக எனது நண்பர் ஒருவ ருக்கு பெண் குழந்தை ஒன்று கிடைத்தது. அக்குழந்தை மூன்று நான்கு மாதங்க ளின் பின்னர் சிவப்பு நிறத்தைக் கண் டால் வீரிட்டுப் பயந்து அழத் தொடங்கி விடும். பெற்றோருக்கு இது மிகவும் கவலை தரும் விடயம் மட்டுமல்ல தாய் தன்னிடம் உள்ள சிவப்பு உடுப்புக்களை எல்லாம் பெட்டியில் பூட்டிவைக்க வேண் டிய நிலை தோன்றியது. சிவப்பு உடுப்பை உடுத்தினால் தாயிடமே போகமல் பயந்து அழுகின்ற நிலை அக்குழந்தைக்கு ஏற் பட்டுவிட்டது. அக்குழந்தை வளர்ந்து எல்லாவற்றையும் உணர்ந்து அறிந்து காரணம் காணும் வரை இந்த நிலைமை நீடித்தது. எனவே குழந்தைகளின் உளத் தைப் பாதிக்காமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய பாரிய பொறுப்பும் கடமையும், குழந்தையைப் பராமரித்துப் பாதுகாக் கின்ற தாய், தந்தை, சகோதரர்கள், பேரன், பேத்தி, வளர்ப்புத் தாய் அல்லது பராம ரிப்பாளரிடம் உள்ளது. வேலைக்குச் செல்லும் பெற்றோர் சாதாரணமாக தமது குழந்தைகளை பகல் பராமரிப்பு நிலை யங்களிலோ அன்றி தங்கள் பெற்றோரி டமோ அன்றி உறவினரிடமோ விடுத்துச் செல்வது வழமை. பகல் பராமரிப்பு நிலையங்கள், சிறுவர் பாடசாலைகள், பாடசாலை முன் திட்டங்கள் போன்றவற் றில் பிள்ளைகளை விடுத்துச் செல்லும் பெற்றோர் தங்கள் குழந்தைகளின் நிலை கள், விருப்பு வெறுப்புக்கள் அனைத்தை யும் பராமரிப்பாளர்களிடம், ஆசிரியர்களி டம் சொல்லி வைத்தல் மிகமிக முக்கிய மானதாகும். இது 'வெள்ளம் வருவதற்கு முன்னர் அணைகட்டுவதற்கு' ஒப்பதாகும். 'கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம்' செய்வதனால் பயன் ஏதும் இல்லை என் பதனைப் பெற்றோர் உணர்ந்து கொண்டு செயற்படுதல் தங்கள் குழந்தைகளின் விடயத்தில் மிக முக்கியமானதும், பிள் ளையின் உளவளர்ச்சியில் தாக்கங்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்வதுமா கும்.

'தொட்டிலில் பழக்கம் சுடுகாடு வரையும்' என்று நம் முன்னோர் சொன்னதன் அர்த் தம் என்ன என்பதனை நாம் புரிந்துகொள் ளுதல் வேண்டாமா? உள விருத்தி அல் லது அறிவு விருத்தி என்பது ஏதோ பாட சாலையில் அல்லது வகுப்பறையில் நடைபெறுகின்றது, எமக்கும் அதற்கும் தொடர்பில்லை, அது ஆசிரியரின் வேலை என எண்ணிக் காலங்களிக்கும் பெற்றோர் எத்தனைபேர் நம்மிடையே இருக்கிறார்கள். குழந்தைகளின் உளவியற் தேவைகளை நன்கு அறிந்து, அதற்கு ஏற்ப ஆவன செய்யாத விடத்து அவர்களின் உளவி ருத்தியில் தடங்கல்கள், பின்னடைவுகள் எற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும். பொதுவாக தொலைக்காட்சியைப் பார்க்க வைத்துவிட்டு தமது வேலைகளைச் செய் கின்ற அல்லது பிள்ளைகளையும் தொலைக்காட்சியைப் பார்க்க வைத்து தாமும் பார்க்கின்ற தாய், தந்தையர் இன்று அனேகர். பிள்ளைகளின் உளத்தொழிற் பாட்டை மட்டுமன்றி உடலியற் செயற் பாட்டையும் இது விருத்தி செய்வதற்குப் பதிலாக தடைசெய்வதாக, தாமதப்படுத் துவதாக அமைகின்றமையை அண்மைக் கால ஆய்வுகள் புலப்படுத்துகின்றன.

sivapalu@thaiveedu.com

சிறுவர்கள் தமது உரிமைகளை அனுபவித்து வாழவேண்டும்

- சி. நற்குணலிங்கம் -

18 வயதுக்கு குறைவானவர்கள் சிறுவர்கள். சிறுவர்கள் நாளை மலரப்போகும் அரும் புகள். நாளைய உலகை ஆள தம்மை ஆயத்தப்படுத்துபவர்கள். சிறுவர்களுக் கான அடிப்படை உரிமைகளை அவர்கள் சரியாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். பெற்றுக்கொள்வதன் மூலம் அவர்கள் எதிர் காலச் சிற்பிகள் என்பதை பறை சாற்ற முடியும். சிறுவர்கள் தங்களுக்கு உரித்தான வரையறுக்கப்பட்ட சட்டரீதியான உரிமை களைப் பெற்று வாழ்வதே சிறுவர் உரி மையாகும்.

ஒக்ரோபர் முதலாம் திகதி, அனைத்துலக சிறுவர் தினமாகும். இந்த நாளை பன் னாட்டு அரசுகளும், அமைப்புக்களும், பாடசாலைகளும், தொண்டு நிறுவனங்க ளும் கொண்டாடிவருகின்றனர். உலக மக் களில் கிட்டத்தட்ட 1/3 பங்கினர் சிறுவர் களே. இலங்கையில் 18 வயதுக்கு குறைந் தவர்கள் 46 இலட்சம்பேர் உள்ளனர். சிறுவர்கள் வருங்கால சிற்பிகள், நாட்டின் முதுகெலும்பு, வளம் மிக்க தூண்கள். எனவே சிறுவர்களை வளமுள்ளவர்களாக ஆக்க சிறுவயதிலேயே உரமிட்டு, அடித் தளமிட்டு வளர்த்தெடுக்க வேண்டும். இதற்கு சிறுவர்கள் தம் உரிமைகளை அனுபவிப்பதில் எவ்வித தடைகளும் இருக்கக் கூடாது.

இன்றைய சிறுவர்களே எதிர்காலத் தலை வர்கள். எதிர்காலம் சிறப்பாக அமைய இன்றைய சிறுவர்களுக்கு அத்தகைய திறன்களையும், தேர்ச்சிகளையும் வழங்கி ஆளுமை மிக்க பிரஜைகளாக மிளிர அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். சிறுவர்களை ஒழுங்காக வளர்த் தெடுக்காவிடின் சமூகப் பொறுப்புள்ள உணர்வும், மாறுபட்ட கலாசார நடத்தைக் கோலங்களையும் கொண்ட எதிர்காலமே தோற்றமாகும். சிறுவயது முதலே நற்கு ணங்கள் கொண்டதாக பிள்ளைகளை வளர்த்தெடுக்க வேண்டும். அந்த வகையில் சகலரும் கூடிய அக்கறையும், கவனமும், ஒத்துழைப்பும் வழங்க வேண்டும்.

சிறுவர் உரிமை தொடர்பான விழிப்புணர்வு சிறுவர்களைத் தவறான பாதைக்கு இட் டுச் செல்லும் அல்லது அதீத சுதந்திரத் தைக் கொடுத்துவிடும் என்ற எதிர்ப்பு வாதங்களும் எழத்தான் செய்கின்றது. இருப் பினும் உரிமைகளை எவரும் மறுக்க முடியாது. சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளின் விளைவாக எதிர்கால உலகை வன்முறைமிக்கதாகவும், நலிவுற் றதாகவும் அமைய நாம் காரணியாக இருக்கக் கூடாது. இதற்கு அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

நாளை என்பதை அறியமுன் சிறுவர்களை நயவஞ்சகமாய் நசுக்கக்கூடாது. மலர வேண்டிய மலர்கள் மொட்டுப் பருவத்திலே பறிக்கப்படக்கூடாது. கருணை கொண்ட பிஞ்சுகள் கசங்கக்கூடாது. சுதந்திரம் பறிபோகக்கூடாது என்பவற்றுக்கு அமை- வாக 1924ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அமைப்பால் சிறுவர் உரிமைகள் தொடர் பாக முதலாவது பிரகடனம் உருவாக்கப்பட் டது. 1989ம் ஆண்டு நவம்பர் 20ம் திகதி ஐக்கிய நாடுகள் சபையில் சிறுவர் உரி மைகள் பற்றிய ஒப்பந்தம் நிறைவேற்றப் பட்டது. 1990ம் ஆண்டு முதல் நடைமு றைப்படுத்தப்படுகின்றது. 12. 07. 1991ல் இலங்கையும் ஏற்றுக்கொண்டது. ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் சாசனத்தில் 54 உரிமைகள் இடம்பெற்றுள்ளன. சிறு வர்கள் பற்றிய சமவாயத்தில் 40 உறுப் புரைகள் சிறுவர்கள் பற்றியதாகும். இவ் வாறு அவர்களது உரிமைக்கு முக்கியத் துவம் அளிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்கள் தமக்கான உரிமைகளைப் பற்றி அறிந்திருக்கவேண்டியது அவசிய மானதாகும். அப்போதுதான் உரிமை மீறப் படும் சந்தர்ப்பங்களை அவர்களால் அதை அறிந்து கொள்ள முடியும். சிறுவர்களாக மதிக்கப்படல், பாலியல் துஸ்பிரயோகங் களிலிருந்து பாதுகாக்கும் உரிமை, பிறி- தொரு நாட்டுக்கு கடத்தப்படுவதைத் தடுக்கும் உரிமை, நியாயாதிக்க நிர்வாக முறைகளைப் பேணும் உரிமை, அச்சு றுத்தல்களிலிருந்து பாதுகாத்தல், வாழ்க் கையை தரம் உள்ளதாக அமைக்கும் உரிமை, சமூகப் பாதுகாப்பைப் பெறல், போதைகளிலிருந்து விலகிக் கொள்ளும் உரிமை, சட்ட விரோத கைதுகளிலிருந்து விலகும் உரிமை, சிறுவர்களது எண்ணங் களுக்கு மதிப்பு அளித்தல், அந்தரங்கத் தைப்பேணும் உரிமை, கடத்தலில் அகப் படாதிருக்கும் உரிமை, பெற்றோரால் இம்சைகள் புறக்கணிப்புகள் ஆகியவற் றிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை, பெற்றோர் பிள்ளையைப் பிரிந்து வாழ முடியாத பட்சத்தில் பிள்ளை இருவரில் ஒருவரை அல்லது இருவரையும் பிரிந்து வாழுமானால் இருவருடனும் தொடர்பு தொடர்பு வைத்திருக்கும் உரிமை, தன்னை பாதிக்கக் கூடிய எந்த விடயம் அல்லது நடைமுறை பற்றி பிள்ளை தனது அபிப் பிராயத்தைத் தெரிவிக்கும் உரிமை என் பவற்றோடு பிள்ளைகளின் பெற்றோர்க ளும் ஏனைய பராமரிப்பாளர்களும் பிள் ளைகளை துன்புறுத்தும் உரிமை அற்ற வர்கள், உள்ளத்தால் அல்லது உடலால் வலுவிழந்த பிள்ளைகள் செயலூக்கமுள்ள வாழ்க்கை நடத்துவதற்கு உதவும் வகை யில் விசேட பராமரிப்பு, கல்வி, பயிற்சி ஆகியவற்றை பெறும் உரிமை, பிள்ளை கள் விபச்சாரம், ஆபாசக்காட்சிகள் முத லியவற்றொலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை, ஆயுத கலாசாரத்துக்கு உட்ப டாதிருக்கும் உரிமை, சிறுவயதில் தொழி லுக்கு செல்லாதிருக்கும் உரிமை, சுதந் திரமாக கருத்து வெளியிடும் உரிமை, மத சுதந்திரம் ஆகிய உரிமைகள் சிறு வர்களுக்கு உண்டு.

> **“ ஆண்டுதோறும் கொண்டாடப்படும் சிறுவர் தினம் வெறும் கொண்டாட்டமாக அமையாது சிறுவர்களின் உரிமைகள் வென்றெடுக்கப்படும் தினமாக அமைய வேண்டும். ”**

எழுத்து வடிவில் உரிமைகள் வடிவமைக் கப்பட்ட போதிலும், இவர்களின் நலன்க ளைப் பாதுகாக்க பல்வேறு சிறுவர் பாது காப்பு அமைப்புக்கள் இயங்குகின்ற போதி லும், பல அறிவுரைகள் ஊடகங்கள் மூலம் வெளிக்கொணரப்படும் போதும்... சிறுவர் கள் பாதிப்புக்கு உள்ளாகிக் கொண்டே வருகிறார்கள். இது ஒரு சிறந்த நாட் டுக்கு ஆரோக்கியமானதல்ல. போரால் பாதிக்கப்பட்ட இலங்கையில், தற்போது சிறுவர்கள் வன்முறைகளுக்கு ஆளாவதா னது நாட்டின் முன்னேற்றத்துக்கு தடை யாக உள்ளதாக யுனிசெப் தெரிவித்துள் ளது. பல வடிவங்களில் உலாவரும் உரிமை மீறல்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். சிறுவர்களின் பாதுகாப்பு விட யத்தில் பெற்றோர் விழிப்பாக இருக்க வேண்டும். வளர்ப்பு தந்தையர் - தாயார் விடயத்திலும் கூடிய கவனம் செலுத்த வேண்டும். சிறுவர்களின் உரிமை தொடர் பான விழிப்புணர்வுகள் மேற்கொள்ளப்ப டல் இன்றைய தேவையாகவும் உள்ளது. ஒவ்வொரு பிள்ளையும் தனித்துவமான வர்களே. நாட்டின் அபிவிருத்திக்கு தேவை யான வகையில் மனித வளமாக விருத்தி செய்து அவர்களை வளர்த்தெடுக்க வேண் டும். சிறுவர்கள் எமது சொத்துக்கள். என்ற உணர்வு எல்லோர் மத்தியிலும் காணப் பட வேண்டும். அவர்களை பாதிப்புக்க ளிலிருந்து மீட்டெடுக்க வேண்டும்.

சிறுவர்களது உலகம் சிறுவர்களுக்கே. எதிர்கால சமூகமாக செயற்படப் போகின் றவர்கள் இன்றைய சிறுவர்களே. ஆனால் இன்று அதிகமான சிறுவர்கள் சித்திரவ தைகள் மூலமான வன்முறைகளுக்கு முகம் கொடுத்த வண்ணம் உள்ளனர். சிறுவர் களை பாதுகாக்க வேண்டியவர்களே அவர்களை அதிகம் துன்புறுத்துவது வேத னைக்கு உரிய விடயமாகும். இவை சிறு வர்களின் வளர்ச்சிப் படிநிலைக்கு தடை யாக உள்ளது. இதன் விளைவாக சிறு வர்கள் அங்கவீனம், நீண்டகால நோய், உயிராபத்து என்பவற்றுக்கு ஆளாகின் றார்கள். உலகில் இன்னமும் 50 மில்லி யன் அகதிகள் இடம்பெயர்ந்து வாழ்வ தாக அறியப்படுகிறது. அதில் அகதிச் சிறுவர்களின் எண்ணிக்கை கடந்த ஐந்து ஆண்டுகளில் 80% ஆக அதிகரித்து உள்ளதாக அறிக்கை இடப்படுகிறது. இதற்கு பிரதான காரணம் நாடுகளில் நடைபெறும் போர் ஆகும். இதன் விளை வாக சிறுவர்கள் இறப்பு, காயம் ஏற்படல், அநாதரவாகுதல், மற்றும் பெற்றோர் இழப்பு என்பவற்றுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றன. அகதி வாழ்க்கையில் சிறுவர்கள் உடல், உள பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் அறிக்கைக்கு அமைவாக வறுமை கார ணமாக ஒவ்வொரு நாளும் பெருந்தொ கையான குழந்தைகள் உலகம் முழுவதி லும் இறக்கின்றனர். வளர்முக நாடுகளில் 28% மான பிள்ளைகள் போதிய ஊட்டச் சத்து இன்றி தவிக்கின்றனர். இவை பிள் ளைகளின் ஆரோக்கியம், கல்வி, மன அமைதி என்பவற்றை அதிகம் பாதிக்கின் றது. இதற்கு பெண் தலைமைத்துவக் குடும்பமும் ஒரு காரணியாக உள்ளது. பாடசாலைக்கு செல்ல வேண்டிய வய தில் பாடசாலைக்குச் செல்லாமல் 100 மில்லியன் சிறுவர்கள் உள்ளனர். அதை விட 150 மில்லியன் சிறுவர்கள் பாடசா லைகளில் கற்றல் செயற்பாட்டிலிருந்து இடை விலகியுள்ளதாகவும் கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன.

ஒவ்வொரு நிமிடத்திலும் சிறுவர்கள் பலர் பலராலும் புறக்கணிக்கப்பட்டு வருகின் றனர். அதாவது உடல் ரீதியாக, கல்வி, உணவு, உணர்வு, உடை, உறையுள் ரீதி யாக, பயமுறுத்தி - கோபப்படுத்தி - தனிமைப்படுத்தல், மருத்துவத் தேவை- களை புறக்கணித்தல், பிள்ளைமீது அக் கறை காட்டாதிருத்தல் ஆகும். இவற் றால் சிறுவர்கள் மன அழுத்தம், விரக்தி, வாழ்வில் பற்றின்மை, தன்னம்பிக்கை இழத்தல் என்பவற்றுக்கு தள்ளப்படுகி- றார்கள். உலக நாடுகளில் 168 மில்லியன் குழந்தைத் தொழிலாளர்கள் காணப்படு கின்றனர். குழந்தைத் தொழிலாளர்கள் தோன்ற உரிமை மீறலும் முக்கிய கார ணியாக உள்ளது. சிறுவர்கள் தொழிற் சாலைகள், சுரங்கத்தொழில், கால்நடை வளர்ப்பு, செங்கல் உலைகள், மீன்பிடி, விவசாயம் ஆகிய தொழில்களில் ஈடுப டுத்தப்படுகின்றனர்.

சிலநாடுகளில் சிறுவர்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்துகின்றனர். உலகில் 10 மில்லி யன் சிறுவர்கள் இவ்வாறு ஈடுபடுத்தப்பட் டுள்ளனர். இது வணிக ரீதியான பாலி யல் சுரண்டலாகும். இவர்களில் பெரும் பாலானவர்கள் பெண்கள். இலங்கையில் ஒவ்வொரு நாளும் மூன்று தொடக்கம் ஐந்து சிறுவர்களை பாலியல் துஸ்பிர யோகத்துக்கு உட்படுத்துகின்றனர். பல நாடுகளில் சிறுவர்களை அரச சார்பற்ற ஆயுதக் குழுக்களில் இணைத்து போரில் ஈடுபடுத்துகின்றனர். கிட்டத்தட்ட 250,000 சிறுவர்கள் போரில் ஈடுபடுத்தப்பட்டுள் ளனர். இவ்வாறு ஆபத்து நிறைந்த வாழ்வை வாழ்ந்துகொண்டிருக்கும் சிறு வர்களுக்கு இதனால் இறப்பு, அங்க இழப்பு, உளத்தாக்கம், பயம், சவாலான வாழ்வு என்று வாழவேண்டியவர்களாக உள்ளனர். அத்துடன் ஆண்டுதோறும் 1.2 மில்லியன் சிறுவர்கள் கடத்தப்படு வதாக பன்னாட்டுத் தொழில் நிறுவனம் அறிக்கை இட்டுள்ளது. பாலியல், சுரண் டல், வேலைக்கு அமர்த்தல், போதைப் பொருள் கடத்தல் என்பவற்றுக்கு ஈடுப டுத்துவதற்காக சிறுவர்கள் கடத்தப்படு கின்றனர்.

சிறுவர்களுக்கு சிறந்ததோர் சிறுவர் உல கத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அந் தச்சிறுவர்கள் பெரியவர்களானால் அவர் களை சிறந்ததோர் உலகின் பங்கா- ளிகள் ஆக்குவதற்கும் சிறுவர்களை மதித்து நடக்க வேண்டும். அதுமட்டு மல்ல ஆண்டுதோறும் கொண்டாடப்படும் சிறுவர் தினம் வெறும் கொண்டாட்டமாக அமையாது சிறுவர்களின் உரிமைகள் வென்றெடுக்கப்படும் தினமாக அமைய வேண்டும். சிறுவர்களின் பாதுகாப்பே எமது எதிர்கால உலகின் அத்திபாரம் என்பதை ஒவ்வொருவரும் அறிந்து செயற்படுவது அவசியமானது.

natkunalingam@thaiveedu.com

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.

விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail: info@thaiveedu.com

Fax: 416-849-0594 Tel: 416-646-3422

நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
சிங்கப்பூர் நகைகளை மிகக் இறைவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
பழைய தங்க நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
தங்க நகை அடகு சேவை இறைந்த வட்டி வீதம்
புதிய தங்க நகை சேமிப்பு திட்டம் ஆரம்பம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6

அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!
முற்றிலும் இலவசமான சேவை!
12வருடத்திற்கு மேற்பட்ட
உங்கள் Gas Furnace இற்கான CO அளவீடு
வீட்டிற்கு வந்து பரிசோதிக்கப்படும்.
$2100 Rebate Available Now
call us 416-414-2280
AATEK
HEATING & COOLING
FREE Inspection in GTA
Over 10 yrs in Business Experience
Flat Rate Pricing
Parts and Labour guarantee
Guaranteed Repairs
Professional Service
Fully Insured
10 வருடங்களுக்கு மேலாக ரொரண்டோவின் முன்னணி நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவத்துடன்
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
Licensed Technician
ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES
E : aatekcanada@gmail.com
We Are Specialists in
customs homes Ductwork System
We Are Professional trouble shooters for all major gas appliances
416.414.2280

புதிய வீடுகளைக் கொள்வனவு செய்தலும் தரம் உயர்த்துதலும்

வீடும் விடியலும் - 168

- வேலா சுப்ரமணியம் -

புதிய வீடு கொள்வனவு செய்பவர்கள் மிகக் கவனம் எடுக்கவேண்டிய விடயம் தரம் உயர்த்துதல் பகுதியாகும். கட்டட அமைப்பாளர்கள் வீடுகளைக் கட்டுவதை விட, அவற்றைத் தரம் உயர்த்துவதிலேயே அதிக இலாபம் ஈட்டுகின்றார்கள். அவர்கள் நன்றாகத் திட்டமிட்டு நுகர்வோரைக் கவரும் விதத்தில் மாதிரி வீடுகளை (Model Home) அமைத்திருப்பார்கள். விற்பனைத் திறன்கொண்ட விற்பனை முகவர்கள் கதைக்கும் விதம், பொருட்களைக் காண்பிக்கும் விதம் என்பவற்றில் இருந்து தப்பிக்கொள்வது மிகக்கடினம். எனவே, முன்கூட்டியே எவற்றைத் தரம் உயர்த்து தல் அதிக நன்மை தரும், எவற்றைத் தவிர்த்துக் கொண்டால் அதிகஇலாபம் தரும் என்பதை அறிந்துகொண்டு கட்டட அமைப்பாளர்களிடம் சென்றால் அவர்களின் பொறியில் விழாது தப்பிக்கொள்ளலாம்.

புதிய வீடுகள் கட்டப்பட முன்னரே, மாதிரி வீடுகளையோ அல்லது படங்களையோ பார்த்து வீடுகளுக்கு முற்பணம் செலுத்தி புதிய வீடுகளைக் கொள்வனவு செய்பவர்களுக்கே தங்களது விருப்பத்தற்கு ஏற்ற விதத்தில் தரம் உயர்த்தும் பூரண சுதந்திரம் இருக்கும். மாறாக, ஏற்கனவே கட்டி முடிந்த புதிய வீடுகளை வாங்குபவர்களுக்கு இத்தகைய வாய்ப்புக் குறைவாக இருக்கும். எது எப்படி இருப்பினும் தரம் உயர்த்தும் சந்தர்ப்பம் ஏற்படுமிடத்து, அதற்கான முடிவுகளை உடனடியாக எடுக்கவேண்டிய அவசியம் கிடையாது. பொதுவாக கொள்வனவுப் பத்திரங்களில் கைச்சாத்திடப்பட்ட பின்னர் பிறிதொரு நாளிலேயே இதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்படும். அதற்கு முன்னர் எவற்றைத் தவறவிடக் கூடாது? எவற்றைத் தவிர்த்தல் வேண்டும்? என்பது பற்றி அறிந்து கொண்டு செல்லவேண்டும் என்பதைக் கருத்தில்கொண்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.

கட்டட அமைப்பாளர்களிடம் வீடுகளைத் தரம் உயர்த்தும்போது செலவு மிக அதிகம் என்பது மறக்கமுடியாத உண்மை. சாதாரண விலையைவிட 2 அல்லது 3 மடங்கு விலை அதிகமாக இருக்க வாய்ப்பு உள்ளது. மறு வார்த்தைகளில் கூறுவதானால் 25,000டொலரில் செய்யக்கூடிய வேலைக்கு கட்டட அமைப்பாளர்கள் மூலம் செய்ய முற்படுமிடத்து, 50,000 தொடக்கம் 75,000 டொலர்கள் வரை செலுத்தவேண்டி நேரிடும். இதுபற்றி தனித்தனியாக உற்றுநோக்குதல் பொருத்தமாகும்.

நன்மை, தீமைகள்:

கட்டட அமைப்பாளர்கள் மூலம் தரம் உயர்த்தும் போது ஏற்படும் செலவு முழுவதும் வீட்டின் விலையில் உள்ளடக்கப்படுவதால் அத்தொகை முழுவதும் அடமானத்துள் (Mortgage) அடங்கிவிடும். ஆதலால் செலவுத் தொகையை மாதாமாதம் வட்டியுடன் சேர்த்துக் கட்டி முடிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். அதே சமயம் மேலதிக பணத்தைக் கையிருப்பில் வைத்திருப்பவர்கள் தனிப்பட்ட முறையில் வெளியாரைக்கொண்டு தரம் உயர்த்துவதே பொருத்தமாக அமையும். அத்தகைய செயற்பாடு எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சில வரி ஏற்றங்களில் விடுபடவும், வேறு சில அனுகூலங்களுக்கும் வழிவகுக்கலாம்.

கட்டட அமைப்பாளர்களிடம் எடுக்கும் தரம் உயர்த்தலுக்கு பூரண உத்தரவாதம் இருக்கும். அதாவது 1 வருடம் முதல் 7 வருடங்கள் வரையான 'Tarion' உத்தரவாதத்திற்குள் அவை உள்ளடக்கப்படலாம். ஆனால், தனிப்பட்ட முறையில் செய்யப்படும் தரம் உயர்த்தலுக்கு தனிப்பட்டவர்கள் தரும் உத்தரவாதத்தையே நம்பி இருக்க வேண்டிய நிலை ஏற்படும். அத்துடன் தரமற்ற, தனிப்பட்டவர்களின் முறையற்ற வேலையால் ஏற்கனவே இருக்கக்கூடிய உத்தரவாதத்தை இழக்க வேண்டிய நிலையும் உருவாகலாம். எனவே, தரமான, அதிகாரம் பெற்றவர்களின் மூலமாக தரம் உயர்த்துதல் மிக அவசியமாகும்.

வீட்டிற்குள் பிரவேசிக்க முன்னரே பெரும்பாலான வேலைகளைக் கட்டட அமைப்பாளர்கள் முடித்து விடுவார்கள். இதனால் வீட்டிற்குள் பிரவேசித்த பின்னர் ஏற்படும் சிரமங்கள், தூசு அழுக்குகள் என்பவற்றைத் தவிர்த்துக்கொள்ள வாய்ப்புண்டு.

மேற்கூறப்பட்ட அசௌகரியங்களையும் பொறுத்துக்கொண்டு, அதிக அக்கறை எடுத்தால் பல ஆயிரக்கணக்கான டொலர்களைச் சேமிக்க வாய்ப்பு இருக்கிறது. அது பற்றி விரிவாக ஆராய்வோம்.

குறிப்பு: கொள்வனவு செய்யும் வீட்டில் நீண்ட காலத்திற்கு வசிக்கும் எண்ணம் உள்ளவர்களுக்கு மட்டுமே வீட்டினைத் தரம் உயர்த்துதல் மிகப் பலன் உடையதாக அமையும். குறுகியகாலத்தில் வீட்டை நல்ல விலைக்கு விற்றுவிட்டு வேறு வீட்டுக்கு மாறும் எண்ணம் கொண்டவர்களுக்கும், வீட்டை வாங்கி விற்பதையே ஒரு இலாபமீட்டும் தொழிலாகச் செய்பவர்களுக்கும் தரம் உயர்த்தலில் பணம் செலவழிப்பது இலாபகரமாக அமையாது. அதாவது தரம் உயர்த்துவதற்குச் செலவழித்த முழுச் செலவையும் ஒரு வீட்டை விற்கும்போது அதன் விற்பனை விலையில் இருந்து பெற்றுவிட முடியாது. மறு வார்த்தைகளில் கூறுவதானால் தரம் உயர்த்திய பின்னர் விற்கும் வீட்டில் பெறும் இலாபத்திலும் பார்க்க தரம் உயர்த்தாது விற்கும் வீட்டில் அதிக இலாபத்தைப் பெறலாம் என்பது பொதுவான உண்மையாகும்.

Energy Star Appliance and Fixes:

வீட்டைத் தரமுயர்த்தும் போது 'Energy Star' என்பதனைத் தாரக மந்திரமாகக் கொண்டு செயற்பட்டால் காலப்போக்கில் அதிகபலனைப் பெறமுடியும். உண்மையில் குறுகிய காலத்தில் இத்தகைய Energy Star உபகரணங்களுக்கும் பொருத்

தொடர்தல் 25ம் பக்கம்

புதிய வீடுகளைக்...

24ம் பக்கத் தொடர்ச்சி...

துக்களுக்கும் செலவழிக்கும் பணம் ஒரு மேலதிக செலவுபோலத் தென்பட்டாலும் காலப்போக்கில் அதன் மூலம் அதிக இலாபம் ஈட்ட வாய்ப்பு இருக்கிறது.

1.Toilets:

தற்போது கட்டப்படும் வீடுகளில் கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது குறைந்த அளவு தண்ணீரை உள்வாங்கும் toilet களே பயன்படுத்தப்படுகின்றன. 20 லீற்ற ரில் இருந்து 13 லீற்றர் ஆகி 1996ம் ஆண் டில் இருந்து ஒன்ராறியோ கட்டட நிய மங்களுக்கு அமைவாக 6 லீற்றரை உள்வாங்கும் toilet களே பயன்படுத்தப் படுகின்றன. அதாவது ஒரு தரப் பாவ னையில் 6 லீற்றர் தண்ணீர் செலவாகும். ஆனால் நாளாந்தப் பாவனையை எடுத் துக் கொண்டால் பல தடவைகள் சலம் கழிக்கும் போது ஒவ்வொரு தடவையும் 6 லீற்றர் தண்ணீரை விரயம் செய்வது வீணானது என்பது தெட்டத்தெழிவு. இத னைக் கருத்திற்கொண்டே Dual - Flush toiletsகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதாவது சலம் கழிக்கும் சந்தர்ப்பத்தில் 3 லீற்றர் தண்ணீரைப் பயன்படுத்தலாம். மலம் கழிக்கும் போது 6 லீற்றர் தண் ணீரையும் பயன்படுத்தலாம். இத்தகைய தரம் உயர்த்தல் மிக்க பயன் உள்ளது.

2. சாளரங்கள்:

பொதுவாக வீட்டில் உள்ள சாளரங்கள் வீட்டினை வெப்பமாக்கலிலும், கோடை காலங்களில் குளிராக வைத்திருப்பதிலும் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றன. பல வகையான சாளரங்கள், பலதரப்பட்ட விலையிலும் பலதரப்பட்ட தரங்களிலும் சந்தைப் படுத்தப்படுகின்றன. தற்போதய சாளரங்கள் பெரும்பாலும் Double - Glaze ஆக இருந்தாலும் அவற்றிலும் பலதரப்பட்ட தரங்கள் உண்டு. Triple - Glaze சாளரங்களும் உள்ளன. பின்வரும் தன்மைகளைக் கொண்ட Energy Star சாளரங்கள் காணப்படுகின்றன. பொது வாகக் கனடாவில் 20% - 30% வெப்பம் அல்லது குளிர் சாளரங்கள் ஊடாக விர யமாவதாகச் சில புள்ளிவிபரங்கள் தெரி விக்கின்றன. Energy Star சாளரங்களைப் பாவிப்பதன் மூலம் 9% - 18% செலவைக் குறைக்க முடியும் என ஆராய்ச்சிகளில் இருந்து அறியக் கிடக்கின்றது. எனவே சாளரங்களின் விலையையும் தரத்தையும் கவனித்து தரம் உயர்த்தல் நன்மை பயக் கும்.

சாளரங்களைத் தரம் உயர்த்துவதால் பலவித நன்மைகளை அடைய முடியும், காலப்போக்கில் குறைந்தளவிலான சக்தி யைப் பாவிப்பதன்மூலம் பணத்தைச் சேமிக்கலாம். அதேவேளை, சுற்றம் சூழ லைக் குறைந்தளவு Air Pollution ன் மூலம் பாதுகாக்கவும் முடியும். பரவலான வீடு களில் நீராவி உட்புறக் கண்ணாடிகளில் படிந்து காலப்போக்கில் சாளரத்தின் நிலைகளை உக்கச்செய்வதோடு, அவற் றில் வெடிப்புகள் ஏற்பட்டு, பூசப்பட்டிருக் கும் வண்ணங்களைச் சேதப்படுத்துவதோடு மட்டுமன்றி, மோல்ட், பங்கஸ் போன்ற வற்றின் வளர்ச்சிக்கும் அதனால் ஏற்படக் கூடிய பலவித பாதக விளைவுகளுக்கும் காரணமாக அமைகின்றது. எனவே, தர மான சாரளங்களை உபயோகிப்பதால் பலவித நன்மைகளை அடைய வாய்ப்பு இருக்கின்றது.

3. மாடிப்படிகள் (Staircase):

மாடிப்படிகளை சாதாரண தரம் குறைந்த மரத்தில் அமைத்து அதனைக் Carpet ஆல் மூடி மறைத்து அழகாக்குவதையே பல கட்டட அமைப்பாளர்களும் செய்கி றார்கள். காலப் போக்கில் அதனை நாம் Hard woodக்கு மாற்ற நினைத்தால் பல அசௌகரியங்களையும் பாரிய செலவை யும் சந்திக்கவேண்டி ஏற்படும். ஆரம்பத் திலேயே நாம் Hardwood க்கு மாடிப்படி-





களைத் தரம் உயர்த்தும் பட்சத்தில் அவை வேறாகத் தயார் செய்யப்பட்டு மிக அழ காகவும் நேர்த்தியாகவும் பொருத்தப்ப டும். எனவே தரம் உயர்த்தும் போது படி களை Hardwood க்கு தரம் உயர்த்துதல் சாலச்சிறந்தது. அத்துடன் Spiral Stair-case வீட்டிற்கு அழகு தரக்கூடியது. அத் தகைய படிகளை மேல் மாடிக்கு மட்டு மன்றி நிலக்கீழ் அறைக்கும் தரம் உயர்த்த முடியும். இதுவும் கவனிக்கப்பட வேண்டி யது.

Jacuzzi Bath:

வீடுகளைத் தரம் உயர்த்தும்போது சாதா ரண குளியல் தொட்டிகளை Jacuzziக்கு மாற்றச் சந்தர்ப்பம் உண்டு. அவ்வாறு செய்யும் போது சிறு தொகையை மேல திகமாகச் செலுத்தினாலும் அதில் சில நன்மைகளைப் பெற வாய்ப்பு உள்ளது. அதாவது சந்தர்ப்பத்தை நழுவ விட்டு விட்டுப் பின்னர் மாற்ற நினைத்தால் மிக அதிக செலவும் சிரமமும் ஏற்படும். Water Therapy உடலுக்கும் உள்ளத்திற்கும் இதமும், சுகமும் தரக்கூடியது எனப் பல ஆராய்ச்சிகள் கூறுகின்றன. அவற்றைப் பயன் படுத்தும் வாய்ப்பு சொந்த வீட்டி லேயே அமைந்துவிட்டால் நல்லது தான். ஆனால் அவற்றைக் கிரமமாகப் பயன் படுத்துபவர்களுக்கே இது நன்மை தரக்கூடியது. தவிர வருடத்திற்கு ஒரு தடவையோ இரு தடவையோதான் பாவிக்கும் நிலை இருக்கும் என்றால் செலவழித்த செலவு விரயம்தான். இருந்த போதும் 'எங்கள் வீட்டிலும் Jacuzzi இருக்கிறது' என்று மற்றவர்களோடு பேசும் போது ஏற்படும் இன்பம் அது பேரின்பம்.

4. Hardwood floor

சாதாரணமாகப் புதிய வீடுகளில் உள்ள படுக்கை அறைகளும் குளியல் அறை தவிர்ந்த பகுதிகளும் பிரதான தளத்தில் சமையல் அறை தவிர்ந்த ஏனைய பகுதி களும் கார்பெற் கொண்ட தளங்களாக அமைக்கப்படுவது வழமை. செலவைக் குறைக்கும் நோக்கில் அதிகமான கட்டட அமைப்பாளர்கள் இதனையே நடைமு றையில் வைத்திருக்கிறார்கள். ஆனால் முடிந்தளவு வீட்டின் உட்புறப் பகுதிகளை ஹாட்வூட் ஆக மாற்றுவதால் பலவித நன்மைகள் உண்டு.

- தூசினால் ஏற்படக்கூடிய ஒவ்வாமைக்கு உகந்தது.
- பரமரிப்பு சுலபம்.
- சுவாசம் சம்பந்தப்பட்ட ஆஸ்த்மா போன்ற நோய்களின் உக்கிரத்தைக் குறைக்கவல்லது.
- வீட்டிற்கு அழகும் மதிப்பும் தரவல் லது.

இவை போன்ற பலவித நன்மைகள் ஹார்ட்வூட் போடுவதால் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆனால், இவற்றைக் கட்டட அமைப்பாளர்களிடம் இருந்து பெறுவதா னால் அதற்கான செலவு பலமடங்காக இருக்கும்.

நல்ல தரமுள்ள ஹார்ட்வூட் கட்டட அமைப்பாளர் மூலம் போடுவதற்கு சதுர அடிக்கு 12 டொலரிலிருந்து 18 டொலர் வரை செலவழிக்கவேண்டிய நிலை உரு வாகும். ஆனால், இதனை வெளியார் மூல மாகச் செய்வதானால் சதுர அடிக்கு 2.99 டொலரில் இருந்து 10 டொலர் வரையான செலவே ஏற்படும்.

கட்டட அமைப்பாளர்கள் மூலம் போட் டால் வேலை தரமாக இருக்கும் என்ற பொதுவான கருத்து தவறானதாகும். எத் தனையோ புதிய வீடுகளில் ஒரு வருட பரிசோதனையின்போது ஹார்ட்வூட் பதித்த விதத்தில் பல தவறுகள் கண்டுபிடிக்கப் பட்டு, அவற்றைத் திருத்துவித்த அனுப வமும், சில இடங்களில் அவற்றைத் திருப் பிப்போடுவித்த அனுபவமும் எனக்குண்டு. எனவே, வெளியாரை நாடும்போது, தர மானவர்களை நாடினால் அத்தகைய பிரச் சினைகளில் இருந்து விடுபட முடியும். தற்போது பலத்த போட்டி காரணமாக மலிவான விலையில் நாமே பிறரைக் கொண்டு செய்வதே மிக இலாபகரமான- தாகும்.

ஹார்ட்வூட் தளத்தில் பல வகைகள் உண்டு. வசதிக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற வாறு பொருத்தமானவற்றைத் தெரிவு- செய்தல் நல்லது.

தொடரும்...

velasubramaniam@thaiveedu.com

காலநிலை மாற்றம்

கிரேதா தன்பேர்க் ஒரு சுவீடன் நாட்டு, பதின்மவயது மாணவி. காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய உலகளாவிய அழிவைக் கருத்தில் கொண்டு அவர் செயற்பட்டு வருகிறார். சூழல்நலம் பேண உலக அரசுகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அவருக்கு நிறைவு தரவில்லை. 2019 ஆகஸ்ட் 28ம் திகதி கால்வற்ற கடற்கலம் ஒன்றில் நியூ யோர்க் சென்று, செப்டெம்பர் மாதம் ஐ.நா. காலநிலை நடவடிக்கை மாநாட்டில் உலக அரசுகளைச் சாடி அவர் ஆற்றிய சிற்றுரையின் தமிழாக்கம் இது.

கிரேதா தன்பேர்க் உட்பட எவருமே எதிர்பாராத விதமாக உலகளாவிய நச்சொட்டுக் கொள்ளை நோயினால் உலக அரசுகள் தடுமாறிப் போயுள்ள இன்றைய சூழ்நிலையில் அவரது கோரிக்கைகள் இயல்பாகவே கைகூடிவருவது ஒரு முரண்சுவை ஆகும்.

- கிரேதா தன்பேர்க் -

நாங்கள் உங்களை அவதானித்துக் கொண்டிருப்போம். உங்களிடம் நான் தெரிவிக்கும் சேதி அதுவே.

இது முற்றிலும் தவறான நிலைவரம். நான் இங்கு வந்திருக்கக்கூடாது. எழுகடலுக்கு அப்பால் பள்ளிக்கூடத்துக்கு திரும்பவேண்டிய சிறுமி நான். எனினும் எங்கள் இளந் தலைமுறையிடமே நீங்கள் நம்பிக்கையை நாடி வருகின்றீர்கள். அப்படிச்செய்ய உங்களுக்கென்ன துணிச்சல்!

உங்கள் வெற்றுச் சொற்களைக் கொண்டு எனது கனவுகளையும் பாலியத்தையும் நீங்கள் திருடிவிட்டீர்கள். எனினும் நற்பேறு பெற்றவர்களுள் நானும் அடங்குவேன். அதேவேளை மக்கள் வருந்துகிறார்கள். மக்கள் இறக்கிறார்கள். சூழல்தொகுதிகள் முழுவதும் நிலைகுலைகின்றன. பாரிய அழிந்தொழிவு துவங்குந் தறுவாயில் உங்களால் பணத்தைப் பற்றியும், நிலை பெற்ற பொருளாதார வளர்ச்சி தொடர்பான மாய்மாலக் கதைகளைப் பற்றியுமே கதைக்க முடிகிறது. அப்படிச்செய்ய உங்களுக்கென்ன துணிச்சல்!

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அறிவியல்துறை தெட்டத் தெளிவாகத் தெரிவித்து வரும் உண்மையைப் புறக்கணித்து விட்டு, மேற்கொள்ளவேண்டிய அரசியல் நடவடிக்கைகளையும் தீர்வுகளையும் மேற்கொள்ளாமல் இருந்துவிட்டு, இங்கு வந்து "நாங்கள் போதியளவு செயற்பட்டு வருகின்றோம்" என்று சொல்ல உங்களுக்கென்ன துணிச்சல்!

எங்களைக் காதுகொடுத்துக் கேட்பதாகவும், அவசரத்தைப் புரிந்துகொள்வதாகவும் கூறுகின்றீர்கள். அதைக் கேட்டு நான் எவ்வளவு கவலையும் சீற்றமும் அடைகிறேன் என்பது வேறு கதை. ஆனால் உங்களை நான் நம்பத் தயாராக இல்லை. ஏனெனில், நீங்கள் உண்மையிலேயே நிலைவரத்தைப் புரிந்துகொண்டிருந்தும் கூட, தொடர்ந்தும் செயற்படத் தவறியவர்கள் என்றால், நீங்கள் தீயவர்கள் ஆவீர்கள். என்னால் அதை நம்பவே முடியவில்லை.

பத்து ஆண்டுகளுள் எங்கள் கால்வுகளை அரைவாசியாகக் குறைக்கும் பேர்போன எண்ணத்தின்படி நாங்கள் 1.5 பாகை செல்சியசை விடக் குறைவான நிலையை அடையும் வாய்ப்பு 50%மாத்திரமே. அத்துடன் மனிதரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டு, மனிதரால் கட்டுப்படுத்த முடியாவாறு, தொடரடி விளைவுகளை அது முடுக்கிவிடும் ஆபத்தையும் நாங்கள் எதிர்நோக்கியுள்ளோம்.

மேற்படி 50% என்பது நீங்கள் ஏற்கக்கூடிய எண்ணிக்கை ஆகலாம். ஆனால் அந்த

எண்ணிக்கையில் மேவுபுள்ளிகள், மீளூட்டு தடங்கள், நச்சுவளி மாசினுள் மறையும் மேலதிக வெக்கை, காலநிலை ஒப்புரவு, காலநிலை நீதி போன்ற அம்சங்கள் அடங்கவில்லை. அவையும் எனது இளந் தலைமுறையயே நம்பியுள்ளன. தற்பொழுது பெரிதும் இல்லாத தொழினுட்பவியல்கள் மூலம் உங்கள் கரியமிலவாயுவில் கோடிக்கணக்கான தொன்களை அவை வளியிலிருந்து உறிஞ்சியெடுக்கின்றன.

எனவே 50% வாய்ப்பு, அதன் விளைவுகளுடன் வாழவேண்டிய எங்களுக்கு, உடன்பாடானதல்ல. அவ்வளவுதான்!

1.5 பாகை புவி வெப்ப உயர்வினுள் நிலைகொள்ள 67% வாய்ப்பை காலநிலை மாற்றம் தொடர்பான அரசுகளுக்கு இடைப்பட்ட குழாம் விதந்துரைத்தது. அந்த வாய்ப்பை அடைய 2018 சனவரி 1-ம் திகதி வாக்கில் 42,000 கோடி தொன் வரையான கரியமிலவாயுவை உலகம் கால வேண்டியிருந்தது. இன்று ஏற்கெனவே அந்த எண்ணிக்கை 35,000 கோடியிலும் குறைவான தொன்வரை தாழ்ந்துள்ளது.

இந்தப்பிரச்சினைக்கு "வழமையான அலுவல்" மூலமாகவும், சில தொழினுட்ப பரிகாரங்கள் மூலமாகவும் தீர்வுகாண முடியும் என்று பாவனை செய்ய உங்களுக்கென்ன துணிச்சல்! இன்றைய கால்வுகளின்படி எஞ்சிய கரியமிலவாயு வரம்பு எட்டரை ஆண்டுகளுள் முற்றிலும் எட்டப்பட்டுவிடும்.

இந்த எண்ணிக்கைகளுக்கு ஏற்ற தீர்வுகள் அல்லது திட்டங்கள் எவையும் இன்று இங்கு முன்வைக்கப்படப் போவதில்லை. ஏனெனில் இவை மிகவும் எரிச்சலூட்டும் எண்ணிக்கைகள். உள்ளதை உள்ளபடி ஒப்புக்கொள்ளப் போதிய முதிர்ச்சியை நீங்கள் இன்னும் எய்தவில்லை.

நீங்கள் எங்களுக்கு ஏமாற்றம் அளிக்கிறீர்கள். உங்கள் காட்டிக்கொடுப்பை இளந்தலைமுறை புரிந்துகொள்ளத்துவங்கியுள்ளது. வருங்காலத் தலைமுறையினர் அனைவரும் உங்களைக்கண்காணித்து வருகின்றார்கள். நீங்கள் தொடர்ந்தும் எங்களுக்கு ஏமாற்றம் அளிக்கும் வழியைத் தேர்ந்தெடுத்தால், நாங்கள் என்றுமே உங்களை மன்னிக்க மாட்டோம் என்பதை இத்தால் உங்களிடம் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இப்படிச் செய்துவிட்டு நீங்கள் தப்பிச் செல்ல நாங்கள் விடப்போவதில்லை. இங்கேயே, இப்பொழுதே உங்களுக்கு நாங்கள் கோடு கிழிக்கின்றோம். உலகம் விழித்தெழுகின்றது. நீங்கள் விரும்பினால் என்ன, விரும்பாவிட்டால் என்ன, மாற்றம் வருகின்றது.

நன்றி!

தமிழில்: மணி வேலுப்பிள்ளை

காணொளி இணைப்பு:

- *https://ca.video.search.yahoo.com/search/video?fr=mcafee&p=greta+thunberg#id=3&vid=4fd6b789d4b8d99591f3d1231208cc1d&action=view*

■ ■ ■

திருமணம், பூப்புனிதநீராட்டுவிழா, பிறந்தநாள் அழைப்பிதழ்கள்
அச்சிட தொரன்ரோவில் புதிய காட்சியறையுடன்
MENAKA CARD
மேனகா அழைப்பிதழ்
Invitations for all occasions
80 Nashdene Road, Suite 113, (E Block), Toronto, Ontario, M1V 5E4. Tel : 416.335.1155

MORTGAGE

MORTGAGE IN ANY SITUATION

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட் (HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private 1st Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்

⇒ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

MORTGAGE CLINIC

www.mortgageclinicccanada.com

Cell : 416-624- 4843

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது

416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை
MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 112-895 Don Mills Rd, Toronto ON M3C 1W3 Corp office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto ON M2J 5B4

விமானங்களில் கூடுகட்டும் சிட்டுக்குருவிகள்

- குரு அரவிந்தன் -

திடீரென எங்கிருந்தோ வந்த கொரோனா வைரஸ் உலகத்தையே பிரட்டிப் போட்டு வேடிக்கை பார்க்கின்றது. இதனால் இதுவரை காலமும் இரைச்சலோடு போராடிய வானம் சட்டென்று மௌனமாகி விட்டது. பறவைகளும், மிருகங்களும் சுதந்திரமாய்த் திரிய ஆரம்பித்து விட்டன. அதிகாலையில் குருவிகளின் கீச்சுக் குரலைக் கேட்டு, இயற்கை திரும்பி விட்டது என்று இயற்கையை ரசிப்பவர்கள் ஒரு பக்கம் மகிழ்ந்திருக்க, மறுபக்கம் மரண ஓசைகள் காதில் தொடர்ச்சியாக விழுந்த வண்ணம் இருக்கின்றன. இதற்கெல்லாம் காரணமான, உலகத்தையே ஆட்டிப் படைக்கும் கொரோனா வைரசுக்கு மருந்தோ அல்லது தடுப்பு மருந்தோ ஆறுமாதங்களாகியும் இதுவரை கண்டு பிடிக்க முடியவில்லை என்பது மருத்துவத்துறையின் பெரியதொரு குறையாக இருக்கின்றது. விண்ணையும் தாண்டிச் செல்லக்கூடிய தொழில் நுட்பம் வளர்ந்த அளவிற்கு மருத்துவத்துறை விருத்தி அடையவில்லை என்றே பலரும் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். உலக சுகாதார நிறுவனம் குறிப்பிட்டது போல, மருத்துவத் துறையில் அதிக கவனம் செலுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது, ஏனென்றால் இதுபோன்ற இந்த தொற்றுநிலை இன்னும் கொஞ்சக் காலத்திற்குத் தொடரப் போகின்றது.

அங்கொன்றும் இங்கொன்றுமாக விமானங்கள் பறந்தாலும், பயணிகள் விமானத்தில் மூன்றில் இரண்டு பங்கு விமானங்கள் பயணிக்க முடியாமல் தரையிலேயே தங்கிவிட்டன. அதனால் வானம் வெறிச்சோடிக் கிடக்கின்றது. தரையில் தங்கியிருக்கும் சேவையில் ஈடுபடக்கூடிய 16,000 மேற்பட்ட பெரிய ஜெட்விமானங்களைப் பராமரிப்பதும் பாதுகாப்பதும் விமான நிறுவனங்களுக்குப் பெரியதொரு வேலையாக இருக்கின்றது. தகுந்த தரிப்பிடம் இல்லாததால், 62 வீதமான விமானங்களை விமான ஓடுபாதையில்தான் உலகெங்கும் நிறுத்தியிருக்கிறார்கள். இதற்காகத் தரிப்பிட வாடகைப் பணம் மட்டுமல்ல, அவற்றைப் பராமரிக்கும் செலவையும் கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் விமான நிறுவனங்கள் இன்று இருக்கின்றன. பெரிய பயணிகள் விமானங்களைப் பற்றி மட்டுமே நான் இங்கே குறிப்பிடுகின்றேன். இவற்றைவிட ஏராளமான சிறிய விமானங்களும் இதே நிலையில்தான் இருக்கின்றன.

இப்படித் தரையில் தொடர்ந்து நிலைத்து நிற்கும் பெரிய விமானங்களை உடனடியாகப் பறப்பில் ஈடுபடுத்த முடியாது. விமானங்களின் நீரியல் அழுத்தி, மற்றும் பறப்பதற்கான கட்டுப்பாட்டுக் கருவிகள் போன்றவை தினமும் பராமரிக்கப்பட வேண்டும். நீண்ட நாட்களுக்கு ஒரே இடத்தில் நிலைத்து நிற்கும் விமானங்களில் வண்டுகள், பூச்சிகள், குளவிகள், சிலந்திகள் போன்றவற்றிடம் இருந்து மட்டுமல்ல, குருவிகள், பறவைகள் போன்றவை கூடுகட்டாமலும் பாதுகாக்க வேண்டும். ஈரப்பதநிலையை தினமும் கவனிக்காவிட்டால் விமானத்தின் பாகங்கள் துருப்பிடித்துவிடும். பறப்பில் ஈடுபடாவிட்டாலும், திறந்த வெளியில் வேகமாக வீசும் காற்றால் விமானம் குலுங்காமல் இருப்பதற்கு எரிபொருள் நிரப்பப்பட்டிருக்க வேண்டும், இல்லாவிட்டால் சேதமடைய வாய்ப்புண்டு. இதைவிட விமானத்தின் சில்லுகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். குறைந்தது ஒரு வாரத்திற்கு ஒரு தடவையாவது சில்லுகள் சுற்றப்பட வேண்டும். 14 நாட்களுக்கு ஒரு முறை பற்றிகளை சார்ச் பண்ண வேண்டும். விமானத்தின் பிறேக் கருவிகள் பராமரிக்கப்பட வேண்டும். பெரிய விமானங்களின் பெறுமதியைப் பார்ப்போமேயானால், இப்படிப் பல விதமான பராமரிப்புக்களை இந்த விமானங்கள் கட்டாயம் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றன.

கே.எல்.எம் என்று சொல்லப்படுகின்ற நெதர்லாந்து, அதாவது முன்னாள் ஒல்லாந்து நாட்டின் விமானச்சேவையின் 200 விமானங்கள் அதன் தலைநகரான அமெஸ்ரடாம் விமான நிலைய ஓடுபாதையில் தரித்து நிற்கின்றன. இந்தியாவில் ஒரு விமானம் தரித்து நிற்பதற்கு ஒரு நாளைக்கு மட்டும் 1000 டெலர்கள் அறவிடப்படுகின்றன. துபாய் விமான சேவை நிறுவனத்தினர் தங்கள் விமானங்களைச் ஸாம்பு போட்டுக்கழுவி பராமரிப்தற்கு சுமார் 200 தொழிலாளர்களை சேவையில் ஈடுபடுத்தி இருக்கிறார்கள். ஒரு விமான நிறுவனத்திற்கு, சேவையில் ஈடுபடாமல் இருக்கும்

250 விமானங்களின் தரிப்பிட வாடகைக்கு மட்டும் ஆறு மாதத்திற்கு குறைந்தது 12.5 மில்லியன் டொலர்கள் தேவைப்படுகின்றது. இதைவிட பராமரிப்புச் செலவுகள் தனிப்பட இருக்கின்றன. குவான்ஸ் விமான சேவையின் 200 விமானங்கள் அவுஸ்ரேலியாவில் உள்ள வெவ்வேறு விமான நிலையங்களில் தரித்து நிற்கின்றன. பிரிட்டிஷ் எயவேய்ஸ் தங்களது 12 பெரிய விமானங்களை வேறுநாடுகளில் உள்ள விமான நிலையங்களில் வைத்துப் பராமரிக்கிறார்கள். எயர் பிரான்ஸ் தான் அதிக நாடுகளுக்கான சேவையில் இதுவரை ஈடுபட்டிருந்தது.

பெரிய விமானச்சேவையில் சராசரி 44,000 விமான சேவைகள் தினமும் நடைபெற்று வந்தாலும், 23,600 விமானங்கள்தான் சேவையில் ஈடுபட்டிருந்தன. சராசரி 2.7 மில்லியன் விமான பயணிகள் 29 மில்லியன் சதுரமைல் விமானப்பரப்பில் பயணித்துக் கொண்டிருந்தார்கள். கொரோனா வைரஸின் தாக்கத்தால் இந்தப் பயணங்கள் எல்லாம் தற்காலிகமாகத் தடைப்பட்டு விட்டன. இதில் போயிங் 737 மாக்ஸ் விமானங்கள் ஏற்கனவே ஒரு வருடத்திற்கு முன் பாதுகாப்பு காரணங்களுக்காக தனது பயணத்தை நிறுத்திக்கொண்டன. சென்ற வருடம் 2019ல் மட்டும் 86 பெரிய விமானங்கள் விபத்தில் சிக்கியிருந்தன. இரவிலே காற்று குளிரடைந்து இருப்பதால் தான் விமானங்கள் இரவில் பதிவாகப் பறக்கின்றன. சொன்னால் நம்பமாட்டீர்கள், உலகின் சனத்தொகையில் 20 வீதமான வர்கள் வாழ்நாளில் ஒருநாளுமே விமானப்பயணத்தை மேற்கொண்டதில்லை. எனவே இந்த மாற்றங்கள் பற்றி உலக சனத்தொகையில் 20 வீதமான மக்கள் கவலைப்படப் போவதில்லை.

இந்தியாவின் விமானப்பாதை வலையத்தில் பொருட்களைக் கொண்டு செல்லும் விமானங்களும் விசேட விமானப்பயணங்களும் மட்டும்தான் அனுமதிக்கப் பட்டிருக்கின்றன. ஏனைய விமானப் பயணங்கள் கொரோனா தொற்றுக் காரணமாகத் தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டிருக்கின்றன. இதனால் சுமார் 600 பெரிய பயணிகள் விமானங்களின் சேவை நிறுத்தப்பட்டிருக்கின்றது. இந்தியாவில் முக்கியமான எட்டு விமான சேவை நிறுவனங்கள் பயணிகளுக்கான சேவை நடத்துகின்றன. இதில் சுமார் 650 விமானங்கள் அடங்குகின்றன. இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் விமானங்களுக்கான 194 விமான தரிப்பிட வசதிகள் இருக்கின்றன. Airports Authority of India வின் கட்டுப்பாட்டில் நாடு முழுவதும் 137 விமான நிலையங்கள் இருக்கின்றன.

அமெரிக்காவின் 6,215 பெரிய பயணிகள் விமானங்களில் சுமார் 1,200 விமானங்கள் விமான நிலையங்களிலே தரித்து நிற்கின்றன. அமெரிக்கன் எயர்லைன்ஸ்தான் அதிக விமானங்களைக் கொண்ட விமான நிறுவனமாக இருக்கின்றது. அதிக மக்கள் விமானத்தில் பயணிப்பதும் அமெரிகாவில்தான், இதில் சீனா இரண்டாவது இடத்தில் இருக்கின்றது. சிக்காகோ சர்வதேச விமான நிலையம்தான் அதிக ஓடுபாதையை, அதாவது எட்டு ஓடுபாதையைக்கொண்டது. அட்லாண்டாவில் உள்ள ஹாட்ஸ்பீல்ட் ஜாக்ஸன் சர்வதேச விமான நிலையம்தான் உலகிலே அதிக சுறுசுறுப்பான, பரபரப்பான விமான நிலையமாக இருக்கின்றது.

கொரோனா வைரஸின் பாதிப்பால் எயர் கனடா பயணிகள் விமானங்களும் பறப்பில் ஈடுபடவில்லை. இதன் காரணமாக ஏயர் கனடா நிறுவனம் சுமார் 20,000 பேரை வேலை நீக்கம் செய்யவிருக்கின்றது. விமானங்கள் பறப்பில் ஈடுபடாமல் தரித்து நிற்பதால் விமான நிறுவனம் வருமான இழப்பை எதிர்கொள்ள வேண்டி இருக்கின்றது. தற்சமயம் சுமார் 38,000 பேர் இந்த நிறுவனத்தில் தொழில் பார்க்கிறார்கள். யூன் மாதம் 7ம் திகதி இவர்கள் வேலை நீக்கம் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நிறுவனத்தின் சுமார் 225 பெரிய பயணிகள் விமானங்கள் பறப்பில் ஈடுபடாமல் தரித்து நிற்கின்றன. 19,000 இருந்து 22,800 பேர் வரை தொழில் வாய்ப்பை இழக்க நேரிடலாம் என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இனிவரும் மாதங்களில் மீண்டும் விமான சேவைகள் ஆரம்பிக்கப்படலாம். அப்படி ஆரம்பிப்பதானால் கட்டணம் அதிகமாகலாம். காரணம் விமான இருக்கைகளுக்கான இடைவெளியை அதிகரித்தல், இரத்த பரிசோதனை, உடல் வெப்ப பரிசோதனை, தானியங்கும் கழிவறைக்கான மேலதிக செலவு... இப்படிப் பல செலவுகளை விமானசேவை நிறுவனங்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். ஒவ்வொரு பயணத்தின் போதும், பயணிகளின் இருக்கைகளும் சுகாதார முறைப்படி திரும்பவும் துப்பரவு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு பயணியும் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். விமானத்தின் வாசலில் கேட்கப்படும் உடல் நிலை சம்பந்தமான கேள்விகளுக்குத் தகுந்த பதில் தரப்படவேண்டும். பயணிக்கும்போது, போத்தல் தண்ணீரும், ஏற்கனவே பொதி செய்யப்பட்ட உணவும் தான் கிடைக்கும். இவ்வளவு கட்டுப்பாடுகளை விதித்தாலும், நோய் தொற்றிய ஒருவரிடம் இருந்து நோய் வெளிக்காட்ட ஒரு வாரமாவது எடுக்கலாம். எனவே இந்த தடுப்பு நடவடிக்கைகள் முழுமையானது என்று சொல்ல முடியாது. ஆனாலும் மனிதர்கள் அலைந்து திரிந்து பழகிவிட்டார்கள், எனவே, பயணங்களை மனிதர்களால் கட்டுப்படுத்த முடியாமல்தான் இருக்கும்.

கொரோனாவும் ஒரு நாள் கடந்து போகும் என்று நம்புவோம்.

உசாத்துணை:

- www.bloomberg.com/news/features/ 2020-04-16/ coronavirus-travel-what- happens-to-planes-gr
- www.msn.com/en-ca/money/topstories/ air-canada-to-lay-off-20000-workers

kuruaravindan@thaiveedu.com

ஜப்பானில் சில நாட்கள்

- சி. நற்குணலிங்கம் -

ஜப்பான் ஆசியாக் கண்டத்தில் பல தீவுகளாலான பெருங்கடலின் மேற்கில் உள்ளது. இது சூரியன் உதிக்கும் நாடென்றும் அழைக்கப்படுகிறது. டோக்கியோ இதன் தலைநகரம். இது 6852 தீவுகளை உள்ளடக்கியுள்ளது. ஒக்கைடோ, ஒன்சு, சிகொக்கு, கியூசு ஆகியன ஜப்பானின் முக்கியமான, மற்றும் 97% நிலப்பரப்பை உள்ளடக்கிய நான்கு தீவுகளாகும். 12.6 கோடி மக்களைக்கொண்ட நாடு. சன அடர்த்தி ச.கி.மீ.க்கு 334. உலக மக்கள் தொகையில் பத்தாவது இடத்தில் உள்ளது. தேசிய மொழி யப்பானியமாகும். இலக்கணக் கட்டமைப்புக்களைக் கொண்டுள்ளன என சொல்லப்படுகிறது. ஜப்பானிய மொழிக்கும் தமிழ் மொழிக்கும் நிறையத் தொடர்புகள் உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இரு மொழிகளும் ஒரேமாதிரி இரண்டாவதுமொழி என ஒரு மொழியும் இல்லை. இங்கு 98.1% யப்பானியர், 0.5% கொரியர், 0.4% சீனர், 01% ஏனையோர் வசிக்கின்றனர். சிந்தோவும், பௌத்தமும் முக்கிய மதங்களாகும். கிறிஸ்தவம் சிறுபான்மையான மக்களால் பின்பற்றப்படுகிறது. ஆங்கில வருடத்தின் முதல்நாளன்று கோயிலுக்குச் செல்லும் வழக்கம் உள்ளது. ஹத்சுமொடே என்று இந்த வழக்கம் அழைக்கப்படுகிறது. பாரம்பரிய விளையாட்டு சுமோ. தற்காப்புக் கலைகளாக சூடோ, கராத்தே போன்றவை வழமையில் உள்ளன. இதன் நாணய அலகு யென். யப்பான் உலகின் நான்காவது மிகப்பெரிய பொருளாதார சக்தியாகவும் விளங்குகிறது. இங்கு 1.7% வெளிநாட்டவர்கள் வாழ்கிறார்கள்.

ஜப்பானிய சுதந்திர தினம் கி.மு. 660 பெப்பிரவரி 11ம் திகதியாகும். யப்பானிய மொழியில் அந்நாட்டின் பெயர் 'நிகோன்கொகு' அல்லது 'நிப்பொன்கொகு' என உச்சரிக்கப்பட்டது. கி.பி.645ல் நிகோன் என்ற பெயர் முதலில் யப்பானின் பெயராகப் பயன்படுத்தப்பட்டது. யப்பானியச்சட்டத்தில் வரையறுக்கப்பட்ட ஆங்கிலப்பெயர் ஜப்பான் (Japan). 47 மாவட்டங்களை கொண்டுள்ள நாடு. உலகிலேயே கல்வியில் இரண்டாவது இடத்தில் உள்ள நாடு. ஜப்பானிய ஆரம்பக்கல்வி உலகப் புகழ் வாய்ந்தது. பரீட்சை இல்லாத நாடெனவும் கூறப்படுகிறது. இங்கு கல்விக்கும், விளையாட்டுக்கும் சரிசமமான முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மூன்று வயதில் யப்பானில் உள்ள ஒவ்வொரு குழந்தையும் மழலையர் பள்ளிக்குச் செல்வது கட்டாயம். அங்கு அடிப்படைக் கணிதம், வாசிப்பு, எழுதுதல் போதிக்கப்படுகிறது.

ஜப்பானின் தலைநகர் வர்த்தக மையமாக விளங்குகிறது. வாழ்க்கைச் செலவு கூடிய நகராகவும் உள்ளது. பெரும்பாலான வேலையாட்கள் வேறு இடங்களில் குடியிருந்து இங்கு வேலைக்கு வருகிறார்கள். வாகன உற்பத்தி தொழிற்சாலைகள் தாராளமாகக் காணப்படுகின்றன. விவசாயம் செய்வோரும் உளர். ஏறக்குறைய 14% விவசாயம் செய்வோராக உள்ளனர். வாகன ஏற்றுமதி மூலமும், சுற்றுலாப் பயணிகள் மூலமும் அதிக வருமானம் ஈட்டப்படுகின்றது. எந்த வேலைக்கு செல்வதாயினும் புகையிரதத்தையே கூடுதலாகப் பயன்படுத்துகிறார்கள். வேலைக்கு செல்வோர் பெரும்பாலும் கடும்நிற உடைகள் அணிவதை விரும்புவதில்லை. விவசாயப் பொருட்கள் கூடுதலாக இறக்குமதி செய்யப்படுகின்றன. பெரும்பாலும் எல்லாப் பொருட்களின் விலைகளும் உயர்வாகவே உள்ளன.

ஜப்பானியர் 10 பேரில் ஒருவர் வெளிநாட்டவரை திருமணம் செய்கிறார்கள். திருமண வயது சராசரியாக 30. 40 வயதை தாண்டினால் 01% தான் திருமணம் முடிக்க வாய்ப்பிருக்கும். தனியாள்களின் எண்ணிக்கை அதிகம். மணம் முடித்தாலும் பிள்ளைகளை குறைவாகவே பெற்றுக் கொள்ள விரும்புகிறார்கள். பெரும்பாலானவர்க்கு ஒரு பிள்ளை மட்டும் போதுமானதாக உள்ளது. 50% மானவர்கள் சொந்த வீட்டில் வாழ்கிறார்கள். ஆண், பெண் உட்பட 30% ஆனவர்கள் புகைபிடிப்பவர்களாக உள்ளனர். 04% மானவர்கள் நல்ல வேலை இல்லாதவர்களாக உள்ளனர். வயது வேறுபாடின்றி இளையோர் முதல் முதியோர் வரை வேலை செய்கிறார்கள்.

ஜப்பானின் பிரபலமான உணவு சுகியாகி (Sukiyaki) தேசியப் பறவை Green pheasant, தேசிய விலங்கு Carp Fish, தேசிய மலர் Chrysanthemum, தேசியக் கனி Japanese Persimmon, தேசிய மரம் Cherry blossom, தேசிய விளையாட்டு Sumo. இந்நாட்டு மக்கள் தன்னம்பிக்கை கூடிய மக்களென்ற காரணத்தால் இரண்டாம் உலகப் போரிலே அதிக பாதிப்புக்கள், இழப்புக்கள் நேர்ந்த போதிலும் ஜப்பான் மீள முன்னேற்றம் கண்டுள்ள நாடாகும். அந்நாட்டு மக்களிடம் காணப்படுகின்ற மனிதப் பண்புகள், மனித விழுமியங்கள், மனிதநேயம் போற்றுதற்குரியது. விடாமுயற்சி, தாராள தன்னம்பிக்கை, தேவையறிந்த தூரநோக்கு, உன்னத இலட்சியம், நாட்டுப்பற்று, நேரமுகாமைத்துவம், சிறந்த உணவுப்பழக்கம், சிக்கனத் தன்மை, எதிலும் பேணப்படும் தரம், அன்பாகப் பண்பாகப் பழகும் தன்மை, மரியாதையாகப் பேசும் தன்மை, வரவேற்கும் பண்பு, சமத்துவ முகாமைத்துவம், உணர்வு பூர்வமான பக்தி ஆகியவற்றை உள்ளடக்கிய சிறந்த பண்பாளர்கள். ஒருவர் எந்தத் தன்மையர் என்பதை மதிப்பீடு செய்வதற்கு அவரிடம் இருக்கக் கூடிய பண்பாட்டுக் கோலங்களே வெளிப்படையான ஆதாரங்கள் என்பதற்கு எடுத்துக்காட்டான மக்கள் வாழும் நாடு ஜப்பான். 'தேவையில்லாதபோது வாயை மூடிக்கொள்ளுங்கள்' என்ற பெஞ்சமின்பிராங்ளின் கூற்றுக்கு அமைய வாயைப் பயன்படுத்துபவர்கள் ஜப்பானியர்கள். உலக வரலாற்றிலே விஞ்ஞானத்தின் சுவர்க்கம் என வர்ணிக்கப்படும் ஒரு நாடு இதுதான். தொழில் நுட்பங்களோடு கைத்தொழில் துறையில் மேலோங்கியுள்ள நாடும் இதுதான். ஆடம்பரமற்ற அமைதியான தன்னடக்கமான நாடு. தன்னை பெரிதாக அலட்டிக் கொள்ளாத ஒரு நாடு. ஜப்பானின் '05 எஸ்' திட்டம் (Five S Plan) சகல நிலைகளிலும் பரவிக் காணப்படுகின்றது.

ஜப்பானில் நேர அட்டவணைப்படி தொடர்ச்சியாக ஓர் ஒழுங்குப் படிமானத்தைக் கடைப்பிடிப்பார்கள். ஒழுக்கம் என்பது எல்லாவற்றிலும் காணக்கூடிய ஒன்று. ஆடையிலிருந்து பாதணிவரை, சமயல் அறையிலிருந்து மலசலகூடம் வரை ஒழுங்கு, ஒழுக்கம் என்பவற்றின் நேர்த்தியைக் காணலாம். இந்நாட்டு மக்கள் எதற்கும் அஞ்சவும்மாட்டார்கள். சளைத்தவர்களும் அல்ல. நிலநடுக்கமோ, சூறாவளியோ எந்த அழிவு வந்தாலும் ஜப்பான் ஒருபோதும் தோற்றதாக வரலாறு இல்லை.

நம்பிக்கை என்பது ஏழாவது அறிவு. நம்பிக்கை இருந்தால் எதிர் நீச்சல்போட்டு வாழ்க்கையை வெல்லலாம் என்பதில் நம்பிக்கை உள்ளவர்கள் ஜப்பானியர். என்னால் முடியும், நான் படிப்பேன் என்ற தன்நம்பிக்கையை மனதில் விதைப்பவர்கள். ஜப்பான் நாட்டு மக்கள் பொதுவாக ஒரு காரியத்தில் ஈடுபடுவதற்கு ஐந்து நிமிடத்துக்கு முன் நம்பிக்கை தரக்கூடிய

உணர்வுகளைத் தமக்குள் ஏற்படுத்தும் பழக்கம் உள்ளவர்கள். இது அவர்களது முன்னேற்றத்தின் முதுகெலும்பாகும். 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் 25% மானவர்கள் உளர். ஜப்பானிய இளைய தலைமுறையினர் முதியவர்களைப் பராமரிக்க, அவர்களின் கருத்துக்களை செவிமடுக்க, அவர்களுடன் நேரம் செலவிட தயாராக இல்லை என்பதால், முதியவர்களைப் பராமரிக்க ரோபோக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. விமானநிலையங்களிலும் இவற்றைக் காணலாம். எந்தப் பிரச்சினைகள் எழுந்தாலும் பெரும்பாலும் தொழில் நுட்பத்தின் மூலம் தீர்வு எட்டப்படுகின்றன.

சுற்றுலாப் பயணிகள் அதிகம் செல்லும் நாடாகவும் ஜப்பான் விளங்குகிறது. கிரோசிமா, நாகசாகி எனும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இரு நகரங்கள் உள்ளன. இவை பார்க்கப்படவேண்டிய பகுதிகளாகும். 1945ம் ஆண்டு இரண்டாம் உலகப்போரின் கடைசிக் கட்டங்களில் எதிரிநாடுகள் ஜப்பானுக்கு எதிராக கிரோசிமா, நாகசாகி ஆகிய நகரங்கள் மீது அணுகுண்டு வீசின. இன்றும் அதன் தாக்கங்களை அங்கு காணலாம். நாகசாகி ஜப்பானில் உள்ள ஒரு பெரு நகராகும். இந்நகரத்தின் மீது இரண்டாம் உலகப்போரின்போது கிரோசிமா நகரத்திற்கு அடுத்து கொழுத்த மனிதன் எனும் அணுகுண்டு ஆகஸ்ட் ஒன்பதாம் திகதி அமெரிக்கா வீசியது. ஜப்பான் நகரான கிரோசிமா மீது சின்னப்பையன் எனும் அணுகுண்டு ஆகஸ்ட் ஆறாம் திகதி வீசப்பட்டது. இவற்றைப் பார்வையிட என அதிக மக்கள் வருடாவருடம் செல்கின்றனர்.

இதனைவிட இங்கு அழகான பியூஜிமலையைக் (Mount Fuji) காணலாம். இது இயற்கை அழகு பொருந்திய மலையாகும். இது டோக்கியோவின் தென்மேற்குப் பகுதியில் 100 கி.மீ. தொலைவில் உள்ளது. இது ஒரு புனித மலையாக, வரலாற்றுத் தளமாக விளங்கும் இம்மலை ஒரு கலாசாரத் தளமாகவும் விளங்குகின்றது. இம்மலை உலக வரலாற்றுப் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. இம்பீரியல் டோக்கியோ (Imperial Palace) பார்க்க மிக அழகான காட்சி. டோக்கியோவின் மிகவும் பிரபலமான மைதானம், இம்பீரியல் அரண்மனை, அதன் அழகிய பூங்காக்கள், சுவர்கள் மற்றும் நீர்ப்பாய்ச்சல் மூலம் சூழப்பட்ட பகுதி.

கிரோசிமா சமாதான நினைவுப் பூங்கா (Peace Memorial Park - Hiroshima) இங்கு பல சோகக் கதைகள் புதைந்து கிடக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் ஒரு மில்லியன் மக்களுக்கும் அதிகமானோர் இதை பார்வையிட வருகை தருகின்றனர். அணுகுண்டு வெடிப்பின் மையப் பகுதியில் இது உள்ளது. வண்ணமயமான செர்ரி மலர்களுடனும், பூங்காவிற்கான சிறப்பம்சங்களுடன் சமாதான அருங்காட்சியகம் காட்சி தருகின்றது. இத்துடன் பல கோயில்களை ஒருங்கே கொண்ட கோயில் நகரம் என ஒரு பகுதி உள்ளது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டடப் பகுதி. பல வரலாற்றுத் தெருக்களுக்கு மேலாக இந்த நகரம் ஏராளமான முக்கிய கோயில்களைக் கொண்டுள்ளது. நாராவின் அழகிய நகரம். யப்பானீஸ் காலாசாரத்தின் மையமாக விளங்குகிறது. கோபுகுஜி கோயில், ஏழு பெரிய கோயில்கள், பெரிய வெண்கல புத்தர் சிலை என்பவற்றுக்கு புகழ்பெற்ற பகுதியாக கோயில் நகரம் விளங்குகிறது

ஒசாகா கோட்டை (Osaka Castle). இது அழகிய அலங்கரிக்கப்பட்ட கட்டடங்களைக் கொண்ட பகுதி. பெரிய அலவிலான ஐந்து கதவுகள், 42 மீற்றர் உயரமான கோபுரம், 14 மீற்றர் உயரமான கல்தளம் உள்ள கோட்டை இது. யப்பானின் முதல் பௌத்த கோயிலும் இங்கு உள்ளது. யப்பானியப் போர்வீரர்கள் மற்றும் அரசியல்வாதிகள் டோயோடோமி, ஹிடியோஷி ஆகியோரால் இக்கோட்டை 1586ம் ஆண்டு கட்டப்பட்டது. இவை தவிர கிங்காகுஜி பொன்நிறக் கோயில் (kinkaku-ji Gold Colored), கியோமிசுடேறா கோயில் (Kiyomizu-dera Temple in Kyoto) என்பனவும் மிக அழகாக காட்சிதருகின்றன.

நான் ஜப்பானில் பலவற்றைப் பார்த்து வியந்ததுடன், பலவற்றை அவதானித்து வியந்ததும் உண்டு. எதையும் சும்மா பார்க்காமல் உணர்வுபூர்வமாக நோக்கின் அந்த நாட்டிலிருந்து பின்பற்ற வேண்டியவை பல என உணர்ந்தேன். சட்டம் இயற்றப்படுவதைவிட, வலுவாக நடைமுறைப்படுத்துவதுதான் முக்கியம். எந்த இடமாக இருந்தாலும் சுத்தமாகவும், கவர்ச்சியாகவும் இருக்க வேண்டும், உணவு உண்பதற்கல்ல வாழ்வதற்கு, பிள்ளைகளை வளர்க்காதீர்கள் வளர விடுங்கள், இயற்கையை நேசியுங்கள், மனித நேயத்தை வளருங்கள் இவற்றால் யாவும் சிறக்கும். இவை நான் ஜப்பானில் கற்றுக்கொண்ட பாடங்கள். ஜப்பானுக்கு சுற்றுலாப் பயணியாகப் போனதையிட்டும் மகிழ்கின்றேன்.

natkunalingam@thaiveedu.com

குடிசார் பொறியியல்: தோற்றமும் வளர்ச்சியும்

- அகணி சுரேஸ் -

இலங்கை

இலங்கை 1505ம் ஆண்டு முதல் 1948ம் ஆண்டு வரை மேற்குத் தேசங்களின் காலனித்துவ நாடாக இருந்துள்ளது. 1505ம் ஆண்டு முதல் 1658 வரை போர்த்துக் கீசரும், 1658ற்குப் பின்பு 1796ம் ஆண்டு வரை ஒல்லாந்தரும், 1796ற்குப் பின்பு 1948ம் ஆண்டு வரை ஆங்கிலேயரும் இலங்கையை காலனித்துவ ஆட்சி செய்தனர். இலங்கையில் 1505ம் ஆண்டிற்கு முன்பும் 1948ம் ஆண்டு வரை காணப்பட்ட காலனித்துவ ஆட்சியிலும் நிலவிய குடிசார் பொறியியல் கட்டமைப்புக்கள் பற்றிச் சுருக்கமாக ஆராய்ந்திருந்தோம்.

குவலயம் ஆளும் குடிசார் பொறியியல்: 09

மேற்கத்தேய ஆட்சியாளர்களால் ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்திகள், அவர்களின் வியாபார நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் இலங்கையின் குடிசார் பொறியியல் வரலாற்றில் முக்கியமானது என்ற வகையில் கிடைத்த தகவலை மையமாகக் கொண்டு எழுதியிருந்தேன். இந்தக் கட்டுரையில் குறிக்கப்பட்ட விடயங்கள் நிறைவானவை என்று சொல்லிவிட முடியாது. இலங்கையில் நிலவிய மன்னர்களின் ஆட்சிக் காலத்திலும், காலனித்துவ ஆட்சியின் கீழ் இலங்கையிருந்த காலத்திலும் இக்கட்டுரையில் குறிக்கப்படாத பல குடிசார் கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டன, பல கட்டடங்கள் அழிக்கப்பட்டன, சில கட்டமைப்புக்கள் காலத்திற்கேற்ற பராமரிப்பின்றியும், போர்களினாலும் சிதைவடைந்தன என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

பிரித்தானியர் காலத்தில் கட்டப்பட்ட மேலும் சில கட்டுமானங்களைக் குறிப்பிட்டு விட்டு இலங்கையில் சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையில் குடிசார் பொறியியல் அபிவிருத்திகளைப் பற்றி உரையாட விரும்புகிறேன்.

1833ம் ஆண்டிற்கும் 1948ம் ஆண்டிற்குமிடைப்பட்ட காலத்தில் ஆங்கிலேயர் பல்வேறு அரசியல் சீர்திருத்தச் சட்டத்துடன் ஆட்சி செய்தார்கள். இக்காலத்தில் வியாபார நோக்கத்திற்கு அப்பால் மக்களின் நலன் கருதிய அபிவிருத்திகளும் இடம்பெற்றுள்ளன என்று கூறலாம்.

கொழும்பு மாநகரசபைமண்டபம் கொழும்பு விகாரமகாதேவி பூங்காவிற்கு எதிராக அமைந்துள்ள இடத்தில் 1928ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. பிரதான வாசல் மண்டபத்தில் ஆறு புராதன கட்டமைப்பைக் கொண்ட, ஆறு கொராந்தியன் (Corinthian) தூண்கள் உள்ளன. பக்கமாக அமைந்துள்ள கட்டடத்தில் பத்து கொராந்தியன் தூண்கள் உள்ளன. ஒவ்வொரு தூண்களும் 38 அடி உயரம் கொண்டவை. இந்தக் கட்டடம் 354 அடி நீளம், 168 அடி அகலம், 168 அடி உயரம் கொண்டதாகும். இந்தக் கட்டடம் காலத்திற்கு காலம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு இன்றுவரை விசாலமாகக் காட்சியளிக்கிறது.

இலங்கையின் பழைய பாராளுமன்றக் கட்டடம் 1930ம் ஆண்டில் திறக்கப்பட்டது. இந்தக் கட்டடம் இலங்கை பொது வேலைகள் திணைக்களத்தின் (Public Works Department) மேற்பார்வையில் வோல்க்கர் சன்ஸ் ஒப்பந்த நிறுவனத்தால் கட்டப்பட்டது. இந்தக் கட்டடத்தின் கட்டடக்கலைஞராக ஒஸ்ரின் வூட்டிசன் பணிபரிந்தார். இந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கான செலவு 450,000 இலங்கை ரூபாயாக (1930ம் ஆண்டு) இருந்தது. 1983ம் ஆண்டு, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டையில் புதிய பாராளுமன்றம் தொடங்கியது.

1933ம் ஆண்டு யாழ் நூலகம் கட்டப்பட்டது. இந்தக் கட்டடம் 1981ம் ஆண்டில் காடையர்களால் தீவைத்து எரிக்கப்பட்டது.

வெளிநாட்டு அமைச்சு பயன்படுத்திய றிபப்ளிக் கட்டடம் பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது. இது கொழும்பு கோட்டையில் ஜனாதிபதி இல்லத்திற்கு அருகில் இருந்தது.

Jaffna Library

Old Parliament


Town Hall Colombo

கொழும்பு கார்கில்ஸ் நிறுவனம் 1844ம் ஆண்டு இலங்கையில் நிறுவப்பட்டது. 1896ம் ஆண்டு கார்கில்ஸ் நிறுவனம் கார்கில்ஸ் கட்டடத்தை வாங்கியது. கொழும்பு கோட்டையில் யோர்க் வீதியில் இருந்தது. இக்கட்டடம் வோல்க்கர் நிறுவனத்தால் 1906ம் ஆண்டில் மீளமைக்கப்பட்டது. கார்கில்ஸ் நிறுவனம் 1909ம் ஆண்டில் 32 ஐரோப்பியர்களையும், 600 இலங்கைத் தொழிலாளர்களையும் பணிக்கு அமர்த்தியிருந்தது.

1859ம் ஆண்டு ஹோல் பேஸ் கிறீன் (Galle Face Green) நிறுவப்பட்டது. ஹோல் பேஸ் ஹொட்டல்(galle Face Hotel) 1864ம் ஆண்டு நிறுவப்பட்டது.

1829ல் கட்டப்பட்ட கொழும்பு மாநகரபிதாவின் வதிவிடம், 1935ம் ஆண்டு கொழும்பு நூலகமாகப் பயன்படுத்தப்பட்டு 1990ம் ஆண்டு மீளமைக்கப்பட்டு கொழும்பு மாநகரபிதாவின் வதிவிடமாக மாற்றப்பட்டது.

கிரான்ட் ஓரியன்ரல் ஹோட்டல், தபிரபோன் ஹோட்டல் ஆகியவை இருந்த கட்டடம் 1875ம் ஆண்டு நிறுவப்பட்டது. கொழும்பு மருத்துவக் கல்லூரி இருந்த கட்டடம் 1870ம் ஆண்டு நிறுவப்பட்டது. கொழும்பு வைத்தியசாலை இருந்த கட்டடம் 1864ம் ஆண்டு நிறுவப்பட்டது.

1930ம் ஆண்டிற்கும், 1947ம் ஆண்டிற்குமிடையில் நீர்ப்பாசனத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு குளங்களையும், நீர் நிலைகளையும் புனருத்தானம் செய்யும் வேலைகள் நடைபெற்றன.

1930ம் ஆண்டிற்கும் 1947ம் ஆண்டிற்குமிடையில் பராக்கிரம சமுத்திரத் திட்டம், மின்னேரித்திட்டம், காகமை விஸ்தரிப்புத் திட்டம், நுவரவேவை விஸ்தரிப்புத்திட்டம், மினிப்பே திட்டம், ரிதி பெந்தி எலைத் திட்டம், கல்லோயாத்திட்டம், கந்தாய் விஸ்தரிப்புத் திட்டம், அல்லை விஸ்தரிப்புத்திட்டம், ஹருளுவேவத்திட்டம் ஆகிய நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்கள் ஆறு வருடத்தில் வருடந்தோறும் 20,000 ஏக்கர் புதிய காணிகளில் விவசாயம் செய்யப்படவேண்டும் என்ற நோக்கத்துடன் நடைபெற்ற குடிசார் பொறியியல் துறை சார்ந்த வேலைத்திட்டமாகும். முக்கியமாக கல்லோயாத்திட்டத்தால் 120,000 ஏக்கர் நிலத்திற்கு நீர் பாய்ச்சவும், 10,000 குதிரைச்சக்தி மின்வலு சக்தியையும் பெற முடிந்தது.

இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்பு...

கல்லோயாத் திட்டத்தின் அபிவிருத்தி சுதந்திரத்திற்குப் பின்னரும் தீவிரமாக நடைபெற்றது. இலங்கை சுதந்திரம் அடைந்தபின்னர் செய்த முதலாவது சாதனையாக கல்லோயாத் திட்டம் பார்க்கப்பட்டது. கல்லோயாத் திட்டத்தின் பிரதான நீர்த்தேக்கம் சேனநாயகா சமுத்திரம் ஆகும்.

1947ம் ஆண்டிற்கும் 1953ம் ஆண்டிற்கும் இடையில் பராக்கிரம சமுத்திரத் திட்டம், மின்னேரி விஸ்தரிப்புத் திட்டம், காகமை விஸ்தரிப்புத்திட்டம், நுவரவேவை விஸ்தரிப்புத்திட்டம், மினிப்பேத் திட்டம், ரிதி பெந்தி எலைத்திட்டம், கல்லோயாத் திட்டம், கந்தளாய் விஸ்தரிப்புத் திட்டம், அல்லை விஸ்தரிப்புத் திட்டம், ஹருளு-வேவைத் திட்டம் ஆகிய நீர்ப்பாசனத் திட்ட அபிவிருத்தி வேலைகள் நடை-பெற்றன.
1954ம் ஆண்டிற்கும் 1960ம் ஆண்டிற்குமிடையில் கல்லோயாத்திட்டம், கந்தளாய் அபிவிருத்தித் திட்டம், அல்லை விஸ்தரிப்புத் திட்டம், ஹருளுவேவா திட்டம், இரணைமடு விஸ்தரிப்புத்திட்டம், பதவியத் திட்டம், பாவற்குளத் திட்டம், கந்தலமைத் திட்டம் ஆகிய நீர்ப்பாசன அபிவிருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

கொழும்புத் திட்டம்:

பொதுநலவரசு நாடுகளைச் சேர்ந்த ஏழு தலைசிறந்த தலைவர்கள் 1950ம் ஆண்டு ஜனவரி மாதம் 9ம் திகதி கொழும்பில் சந்தித்தனர். தென்னாசிய, தென் கிழக்காசிய பிராந்தியங்களில் கூட்டுறவு அடிப்படையில் பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ள ஏற்படுத்தப்பட்ட இத்திட்டம் கொழும்புத்திட்டம் என அழைக்கப்பட்டது. கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் பலவருடங்களுக்கு சிட்னியிலும், லண்டனிலும் காப்பாற்றி வளர்க்கப்பட்டது. ஆரம்பத்தில் ஆறு வருடங்களுக்கென வகுக்கப்பட்ட பொழுதும் இத்திட்டம் 1971ம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டது. இத்திட்டம் பற்றிய மாநாடுகள் சிட்னியிலும், லண்டனிலும் நடைபெற்றன.

நன்கொடைப் பணம், கடன், உபகரண நன்கொடைகள், இலங்கையர்களுக்கு வெளிநாடுகளில் தொழில்நுட்பப் பயிற்சியளிப்பதற்கான வசதிகளையளித்தல், நடவடிக்கைகளின் தொழில்நுட்ப உதவி போன்ற பல உதவிகள் இலங்கைக்கு இத்திட்டம் மூலம் கிடைத்தன. இத்திட்டத்தினால் 194 பேர் பொறியியல் துறையில் வெளிநாடுகளில் பயிற்சி பெற்றனர். இத்திட்டத்தின் கீழ் இலங்கைக்கு அதிக உதவியை அளித்த நாடுகள் அவுஸ்திரேலியா, பிரித்தானியா, கனடா, இந்தியா, நியூசிலாந்து, ஐக்கிய அமெரிக்க

தொடர்தல் 31ம் பக்கம்

குடிசார் பொறியியல்...

30ம் பக்கத் தொடர்ச்சி...

நாடுகள் ஆகியவை ஆகும்.

இத்திட்டத்தின் கீழ் அவுஸ்திரேலியா 1965ம் ஆண்டிற்கிடையில் 92 இலட்சத்து 70 ஆயிரம் அவுஸ்திரேலிய டொலர்கள் பெறுமதியான நன்கொடைகளை வழங்கியது. இந்த நன்கொடைகளில் குடிசார் பொறியியல் சார்ந்த பல்வேறு அபிவிருத்திகளுக்கும் இந்த நன்கொடை உதவியது. இந்த நன்கொடை மூலம் பல நீர்ப்பாசனத் திட்டங்கள் புனரமைக்கப்பட்டன. பல கட்டடங்கள் கட்டப்பட்டன. மதுகங்கை வடிகாலமைப்பு, உவர்நீர் விஸ்தரிப்பு திட்டம் ஆகியனவும் இந்த நன்கொடை மூலம் உருவாக்கப்பட்டன.

கொழும்புத்திட்டத்தின் கீழ் 1965ம் ஆண்டிற்கிடையில் பிரித்தானியா 14,950,205 பவுண்கள் பெறுமதியான நன்கொடைகளை வழங்கியது. இத்திட்டத்தின் கீழும் குடிசார் பொறியியல் துறையும் பல நன்மைகளைப் பெற்றது.

கனடா நாட்டிடமிருந்து இத்திட்டத்தின் கீழ் இலங்கை 1966ம் ஆண்டிற்கிடையில் மூன்று கோடி பெறுமதியான நன்கொடைகளைப் பெற்றது. அந்த நன்கொடை மூலம் கல்லோயாத்திட்டம், கட்டுநாயக்க விமானநிலைய அபிவிருத்தி, கட்டுபெத்தை தொழில் நுட்பக்கல்லூரி உருவாக்கம் போன்ற பல குடிசார் பொறியியல் துறைசார் அபிவிருத்திகள் நடைபெற்றன.

இந்தியா நிபுணத்துவ உதவிகளை இத்திட்டத்தின் கீழ் வழங்கியது. ஜப்பான் 3 கோடி 50 லட்சம் யென் பெறுமதியான நன்கொடைகளை வழங்கியது. நியுசிலாந்து இத்திட்டத்தின் கீழ் 121 கோடி 60 இலட்சம் நியூசிலந்துப் பவுண்களை இலங்கைக்கு வழங்கியது.

ஐக்கிய அமெரிக்கா 8 கோடி 40 லட்சம் டொலர் பெறுமதியான நன்கொடையையும், கடன்வசதிகளையும் இத்திட்டத்தின் கீழ் வழங்கியது.

1954ம் ஆண்டு றப்பர் ஏற்றுமதி மூலம் 28.5 கோடி ரூபாய் வருமானத்தியை இலங்கை பெற்றது. இவ்வாறாக பல்வேறு வழிகளில் ஏற்றுமதியும் நடைபெற்று வந்ததால் இலங்கையில் குறிப்பிடத்தக்களவு அபிவிருத்திகள் நடைபெற்றன. இதனால் குடிசார் பொறியியல் துறையின் முக்கியத்துவம் வலுப்பெற்றது.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் 1967ம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டது. இந்தக் கட்டடம் காலத்திற்கு காலம் மறுசீரமைக்கப்பட்டு வந்துள்ளது.

14ம் நூற்றாண்டிலிருந்து பிரபல்யமான துறைமுகமாகக் காணப்பட்ட கொழும்புத் துறைமுகம் 1980ம் ஆண்டு புதிய பரிமாணங்களுடன் பாரிய கட்டமைப்பைக் கொண்டதாக உருவாக்கப்பட்டது.

பலாலி விமான நிலையம் 1947ம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டது. இரத்மலானை விமான நிலயம் இலங்கையின் முதலாவது சர்வதேச விமான நிலையம் ஆகும். இது 1935ம் ஆண்டில் கட்டப்பட்டது. திருகோணமலை துறைமுகம் வர்த்தகத் துறைமுகமாக 1956ம் ஆண்டிலிருந்து மாற்றம் செய்யப்பட்டது.

கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள நிதி, திட்டமிடல் அமைச்சு பயன்படுத்தி வரும் கட்டடம் 1930ம் ஆண்டில் 450,000 இலங்கை ரூபாய்கள் செலவில் கட்டப்பட்டது. இந்தக் கட்டடம் காலத்திற்கு காலம் பராமரிப்புகள் செய்யப்பட்டு வருகின்றது.

கொழும்பில் தேசிய நூதனசாலைக் கட்டடம் (National Museum) 1877ம் ஆண்டில் உருவானது. இந்தக் கட்டடத்தின் கட்டடக்கலைஞனாக சிமெத்தர் அவர்கள் பணியாற்றினார். இந்தக் கட்டடம் இத்தாலியக் கட்டடங்களின் வடிவமைப்பைக் கொண்டுள்ளது. 1942ம் தேசிய நூதனசாலைத் திணைக்களம் உருவாக்கப்பட்டு நாட்டின் பல பாகங்களிலும் கிளைகளைக் கொண்டதாக உருவாக்கப்பட்டது. கண்டியில் உள்ள நூதனசாலை 1942ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

National Museums

Cargills

Colombo Medical College

இலங்கை நில அளவைத் திணைக்களம் (Survey Department of Srilanka) 1800ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் திணைக்களம் இலங்கையில் தேசிய ரீதியான படங்களை உருவாக்கும் பொறுப்பினைக் கொண்ட அரச திணைக்களம். இந்தத் திணைக்களத்தின் பணிகள் குடிசார் பொறியியல் கட்டுமானங்களை உருவாக்கும் பணிகளுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருப்பது வழக்கம். இலங்கையில் உள்ள அரச திணைக்களில் மிகவும் பழமை வாய்ந்த திணைக்களங்களில் இதுவும் முக்கியமானது.

அரச குடிசார் பொறியியல் நிறுவனங்கள்:

இலங்கையில் உள்ள அரச நிதி சார்ந்த கட்டுமானங்களை இலங்கை பொது வேலைகள் திணைக்களம் (Public Works Department) மேற்பார்வை, திட்டமிடல், வடிவமைப்பு ஆகிய பொறுப்புக்களைக் கொண்டு இயங்கியது. பிற்காலத்தில் பல்வேறு திணைக்களங்கள் உருவாக்கப்பட்டன. இந்தத் திணைக்களம் 1796ம் ஆண்டிலிருந்து இயங்கியது.

நெடுஞ்சாலைகள் திணைக்களம் (Highways Department) 1860ம் ஆண்டு உருவானது. இது வீதிகள், பாலங்களின் கட்டுமானவேலைகளைச் செய்தது. இது பின்பு வீதிகள் அபிவிருத்திச் சபையாக 1983ம் ஆண்டிலிருந்து மாற்றம் செய்யப்பட்டது. கட்டட வேலைகளை கவனிப்பதற்கு கட்டடத் திணைக்களம் (Department of buildings) உருவாக்கப்பட்டு இன்று வரை இயங்கி வருகிறது. 1849ம் ஆண்டு இத்திணைக்களம் தொடங்கப்பட்டது.

நகர அதிகார சபை (Urban Development Authority) ஹோல் பேஸ் இனை பராமரிக்கும் பணியைச் செய்த நிறுவனம். உள்ளூர் வீதிகளின் பராமரிப்பை மாநகர, நகர சபைகள் கவனிக்கின்றன. இதனால் மாநகர, நகர சபைகளில் குடிசார் பொறியியல் பிரிவு உள்ளது.

நீர்ப்பாசனத் திணைக்களம் (Irrigation Department) நாடு முழுவதுமுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களைப் பராமரித்து வருகின்றது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை (National Water Supply and Drainage Board) 1965ம் ஆண்டிலிருந்து இயங்கி வருகின்றது. இலங்கையில் பாதுகாப்பான குடிநீர் வழங்கல், மற்றும் வடிகாலமைப்புச் சேவைகளை கவனிக்கும் அரச நிறுவனமாகவுள்ளது. இந்த நிறுவனத்தில் குறுகிய காலத்திற்குப் பணிபுரியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தது.

1962ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் (State Engineering corporation of Srilanka)பாரிய பொறியியல் கட்டுமானங்களிற்கான திட்டமிடல், கட்டுமான வேலைகள், பொறியியல் துறைசார்ந்த பயிற்சிகளை வழங்குகின்ற நிறுவனமாக விளங்குகின்றது. இந்த நிறுவனத்திலும் குறுகிய காலத்திற்குப் பணிபுரியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தது.

தேசிய கட்டட ஆய்வு நிறுவனம் (National Building Research Organization) 1984ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு குடிசார் பொறியியல் சார்ந்த பல்வேறு துறைகளில் ஆய்வு, மற்றும் குடிசார் பொறியியல் துறைசார்ந்த நிறுவனங்களுக்கான சேவைகளை வழங்குகின்ற நிறுவனமாக விளங்குகின்றது. இந்த நிறுவனத்தில் ஆறு வருடங்கள் பணிபுரியும் வாய்ப்புக் கிடைத்திருந்தது.

இலங்கை மகாவலி அதிகார சபை (Mahaweli Authority of Srilanka) மகாவலி கங்கையை பல்வேறு இடங்களுக்கும் விரிவாக்கம் செய்யும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட குடிசார் பொறியியல் துறை சார்ந்த அரச நிறுவனம் ஆகும். மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் (Central Engineering Consultancy Bureau) 1973ம் ஆண்டு அரச நிறுவனமாக உருவாக்கப்பட்டது.

அன்பான வாசகர்களே! குடிசார் பொறியியல் பற்றிய பல விடயங்களை இத்தொடர் கட்டுரை மூலமாக உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மனநிறைவடைகின்றேன். தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணக்கருத்துக்களையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

உசாத்துணை:

- *இலங்கையும், கொழும்புத்திட்டமும், 1966, அரசாங்க அச்சகப் பதிவேடு*
- *இலங்கையின் சாதனைகள் 3, 4 - அரசாங்க தகவல் பகுதி*
- *https://en.wikipedia.org/wiki/University_of_ Colombo*
- *https://en.wikipedia.org/wiki/National_Hospital_of_Sri_LankaR+References*
- *https://en.wikipedia.org/wiki/Town_Hall,_Colombo*
- *https://en.wikipedia.org/wiki/Former_General_Post_Office,_Colombo*
- *http://www.rda.gov.lk/source/about.htm*
- *http://www.builder.lk/directory/item/state-engineering-corporation-of-sri-lanka/*
- *https://en.wikipedia.org/wiki/Town_Hall,_Colombo*
- *https://en.wikipedia.org/wiki/Jaffna_Public_Library*
- *https://en.wikipedia.org/wiki/Ratmalana_Airport*
- *https://en.wikipedia.org/wiki/Jaffna_International_Airport*
- *https://en.wikipedia.org/wiki/Sri_Lanka_Ports_Authority*
- *https://en.wikipedia.org/wiki/Bandaranaike_International_Airport*
- *https://en.wikipedia.org/wiki/Trincomalee_HarbourR+History*
- *https://en.wikipedia.org/wiki/General_Treasury_Building*
- *https://en.wikipedia.org/wiki/National_Museum_of_Colombo*
- *http://cecb.lk/*
- *https://www.nbro.gov.lk/index.pup?lang=en*
- *http://www.waterboard.lk/*

(தொடரும்)

akani.suresh@thaiveedu.com

Call Me First and Say "YES" to Get Your Dream Home at a Dream Rate!

For all your Mortgage needs

சகல Mortgage தேவைகளுக்கும்
தமிழில் உரையாட என்னை அழையுங்கள்

Peter Sober
Manager, Mobile Mortgage Specialist
Paragon Sales Award
Dir: 416-275-3571
Pager: 1-866-767-5446 | Fax: 905-240-3882
Email: peter.sober@td.com

Your Smile Is My Best Return!

Purchase, Pre-Approvals, Refinances, Renewals and Switch, Builder Purchase, Home Line Of Credit, Self Employed, New Immigrants, Multi Rental Properties.

- 2019 Platinum Sales Award "Top 70 in the country"
- 2018 Gold Sales Award "Top 100 in the country"
- 2017 Paragon Sales Award "top 35 in the country"
- 2016 Gold Sales Award
- 2015 Platinum Sales Award
- 2014 Gold Sales Award

TD Banking can be this comfortable.

Five Branch Locations to serve you better
Scarborough, Markham, Ajax, Brampton & Mississauga

Ravi Kana Broker

COMMITTED TO EXCELLENCE

Call me now to get your HOME SOLD 416-725-7284

FOR SALE $585,000
Oshawa - Mary/Connaught 3+1 2

FOR SALE $599,000
Toronto - Markham & Bloomsbury 3+1 2

FOR SALE $699,900
Pickering - Taunton/Whites 3+1 4

FOR SALE $929,000
Whitby - Winchester/Thickson Rd N 2+1 4

FOR SALE $979,000
Ajax - Westney/Taunton 4+1 6

FOR SALE $1,199,999
Toronto - Midland/Danforth/St.Clair 4 4

FOR SALE $1,249,900
Toronto - Finch/Don Mills/Van Horne 3+1 2

FOR SALE $1,259,000
Toronto - Midland/Sheppard 5+1 4

MASTERS HALL OF FAME

CENTURY 21
Percy Fulton Ltd.

Centurion Award Winner
1999-2019

2911 Kennedy Rd. Toronto, ON M1V 1S8 Office 416.298.8200

Ravi Kana
Broker
Cell 416.725.7284 (RAVI)
ravikana33@gmail.com
www.ravikana.com

HOMELIFE HIGHER STANDARDS

Buy or Sell Your Home call me 24-7

Cell: 416 856 6900 Kathir Subramaniam Kathirgamanathan P.Eng. Sales Representative

www.kathirsubramaniam.com

HOMELIFE/CHAMPIONS REALTY INC. 416 281 8090 kathirhomes@gmail.com

With best compliments from

ஞானம்ஸ் ஸ்ரூடியோஸ்

GNANAMS STUDIOS Since 1987

Digital Prints from 16"x20" to 40"x60"

- Family Portraits
- Children Portraits
- Business Portraits
- Passport & Citizenship Photos
- Classic Weddings
- Arangetram
- Puberty Ceremony

New Location

Bus: 416.750.8118

www.gnanamsstudios.com

2687 EGLINTON AVE. E. SCARBOROUGH ON M1K 2S2 (BRIMLEY & EGLINTON ERA PLAZA NEAR CIBC BANK)

Digitally Redefined

BAYVIEW HOMES DESIGN LTD.

Dream Becomes Reality

Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management

Kathir
416 856 6900
Subramaniam Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml

DEVADAS LAW

PROFESSIONAL CORPORATION

Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills

Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
vasuki@vdlaw.ca

Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
devadas@vdlaw.ca

1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6

Next to RBC @ Kennedy & Ellesmere

Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca

Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

கனடியத் தமிழ்ச் சமூகத்தின் ஓர் ஆளுமை - ஒட்டாவா சுரேஷ்

- பரா பார்த்தீபன் -

பன்முக ஆளுமை கொண்ட ஒட்டாவா சுரேஷ் அவர்கள் ஒரு செயல்வீரர்! ஆற்றல் மிக்க பலரை இணைத்துத் தோழமை யுடன் காரியத்தை வெல்லும் விவேகம் கொண்டவர். புலத்தில் வாழும் பலர் தமது வேலைப்பளு குடும்பச் சுமை காரண மாகத் தொடர்ச்சியாகச் செயற்படுவது தடைப்படுவது இயல்பு. அவ்வாறான சூழல்களில் அவர்களைத் தனிப்பட்ட முறையில் அணுகி மாற்று வழிகளைக் கண்டறிந்து அவர்களைச் செயலாற்ற வைப்பதில் வல்லவர்.

அதேபோல தேவைப்படும்போது புதிய வர்களை இணைத்து திட்டங்களை வேகப் படுத்துவதில் கெட்டிக்காரர். இதனால் சிலர் குறைப்பட்டதும் உண்டு. எவரரயி னும் அவர்களின் கடந்தகால செயற்பாடு களை மதித்து அன்பாகப் பழகுவதால் சகலரிடமும் நன்மதிப்பைப் பெற்றார்.

பெரும்பாலான நேரங்களில் சமூகச் செயற் பாடுகள் மிகவும் கடினமானது. தொடர்ச் சியாகச் செயற்படுவதற்கு உள்ளுணர் வில் இருந்து இடையறாத உந்துதல் தோன்ற வேண்டும். நம்பிக்கைக்குரிய நட்பு வட்டமும் தேவை. அது அடிக்கடி மாற்றக்கூடியதல்ல. ஆதரவான புறச்சூழ லும் அமையவேண்டும். சுரேஷ் எல்லாவற் றையும் உருவாக்கிக் கொண்டார். வலிமை குறைந்த புலத்தின் செயற்பாடுகளுக்கு வலுச்சேர்ப்பது கடினமான பணி என்று தெரிந்தும் தூர நோக்கோடு செயற்பட்டார். பல கடினமான பாதைகளைத் தாண்டி எதிர்ப்புகளையும் முகம் கொடுத்து தமிழ்த் தேசியப் பணிகளில் முழு மனத்தோடு ஈடுபட்டார்.

1968ம் ஆண்டு யாழ்ப்பாணம் ஆவரங்கா லில் பிறந்த இவர், புத்தூர் சோமஸ்கந் தாவில் ஆரம்பக் கல்வியைப் பயின்றார்.

தமிழர் தமது தாயகப் பகுதிகளிலிருந்து சிதறியோடி உயிர்களைத் தற்பாதுகாத் துக் கொள்ளவும் எதிர்காலச் சந்ததிக- ளைக் காப்பாற்றவும் காலத்துக்குக் காலம் எம்மவர்கள் இடம்பெயர்ந்து கொண்டே இருந்தனர்.

இச்சூழலில் 1985ம் ஆண்டு ஜேர்மனிக் குப் புலம்பெயர்ந்தார் சுரேந்திரன் தம்பி ராசா. 1986ல் கனடா - ரொறன்ரோவுக்கு வந்த இவர் 1989ல் ஒட்டாவா பிரதேசத் திலுள்ள நிப்பியன் (Nepean), பகுதியில் குடியேறினார். ஆரம்ப காலங்களில் கனாற்றா (Kanata), நிப்பியன் பகுதிக- ளில் சில தமிழ்க் குடும்பங்களே வசித்து வந்தனர். துடிப்பும், அன்பாகப் பழகும் சுபாவமும் கொண்ட சுரேஷ் அவர்களுடன் விரைவிலேயே அறிமுகமானார். இதற்கு அவரது தாய்மாமனார் கலாநிதி இலகுப் பிள்ளை அவர்களும் முக்கிய காரணமா வார்.

இருவரும் இணைந்து தமிழ் உறவுகளுக் கிடையில் தொடர்புகளை ஏற்படுத்தும் முயற்சிகளில் இரண்டு விதமாகச் செயற் பட்டனர். தாயகத்தில் என்ன நடைபெறு கின்றன என்பதனை மக்களுக்குத் தெரி விப்பது, விடுமுறைக் காலங்களில் ஒரிரு முறை எல்லோரும் சந்திப்பது, அதில் கிடைக்கும் செய்திகளைக் கொண்டு கன டிய வெளிநாட்டு அமைச்சு அலுவலர்க ளைச் சந்தித்து இலங்கை அரசு மீது அழுத்தம் கொடுப்பது என இவரது ஆரம்பகாலப் பணிகள் தொடங்கின.

ஆரம்ப காலத்தில் ரொறன்ரோ பகுதியி லிருந்து தெரிவு செய்யப்படும் கனடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழர் மீது ஆதரவும் அனுதாபமும் கொண்ட வர்களாக இருப்பினும், முடிவுகளை எடுக் கும் பல கனடிய அதிகாரிகள் ஒட்டாவா வில் இருந்தமை அறிந்து கவலை கொண்ட சுரேஷ், அதற்காக எமக்குள் பலமான கட்டமைப்புகளை உருவாக்கத் தமிழரின் தாயகக் கனவுக்கு ஆதரவு தேடப் புறப் பட்டார். இதற்காக ஏனைய நகரங்களில் வாழும் தமிழ் அமைப்புகளுடன் இணைந்து செயற்படத் தொடங்கினார். அப்போது தான் 'ஒட்டாவா சுரேஷ்' என்ற பெயர் புழக்கத்தில் வரவானது.

1990களின் பின்னர் ஒட்டாவாவில் அமைந் துள்ள கால்ரன் பல்கலைக்கழகம், ஒட் டாவா பல்கலைக்கழகத்துக்கும் அதிகமான தமிழ் மாணவர்கள் உயர்கல்வி கற்பதற் காக வந்து சேர்ந்தனர். அதில் பலர்

தாயகம், தேசியம் தொடர்பாக ஒரே சிந் தனையில் இருந்தனர். பல்வேறு பல்க லைக்கழகங்களிலில் இருந்தும் துறை சார் மாணவர்கள் வேலைகளுக்காகத் தலைந கர் நோக்கி வந்தனர். அவர்களையும் இணைத்து செயல்படத் தொடங்கினார்.

இதில் பலர் படிப்புகளை முடித்து வேலை களையும் பெற்று அங்கேயே தமது குடும்ப வாழ்வைத் தொடர்ந்தனர். 2000ம் ஆண்டின் பின்னர் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியாலும், கனடிய அரச வேலைக- ளின் பொருட்டும் ஒட்டாவா நோக்கி பல தமிழ்க்குடும்பங்கள் நகர்ந்தன. இவ்வாறு தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சி கடந்த 30 ஆண்டுகளில் கணிசமாக உயர்வடைந் தது. எண்ணிக்கையில் நூற்றுக்கணக்கில் ஆரம்பித்த தமிழர் எண்ணிக்கை தற்போது கணிசமான அளவு வளர்ந்துள்ளது.

ஆரம்பத்தில் தான் வாழும் பிரதேசத்தில் உள்ள தமிழர்களின் அடிப்படை தேவை- களை இனங்கண்டு அதே சிந்தனையுள்ள மற்றவர்களையும் இணைத்து வேகமாக பல செயற்றிட்டங்களை நடைமுறைப்ப டுத்தினார். புதிய குடிவரவாளர்களின் பிரச்சினைகள், படிக்க வரும் மாணவர்க ளுக்குத் தேவையான உதவிகள், அறிவு ரைகள், குடும்பநல விடயங்கள், ஆரோக் கியமான வாழ்வியல் எனச் சமத்துவமான நல்ல சமூகமாக தமிழர்கள் கனடியத் தலைநகரில் வாழ்வதற்குரிய அடையா ளத்தை ஏற்படுத்தினார்.

தமிழர் ஒருங்கிணைப்பு குழு, முதியோர் சங்கம், மகளிர் அமைப்பு, மாணவர் அமைப்பு, கலை பண்பாட்டுப் பேரவை, ஊடகச் செய்திப் பிரிவு, கனடிய ஆலோ சனைக் குழு, தமிழ்மொழிக் கற்கை, தொழில்நுட்பப் பரிமாற்று, உளவியல் ஆலோசனைகள் என்று ஆரம்பித்து, அதற் குரிய திறமையான இணைப்பாளர்களை நியமித்து முன்னுதாரணமாகச் செயற்பட வைத்தார்.

முக்கியமாக கனடிய இராஜதந்திரிகள், இலங்கைக்குரிய அதிகாரிகள், பன்னாட்டு அரச சார்பற்ற அமைப்புகளை அழைத்து தாயகத்தில் நடக்கும் இன்னல்களை மட் டுமல்லாது எமது பாரம்பரிய கலை, பண்பாடுகளையும் தெரியப்படுத்துவதனூ டாக எமது தனித்துவமான வாழ்வியலை அவர்கள் அறிவார்கள் என்பதில் நம் பிக்கை கொண்டு பல முனைகளில் கன டிய சமூக செயற்பாடுகளை முன்னெடுத் திருந்தார்.

இதன் தொடர்ச்சியாகவே தமிழ் மரபுத் தைப்பொங்கல் நிகழ்வு, தாயகம் சார்ந்த இணையத்தளங்கள், ஆவணப்படுத்தல், பல்கலாச்சார வானொலி, இலங்கை தொடர்பான சர்வதேச மாநாடுகள் என பல செயற்பாடுகளில் முன்னின்று உழைத் தார். ஒட்டாவா தமிழ்க் கலை தொழில் நுட்பக் கல்லூரியின் வளர்ச்சியில் முன் னின்றமையும் குறிப்பிடத்தக்கது.

கனடாவில் தேசிய செயற்பாடுகளை முடக்கி தமிழ்மக்களிடம் பிரிவினைகளை ஏற்படுத்தும் சக்திகளிற்கு முற்றுப்புள்ளி யாக 2004ம் ஆண்டில் ரொறன்ரோவில் பொங்குதமிழ் நிகழ்வை ஒருங்கிணைத்தி ருந்தார். இந்நிகழ்வை நேரடியாக ஐரோப் பிய தாயக கலையகங்கள் ஒளிபரப்பின. பெருமளவிலான தமிழ் இளையோர்கள், மாணவர்கள் தாயகச் செயற்பாடுகளுடன் இணைந்து நிகழ்வை நிறைவேற்றினர். இதேவேளை தமிழர் பரப்புரைக்குழுவை ஆரம்பித்தார். இக்குழு அதற்குரிய மூல வளங்களை ஒருங்கிணைத்து, அடக்கு முறைகளுக்கு எதிரான வெளிநாட்டு அமைப்புகள், அரச சார்பற்ற அமைப் புகள் வெளிநாட்டுத் தூதுவர்கள், கன டிய நாடாளுமன்ற, செனற் சபை உறுப் பினர்கள் என 750ற்கும் மேற்பட்டவர்க ளுக்கு ஒவ்வொரு மாதமும் தேவையான தமிழர் தரப்புத் தரவுகள் அனுப்பி வைத் தது.

சிறீலங்கா அரச பயங்கரவாதம் தலைவி ரித்தாடி எமது தாயகத்தை அழித்துக் கொண்டிருக்கும் காலங்களில் நாடாளு மன்றத்துகுக்கு முன்பாகவும் கனடிய வெளிநாட்டு அமைச்சு அலுவலகத்துக்கு முன்பாகவும் பல வீதிப் போராட்டங்கள் நடைபெற்றன. இதற்கான அனுமதிப் பத் திரங்கள் பல இவரது பெயரிலேயே பெறப்படும். பலவேளைகளில் மக்கள் சலிப்படைவார்கள். மாற்றமில்லா அரச கொள்கைகளால் மனச்சோர்வு அடையும் மக்களுக்கு ஆறுதலளித்து வலுவான செயற்பாடுகளை நகர்த்துவார்.

தேவைகள் அதிகமாகவே கனடியத் தமி ழர் பேரவை உருவானது. ஆரம்பத்தில் ஏனைய நகரங்களில் பரப்புரைக் குழுக் களில் செயற்பட்டவர்களை இணைத்து தேவையான சட்டவரைவிற்கு உட்பட்ட தமிழர் பரப்புரை நிறுவனமாக பேரவை இயங்கியது.

கனடிய அரசியல் நீரோட்டத்தில் புதிய சவால்களை எதிர் நோக்கியது பேரவை. பேரவை ஏனைய நாடுகளிலுள்ள தேசிய அமைப்புகளுடன் இணைப்பை ஏற்படுத் தவும் சுரேஸ் பெரும் பங்காற்றினார்.

மனிதநேய, மனிதவுரிமைச் செயற்பாட்டா ளர்கள் பலரும் உள்வாங்கப்பட்ட நிலை யில் அவர்கள் ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டங்கள், ஐரோப்பியப் பாராளுமன்றச் செயற்குழுக் கூட்டங்கள், உலக வங்கி யின் இலங்கைக்கான நிதியுதவி கூட்டங் கள் என்பவற்றில் பங்குபற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றின் பின்ன ணியில் இருந்து சிறப்பாக இயங்கினார். இலங்கைக்கு உதவிக்கொண்டிருந்த பல உலக அமைப்புகளுக்கு தமிழர் தரப்பு நியாயங்களை எடுத்துரைக்கும் ஆவணங் களையும் அறிக்கைகளையும் அனுப்பி வைப்பார்.

தனது படப்பிடிப்பால் பலரையும் கவர்ந் தார். புலம்பெயர் தேசிய சஞ்சிகை எரி- மலை, தாயகத்தில் வெளிவந்த ஈழநாதம் பதிப்பிலும் சுரேனின் படங்கள் நிறைய இடம்பெற்றன. டிஜிற்றல் நிறக்கலவை- களை கற்றுக்கொள்ளவும் திறமையான வர்களுடன் சேர்ந்தும் பணியாற்றினார். அமரர் டிஜி கருணாவின் நுட்பமான திற- மைகளை தேசியம் சார்ந்த நவீன வடிவ மைப்புகளிற்கு பயன்படுத்தியமை பலரும் அறியாத விடயம்.

முள்ளிவாய்க்கால் படுகொலைகளுடன் முடக்கப்பட்ட தமிழ் இனத்தின் வேட்கை இவரையும் அதிகமாகப் பாதித்தது. சொல்லமுடியாத பெரும் துயரில் நீண்ட பெரும் கனவின் நிறுத்தம். எல்லோரை யும் போல ஆற்றுகைப்படுத்தவும் தெரி யாமல் சில ஆண்டுகள் அமைதியாக குடும்பத்துடன் நாட்களைக் கழித்தார்.

கடந்த 30 ஆண்டுகளாக தாயகம், தேசி- யம், சுயநிர்ணய உரிமை என்ற வரைய றைக்குள் தன்னை முழுமையாக நிறுத்தி வாழ்ந்த சுரேஷ், 15.5.2020 அன்று Smiths Falls நகரத்துக்கருகே நிகழ்ந்த வாகன விபத்தில் தன்னுயிரை ஈந்தார். அதுவும், விபத்தில் சிக்கித் தவித்த, முன்பின் தெரி யாத சிலரை காத்திட நினைத்து உதவிடச் சென்றவேளை இத்துயர நிகழ்வு நடை- பெற்றது.

பேராளுமை சுரேஷ் அவர்களுக்கு தலை தாழ்த்திய வணக்கத்தைத் தெரிவிப்பதோடு அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தி னர், உறவினர்கள், நண்பர்களது துயரி லும் பங்கு கொள்கிறோம்.

parthiban.p@thaiveedu.com

மேரி கியூரி: முதலாவது பெண் விஞ்ஞானி

- எஸ். பத்மநாதன் -

விஞ்ஞான உலகில் மேரி கியூரியை தெரியாத விஞ்ஞானிகள் எவருமே இருக்க முடியாது. வேதியியல் (Physics), இயற்பியல் (Chemistry) ஆகிய துறைகளில் இரண்டு தடவைகள் நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி. 866 ஆண்களும் 53 பெண்களும் இதுவரை நோபல் பரிசு பெற்றவர்களாவர். இவர்களுள் மேரி கியூரி 1903ல் இயற்பியலுக்கான விருதினையும், 1911ல் வேதியியலுக்கான விருதினையும் பெற்று உலக விஞ்ஞானிகளுக்கெல்லாம் முதன்மையானவராக விளங்கினார். முழு வாழ்வினையும் விஞ்ஞானத்திற்காகவே செலவிட்ட இவர் தனது கணவருடன் இணைந்து ஆய்வுகளை செய்தவராவார்.

'கியூரி மனிதவர்க்கத்திற்கு ஆற்றிய மகத்தான சேவைகளை அளவிட முடியாது. உயர்ந்த தரத்தில் அவரது ஆய்வுகள் இருந்துள்ளன. மிகவும் தைரியமாகவும் ஒரு இலக்குடனும் சரியான தீர்ப்புடனும் அவர் வெற்றி பெற்றுள்ளார். தனது வாழ் நாளில் ஒருவர் தனியானவராக இருந்து இவ்வாறான சேவைகளை செய்வது மிகவும் அருமையானதாகும் (It is very rare to find all these qualities in one Individual) என்பது விஞ்ஞானி ஐன்ஸ்ரீனின் கருத்தாகும்.

1943ல் வெளியிடப்பட்ட நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை, 'விஞ்ஞானங்களின் ரகசியங்களை கண்டறிந்தது மட்டுமல்ல, உலகில் மக்களையும் கொள்ளை கொண்டு விட்டார்' ('She not only conquered great secrets of science but hearts of the people the world over') என்று இவரைப் பற்றி எழுதியிருந்தது.

மேரி கியூரி நவம்பர் 7, 1867ல் போலந்து நாட்டில் வார்சோ நகரில் பிறந்தார். அவரது பெற்றோர்கள் ஆசிரியர்களாவர். இவர் பிறந்தவேளை போலந்து ரஷ்ய சாம்ராஜ்யத்தின் எல்லையாக இருந்தது. இவர் தனது 10வது வயதில் தாயை இழந்தார். அதன்பின் தனியார் பாடசாலையில் கல்வி கற்றார். தொடர்ந்து அவர் தனது படிப்பினை Floating University யில் கற்று 15 வயதிலேயே பட்டம் பெற்றார். தொடர்ந்து விஞ்ஞான கல்வியை மேற்கொள்ள விரும்பினார். அப்போது அவருக்கு இரண்டு பிரச்சினைகள் ஏற்பட்டன. ஒன்று பல்கலைக்கழகம் செல்லப் பணம் இல்லை. மற்றையது போலந்தில் பெண்கள் உயர் கல்வி பெற முடியாது. எனவே குழந்தைகளுக்கு ஆசிரியராக பணி செய்து பணம் ஈட்டினார். தனது சகோதரியின் படிப்புக்கும் இவரே உதவி செய்தார். மாலை நேரங்களில் சுயமாகவே வேதியியல், இயற்பியல், கணிதம் ஆகிய பாடங்களை கற்றார்.

1891ல் பரிஸ் நகரம் சென்று உயர்கல்வி கற்க முனைந்தார். பரிஸ் பட்டினத்தில் Sorbonne பல்கலைக்கழகத்தில் மேற்கூறிய 3 பாடங்களையும் பிரெஞ்ச் மொழியில் கற்றார். தனது 26 வயதில் பட்டம் பெற்றார். உயர்பட்ட படிப்பினையும் 27வது வயதில் நிறைவு செய்தார். அதன் பின்பு போலந்துக்கு திரும்பிச் சென்று வேலை தேட முயற்சித்தார், வேலை கிடைக்கவில்லை. மீண்டும் பரிஸ் நகருக்கு சென்று கலாநிதிப்பட்டம் பெற்றார். அங்கு அவருடன் கல்வி கற்ற Pierre Curie என்பவரை சந்தித்தார். 1895ல் இருவரும் காதல் திருமணம் செய்தனர்.

பியர் கியூரியும் ஒரு கலாநிதி பட்டதாரியாவார். அவர் தொல்துறை சார்ந்த விஞ்ஞானியாக விளங்கியதுடன் வேதியியல் துறையில் பேராசிரியரானார். தனது சகோதரனுடன் Piezoelectricity துறையில் கண்டுபிடிப்பினைச் செய்தார். அத்துடன் காந்தவியல் (magnetism) துறையில் ஆற்றல் கொண்டிருந்தார். தற்போது அழைக்கப்படுகின்ற வேதியியல் பாவிக்கப்படும் Curie Point என்பதனை அவரே கண்டறிந்தார். மேரியின் வாழ்வில் அவர் கணவருடன் சேர்ந்து செய்த ஆய்வுகள் அதிகமாகும்.

வேதியியல், இரசாயனவியல் துறைகளில் பட்டம் பெற்றிருந்த மேரி முதலில் யுரேனியம் பற்றி மேலாய்வு செய்தார். 1895ல் Wilhelm Roentgen என்னும் விஞ்ஞானி எக்ஸ் கதிர்களை (X-rays) கண்டு பிடித்திருந்தார். இத்துறையில் மேரியும் மேலும் ஆய்வுகள் செய்தார். கணவருடன் சேர்ந்து யுரேனியம் மூலம் கதிரூட்டங்களை (radiation) ஏற்படுத்த முயன்றார். தற்போது சத்திரசிகிச்சைக்கு உதவும் கதிரியக்க படங்களை இவ்வகையான கதிர் அலைகள் தீர்மானிக்கின்றன. இயற்பியில் துறையில் இது பெரும் சாதனையாகும். 1898ல் இருவரும் சேர்ந்து பொலோனியம், ரேடியம் மூலகங்களைக் கண்டறிந்தார்கள். 1903ல் மேரி, பியர், Henri Bequerel மூவருக்கும் இயற்பியில் துறையில் நோபல் பரிசு கிடைத்தது. பொருட்களில் உள்ள கதிரியக்கத்தைக் (radioactive) கண்டறிந்த முதல் விஞ்ஞானி இவராவர். கணவரோடு இணைந்து இந்நோபல் பரிசினைப் பெற்றாலும் நோபல் பரிசு பெற்ற முதலாவது பெண் விஞ்ஞானியாக உயர்ந்தார். தொடர்ந்து Davy Medal, Matteuci Medal, Actonian விருதுகள் கிடைத்தன.

1906ம் ஆண்டு தனது கணவரை விபத்தில் இழந்தார். ஆயினும் நிலைகுலையாத மேரி பேராசிரியர் பதவியை தொடர்ந்து வகித்தார். வேதியியல் துறையில் 1911ம் ஆண்டு நோபல் பரிசினை பெற்றார். இதுவும் கதிரியக்கம் பற்றிய ஆய்விலேயே கிடைத்தது, இது ரேடியம், பொலோனியம் பற்றிய ஆய்வாகும். மேரி கியூரியின் ஆய்வின் மூலம் பல்வேறு எக்ஸ்-கதிர்கள் கண்டறியப்பட்டன. பல கருவிகளும் உருவாகின. முதலாவது உலக யுத்தத்தின் போது அவசரகால வண்டிகள் மூலம் எக்ஸ்கதிர் கருவிகள் காவிச் செல்லப்பட்டன. சர்வதேச செஞ்சிலுவை சங்கம் தனது கதிரியக்க சேவையில் இவரது கண்டுபிடிப்புக்களை பயன்படுத்தியது. 1914ல் உலகயுத்தம் ஆரம்பித்த வேளை பெருமளவு நேரத்தை இந்த எக்ஸ்-கதிர் கருவிகளின் தயாரிப்பு சேவையில் ஈடுபடுத்தினார். காவிக்கெள்ளக்கூடிய கருவிகளை (portable instrument) உருவாக்கினார். இவை Little Curies என்று அழைக்கப்பட்டன. 2011ல் இவரது பரிசு பெற்ற 100வது வருடத்தை சர்வதேச வேதியியல் வருடமாக (International Year of Chemistry) ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம் செய்தது.

முதலாம்உலக யுத்தத்தின்பின்பு தனது ரேடியம் ஆராய்ச்சி நிலையத்திற்காக பணம் சேர்த்து 1921, 1929 ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்காவுக்கு சென்று ரேடியம் வாங்கவும் வார்சோவில் ஆராய்ச்சி நிலையத்தை நிறுவவும் அவரால் முடிந்தது.

இவருக்கு apastic anemia என்ற செங்குருதிக்கலங்களைப் பாதிக்கும் நோய் ஏற்பட்டது. இதற்கு காரணம், அவர் எந்த நேரமும் தன்னுடன் வைத்திருந்த கதிரியக்க பொருட்கள்தான் (radioactive materials) என்று கருதப்படுகிறது. எலும்பு மச்சையில் செங்குருதிக்கலங்கள் உருவாகுவது நின்றுபோனது. இதனால் உலகப் புகழ் பெற்ற இவ்விஞ்ஞானமேதை யூலை 4, 1934ல் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

அவரது உடல் அவரது கணவரது உடலுக்கு அருகில் Sceamx என்ற இடத்தில் புதைக்கப்பட்டது. 1995ல் இருவரது உடல்கள் மீளவும் எடுக்கப்பட்டு சிறந்த பிரசைகளுக்கான புதையிடமான Pantheon, Paris க்கு மாற்றப்பட்டது.

அவர் எப்போதும் கூறும் வாக்கியம் 'ஒருவர் என்ன செய்து முடிக்கப்பட்டுள்ளதென்பதனை ஒருபோதும் அவதானிப்பதில்லை. செய்யப்பட எஞ்சியுள்ளது என்ன என்பதனை மட்டுமே ஒருவர் பார்ப்பார்' ('One never notices what has been done; One can only see what remains to be done') என்கிறார்.

1994ல் மூலகங்களில் காலவரிசை ஏற்படுத்தப்பட்ட வேளையில் Curium என்ற பெயரில் ஒரு மூலகம் இணைக்கப்பட்டது. அதாவது Cm என்ற பெயரில் இது உள்ளது. மேரி கியூரி செய்த கதிரியக்க ஆய்வினை கௌரவிக்கும் விதமாகவே இப்பெயர் சூட்டப் பெற்றதாகும். மேரி கியூரியின் மகளான Irene Joliot-Curie தன் கணவருடன் இணைந்து ஆய்வுசெய்து 1935ல் வேதியியலுக்கான நோபல் பரிசு பெற்றுள்ளார். மற்ற மகளான Eve Curie உலகப் புகழ்பெற்ற எழுத்தாளராவர்.

இவருடைய பெயரில் பல ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன. பரிசில் Curie Institute உள்ளது. Curie Institute மருத்துவ உயிரியியல் துறையில் உலகப் பிரசித்தி பெற்றதாகும். ஐரோப்பிய யூனியன் இளம் விஞ்ஞானிகள் சேவையாற்றுவதற்காக Marie Sklodowska - Curie Actions Fellowship Program என்பதை உருவாக்கியுள்ளது. போலந்தில் Pierre and Marie Curie University, புற்றுநோய் ஆராய்ச்சிக்கான Marie Sklodowska - Curie Institute of Oncology அமைக்கப்பட்டன. 1948ல் Marie Curie Cancer Care நிறுவப்பட்டுள்ளது. இரு அருங்காட்சியகங்கள் அவரது பெயரை வைத்துள்ளன. Maria Sklodowska - Curie Museum வார்சோவில் நிறுவப்பட்டது. பரிசில் Musee Curie நிறுவப்பட்டது. போலந்தின் Lwow Polyytechnic, Poznan Univeristy, Krakow's Jagiellonian Univeristy, Warsaw Polytechnicஆகிய கல்வி மையங்கள் இவருக்கு கௌரவ கலாநிதிப்பட்டங்களை வழங்கின. அமெரிக்காவில் Iota Sigma Pi எனப்படும் பெண் விஞ்ஞானிகள் சங்கம் இவரை அங்கத்தவர் ஆக்கியது. Polish Chemical Society யில் கௌரவ உறுப்பினரானார்.

உலகம் முழுவதிலும் நினைவு கூரப்படும் விதத்தில் விஞ்ஞான உலகம் இவரைக் கௌரவித்துள்ளது. குறிப்பாக ஜெர்மனியில் 1936ல் நிறுவப்பட்ட Monument to the X-Ray and Radium Martyrs of all Nations இவரது பெயரைப் பொறித்துள்ளது. தனது உயிரை ரேடிய கண்டுபிடிப்புக்காக தியாகம் செய்தமைக்காகவே இக் கௌரவம் இடம் பெற்றுள்ளது. 2007ல் பரிசில் உள்ள கடைவழி மெட்ரோ நிலையமொன்றிற்கு மேரி கியூரி, பியர் கியூரி இருவரது நினைவாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இவரைப்பற்றி பல நூல்கள், திரைப்படங்கள் வெளிவந்தன. Unversity of Buffalo நூலகத்தில் அவரது நினைவுச் சின்னம் உள்ளது. அவரது மகளான Eve Curie, Madame Curie: A Biography என்ற நூலை வெளியிட்டுள்ளார். Francois Giroud என்பவர் Marie Curie: A Life என்ற நூலை எழுதியுள்ளார். 2005ல் Barbara Coldsmith என்பவர் Obsessive Gemius The Inner World of Marie Curie என்ற நூலை எழுதியுள்ளார்.

இவருடைய வாழ்க்கை-வரலாறு பல திரைப்படங்களாக வந்துள்ளது. பிரெஞ்ச் நடிகை Isabella Hubbert கியூரியாக நடித்துள்ளார். Greer Garson Madame Curie திரைப்படத்தில் நடித்து ஒஸ்கார் விருதுக்குப் பரிந்துரை செய்யப்பட்டார். 2016ல் Marie Curie: The Courage of Knowledge என்ற திரைப்படம் ஐரோப்பாவில் வெளியானது. Radio Active என்ற படம் 2019ல் வெளியானது.

அவரது உருவப்படங்கள் வங்கி அட்டைகள், முத்திரைகள், நாணயங்கள் என்பவற்றில் உலகரீதியில் பதிவு பெற்றுள்ளன. மாலி, ரோகோ குடியரசு, கினியா குடியரசு அவரது படத்தை முத்திரைகளில் வெளியிட்டன. வார்சோவில் உள்ள பாலம் ஒன்று அவரது பெயரைக் கொண்டுள்ளது. ஜனவரி 2020ல் ஆர்ஜென்ரீனா micro-satellite ஒன்றுக்கு மேரி கியூரியின் பெயரை சூட்டியுள்ளது.

மேரி கியூரியின் வாழ்க்கை வரலாற்றினை நோக்கும்போது விஞ்ஞானியான இவர் ஏனைய விஞ்ஞானிகளுக்கெல்லாம் ஒரு கலங்கரை விளக்காகத் திகழ்ந்தது தெளிவாகிறது. எத்தனையோ துன்பங்களுக்கூடாக தனது வாழ்வையே ஆய்வுத்துறையில் அர்ப்பணித்த அவரது தற்துணிவு எவருக்கும் இருந்ததில்லை. அவரது ஒவ்வொரு அங்குல நகர்வும் விஞ்ஞான உலகிற்கானதேயாகும். அவரால் கண்டுபிடிக்கப்பட்ட ரேடியம், பொலோனியம் மற்றும் கதிரியக்கம் என்பன இன்று வரை நிலைபேறுடையனவாக உள்ளன. சாதாரண ஆசிரிய குடும்பத்தில் பிறந்து தலை சிறந்த விஞ்ஞானியாக மாறிய இவரது கண்டுபிடிப்புக்கள் இன்று வரை மருத்துவ உலகில் இன்றியமையாதவையாக இருக்கின்றன.

pathmanathan.s@thaiveedu.com

People don't plan to fail,
but they do fail to plan
Super Visa Insurance
Disability Income Insurance
Critical illness Insurance
Mortgage Insurance
No medical exam Life Insurance
Permanent Life Insurances
Term Life Insurance
Travel & Visitor Insurance
RRSP Loan / Investment
RESP
You don't have to take life the way it comes to you...
You can design your life to come to you the way you want!
நாளை நம் கையில்
இன்றே செயற்படுங்கள்
As an Independent Insurance Broker,
I will shop around for you and get you the best rate...
Super Visa Insurance
100% Refund
Guna Thuraisingham M.A.Sc (Eng.), P.Eng.
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
Tel: 905 230 4986 | guna@gtbrokers.ca
www.gtbrokers.ca
INDUSTRIAL ALLIANCE
RBC Royal Bank
Assumption Life
Desjardins
Manulife
Foresters

நல்லதொரு மாற்றம்
உங்கள் வீட்டில் இருந்து ஆரம்பமாகட்டும்...
TORONTO
$339,000
BEDROOM - 2
WASHROOM - 2
PICKERING
$574,900
BEDROOM - 3
WASHROOM - 3
PICKERING
$579,900
BEDROOM - 4
WASHROOM - 2
TORONTO
$775,000
BEDROOM - 3+1
WASHROOM - 3
TORONTO
$849,900
BEDROOM - 3+2
WASHROOM - 2
CENTURY 21
Innovative Realty Inc.
BROKERAGE
ஜெயந்தன் சிவராம்
Jeyanthan Sivaram
Sales Representative
647-891-5515
emailjeyanthan@gmail.com
சிவவதனி பிரபாகரன்
Sivavathani Prabaharan
Sales Representative
647-678-2599
sprabaharan2011@gmail.com
2250 Markham Rd #3, Toronto, ON M1B 2W4 | Off: 416 298-8383 | Fax: 416-298-8303

G.U. போப் - இருநூறு ஆண்டுகள்

- குமார் புனிதவேல் -

கனடாவின் முதல் தமிழ் பேரறிஞர் G.U. Pope அடிகளார் 1820ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் திகதி பிறின்ஸ்-எட்வட்-ஐலன்ட் மாகாணத்தில் பிறந்தார். அவர் சிறு வயதிலேயே குடும்பத்தாருடன் இங்கிலாந்திற்கு குடிபெயர்ந்தார். தனது பதின்நான்காவது வயதில் மதச்சேவை செய்வதற்காக Society for the Propagation of the Gospel உடன் இணைந்து தென்-இந்தியாவிற்குச் சென்றார். மொழிகள் கற்பதில் ஆர்வம் கொண்ட போப் அடிகளார் இங்கிலாந்திலேயே தமிழ் கற்பதை ஆரம்பித்து கப்பற்பயணத்தின் போதும் பின் தொடர்ந்தும் தமிழைக் கற்று வந்தார். இந்தியாவில் சில பாடசாலைகளை நிறுவி அங்கு லத்தீன், ஆங்கிலம் ஹீப்ரூ, கணிதம், மற்றும் தத்துவம் ஆகிய பாடங்களைக் கற்பித்தார். சுதேச மொழிகளை ஆர்வத்துடன் கற்று தமிழ், தெலுங்கு ஆகிய தென்மொழிகளிலும் வடமொழியான சமஸ்கிருதத்திலும் பாண்டித்தியம் பெற்றார்.

போப் அடிகளார் 1841ம் ஆண்டில் இங்கிலாந்துத் திருச்சபையின் போதகராக நியமிக்கப்பட்டார். அதே வருடத்தில் திருச்சபை போதகர் ஒருவரின் மகளான Mary Carverஐத் திருமணம் செய்து கொண்டார். புதுத்தம்பதிகள் திருநெல்வேலியில் தொண்டாற்றினர். அவரது மனைவியின் மரணத்தின் பின் போப் அடிகளார் மட்ராஸிற்கு குடிபெயர்ந்து வாழ்ந்தார். சில காலங்களின்பின் அவர் G.Van Somerenன் மகள் Henrietta Page என்பவரை மணந்து 1849ல் இங்கிலாந்து திரும்பினார்.

1851ல் அவர் மீண்டும் இந்தியாவிற்கு திரும்பி தஞ்சாவூரிலுள்ள St. Peters பாடசாலையில் ஆசிரியத்தொழிலைத் தொடர்ந்தார். அவர் அப்பிரதேசத்தில் உள்ள மற்ற மதகுருமாருடன் தொடர்ந்தும் பிணக்குக்குள்ளாகினார். இது பற்றி Bishop Caldwell 'போப் அடிகளாருடைய கடும்போக்குவாதமே சக மதகுருமாருடன் பிணக்குகளை உண்டு பண்ணியது' எனக் குறிப்பிட்டுள்ளார். 1881ம் ஆண்டு போப் அடிகளார் இங்கிலாந்து திரும்பி ஒக்ஸ்ஃபோட் பல்கலைக்கழகத்தில் தமிழ், தெலுங்கு மொழிகளின் விரிவுரையாளராகவும் பல்கலைக்கழக மதகுருவாகவும் செயற்பட்டார்.

1886ம் ஆண்டு புரட்டாதி மாதம் முதலாம் திகதி திருக்குறள் மொழிபெயர்ப்பை 'The Sacred Kural' எனும் பெயரில் வெளியிட்டார். அப்புத்தகத்தில் அருஞ்சொற்றகராதி, மொழிபெயரப்புச் சொற்கள், நூல்-அறிமுகம், முகவுரை என்பற்றுடன் F.W. Ellis அவர்களுடைய ஆங்கில மொழிபெயர்ப்பும், Constanzo Beschi அடிகளாருடைய லத்தீன் மொழிபெயர்ப்பும் இணைந்திருந்தது. (Beschi அடிகளார் காவி உடுத்து கிறிஸ்தவ மதத்தொண்டாற்றினார். இவருக்கு வீரமாமுனிவர் எனும் தமிழ்ப்பெயரும் இருந்தமை இங்கு குறிப்பிட வேண்டும்.) The Sacred Kural புத்தக அறிமுகத்தில் குறிப்பிட்டுள்ள விடயம் மிகவும் சிந்திக்க வேண்டியது. அவர் 'மேற்குலகம் கற்பிக்க வேண்டிய பல விடயங்களை கற்பித்துத் தரலாம், ஆனால் குறளைச் சரிவரக் கற்றால் அவர்கள் அறம் பற்றியவை அனைத்தும் அறிவார்கள். அதில் மாற்றத்திற்கு இடமில்லை' என்று குறிப்பிட்டுள்ளார்.

திருக்குறளைத் தொடர்ந்து 1893ம் ஆண்டில் நாலடியார் நூலை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தார். இந்நூலின் அறிமுகத்தில் தனது மொழிபெயர்ப்பதற்கான காரணத்தை 'தமிழ் இளைஞர்கள் ஆர்வத்துடன் ஆங்கிலத்தை கற்றுத் தேறும் வேளையில் தங்கள் அருமையான சொந்தப்பாஷையை கற்காமல்விட்டு பின் அறிய ஆவல் வரும் வேளையில் இந்த மொழிபெயர்ப்புகள் மிக்க பயனுடையதாக இருக்கும்' என்று குறிப்படுகிறார். இன்று புலம் பெயர் தமிழருக்கு இவர் வாக்கு மிகப் பொருந்தும்.

நாலடியார் மொழிபெயர்ப்பைத் தொடர்ந்து அவரது மிகச் சிறந்த தொண்டாகிய திருவாசக மொழிபெயர்ப்பு 1900ம் ஆண்டில் பிரசுரமானது. திருவாசக முன்னுரையில் 'அழிந்து போகும் இனத்தின் மொழி அழிந்து போக விடலாம். ஆனால் தமிழ் மொழியை அப்படிச் சொல்ல முடியாது. பேரருள் சாட்சியாக தமிழர்கள் தமது

மொழியைப் பற்றி வெட்கப்படுவதை தவிருங்கள்.' என்று குறிப்பிட்டுள்ளார்.

திருவாசக மொழிபெயர்ப்பைப் பற்றி குறிப்பிடுகையில் 'நான் இக்குறிப்பினை எனது எண்பதாவது பிறந்ததினத்தில் வெளியிடுகிறேன். எனது பழைய ஆவணங்களை புரட்டிப் பார்த்ததில், எனது முதல் தமிழ்க்கல்வி 1837ல் ஆரம்பமாகி உள்ளது. இப்பதிப்புடன் எனது நீண்ட கல்விக்கும் தமிழ்ப்பற்றுக்கும் முடிவு வருகிறதென்று நான் நினைக்கிறேன். எனது நீண்ட இலக்கியப்பணியை இதன் மூலம் முடிவுக்குக்கொண்டு வருகிறேன்.' 1906ல் Royal Asiatic Society அவருக்கு வாழ்நாள் சாதனை தங்கப் பதக்கம் வழங்கியது.

அவரது எண்பதாவது வயதில் வெளிவந்த திருவாசக மொழிபெயர்ப்பினை அவரால் செய்யப்பட்ட மிக உயர்ந்த இலக்கியச் சாதனையாகக் கொள்ளலாம். மற்றைய இரு முக்கிய மொழிபெயர்ப்புகளில் போன்று திருவாசகத்திலும் ஒரு முக்கிய விடயத்தை தெரியப்படுத்தியுள்ளார். சில வருடங்களுக்கு முன், இந்தப் பதிப்பு பற்றி சற்றும் எதிர்பார்க்காத வேளையில் நானும் Balliol கல்லூரியின் அதிபர் மறைந்த Dr. Jowett அவர்களும் பள்ளிக்கூட முன் சதுக்கத்தில் அளவளாவிக் கொண்டிருந்தோம். எங்கள் சம்பாஷணை தமிழ் இலக்கியம், தத்துவம் போன்றவற்றிற்கு திரும்பியது. நெடும் சம்பாஷணையைத் திடீர் என திசை திருப்பி Dr. Jowett 'நீர் அதைப் பதிப்பிக்க வேண்டும்' என்று என்னிடம் சொன்னார். நான் அதற்கு பதிலாக 'ஐயா, நான் நித்தியமானவனல்ல, அதுவும் ஒரு நெடிய வேலை, நெடும் காலம் எடுக்கும்' என்றேன். இன்றும் என் கண் முன்னே நிற்கிறார், முழு நிலவு முகத்தில் பிரகாசிக்க அவரது வெண்முடி மினுங்க, தனது முகத்தை என்னை நோக்கி திருப்பி எனது தோளில் கை வைத்தபடி கனிவான குரலில் சொன்னார் 'இது போன்ற ஒரு புனிதமான செயலில் ஈடுபடுவது உனக்கு நீடிய ஆயுளைத் தரும். அந்த வேலை முடியும்வரை உயிருடன் இருப்பாய்' என்றார். அவ்வேளையில் நான் அவர் சொன்னதை நம்பவில்லை, ஆனால் அவருடைய தீர்க்கதரிசனமான வார்த்தைகள் நான் சலிப்படையும் வேளையில் ஊக்கத்தைத் தந்ததுடன் அவர் வார்த்தையும் பலித்து விட்டது. அவர் இறந்து விட்டார்.

போப் அடிகளார் தமிழ் கற்பதை ஆரம்பித்த காலத்தில் யாரோ அவரிடம் பொதுவாக தமிழ் புலவர்களும் அறிஞர்களும் வறுமை வாழ்வு வாழ்வர்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் போப் அடிகளார் பெரும் பணக்காரராய் வராவிடினும் வறுமையில் வாடவில்லை என்பதுடன் தனது நுண்ணிய அறிவை மகிழ்ச்சியுடன் தமிழுக்காக அர்ப்பணித்தார்.

அவருடைய 88 வருட நீண்ட வாழ்க்கைக்குப் பின் பிரப்ரவரி மாதம் 12ம் திகதி 1908ம் ஆண்டில் இறையடி சேர்ந்தார். ஒக்ஸ்ஃபோட் இல் உள்ள கல்லறையில் 'ஒரு தமிழ் மாணவன்' எனப் பொறிக்கப்பட்டுள்ளது.

அவர் ஒக்ஸ்ஃபோட் பல்கலைக்கழகத் தில் ஆற்றிய இறுதிப் பிரசங்கத்தின் பிரதியுடன் கீழ் தரப்பட்டுள்ள கடித்தை மதுரையில் வசிக்கும் தனது நண்பர்களுக்கு தனது கையால் எழுதி அனுப்பியுள்ளார்.

26 Walton Bell Road
Oxford, Dec 25, 1907

My dear Friend,

In the heart of this my last sermon, lie truths that harmonize with all that is best in Thiruvachagam and Siva-nyanam (Siva - gnana bodham).

I am very old, May the Father bless you and yours,

Ever truly your friend,
G.U. Pope

மதிப்பிற்குரிய G.U Pope அடிகளார் உலகலாவிய தமிழர்களால் என்றெண்டும் நினைவில் வைக்கப்படுவார்.

G.U. Pope அடிகளாருடைய நூல்கள்:

- கிறீஸ்துவத் தத்துவத் தீபிகை
- A first catechism of Tamil Grammar - இலக்கண வினா விடை முதற் புத்தகம் 1888.
- A Second Catechism of Tamil Grammar.
- A larger grammer of the Tamil language in both dielects Ed2 1859.
- A Poetical Anthology with grammatical notes pond vocabulary Ed2 1859.
- Hand book of ordinary dialect of Tamil Languge 1885.
- Hand book Part II Key to the exercise with notes on Analysis.
- Hand book Part III Compendious Tamil - English Dictorany.
- Hand Book Part IV An English - Tamil Dictorany.
- Hand Book Part V A Tamil Prose Reader adapted to the hand book.
- A History of India இந்து தேச சரித்திரம்.
- The Sacred Kural of Thiruvalluva Nayanar with introduction, Grammar, Translation and notes, Lex.
- The Naladiyar or four hundred Quatrains in Tamil with introduction, Translation and notes, Critical, Philosophical and Explanatory, to which is added a concordance and Lexiconwith authorities from the oblest Tamil writers (1893).
- The Thiruvasagam or Sacred Utterances of the Tamil poet, saint and sage Manikka vasager. Text notes translation etc, complete (1900).
- History of England - இங்கிலாந்து தேச சரித்திரம் (1858).
- First Lessons in Tamil or An Introduction to the comman dialect of the language Ed5 (1891).

உசாத்துணை:

- *https://en.wikipedia.org/wiki/George_Uglow_Pope.*
- *https://tamilnation.org/literature/pope.htm.*
- *https://en.wikipedia.org/wiki/Constanzo_Beschi.*
- *https://royalasiaticsociety.org/the-triennial-gold-medal.*

kumar.punithavel@thaiveedu.com

Commercial Mortgages
Business Loans
Business Line of Credit

for

Buying new business
Improve your business
Operating capital
Commercial real estate investments

Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...

KAPITAL CARE
MORTGAGE INC. Lic#12623

Rambo Tharmalingam
Mortgage Agent Licence # M08008479
647-290-3416

Kethes Sivasubramaniyam
Licence # M08006105 Mortgage Agent
416-873-5780

5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5

"

BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE

Visit your one stop solution center
for all your super visa insurance needs...

SuperVisa.Today

www.supervisa.today #416 321 6000

இலக்கணவித்தகர் பண்டிதர் இ. நமசிவாய தேசிகர் ஐயா

- வே. விவேகானந்தன் -

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே, தமிழ் மொழியின் செழிப்பினை, நிலைபெறச் செய்த கல்விச் சான்றோரில் இலக்கணவித்தகர், பண்டிதர் இ. நமசிவாய தேசிகர் ஐயா அவர்களின் பங்களிப்பு அளவிடற்கரியது.

மயிலிட்டி தெற்கு, கட்டுவன் கிராமத்தில், இராமசாமி ஐயர் - பர்வதம்மாள் இணையருக்கும் மகனாக நமசிவாய தேசிகர் அவர்கள், 1915ம் ஆண்டு நவம்பர் மாதம் பன்னிரெண்டாம் திகதி பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியைக் குரும்பசிட்டி மகாதேவா வித்தியாசாலையிலும் (1975ம் ஆண்டிலிருந்து, பொன் பரமானந்தர் வித்தியாசாலை என அழைக்கப்படுகிறது.)உயர்தரக் கல்வியை, தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும், ஆசிரியர் தராதரப் பயிற்சி நெறியினை திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் பூர்த்தி செய்தார். அட்சரகணிதம், கேத்திரகணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களில் தேர்ச்சி பெற்ற இவர், சித்திரம் வரைவதிலும் கைதேர்ந்தவர். ஆசிரிய பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்ததும், மயிலிட்டி தெற்கு பாலர் ஞானோதய வித்தியாசாலையில் ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்தார். அதேவேளை தமிழ்மொழியிலும் சமஸ்கிருதத்திலும் ஆர்வம்கொண்ட இவர், வர்த்தலைவிளானில் தமிழ் குடில் வைத்து, தமிழையும் சைவசமயத்தையும் போதித்து வந்த பிரம்மஸ்ரீ, வித்துவசிரோன்மணி சி. கணேசையரிடம் மாணவனாக, பிரவேச பண்டிதர் வகுப்பில் சேர்ந்தார். அவரது கடும் முயற்சியால் ஐயரின் முதல் மாணவனாகத் திகழ்ந்தார். 1938ம் ஆண்டு பங்குனி மாதம் மதுரை தமிழ் சங்க பண்டிதர் பரீட்சையிலும் சிறப்புத் தேர்ச்சி அடைந்து, பண்டிதர் என்ற பட்டதையும் பெற்றுக் கொண்டார். கணேசையரின் முதுமைக் காலத்தில் அவர் முன்னிலையிலேயே, அவருக்குப் பதிலாக பண்டித வகுப்பு மாணவர்களுக்குக் கற்பித்து, அவரது பாராட்டையும் பெற்ற பெருமகனாவார். இவரது அறிவுத் திறனையும், கற்பிக்கும் ஆற்றலையும் கண்டு வியந்த, வித்துவசிரோன்மணி சி. கணேசையர், தேசிகர் என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தார்.

யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தின், இலக்கணச் செம்மையைப், பலருக்கும் ஊட்டி வந்த பண்டிதர் இ. நமசிவாய தேசிகர் அவர்கள், பின்னாளில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களின் பாட்டனார் சின்னத்தம்பி உடையாரால், வீமன் காமம், டச்சு வீதியில் 1891ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சுப்பிரமணிய வரோதய வித்தியாசாலையில், (தற்போதைய வீமன் காமம் தமிழ் மகாவித்தியாலயம்) தலைமை ஆசிரியராகவும், தமிழ் பேராசானாகவும் பணிபுரிந்தார். மல்லாகம் பண்டிதர் மாணவர் கழகத்தில் கற்பித்துப் பல பண்டிதர்களை உருவாக்கியவர். இவர் தமிழ் இலக்கணத் தெளிவும், சைவ சித்தாந்த அறிவும் நிரம்பப் பெற்றவர்.

பண்டிதர் ஐயா அவர்கள் மிகச்சிறந்த ஒரு ஆசிரியராகவும் விளங்கினார். தொல்காப்பிய இலக்கண நுணுக்கங்களை விளங்கிக் கொள்வதற்காக கலாநிதி எவ். எக்ஸ்.சி நடராஜா போன்ற கல்விமான்களும் அவரை அணுகினர் என்பதனை 'தேசிகம் என்ற பண்டிதர் ஐயாவின் சதாபிசேகார்ப்பண மலரிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது. இவரது மாணாக்கர் பலர் சிறந்த அறிஞர்களாவர். பண்டிதர் ச.பொன்னுத்துரை, பண்டிதர் க. உமாமகேஸ்வரன், பண்டிதர் சி. அப்புத்துரை, கம்பவாருதி ஜெயராஜ் என்பவர்கள் அவர்களுள் சிலராவர். மறுபுறம், மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்கும் தமிழ் மொழியும் செய்யுள்களும் இலக்கணமும் இலகுவில் விளங்கும் வகையில், பலபடிகள் இறங்கி எளிமையாகப் போதிக்கும் ஆற்றலும் மிக்கவர். குறிப்பாக சொற்பொருட்களை விளக்குவதற்கு சொல் ஆக்கத்துக்குச் செல்லுதல் அவரது அணுகு முறையாகும். உடலின் அரைப் பங்கு 'அரை', கால் பங்கு 'கால்', ஒழுக்கம் - 'ஒழுகுதல்' மேலிருந்து ஒழுகுதல், ஆகவே உயர்ந்தோரிடமிருந்து ஏனையவர்க்கும், பெற்றோரிடமிருந்து பிள்ளைகளுக்கும், ஆசிரியரிடமிருந்து மாணவர்களுக்கும் ஒழுகி வருவது, என மிக லாவகமாக மாணவர்களுக்குப் புரியவைப்பார். இவரது தமிழ் மொழி அறிவின் உச்சத்தையும், போதிக்கும் ஆற்றலையும் வியந்த கல்விச் சான்றோர் இவரை யாழ். பல்கலைக்கழகத்துக்கு அடையாளம் காட்டினர். பண்டிதர் ஐயாவின் வித்துவப் புலமையை அடையாளம் கண்ட யாழ்ப்பாணப் பல்கலைகழகம், 1980ம் ஆண்டு, தனது முதலாவது பட்டமளிப்பு விழாவின் போது, 'இலக்கண வித்தகர்' என்ற பட்டமளித்துக் கௌரவித்தது. 'இலக்கணவித்தகர்' பட்டமளிகப்பட்ட போது, பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் பின்வருமாறு விதந்துரைத்து 'இலங்கைத் தமிழ்ப்பாரம்பரியத்தின் இலக்கணக் கொடுமுடி, கணேசையர் பாரம்பரியத்தின், திருக்கொழுந்தாக விளங்குபவர், பண்டிதர் இராமசாமி நமசிவாயம் ஐயா அவர்கள்' எனக் குறிப்பிட்டார். யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச்சங்கம் 1998ம் ஆண்டு 'வித்துவசிரோன்மணி' பட்டமளித்து, அது பெருமை கொண்டது. நல்லூர் ஆதீனம் 'செந்தமிழ் திலகம்' என்ற பட்டத்தையும், இலங்கை கம்பன் கழகம் 'மூதறிஞர்' என்ற பட்டத்தையும், இலங்கை அரசு 'சமாதான நீதவான்' என்ற பட்டத்தையும் வழங்கி சிறப்பித்தன.

பண்டிதர் நமசிவாய தேசிகர் ஐயா அவர்கள், தான் வாழ்ந்த கட்டுவனூரின் கல்வி, சமய, சமூக, பொருளாதார மேம்பாட்டு அமைப்புகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். கட்டுவனூர் நில அளவையாளர் க. சின்னப்பு அவர்களால், படிக்கும் இளையோரின் கல்வி விருத்திக்காக, அமைக்கப்பட்ட செந்தமிழ் தேர்ச்சிக் கழகத்தின் செயலாளராகவும், பின்னர் தலைவராகவும் பணியாற்றினார். பாலர் ஞானோதய சங்கத்தின் கிளை அமைப்புகளான சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், இந்து சமய விருத்திச் சங்கம், அந்திமகால சகாய நிதிச்சங்கம், ஐக்கிய பண்டகசாலைச் சங்கம், கணேசையர் நினைவு மன்றம், என்பவற்றின் தலைவராகச் செயற்பட்டார். மேலும் கீரிமலை சிவநெறிக் கழகத்தின் நிர்வாகத் தலைவராகவும், தெல்லிப்பளை பலநோக்குச் சங்கத்தின் இயக்குனர் சபை உறுப்பினராகவும், மயிலிட்டி நீதிமன்ற உறுப்பினராகவும் இருந்தார். சிறந்த பேச்சாளரான இவர் ஊரிலும், அயல் ஊர்களிலும் சமய, இலக்கிய சொற்பொழிவுகளை நிகழ்த்துதல், பொதுக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல், பட்டிமன்றம் வழக்காடு மன்றங்களில் மத்தியஸ்தம் செய்தல் என்பவற்றிலும் ஈடுபட்டார். இவை அனைத்துக்கும் அப்பால் விளையாட்டுத் துறையில் ஆர்வம் கொண்ட இவர், மாலை வேளைகளில், ஊரில் உள்ள விளையாட்டு மைதானத்தில், கரபந்தாட்டம் ஆடச்சென்று விடுவார். இத்தகைய பன்முக ஆளுமை கொண்ட இலக்கணவித்தகர் பண்டிதர் இ. நமசிவாய தேசிகர் ஐயா அவர்களுக்கு, மார்ச் 19, 2000ம் ஆண்டு, நல்லை ஆதீனத்தில், சதாபிசேஷகமும், துர்க்கா மணிமண்டபத்தில், அப்போதைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர், பொ. பாலசுந்தரம்பிள்ளை, அவர்கள் தலைமையில் பாராட்டு விழாவும் நடைபெற்றன. அங்கு, யாழ். குடாநாட்டின் அத்தனை பேரறிஞர்களும் கூடியிருந்து வாழ்த்தியமை அவரது பெருமைக்குச் சான்று பகரும்.

இவரைப் பற்றிய 'தேசிகம்' என்ற நூலும், இவரது ஆக்கங்களைக் கொண்ட 'வித்தகர் தரிசனம்' என்ற நூலும், அவ்விழாவில் வெளியிடப்பட்டன. இவ்விரு நூல்களும், பண்டிதர் ஐயாவின் அறிவின் உச்சத்தை அறியப் போதுமானவையாகும். மேலும், பண்டிதரின் நூற்றாண்டு நினைவு உரையிலே, இவரது முதல் மாணவர்களுள், ஒருவரான கம்பவாருதி ஜெயராஜ், பின்வருமாறு குறிப்பிட்டு 'நான் முதல் நாள் அவரிடம் திருக்குறள் படித்தபோது 'நுண்மாண்நுழைபுலம்' என்ற தொடரின் விளக்கத்தை முதன் முதல் உணர்ந்தேன், எனவும், 'நுண்மாண்நுழைபுலம்' என்ற தொடரின் முழுவிளக்கத்தை, அவர் அறிவில் கண்டு சிலிர்த்தேன்' எனவும் அவரது அறிவின் உச்சத்திற்கு மணிமகுடம் சூட்டியுள்ளார்.

பண்டிதர் ஐயா அவர்கள் மிகச்சிறந்த கல்விமானாக விளங்கிய போதிலும் நூல்களை எழுதுவதில் ஆர்வம் கொள்ளவில்லை. பல கல்விச் சான்றோர் எதாவது நூல் எழுதும்படி கேட்டால், தமிழில் உள்ள நூல்களைப் படிப்பதற்கே வாழ் நாள் போதாது, தமிழில் புதிதாக எழுதுவதற்கு என்ன இருக்கிறது? படிக்கப் படிக்க அறியாமை தான் வளர்கிறது எனக் கூறி மறுத்துவிடுவார். குரும்பசிட்டிப்பண்டிதர் வ. நடராஜா கேட்டுக் கொண்டதற்கிணங்க அவரோடு சேர்ந்து கும்பகர்ணன் வதைப் படலத்துக்கு, உரை எழுதியுள்ளார். பத்திரிகை, சஞ்சிகைகளுக்கு யாராவது கட்டுரை கேட்டால் எழுதிக் கொடுப்பார். பலரது வேண்டுகோளுக்கு சம்மதித்து, சந்நிதிக் கந்தன் சதகம், மாவைக் கந்தன் பதிகம், நகுலேசர் திருவந்தாதி போன்ற பல நூல்களை எழுதியுள்ளார். மேலும் திருகோணமலை ஆலடிப் பிள்ளையார், மாங்குளம் தச்சகடம்பன் பிள்ளையார், நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன், அளவெட்டி குருக்கள் கிணற்றடி முருகன், பண்ணாகம் பனிப்புலம் வைரவர் போன்ற ஆலயங்களுக்கு ஊஞ்சல் பாடியுள்ளார். சங்கானை அரசடி வைரவர், வல்லிபுர ஆழ்வார், கட்டுவன் ஐயனார், வரத்தலைவிளான் மருதடி விநாயகர் போன்ற ஆலயங்களுக்கு பதிகங்கள் பாடியுள்ளார்.

யுத்த காலத்தின்போது அவர் சேகரித்திருந்த, பெறுமதிமிக்க பல தமிழ் இலக்கண, இலக்கிய சமய நூல்களும், அவரது பல ஆக்கங்களும் கையெழுத்துப் பிரதிகளாகவே காணாமல் போயின.

கட்டுவன் கிராமத்தில், கட்டுவன் சந்தியின் ஓர் அடையாளக் கூறாக பண்டிதர் ஐயாவின் ஆறு அறைகளைக் கொண்ட நாற்சார் மாடி வீடு உயர்ந்து நிற்கும். மேல் மாடியின் முன் அரைப்பகுதி மொட்டை மாடியாகவும், பின் அரைப்பகுதி தமிழ்க் குடிலாகவும் இருந்தது. அங்கு தரையில் சம்மணம் போட்டிருந்து, வெற்றிலை பாக்குத் தட்டுகளுடன், ஒரு துறவியாக இருப்பார். யார் அறிவுப் பசியோடு வந்தாலும், மனநிறைவோடு திரும்பிச் செல்வார்கள். அந்தத் தமிழ்க் குடிலும் யுத்த காலத்தின்போது இராணுவத்தினரால் இடித்தழிக்கப்பட்டது. முன்பகுதியாகிய மேல் மாடியை மட்டும் இராணுவத்தினர் தமது கண்காணிப்பு வசதி கருதிவிட்டு வைத்திருந்தார்கள்.

போர்காரணமாக கட்டுவன் கிராமத்திலிருந்து குடிபெயர்ந்து மருதனாமடத்தில் சிறிது காலம் வாழ்ந்த பண்டிதர் ஐயா, இறுதிக் காலத்தில் சுகவீனமுற்று, வைத்திய சிகிச்சைக்காக சென்னைக்குச் சென்றார். அங்கு 2000, செப்ரெம்பர் 11ந் திகதி காலமானார்.

தொல்காப்பியத் தமிழ் இலக்கணத்தை நன்கறிந்த மூதறிஞர் ஒருவரை தமிழ் உலகம் இழந்து நின்றது.

vivekananthan.v@thaiveedu.com

அண்ணாவியார் V.T. செல்வராஜா

நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்களது 'மயான காண்டம்' இசை நாடகத்தின் முதல் மேடையேற்றத்தின் போது அயலாத்துப் பிள்ளையாக நடித்தவரும், நடிகமணியின் மைத்துனர் முறையானவரும், காங்கேசந் துறை வசந்தகான சபாவின் ஆரம்பகால உறுப்பினரும், சபாவினர் மேடையேற்றிய பல்வேறு இசை நாடகங்களில் பிரதான பெண் வேடங்கள் ஏற்றுச் சிறப்புச் செய் தவருமான அண்ணாவியார் V.T. செல்வ ராஜா அவர்களை இம்மாத ஆழத்து முத் துக்களில் பதிவு செய்கிறோம்.

இவரது உற்றார் உறவினர்கள் யாவரும் இசை நாடகக் கலைஞர்களாக இருந்த மையால் சிறுவயதிலேயே இவர் இசை நாடகத்தில் ஈடுபாடு கொண்டவராக விளங் கினார். இவரது தந்தையார் வைரவன் தில்லையன் ஒரு நாடகக்கலைஞன், மிரு தங்க வித்துவான். தாயார் சின்னம்மாவின் தகப்பனார் இராமர் ஒரு காவடி அண் ணாவியார். செல்வராஜா அவர்களது தகப் பனாரும் நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்களின் தாயாரும் சகோதரர்கள். காங் கேசத்துறை அமெரிக்கன் மிஷன் ஆங்கி லப் பாடசாலையில் கல்விகற்ற இவர் காங் கேசந்துறை சீமெந்து தொழிற்சாலையில் மின்சாரப் பகுதியில் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்.

பாடசாலை நாட்களில் 'மந்திரிகுமாரி' நாடகத்தில் கதாநாயகனாக நடித்த இவர் தனது 12வது வயதில் ஆசிரியர் சின் னத்துரையின் நெறியாள்கையில் 'சத்திய வான் சாவித்திரி' இசை நாடகத்தில் சாவித்திரியாக வேடமேற்றார். இந்நாடகம் வவுனியாவிலும் மேடையேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதன் பின்னர் இசை நாடக ஈடுபாடு காரணமாக நடிகமணி வி.வி. வைரமுத்து, கரவெட்டி நற்குணம், பபூன் சின்னத்துரை, வசவிளான் மார்க் கண்டு போன்ற பெரும் கலைஞர்களுடன் இணைந்து நடிக்கும் பாக்கியம் பெற்று புகழ்பெற்ற ஒரு கலைஞனாக விளங்கி னார்.

நடிகமணி வி.வி. வைரமுத்துவின் மைத்து னரான கலைஞர் செல்வராஜா காங்கே சந்துறை வசந்தகான சபாவில் இணைந்து, சிறுவயதிலேயே சபாவினரது நாடகங்களில் நடிக்க ஆரம்பித்தார். 1953ல் யாழ் நகர மண்டபத்தில் சபாவினர் மேடையேற்றிய 'மயான காண்டம்' இசை நாடகத்தில் அயலாத்துப்பிள்ளையாக இவர் நடித்தி ருந்தார். இந்நாடகத்தில் நடிகமணி வி.வி. வைரமுத்து அரிச்சந்திரனாகவும் அவரது ஒன்றுவிட்ட சகோதரி பத்மாவதி சந்திரமதியாகவும் கரவெட்டி நற்குணம் சத்தியகீர்த்தியாகவும் நடித்திருந்தனர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தீபாவளிக் கலைவிழாவுக்காக இலங்கை யர்கோன், சாணா, பேராசிரியர் சு. வித்தி யானந்தன் ஆகியோரது முயற்சியினால் இந்நாடகம் மேடையேற்றம் கண்டது. இம்மேடையேற்றத்துக்குப் பல சிறப்புகள் உள்ளன. மூவாயிரம் தடவைகளுக்கு மேல் மேடையேற்றப்பட்ட 'மயான காண் டம்' இசைநாடகத்தின் முதல் மேடையேற் றம் இதுவென்பதும், 'சம்பூர்ண அரிச்சந் திரா' என்ற முழுநீள இசை நாடகத்தை இரண்டு மணிநேர நாடகமாக குறுக்கி மேடையேற்றம் கண்டதும், முதன்முதலாக நடிகமணி வி.வி. வைரமுத்து ஆண் பாத் திரம் ஏற்று நடித்ததும், முதன் முதலாக ஒரு பெண் சந்திரமதியாக நடித்ததும் இந்நாடகத்தில் என்பதும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

இவ்விடத்தில் நடிகமணி பற்றிய சில குறிப் புகளையும் நினைவுகளையும் கலைஞர் பகிர்ந்து கொண்டார். "ஒரு காலத்தில் காங்கேசந்துறை துறைமுகம் இந்தியாவி லிருந்து வருகின்ற செட்டியார்களின் வள் ளங்கள் தரிந்து நிற்கும் இடமாக இருந் தது. அவர்கள் நெல்லு, சட்டி - பானை போன்றவற்றை கொண்டு வந்து கிட்டங் கிகளில் சேர்த்து வைத்து பண்டமாற்று வியாபாரங்களில் ஈடுபட்டு வந்தனர். அவர் களுடனான பழக்கத்தில் சங்கீதம் படிக்க வேண்டும் என்ற தன் ஆசையைப் பூர்த்தி செய்ய அவர்களுடன் நடிகமணி இந்தியா சென்றார். அங்கு குருகுலவாசம் மூலம் சங்கீதம் பயின்ற அவர், சங்கரதாஸ் சுவாமிகளின் இசைநாடகப் பாடல்களையும் கற்றுத் தேர்ந்தார். அந்நாட்களில் மிரு தங்கம், ஆர்மோனியம் போன்ற வாத்தி யங்களையும் கற்றுக்கொண்டார். ஊருக்கு திரும்பி வந்த அவர் ஆர்மோனியத்தில் பிரபல்யமான கலைஞராக விளங்கினார்.

இவரது தமையனார் காசிநாதன் மிருதங் கத்தில் வல்லவராக இருந்தார். இவர்கள் இருவரும் அப்போது மேடையேறிய இசை நாடகங்களின் பின்னணிக் கலைஞர்களா கத்திகழ்ந்தனர். நாளடைவில் இசை நாட கங்களில் பெண் பாத்திரங்கள் ஏற்று நடிக்க ஆரம்பித்த நடிகமணி 1953ல் நடைபெற்ற 'மயான காண்டம்' மேடை-யேற்றத்தின் பின்னர் கதாநாயகன் பாத்தி ரங்கள் ஏற்றுப் பிரபல்யமான கலைஞன் ஆனார். நடிகமணிக்கு முன்பாக வதிரி யைச் சேர்ந்த அண்ணாச்சாமி என்பவர் பிரதான ஆண் பாத்திரங்களில் நடித்து வந்தார். மயான காண்டத்தில் அரிச்சந்தி ரன், பூதத்தம்பியில் அந்தராசி ஆகிய பாத்திரங்கள் நடிகமணிக்குப் புகழ் சேர்த்த பாத்திரங்களாகும்."

காங்கேசந்துறை வசந்தகான சபாவினர் மேடையேற்றிய அனைத்து இசை நாட கங்களிலும் பங்குபற்றிய கலைஞர் V.T. செல்வராஜா பொதுவாக அந்நாடகங்க ளின் எல்லாப் பாத்திரங்களையும் ஏற்று நடிக்கவல்ல ஆற்றல் பெற்றவர். சபாவி-னரது எல்லாக் கலைஞர்களுமே நாடக மொன்றில் ஒருவர் வராதவிடத்து அப்பாத் திரத்தை ஏற்று நடிக்கும் வல்லமை பெற் றிருந்தனர். இந்த வகையில் 'மயான காண்டம்' நாடகத்தில் ஆரம்பத்தில் சந்திர மதியாக சோக சோபித சொர்ணக் கவிக் குயில் இரத்தினம், பின்னர் நடிககலாமணி செல்வம், இறுதியாக தைரியநாதன் போன் றோர் நடிகமணியுடம் நடித்த காலகட்டத் தில், தேவையேற்படும் போதெல்லாம் சந்திரமதியாக வேடமேற்றுச் சிறப்புச் செய் தவர் கலைஞர் செல்வராஜா.

இவ்வாறு 'சத்தியவான் சாவித்திரி' - சாவித் திரி, 'ஏழுபிள்ளை நல்லதங்காள்' - நல்ல தங்காள், 'ஞானசௌந்தரி' - ஞானசௌந் தரி, 'பவளக்கொடி' - பவளக்கொடி, சுபத் திரை, 'வள்ளிதிருமணம்' - வள்ளி போன்ற பிரதான பெண் பாத்திரங்களில் இவர் நடித்துள்ளார். இவை தவிர, சபாவினர் மேடையேற்றிய 'சம்பூர்ண அரிச்சந்திரா' இசை நாடகத்தில் நாரதர், சத்தியகீர்த்தி, 'சத்தியவான் சாவித்திரி'யில் நாரதர், 'பூதத்தம்பி'யில் சின்னலாந்தேசு, 'வள்ளி திருமணத்'தில் முருகன், வேடன், நாரதர் ஆகிய ஆண் பாத்திரங்கள் ஏற்றும் இவர் சிறப்புச் செய்துள்ளார்.

இசை நாடகப் பாடல்களைச் சிறப்பாகப் பாடவல்லவரான இவர் சில பாடல்களைப் பாடிக்காட்டினார். அவற்றுள், கரம் இழந்த

ஆழத்து முத்துக்கள்

- ப. ஸ்ரீஸ்கந்தன் -

ஞானசௌந்தரி மனம் வருந்திப் பாடும் 'அப்பா மகளே பாவி... நொந்தழக் கேட் கவில்லையோ...' என்ற பாடலையும் தன் மன்னன் அரிச்சந்திரனைத் தேடி காட்டி னுள் அலைந்து திரியும் மந்திரி சத்திய கீர்த்தி பாடுகின்ற 'தேடித் திரிகின்றேனே மன்னனை நான்...' என்ற பாடலையும் மனமுருகப் பாடினார்.

வசந்தகான நாடக சபா மட்டுமல்லாது இவர் வேலை செய்த காங்கேசந்துறை சீமெந்து தொழிற்சாலை நாடக மன்றம் மேடையேற்றிய கந்தன் கருணை, சத்திய வான் சாவித்திரி, பூதத்தம்பி, மந்திரிக்கு மாரி ஆகிய நாடகங்களில் முக்கிய பெண் பாத்திரங்கள் ஏற்று நடித்ததோடு அந்நா டகங்களை இயக்கியுமிருந்தார். இந்நாடகங் களில் வில்லிசைக் கலைமாமணி சின்ன மணியின் மைத்துனரான மாதனை மகா லிங்கம் பிரதான ஆண்பாத்திரங்களில் நடித்திருந்தார். மேலும், வேம்படி மகளிர் பாடசாலை மாணவிகளுக்கு சத்தியவான் சாவித்திரி, நல்லதங்காள் நாடகங்களைப் பழக்கியிருந்தார். இவை இரண்டும் நாட கப் போட்டிகளில் பரிசுகள் பெற்றன. இதே போல் வசந்தகான சபாவினர் மேடையேற் றிய, முற்றிலும் பெண்கள் நடித்த மயான காண்டம், சத்தியவான் சாவித்திரி, பூதத் தம்பி, ஞான சௌந்தரி, வள்ளி திரும ணம் ஆகிய இசை நாடகங்களை இவர் நெறியாள்கை செய்திருந்தார். பெண்கள் நடித்த மயான காண்டம் இசை நாடகம் அரியாலை சுதேசிய விழா நாடகப் போட் டியில் முதற்பரிசு பெற்றது குறிப்பிடத்தக் கது. மேலும் பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளையுடன் இணைந்து யாழ். மத்திய கல்லூரி மாணவர்களுக்கு ஒரு நாடகப் பட்டறையை நடத்தியுள்ளார்.

மேற்கூறப்பட்ட இசை நாடகங்களில் இவ ரது மகளான சுகந்தினி ஆண் பாத்திரங் கள் ஏற்றுப்பாடி நடித்தமை முக்கிய அம் சமாகும். மேலும் அண்ணாமலைப் பல்க லைக்கழகத்தில் சங்கீதத்தில் பட்டம் பெற்ற இவரது மகள் குமுதினி டென்மார்க் நாட் டில் சுருதிலய இசைக் கல்லூரியையும், இன்னொரு மகள் தாரணி பிரான்ஸ் நாட் டில் ஒரு நாட்டியப்பள்ளியையும் நடத்தி வருகின்றனர்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி அரச விருதான 'கலாபூஷணம்', மாகாண சபையின் 'முதல்வர் விருது', நல்லூர் பிரதேச செயலகத்தின் 'கலைஞானச் சுடர்', சீமெந்து தொழிற்சாலை நாடகமன்றம் வழங்கிய 'கலைச்செல்வன்' ஆகிய கௌர வங்கள் இவருக்குக் கிடைத்துள்ளன.

இசை நாடகங்கள் மருவி வரும் இக்கால கட்டத்தில் 85 வயதான ஒரு பழம்பெரும் இசை நாடகக் கலைஞனைச் சந்தித்த மகிழ்ச்சியும் நடிகமணி வி.வி வைரமுத்து வுடன் வாழ்ந்த ஒரு கலைஞனைக் கண்ட பூரிப்பும், அமைதியான ஒரு நாடகக் கலை ஞனின் இனிய பாடல்களைக்கேட்ட திருப் தியும் இச்சந்திப்பில் எனக்குக் கிடைத்தன.

sriskandan@thaiveedu.com

JOB OPPORTUNITY

வேலை வாய்ப்பு

கிளீனிங் வேலைக்கு ஆட்கள் தேவை

Brampton, Mississauga, Etobicoke area

24/7days

தொடர்புகளுக்கு

ஜெயா: 416-875-9000

(அழைப்புக்குப் பதில் கிடைக்காவிடில் உங்கள் விபரங்களை விபரமாகப் பதிவிலிடுங்கள்.)

மொழித்தடத்தின் விடியல்

- சர்வேசுவரி சோமசுந்தரம் -

பல்லாழிக் காலமாகப் பேசப்படும் மொழி தமிழ்மொழி. மேற்கு நாட்டினர் போற்றும் நம் மொழி இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறதென்றால், அதன் கட்டமைப்பும் மொழிக்கொள்கையுமேயாகும். அந்த வகையில் அறிவியல் கருத்தாக்க வளர்ச்சிகளையெல்லாம் எடுத்தியம்பும் திறனையும் புதுமை படைக்கும் ஆற்றலையும் வெளிக்கொணரும் படைப்புகளை மொழிச்சிதைவின்றி உருவாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

'மாற்றம் ஒன்றுதான் மாறாதது' என்பதற்கமைய தமிழறிஞர்கள் தாம் வரைந்த இலக்கண விளக்கங்களுக்கெல்லாம் இறுதியாகப் புறனடை கூறுகின்றனர். அஃதாவது விதிமீறும் இயல்பு. ஆனால், மொழியின் அடிப்படைக் கட்டமைப்பு முறைமையை மீறிக் கூறப்படும் கருத்தியல்கள் ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாகும்.

ஈ.வெ.ரா. பெரியார் அவர்களால் 1935ம் ஆண்டு தொடக்கம் குடியரசு, விடுதலை ஆகிய இதழ்களில் திருத்தப்பட்ட பதினைந்து எழுத்து வரிவடிவங்கள் (னா, ணா, றா, னை, ணை, ளை, லை, னொ னோ, ணொ, ணோ, றொ, றோ, அய், அவ்) பயன்படுத்தப்பட்டு வந்தன. 1978ம் ஆண்டிலேதான் தமிழ்நாடு அரசு பதின்மூன்று எழுத்து வரிவடிவங்களை மட்டும் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தியது. ஐகாரத்திற்கும் ஔகாரத்திற்கும் பகரமாக முறையே அய், அவ் ஆகிய ஒலிமாற்றங்களை மட்டும் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழக அரசின் இந்த ஆணையைச் சில எழுத்தாளர்கள் கருத்தில் எடுத்துக் கொண்டதாகவும் தெரியவில்லை. இன்றும் அய்யா, அவ்வை என்றே எழுதிக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்மொழியில் உயிரெழுத்துகளின் எண்ணிக்கை பன்னிரண்டு ஆகும். அவற்றில் ஐ, ஔ எனும் உயிர் நெட்டெழுத்துகள் கூட்டொலிகள் என இலக்கண நூல்கள் குறிப்பிடுகின்றன. பழம்பெரும் இலக்கண நூலான தொல்காப்பியம் அவற்றினைக் கூட்டொலிகள் எனச் சுட்டும்போது,

அகர இகரம் ஐகாரமாகும்
- தொல். எழுத்து 54

அகர உகரம் ஔகாரமாகும்
- தொல். எழுத்து 55

என்றும், பின்னர் மேற்கூறியவற்றிற்கு முரணாக,

அகரத்து இம்பர் யகரம் புள்ளியும்
ஐ என் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்
- தொல். எழுத்து 56

என்று கூறிய தொல்காப்பியம்

அகரத்து உம்பர் வகரப் புள்ளியும்
ஔ என் நெடுஞ்சினை மெய்பெறத்தோன்றும்

எனக் கூறவில்லை.

அஃதாவது, அகரத்தின் பின் இகரமும் அல்லாமல் யகர மெய் வந்தாலும் ஐ எனப்பட்ட நெட்டெழுத்தின் வடிவு பெறத் தோன்றும். ஆனால், அகர உயிர் வகர மெய்யுடன் இணைந்து ஔகாரம் தோன்றும் எனத் தொல்காப்பியம் கூறவில்லை.

நன்னூலும் ஐகாரத்திற்கு இனவெழுத்து இ எனவும் ஔகாரத்திற்கு இனவெழுத்து உ எனவும் வருவதே முறையென உரைக்கிறது:

ஐ ஔ இ உச் செறிய முதலெழுத்து
இவ்விரண்டு ஓரினமாய் வரன் முறையே
- நன். எழுத்து 71

பின்னர்,

அம்முன் இகரம் யகர மென்றிவை
எய்தின் ஐயொத் திசைக்கும் அவ்வொடு
உவ்வும் வவ்வும் ஔவோரன்ன
- நன். எழுத்து 125

என்றும், முன்னுக்குப் பின் முரண்படுகிறது.

இம்முரணான கருத்துகள் குழப்பத்தை உருவாக்குகின்றன அல்லவா? ஐகார வடிவு பெற நூற்பா மொழிந்த தொல்காப்பியர், ஔகார வடிவு பெற நூற்பா உரைக்காததன் நோக்கம் யாது? அவரே அந்த மாறுபாடுகளில் அக்கறை கொள்ளவில்லையென்றே தோன்றுகிறதல்லவா?

பன்னீருயிருந் தந்நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்
- தொல். எழுத்து 84

உயிரெழுத்துகள் பன்னிரெண்டும் மிடற்றில் பிறக்கும் காற்றினால் உருவாகி ஒலிப்பன. தம்நிலையில் நின்று மாறாமல் இருக்கும் உயிரெழுத்துகள் மட்டுமே தொண்டைக் குழியிலிருந்து தோன்றுவன. தம் நிலையிலிருந்து திரியாதிருப்பது என்னவெனில் ஓர் உயிரெழுத்து எந்த மாற்றமும் இல்லாமல் பிறப்பதாகும்.

இவ்வாறு ஓர் உயிரெழுத்து எந்த மாற்றமும் இல்லாதது என்று கூறும் தொல்காப்பியம் கூறுமிடத்து, அகரம் என்பது யகரத்தோடும் வகரத்தோடும் புணர்ந்து எவ்வாறு தந்நிலை திரியாத உயிர்களான 'ஐ', 'ஔ' எனும் வடிவங்களைப் பெறும்? என்ற கேள்வி எழுகிறது. அத்தோடு தந்நிலையிலிருந்து மாறாமல் பிறக்கும் உயிரெழுத்துகளுடன் யகர மெய்யும் வகர மெய்யும் இணையும்போது உயிரெழுத்துகளின் பலுக்கல் முறைமை கெட்டு அவற்றின் ஒலிப்பில் மாற்றம் ஏற்படுகிறது. தொல்காப்பியம் உரைக்கும் 'தந்நிலை திரியா' என்ற பண்பின் தனித்தியமும் சிதைந்து போகிறது.

யகரத்தின் பிறப்பு, ஒலிப்பு பற்றியும் வகரத்தின் பிறப்பு, ஒலிப்பு பற்றியும் தொல்காப்பியமும் நன்னூலும் கூறுவதைப் பார்ப்போம்.

யகரத்தின் பிறப்பு:

அண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை
கண்ணுற்று அடைய யகாரம் பிறக்கும்
- தொல். எழுத்து 99

அடிநா அடி அணம் உறயத் தோன்றும்
- நன். எழுத்து 81

நாக்கின் அடி மேல்வாய் அடியைச் சென்று பொருந்த யகரம் பிறக்கும்.

வகரத்தின் பிறப்பு:

பல்லிதழ் இயைய வகாரம் பிறக்கும்
மேற்பல் இதழ்உற மேவிடும் வவ்வே
- நன். எழுத்து 84

மேற்பல் கீழ் இதழோடு இயைந்து பொருந்த வகரமெய் தோன்றுகிறது.

மேலே, தொல்காப்பியமும் நன்னூலும் கூறியவாறு உயிரெழுத்துகளின் பிறப்பிற்கும் மெய்யெழுத்துகளின் பிறப்பிற்கும் வேறுபாடுண்டு என்பது தெட்டத் தெளிவாகிறது. அந்த வகையில் எக்காலத்தும் ஐ, ஔ எனும் நெட்டெழுத்துகளின் கூட்டொலிகள் முறையே அ→இ, அ→உ மட்டுமே சரியான நெறிமுறைகள் என்பதில் மாற்றுக்கருத்திற்கிடமில்லை.

எமது ஈழத்துத் தமிழாசான் ஆறுமுகநாவலர் அவர்கள் ஒருபடி மேலே போய் தமது நன்னூற் காண்டிகையுரையில்,

அகரக் கூறும் இகரக் கூறும்
தம்முள் ஒத்து எகரம் ஒலிக்கும்
அகரக் கூறும் உகரக் கூறும்
தம்முள் ஒத்து ஒகரம் ஒலிக்கும்

என்கிறார்.

அகரமும் இகரமும் இணைந்து எவ்வாறு எகரம் ஒலிக்கும்? அகரமும் உகரமும் இணைந்து எவ்வாறு ஒகரம் ஒலிக்கும்? என்பதைச் சீர்தூக்கிச் சிந்தித்துப் பார்ப்போமாயின், ஏமாற்றம்தான் கிடைக்கும்.

மேலும், இன்னுமொரு முரண்பாட்டினையும் பார்ப்போம். தொல்காப்பியமும் நன்னூலும் உயிரெழுத்துகள் பன்னிரெண்டையும் மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளன.

- அ, ஆ
- இ, ஈ, எ, ஏ, ஐ
- உ, ஊ, ஒ, ஓ, ஔ

ஆனால், மொழி அறிஞர்களோ உயிரெழுத்துகளை ஐ, ஔ ஆகிய நெட்டெழுத்துகள் தவிர்த்து மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளனர்.

- முன் அண்ண உயிர் - இ, ஈ, எ, ஏ
- இடை அண்ண உயிர் - அ, ஆ
- கடை அண்ண உயிர் - உ, ஊ, ஒ, ஓ

மொழியியலாளரின் மூன்று பகுப்பிலும் ஐ, ஔ ஆகிய இரண்டு உயிரெழுத்துகளும் இடம்பெறவில்லை. இதனடிப்படையில் அவர்கள் உயிரெழுத்து பத்து என்றே வகுத்துள்ளனர்.

ஐகாரமும் ஔகாரமும் கூட்டொலிகள் என்பதனால், அவை இரண்டையும் தவிர்த்து உயிரொலிகள் பத்து என்றே அவர்கள் கணிக்கின்றனர். அவ்வாறாயின் கூட்டொலிகள் உயிரொலிகள் இல்லையா? இத்தகைய கணிப்பு எதற்காக? கூட்டொலிகளானவை உயிரெழுத்துகளிலுள்ள சிறப்பொலிகள். அத்தகைய ஒலிகளின் சிறப்புத் தன்மையை மாற்றி அமைப்பது என்பது மடமைத்தனமும் கவலைக்குரிய விளத்தமுமாகும்.

'ஐ' என்பது அகரமும் யகர மெய்யும் இணைந்த கூட்டொலி, 'ஔ' என்பது அகரமும் வகர மெய்யும் இணைந்த கூட்டொலி என்ற காரணங்களால் ஐகாரமும் ஔகாரமும் உயிரெழுத்துகளில் அடங்கா என்ற மொழியியலாளரின் கருத்தானது எமது மொழியின் தனித்தியத்தையும் மொழிக் கோட்பாட்டையும் சிதைக்கிறது என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

உயிரொலிகள் பத்து என்ற மொழியியலாளரின் கருத்தினடிப்படையில் சிந்திப்போமானால் சிலகாலம் செல்ல, தமிழ் நெடுங்கணக்கிலுள்ள உயிரெழுத்துகளின் எண்ணிக்கை பத்து என்ற முறைமையைப் பதிவு செய்து, தமிழ்மொழியின் மொத்த எண்ணிக்கை 245 என்று எழுத்து இலக்கணத்தையே மாற்றியமைத்தாலும் வியப்பில்லை.

தொல்காப்பியர், நன்னூலார், மொழியியலாளர்கள் ஆகியோர் கூறிய முரண்பாடான கருத்துகளை ஏற்றுக் கொள்ளும் வகையில் தொன்மக் காலந் தொட்டுப் பயன்பாட்டில் இருந்துவரும் ஐயா என்னும் சொல்லை அய்யா என்றும் ஔவை என்பதை அவ்வை என்றும் எழுத்தாளர் சிலர் எழுதிக்கொண்டிருப்பதை என்னவென்று சொல்வது? இக்கருத்து சரியெனில் ஐகாரத்திற்கும் ஔகாரத்திற்குமுள்ள தனித்தன்மை கேள்விக்குறியாகிறது. இவ்வாறான சொல் திரிபு செம்மொழியாகிய தமிழ்மொழியின் தனித்தன்மையைச் சிதைப்பதற்கான தொடக்கமா? செம்மொழித் தகுதிக்குரிய கோட்பாடுகளில் எமது மொழியின் தனித்தன்மையும் மொழிக் கோட்பாடும் அடங்கியுள்ளது என்பதை நாம் ஒவ்வொருவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

தெல்காப்பியமும் நன்னூலும் கூறுகின்ற ஓரெழுத்து ஒருமொழிகளில் ஐகாரமும் ஒன்றாகும். மேற்குறிப்பிட்ட 'அய்' எனும் வடிவம் உரைநடையில் நிலைத்து விடுமானால் ஐகாரத்திற்குரிய ஓரெழுத்து ஒரு மொழி எனும் சிறப்புப் பண்பு காணமல் போய்விடும் என்பதும் உறுதி. இவ்விளத்தத்தை நாம் கூர்ந்து ஆய்தல் அகத்தியமாகும்.

காலப்போக்கில் ஐகாரம் ஏறிய பதினெட்டு மெய்யெழுத்துகளுக்கும் ஔகாரம் ஏறிய பதினெட்டு மெய்களுக்கும் இதேகதிதான் என்பதை மறுக்க முடியாது. அய்யா, அவ்வை என்று எழுதுவது சரியாயின், கை, வை, பை போன்ற சொற்களை கய், வய், பய் என்று எழுதினாலும் சரிதானேயென்று எமது இளந்தலைமுறையினருக்கு எண்ணத் தோன்றாதா? தொடர்ச்சியாக இவற்றைப் போன்று பல்லாயிரம் சொற்களை நாம் இழக்கப்போகின்றோமா?

ஈழத்தமிழராகிய நாம் எல்லாவற்றையும் இழந்து கையறு நிலையில் நிற்கின்றோம். நாம் பெரும்பாடுபட்டுத் தக்க வைத்துக் கொண்டிருப்பது எமது தாய்மொழி ஒன்றை மட்டும்தான். இதனையும் இழந்தோமானால் எம்மை அடையாளப்படுத்துவது எது?

மெல்லத் தமிழினிச் சாகும் அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்
என்றந்தப் பேதை யுரைத்தான்

என்ற பாரதியின் கூற்றை உண்மையாக்கப் போகிறோமா?

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு
எனத் திருவள்ளுவரும்

மூத்தோர் சொல்லேனும் முடிவெடு
- தெளிந்து
எனச் சான்றோரும்

பகன்ற பொன்மொழிகளுக்கமைய எனது கருத்துகளை முன்வைத்துள்ளேன். மறைமலையடிகள், பரிதிமாற் கலைஞர், தேவநேயப்பாவாணர் போன்ற தமிழறிஞர்களின் ஆய்வுகளின் வழி தடம் பதித்த தமிழை வணிக நோக்குப் படைப்பாளிகள் புதுமை என்ற சொல்லுக்குள் சிக்க வைத்துச் சிதைப்பது தமிழ் ஆர்வலர்களின் மொழிப்பற்றைப் புண்படுத்தும் போக்காகும். இந்த வகையில் சிலரின் அறியாமையினால் ஏற்படும் மொழிச் சிதைவைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபடும் தமிழ்மொழி ஆர்வலரின் ஆற்றாமையை என் ஆய்வின் மூலம் வெளிப்படுத்தி
ஆறுதலடைகிறேன்.

sarveswary.s@thaiveedu.com

1ST MORTGAGE SPECIALS
5 Year Variable 2.35%
5 Year Fixed 3.24%
*Some Conditions Applied, Please Call For More Details
2ND MORTGAGE SPECIALS
Up To 80% in GTA. 75% on other major cities.
No Income Verification.
No Minimum Credit Score.
Quick Closing
Rates from 7.99% to 12.99%
BonaFide Mortgage Solutions Inc.
the true freedom...
Brokerage Lic# 10216
TD Canada Trust
Scotiabank
STREET CAPITAL
FIRST NATIONAL FINANCIAL LP
MCAP
ICICI Bank
MERIX
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca,
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8
-digi Media Creations-

FOR SALE/ LEASE

FOR ALL YOUR REAL ESTATE NEEDS

WILSON RD N / TAUN RD EAST
OSHAWA
FOR LEASE

Bedrooms:3 Washrooms:2

BRIMLEY/ELLESMERE
TORONTO
FOR LEASE

Bedrooms:6+3 Washrooms:3

HIGHWAY 7/BAYVIEW
RICHMOND HILL
FOR LEASE

Bedrooms:1+1 Washrooms:1

YONGE/SHEPPARD
TORONTO
FOR LEASE

Bedrooms:1 Washrooms:1

BAY/HARBOUR
MARKHAM
FOR LEASE

Bedrooms:1 Washrooms:1

MCCOWAN RD/HWY 401
TORONTO
FOR LEASE

Bedrooms:2+1 Washrooms:2

HURONTARIO/EGLINTON
MISSISSAUGA
FOR LEASE

Bedrooms:2 Washrooms:2

N OF KINGSTON/S OF FINCH
PICKERING
FOR LEASE

Bedrooms:2 Washrooms:2

BAYVIEW/ELGIN MILLS
TORONTO
FOR LEASE

Bedrooms:3 Washrooms:1

HWY 7/ 9TH LINE
MARKHAM
FOR LEASE

Bedrooms:3 Washrooms:3

ELLESMERE/KENNEDY
TORONTO
FOR LEASE

Bedrooms:3 Washrooms:3

YONGE / CRIMSON KING
EAST GWILLIMBURY
FOR LEASE

Bedrooms:4 Washrooms:4

FINCH/ALAMOSA
TORONTO
FOR SALE

Bedrooms:4+1 Washrooms:6

LESLIE/16 TH
RICHMOND HILL
FOR SALE

Bedrooms:5+2 Washrooms:5

KENNEDY/BUR OAK
MARKHAM
FOR SALE

Bedrooms:4+2 Washrooms:4

#1 RE/MAX
Outstanding Agent
for Outstanding Results.
RE/MAX
Excel Realty Ltd., Brokerage
Bus: 905.475.4750 Fax: 905.475.4770 50 Acadia Ave. Suite 120, Markham, ON L3R 0B3

RAJ NADARAJAH
SALES REPRESENTATIVE
DIR: 416.333.6115
nanohomes@gmail.com

கணியன் பூங்குன்றனாரின் சமதர்ம சிந்தனை

- இனியவன் இசார்தீன் -

எளியோரை வலியோர் அழிப்பதும், இளையோர் மூத்தோரை பழிப்பதும். பணம் படைத்தோர் வறியோரை வெறுப்பதும், ஓர் ஊரார் இன்னோர் ஊராரை இகழ்வதும், ஒரு மதத்தவர் இன்னொரு மதத்தவரை அவமதிப்பதும், ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தை ஒதுக்குவதும், ஓரினம் இன்னோர் இனத்தை ஒடுக்குவதும், ஓர் தேசம் இன்னொரு தேசத்தை ஆக்கிரமிப்புச் செய்வதும், அடுத்தவர் மொழியை அந்நியமொழி என்று அறியாமை சொல்வதும், தம் மக்களை சொந்த நாட்டுக்குள்ளேயே கொன்று குவிப்பதும் இன்று உலகில் அதிகமதிகம் நடக்கின்ற சங்கதிகள். இவை இந்த பூமியில் தற்போது எங்கேயாயினும் ஓரிடத்தில் நிகழ்ந்துகொண்டுதானிருக்கின்றது. இவற்றைப் போக்க வேண்டுமென்று, உலக அமைதியை யாசிக்கும் என் ஈரமான இதயம் இன்றைய காலப்பொருத்தம் கருதி இந்தப் படைப்பை பதிவிடும்படி என்னைப்பணித்து நிற்கின்றது.

இன்றைய தமிழ்கூறு நல்லுலகில் உலகத் தமிழர் உள்ளங்களில் இந்திய நாட்டுச் சங்கத் தமிழ்க் கவிதை வரி ஒன்று நினைவில் உள்ளதென்றால் அது 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்கிற முதலாவது வரி மட்டும்தான். 'உலகமெல்லாம் கெட்டாலும் என் நாடு மட்டும் வாழட்டும்' என எண்ணும் தன் நாட்டுப்பற்று, நாடெல்லாம் நலிவுறட்டும் என் ஊர் மட்டும் பொலிவுறட்டும்' என்று கருதும் குறுகிய மனப்பான்மை, 'ஊரெல்லாம் பாழானாலும் என் வீடு மட்டும் வாழட்டும்' என்ற சுய நல எண்ணம் இவை எல்லாமே இப்படி எண்ணுபவர்களின் இதய அழுக்கைக் காட்டும் சுய நலங்கள். காட்டுத் தீயினிலிருந்து செடி, கொடி, மரங்கள் எத்தனை காலம் தப்பி வாழும்? நம் உடம்பில் உட்புகுந்த விசம் எவ்வளவு நேரம் உடம்பில் தங்கியிருக்கும்? அவ்வாறே உலகின் எந்த ஒரு பகுதிக்கு வரும் அழிவும்... மக்களில் ஒரு சாரார்க்கு வரும் தீங்கும் உடனேயோ, காலம் தாழ்த்தியோ மற்றப் பகுதியையும் தாக்கும் என்பது நமது வாழ்வில் நிகழ்ந்துகொண்டுதானிருக்கின்றது என்பதே நமது அனுபவம்.

இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டு ஐரோப்பிய பாராளுமன்றத்தில் உரையாற்ற அழைக்கப்பட்ட இந்திய விஞ்ஞானி அப்துல் கலாம் அவர்கள் அந்த அழைப்பை ஏற்று அங்கு உரையாற்றுகிறார். உலக நாட்டுத் தலைவர்கள் அனைவரும் ஒன்று கூடியிருக்கும் அந்த மகாமன்றத்தில் அப்துல் கலாம் அவர்களது ஆங்கில உரையை ஆவலோடு கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். 'மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் மனித குலத்துக்கும் ஒட்டுமொத்த உயிரினத்திற்கும் எப்படி வாழவேண்டுமென்று, பதின்மூன்று வரிகளில் இரத்தினச் சுருக்கமாய்ப் பாடினார் 'கணியன் பூங்குன்றனார்' என்கிற ஓர் இந்தியத் தமிழ்ப் புலவன்' என்று... 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்கிற செய்யுளை முன்மொழிந்து, விஞ்ஞானி அப்துல் கலாம் அவர்கள் அங்கே அபூர்வ பொருள் திறந்து பேசுகிறார்.

'ஒவ்வொரு ஊரும் எனது ஊர்; உலகமே எனது வீடு. உலக மக்கள் எனது உறவினர்கள்; எந்த இதயம் நீதியோடிருக்கிறதோ அந்த இதயத்திலேயே அழகிருக்கும். இதயத்தில் அழகிருந்தால் அங்கே ஒழுக்கமிருக்கும்; அங்கே ஒழுக்கமிருந்தால் வீட்டில் நல்லிலக்கணம் ஏற்படும்; நல்லிலக்கணம் உள்ள வீடுகள் இருந்தால் தேசத்தில் ஒழுங்கு உண்டாகும்; ஒழுங்குள்ள தேசமிருந்தால் உலகில் நிச்சயம் அமைதி உண்டாகும்' என்று அவர் பேசி முடிந்ததும் அந்த மண்டபத்தில் நிரம்பிய கைதட்டல் ஓசை ஓய்வதற்கு பலநிமிடங்கள் கடந்து போயிருக்கலாம். 'யூரியூப்பில்' உள்ள அதன் காட்சியை இப்போதும் திறந்து பார்க்கலாம்.

இலங்கை அரசாங்க அலுவலகங்களில் தொங்கும் பெயர்ப் பலகைகளிலும் கிராம சபை, பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை என்ற ஊர் எல்லைப்புறங்களில் ஊர் பெயர் எழுதப்பட்ட பெயர்ப் பலகைகளிலும் தமிழில் ஆங்காங்கே காணப்படும் எழுத்துப் பிழைகளுக்கும், பொருட் பிழைகளுக்கும் பொறுப்புக் கூறவேண்டிய அரசாங்கம், மக்களின் மொழி உரிமை, இன உரிமை, நில உரிமை, சமய உரிமை என எல்லா உரிமைகளையும் மறுத்திருக்கின்றபோது 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்கிற தமிழ்க் கவிதை வரிகள் ஐ.நா. சபை அலுவலகத்தின் முன் கதவில் எழுதப்பட்டிருப்பதைக் காணும் போது தமிழை அகில உலகம் மதிக்கின்றது என்பதை உணர முடிகின்றது.

இந்தியாவில் ஒரு தனி மனிதன், அதிலும் ஒரு தமிழன் தான் பிறந்த மண்ணின் மனச்சாட்சியாய், பிரபஞ்சத்தின் பிரதிநிதியாய், தன் தமிழ்க் கவிதையில் உலக அமைதிக்குத் தூது விட்டிருக்கிறாரென்றால் அது கணியன் பூங்குன்றனாராய்த் தான் இருக்க முடியும். உலகில் பேசப்படும் மொழிகளில் தமிழ்மொழி மூத்த மொழி என்கிற ஆய்வுலகில் ஒரு தமிழன் மனித நாகரீகத்தைக் காத்து மக்கள் சமத்துவத்தை மனுச் செய்கிறார். 'மனித நேயமுள்ளவர்கள், மானுட மகிழ்ச்சியை வேண்டுபவர்கள் எந்த ஊர்க்காரராய் இருந்தாலும் உறவினர்களாகப் பழகுவார்கள்' என்கிறார் இதை அறிவியல் பார்வையில், தத்துவப்பார்வையில், உளவியல் பார்வையில், பரிணாம வளர்ச்சியில் என்று எந்த கோணத்தில் பார்த்தாலும் ஒவ்வொன்றிலும் நாம் வெவ்வேறு பொருள் கொள்ளலாம்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்:
தீதும் நன்றும் பிறர்தர வாரா:
தேர்தலும் தணிதலும் அவற்றோ என்ன:
சாதலும் புதுவ(து) அன்றே; வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே;
முனிவின்
இன்னா(து) என்றலும் இலமே; மின்னொடு
வானம் தண்துளி தலைஇ ஆனது
கல்பொரு(து) இரங்கும் மல்லல்
பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம்; ஆகலின்
மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே'

- புறநானூறு 192

தமிழ்நாட்டு இராமநாதபுர மாவட்டத்தில் பூங்குன்றம் என்ற மகிபாலன்பட்டி ஊரில் பிறந்தார் கணியன் பூங்குன்றனார். வளம் பெற்ற நாட்டில் பிறந்த வாய்மையுள்ள மனிதரை அல்லது தலைவனைப் 'பூங்குன்ற நாட' என்கிறது நாலடி நானூறு. இவ்வாறு தொழிலையும் அதன் சிறப்பையும் கொண்ட அருந்தமிழ்ப் பெயர் இப்புலவருக்குப் அருட்பெயராகியுள்ளது. கணியம் என்பது சோதிடமாகும். கணியம் தெரிந்தவனைக் கணியன் என்றழைப்பதனால் 'கணியன் பூங்குன்றனார்' என்றே இன்று வரையும் இந்தப் பெருந்தகை எல்லோராலும் அன்பாக அழைக்கப்படுகிறார்.

திறந்த உலகப் பரப்பிற்கான ஒரு சமதர்ம எல்லையைக் காட்டுகின்றது பூங்குன்றனார் பாடிய 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பாடல். பூங்குன்றனாரது அருள் ததும்பும் உள்ளத்து உணர்வினின்றும் புனலாய்ப் பெருகிய இரு பாடல்கள் சங்கத்தமிழ் வானில் மிளிர்கின்றன. அவற்றுள் ஒன்று அகப்பொருள் அமைதி நிறைத்து உள்ளத்து உணர்வைப் பெருக்கும் நற்றிணைப் பாடல்: இன்னொன்று புறப்பொருள் பொதிந்த மொத்த வாழ்க்கையின் புறநானூற்றுப் பாடல். இவ்விரு பாடல்களுக்குள் அறிவும் உணர்வும் கலந்த அறவாழ்வு வாழ்ந்த பூங்குன்றனாரின் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனத் தொடங்கிய அறிவுப் பாடல் என்பது இந்த உலகிற்குக்கிடைத்த கொடையாகும். இவரது இந்த பாடல்கள் புறநானூற்றிலும் (புறநானூறு:192) நற்றிணையிலும் இடம் பெற்றுள்ளன. இப்பாடல்கள் முற்காலத் தமிழர்களின் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் வாழ்வியலையும் தெரிவிக்கின்றன.

கவிதை என்பது உடலுக்கு உயிர் மாதிரி. அசைவுகளை வைத்து உயிரை உணர்வதுபோல், அதிர்வுகளை வைத்து கவிதைகளை உணரலாம். உயிரை உணர முடியுமே தவிர ஸ்பரிசிக்க முடியாது. 'கவிதை என்பது 'கவிதா' என்ற வடமொழிச்சொல்லிலிருந்து வந்தது. செய்யுள் என்பதே தமிழ்ச்சொல்' என்கிறார் கவிக்கோ அப்துல் ரகுமான். இரண்டாயிரம் - மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஒப்பற்ற இலக்கியங்களை ஒன்றுபடுத்தி சங்கத் தமிழ் இலக்கியப் பரப்பில் எந்த ஒரு இலக்கியத்திலும் சொல்லப்படாத ஒரு செய்யுளாக 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பூங்குன்றனாரின் பாடுபொருளுக்கிடையே ஊடுபொருளாய் வாழ்க்கையும் அரசியலும் உளவியலும் வாழ்வியலும் சமூகவியலும் மானுடவியலும் உலகியலும் அதிரப் பேசுகின்றன என்றாலும் பல்வேறு கோணங்களில் சிந்திப்பவர்களுக்கு இதில் வெவ்வேறு பொருள் பொதிந்திருப்பதைக் காணமுடிகிறது.

உள்ளுறை உவமம் என்பது பொருள் கொண்ட இலக்கியத்தின் தனிப் பெருங் கூறு. அது ஒரு செய்யுள் நாகரீகம். சொற்களால் நேரடியாக மொழிய முடியாதவற்றைக் கலைப்படுத்தி உணர்த்தும் கவிதைப் பண்பாடு. முகிலுக்குள் ஒளிந்திருக்கும் மழை போல சொல்லுக்குள் ஒளிந்திருக்கும் உட்பொருளே உள்ளுறை உவமம். அதை இப்படி கருப்பொருளோடு மலர்ச்சரம் போல் தமிழ்ச்சொற்களோடு சேர்த்து கோர்த்து விடுகிறார் பூங்குன்றனார். அது கருத்தினில் விதையாய் விழுந்து எழுந்து வளர்ந்து பரந்து வீரியம் தரும் விருட்சமாய் பூத்து நிற்கிறது

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'

எல்லா ஊரும் எங்கள் ஊர் எல்லோரும் எங்கள் உறவினர்கள் என்ற பூங்குன்றனார்.

'தீதும் நன்றும் பிறர் தர வாரா:

தீயது நல்லவை என்பவை பிறர் தந்து வருபவை இல்லை.

நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன'

துன்பமும் அதன் தீர்வும் கூட அது போல்தான்.

'சாதலும் புதுவ(து) அன்றோ'

செத்துப்போதல் ஒன்றும் புதியது இல்லை: மரணம் என்பதில் எந்த சஞ்சலமும் அடைய வேண்டியதில்லை. மரணத்தை எவராலும் தவிர்க்க இயலாது. மரணம் என்பது புதுமையானதல்ல. அது நிச்சயமானது என்று நம்ப வேண்டும்'.

'இனிதென மகிழ்ந்தன்றும் இலமே;
முனிவின்

வாழ்க்கை இனியது என்று மகிழ்வதும் இல்லை: வாழ்க்கை என்பது இன்பமானது அல்லது துன்பமானது என்று கருதுவது தவிர்க்கப்பட வேண்டும்.

'இன்னா(து) என்றலும் இலமே'

மாறாக, வாழ்க்கையிலிருந்து விலகி ஏற்கும் துறவு கொடியது என்று சொல்வதுமில்லை

'வானம் தண்துளி தலைஇ ஆனது'

வானம் மின்னலடித்து குளிர்ந்த துளிகளை மழையாய்ப் பெய்ய

'கல்பொரு(து) இரங்கும் மல்லல் பேர்யாற்று'

கல் மண் ஆகியவற்றைப் புரட்டிக்கொண்டு இறங்கிப் பெருகி வரும் ஆற்றுநீரில் சிக்கி

தொடர்தல் 47ம் பக்கம்

கணியன் பூங்குன்ற...

46ம் பக்கத் தொடர்ச்சி...

'நீர்வழிப் படுஉம் புணைபோல் ஆருயிர்'

அதன் தடத்தில் போகும் புனையைப் (மிதவை (அ) சிறு படகை) போல அரிய உயிரியக்கம் ஆனது

'முறைவழிப் படுஉம் என்பது திறவோர்'

முன்னர் இட்ட முறை வழியே போகத் தான் செய்யும் (நியதி வழிப்படும்) என்று வாழ்க்கையின் திறம் அறிந்தோர் சொல்வர்

'காட்சியின் தெளிந்தனம்: ஆகலின்
மாட்சியிற்'

அந்த காட்சியில் நாங்கள் தெளிந்தோம் ஆகையால் இந்தப் பேருண்மையைக் கண்டு அனுபவத்தால் தெளிவு பெற்றோம் ஆகையால்

'பெரியோரை வியத்தலும் இலமே'

பெரியோரைக் கண்டு வியப்பதுமில்லை: அறிவிலோ அல்லது செல்வத்திலோ அல்லது பிறப்பிலோ எவரையும் நம்மை விட மேலானவர்களைக் கண்டு போற்றித் துதிக்கவும் மாட்டோம்.

'சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே'

சிறியோர்களை இகழ்தல் அதனிலும் இல்லை: நம்மை விடவும் கீழானவர்களைக் கண்டு சிறுமையாய் நடத்துதல் பற்றி எண்ணவும் மாட்டோம்.

என்று தன் பதின்மூன்று வரிச் செய்யுளில் நாமெல்லோரும் ஒரு தாய் மக்கள் என்று, சகோதரத்துவத்தையும் சமதர்மத்தையும் தமிழில் ஒன்றிணைத்து காட்டுகிறார். இவற்றை மனிதர் உணர்ந்து வாழ வேண்டும். அறிவுடையோராய் பெருமிதமடைவதை விட்டு நாம் இதை அறிந்தொழுக வேண்டும்' என்று தன் சுய கொள்கையைச் செயல்படுத்தத் தான் பிறந்த மண்ணில் தன்னைத் தானே பிறருக்கு நிறுவனப்படுத்திக் காட்டுகிறார் புலவர் பெருந்தகை கணியன் பூங்குன்றனார்.

'சுதந்திரம் மேல்நிலையிலுள்ளவர்க்கு மட்டுமன்று, பொருளாதாரத்தின் பாதாளத்தில் கிடக்கும் மக்களுக்கும் சொந்தமானது' என்று பொதுமையைப் பாடிய பாரதியார் 'உலகெல்லாம் ஒன்றாகக் காண்பதே காட்சி' என்ற மெய்ஞானத்தில் இப்படி அவரது உள்ளத்தின் ஒளியை நம் உள்ளத்திலும் பாய்ச்சுகிறார்.

'காக்கை குருவி எங்கள் ஜாதி: நீள்
கடலு மலையு மெங்கள் கூட்டம்
நோக்குந் திசையெல்லாம் நாமன்றி
வேறில்லை
நோக்கநோக் கக்களி யாட்டம்!'

இவ்வாறு தனி மனிதரையும் சமுதாயத்தையும் உயர்த்தும் சுதந்திர உணர்ச்சியின் ஒளியை 'ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே' என்றும் உலகின் சமத்துவ எல்லையில் பாய்ச்சுகிறார்.

எல்லா நிகழ்வுகளிலும் நல்லவை கெட்டவை நிகழ்கின்றன. அவை நமக்குள்ளிருந்தே வருகின்றன என்ற தெளிவு நமக்கு வரவேண்டும்: தீங்கையும் நன்மையையும் பிறர் செய்கின்றவை என்றறிந்தாலும் அவற்றை மறந்து அச்செயல்களின் பயனை மட்டுமே கருத்திற் கொள்ளுமாறு நம்மையும் நம் அறிவையும் தூண்டுகிறார்.

'எனக்கு எல்லாம் கிடைத்துவிட்டன என்று அகந்தை கொள்ளுதல் ஆகாது. வாழ்வில் எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்று எண்ண வேண்டும். இந்த வாழ்க்கையின் தன்மை அறிந்தவர்கள் நாங்கள். வாழ்வில் மகிழ்ந்து கூத்தாடமாட்டோம்' என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பூங்குன்றனார் சிந்தித்திருக்கிறாரென்றால், இன்று நாகரீகத்தில் முன்னேறிய விஞ்ஞான யுகத்தில் அதை விடச் சிறந்ததாக அல்லவா நமது பண்பாடு இருக்க வேண்டும்.

உலகின் நிகழும் தீமைகளுக்கு மதவாதிகளும் கட்சித் தலைவர்களும் சமூகத் தலைவர்களும் அரசியல்வாதிகளுமே காரண காரத்தாக்களாக இருக்கின்றனர். அவர்கள் புகழ் போதையில் அல்லது அடிப்படைவாதத்தில் அல்லது சுயநலத்தில் அல்லது ஊழல்களில் கையூட்டக்களில் அல்லது தனிமனித விரோதங்களில் செயற்படுவதனால் மக்களுக்குள் தீமை தான் அதிகரிக்கின்றன. இந்நிலை நீங்க வேண்டுமாயின் வாழ்வின் உண்மையில் தெளிவு வேண்டும் என்கிறார் பூங்குன்றனார்.

'சிந்தனை சந்தேகங்களை வளர்க்கும்: சந்தேகம் ஆராய்ச்சியை உண்டாக்கும்: ஆராய்ச்சி உண்மைகளை கண்டுபிடிக்கும்: உண்மை உள்ளத்தில் புதைந்து கிடக்கும் மூடநம்பிக்கைகளைப் புதைக்கும்' என்றான் ஆங்கில அறிஞன் இங்கர்சால். மடமையிலிருந்து நாம் விடுபட வேண்டும் என்றால் அதற்கு நாம் வாழ்க்கையைப் பற்றியே சிந்திக்க வேண்டும்.

இப்படி எல்லோரும் சமரசத்தோடு உலாவும் இடமாக தமிழ்ச் சான்றோனாகிய பூங்குன்றனாரின் பூப்போன்ற இதயம் தனி ஒருவனது வாழ்க்கைக்கும் பொது வாழ்க்கைக்கும் இன்றியமையாத அருமை பெருமைகளை அழகுற வெளிப்படுத்துகின்றது.

எப்படியாயினும் எத்துணை இடர்ப்பட்டு நம் முன்னோடிகள் சேர்த்து வைத்த தமிழ்ச் செல்வத்தைப் போற்றியும் புகழ்ந்தும் காத்தும் கற்பித்தும் வாசித்தும் வாழ்ந்தும் வழிப்பட்டும் வருவதுதான் அந்த முன்னோர்களுக்கு நாம் செலுத்தும் முதல் மரியாதையாகும்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்கிற சிறந்த கோட்பாடு நமது ஒவ்வொருவரின் உள்ளத்திலும் பதிய வேண்டும். உலகமெல்லாம் அமைதியாக நிலைத்தாலன்றி எந்த ஒரு தனி மனிதரும் குடும்பமும் வீடும் ஊரும் நாடும் நிம்மதியாக வாழ முடியாது. அப்படியான சவாலைத்தான் இப்போது உலக மக்கள் எதிர்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் தங்கள் வீட்டுக்குள் தனித்திருக்கவும் விழிப்புணர்வோடிருக்கவும் தன் உயிராபத்திலிருந்து சமூகத்தில் தன்னைக் காக்கவும் ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.

'கொரோனா' என்ற கொடிய தொற்று நோய் இப்போது எல்லோரையும் கொல்லத் துரத்திக் கொண்டிருக்கின்றது. இந்த 'கொரோனா வைரஸ்' என்கிற நுண்மி மட்டும்தான் மரணம் சமத்துவமானது என்பதை உலக மக்களுக்கு உணர்த்திக் கொண்டிருக்கின்றது. எவ்வளவு பணமிருந்தாலும் எத்தனை படை பலமிருந்தாலும் எவ்வளவு ஆதிக்க பலம் இருந்தாலும் எவ்வளவு போராயுதங்களிருந்தாலும் அகில உலகை இந்த கொரோனா என்கிற நுண்மி இப்போது மனித விஞ்ஞானத்தையும் அறிவியலையும் வென்று விட்டது என்றுதான் சொல்லவேண்டும். வல்லரசுகளின் அகில உலக ஆதிக்கத்தையும் தோற்கடித்து விட்டது.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் சமகாலம் என்கிற அழிவுக்காலத்தில் ஏற்றத்தாழ்வு ஒருபோதும் வெற்றி கொள்ளாது என்பதை உலக மக்களுக்கு அவர்களது அனுபவத்தில் உணர்த்தியுள்ளது என்பதே இன்றைய எதார்த்தமாகும். அதனால் இன்றுள்ள உலகத்தலைவர்கள் இதயத் தூய்மையோடு சமத்துவத்தின் தூர நோக்கோடு சமதர்ம எல்லை காட்டிய ஆத்ம ஞானி கணியன் பூங்குன்றனாரை அடியொற்றினாலே போதும், உலகில் அமைதி திரும்பிவிடும். எத்துணை இடர்ப்பட்டு இலக்கியத்தில் சேர்த்து வைத்த 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற சமரச தமிழுணர்வை நமது நெஞ்சிருத்தி உலகமெல்லாம் ஒரு குடும்பம் என்று போற்றியும் புகழ்ந்தும் காத்தும் கற்பித்தும் வாசித்தும் வழிப்பட்டும் எல்லோரும் வாழ்வோம் இனிது.

isarudeen@thaiveedu.com

JM ACCOUNTING AND FINANCIAL SOLUTION INC.

"We provide reliable year around Tax and Accounting services."

Our Services included:

* E- file
* Personal Tax Returns (T1)
* Self-Employed Tax Returns
* Business, HST and Payroll Registrations & Bookkeeping
* Corporate Tax Returns (T2)
* Canada Revenue Agency's Audit assistance

Starting from $24.90 Plus tax

Phone: (647)- 351- 5622 / (416)- 722-5338 Fax: (647)- 351- 5620
1193A, Brimley Road, Suite 5, Scarborough, ON, M1P 3G5
jmaccfinancial@gmail.com

தொல்காப்பியம் - செய்யுளியல் - செய்யுள் உறுப்புகள்

- சி. சண்முகராஜா -

பகுதி: 2

செய்யுள் ஒரு காலத்தில் இலக்கியம், வரலாறு, சமயம், மருத்துவம், நீதி, சோதிடம் முதலிய அனைத்துத் துறைகளினதும் வெளிப்பாட்டுக்கு ஒரு கருவியாக இருந்தது. பிற்காலத்தில் மேல் நாட்டார் வருகையைத் தொடர்ந்து உரை நடை முக்கியத்துவம் பெறத் தொடங்கியது. அத்துடன் மேல்நாட்டுக் கவிதை இலக்கியத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களும் தமிழ்க் கவிதை இலக்கியத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தத் தொடங்கின. அசை, சீர், அடி, தொடை, யாப்பு போன்ற செய்யுள் உறுப்புகள் கொண்ட, யாப்பிலக்கண வரம்புகளைக் கடந்து உரைநடைப் பாட்டாகக் கவிதை வளரத் தொடங்கிப் பல ஆண்டுகளாகிவிட்டன. பேரிலக்கியங்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டு வசன கவிதைகள் வாழ்வு பெறும் காலத்தில் சுமார் மூவாயிரம் ஆண்டுகள் பழமையான தொல்காப்பியம் கூறும் செய்யுளியலையும் செய்யுள் இலக்கணத்தையும் அறிந்து கொள்வது பொருத்தமுடையதா என்கின்ற கேள்வியும் எழத்தான் செய்கிறது.

செய்யுளுக்குரிய யாப்பிலக்கண வரம்புகளை உடைத்துக்கொண்டு எழுதப்படுகின்ற கவிதைகளே புதுக்கவிதைகள் என்று பலர் கருதுகின்றார்கள். அத்தகைய கருத்தோடு வெறும் உரைநடை வசனங்களை முறித்துப்போட்டு கவிதை என்ற பெயரில் பலர் எழுதி வருகிறார்கள். இது ஏற்புடையதல்ல. புதுக் கவிதை வடிவங்களில் நல்ல சிறந்த கவிதைகளைப் படைக்கும் பெயர்பெற்ற கவிஞர்கள் பலரும் யாப்பிலக்கணம் நன்கு பயின்றவர்கள். அவர்கள் தங்கள் கவிதைகளை யாப்பிலக்கண வரம்புகளைக் கடந்து சென்று எழுதுகிறார்களே தவிர அவற்றை உடைத்தெறிந்து விட்டு எழுதுவதாக எனக்குப்படவில்லை. அவர்கள் எழுதும் கவிதைகளில் தொல்காப்பியர் கூறும் பல செய்யுள் உறுப்புகள் அமைந்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அத்தோடு இலக்கண வரம்புக்குள் இருந்து கொண்டு மரபுக் கவிதைகள் படைக்கும் படைப்பாளிகள் பலரும் இக்காலத்திலும் தொடர்ந்து மீளுருவாகி வருவதையும் காண்கிறோம். எனவே நவீன வடிவங்களில் புதுக்கவிதை எழுதுபவர்களும் மரபுவழி நின்று கவிதை படைப்பவர்களும் தொல்காப்பியம் கூறும் இலக்கண வரம்புகளைத் தெளிவாக அறிந்துகொண்டு கவிதை படைப்பது நல்லது. அத்துடன் தமிழ் இளங்கலை, முதுகலை மாணவர்களும் இவைபற்றி அறிந்து கொள்வது பயனுள்ளதாக அமையும்.

‘மாத்திரை யெழுத்தியல் அசைவகை எனாஅ யாத்த சீரே அடியாப் பெனாஅ’ எனத் தெடங்கிய செய்யுளியலின் முதல் நூற்பாவில் 34 செய்யுள் உறுப்புகளைப் பட்டியலிட்ட தொல்காப்பியர் அடுத்து வரும் நூற்பாக்களால் அவை ஒவ்வொன்றையும் விரிவாக எடுத்து விளக்குகின்றார். மே மாதத் ‘தாய் வீடு’ இதழில் தொல்காப்பியம் - செய்யுளியல் - செய்யுள் உறுப்புகள் (பகுதி ஒன்று) என்ற கட்டுரையில் பொருளதிகாரத்தின் முக்கியத்துவத்தைப் பற்றியும், தொல்காப்பியர் கூறி வைத்த 34 வகையான செய்யுள் உறுப்புகளுள் மாத்திரை, எழுத்துவகை ஆகிய இரண்டு உறுப்புகளும் செய்யுளுக்கு மட்டுமல்ல உரை நடைக்கும், உலக வழக்குக்கும் அடிப்படையான இலக்கணமாக வகுக்கப்பட்டிருப்பதால் அவை பற்றியும் மிக விரிவாக எழுதியிருந்தேன். மாத்திரை, எழுத்துவகை ஆகியவற்றிற்கு அடுத்ததாகத் தொல்காப்பியர் கூறுகின்ற அசை, சீர், அடி, யாப்பு எனத்தொடரும் ஏனைய செய்யுள் உறுப்புகள் யாவும் செய்யுள் இயற்றுவதற்கு மிகவும் அடிப்படையாவை. அவற்றை இக்கட்டுரையில் சுருக்கமாகத் தருகின்றேன்.

அசை - எழுத்துகளுள் ஒன்றினை மற்றொன்றோடு சேர்த்து அசைத்து (ஒலித்து) இசை கொள்வதே அசை எனப்படும். எழுத்துகள் தனித்தோ இணைந்தோ தக்க ஒலியுடன் சீருக்கு உறுப்பாகி நிற்பதே அசையாகும். அசையே செய்யுளுக்கு முதலில் அடிப்படையானதாகும். குறில், நெடில், ஒற்று என்னும் 3 வகை எழுத்துகளும் அசைக்கு உறுப்புகளாகின்றன. அசைகளில் நேரசை, நிரையசை எனப்படும் இருவகை அசைகள் அடிப்படையானவை. அவை இயலசை எனப்படும், நேரசை நிரையசை ஆகியவற்றுடன் குற்றியலுகரம் சேர்ந்து வருவது நேர்பு, நிரைபு எனப்படும். அவை உரியசை என அழைக்கப்படும்.

> “செய்யுள் உறுப்புகள் ஒன்றிலிருந்து இன்னொன்றாகக் கட்டமைக்கப்பட்டிருப்பதை அவதானிக்கையில் தமிழ் மொழி அறிவியல் ரீதியான கட்டமைப்பு நுட்பத்துடன் வளர்ச்சியடைந்து வந்திருப்பதைப் புரிந்துகொள்ளலாம்.”

தனிக்குற்றெழுத்தோ, தனி நெட்டெழுத்தோ, மெய்யெழுத்து(ஒற்று)டன் சேர்ந்தோ சேராமலோ வருவது நேரசையாகும். ஈரெழுத்தால் ஆகிய அசை நிரையசை எனப்படும். இருகுறில் எழுத்துகள் இணைந்து அல்லது குறிலெழுத்தும் நெடிலெழுத்தும் இணைந்து ஒற்றெழுத்துடன் சேர்ந்தோ சேராமலோ வருவது நிரையசையாகும்.

சீர் - நேரசை, நிரையசை இருவகை அசைகளும் தனித்தாவது, இரண்டும் மூன்றும் தொடர்ந்தாவது சேர்வது சீர் எனப்படும். சீர் என்பதற்கு ஓசை என்பது பொருளாகும். சொல்லானது அசைகள் பொருந்தி ஓசை புலப்பட (சீர்கொள்ள) நிற்பதால் சீர் எனப் பெயர் பெற்றது. ஒரு சீரில்(சொல்லில்) எத்தனை அசை இடம் பெற்றுள்ளதோ அந்த அசையின் எண்ணிக்கையின் அடிப்படையில் சீர் நான்காக வகைப்படுத்தப்பட்டுள்ளது. நான்கிற்கு மேற்பட்டுச் செய்யுளில் சீர்பகுப்பு இல்லை. அவை ஓரசைச்சீர் (2), ஈரசைச் சீர் (4), மூவசைச்சீர் (8)நாலசைச் சீர்(16) என்பனவாகச் சீர்களின் எண்ணிக்கை மொத்தமாக 30 ஆகும்.

அடி - சீர்களால் அமைந்ததே அடியாகும். இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சீர்கள் தொடர்ந்து நிற்பது அடி எனக் கூறப்படுகிறது. சீர்கள் இணைந்து தளைகள் பொருந்தி நின்று செய்யுளுக்கு உறுப்பாகத் தொடர்ந்து நடப்பதால் அடி எனப் பெயராகிறது. செய்யுள்களில் அடி என்பது வேறு. வரி என்பது வேறு. ஓர் அடியை இரண்டு வரிகளாகவும், பல வரிகளாகவும் எழுதலாம். ஓர் அடிக்கு 2 சீர்கள் முதல் 32 சீர்கள் வரைக்கும் வருவதுண்டு. சீர்களின் எண்ணிக்கைக்கேற்ப அடிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அடி வகைகள் - 2 சீர்கள் கொண்டவை குறளடியெனவும், 3 சீர்கள் கொண்டவை சிந்தடியெனவும், 4 சீர்கள் கொண்டவை அளவடியெனவும் 5 சீர்கள் கொண்டவை நெடிலடியெனவும், 5 சீர்களுக்கு மேற்பட்ட சீர்கள் கொண்டவை கழிநெடிலடியெனவும் அடி வகைகள் கூறப்படுகின்றன.

யாப்பு - அடிதொறும் பொருள்படச் செய்வதோர் செய்கை யாப்பு எனப்படும். குறித்த பொருளை இறுதியடியளவும் முற்றுப்பெற நிறுத்துதல் யாப்பு என்பார் உரையாசிரியர் இளம்பூரணர். இலக்கிய அடிப்படை வகைகளைக் குறிக்கும் கோட்பாடாகத் தொல்காப்பியத்தில் இது இடம் பெறுகின்றது என்று பேராசிரியர் தமிழண்ணல் விளக்கம் கூறுவார். யாப்பு என்பது பிற்காலத்தில் செய்யுள் வடிவத்தை மட்டும் குறிப்பதாகவுள்ளது.

மரபு - குறித்த ஒருபொருளை விளக்கச் சொற்களைப் பயன்படுத்தும்போது பெயற்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்னும் நான்குவகை இயற்சொற்களாலும், ஏனைய திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகிய சொற்களாலும் ஏழுவகை வழுவும் படாமல் புணர்ப்பது மரபு என்பார் இளம்பூரணர். ஒரு காலத்தில் வழங்கிய சொல் பிறிதொரு காலத்தில் வழங்காமல் போதலும், ஓரிடத்தில் வழங்கும் சொல் பிறிதோரிடத்து வழங்காமையும் உண்டு. பொருளும் காலத்தாலும் இடத்தாலும் வேறுபடும் தன்மையும் உடையது. எனவே செய்யுளில் அவ்வக்காலத்து வழக்குச் சொற்களையே பயன்படுத்த வேண்டும் என்று கூறுவார் பேராசிரியர்.

தூக்கு - தூக்கு என்பது ஓசையைக் குறிக்கிறது. அக்காலத்து நான்கு வகைப் பாக்களுக்கு அவற்றிக்கே உரித்தான தனித்தனி ஓசையுண்டு. அகவலோசை, செப்லோசை, துள்ளலோசை, தூங்கலோசை என நான்கு வகை ஓசைகளும் அவற்றின் விரிவும் உண்டு. ஒவ்வொருவகைப் பாக்களும் அவற்றிற்குரிய இலக்கணம் பிழையின்றிப் பொருந்தி வரும்போது அவற்றுக்குரிய ஓசையைப் பெற்று வருவதைக் காணலாம்.

தொடைவகை- சீரும் அடியும் தொடுத்து நிற்பது தொடையாகும். இது மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை என ஐந்து வகையையும் அவற்றின் விரிவையும் உடையது. மோனை, எதுகை, அளபெடை ஆகிய தொடைகள் எழுத்தாலும், இயைபுத்தொடை எழுத்தாலும் சொல்லாலும், முரண்தொடை பொருளாலும் அமைகின்றன. தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும் என்பதற்கிணங்க புதுக் கவிதைக்காரர்கள் கூடத் தொடைகள் அமையத் தமது கவிதைகளைப் படைப்பதைக் காணமுடிகிறது.

நோக்கு - மாத்திரை, எழுத்து, அசை, சீர், தொடை, அடி அனைத்தும் காரணம் கருதி அமைக்கப்படவேண்டும். அவ்வாறு நோக்குடையவாகச் செய்தல் நோக்கெனும் உறுப்பகும் என்று பேராசிரியர் உரை கூறுவார். செய்யுளின் ஒவ்வொரு உறுப்பும் சிந்தித்துச் சிந்தித்துப் பயன் தரும் வகையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த நோக்கு அமையாத செய்யுள் செய்யுளாகாது என்பது புலவர்கனினது கருத்தாகும்.

பா - செய்யுள்கள் யாப்பிலக்கணத்தில் பா என வழங்கப்படுகின்றது. ஆசிரியப்பா, வஞ்சிப்பா, வெண்பா, கலிப்பா, பரிபாடல், மருட்பா என ஆறு வகையான பா வகைகள் பற்றித் தொல்காப்பியர் விரிவாக இலக்கணம் வகுத்துள்ளார்.

அளவியல் - பாக்களுக்கரிய அடிவரையறை அளவியல் எனப்படும். மேற்கூறப்பட்டுள்ள பாவகைகளுக்கு அடிவரையறைகள் வகுக்கப்பட்டுள்ளன. ஆகக்குறைந்த அடிவரையறை சிற்றெல்லையாகவும், ஆகக்கூடிய அடிவரையறைபேரெல்லையாகவும் ஒவ்வொருபாக்களுக்கும் தொல்காப்பியத்தில் அளவியல் இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

தொடர்தல் 49ம் பக்கம்

தொல்காப்பியம்...

48ம் பக்கத் தொடர்ச்சி...

திணை - செய்யுளில் காணப்படும் ஒழுகலாறுகளை அகம்புறம் என்று பாகுபடுத்தினார்கள். அவற்றை அறிவதற்குரிய கருவி திணை எனப்படும். கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், பெருந்திணை ஆகிய அகத்திணை ஏழும் அவற்றிற்குரிய புறத்திணைகளான பாடாண், வஞ்சி, வெட்சி, வாகை, உழிஞை, தும்பை, காஞ்சி ஆகிய ஏழும் திணையில் அடங்கும்.

கைகோள் - அகத்திணை வேறுபாடுகளாகிய களவு கற்பு என்பவற்றை அறியச்செய்வது கைகோளாகும்.

கூற்றுவகை - இது களவியலிலும், கற்பியலிலும் கூற்று நிகழ்த்துவதற்குரியவர்கள் யார், அல்லாதவர்கள் யார் என்பதனைக் கூறுவதாகும்.

கேட்போர் - இன்னார்க்குச் சொல்கின்றது இதுவெனத் தெரிவித்தல்.

இடம் - ஒரு செய்யுள் கேட்டால் இது இன்ன இன்ன இடத்து நிகழ்ந்தது என்று அறிவித்தற்கு ஏதுவானதொரு உறுப்பாகும். இடம், களம் என்பன ஒரு கருத்துடையனவென்றும், முல்லை, குறிஞ்சி முதலாயினவும், இரவுக்குறி, பகற்குறி முதலாயினவும் மற்றும் தன்மை, முன்னிலை, படர்க்கை என்பனவும் இவற்றைக் குறிக்கும் என்பார்கள் உரையாசிரியர்கள்.

காலவகை - இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று பொருள் நிகழ்ச்சியைக் கூறுவதும், சிறுபொழுது, பெரும்பொழுது என்னும் காலங்களைக் கூறுவதும் காலவகையில் அடங்கும்.

பயன் - எந்தவொரு செய்யுளாயினும் பயன்படக் கூறப்பட வேண்டும். செய்யுளிற் சொல்லிய பொருளால் பிறிதொரு பொருள் தோன்றச் செய்தலும் பயன் ஆகும்.

மெய்ப்பாடு - செய்யுள் இயற்றும்போது அவை உணர்ச்சிகளைத் தோற்றுவிக்கக் கூடியதாகச் செய்யப்பட வேண்டும். கண்ணீர் அரும்புதல், மெய்சிலிர்த்தல் போன்ற உணர்ச்சிகள் வெளிப்படச்செய்தல் மெய்ப்பாடாகும் என்பார் நச்சினார்க்கினியார்.

எச்சவகை - எச்சம் என்பது சொல்லெச்சம் குறிப்பெச்சம் எனச் சொல்லப்படாத மொழிகளைக் கூற்றால் அல்லது குறிப்பால் அறிந்து கொள்ளச் செய்தல்.

முன்னம் - இவ்விடத்து, இன்ன மொழியை, இன்னார்க்குச் சொல்லத் தகும் என்று குறித்து உரைப்பது முன்னம் எனப்படும். இடமும் காலமும் அறிந்து கேட்போர்க்குத் தக்கவாறு மொழிதலை இது குறிக்கும்.

பொருள்வகை - பொருள் என்பது புலவன் தானே தோற்றிக்கொண்டு செய்வதோர் பொருண்மை என்பார் உரையாசிரியர்கள்.

துறைவகை - அகத்திணை ஏழிற்கும் புறத்திணை ஏழிற்குமான முதற்பொருள் கருப்பொருள் ஆகியன திறம்பாடுடையதாய் வருவது துறை எனப்படும்.

மாட்டேறு - மாட்டு என்பது கொழுவுதல். செய்யுள்களில் முன்னும் பின்னும் உள்ள தொடர்களைக் கொண்டுகூட்டிப் பொருள் கொள்ளுதல் மாட்டேறாகும்.

வண்ணம் - வண்ணம் என்பது இக்காலத்தில் சந்தம் என அழைக்கப்படுகின்ற செய்யள்களில் அமையக்கூடிய ஓசை வேறுபாடாகும். தொல்காப்பியர் 20 வகையான வண்ணங்களைக் குறிப்பிடுவார். இவை ஒன்றோடொன்று பிறழ்ந்து இன்னும் பலநூறு வகையான ஓசையைத் தோற்றுவிக்கும் என்பர் உரையாசிரியர்கள்.

மாத்திரை முதலாக வண்ணம் ஈறாக 'ஆறுதலையிட்ட ஐந்நாலைந்து' என்று தொல்காப்பியர் கூறிவைத்த 26 வகையான செய்யுள் உறுப்புகளுள் சிலவற்றை விரிவாகவும் ஏனையவற்றைச் சுருக்கமாகவும் இரு கட்டுரைகளிலும் எழுதியுள்ளேன். செய்யுள் இயற்ற விரும்புகின்றவர்கள் கட்டாயமாக அவற்றை ஒரு ஆசிரியரிடம் முறையாக விரிவாகக் கற்றறிந்து கொள்ளவேண்டியது அவசியம். எனினும் செய்யுளுக்கும், இக்காலக் கவிதைகளுக்கும் மிகவும் அடிப்படையான அசை, சீர், அடி, தொடை, பா, வண்ணம் போன்ற செய்யுள் உறுப்புகளைப் பின்னர் தொடருகின்ற கட்டுரைகளில் படிப்பவர்கள் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் எழுதுவதற்கு எண்ணுகிறேன். தொல்காப்பியத்தில் கூறப்பட்டவாறு எழுத்திலிருந்து அசையும், அசையிலிருந்து சீரும், சீரிலிருந்து அடியும் என்ற வகையில் செய்யுள் உறுப்புகள் ஒன்றிலிருந்து இன்னொன்றாகக் கட்டமைக்கப்பட்டிருப்பதை அவதானிக்கையில் தமிழ் மொழி அறிவியல் ரீதியான கட்டமைப்பு நுட்பத்துடன் வளர்ச்சியடைந்து வந்திருப்பதைப் புரிந்து கொள்ளலாம்.

(தொடரும்)

shanmugarajah@thaiveedu.com

கோலங்கள்

அரங்கேற்றம், கலைநிகழ்ச்சி, திருமணம், பூப்புனித நீராட்டு போன்ற வைபவங்களுக்கு கோலம் போட்டு அலங்கரிக்க,
Floor Decoration for Arangetram Wedding and other Cultural Functions.

Bhamini:

647 294 0736,
416 491 6057.

FOR ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
RESIDETIAL & COMMERCIAL INVESTMENT

Nobody in the world sells more real estate than RE/MAX

FOR SELLERS
- Free Home Market Evaluation
- Professional Home Staging
- Professional Photos & Virtual Tour
- Best Value for Your Property
- Weekly Open House Until Sold
- Social Media Marketing
- Newspaper & Flyer Advertisement
- Competitive Commission Structure

FOR BUYERS
- Top Negotiator
- Desired Property For Less Price
- Professional Advice
- Assist with Mortgage, Inspection & Lawyers

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
ArunDavidBala@gmail.com
416.270.1111 416.270.7000
3-1286 KENNEDY ROAD, TORONTO, ON M1P 2L5

For All Your Real Estate & Mortgage Needs

MORTGAGE ALLIANCE
Access Inc.
Lic #11404 Independently Owned and Operated
www.mortgagealliance.com/arunbala
209-8130 Sheppard Ave E, Toronto ON, M1B 3W3

Arun David Bala
M.Sc, B.Sc (Hons) Sales Representative & Mortgage Agent
416 834 2854

ஒரு யாழ்ப்பாணத்து வீடு - திரைப்படம்

- மு. புஷ்பராஜன் -

இந்தச் 'சமூக விலக்கல்' காலங்களில் பார்த்த படங்களில் ஒன்று 'ஒரு யாழ்ப்பாணத்து வீடு'. இது 'காலம்' செல்வத்தின் 'உபயம்'. இந்தத் திரைப்படத்தைப் பார்த்தவுடன் இதைப் பற்றி எழுத வேண்டும் எனத் தீர்மானித்துக்கொண்டேன்.

பொன்வயலில் கிராமத்தின் வீட்டில் 'அரிக்கன் லாம்பின்' (Hurricane lamp) மங்கல் ஒளியில் கதை சொல்லியின் குரல் கேட்கிறது. அலுத்துச் சலித்தாலும் ஆர்வம் குறையாத சிவப்பிரகாசம், கதை எழுதுவது மட்டுமின்றித் தனது கதை திரைப்படமாக வெளிவரவேண்டும் என்பதும் அவரின் கனவு. தன்னையும் தனது கனவையும் யாரும் கவனத்தில் எடுப்பதில்லை என்பதை ஒரு 'பிறத்தியான்' நோக்கில் அறிந்தும் வைத்துள்ளார். அவரது எழுத்துலகக் கனவுகளைக் தூர எறிந்துவிட்டு, தங்களைப் போன்ற கனவுகளையே அவரும் காணவேண்டுமென்று அயலவர் நினைப்பதுதான் அவருடைய பெரும் கவலை. அவரோடும் அவரின் கதை எழுதலோடும் சதா முரண்படுபவள் அவரது மனைவி சற்குணவதிதான். கலைஞர்களுக்கும் மனைவிகளுக்கும் இடையில் சீரான உறவு அமைந்துவிட்டால்தான் அது அதிசயம்!

சற்குணவதி யதார்த்தவாதி. அவளது கவலையெல்லாம் பிறரைப்போல் வீடு கட்ட வேண்டும், மதில் கட்டவேண்டும், இரும்புக் கேற் போடவேண்டும். அயலவர் பலரைப்போல் வெளிநாடு சென்று கைநிறையச் சம்பாதிக்கவேண்டும். அதை விட்டுவிட்டு, சிவப்பிரகாசம் 'கோப்பரட்டியில்' அரிசி மூட்டைகளை எண்ணிக்கொண்டிருந்தால் அவள் என்ன செய்வாள்? அயலெல்லாம் உன்னை 'லூசு' என்று நினைப்பவதாகவும் சொல்லிப் பார்த்தாள். எதுவும் எடுபடவில்லை. அவளது கோபமெல்லாம் சைக்கில்கடை தங்கராசுமீதுதான். அவர்தான் அவளது கணவனது படமெடுக்கும் ஆசைக்கு விசிறிக்கொண்டிருப்பவர். சிவப்பிரகாசம் தனது கதையில் வரும் வில்லியே சற்குணவதிதானெனச் சொல்லிக்கொண்டார்.

தங்கராசு தனக்கு ஆதரவாக இருந்தாலும், அவருக்கு தான் எழுதும் கதை எம்ஜியார், சிவாஜி படங்களின் கதைகள் போல் இல்லை என்ற கவலை உண்டு என்பதை சிவப்பிரகாசம் அறிந்துதான் இருந்தார். இதனால், அவர் தங்கராசுவுக்கு கதை என்றால் என்ன என்று விளக்கம் அளிக்க முயன்றார். 'திரும்பிப் பார்க்கும் இடங்களெல்லாம் கதைகள்தான் இருக்குது. இந்தப் பொன்வயல் வெளிகள், தோட்டங்கள், கோவில்கள் எல்லாம் கதைகளைத்தான் கொண்டிருக்கின்றன' என்று ஒரு தத்துவ வகுப்பையே எடுத்துவிட்டார். தொடர்ந்தும் அவர் தங்கராசாவிடம் உனது வீட்டிற்கு முன்னால் யார் இருக்கிறார்கள் என்ற கேள்வியைக் எழுப்பினார். 'பாக்கியமக்கா வீடு' என்று பதில் வந்தது. இப்போது பாக்கியமக்கா வீட்டுக் கதை பார்வையாளர்கள் முன் விரிகிறது.

இரண்டு வளர்ந்த பின்னைகளை வைத்துக்கொண்டு கணவனை இழந்த பாக்கியமக்கா இடியப்பம், ஒடியல், பனாட்டு, பலகாரம் செய்து வித்து சீவியத்தைக் கொண்டு நடத்தவே கஸ்ரப்படுகிறாள். மூத்தவள் கமலினி உயர்தரம் படித்துவிட்டு ஆசிரியர் பயிற்சிக்குப் போய் கொண்டிருக்கிறாள். தம்பி செந்தில் தாயின் செல்லம். வளர்ந்தும் வீட்டின் வறுமை நிலை அறியாமல் வெட்டியாகத் திரிகிறான். கமலினிக்கும் தபால் கந்தோரில் பியூன் வேலை பார்க்கும் கனகுவிற்கும் காதல். கனகுவின் தங்கைக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. அதனால் கமலினியின் கல்யாணம் தள்ளிப்போய்கொண்டிருக்கிறது. பாக்கியமக்கா இந்தக் காதலை அறிவாள். மகள் கரைசேர்ந்தால் போதுமென்ற அக்காதலை ஊக்கிவித்தும் வந்தாள். 'எப்பவாம் கலியாணம்' என கமலினியை இடைக்கிடை கேட்கவும் தவறுவதில்லை. கமலினியின் வெறும் காதுக்கு கனகு ஒரு சோடி தோடும் பரிசளித்திருந்தான்.

இந்த நிலையில் அவ்வூர் விதானையாரின் மகன் தனசேகரன், தனேஸ் என்ற நவீன பெயருடன் நோர்வேயில் இருந்து பொன்வயல் கிராமத்துள் காலடி எடுத்து வைத்தான். தனேசுடன் செந்திலுக்கு ஏற்பட்ட பழக்கத்தின் வழியாய் தனேஸ் ஒரு நாள் கமலினியைக் காண்கிறான். தனேஸ் கண்ணில் மின்னல் தெறிந்தது. பின்னர் பாக்கியமக்கா வீட்டிக்கும் வருகிறான். அதன் பின் கனகுவுடனான பாக்கியமக்காவின் உறவு அடியோடு மாறிப்போகின்றது. பாக்கியமக்கா, செந்தில், தனேஸ் முக்கூட்டில் ஒரு ஒப்பந்தம் - தனேசுக்கு கமலினியைக் கட்டிக்கொடுப்பதும் அவன் செந்திலை நோர்வேக்கு எடுப்பதாகவும் முடிவாகியது. கமலினி எவ்வளவே மறுத்தபோதிலும் பாக்கியமக்காவின் ராஜதந்திர உரையாடல்கள் முன்னால் கமலினி விற்பனைப் பொருளாகிறாள். ஏமாற்றம், அவமானம், இழிவு அகியவைகளினால் கனகு நொருங்குண்டு போனான்.

இருபத்தியாறு வருடங்களின் பின் இக்கதை நோர்வேயில் தொடர்கிறது. புகையிரத நிலையத்தில் இளம் பெண் காத்திருக்கிறாள். அவள் வேறு யாருமல்ல. கமலினியின் இரண்டாவது மகள்தான். காரில் வந்த தனேஸ் அவளை அழைத்துச்செல்கிறான். 'ஏனப்பா அவசரமாக வரச்சொன்னீர்கள்' என்ற கேள்விக்கு 'வீட்டில் கதைக்கலாம்' என்கிறான்... வீட்டில் பாக்கியமக்கா புலம்பெயர்ந்தோர் பாட்டியர் கோலத்துடன் எதிர்கொள்கிறோம். கமலினியின் மூத்த மகள் லக்சோனா யூனிவசிற்றியில் உதவி விரிவுரையாளராகவும், தங்கை பேர்கன் யூனிவசிற்றியில் முதலாம் ஆண்டு கல்வி கற்பவராகவும் உள்ளனர். பொன்வயலில் கதை சொல்லி சிவப்பிரகாசம் குடும்பம் இப்போது கனடாவில்.

சிவப்பிரகாசத்தின் மனைவி சற்குணவதி நோர்வே வந்தபோது பாக்கியமக்கா குடும்பத்தைச் சந்திக்கிறார். தான் ஊருக்குப் போய் வந்த விடயத்தைத் தெரிவித்தவுடன் பாக்கியமக்கா ஆர்வமாக ஊரவர் பற்றி விசாரிக்கிறாள். கமலினி உரையாடலில் பங்குபற்றாமல் கேட்டுக்கொண்டிருக்கிறாள். உரையாடலின் இடையில் டிங்கிரி பாபா பிறந்த நாள் கொண்டாட்டத்திற்காக பாக்கியமக்கா வெளியே சென்றுவிடுகிறாள். தனித்திருந்த கமலினி ஊரில் நடந்தவைகளைச் சற்குணவதி மூலம் அறிகிறாள். கனகு திருமணம் செய்து குடும்பம் நடத்துவதை விடவும் குடித்துக்கொண்டு திரிந்ததால் மனைவி பிரிந்துசென்று, பின்னர் வன்னியில் இறந்ததையும் கனகு அனாதைப் பிணமாய் செத்ததையும் சைக்கில்கடை தங்கராசு இந்தியாவில் அகதி முகாமில் இறந்ததையும் அறிகிறாள். கனகுவின் இறுதிக் கால சம்பவங்கள் கமலினியை கலங்கடித்துவிட்டது.

என்றும் தனது தாய் தனித்த நினைவுகளுடன் ஒதுங்கியிருந்ததை அவதானித்த அவளது மூத்த மகள் தாயின் பூட்டியிருந்த மனக்கதவை தட்டிக்கொண்டிருந்தாள். ஒருநாள் அந்தக் கதவு திறந்துகொண்டது. திருமணமானதிலிருந்து தாய் பொன்வயலின் தன் மனோரதிய நினைவுகளைப் புதைத்து தன் மனக்கதவினை இறுகச் சாத்திக்கொண்டதையும் குடும்பத்திற்காக உழைத்து உழைத்து நடைப்பிணமாக வாழ்ந்ததையும் அறிகிறாள். தனது தாய் தனது மகிழ்ச்சிக்கான வாழ்க்கையை வாழவேண்டுமென விரும்புகிறாள். எஞ்சியிருக்கும் காலத்தையாவது தனக்காக அவள் வாழவேண்டும் எனக் கருதினாள். கமலினியைச் சூழ்ந்திருந்த அப்பா, அம்மம்மா, மாமா ஆகியோரின் மரபார்ந்த வாழ்க்கை முறைகளிலிருந்து விடுவித்து தனியாக கொண்டுசென்றுவிடுகிறாள். கமலினி தனது திறந்த மனக் கதவுவழி பொன்வயலில் தொலைந்துபோன தனது வாழ்க்கை நினைவுகளுடனும் நினைவின் சின்னங்களுடனும் வாழ்கிறாள். சிவப்பிரகாசமும் மடிக்கணினி உதவியுடன் தனது கதையை முடிந்துக்கொள்கிறார்.

இக்கதை மேலே குறிப்பிட்ட ஒழுங்கு வடிவில் திரைப்படத்தில் காட்சிப்படுத்தப்படவில்லை. பொன் வயல், நோர்வே என மீள் நினைவுகளின் தொகுப்பாக நகர்கின்றன. பொன்வயல் கறுப்பு வெள்ளையாகவும் நோர்வே வர்ணங்களாகவும் அமைந்துள்ளன. மிகக் குறைந்த வளங்களுடன், மிகையற்ற நடிகர்கள், கூர்மையான உரையாடல்கள். மெல்லிய இசை - அவை பெரும்பாலும் வானொலிப் பாடல்கள்தான் ஆனால் பொருத்தமாக ஒலிக்கிறது. இத்திரைப்படத்தில் பாக்கியமக்காவின் உருவாக்கம் தனிச் சிறப்பு வாய்ந்தவை. அவர் தனது குடும்ப நலனுக்காக எவருடனும் இணங்கிப் போவதற்கும் எவரையும் பகைப்பதற்கும் சூழ்நிலைக்கு அமைவாக எவரையும் இழிவுபடுத்துவதற்கும் அவரது தாய் உள்ளம், அதுவும் ஏழ்மையால் சூழப்பட்ட தாயுள்ளம் தயாராகவே இருக்கிறது. மகளிடம் காதலுக்கான ஆதரவு, நோர்வேயால் தலைகீழாக மாறியதையிட்டு எந்தவித குற்றவுணர்வும் அவளிடம் இல்லை. மகள் கனகுவுடன் கதைப்பது இப்போது அவளுக்குப்பிடிக்கவில்லை. அவனுடனான எல்லா உரையாடல்களிலும் எரிச்சலை வெளிப்படுத்துகிறாள். கனகுவை ஒரு ஓட்டைச் சைக்கிளில் வீதி வீதியாய் போய் விசில் ஊதுகிறவன் என்று இகழ்கிறாள். படம் பார்ப்பவர்கள் இந்தப்பாத்திரத்தை மறக்கவே முடியாது என்று நினைக்கிறேன்.

பாக்கியமக்காவின் குணவியல்புகளை யாழ்ப்பாணத்து மனோபாவம் என்று குறுக்க முடியாது என்றே நினைக்கிறேன். வறுமை சூழ்ந்த வாழ்வில் கைம்பெண், கல்யாண வயதில் பெண்ணை வைத்திருக்கும் எல்லாத் தாய்மாரிலும் பாக்கியக்காவைக் காணலாம். கமலினியின் பாத்திரமும் அவ்வகையானதே 'எல்லோரும் காணியை வித்து, நகையை வித்து வெளிநாட்டிற்கு அனுப்புகினம், நீங்க உங்கட பிள்ளய வித்து வெளிநாட்டிற்கு அனுப்புறியளோ' என பொன்வயலில் கூறியதும் இருபத்தியாறு வருஷங்களுக்கு முன் எப்பவோ முடிஞ்ச கதை என தாய் கூறும்போது... அம்மா அது உங்களுக்குத்தான் முடிஞ்ச கதை.., எனக்கு சாகும் வரை தீராத கதை. என்ற அழுகைக் குரல் இன்று புலம்பெயர்ந்து வாழும் எத்தனையோ தாய்மாரில் எதிரொலித்த, எதிரொலிக்கும் கேள்விதான்.

தனேஸ் தனது இளைய மகளிடம் 'தாலியைக் கழட்டிவிட்டுப் போயிற்றாளே' எனத் தாலியை கையில் வைத்திருப்பதும், தனேஸின் மினுமினுக்கும் தோட்டை கமலினி அணிந்திருப்பதைக் கனகு பார்க்கும் காட்சியில் பார்வையாளர்களும் உணர்ந்திருப்பார்கள். அதன்பின் தோட்டை குளோசப் காட்சியில் பார்வையாளருக்காகக் காட்டுவதும் தேவைதானா? கமலினியின் மனதை தாய் தன் வார்த்தைகளால் கரைக்கும்போது உலைக்களத்தின் இரும்புத் துண்டை சம்மட்டியால் அடித்து வளைப்பதும், கமலினியின் மூத்த மகள் தங்கைக்குத் தாயின் திருமணம் பற்றிக் கூறுகையில் கடலில் மிதக்கும் போட்டைக் காட்டுவதும் அவர்கள் திருமண வாழ்வு தோல்வி என்பதற்கு போட் அமிழ்ந்ததும் மலிவான குறியீடுகள்.

ஒரு சாதாரண கதைதான், ஆனால் திரைப்படமாக Flashback முறையில் ஒரு கலை வடிவமாக மாற்றம் பெறுகிறது. இத்திரைப்படம் ஆர்வக்கோளாறினால் எடுக்கப்பட்ட படமல்ல என்பதுடன், இத்துறை சார்ந்து அறிவும் திறமையும் உள்ளவர்களால் உருவாகியவை என்பதை நெறியாளர் சிவசாமி பிரேம்ராஜ் உணர்த்தியுள்ளார்.

pushparajan.m@thaiveedu.com

Markham
Sheppard
Daniels FirstHome™ at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HIGHER STANDARDS
*Independently owned & operated
HomeLife/Champions Realty Inc, Brokerage*
Office :416-281-8090
E-mail: raveenvi@gmail.com
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE

அன்னையின்
பிரகதி
சித்தா மூலிகைச்
சிகிச்சை நிலையம்
இயற்கையே இன் மருந்து.
காய்ச்சல், புற்றுநோய் மற்றும் மரபணு
நோய்கள் வரை சிகிச்சை அளிக்கப்படும்
நிவாரணம் பெற அழையுங்கள்
Master Healer Premila. S
பாரம்பரிய மரபணு சித்த மருத்துவர் (இராசவைத்தியம்) இரசவாதி
Hereditary Siddha Practitioner (Royal Physician Treatment),
Spagyric Alchemist (CAN)
Alchemist Siddha System of Medicine (IND),
Natural Medicine Practitioner© (CAN)
PHONE: 647-278-3100
Email: pragatishc@gmail.com
Web: www.pragatisiddha.com
880 MARKHAM ROAD, SCARBOROUGH, ON, M1H 2Y2
(Painted Post & Markham Rd)

உயிரின் மெய் மயக்கம்

- தீ. தாரணி -

பகுதி: 3

மதன் என்ன அனுப்பியிருப்பான்? அதைப் பார்க்க வேண்டுமென மனம் துடித்தாலும் அண்ணன் மார் நின்றதால் செல்வியால் உடனடி யாகப் பார்க்கவும் முடியவில்லை, பதில் அனுப்பவும் இயலவில்லை.

அவளது தந்தை ஒரு கணக்காளர் என் பதால் அண்ணன்மார் சேர்ந்து செய்யும் தொழிலுக்குத் தேவையான நிதி சம்பந்த மான ஆலோசனைகளை அவ்வப்போது வழங்குவார். அவரிடம் கேட்டுத்தான் அவர்கள் எந்த முக்கிய முடிவுகளையும் எடுப்பார்கள். அண்ணன்மார் தந்தையிடம் கணக்குவழக்கு பற்றிப் பேசத்தொடங்க, செல்வி தன் அறைக்குள் சென்றாள்.

மதன் ஏன் பலமுறை தொலைபேசி எடுத் தான்? அவள் மனம் குழம்பிக் கொண்டி ருந்தது,

மாலை நேரம் என்பதால் வழக்கம்போல் முகம் கழுவி, விளக்கேற்றிக் கும்பிட்டு விட்டு அறைக்குத் திரும்பி வரும்போது தங்கை தேனுவின் இனிய ஞாபகங்கள் கண்முன் வந்து வந்து நிற்க, செல்வியின் மனம் சோர்வடைந்தது.

ஆர்வத்துடன் காத்திருந்தும், இன்றும் தங்கையுடன் கதைக்க முடியாமல் போனதை நினைத்து சற்று வருந்தினாள். அவளின் ஞாபகங்கள் செல்வியின் மன தில் உருண்டோடின.

தன்னை விட அண்ணன்மாரில் தான் அம்மாவிற்கு அதிகமாகப் பாசமுண்டு என்று தேனு அடிக்கடி கூறிச் செல்லச் சண்டைகள் பிடிப்பாள். பதிலுக்கு அண் ணன்மாரும் அவளை வெறுப்பேற்றுவதற் காக அம்மாவுடன் சேர்ந்து 'உண்மை தானே...! தேனுவுக்குப் பொறாமையா...?' என்று கிண்டல் பண்ணுவதும் வழக்கமாக நடக்கும் நாடகம்தான்.

தேனுவின் பிரிவு செல்விக்குப் பெரிய தாக்கமாக இருந்தது. அண்ணன்மாரும் மணமுடித்துச் சென்றுவிட்டார்கள். சட்டெ னத் தனிமைக்குள் தான் சிக்கிவிட்டதாக உணர்ந்தாள் செல்வி. அவள் தவிப்பு மற்றவர்களுக்குத் தெரிந்தாலும் அவளைச் சமாதானப்படுத்த வழியற்றிருந்தார்கள்.

தோழியாகப் பழகும் சின்னண்ணி செல் வியோடு நேரம் செலவழித்து, தான் செல் லும் யோகா வகுப்பிற்கு அழைத்துச் சென்றாள். அது செல்வியின் உடலளவி லும், மனவளவிலும் நல்ல மாற்றங்களைக் கொண்டுவரத் தொடங்கின. சின்னண்ணா வின் புத்திமதியினால் மீண்டும் படிப்பைத் தொடரவும் ஒத்துக்கொண்டு பகுதி நேர மாக Masters of Business Administration (MBA) படிக்கவும் ஆரம்பித்தாள் செல்வி.

கொஞ்சங் கொஞ்சமாக மனவழுத்தத்திலி ருந்து வெளியே வந்தாலும், இடையிடையே தேனுவின் நினைவுகள் அவளைப் பாதிக் கும். 'யாரோடு நன்றாகப் பழகினாலும் அவர்கள் என்னை விட்டுத் தூரச் சென்று விடுகிறார்களே... மதனும் விலகிச் சென்று விடுவானோ...'அச்சம் தலைதூக்க ஆரம் பித்தது.

மேற்படிப்பு அவளுக்குக் கொஞ்சம் ஆறு தலைத் தந்தாலும் அவளுக்குத் தேனு இல்லாதது தனிமையாக இருந்தது. தங் கையின் நினைவுகளில் வந்து வந்து செல்ல.., தொலைபேசி அதிரும் ஒலி கேட்டது. தேனுவாகத்தான் இருக்கும்... எடுத்துப் பார்த்தாள். தேனுவல்ல... மதன்! மனமகிழ்ச்சியுடன் 'வணக்கம் மதன்!'.

'வணக்கம் செல்வி... திரும்பத் திரும்ப அழைத்ததுக்கு மன்னிச்சுக்கொள்ளுங்கோ... நீங்கள் பொங்கல் நிகழ்ச்சி பற்றிச் சொன்னீர்களே... அது எப்போது நடக்க இருக்கிறது?'.

'இது கேட்கவா இவ்வளவு தரம் கூப்பிட் டனீங்கள்?'.

'ஓம் செல்வி அதைக் கேட்கத்தான் கூப் பிட்டேன்'.

உண்மையாக இதைக் கேட்கத்தான் அழைத்தானா? செல்விக்கு நம்ப முடியா மல் இருந்தது. 'நான் அங்கு பேச வேண் டும் என்று கேட்டிருந்தார்கள்...' என்று செல்வி சொல்லத் தொடங்கவே...

'பிறகென்ன? உங்களை வெல்ல யார் வர முடியும்?'.

செல்விக்குப் புரியவில்லை. 'என்ன சொல் கிறீர்கள் மதன்?' என்றாள்.

செல்வியுடன் முன் ஒரு காலம் போட்டி யிட்டுத் தோற்றுப் போனது மதன் என்று அவள் அறியவில்லை என்பதை உணர்ந்து கொண்ட மதன்...'இல்லை நீங்கள் சாதா ரணமாகக் கதைத்தாலே நன்றாக இருக் கும், பேச்சு என்றால் சிறப்பாக வழங்கு வீர்கள் என்று எண்ணினேன்' என்று சமா ளித்தான்.

'ஓ... அதுவா...' என்று விளங்கிக் கொண்ட செல்வி 'நன்றி மதன்' என்று கூறி முடிப் பதற்குள்... மதன் ஏதோ கூற முற்பட, 'மதன்... என்னைச் சொல்ல விடுங்களேன்... நான் இன்னும் சொல்லி முடிக்கவே இல் லையே!' என்றாள் செல்வி.

'ஓ sorry sorry... சரி சொல்லுங்கள்' என் றான்.

'என்னைத்தான் பேசக் கூப்பிட்டிருந்தார் கள்...ஆனால், இப்போது என்னை விட்டு விட்டு வேறு ஒருவரைப் பேச அழைத்தி ருக்கின்றார்கள்' என்றாள்.

இதைக் கேட்டதும் தன்னையே அறியா மல் சூடானான் மதன். 'யாரது? அவர்கள் எப்படி அப்படிச் செய்யலாம்? யாரென்று கூறுங்கள்.. நான் அவர்களுடன் கதைக் கிறேன்!' என்று சற்றுக் கோபமாகவே பேசி னான்.

'மதன் கொஞ்சம் பொறுங்கள், அவர்க ளாக வேறொருவரைக் கேட்கவில்லை, நான்தான் அவர்களை அப்படிக் கேட்கச் சொன்னேன்' என்றாள் செல்வி.

'என்ன... விளங்கவில்லை' என்று குழம்பி னான் மதன்.

'ஒவ்வொரு வருடமும் அந்த நிகழ்ச்சியில்

தொடர்தல் 53ம் பக்கம்

இவ்வாக்கத்தைத் தொடர்ந்து எழுதிவரும் செல்வி தீ. தாரணி புலம்பெயர் நாட்டில் பிறந்த இளையவராவர். தன் கல்வியோடு தமிழையும் ஆர்வத்தோடு கற்று வருகின்றார்.

புலம்பெயர் இளையோர் பலர், தமிழைத் தொடர்பாடல் வழியில் பயன்படுத்தினாலும் தமிழில் படைப்பாற்றல் கொண்டிருப்பது அரிது.

ஆர்வத்தோடு தமிழ்மொழியில் தொடர்கதை எழுதிவரும் இளையவரான இவருக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்க வேண்டியது எமது கடமை. இவர் போன்று படைப்புகளில் ஆற்றல் கொண்டிருக்கும் ஏனைய இளையோரையும் தாய்வீடு வரவேற்கின்றது.

An Ontario Secondary Private School Registered Under the Ministry of Education

Delta Academy Inc.

Offers the Following OSSD Credit Courses

Our goal is not the quantity of students but quality of education. We ensure that the students are trained to work independently and be prepared to the next grade level with the help of our highly qualified and experienced teachers.

BSID # 667561

Grade 10	
English	ENG2D
Principle of mathematics	MPM2D
Science	SNC2D
Grade 11	
English	ENG3U
Functions	MCR3U
Biology	SBI3U
Chemistry	SCH3U
Physics	SPH3U
Accounting	BAF3M
Economics	CIA3U
Grade12	
English	ENG4U
Advanced Functions	MHF4U
Calculus and Vectors	MCV4U
Data Management	MDM4U
Biology	SBI4U
Chemistry	SCH4U
Physics	SPH4U
Accounting	BAT4M
Economics	CIA4U

ART COURSES

Grade 10	
Tamil	LITBD1
Vocal	
Violin	
Veena	AMU20
Piano Keyboard	
Dance	ATI201
Miruthangam	AMP20
Grade 11	
Tamil	LITCU1
Vocal	
Violin	
Veena	AMU3M
Piano Keyboard	
Dance	ATI3M1
Miruthangam	AMP3M
Grade 12	
Tamil	LITDU1
Vocal	
Violin	
Veena	AMU4M
Piano Keyboard	
Dance	ATI4M1
Miruthangam	AMP4M

Classes begins on
February, July, September
Register with us early as the space is limited.
All courses are 110 hours.
Course fee is $500 (Including registration)

KINDERGARTEN TO GRADE 12
TUTORING & HOMEWORK HELP
Special Classes For:
- Functions
- Physics
- Advanced Function
- English
- Chemistry
- Calculus & Vectors

Evening and weekend classes available
Qualified and experienced teachers to help your children to do better

416.751.2011
deltaacademyinc@hotmail.com
1160 Birchmount Road, Unit 1B, Scarborough ON M1P 2B8

உயிரின் மெய்...

52ம் பக்கத் தொடர்ச்சி...

நான் பேசுவதுதான் வழக்கம். இந்த முறை எனக்குப் பதிலாக என்னை விட வேறு திறமைசாலிகளுக்கு அந்த வாய்ப்புக் கிடைத்தால் நல்லது தானே... அதனால் தான் நானே நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களிடம் கேட்டுக்கொண்டேன். பிறகு ஒருவரும் கிடைக்கவில்லை என்று திரும்பவும் என்னையே பேசும்படி கேட்டிருந்தார்கள். நானும் சரி என்றேன். இப்போது இரண்டு நாட்களுக்கு முன்தான் வேறொருவரை ஒழுங்குபடுத்தினார்கள்.' என்று விளக்கமாகக் கூறினாள் செல்வி.

தன்னுடைய பேச்சைக் கேட்க மதன் இவ்வளவு ஆர்வமாக இருப்பான் எனத் தெரிந்திருந்தால் பேசியிருக்கலாமோ என்று தனக்குள் நினைத்துக்கொண்டாள்.

அவசரப்பட்டுப் பேசியது மதனுக்குச் சங்கடமாக இருந்தாலும், செல்வியின் பெருந்தன்மை மதனுக்குப் பிடித்திருந்தது.

அந்த நாட்களில் செல்வியைக் கடும் போட்டியாக கருதி, அவளை வெறுத்ததை எண்ணி வெட்கப்பட்டான் மதன். அவனுக்குள் குற்றவுணர்ச்சியும் ஏற்பட்டது.

'அது சரி, நீங்கள் இதைப் பற்றிக் கேட்கவா இத்தனை முறை அழைத்தீர்கள்?' என்று மீண்டும் கேட்டாள் செல்வி. இருந்தாலும் அவனுடைய அக்கறை அவளுக்குப் பிடித்திருந்தது.

'ஓமோம் செல்வி' என்றவன், 'அதுமட்டுமில்ல.. வேறு ஒன்றும் சொல்ல வேண்டும்..' என்று இழுத்தான்.

'என்ன?' என்று கேட்டாள் ஆர்வத்தோடு.

'அது வந்து... ஒரு வேலை வாய்ப்பு வந்திருக்கிறது...' என்று கூறத்தொடங்க,

'Congrats மதன்! Party எப்போ?' என்று மகிழ்ச்சி பொங்கக் கேட்டாள்.

'அதில்தான் ஒரு சின்னச் சிக்கல்... வேலை வாய்ப்பு இங்கே இல்லை... அமெரிக்காவில், San Franciscoவில்... நான் இப்போது செய்யும் வேலையை விட நல்ல சம்பளம், வளர்ச்சிக்கான வாய்ப்புகள், bene fits எல்லாமே இருக்கு. மூன்றுவருட ஒப்பந்தம். அதன் பின் சிலவேளை அங்கேயே நிரந்தரமாக வேலை செய்யவேண்டியும் இருக்கும்... நான் இன்னும் முடிவு எடுக்கவில்லை... சம்மதித்தால் சிலவேளை இரண்டுகிழமைக்குள் interview இருக்கும்... அதன் பின் வேலை கிடைத்தால் அடுத்த ஓரிரு வாரங்களில் வேலை தொடங்கவேண்டியிருக்கும்' என்றான்.

வக்கீலுக்குப் படிக்க முன், மதன் computer engineering படித்து பட்டம் பெற்றிருந்தான். படித்துக்கொண்டே அந்தத் துறையில் வேலையும் செய்தான். வக்கீல் படிப்புத் தொடர முடியாத கட்டத்தில், கணினித்துறையில் வேலையைச் செய்யலாம் என்ற முடிவுக்கும் வந்தான். அத்துறையில் வேலை பெறும் நோக்குடன் பல இடங்களுக்கும் விண்ணப்பித்திருந்தான்.

பெற்றோரை விட்டு சற்றே விலகியிருக்க வேண்டும் என்று எண்ணியிருந்ததனால், அமெரிக்க நிறுவனங்களுக்கும் தன் விண்ணப்பத்தை அனுப்பியிருந்தான்.

இரண்டு வருடங்களாக இந்த வாய்ப்பை எதிர்பார்த்திருந்த மதனுக்கு, இப்பொழுது அது கிடைத்திருக்கின்றது. ஆனால், இப்போது இந்த வாய்ப்பை விருப்போடு ஏற்க மனம் மறுக்கின்றது.

செல்வி சில கணங்கள் ஏதும் பேசவில்லை. அந்தச் செய்தி அவள் உற்சாகத்தைக் குறைத்திருந்தது.

மதனுடன் பேசத் தொடங்கிய இந்தக் கொஞ்சக் காலத்தில்தான் அவள் தனிமையைச் சற்று மறந்திருந்தாள்.

அவனும் விட்டுச் சென்றால்... மீண்டும் தனிமையிலா? அவளுக்கு அதை நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை. ஆனால் அவள் அதனை வெளிக்காட்டவில்லை.

'நீங்கள் பெரிய ஆள்தான்! நல்ல வாய்ப்பைப் பெற்றிருக்கின்றீர்கள்.. அதை ஏற்றுக்கொண்டு போகலாம்தானே' என்றாள்.

அவள் உதடுகள் இதைச் சொன்னதேயன்றி மனம் நேர்மறையாகத்தான் சிந்தித்தது. அவனும் சென்றுவிட்டால்... என்று நினைக்க அவள் மனம் பதறியது. அவனுடன் கொண்ட நட்பு காதலாக உருவெடுத்து வருகின்றதோ என்றும் எண்ணத் தொடங்கினாள். அவன் செல்வதைத் தடுக்க வேண்டும் போல் இருந்தது. ஆனால் எப்படி?

'போகலாம்..இரண்டு வருடங்களாக மேற்கொண்ட முயற்சிகளின் பலன்தான்.' என்றவன், உன்னை விட்டுப் பிரிந்து போக மனமில்லையே செல்வி என்று மனதுக்குள் எண்ணியதைச் சொல்ல முடியாமல் நிறுத்திக் கொண்டான்.

'என்ன தயக்கம்.. என்ன சிக்கல்?' என்று உள்ளே ஆர்வம் பொங்கக் கேட்டாள் அவள்.

'கொஞ்சம் யோசிக்க வேண்டி உள்ளது...' என்று முடித்தான் அவன்.
தொடர்ந்து பேச மதனுக்கும், தொடர்ந்து கேட்க செல்விக்கும் கொஞ்சம் சங்கடமாகவே இருந்தது.

ஒரு எல்லையை விட்டுக் கடக்காத நிலையில் செல்வி...'மதன்.. எனக்குக் கொஞ்ச வேலை இருக்கு. நான் பிறகு கதைக்கிறேன்' என்றாள்.

மதனும் 'சரி செல்வி, பிறகு கதைப்போம். Bye' எனக்கூறிவிட்டு சிந்தனையில் ஆழ்ந்தான்.

மதன் தொலைபேசியில் தன்னை அழைத்தான் என்பதே செல்விக்கு பெரிய மகிழ்ச்சி. ஆனால் வேலை வாய்ப்பைப் பற்றிச் சொல்லத்தான் எடுத்தான் என்றால்... அதை எடுக்காமலே விட்டிருக்கலாமோ என நினைத்தாள்.

வழக்கமாக மாலை நேரத்தைப் படிப்பிற்காகச் செலவழிக்கும் செல்வியால் அன்று படிக்க முடியவில்லை. நூலின் பக்கங்களைத் திருப்பிக்கொண்டிருந்தாளே தவிர அதிலிருந்து ஒன்றுகூட அவள் மனதில் பதியவில்லை. ஒரே வரிகளைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டே இருந்தாள்.

'செல்வி...செல்வி...கீழே வா... அண்ணன்மார் வெளிக்கிடப்போயினம்' என்று அவள் தாய் கூப்பிட்டது கூட செல்வியின் காதில் விழவில்லை.

அவள் மனதில் மதனின் முதல் சந்திப்பிலிருந்து அவனுடன் பழகிய இனிய நினைவுகள் ஓடிக்கொண்டிருந்தன. இத்தனை நாளும் அவனைத் தினமும் பார்க்கும்போது தெரியவில்லை, ஆனால் அவன் சென்றுவிடுவான் என்று நினைக்கும்போது தான் அவன்மேல் தனக்கிருந்த அன்பின் ஆழத்தை அவளால் உணர முடிந்தது.

'அடுத்தென்ன?' என்று யோசனையில் அவள் ஆழ்ந்திருக்க..., 'என்ன காதலா?' என்ற குரல் பின்னாலிருந்து கேட்கவும் திடுக்கிட்ட செல்வி திரும்பிப் பார்த்தாள்.

(தொடரும்...)

■ ■ ■

Move on with **REON**

RE/ON

Homes Realty Inc.
Brokerage

Living in your Own Home.
It's a gift.™

- ☑ FREE MARKET EVALUATION
- ☑ 24 HRS MLS LISTING
- ☑ PROFESSIONAL PHOTOGRAPHY & VIRTUAL TOUR
- ☑ HIGHEST VALUE FOR YOUR PROPERTY
- ☑ COMPETITIVE COMMISSION STRUCTURE
- ☑ OPEN HOUSES
- ☑ PROFESSIONAL HOME STAGING

FOR SALE

FOR SALE

COVID-19 MORTGAGE PAYMENT TOOLS

$$$-Short-term mortgage payment deferral:
Your lender may agree to pause or suspend your mortgage payments for a certain amount of time.

$$$-Extending the original repayment period (amortization):
An extension to your original amortization period can lower your monthly mortgage payments.

$$$-Adding any missed payments (arrears) to the mortgage balance:Your lender may be able to add missed payments to your mortgage balance and spread them over the remaining mortgage repayment period.

$$$-Moving from a variable to a fixed interest rate mortgage:
Converting a variable interest rate mortgage to a fixed interest rate mortgage in order to protect you from a sudden interest rate increase, should one occur.
Special payment arrangement:

$$$-There may be a special payment arrangement unique to your particular financial situation.

Uthayan Aiyadurai
Sales Representative
416.999.3555

Jeyanthe Sritharan
Broker
416.918.5872

Seelan Siva Aiyadurai
Broker
416.451.0271

வீடு விற்க வாங்க

BUY. SELL. INVEST

25 Karachi Drive #15, Markham ON L3S 0B5 **905.209.8080** **www.reon.ca**

காலம் உனக்கொரு பாட்டெழுதும்

‘பாண்டிச்சேரி பிரெஞ்சு நிறுவகம்’ எனும் அமைப்பு இலங்கையின் சமகால தமிழ் படைப்பாளர்களின் ஆக்கங்களைக் கொண்ட ஒரு தொகுப்பு நூலை ஆங்கில மொழியில், இந்திய ‘பென்குயின் பதிப்பக’ வெளியீடாக வெளிக்கொணர்ந்துள்ளது.

French Institute of Pondicherry (பாண்டிச்சேரி பிரெஞ்சு நிறுவகம்) எனும் நிறுவனத்துக்காக எம். கண்ணன், ரெபேக்கா விடனிங்டன், டேவிட் சி.பக், டி.செந்தில் பாபு ஆகிய நால்வரினால் மொழிபெயர்க்கப்பட்டும் தொகுக்கப்பட்டும் உள்ளது.

காயப்பட்ட தீவொன்றின் ஆத்மார்த்தமான எண்ணங்களின் அரிய வெளிப்பாடுகளின் தொகுப்பு என தொகுப்பாளர்களின் பின்னட்டைக் குறிப்புக்கு தலைப்பிடப்பட்டுள்ளது.

அந்த தலைப்பின் கீழ் இவ்வாறு குறிப்பிடப்படுகிறது:

‘இந்தத் தொகுப்பில் வரும் கவிதைகள், கதைகள் மற்றும் நினைவுப் பதிவுகள் இலங்கையிலும் அதற்கு வெளியிலும் வாழும் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் விம்பங்களாக உள்ளன. யுத்தம் நிறைந்த அண்மைய தசாப்தங்களிலான படைப்புகளின் அகன்ற வரம்பிலான பார்வை கொண்டதான படைப்புகள் முதன்முறையாக திறனான முறையில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன என்று கூறலாம்.

கவித்துவமானதும் அப்பட்டமானதுமான வடித்தெடுக்கப்பட்ட நினைவுகள், வரலாறுகள், புராணங்கள் மற்றும் மரபு சார் இலக்கிய வடிவங்களாக தமிழர்களின் பயங்களையும் துக்கங்களையும் உரத்து எதிரொலிப்பனவாக உள்ளன. அவர்களது நாளைய ஏக்கங்களையும் எதிர்பார்ப்புகளையும் கூட அவை பதிவு செய்கின்றன. இளைஞர்கள் கொல்லப்படுவது சம்பந்தமான புலம்பல்கள், கட்டாய காணாமலாக்கப்படுதல்கள், வீடுவாசல்கள் வழிபாட்டுத்தலங்களின் இழப்புகள், தொடர்ச்சியான இடப்பெயர்வுகள் அதனால் அகதிகளாதல், இரக்கம் காட்டும் பெண்கள், உதவும் மக்கள், அழகிய காடுகளினதும் கடலினதும் நினைவலைகள் என தமிழ்ச் சூழலில் நடந்தவற்றை ஒலிக்கும் பலதரப்பட்ட புதிய குரல்களின் வண்ணத் தொகுப்பாக இது வந்துள்ளது.

268 பக்கங்களைக் கொண்ட இந்த நூலின் தலைப்பு Time will Write A song for you - Contemporary Tamil writing from Sri Lanka ‘காலம் உனக்கொரு பாட்டெழுதும்’ - சமகால இலங்கைத்தமிழ் எழுத்துகள் என்ற உப தலைப்புடன் ஆங்கிலத்துக்கு மொழிபெயர்க்கப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளது.

இங்கு ‘Tamil Writing from Sri Lanka’ ‘இலங்கையின் தமிழ் எழுத்துகள்’ என்ற உபதலைப்பு. ஏன் ஈழத்தின் தமிழ் எழுத்துக்கள் எனக் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடாது என நூலுக்கான அறிமுகக் குறிப்பில் விவாதிக்கப்படுகிறது.

இது பற்றிக்கூறுகையில் இலங்கையின் தமிழர்களின் பல்வகைத்தன்மைகுறித்தும் குறிப்பாக கடந்த ஒன்றரை நூற்றாண்டுகளாக அவர்களின் வேர்கள், விலாசங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

புவியியல் அமைப்பு சார்ந்து (பொதுவாக இந்தியாவின், குறிப்பாக தமிழ் நாட்டின்) ஆசியாவின் கண்ணீர் சொட்டாக தெரிகிற இலங்கை, பலம்பொருந்திய இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளின் விளையாட்டுத் திடலாகவும் உள்ளது.

இலங்கையின் மொத்த சனத்தொகையில் சுமார் 18 சதவீதமாக உள்ள தமிழர்களின் பரம்பல் பெரும்பாலும் வடக்கு கிழக்கு பிரதேசமாக அமையும் அதேவேளை மத்திய மலைநாட்டு பகுதியிலுமாக அமைந்துள்ளது. மத்திய மலைநாட்டுப் பகுதியில் வாழும் தமிழர்களின் பெரும்பங்கினர் பிரித்தானிய ஆட்சி காலத்தில் பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்காக ஒப்பந்தத் தொழிலாளர்களாக அழைத்துவரப்பட்டவர்கள். இவர்களுக்கும் பூர்வீகமாக இலங்கைத் தீவில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கும் துல்லியமான வேறுபாடுகள் உள்ளன என பலதரப்பட்ட வேறுபாட்டு குணாம்சங்களும் தொகுக்கப்பட்டுள்ள படைப்புகளைக் கொண்டே அறிமுகக் குறிப்பில் ஆராயப்பட்டுள்ளது.



அதில் தமிழ் பேசும் முஸ்லிம்கள், கிறித்தவ தமிழர்கள், இந்துக்கள் என மதங்கள் சார்ந்தும், பிரதேசவாரியாக பேசும் மொழி சார்ந்த வேறுபாடுகளும் கூட பிரஸ்தாபிக்கப்படுகிறது. அத்துடன் மகாகவியின் தேரும் திங்களும் (The temple car and the moon) எனும் கவிதையை முன்னிறுத்தி சாதிய வேறுபாடுகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது. அதில் இலங்கை இந்திய சூழலில் நிலவும் சாதிய ஒற்றுமை வேற்றுமைகளும் உள்ளடங்குகிறது. இலங்கைத் தமிழர்களிடையே பிரதேச வேறுபாடுகளுடன் கூடிய சாதிய வேறுபாட்டு பிரிவினைகள் நிலவும்போதும்கூட மலைநாட்டு தமிழர்களை தங்களைவிட சாதியில் குறைந்தவர்களாக பொத்தாம் பொதுவாக நோக்கும் பண்பு இலங்கைத் தமிழரிடத்தில் நிலவுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் பெரும்பான்மை சிறுபான்மை மக்களின் முரண்பாட்டு காரணங்களில் ஒன்றாக பௌத்த ஆதிக்கவாதம் குறித்தும் அறிமுக உரையில் விவாதிக்கப்படுகின்றது. இத்தகைய நீண்ட அறிமுக குறிப்பானது 22 பக்கங்களைக் கொண்ட ஆழமான ஆய்வாக அமைந்திருப்பது சிறப்பம்சமாகும்.

அதே நேரம் தமிழ் மொழியில் அமைந்த மூலப்படைப்புகளை ஆங்கிலத்துக்கு மொழிமாற்றம் செய்யும்போது ஏற்படக்கூடிய சிக்கல்கள் குறித்தும் பேசப்பட்டுள்ளது. தமிழ் படைப்பாளர்களின் கற்பனை ஒழுங்கையும், கிளைபிரிதல்களையும் அதன் தொடர்ச்சிகளையும் குறிப்பாக கவிதைகளை ஆங்கிலத்தில் அதே வடிவில் கொண்டுவருவது சிக்கலானது. சிறுகதைகளில் வரும் நீண்ட வசனங்களை மொழி பெயர்ப்பதிலும் இந்த சிக்கல் வந்துள்ளதாக எடுத்துக்கூறப்பட்டுள்ளது. இடையிடையே வரும் ‘வட்டார வழக்குச் சொற்கள்’, ‘சிங்களச்சொற்களை’ ஆங்கிலத்துக்கு மொழிபெயர்ப்பு செய்வதில் உள்ள சிக்கலும் புரிந்துகொள்ளப்பட வேண்டியுள்ளது. (அவை அடிக்குறிப்புகளாகவும் குறிக்கப்பட்டுள்ளது).

இந்த மொழிபெயர்ப்பு மற்றும் தொகுப்பு செயற்பாட்டில் இரண்டு தமிழர்களும் இரண்டு தமிழர் அல்லாதவர்களும் இணைந்தே இந்த நூலைத் தந்துள்ளனர். அவர்களது கூற்றுப்படி மொழிபெயர்ப்பு என்பது ஒரு கற்றல் கலை, வாசித்தல் கலை, எழுதும் கலை. உண்மையிலேயே படித்துக், கற்று புதிய மொழியில் எழுதும் சக்திமிக்கதே மொழிபெயர்ப்பு. இதனால் குறைகள் இருப்பின் அதனோடே அந்தப்பணியில் திருப்தியடைவும் வேண்டியுள்ளது எனக் குறிப்பிடப்படுகின்றது.

உண்மையில் இந்த நூலை வாசிக்கும் போது மூல ஆக்கத்தை தமிழில் வாசித்தவர்களுக்கு அத்தகைய மொழிபெயர்ப்பு குறைபாடுகள் தெரியலாமேயன்றி நேரடியாக ஆங்கிலத்தில் வாசிப்பவருக்கு அந்தக்குறைபாடு நேராதவகையிலான நேர்த்தியான மொழிபெயர்ப்பு என உத்தரவாதமளிக்கலாம். மொழிபெயர்ப்பாளர்களை மனதார பாராட்டலாம். பதிப்பாளர்களுக்கும் வெளியீட்டாளர்களுக்கும் நன்றி பகிரலாம்.

இந்தத் தொகுப்பில் வரும் படைப்பாளர்கள் மற்றும் படைப்புகள் பற்றி தெரிந்துகொள்வது இன்னும் சுவாரஷ்யமிக்கது. மொத்தமான 68 ஆக்கங்களில் ஏறக்குறைய 60 கவிதைகளே உள்ளடங்குகின்றன. ஏனையவை சிறுகதைகளும் நினைவுப் பதிகைகளுமாக உள்ளன.

இத்தொகுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள 41 இலங்கைத்தமிழ் படைப்பாளிகள் பற்றிய சிறு அறிமுக குறிப்பு பின்னிணைப்பாக சேர்க்கப்பட்டுள்ளது. அதில் அவர்கள் பிறந்த ஆண்டும் அவர்களின் பிரதேசமும் குறிப்பிடப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும்,

மகாகவி (யாழ்ப்பாணம்), டொமினிக்ஜீவா (யாழ்ப்பாணம் - கொழும்பு), மு. தளைசிங்கம் (யாழ்ப்பாணம்), நீலாவணன் (மட்டக்களப்பு) மு. பொன்னம்பலம் (யாழ்ப்பாணம் - கொழும்பு), எம்.ஏ. நுஹ்மான் (கல்முனை) அ. யேசுராசா (யாழ்ப்பாணம்), எஸ். சிவசேகரம் (யாழ்ப்பாணம்), வ.ஐ.ச. ஜெயபாலன் (யாழ்ப்பாணம் - நோர்வே),

- மல்லியப்புசந்தி திலகர் -

சண்முகம் சிவலிங்கம் (பாண்டிருப்பு), பிரமிள் (திருகோணமலை), சிவரமணி (யாழ்ப்பாணம்), சு.வில்வரத்தினம் (யாழ்ப்பாணம்), எஸ். ரஞ்சகுமார் (யாழ்ப்பாணம் - அவுஸ்திரேலியா) ஆஷ்வாகோஸ் (யாழ்ப்பாணம்), இளவாலை விஜேந்திரன் (நுவரெலியா -நோர்வே), பா.அகிலன் (யாழ்ப்பாணம்), மலரவன் (யாழ்ப்பாணம்), சேரன் (யாழ்ப்பாணம் - கனடா), மாலிகா - புதுவை ரத்தினதுரை(யாழ்ப்பாணம்), மஜீத் (அக்கறைப்பற்று), முரளீஸ்வரன் (யாழ்ப்பாணம்), போஸ்நிஹாலே (கிளிநொச்சி), றஷ்மி (அக்கறைப்பற்று), செல்வம் அருளானந்தம்(யாழ்ப்பாணம்- கனடா), அருந்ததி (யாழ்ப்பாணம் - பிரான்ஸ்), நிலாந்தன்(யாழ்ப்பாணம்), குமார்மூர்த்தி (யாழ்ப்பாணம்), இரவி அருணாச்சலம் (யாழ்ப்பாணம்), கருணாகரன் (இயக்கச்சி), கௌரிபாலன் (திருகோணமலை), இளைய அப்துல்லா (முல்லைத்தீவு - லன்டன்), எஸ். வினோதினி (யாழ்ப்பாணம் - அமெரிக்கா) பஹீமா ஜஹான் (குருநாகல்), எஸ். செழியன் (யாழ்ப்பாணம் - கனடா), மலர்ச்செல்வன் (மட்டக்களப்பு), தீபச்செல்வன் (கிளிநொச்சி), தா. அகிலன் (கிளிநொச்சி - கனடா), கி.பி.அரவிந்தன் (யாழ்ப்பாணம்), நா. சத்யபாலன் (யாழ்ப்பாணம்), மல்லியப்புசந்தி திலகர்(நுவரஎலியா - மலையகம்).

இந்தப்பட்டியலில் இறுதியாகவரும் மல்லியப்புசந்தி திலகர், இடையில் வரும் இளவாலை விஜேந்திரன் ஆகிய இருவரும் நுவரஎலியா என குறிப்பிடப்பட்ட போதும் இளவாலை விஜேந்திரன் பிறந்த இடம் நுவரெலியாவே தவிர அவர் யாழ்ப்பாணத்தவர் என்பது அவரது பெயரிலேயே தெளிவாகிறது. அவரது ‘நிறமற்றுப்போன கனவுகள்’ கவிதைத்தொகுதியில் அந்த விபரங்களை அறியலாம். இப்போது நோர்வேயில் வசிக்கிறார்.

மல்லியப்புசந்தி திலகரின் (கட்டுரையாளர்) நினைவுப்பதிகை ஆக்கம் வன்னி, யாழ்ப்பாண வாழ்வையும் இணைத்தது என்றவகையிலேயே இந்த தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. தனியே மலையக வாழ்வை மட்டும் படைப்பாக இருந்திருந்தால் இங்கே இடம்பெற்றிருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் இந்த தொகுப்பு போரின் வலிகளைப் பேசுவதாகவே பின்னட்டைக் குறிப்பில் கூறப்படுகிறது. எது எவ்வாறாயினும் நூலுக்காக நீண்ட அறிமுகக் குறிப்பில் மலையகத் தமிழர் பற்றிய ஒப்பீட்டாய்வை உள்ளடக்கமாகக் கொள்ள மல்லியப்புசந்தி திலகரின் ஆக்கம் வழியமைத்துள்ளது எனலாம். இந்தியாவில் வெளியிடப்பட்டிருக்கும் நூல் என்ற வகையில் இந்திய வம்சாவளி மலையகத் தமிழ்மக்கள் பற்றிய அறிமுகப்பதிவு முக்கியம் பெறுகிறது.

இந்த தொகுப்புக்கான தலைப்பாக அமைந்திருப்பது ரஞ்சகுமாரின் சிறுகதைத் தலைப்பான ‘காலம் உனக்கொரு பாட்டெழுதும்’ எனும் அழகிய தலைப்பு. இந்திய ரூபாயில் 299 ரூபா எனக் குறிப்பிடப்பட்டிருக்கும். e-book வடிவில் கிடைக்கும் என பின்னட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த கொரொனா காலத்தில் நாளாந்த தினசரிகளின் வாசிப்பே e-book வடிவம் பெற்றுவிட்ட நிலையில், நாற்பது இலங்கை தமிழ் எழுத்தாளர்களின் எழுத்துக்களை ஆங்கில மொழியில் வாசிக்க ஆர்வம் உள்ளவர்கள் நாடலாம்.

thilagar@thaiveedu.com

நீண்ட காத்திருப்பு வாழ்கையின் அல்பம்

- யதார்த்தன் -

ஒரு போட்டோ அல்பத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அந்நியனுக்கு அது ஒன்றுமேயில்லை. அது ஒரு சிறிய புத்தகம்தான். ஆனால், சம்பந்தப்பட்டவர்களுக்கோ அதனுள் நிறைய ஞாபகங்கள் பொதித்து வைக்கப்பட்டிருக்கும் பொக்கிசம். இப்போது அஞ்ஞாபகங்கள் துடைத்தழிக்கப்பட்டு விட்டன. சிலவேளை பல சந்ததியினரின் ஞாபகங்கள் ஒரு அல்பத்தினோடு தொலைந்து விடுகின்றன.
- கொமாடோர் அஜித் பெயகொட.

தன் வரலாறுகள் இலக்கியத்தினுள், கலை மதிப்பீடுகளினுள் வந்து சேர்கின்ற இடம் பற்றிச் சிந்திக்க வேண்டும். தன்வரலாறுகள் உண்மையை எழுதியுள்ளன, யதார்த்தத்தை படவர்த்தனப்படுத்தியுள்ளன என்பதான கருத்துகள் மிக மேலோட்டமானவை. இங்கே உண்மை என்பதும், யதார்த்தம் என்பதும் தெரிவுகளாகவிருக்கின்றன. தெரிவு என்பது அரசியல் மயப்பட்டிருக்கின்றது. நமக்கு என்ன நிகழ்ந்தது என்பது முக்கியமில்லை, நாம் எதை நினைவு கூர்கிறோம் எவ்வாறு நினைவு கூர்கிறோம் என்பதுதான் முக்கியமானது என்பார் காபிரியல் காசியோ மார்க்வெஸ். ஒட்டுமொத்த வாழ்கையையும் ஒரு வீடியோ டேப்பைப்போல் நினைவு கூர முடியாது. இங்கே நினைவு கூர்வதென்பது நினைவு கூரும்போது கண்டடைந்திருக்கும் அல்லது வந்து சேர்ந்திருக்கும் வாழ்க்கை பற்றிய புரிதலினால் தேர்ந்தெடுக்கப்படுகின்றது. காந்தி உண்மை மீது தான் நிகழ்த்திய வாழ்க்கை பற்றிய பரிசோதனை முடிவுகளில் இருந்து சத்தியசோதனையை எழுதினார். கேரளாவின் பிரபல திருடனாகவிருந்த மணியம்பிள்ளை தன்னுடைய தொழிலினால் வடிவமைக்கப்பட்ட தன்னுடைய கடந்த காலத்திலிருந்து தான் வந்து சேர்ந்த புரிதல் பற்றி தன்னுடைய தன் வரலாற்றில் பேசுகிறார். கமலாதாஸ் தன்னுடைய பெண் உடலையும் அதன் ஆன்மாவையும் தான் வாழ்ந்த சூழலில் நிகழ்த்திப்பார்த்த அனுபவங்களையும் தன்னுடைய தன் வரலாற்றின் சாரமாக ஆக்கியிருக்கின்றார். இப்படி தன்வரலாறுகள் அடிப்படையில் தன் வாழ்க்கை பற்றிய ஆவணங்களில்லை. மாறாக அது தெரிவுகளினால், புரிந்து கொள்ளப்பட்ட தன் வாழ்க்கையில் இருந்து அகழப்பட்ட விடயங்களைக்கொண்டு ஒழுங்கமைக்கப்பட்ட வடிவம். எல்லோருடைய தன் வரலாறும் வாழ்க்கை மீது ஏற்படுத்தப்படுகின்ற புரிதலினாலேயே கலைவடிவங்களாகின்றன.

ஒரு போர்வீரனதும், அதேபோரில் பங்கு பற்றும் அரசனதும் நியாயங்கள் வெவ்வேறானவையாகவிருக்கும். அதே போல போரில் வென்றவர்களினதும் தோற்கடிக்கப்பட்டவர்களினதும் நியாயங்கள் வெவ்வேறாகவிருக்கும். இலங்கையின் உள்நாட்டுப்போரை வழிநடத்திய தளபதியொருவரின் தன்வரலாறு ஒன்று சில வருடங்களுக்கு முதல் வெளியானது. பெரும்பான்மை இனவாதத்தை ஆதரிப்பவர்களும், சிறுபான்மை மக்கள் தொடர்பில் அவர்கள் அடக்கப்படுவது தொடர்பில் புரிதலில்லாத பெரும்பான்மை சமூகமும் அந்நூலைக் கொண்டாடின. அதேபோல புலிகளின் மகளிர் அரசியல் துறையின் பொறுப்பாளராகவும் போராளியாகவும் இருந்த தமிழினி விடுதலையின் பின்னர் எழுதிய தன் வரலாறும் வெளியானது. தமிழினி தன்னுடைய நிகழ்காலத்தைச் சுயவிமர்சனப்படுத்தும் போது அமைப்பையும் போராட்டத்தையும் கொச்சை செய்து விட்டார் என்ற விமர்சனம் எழுந்தது. குறிப்பாகத் தமிழ்ச் சமூகத்தில் புலிகள் முதலான போராட்ட இயக்கங்கள் கொண்டிருந்த நடைமுறைகள், கொள்கைகளை கேள்வி கேட்கும் போதோ சுய விமர்சனம் செய்யும் போதோ அதை புனிதப்படுத்தல்களின் பக்கங்களில் அமர்ந்து கொண்டு கடுமையாக பாசிசப் பண்புகளுடன் எதிர்வினையாற்றுகிறது. தனிமனிதர்கள் கடந்தகாலம் பற்றிய, தங்களுடைய சொந்த வாழ்க்கை பற்றிய புரிதலுக்கு வரும்போது அதை மறுதலிக்கும் பண்பையே பெரும்பான்மை தமிழ்ச்சமூகத்தில் அவதானிக்க முடிகிறது. தமிழினி உண்மையை எழுதினாரா, பொய்யை

எழுதினாரா என்ற இருமை நிலையில் நின்று தீர்ப்பிடும் செயலில் இருந்து சமூகம் விடுபட வேண்டும். உண்மை என்பது அதிதூய்மையானதும் ஒன்றைப்படையானதும் என்று வாதிடுவதும் பாசிசத்தின் பண்புக்கூறாகும். மற்றமைகளை தர்க்கங்கள் இன்றி அறமின்றி நிராகரிக்க நினைப்பவர்களிடம் இருக்கும் ஒரு உண்மை பொய்யை விடவும் மோசமானது.

அஜித் பெயகொட. ஓய்வு பெற்ற இலங்கை கடற்படை அதிகாரி. அவருடைய தன்வரலாற்றுப் பிரதியான long watch ஆங்கிலத்தில் 2016ல் வெளியானது. சுனிலா கலப்பதி அவருடன் நிகழ்த்திய உரையாடல்கள் மூலம் அவர் சொன்ன தன் கதையை நூலாக்கியிருக்கிறார். தமிழில் தேவாவின் மொழி பெயர்ப்பில் வடலி வெளியீடாக இவ்வருடம் வெளியாகியிருக்கிறது. 1974 முதல் 2004 வரை இலங்கை கடற்படையில் பணியாற்றிய பொயகொட 1994ல் விடுதலைப்புலிகளினால் சிறைப்பிடிக்கப்பட்டு 2002ல் விடுதலை செய்யப்பட்டார். இதன் வரலாற்றில் அஜித் பொயகொட புலிகளின் தடுப்பில் இருந்த காலங்களை முன்கொண்டே தன்னுடைய கதையைச் சொல்லிச் செல்கிறார்.

ஒரு தன் வரலாற்றுப் பிரதியின் தத்துவார்த்த அடைவும் அது கொண்டுள்ள அரசியல் புரிதலும் அல்லது நிலைப்பாடும் அது எழுதப்படும் காலத்தின் பண்பாட்டுப் பின்னணியும் அதனுடைய பயன்பெறுமதியையும் சார்ந்து நிற்கின்றன. அஜித்தின் இத் தன் வரலாற்றில் அவருடைய இருதயம் நினைவுகளைத் தெரிவு செய்து ஒழுங்குபடுத்திய விடயங்களின் சாரமான அம்சங்களை என்னுடைய வாசிப்பின் பின்னணியில் பட்டியல்படுத்த நினைக்கிறேன்.

பெரும்பான்மை இனவாதத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட இராணுவப் பிரவில் இருந்த ஓர் அதிகாரியின் பார்வையில் நாட்டின் அரசியலும் இனப்பிரச்சினையும் எவ்வாறு திரிகின்றன என்பதை அவர் கடலில் இருந்து விபரிக்கிறார். இவ்விபரணையும் அவர் நினைவு கொள்ளும் சம்பவங்களும் இனப்பிரச்சினையும் பின்னர் போரும் போராட்டமும் எவ்வாறு இலங்கையின் பண்பாட்டுச்சூழலில் மாறுகின்றன என்பதை இன்னொரு கோணத்தில் இருந்து பார்க்க வைக்கின்றன.

எடுத்துக்காட்டாக ஆரம்ப காலங்களில் கடலோரக்காவல் படையாக இருக்கும் கடற்படை, மீனவர்களைக் காப்பதும் கொள்ளை நடவடிக்கைகளைத் தடுப்பதும் அதனுடைய வேலையாக இருக்கின்றது. மீனவர்களிடம் மீனும், சமைத்த உணவும், தண்ணீரும் பெற்றுக்கொண்டு கடற்படை கடலில் அலைகிறது. அது பின்னர் வேறுவிதமாக மாறுவதை இவ்வாறு விபரிக்கிறார்,

‘பிந்தைய காலங்களில் இந்த நிலமை இலங்கையில் மாறியது. எங்கள் கலாசாரம் கூலிப்படைக் கலாசாரமாக மாறியது. போராலும் நிலமை மாறியது. பயமுறுத்தும் விளையாட்டு ஆரம்பமானது. இனக்குழுக்களிடையே போர் நடந்தால் யார் மீது யார் அதிகாரம் செலுத்துவது என்பதிலேயே எல்லாம் தங்கியிருக்கும். படைகள் மீனவர்கள் மீது அதிகாரம் செலுத்த, விடுதலைப்புலிகள் இயக்கம் படைகளிடம் பகைமை பாராட்டச்சொல்லும். தெரியாத படகுகளை அணுகச் சந்தேகமும் ஆபத்துணர்வும் இப்போதிருக்கும். இம் மாற்றங்கள் எவ்வளவு மனவருத்தமானவை?’

தமிழர் பிராந்திய நிலமும் அவர்கள் ஒடுக்கப்பட்டதையும் சிங்கள - இனவாதம் எவ்வாறு முகிழ்ந்து இனங்களுக்கு இடையில் பகை மூண்டதையும், ஒரு தேசத்தின் இராணுவம் சொந்த தேசத்து மக்களில் ஒரு சாரார் மீது ஏவி விடப்பட்டதையும், இராணுவ அமைப்பில் இயல்பாக வந்து சேர்கின்ற ஒழுங்குபடுத்தலின் ஆண்மைய வன்முறையை, மிகை உணர்வாக்கலின் பாங்கினை தன்னுடைய அனுபவத்தில் விசாரணை செய்கிறார். ஆரோக்கியமாக இருந்த இனவுறவுகள், இனவாதம், இராணுவத்தை வலுக்கட்டாயமாக அனுப்பியதை விபரிக்கின்ற இடங்கள் முக்கியமானவையாக உள்ளன. உதாரணமாக நயினாதீவு விகாரை பிக்குகள் தங்களுடைய தானத்தினை காலம் காலமாக அந்நிலத்தினுடைய குடிகளான தமிழ் மக்களிடமே பெற்றுக்கொண்டு இருந்துள்ளனர். இனப்பிரச்சினை தொடங்கும் போது அரசு இராணுவத்தை அவர்களிடம் அனுப்புகிறது.

‘அங்கிருந்த பௌத்த குருக்களுக்கு பாதுகாப்பு தேவையென அவர்கள் கேட்கவில்லை. இருந்தும் பாதுகாவலுக்காக நாங்கள் அனுப்பப்பட்டோம். நாங்கள் அங்கு சென்ற பிறகு பௌத்த குருக்களுக்கான காணிக்கைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டோம். காணிக்கைகளை அங்கிருந்த சமூகத்திடமிருந்துதான் முன்னம் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். ஒருவகையில் பார்த்தால் பௌத்த குருமாருக்கும் பொதுமக்களுக்குமான உறவை நாங்கள் உடைத்திருக்கிறோம்’ (பக்.37).

ஒரு தன்வரலாற்றுப்பிரதியாக அஜித் தெரிவு செய்த சொற்கள் வன்முறை, போர், இராணுவ மனநிலை என்பவை தொடர்பில் கண்டடைந்ததைப் பகிர்ந்துகொள்கிறார். என்னளவில் இப்பிரதியின் ஆக முக்கியம் வாய்ந்த இடங்களாக அவர் இராணுவம், ஆயுதங்கள், போர் பற்றி அடைந்தவை முக்கியமானவையாக இருக்கின்றன.

‘... அத்துடன் ஆபத்து என்பதால் உணர்த்தப்படும் அச்சம் என்பதையே இராணுவத்தினர் ஒரு பொருட்டாக எடுப்பதில்லை. போருக்குப் போகும் ஒருவன் தான் போருக்குப் போகிறன் என்று தெரியாமலே போகவேண்டும். தொடர்ந்தும் பயிற்சிகளினூடு அவர் சிந்திக்காமலே செயற்படுகின்றார். ஒரு சிப்பாயிடம் துப்பாக்கியைக் கொடுத்து நீ எதுவேண்டுமானாலும் செய்யென சொல்லுங்கள், தான் சுடும் ரவைகள் போல தன்னை நோக்கியும் ரவைகள் சுடப்படும் என்பது அவனுக்கு உறைக்காது’.

‘சிலவற்றை அழிக்க உங்களுக்கு ஆணை கிடைக்குமெனில் நீங்கள் எல்லாவற்றையுமே அழிக்கும் மனநிலையை வளர்த்துக் கொள்கிறீர்கள்.’

சிப்பாய்கள் போர்முனையில் இறக்கும் போதுதான் தாங்கள் இறந்து போவதைத் தெரிந்துகொள்வார்கள். அவர்கள் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்வதில்லை. அவர்களுக்குத் தெரியாமலே அவர்கள் சுடப்படுகிறார்கள்.

விடுதலைப்போராட்ட அமைப்பு ஒன்று தன்னை மரபான இராணுவமாக ஒழுங்கமைக்கவும் தனக்கென ஒரு தற்காலிக அரசை அமைத்துக்கொண்டு குறித்த நிலத்தில் இருந்துகொண்டு அரசுடன் பேரம் பேசும் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்கும் காலத்தில் அஜித் ஒரு இராணுவக்கைதியாக சிறை வைக்கப்படுகிறார். அவர் தளபதிகளை, பொறுப்பாளர்களை, போராளிகளை, காவலர்களை, சக கைதிகளைச் சந்திக்கிறார். ஒரு விடுதலைப்போராட்ட அமைப்பு அது கொண்டுள்ள பலவீனங்கள், மூடநம்பிக்கைகள் எல்லாவற்றுடனும் தலைமைகளால் ஒழுங்கமைக்கப்படுகின்றது. இராணுவக்கட்டமைப்பை அடைய எத்தனிக்கும் அவ்வமைப்பில் தனிமனிதர்கள் எவ்வாறு இயங்கினார்கள் என்பது இத்தன்வரலாற்றுப்பிரதியின் அதிக பக்கங்களை எடுத்துக்கொள்கின்றது. புலிகள் அமைப்பு ஓர் முக்கிய கடற்படை அதிகாரியை வைத்து தன்னுடைய அரசியல் பேரத்தினை முன்னெடுக்கிறது. அரசும் அதே போலவே இயங்குகின்றது. இராணுவ அமைப்பு ஒழுங்கமைப்புகள் எப்போதும் சில பொதுப்பண்புகளைக் கொண்டிருக்கும். அதிக நியாயத்தின் பக்கம் எது தள்ளப்படுகின்றது என்பதும், ஒரு விடுதலைப்போராட்ட அமைப்பு அதன் உள்ளார்ந்த ஆத்மாவைத் தொலைத்து விடாமல் இருக்க தனிமனிதர்களின் வாழ்க்கை முறைகள் எங்ஙனம் இயங்குகின்றது என்பதும், அதனுள் நிகழக்கூடிய முரண்கள், அபத்தங்கள், அன்பு, நட்பு போன்றவை எங்ஙனம் இயங்குகின்றது என்பதும் இதன் வரலாற்றுப் பிரதியில் காணலாம். கைதிகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்படும் விடுதலைப்புலிகள் அமைப்பின் பொறுப்பாளர்களில் நியூட்டனுக்கும் சங்கீதனுக்குமான வேறுபாடுகளை அஜித் விபரிக்கிறார், இரண்டு வெவ்வேறு மனநிலை கொண்ட மனிதர்கள்.

தொடர்தல் 57ம் பக்கம்

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.
விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான
பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail: info@thaiveedu.com
Fax: 416-849-0594 Tel: 416-646-3422

‘கவிஞன்’ கவிதை இதழ்களின் முழுத் தொகுப்பு நூல்

- தெளிவத்தை ஜோசப் -

- கவிஞர் முருகையனின் கோபுரவாசல் நூல் பற்றிய மதிப்புரை.
- பேச்சு மொழியும் கவிதையும்.
- கவியரங்கக் கவிதைகள்.
- நுஃமானுடைய மூன்று விமர்சன ரீதியான கட்டுரைகள்.
- சண்முகம் சிவலிங்கம் - இன்றையத் தமிழ் கவிதைகள் பற்றிச் சில அவதானங்கள் என்னும் கட்டுரை இரண்டு இதழ்களில் வெளிவந்தது.

ஓர் அரை நூற்றாண்டு காலத்துக்கு முன் 1969ல் எம்.ஏ. நுஃமானும் அமரர் சண்முகம் சிவலிங்கமும் இணைந்து வெளியிட்ட கவிதைகளுக்கான இதழ் ‘கவிஞன்’.

‘கலைமதிப்புடைய தமிழ்க் கவிதைகளை இனம் காணவும், எமது கவிதைகளுக்கு நிலையான, வாசகமதிப்புடைய ஒரு வெளியீட்டுக்களத்தை உருவாக்கவும் கவிஞன் வெளிவருகின்றது. விரிந்துவரும் தமிழ்க் கவிதைப் பரப்பின் சகல புதிய அம்சங்களுக்கும் பக்கச்சார்பற்று ஒரு வெளியீட்டுக் களமாக இருப்பதில் ‘கவிஞன்’ என்றும் பின்னிற்காது. கவிதை பற்றிய விமர்சன நோக்கை வளர்ப்பதிலும் சமகாலத்துச் சர்வதேசக் கவிதைகளை தமிழிற்கு அறிமுகம் செய்து வைப்பதிலும் ‘கவிஞன்’ கவனம் செலுத்தும்.’ என்னும் பிரகடனங்களுடன் கவிஞன் முதல் இதழ் 1969 மார்ச்சில் வெளிவந்தது.

ஈழத்து இதழியல் வரலாற்றில் ‘கவிஞன்’ மூன்றாவது கவிதை இதழாக வெளிவந்தது.

ஈழத்தின் முதல் கவிதை இதழ்: ‘தேன்மொழி’ - 1955 - மகாகவியும் வரதரும் இணைந்து வெளியிட்டது.

இரண்டாவது கவிதை இதழ்: ‘நோக்கு’ - 1964 - முருகையனும், இ. இரத்தினமும் இணைந்து வெளியிட்டது.

கவிதைகளுக்கான மூன்றாவது இதழாக வெளிவந்தது கவிஞன்.

இந்த முதல் மூன்று கவிதை இதழ்களுக்கும் இருவர் இணைந்தே ஆசிரியர் பொறுப்பேற்றுள்ளமை கவனிப்புக்குரியது.

‘இணையாசிரியர் என்று பெயர்போட்டுக் கொண்டாலும் எல்லாமே மகாகவி ருத்ரமூர்த்தி தான்’ என்று வரதர் ஓரிடத்தில் குறிக்கின்றார்.

‘நானும் மறைந்த நண்பர் சண்முகம் சிவலிங்கமும் இணைந்து தான் ‘கவிஞன்’ இதழை வெளிக்கொண்டு வந்தோம். ஒவ்வொரு இதழின் உருவாக்கத்திலும் அவருக்கும் சமபங்கு உண்டு.’ எனக் குறிக்கின்றார் எம்.ஏ. நுஃமான் அவர்கள் இந்த முழுத்தொகுப்புக்கான முன்னுரையில்.

‘கவிஞன் நான்கு இதழ்களையும் ஒரே தொகுப்பாகத் கொண்டுவர வேண்டும்

என்ற எண்ணம் நீண்ட காலமாக எனக்குள் இருந்தது. எனது எண்ணங்களை உடனடியாகக் காரியசாத்தியமாக்கும் திறமையும் இதற்குரிய அவசாசமும் என்றுமே எனக்கு இருந்ததில்லை. இந்நிலையில் எனதன்பிற்கும் மதிப்புக்குமுரிய மாணவி லறீனா இதைச் செய்துள்ளார்...’ என்றும் இந்த முன்னுரையில் பதிக்கின்றார் அவர்.

இந்த மீள்பதிப்பை வெற்றிகரமாக சாத்தியப்படுத்தியிருப்பவர் லறீனா அப்துல் ஹக். மணற்கேணி ரவிக்குமார் அவர்களின் அணுசரணை மிக்க இணைவுடன் இந்த வரலாற்று முக்கியம் மிக்க ‘கவிஞன்’ இதழ்களின் முழுத்தொகுப்புப்பணிகளை சாத்தியப்படுத்தியிருக்கும் லறீனா பாராட்டுகளுக்குரியவராகின்றார்.

50 ஆண்டுகளுக்கு முந்தியதானதும் ஈழத்து இலக்கிய வரலாற்றின் ஒரு திசை திருப்பமான காலகட்டத்தின் கவிதைப் போக்கின் எழுச்சிகளைப் பதிவிலிட்டதுமான ‘கவிஞன்’ இதழ்கள் இன்றைய கவிஞர்களுக்கும், வாசகர்களுக்கும் பார்க்கவோ வாசிக்கவோ கிடைப்பதில்லை. ஆவணக்காப்பகங்களிலோ, நூலகங்களிலோ தேடினாலும் கிடைப்பதில்லை.

மறுமலர்ச்சிக் கதைகள், கவிதைகள், மற்றும் ஈழகேசரி, சுதந்திரன் சிறுக்கதைகள் போல், கவிஞன் இதழ்க் கவிதைகளும் கட்டுரைகளும் வரலாற்று முக்கியத்துவம் கொண்டவைகளே.

இந்தத் தொகுப்பு அந்த வரலாற்றுத் தேவையை பூர்த்தி செய்துள்ளது.

1969 மார்ச்சிலிருந்து ஒரு காலாண்டிதழாக வெளிவரத் தொடங்கிய கவிஞன் 1970 மார்ச் வரை நான்கு இதழ்களை வெளியிட்டிருக்கின்றது. ஐந்தாவது இதழ் ஒரு தனிக்கவிஞனுக்கான முழு இதழாக வெளிவரும் என அறிவித்ததன் படி 5வது இதழ் மகாகவியின் கவிதை நாடகமான கோடையை ஒரு தனி நூல் போலவே வெளியிட்டது. ஆகவே அதைத் தவிர்த்து மற்ற நான்கு இதழ்களுமே இத்தொகுப்புக்குள் அடங்கியுள்ளன.

இந்த நான்கு இதழ்களிலும் ஈழத்தின் முக்கியமான கவிஞர்கள் அனைவருமே பங்கு கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்விதழ்களில் இடம்பெற்ற 38 கவிதைகளும் முதல் பாகமான 123 பக்கங்களிலும் மொழிபெயர்ப்புக் கவிதைகளான 12 கவிதைகள் இரண்டாம் பாகமாக 21 பக்கங்களிலும் பிரசுரம் கொண்டுள்ளன.

அமெரிக்கக் கவிதைகள், ரஷ்யக்கவிதைகள், சீனக் கவிதைகள் எனப் பெரும்பாலான கவிதை மொழிபெயர்ப்புக்களை சண்முகம் சிவலிங்கமும் (11 கவிதைகள்) ஒரு ஜேர்மன் கவிதையை மகாகவியும் மொழிபெயர்த்துள்ளனர்.

கவிஞன் இதழ்களில் இடம்பெற்ற விமர்சனக் கட்டுரைகள் முக்கியமானவை.

மதிப்புரையும் விமர்சனக் கட்டுரைகளும் 3ம் பாகமாக 33 பக்கங்களில் இடம்பெற்றுள்ளன. இலக்கியப்படைப்புக்களின் முன்னகர்வுக்கும் செழுமையான வளர்ச்சிக்கும் ஆய்வுகளும் விமர்சனங்களும் மிக முக்கியமானவை.

தமிழில் போலல்லாது ஆங்கிலத்தில் கவிதைக்கென வெளியிடப்பட்ட முதல் சஞ்சிகையே ‘பொயட்றி றிவியு’ என்பது தான் 1909ல் இங்கிலாந்தில் இருந்து வெளிவந்த ஏடு இது.

ஆய்வுகளும் விமர்சனங்களும் கவிதையின் வளர்ச்சிக்கு உந்துதலானவை என்பதை ‘கவிஞன்’காரர்களும் உணர்ந்தேயுள்ளனர். ‘கவிஞன்’ இதழ்களின் தலையங்கங்கள் பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

தொகுப்பாசிரியர் எம்.ஏ. நுஃமானின் முன்னுரை, பதிப்பாசிரியை லறீனா அப்துல் ஹக்கின் பதிப்புரை ஆகியவற்றுடன் 192 பக்கங்களில் ஓர் இதழியல் கவர்ச்சியுடன் வெளிவந்திருக்கும் ‘கவிஞன்’ தொகுப்பு நூல் ஒரு வரலாற்று முக்கியத்துவம் மிக்கது.

theliwathai.joseph@thaiveedu.com

நீண்ட காத்திருப்பு...

56ம் பக்கத் தொடர்ச்சி...

அரசிலோ இராணுவத்திலோ தனி மனிதர்கள் இலக்கங்களாகவும் ஆட்கணக்காகவும் ஒழுங்குபடுத்தப்பட்டு விடலாம். ஆனால் விடுதலைப்போராட்ட அமைப்பு என்பது ஒவ்வொரு மனிதரையும் அதன் ஆன்மாவில் இணைக்க வேண்டும் அல்லவா? விடுதலைப்புலிகள் ஓர் மரபான ‘இராணுவமாக’, ‘அரசாக’ தங்களைப் பாவனை செய்ய ஆரம்பிக்கும் போது அதன் ஒழுங்குபடுத்தல் தனிமனிதர்களை விழுங்கியதை அஜித்தின் விபரிப்புக்களை விமர்சனங்களுடன் உறவுபடுத்திப் பார்த்துக்கொள்ள இயலும்.

‘நியூட்டன் - ஏன் புலிகள் அனைவருமே என்றுகூடச் சொல்லலாம். எங்கள் மீது குறிப்பான பகைமை கொண்டிருக்கவில்லை. நாங்கள் இராணுவ அமைப்பின் அங்கத்தவர்கள் என்பதினாலேயே பகைமை. நாங்கள் வீடு திரும்புவோம் என்பதே நியூட்டனின் நிலைப்பாடு. அது சாத்தியமென்றே அவர் நம்பினார். பெரும்பாலான புலி அங்கத்தவர்கள் போலல்லாது எதிர்காலத்தை நம்பிக்கையுடனேயே பார்த்தார்.’

அஜித் விடுதலையாகி வீடு திரும்பும் போது வீட்டிலிலும் வெளியிலும் இனவாதம் புகட்டப்பட்ட சிங்கள மக்களின் அறியாமை மனத்தினால் அந்நியத்தை உணர்கிறார். ஓர் கைதி பாதுகாப்பாக வீடு திரும்பும் போது அவரை தங்களை ஒரு தரப்பாக ஆக்கிக்கொண்ட அவருடைய சமூகம் அவரைச் சந்தேகிக்கின்றது. அஜித் கைது செய்யப்பட்டதை விடவும் அதிக மன உளச்சலுக்கு ஆளாகிறார். ‘அவர்கள் உங்களை எப்படியெல்லாம் கொடுமைப்படுத்தினார்கள்’ என்ற கதையை அவர்கள் சுவாரஸ்யத்தோடும் முன் முடிவுகளோடும் அவரிடமிருந்து கேட்க நினைக்கிறார்கள். அஜித் தான் நன்றாகவே நடத்தப்பட்டேன், நண்பர்களைச் சம்பாதித்துக்கொண்டேன் என்று சொல்கின்ற கதைகளை அவர்கள் நம்ப விரும்பவில்லை. புலிகளின் மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளராகவும் போராளியாகவும் இருந்து புனர்வாழ்விலிருந்து திரும்பிய தமிழினி தன்னுடைய தன் வரலாற்றை எழுதிய போது அதில் இப்படியான கதைகளைச் சொல்லும் போதும் தமிழ்ச்சமூகத்தின் குறித்த தரப்புகள் அவருக்கு ‘துரோகிப்’பட்டத்தைக்கொடுக்கத்தயங்கவில்லை. அவரைக் காயப்படுத்தவும் தயங்கவில்லை. அவர்கள் எதை நம்பினார்களோ அதையே கேட்கவும் விரும்புகின்றனர்.

‘நான் மனிதத்தன்மையுடன் நடத்தப்பட்டேனென்றுதான் எப்போதுமே சொல்லிவந்தேன். இதுதான் உண்மை. அதைச்சொல்ல நான் என்றும் தயாராக இருக்கிறேன். நான் போரில் ஈடுபட்டவன், போரால் சிறைப்பிடிக்கப்பட்டவன். அறியாமை வளர்த்தெடுத்த பகைமையே போரின் தீவிரத்தைத் தொய்யாமல் தாங்கிப்பிடித்தது. அந்த நெருப்பிற்கு எண்ணை வார்ப்பதல்ல என் நோக்கம். எனவே ஊடகம் கேள்வி கேட்ட போது நான் நீயூட்டன் கதையை, ஜோர்ச் அங்கிள் கதையைச் சொன்னேன். இவை உண்மையான கதைகள். எனக்கு முக்கியமான கதைகள். எனவே இவற்றைத் தொடர்புபடுத்தியே, நான் புலிகளுக்கு உதவி செய்ததால்தான் அவர்கள் என்னை நன்றாக நடத்தினார்கள் என்ற முடிவிற்கு வந்திருப்பார்கள் என நினைக்கிறேன். அல்லது உண்மை அவர்களுக்குத் தேவையற்றதாக இருந்திருக்கலாம்.’

நிறைவாக, ஒரு தன்வரலாற்றுப்பிரதி எங்கே வைத்து வாசிக்கப்பட வேண்டும் என்பதிலிருந்து அதன் மீது அதாவது அது கூறுகின்ற கடந்த காலத்தின் மீது, நாம் விமர்சனத்தை செவ்வனே செய்ய வேண்டும். நம்முடைய பார்வை என்பது நிகழ்காலத்தில் இருந்து வரலாற்றைக் காண வேண்டும். நிகழ்காலத்தின் கண்டடைவுகளில் இருந்து கடந்தகாலத்தை வாசிக்க வேண்டும். நீண்ட காத்திருப்பு, தன்னளவில் வந்து சேர்ந்த இடம் முக்கியமானது. அதேவேளை அது எல்லாவற்றையும் சரியாகப் பார்த்துள்ளதா என்ற தீர்ப்பிடலை விட அது உரையாடல் வெளியில் ஒரு இயங்கு பிரதியாக பாவிக்கப்பட வேண்டியது.

சிறுபான்மை இனங்களின் நிலைப்பாடுகளில் இருந்து பார்க்கும் போது, அஜித் சில இடங்களில் தன்னுடைய சூழலின் முன் முடிவுகளில் இருந்து தன்னை விடுவிக்க முடியாமலிருக்கிறார். ஆயினும் அஜித் தன்னளவில் வந்தடைந்த இடம் மிக முக்கியமானது.

நாங்கள் இச்சிறிய தீவில் பகிர்ந்துகொள்கின்ற வாழ்கையும் அதன் முரண்களும் நடந்த போரின் இனவாதத்தின் கடுமையான பகுதிகளைக் கொண்டுள்ளன. நாம் வன்முறையை, பகைமையை, வரலாற்றைக்கொண்டு நியாயப்படுத்தவோ தீர்ப்பிடவோ முயற்சிப்பது எல்லாவற்றையும் கூராக்கிக்கொண்டேதான் இருக்கும். ஏனென்றால் இறந்தவர்களால் ஒருபோதும் நீதி வழங்க முடியாது. நீதியோ அறமோ நிகழ்காலத்திலிருக்கின்றன. கடந்தகாலம் என்பது அனுபவத்தின், சிந்திப்பதின் கச்சாப்பொருட்களை நமக்குத்தருகின்றது. நாம் அவற்றைத் தேர்ந்தெடுக்கிறோம். அஜித்தின் பிரதியில் இருக்கின்ற தெரிவுகளும் அத்தகையதே. நாங்கள் நல்ல கதைகளின் அல்பங்களை - ஞாபகங்களைத் தேர்ந்தெடுத்து உரையாடலுக்கு கொண்டு வருவோம்.

yatharthan@thaiveedu.com

■ ■ ■

Income Tax

Augustine & Associates

25 Years Canadian Experience

" Rapid,Accurate & Affordable Service."

(Quebec, Ontario & Other Provinces)

Personal
Business
Corporate
GST,HST & QST
Bookkeeping
Payroll
T4 & T4A
Rental Releve 31

EFILE

Wimal Augustine
ON: 416 617 6735
QC: 514 279 7138
Toll: 1 800 668 9048

YOUR CHOICE IN
REAL ESTATE

Jesmine J Wimalendran
647.871.1921

Wimal Augustine
416.617.6735

www.propertyrealtors.ca

HOMELIFE

HomeLife/Future
Realty Inc., Brokerage. Independently Owned And Operated
Office: 905.201.9977

ஆறு சிறுகதைகள்: ஒரு பகுப்பாய்வு

ஏ.எச்.எம். நவாஷின் நூல் குறித்த ஒரு கண்ணோட்டம்

- தேவகாந்தன் -

2

சென்ற ஆண்டு இலங்கை சென்றிருந்த போது ஜீவநதி அலுவலகத்தில் வாங்கி வந்திருந்த ஏ.எச்.எம். நவாஷின் (ஈழக்கவி) 'ஆறு சிறுகதைகள்: ஒரு பகுப்பாய்வு' என்கிற நூலை சமீபத்தில் வாசிக்க முடிந்திருந்தது. நூலையும் ஜீவநதியே வெளியிட்டிருக்கிறது. அதன் 54வது வெளியீடு அது. அடக்கமான அழகிய பதிப்பு.

ஆச்சரியமாக இருந்தது, இன்றைய கால கட்டத்து இலங்கைத் தமிழிலக்கியத்திற்குத் தேவையான விமர்சனக் கூறுகளையும் கண்ணோட்டத்தையும் நூல் தாங்கியிருந்தது காண. 2015ல் வெளிவந்த நூல் இன்றுவரை கவனம் ஆகியிருக்கவில்லையே என மனம் கனத்தது. ஜீவநதியைப் பாராட்டுகிற வேளையில் அதற்கான வருத்தத்தையும் கொஞ்சம் பட்டுக் கொள்ளவேண்டும்.

இதை வாசிக்க நேர்ந்த சந்தர்ப்பம் மிகவும் முக்கியமானது. அண்மைக் காலமாக 'வாசிப்பு' பற்றிய மீளாய்வுகளும் தேடல்களும் ஓர் அவசியத் தேவையாய் என் மனத்தில் ஊன்றியிருந்த வேளையில், இந்நூல் ஓரெல்லையை நோக்கி நகர்வதற்கான வழியினைத் திறந்துவிட்டதாய்ப் பட்டது. அது வாசிப்பு, குறிப்பாக வாசக மைய விமர்சனம், சார்ந்தது.

பரவசத்தின் எல்லையில் நிற்க வாசகனைக் கூவி அழைத்துக்கொண்டிருந்த வாசிப்புச் செயற்பாங்கு, தன்னுள் எத்தனைதான் வாசிப்புச் சுதந்திரத்திற்கும் அர்த்த பரிமாணத்திற்குமான வெளியினைக் கொண்டிருந்தபோதும், வாசகனின் சர்வாதிகாரமாக அது உருவெளிப்பாடடையக்கூடிய சாத்தியம் தெரிய தொடர் வாசிப்பு ஒரு தேக்கத்தை எனக்குள் அடைந்துவிட்டது. கொவிட் -19 உலகைச் சூழ்ந்தபொழுதில் சகல காரியங்களும் கைவிடப்பட்டன. இப்போது இடத்திலிருந்து தொடர என்னை ஊக்கியிருக்கிறது 'ஆறு சிறுகதைகள்: ஒரு பகுப்பாய்வு' நூலின் வாசிப்பு.

இனி இந்த வாசக விமர்சனம்பற்றி சிறிது நான் சொல்லவேண்டும். அறுபதுகளின் ஆரம்பத்திலிருந்து முக்கியத்துவம் பெற்றெழும் வாசக மைய விமர்சனமானது உண்மையில் இன்று வழக்கிழந்துபோன புதிய விமர்சன முறையிலிருந்து உருவானதுதான். ஆயினும் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்த வொல்ஃப்காங் ஈஸர் போன்ற சில ஜேர்மன் பேராசிரியர்களினால் தாய்ச் சிந்தனைப் போக்கினைப் போல் வலுவிழந்து போகாமல் இது மேலும் ஊட்டமளித்து முன்னெடுக்கப்பட்டது. இதில் வாசக உலகத்தை இரு கூறாக்கியது முக்கியமான விஷயம். பிரதியின் அர்த்தம் கோடல் அதிகாரம் வாசகரிடம் இன்னுமே இருந்த பொழுதில், அது வாசக சர்வாதிகாரமாக உருவாகாமல் காக்கின்ற கவசமாக அது இருக்குமென்று பலராலும் நம்பப்பட்டது.

இன்று இதனால் இரண்டு விளைவுகள் வாசிப்புக் களத்தில் நிகழ்ந்திருக்கின்றன.

- அர்த்தமானது பிரதியிலோ அல்லது அதற்கு வெளியிலோ இல்லையென்றும், அது வாசகனின் புரிந்துகொள்ளலில் இன்னுமே இருக்கிறதென்றும் ஈஸரது கூற்றின்படி உறுதியானது.
- அதன்மேல் வாசகரையே உத்தேச வாசகரென்றும் ஆதர்ஸ வாசகரென்றும் இரண்டாகப் பிரித்து, வாசக இன்பத்தைத் தேடும் ஆதர்ஸ வாசகரை ஈஸர் முன்னிலைப்படுத்தினார். அதன்மூலம் வாசக அதிகாரத்தின் விசை தணிக்கப்பட்டது.

இப்போது வாசக மைய விமர்சனமானது ஆய்வடிப்படையிலோ கோட்பாடுகளின் அடிப்படையிலோ செய்யப்படும் விமர்சனங்களுக்கு நிகரான பெறுபேறுகளைத் தந்தபடி நிகழ் களத்தில் திகழ்ந்துகொண்டு இருக்கிறது.

இவைபற்றியெல்லாம் சொல்வதற்கு ஓர் அவசியமிருக்கிறது. பெரும்பாலும் பிரதிகள் குறித்த உண்மையான விமர்சனங்கள் பூரணமாய் இன்று அற்றுப்போயிருக்கின்றன என்பதைச் சொல்வதில் தயக்கம் காட்டவேண்டியதில்லை. அபிப்பிராயங்கள்



இருக்குமளவு விமர்சனமில்லை. அபிப்பிராயம் வாசகனோடானதாயும், முடிவு விமர்சகனுடையதாயும் இருந்த நிலை மாறியதிலிருந்து வெறும் அபிப்பிராயங்களே விமர்சனங்களாய் விழுந்துகொண்டிருந்தன. ஆனால் வாசக மைய விமர்சனத்தின் மீதான வாசக அதிகாரம்பற்றிய அய்யம் உணரப்பட்டு, அதைத் தீர்ப்பதற்கான வழிமுறை கண்டடையப்பட்ட பின்னால் அது மூச்சாக இன்று பயில்வரங்கில் நிற்கிறது. நல்ல விமர்சனம் பிறக்கு மென்ற நம்பிக்கையும் பிறந்திருக்கிறது.

'ஆறு சிறுகதைகள்: ஒரு பகுப்பாய்வு' நூல் வாசக விமர்சனத்தின் வழியில் ரசனை முறைத் திறனாய்வு, ஆய்வுத் திறனாய்வு, கோட்பாட்டுத் திறனாய்வென பல தளங்களிலும் செயற்பட்டிருப்பது இம்முறை சார்ந்த விமர்சனத்தின் முதல் வெளிப்பாடாய் எனக்குத் தெரிகிறது. வாசக மைய விமர்சனமானது நிகழ்வு வாதத்துடனும் உரைவிளக்கக் கோட்பாட்டுடனும் தொடர்பு கொண்டுள்ள வகையில் இந்நூலில் ஏ.எச்.எம். நவாஷ் (ஈழக்கவி) செய்துள்ள முனைப்புக்கள் ஆகக்கூடுதலான ரசனையையும் விளக்கத்தையும் கொண்டிருக்கின்றன.

இது உண்மையிலேயே சிரமமான காரியம். ஏனெனில் வாசக மைய விமர்சனமானது நிறைந்த கருதுகோள்களைக் கொண்டது. அதனை ஒரு சிந்தனைப் போக்கில் அடக்குவது இயலாத காரியமாயும் இருக்கிறது. ஆனால் புரட்சிகரமான, புதுமையான விமர்சன முறையாக இருந்ததில் எழுபதுகளின் ஆரம்பத்தில் இது பலரின் கவனத்தைக் கவர்ந்தது. பின் இது வாசக சர்வாதிகாரமாக மாறக்கூடிய சாத்தியத்துடன், ஏற்கனவே குறிப்பிட்டபடி புதிய விமர்சனத்தின் சீணத்துடன், இதுவும் மதிப்பிறங்கியது. இன்று இது மறுபடி மேனிலை அடைந்திருப்பதால் பயில்வு செய்வதில் தவறில்லையென நம்பமுடிகிறது.

மேலும், ஆறு படைப்பாளிகளினது படைப்புக்களிலிருந்துமான தேர்வுகளைவிட எனது தேர்வுகள் வேறானவை என்பதையும் இங்கே நான் சொல்லிவிடவேண்டும். அவை சரியல்லவென்று சொல்ல நான் யார்? அது ஈழக்கவியின் தேர்வுரிமை சார்ந்தது. எனினும் அவ்வேறுபடுதல் ஒவ்வொரு வாசகர்களுக்கிடையேயும் மிக இயல்பாக எழக்கூடியதும். அது இரவின் வானத்து நட்சத்திரக் கூட்டத்திலிருந்து அவரவரும் வெவ்வேறு வடிவங்கள் தோன்ற அல்லது வெவ்வேறு வடிவங்களைத் தோற்றி காண்பதுபோன்ற இயல்புகொண்டது.

ஏ.எச்.எம். நவாஷ் பகுப்பாய்வுக்குத் தேர்ந்துகொண்டவற்றுள் இறுதியான கதை 'ஒளி'. மருதூர்க் கொத்தனின் இக்கதை 1985ல் வெளிவந்த 'மருதூர்க் கொத்தன் கதைகள்' என்ற தொகுப்பில் இடம்பெறாது அதே பெயரில் 2007ல் வெளிவந்த தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. 1964ல் 'முஸ்லிம் கதை மல'ரில் வெளிவந்த இச்சிறுகதை 1985ல் வெளிவந்த தொகுப்பில் ஏன் இடம்பெறவில்லை என்பது புரியவில்லை. ஆயினும் அது இங்கே முக்கியமில்லை.

மருதூர்க் கொத்தனின் தொகுப்பிலிருந்து எனது தேர்வு இதுவாக இருக்காதென்ற போதும், ஈழக்கவியின் தேர்வோடு இணங்கிப் போக ஒரு சங்கதியுண்டு.

1951ல் ஏர்னெஸ்ற் ஹெமிங்வேயினால் எழுதப்பெற்று 1952ல் வெளியாகிய 'கிழவனும் கடலும்' என்ற ஒரு குறுநாவல் இருக்கிறது. அது இலக்கிய உலகத்தை அசைத்ததோ இல்லையோ, வாசக உலகத்தை அசைத்தது. வெளிவந்த அடுத்த ஆண்டிலேயே அதற்கு புலிற்சர் பரிசும் கிடைத்தது. 1954ல் ஹெமிங்வேக்கு நோபல் பரிசு கிடைத்தபோது அதுபற்றி விதந்துரைக்கப்பட்டது.

எண்பத்து நான்கு நாட்களின் தொடர்ந்த துரதிர்ஷ்டத்திற்குப் பின்னரும் அடுத்த நாளில் தன் உதவியாளனான சிறுவன் மகோலினுடன் மீன் பிடிக்க புறப்படுகிறான் சந்தியாகோ. அன்றைக்கு அவனுக்கு பெருத்த இரையொன்று கிடைக்கிறது. அம் மாபெரும் ராட்சத மீனை கரைக்கு கொண்டுவர மூன்று நாட்களாக கடலில் போராடும் சந்தியாகோவின் தழும்புகளை 'ஒளி'யில் வரும் கரீமின் தோள்களில் நான் கண்டேன்.

தன் குடிசையினுள்ளிருந்து குப்பி விளக்கில் ஊசலரிசிப் பழஞ்சோறும் மட்டிப் பழங்கறியும் நிசிக் குளிரில் கரும்பாகச் சுவைத்துண்ணும் வாழ்க்கையேயானாலும், உழைத்துண்ணும் செம்மையான வாழ்வு கண்டிருந்தவன் அகமத் கரீம். அதுவரை சட்டவிரோதமென விலக்கியிருந்த டைனமைட் மீன் பிடிக்கு மனம் கொள்கிறான் அவன். அதுவும் தன் மகளின் வரதட்சணையான 401 ரூபாவுக்காக. ஒருநாள் கடற்காற்றின் குளிரில் மகனோடு புறப்படுகிறான். டைனமைட்டை கொழுத்தி வீசவிருந்த தருணத்தில் அது கையிலே வெடித்து விடுகிறது. விரல்கள் சிதறிய நிலையிலும் 'ஒரு கை போனா மத்தக் கையிருக்கு. அவன் நாடினத்த, நம்ம தேடினாத்தான் தாத்தாவின் கழுத்தில் தாலி கட்டிப் பாக்கலாம்' என்று திடம்கொள்கிறான் கரீம். மருதூர்க் கொத்தனுக்கு வெற்றிகிடைக்கிறது. உன்னதமான ஒரு கலைப் படைப்பினைத் தர அவரெடுத்த முயற்சி ஆயிரம் பெறும்.

மருதூர்க் கொத்தனின் காலம் இலங்கைத் தமிழ் இலக்கிய உலகின் கருதுகோள்களில், சிந்தனைப் போக்கில் ஒரு நிலைமாறும் காலமாக இருந்தது. இந்த அலையடிப்பில் இடதுசாரி சிந்தனையாளருடன் இணங்கி நின்றவர் அவர். ஆயினும் அவரது எழுத்துக்கள் கலைத்துவத்தையும் முக்கியத்துவம் படுத்தியதில் அவரின் எழுத்துக்கள் மொழி சார்ந்தும், நடை சார்ந்தும், தன் நிலம் சார்ந்த கூறுகளை

தொடர்தல் 60ம் பக்கம்

ஆறு சிறுகதைகள்...

59ம் பக்கத் தொடர்ச்சி...

யும் வாழ்வியலையும் முக்கியப்படுத்துவதிலுமாக பிரதானம் பெற்றுவிட்டதாய்க் கூறமுடியும்.

இதற்கு முன்னதாய் இடம்பெற்றிருப்பது செ.கதிர்காமநாதனின் 'வெறும் சோற்றுக்கே வந்தது' சிறுகதை.

இது ஏற்கனவே நவாஷின் பகுப்பாய்வுக் குட்பட்ட சிறுகதைகளைப்போல ஆய்வுக் குட்படாது, ஏற்கனவே இருந்த அபிப்பிராயங்களை அல்லது அபிமானங்களை நிறுவும்படியாக தன் கருத்துக்களை விரித்துரைத்ததாய்ப்பட்டது எனக்கு. படைப்பாளிபற்றிய விவரணங்கள், அவர் எழுத்துக்கள்பற்றிய விமர்சகர்களின் அபிப்பிராயங்கள், அவரது காலத்தின் இலக்கியப் போக்குகள் போன்றவை முன்வைக்கப்பட்ட அளவுக்கு செ. கதிர்காமநாதனின் 'வெறும் சோற்றுக்கே வந்தது' கதை ஆய்வுசெய்யப்படவில்லை. சமூகமும் அரசியலும் சார்ந்த விவகாரங்களை அளக்கும் கருதுகோள் கலை விஷயத்தில் அதிகாரம் பெற்றமை முரணாகப் பட்டது. அல்லது அது கதையின் தரத்தை முழுதுமாக நாம் ஐயப்படவேண்டியிருக்கும்.

'வெறும் சோற்றுக்கே வந்தது' சுமாரான ஒரு கதை. அதில் கோஷம் இல்லையென்கிறார் ஈழக்கவி. நல்லது. நம்மை ஒரு முடிவுநோக்கி நகர்த்த படைப்பாளி எடுக்கிற பிரயத்தனங்கள் இடறுகல்போல இருப்பதைத் தெளிவாகக் காணமுடிகிறதே.
கிளிநொச்சி பிரதேசத்தில் ஆறு பிள்ளைகளுக்கு அக்காவாக இருக்கும் வறுமைப்பட்ட குடும்பத்து வள்ளிக்கு கொழும்பிலே ஒரு பணக்கார வீட்டிலே வேலை கிடைக்கிறது. இறைச்சி, மீன், முட்டை என்கிற சாப்பாட்டுக் சகனவுகளோடு வரும் வள்ளிக்கு காலப்போக்கிலேதான் தெரிகிறது, தான் அங்கே ஒருவிதமான ஓரங்கட்டலில் அகப்பட்டுக்கொண்டிருப்பது. பகல் முழுக்க தனித்திருக்கும் நிலைமை கூட, ஊரில் அவளது விளையாட்டுக்களையும் விளையாட்டுத் தோழர்களையும் பறித்துவிட்ட சோகத்தைத் தருகிறது. மேலும் ஒரு முக்கியமான விஷயம் இருக்கிறது. ஊரிலே சமூகத் தளத்தில் தாங்கள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லையெனத் தெரிந்திருக்கும் வள்ளிக்கு, தான் அந்த வீட்டில் ஏன் ஒதுக்கப்பட்டிருக்கிறோமென்பது புரியவில்லை. ஆனால் காரணம் புரியாவிட்டாலென்ன, அந்த ஒதுக்கத்தில் அவளது மனது கிளர்ச்சி செய்கிறது. பத்து அல்லது பதினொரு வயதான ஒரு சிறுபெண்ணின் மனத்துக் கிளர்ச்சியென்பது எவ்வாறிருக்கும்? தன் தந்தை ஒரு முறை வந்தபோது தானும் வீட்டுக்கு வரப்போகிறேனென பிடிவாதம் பிடிப்பது தானே? அதையே வள்ளி செய்கிறாள்.

இந்த சிறு பெண்ணின் செயற்பாடுகள் மூலமாக சமூகத்தின் பொருளாதார ஏற்ற இறக்கத்தின் காரணத்தை விளங்கப்படுத்த முயன்றதில் படைப்பாளிக்கு வெற்றியென நிச்சயமாக நான் சொல்லமாட்டேன்.

நான்காவது கதையாக இடம்பெற்றிருப்பது, என்.எஸ்.எம். ராமையாவின் 'ஒரு கூடைக் கொழுந்து' கதை. வடிவம், மொழி, நடை, பொருள் யாவும் அற்புதமாய் வந்து வாய்த்திருக்கிற கதையிது.

காலத்துக்குக் காலம், மனத்தில் முதன்மையிடம் பெற்றிருக்கும் சிறுகதைகள் ஒருவரிடத்தில் இடம்பெயருகின்றன. மிகச் சிறந்ததென மனத்தில் இருக்கை போட்டிருந்த ஒரு சிறுகதை காலப்போக்கில் தன்னிடமிழந்து இரண்டாம் மூன்றாம் வரிசைகளுக்கு பின்தள்ளிப் போய்விடுவது போல், பிந்தி நிற்கும் ஒரு கதையோ புதிதாக வரும் ஒரு கதையோ அந்த இடத்தைச் சுவீகரித்துக்கொள்கிறது. இவ்வாறு எனக்கு அடிக்கடி நடக்கும். என் வாசிப்பு அவ்வளவு விரைவானதும் பரந்ததுமாக இல்லாதபோதிலும், அது நடக்கிறது. பிற அபிப்பிராயங்களிலிருந்து ஒரு முடிவை நான் அடையாததில் இது மந்த கதியிலாயினும் நடக்கிறது. மிகச் சிறந்த சிறுகதைகளென நான் எண்ணியிருந்த பல சிறுகதைகள் தம்மிடமிழந்து பின்னேயுமோ, சுமாரான கதைகளென எண்ணியிருந்தவை முன்னேயுமோ இடம் மாறியமை இவ்வண்ணமே எனக்கு நிகழ்ந்தது.

புதுமைப்பித்தனின் 'அகல்யை'யும், 'சாப விமோசன'மும், 'பொன்னகர'மும் முன்னணி வரிசையில் நின்ற காலம் போய், பிரபலமில்லாத சிலரின் கதைகள் முன்னிலைப்பட்டது எனக்கு தொண்ணூறுகளில் நடந்தது. மலேசிய சிறுகதைகளை நண்பர் சை. பீர் முகம்மது இரண்டு தொகுப்புகளாக்கிய பொழுது அதை ஒரு தேவை கருதி முற்றுமாய் வாசிக்க எனக்கு நேர்ந்தது. மிகச் சிறந்த சில சிறுகதைகளினை அப்போதுதான் என்னால் கண்டடைய முடிந்திருந்தது. 'பாக்கி' சிறுகதை அவ்வாறான கதை. அதை எழுதிய இளஞ்செழியனையோ அவரது கதைகளையோ நான் முன்பு அறிந்திருக்கவில்லை. ஆனால் 'பாக்கி' சிறுகதையை வாசித்த மறுகணத்தில் அது வந்து என்னுள் முதல் வரிசை பிடித்துக்கொண்டது. இன்னும் அந்த இடத்தைச் சுவீகரிக்கும் வேறு சிறுகதையை நான் வாசித்திருக்கவில்லை. எவ்வளவு, ஒரு முப்பது ஆண்டுகள் இருக்குமா? இருக்கும்.

இதுதான் எனது வாசிப்பு. இவ்வண்ணம் தான் என்.எஸ்.எம். ராமையாவின் 'ஒரு கூடைக் கொழுந்து' சிறுகதையும் என்னுள் வந்து முதன்மையிடம் பிடித்தது. அந்தக் கதையை அது வெளிவந்த அறுபதுகளிலும், செ. யோகநாதனின் இலங்கைச் சிறுகதைத் தொகுப்புகளுள் ஒன்றான 'ஒரு கூடைக் கொழுந்து' என்ற பெயரில் வந்த தொகுப்பிலும், அதுபற்றிய குறிப்புகள் விமர்சனங்கள் வந்த வேளைகளிலுமாக பல தடவைகள் வாசித்திருக்கிறேன். ஆனால் ஈழக்கவியின் அதுபற்றிய பகுப்பாய்வுக் கட்டுரையை நூலில் வாசித்த பின் அச்சிறுகதையைத் தேடிவாசித்தபோது அது தன்னை இடம் பெயர்த்தியது. அது இன்று முதன்மைச் சிறுகதைகளின் வரிசையில் இருந்துகொண்டு இருக்கிறது.

என்.எஸ்.எம். ராமையாபற்றியும், அவர் மலையக இலக்கியம் மற்றும் சிறுகதைகள்பற்றிக் கொண்டிருந்த கருதுகோள்களைப் பற்றியும் ஈழக்கவி எழுதியிருந்தவற்றை வாசித்தபின்னால் இது நடந்திருக்க முடியும். அது ஆரம்பத்திலும் எனக்கு நல்லவொரு கதையாக இருந்ததுதான். ஆனால் இன்று அதனிடம் வேறு. அதை ஏற்படுத்திய ஈழக்கவிக்கு என் நன்றியும், தன் பகுப்பாய்வை மிகச் சிறந்த வாசகமைய வாசிப்புச்சார்ந்து விரித்துச் சென்ற முறைக்கு என் பாராட்டும் உரித்து.

ஒரு படைப்பை வாசிக்கவேண்டுமென்ற ஆர்வத்தை வாசகனிடத்தில் உருவாக்குவது ஒன்று. அதை எவ்வாறு வாசிப்பதென்ற முறைமையை விரித்துக்காட்டுவது இன்னொன்று. ராமையாவின் 'ஒரு கூடைக் கொழுந்து' எழுந்த புறநிலைச் சூழ்நிலையோடும் உணர்வோடும் பொருத்தி வாசிக்கும் வித்தையை வாசகனுக்குக் கற்பிப்பதுதான் அக் கட்டுரையின் விசேஷம்.

மலேசிய சிறுகதைத் தொகுப்பிலுள்ள இளஞ்செழியனின் 'பாக்கி' சிறுகதையின் முடிவில் வாசகனின் உடம்பே ஆடும்படியானபடி ஓர் அதிர்வெழும். அவ்வாறு 'ஒரு கூடைக்கொழுந்'தில் நேர்வதில்லை. ஆனால் உழைப்பின் நேர்மையும், அந்த நேர்மைக்கு வரும் சவாலில் பெறும் வெற்றியும் ஆணி அடித்ததுபோல் வாசித்து முடிக்கும் மனத்தில் தவறாது பதிவதை உணரமுடியும்.

கணவன்போலவே காலையிலெழுந்து தேயிலைத்தோட்டத்திலே வேலைசெய்து, அப்போதும் பள்ளியிலிருந்து வீடு திரும்பியிருக்கக்கூடிய மகளின் நினைவாயிருந்து பதைத்துவிட்டு வீடு திரும்புகிறாள் மனைவி. வீடு வந்ததும் வழக்கம்போல் கணவன் குளிப்பதற்கான ஒழுங்குகளைச் செய்து கொடுக்கிறாள். அவன் வெளியே செல்ல, அவசர அவசரமாக சமையலைக் கவனிக்கிறாள். பின் பிள்ளைகளுக்குச் சாப்பாடு, மது அருந்திவிட்டு வரும் கணவனுக்குச் சாப்பாடென கொடுத்துவிட்டு தானும் உண்ட பின் கணவனருகே 'அப்பாடா, ஒருநாள் கழிந்தது' போன்ற ஆயாசத்துடன் சரிகிறாள். தூக்கம் அவளது கண்களைச் சுழற்றுகிற அளவில் கணவனது கை வந்து மார்மேல் விழுந்து 'பாக்கி வேலை ஒன்றிருக்கிறது' என்ற பிரக்ஞையைக் கொடுக்கிறது. எளிமையான யதார்த்தத்தில், எளிமையான சொற்களில் அந்தக் 'கடமை'க்கு முக்காமல் முனகாமல் தன்னை ஆட்படுத்துகின்ற பெண்களின் வாழ்வில் உற்றுள்ள கொடுமையை 'பாக்கி' சிறுகதை எடுத்து விளக்கும் தருணம் அற்புதமானது. கதையொன்று சகல தன் ஆகிருதியிலும் சிறுகதைப் பண்பை அக்கணத்திலேற்றி விட்டிருக்கும். எனக்கு மிகவும் பிடித்த சிறுகதை அது.

ஈழக்கவி தன் பகுப்பாய்வுக்காய் எடுத்திருக்கும் மூன்றாவது கதை ஜெயகாந்தனின் 'யுகசந்தி'. யுகங்கள் மாறிக்கொண்டே இருக்கின்றன. எனினும் அந்த மாற்றம் ஒரு புள்ளியில் உருவாவதில்லை. ஒரு படிநிலைச் சமூகத்திலிருந்துதான் இன்னொரு படிநிலைச் சமூகம் தோற்றமெடுக்கிறது. 'உள்ளது மறையாது, இல்லாதது பிறவாது' என்பதுதான் இதன் விஞ்ஞான விதி. அவ்வாறு தோன்றும் புதுயுகத்தின் பிரசவம் அந்த யுக மக்களுக்கு மிக இலகுவாக இருந்துவிடுவதில்லை. மாற்றத்திற்கானதும் மாற்றத்தைத் தவிர்ப்பதற்கானதுமான போராட்டங்களும், இழப்புகளும், அதன் வலிகளும், அவ்வவ் யுக மனிதர்களின் வாழ்வை பெரும் அலைக்கழிப்புக்கும் அல்லலுக்கும் உள்ளாக்கக் கூடியவை. அவை பெரும்பாலாராலும் உணரப்படுவதில்லை. கலைஞன் அதை மிகத் துல்லியமாகக் கவனமாகிறான். ஜெயகாந்தனின் இத்தரிசனம்தான் 'யுகசந்தி' சிறுகதையாக வெளிவந்திருக்கிறது. ஆயினும் அது கலாபூர்வமான விஷயங்களில் வெற்றிபெறுவதில்லை. அதை நேர்த்தியாக எடுத்துக்காட்டுகிறது ஈழக்கவியின் இக்கட்டுரை.

படைப்பு மட்டுமல்ல, படைப்பாளியே இதில் விமர்சனமாவது விசேஷம். அவனது எழுத்தின் செல்நெறி மாற்றமும், பின்னால் உண்டாகும் பலமும் பலவீனங்களும் இங்கே தெளிவாக முன்னெடுத்து வைக்கப்படுகின்றன. க.நா.சு.விலிருந்து ந.ரவீந்திரனூடாக பல விமர்சகர்களும் இந்நிலையை எடுத்து விளங்கப்படுத்தியிருப்பினும், வாசகனை இணங்கச் செய்து தன்னுடன் அழைத்துச் செல்லும் விந்தையை நூலாசிரியனின் இக்கட்டுரை செய்திருக்கிறது.

ஈழக்கவி இரண்டாவதாக தன் பகுப்பாய்வுக்கு எடுத்திருக்கும் சிறுகதை வ.அ. இராசரத்தினத்தின் 'தாய்'. முதலில் வீரகேசரி பத்திரிகையில் வெளிவந்த இச்சிறுகதை பின்னால் 'கொடியாரக் கதைகள்' தொகுப்பிலும் இடம்பெற்றுள்ளது. ஒரு தாயின் தியாகமும் பாசமும் கண்ட ஏமாற்றத்தின் எதிரொலியாக எழுந்ததாக இக்கதையைச் சொல்லமுடியும். வ.அ. இராசரத்தினத்தின் அருமையான சிறுகதைகள் 'தோணி'யிலும் 'ஒரு காவியம் நிறைவுபெறுகிறது' தொகுப்பிலும் இருக்கின்றன. 'தோணி'யே ஒரு அற்புதமான கதைதான். எந்தத் தொகுப்பிலும் இடம் பெற்றிராத 'இலக்கு'வில் வெளிவந்த 'வலை' சிறுகதை இருக்கிறது. ஆயினும் ஈழக்கவியின் தேர்வைச் சந்தேகிக்க வேண்டியதில்லை. அவரது பார்வையில் தரமான ஒரு சிறுகதையே தேர்வாகியிருக்க முடியும்.

தொண்ணூறுகளின் நடுப் பகுதியில் சில காலம் அவர் சென்னையிலே தங்கியிருந்த போதுதான் வ.அ. இராசரத்தினத்தை எனக்கு நேரில் அறிமுகமானது. 'தோணி'யிலும் 'கிரௌஞ்சப் பறவை'யிலும் அவரைத் தெரிந்திருந்த நான் அவரோடு நெருக்கமாகிப் போனேன். கிழக்கிலங்கையின் இலக்கியச்செழுமையை, இலக்

தொடர்தல் 61ம் பக்கம்

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail: info@thaiveedu.com
Fax: 416-849-0594
Tel: 416-646-3422

ஆறு சிறுகதைகள்...

59ம் பக்கத் தொடர்ச்சி...

கியவாதிகளை, அதன் பல்வேறு இலக்கிய முயற்சிகளை, அவற்றின் வெற்றிகளை அவர் வாயாலேயே கேட்டறியும் பாக்கியம் எனக்கு அப்போதுதான் கிடைத்தது. 'ஒரு காவியம் நிறைவுபெறுகிறது' குறுநாவலை அவர் அங்கிருந்துதான் எழுதினார். மித்ர பதிப்பகத்தில் அப்போதுதான் அது அச்சுமாகியது. 'இலக்கு'வுக்காக நான் கதை கேட்டபோது 'வலை' சிறுகதையையும் அங்கேயிருந்துதான் எழுதித் தந்தார். அவரது எழுத்தில் எனக்கு பெரிய கௌரவமுண்டு. சிறந்த வாசகராய் இருந்ததை அவரது இன்னொரு தகைமையாய் நான் காண்கிறேன்.

'தாய்' கதையானது, ஒருவகை மொழியில் சொல்லப்போனால், வழமையானது. கணவனை இழந்த ஒரு தாயின் வாழ்தற் கடினங்களை அழகாக அது எடுத்துச் சொல்லியிருக்கிறது. அதில் அதிரவைக்கும் முடிவுகளில்லை. ஆனால், மனத்தை இறுக்கும் சோகம் இருக்கிறது. பரவசமெழுப்பும் சம்பவங்களில்லை. ஆனால், மனத்தைக் கவரும் மொழியும், நடையும் இருக்கிறது. காலத்தைக்கொண்டு கணித்தால் இது வெளிவந்த காலத்தின் கிழக்கிலங்கை இலக்கியப் போக்கினை நாம் துல்லியமாக இனங்காணவும் முடியும்.

இலங்கையின் இலக்கிய வரலாற்றில் நாவல்கள் தோன்றுவதற்கு முதற்களமாயிருந்த திருகோணமலை வ.அ. இராசரத்தினத்தின் 'கொழுகொம்'போடுதான் மறுவரவு காண்கிறதென கலாநிதி நா. சுப்பிரமணியன் மிக்க கணிப்போடு கூறுவார். அறுபதுகளில் திருகோணமலையின் மண்வளம் இலக்கியமேறியதெனில், மூதூர் வ.அ. இராசரத்தினத்தால் இலக்கியமேறியது என்கிறார் ஈழக்கவி. அது முற்றிலும் உண்மையே. வ.அ. இராசரத்தினம் மூதூரின் இலக்கிய அடையாளம்.

கணவனையிழந்த தாயொருத்தி தன் மக்களை படிப்பித்து வளர்த்தெடுக்கப்படும் பிரயத்தனங்களுக்குப் பின் அம்மக்கள் ஆளாகி வந்து உத்தியோகமும் பார்க்கிற நிலையில் அடையும் புறக்கணிப்பிலான அவமானங்களைக் காண்கிறபோது வாசக மனம் அடையும் சோகம் அளப்பரியது. ஒரு தாயின் தியாகமும் பாசமும் அழகாகச் சொல்லப்பட்டுள்ள வேளையில், அவை சொல்லப்பட்ட விதமும் பாவிக்கப்பட்ட மொழியும் அதன் கலைத்துவத்தை மிகுப்பித்திருக்கின்றன. மண் வாசனை சார்ந்த எழுத்துக்கள் முக்கியமாய் மிளிரத் தொடங்கிய காலத்தில் கிழக்கிலங்கையின் இலக்கியச் செல்நெறி எவ்வாறிருந்ததென்பதைக் காண வ.அ. இராசரத்தினம் போன்ற அக்கால எழுத்தாளர்கள் ஆதாரமாயிருக்கிறார்களென்பதை ஆதாரபூர்வமாய் மிகச் சரியாகவே எடுத்துரைத்துரைத்திருக்கிறது கட்டுரை.

அவரது தொடர்பாடல்களும் வாசிப்புகளும் மிகச் சரியான முடிவுகளை அவர் அடைய நிச்சயம் கைகொடுத்திருக்கிறதென்பது தெளிவாகவே புரிகிறது கட்டுரையில்.

இந் நூலில் ஈழக்கவி முதலாவதாக தன் பகுப்பாய்வுக்கு எடுத்திருக்கும் கதை புதுமைப்பித்தனின் 'சாப விமோசனம்' ஆகும். எடுத்துக்கொண்ட கதையும், அதை ஆய்வுசெய்ய எடுத்துக்கொண்ட முறையும் விமர்சனத்தையே ஒரு படைப்பாக இக் கட்டுரை நம் முன்னால் நிறுத்துகின்றது.

'பொன்னகர'த்தைப்போல் 'சாப விமோசன'த்தில் கற்பு விசாரணைப்படுத்தப் படவில்லை. ஆனால் இராமாயணத்தில் வரும் அகலிகை கதையை மறுவிசாரணை செய்கிறது 'சாப விமோசனம்'. மறுபடி அகலிகை மீண்டெழுவதுதான் இக்கதையின் உச்சமான கட்டம்.

புதுமைப்பித்தனுக்கு முன்னேயும் சமகாலத்திலும் பின்னாலும் அகலிகை கதை அதிகமான எழுத்தாளர்களின் மறுவாசிப்புக்கு உட்பட்டிருக்கிறது. புதுமைப்பித்தனே அகலிகை தொன்மத்தை இரண்டு சிறுகதைகளாய் படைத்திருக்கிறார். ஒன்று 'அகல்யை'. மற்றது 'சாப விமோசனம்'. அகல்யையில் 'சாபத்திற்குத்தான் விமோசனம், பாவத்திற்கல்ல'வென மறுபடி கல்லாகும் அகலிகையைப் படைத்த புதுமைப்பித்தன், சாப விமோசனம் பெற்று கௌதமருடன் வாழும் அகலிகையை 'சாப விமோசனம்' சிறுகதையில் காட்டுகிறார். 'அகல்யை' கதையை புதுமைப்பித்தனின் நம்பிக்கை வரட்சியினது அடையாளமாக இடதுசாரி விமர்சகர்கள் விமர்சித்ததும் உண்டு. ஆனால் 'சாப விமோசனம்' உள வியலின் பகுப்பாய்வாகக் காணப்பட்டு மெச்சப்பட்டது அவர்களால்.

பாரதிக்கு ஒரு பாஞ்சாலி சபதம்'போல் புதுமைப்பித்தனுக்கு 'அகல்யை'யும் 'சாப விமோசன'மும் அமைந்தனவென்பதே மெய். பிரச்னைக்கு தீர்வு சொல்லவில்லையென 'சாப விமோசனம்'மீதும் 'அகல்யை'மீதும் விமர்சகர்களுக்கு குறையுண்டு. 'அகல்யை'யை ஏற்றுக்கொண்ட அளவுக்குக்கூட 'சாப விமோசன'த்தை பல விமர்சகர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அசோகமித்திரன்கூட 'சாப விமோசன'த்தை எதிர் நிலையில் விமர்சித்திருக்கிறார். 'காஞ்சனை' அளவுக்கு 'சாப விமோசனம்' எதிர்ப்புக் கண்டதென புதுமைப்பித்தனே 'காஞ்சனை' தொகுப்பின் முன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறார். இது குறித்து கலாநிதி க. கைலாசபதி நீண்ட ஆய்வுகளைச் செய்திருக்கிறார். அவை 'ஒப்பிலக்கிய' நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

உண்மையில் 'சாப விமோசனம்' தமிழின் சிறந்த சிறுகதைப் படைப்பாக ஒரு கால கட்டம்வரை இருந்ததென்பதில் பலருக்கும் உடன்பாடே. ஆரம்பத்தில் கருத்தளவில் அதற்கு எதிர்வினை ஆற்றியவர்களும் இந்த முடிவை மனந்திறந்து பின்னால் ஒப்புக்கொண்டனர்.

இந்நூல் மாணவர்களின் கல்வித் தேவைக்காக எழுதப்பட்டதென்கிறார் ஏ.எச்.எம். நவாஷ் (ஈழக்கவி). ஆனால் இது படைப்பாளிகளுக்கும் விமர்சகர்களுக்கும்கூட உகந்தது என்பது என் அபிப்பிராயம். ஏற்கனவே முதலாம் பகுதியில் வாசகமைய விமர்சனம் பற்றி எழுதியது இதற்காகவேதான். அது ஒரு புதிய வாசிப்பையும், தானே ஒரு முடிவைக் கண்டடையும் வெளியையும் வாசகனுக்கு அளித்திருக்கிறது. அதன்படி சில ஆண்டுகளின் முன்பாக தமக்குப் பிடித்த சிறுகதைகளையும், அவை ஏன் தமக்குப் பிடித்தன வென்ற விபரிப்பையும் செய்த தொகுப்பொன்று 'சாளரம்' என்ற பெயரில் வந்திருந்தது ஞாபகம். கால இடைவெளி நீண்டிருந்தும் அதன் நீட்சியாக இந்நூலைக் காணலாம்.

வாசிப்பினை ஆழமாகச் செய்யாமல் அபிப்பிராயங்கள் இல்லை. ஆழமான வாசிப்பிலும் தன் அரசியல் கலவாமல் அபிப்பிராயம் பிறவாது. சுவையை அடிப்படைத் தேவையாக்கும்போதுதான் அவற்றினை ஓரளவு கடந்த நல்ல வாசிப்பு உண்டாகிறது. எனில் அதை முன்நிபந்தனையாக விதிக்கும் புதிய அம்சம் சேர்ந்ததாய் இருக்கிறது ஏ.எச்.எம். நவாஷின் (ஈழக்கவி) பகுப்பாய்வு.

devakanthan@thaiveedu.com

வீடு வாங்க விற்க

South of Patterson
4 + 7 Bedrooms 7 Washroom
W/O Basement Finished

Markham/McNicoll
Commercial Condo

Kuga Raveendrarajah
Real Estate Broker
Dir: 416-843-8585

HOMELIFE HIGHER STANDARDS

Mathan Selvendarakumaran
Sales Representative
Dir: 416-625-2870

MLS MULTIPLE LISTING SERVICE

Shajetha (Suzy) Sabanathan B.Sc.
Sales Representative
Cell: 416-298-3200

HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6

சேமிப்பின் அடையாளம் அழகானதோர் வீடு
Bus: 416-298-3200

மோட்கேஜ்

புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், 3ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்

MORTGAGE

NESAN
416-908-5656

Residential / Commercial / Industrial / Investment Properties

1st, 2nd and 3rd Mortgages • Refinance • Secured Line of Credit
New House Commitment, Pre-approval • Home Equity Loan

1st Mortgage ('A' lender) Majaor, Under write Banks

Mortgage Amount	Weekly	Bi Weekly	Semi Month	Month
698,000	659.62	1319.25	1429.19	2858.37
546,000	515.98	1031.96	1117.96	2235.92

1st Mortgage ('B' lender) Under write Banks, Trust, Cridit Union

Mortgage Amount	Weekly	Bi Weekly	Semi Month	Month
698,000	765.04	1530.08	1657.59	3315.17
546,000	598.44	1196.88	1296.62	2593.24

Private Mortgage ('C' lender) Private lender

Mortgage Amount	Weekly	Bi Weekly	Semi Month	Month
698,000	1059.81	2119.62	2296.26	4592.52

2nd Mortgage ('D' lender) Private lender

Mortgage Amount	Weekly	Bi Weekly	Semi Month	Month
98,000	179.15	358.29	388.15	776.30

3rd Mortgage ('E' lender) Private lender

Mortgage Amount	Weekly	Bi Weekly	Semi Month	Month
49,000	113.72	227.43	246.39	492.77

Secure Line of Credit & Loan

Mortgage Amount	Secure Line of Credit	Home Equity Loan
225,000	1005.95 / per month	1276.51 / per month

MORTGAGE ALLIANCE
Thavanesan Subra
Independently Owned and Operated
Brokerage # 10530

1585 Markham Rd, Unit # 407,
Toronto, ON. M1B 2W1
www. nesan.ca
mortgage@nesan.ca

SUBRA MORTGAGE SOLUTIONS INC.
Office: 1-844-878-2721
Fax: 647-351-3099

BUYERS

If Yathavann Doesn't Negotiate at Least

$10,000 Off The List Price,

He'll Give You $2000

Cash on Closing.

FREE Home Inspection When You Buy With Us.

Sellers

Your Home SOLD in 60 Days Guaranteed!

OR I'LL SELL IT FOR FREE**

**SOME CONDITIONS MAY APPLY

For More Information On My

Exclusive Guaranteed Sales Program

ORDER A FREE REPORT BY VISITING

WWW.HOUZZVALUE.CA

Free Home Evaluation.

No Cost. No Obligations

RE/MAX

Crossroads Realty Brokerage Inc.

Independently Owned & Operated

Off:416.491.4002

YATHAVANN

SELVARAJAH

Sales Representative

416-992-4474

கண்ணீர் உறையும் கணங்கள்

- சாம்ராஜ் -

கரிசல் முன்னோடி கி. ராஜநாரயணனின் கரிசல் காட்டுக் கடுதாசியில் ஒரு சம்பவம் உண்டு. கி. ராவும் மற்றொருவரும் ஒரு விவசாயப் போராட்டத்தின் பொருட்டு கைது செய்யப்பட்டு லாக்கப்பில் இருக்க, அவர்களுடன் லாக்கப்பில் ஒரு திருடரும் அடைக்கப்பட்டிருப்பார். கி.ரா திருடரிடம் முதன்முதலாகப் பிடிபட்ட, அடிப்பட்ட அனுபவத்தைக் கேட்க திருடர் சிரித்தபடி, “இன்ஸ்பெக்டர் சாரு அன்னிக்கி அடிச் சாரு பாருங்க. நான் அப்படியே அந்தப் பக்கம் போய் விழுகிறேன்;” என்று ஆரம்பிக்க, கி.ரா தன் பக்கத்திலிருக்கும் நண்பரிடம் சொல்வார் “அடி வாங்கின அன்னிக்கி இவரு இவ்ளோ சந்தோசமா இருந்திருக்கமாட்டார். சொல்லி சொல்லி சொல்லி சொல்லி இந்த இடத்துக்கு வந்துட்டார்”.

செல்வம் அருளானந்தத்தின் ‘சொற்களில் சுழலும் உலகம்’ புத்தகத்தை இப்படிப் புரிந்து கொள்ளலாம். தழும்புகளை தடவிக் கொண்டே காயங்களைப் பற்றிப் பேசுகிறார். முன்பு கண்ணீர் துயரம். இப்பொழுது கைப்பான அனுபவம். ‘எழுதித்தீராத பக்கங்கள்’ செல்வத்தின் முதல் அனுபவக் குறிப்பு நூல். தமிழில் பகடியும், கண்ணீரும், மகத்தான அனுபவங்களும், பேதமைகளும் கை கோர்க்கும் ஓர் அசாத்திய சாத்தியம்.

கைப்பு என்றால் மலையாளத்தில் கசப்பு. பாகற்காயை கைப்பாக்காய் என்றே சொல்வார்கள். தமிழில் ஒரு கைப்பு அனுபவத்தை அத்தனை பகடியோடு சொன்ன தலையாயப் புத்தகம் என்று எழுதித் தீராத பக்கங்களை உறுதியாக முன் நிறுத்தலாம். மொத்தம் 22 அத்தியாயங்கள். மகத்தான சிறுகதைகளாக ஆவதற்கு உண்டான எல்லா சாத்தியங்களும் அதில் உள்ளன. செல்வம் புனைவு இலக்கியம் கொடுக்கும் சாத்தியங்களை மறுத்து தன் அனுபவங்களாகவே எழுதுகிறார். Unsung Heroes என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுகின்ற பாடப்படாத வீரர்களின் கதைகள் இவை. வீரர்கள் என்றால் வெற்றிதான் பெற வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. துரை சிங்கம் அண்ணன், பங்கிராஸ் அண்ணா, இம்மானுவேல், நாயகம், பெயர் சொல்லப்படாத ஒருவர் போன்றவர்களே அந்த பாடப்படாத வீரர்கள். நம்பிக்கைக்கும், பகுத்தறிவிற்கும் அப்பாற்பட்ட சம்பவங்கள். புனைவை மிஞ்சியதுதானே வாழ்வு? இந்த வாழ்வு அனுபவங்களை கலாசாரப் பின்னணியோடு, கலைநுட்பத்தோடு நம் முன் வைக்கிறார் செல்வம்.

தேனி சீருடையான் ‘நிறங்களின் உலகம்’ என்றொரு நாவல் எழுதியிருக்கிறார். அவருடைய சொந்த வாழ்வுதான். எட்டு வயதில் ஏற்பட்ட காயத்தினால் பார்வை முற்றிலும் இல்லாது போக, பார்வையற்றவராய் பள்ளி, கல்லூரியை முடிக்கிறார். அதன் பின் ஓர் அறுவை சிகிச்சையின் வழி பார்வை மறுபடியும் கிடைக்கிறது. அரசுப்பணிக்கு முயற்சி செய்ய, சான்றிதழ்களில் பார்வையற்றவர் என இருக்க, பார்வையுடையவராய் தேனி சீருடையான் இருக்க, இந்தக் குழப்பத்தில் வேலை வாய்ப்புகள் அடிபட்டுப் போகின்றன. உலகத்தில் மிக அரிதாகவே நிகழும் ஓர் அனுபவம். வாழ்நாளின் இடையில் பத்தோ பணிரெண்டு வருடங்கள் முற்றிலும் பார்வையற்றுப்போய் மீண்டும் பார்வை பெற்று வாழும் வாழ்வு எத்தனை பேருக்கு நிகழ்ந்திருக்கும்!

எழுத்தாளர் ச. தமிழ்ச்செல்வன் இவற்றையெல்லாம் கூறி ஒரு முன்னுரை எழுதியிருப்பார். நம்மை அந்த முன்னுரை பரவசத்துக்குள்ளாக்கும். ஒரு மகத்தான அனுபவத்திற்கு ஆட்பட நாம் தயாராவோம். அந்த நாவலின் ஆகச் சிறந்த அத்தியாயம் ச.தமிழ்ச்செல்வனின் முன்னுரை மாத்திரமே. துயரப்பட்டதனாலேயே துயரத்தை அவர்களால் துல்லியமாக சொல்லிவிட முடியும் என்ற எந்த உத்திரவாதமும் இல்லை. செல்வம் இந்த நூலில் பிறருடைய துயரத்தைத்தான் கூறுகிறார். அது நடுப்பகலிலே நம்மிடம் கண்ணீரைக் கோருகிறது. வீட்டிலிருந்து எழுந்து எங்காவது ஒரு வெட்ட வெளியில் போய் நிற்கச் சொல்கிறது. எதிரே வரும் அறியா மனிதனை மிக நேசத்தோடு காணச் சொல்கிறது.

நுப்பது என்ற ஒரு இளைஞன் வருகின்றான். அவனது இயற்பெயர் சொரூபன்.



அவனுக்கு முப்பது என்று சொல்ல வராது. நுப்பது என்றே சொல்வான். ஊரில் அவனை நுப்பது என்றே அழைப்பார்கள். பிரான்சிலும் அவனை அப்படியேதான் கூப்பிடுகிறார்கள். அப்படி தன்னைக்கூப்பிடுவதை மாற்ற வேண்டும் என்பது நுப்பதின் தீவிர விருப்பம். செல்வம் அவனுக்கு இடையிடையே அறிவுரை சொல்வார். செல்வத்திடம் அவ்வப்போது கடனும் வாங்குவதுண்டு. சொரூபனின் சித்தப்பா செல்வத்திடம் சொல்வதுண்டு “அவனுக்கு கடன் கொடுக்காதீர்கள் அவன் உங்களிடம் ரேப்போ உருவாக்க பார்க்கிறான். அவன் இரண்டு விசயங்களுக்குத்தான் வாயைத் திறக்கிறான். ஒன்று சாப்பிட, மற்றொன்று பொய் சொல்ல.”செல்வத்திற்கு ஐநூறு டொலர் கடனை திருப்பித் தாராமலே எங்கோ போய்விடுகிறான். செல்வம் அந்த அத்தியாத்தை இப்படி முடிக்கிறார்.

//அது ஒரு பெரியவிழா. அதுக்குப் பிரதம விருந்தினரா ஒரு பெரிய தமிழ்த் தொழிலதிபர் வரஇருப்பதாய்ச் சொல்லிச் சினம். அவரும் வந்து மேடையில பேசினார். “நான் கனடாவுக்கு வெறுங்கையோடை வந்து இண்டைக்கு நுப்பத்திஏழு றக்குகளுக்குச் சொந்தக்காரனயிருக்கிறேன்” எண்டு தன்னைப் பத்திச் சொன்னார். என்ர கவனம் அங்க பெரிசா இருக்கேல்ல. ஆனா, குரல் ஏதோ பரிச்சயமாக் கிடந்துது. உத்துப் பாத்தன். அட இவன் நுப்பது. கூட்டம் முடிய முதலே வெளிக்கிட்டு வெளியால வந்திட்டன். கண்டால் கட்டிப் பிடிப்பான். என்ன உதவியண்ண வேணும் எண்டு கேட்பான். இதெல்லாம் தேவையா? ஒரு சந்தேகத்தில நண்பரைக் கேட்டேன். இந்த பிரதம விருந்தினர் மேடையில் 37 றக் எண்டு சொல்லேக்க நுப்பத்தியேழு எண்டவரோ இல்ல. முப்பத்தியேழு எண்டவரோ?

தனக்கு இப்ப தமிழ் மறந்து போச்செண்டு சொல்லிக் கனக்க ஆங்கிலத்திலதானே கதைச்சவர் எண்டார் நண்பர். கனடாவை நினைச்சு வியந்துதான் போனேன்.//

ஈழத் தமிழருக்கும் மலையாளிகளுக்குமான ஒற்றுமைகள் நிறைய உண்டு. உணவு, உடை, கலாசாரம், நிலப்பரப்பு, உளவியல், தோற்றம், மொழி என இருவருக்கும் நிறைய ஒற்றுமை உண்டு. இந்தப் புத்தகத்தில் வரும் சுயபகடி நிறைந்த மாந்தர்களை மலையாளச் சமூகத்தில் கண்டிருக்கிறேன். தனித்த அடையாளங்களோடு, தன்னைத்தானே கேலி செய்து கொண்டு கூரிய நகைச்சுவை உணர்வு கொண்ட மனிதர்களை மலையாளச் சமூகம் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

சின்னச் சின்ன சித்திரத்தின் வழி மனிதர்களின் ஆளுமை அபாரமாக வெளிப்படுகிறது.

//சிவராசன் அண்ணனிடம் “அண்ணை சாதி யாழ்ப்பாணத்துக்குத் திரும்ப வந்திட்டதாமே” எண்டு நான் கதையைத் தொடக்கினன். கொஞ்சங்கூடத் தாமதிக்காம சிரிச்சுக்கொண்டு சட்டெண்டு சொன்னார், “சாதி எங்கையடா போனது. திரும்ப வாறதுக்கு; அது கொஞ்ச நாள் கள்ளன் பொலிஸ் விளையாட்டெல்லே விளையாடினது. ஆமி வன்னியிலை நிக்கேக்கை யாழ்ப்பாணத்திலை இயக்கம் இருக்கும். ஆமி யாழ்ப்பாணத்திலை நிக்கேக்கை இயக்கம் வன்னியிலை நிக்கும். சாதியும் அப்பிடித்தான் ஒளிச்சு திரியும். கொஞ்ச நாள் ஆட்கள் இடங்கள் மாறி மாறி ஓடித் திரிஞ்சதாலையும் பெடியளின்ரை தண்டனையாலையும் சாதி இல்லாத மாதிரி இருந்தது உண்மைதான். ஆனா அது இந்த மண்ணை விட்டு எங்கையும் போகேல்ல. இப்பவும் புத்தகக் கடையளில ஆறுமுக நாவலர் எழுதின, குறைந்த சாதியோடை ஒரே பந்தியில் இருந்து சாப்பிடப்படாது எண்ட சைவ வினாவிடை நல்லாய் விற்றுக் கொண்டுதான் இருக்கு, சொல்லிப்போட்டு எங்கேயோ பாத்தபடி ஒரு பெருமூச்சுவிட்டார்.”

“எங்கடை குறிச்சியிலை ஒரு 35-40 சனங்கள் தான் இருக்கினம். ஆனா கிட்டத்தட்ட 65-70 நாய்கள் இந்த வீடுகளில் நிக்குது. இது பழைய அரசாங்கத்தின் வேலை. அப்ப நாயைக் கொல்லப்படாது என்டு சட்டம் போட்டாங்கள். அது வாயில்லாப் பிராணியாம். அவங்கட ஆட்சிக்காலத்தில, வரையறை இல்லாம ஆட்கள் கடத்தப்பட்டிருக்கினம், பெண்டுகள் நாசப்படுத்தப்பட்டுதுகள், ஆள்வெட்டு, வாள்வெட்டுக்குக் குறைவில்ல. ஆனா, நாயைக் கொல்லப்படாது, றோட்டிலை புகைக்கப்படாது, கண்ட இடத்தில் குடிக்கப்படாது என்றெல்லாம் சட்டங்கள் போட்டாங்கள்”.

“இந்தியன் ஆமி வந்திருந்தபோது ஒரு சுற்றிவளைப்பில் ஒழுங்கையாலை போன இவரையும் இவற்ரை நாயையும் நீண்ட நேரம் மறிச்சு வைச்சிருந்திருக்கிறாங்கள்.

நேரம் நீண்டு போக தங்களுக்கு வந்த சாப்பாட்டில கொஞ்சத்தை ஆமி இவருக்கு கொடுத்திருக்கிறான். இதை என்ரை நாய்க்குப் போடு அது சாப்பிடுமோ என்று பார்ப்போம் எண்டு வாய் கட்டியிருக்கிறார். பக்கத்தில நிண்ட ஒரு தமிழ் இயக்கப் பெடியன் வஞ்சகமில்லாமல் அதை ஆமிக்கு சொல்ல, அவன் இவருக்கு நல்ல சாம்பல் சாத்துச் சாத்தினான்”.

“யாழ்ப்பாண வெளியேற்றத்தின்போது சில பெடியள் இவரை வெளியேறச் சொல்லியிருக்கிறாங்கள். தம்பி யாழ்ப்பாணத்துக்கு ஆமி வருகுது எண்டு வன்னிக்குப் போறம், வன்னிக்கு ஆமி வந்தால் கொழும்புக்கோ போறது? என்று வாய்த் தர்க்கப்பட்டு நாவற்குழி மட்டும் போய் நாலு நாளில திரும்பி வந்துவிட்டார்”.

“பங்கிராஸ் அண்ணா வேறுமாதிரி ஆனவர்.

இந்தியன் ஆமி வந்து நிண்ட காலம் அது. இவர் நல்ல வெறியில வந்திருக்கிறார். ஆமி மறிச்சு ‘ஐடி ப்ளீஸ் ஐடி ப்ளீஸ்’ எண்டு கேட்டிருக்கு இவர் திருப்பி ‘யுவர் பாஸ்போர்ட் ப்ளீஸ், யுவர் பாஸ் போர்ட் ப்ளீஸ்’ எண்டு கேட்டிருக்கிறார். அவங்களுக்கு இவர் என்ன கேட்கிறார் எண்டு விளங்கையில்லை. ஒரு தமிழ்நாட்டு ஆமிதான் ‘இவன் சரியாய் குடிச்சிருக்கிறான்’ என்று மற்றவங்களுக்குச் சொல்லிப்போட்டு துவக்காலை இடிச்சுக் கலைச்சுவிட்டவன் என்றார்”.//

செல்வம் துல்லியமாக அனுபவங்களை கடத்தக்கூடியவர். அவர் நம்மை சிரிக்க வேண்டுமென்றால் சிரிக்கவைப்பார். சிரித்துக் கொண்டே சிவாஜி கணேசனைப் போன்று அழவும் வைப்பார். அம்மாவைப் பற்றி ஒரு கட்டுரை உண்டு.

தொடர்தல் 65ம் பக்கம்

கண்ணீர் உறையும்...

64ம் பக்கத் தொடர்ச்சி...

//அந்தக் காலத்திலை அம்மாட்ட நாலு சீலைதான் இருந்தது. கோயிலுக்கு இரண்டு, வீட்டுக்கு இரண்டு எண்டுதான் பாவிச்சவ. படுக்கேக்கை போர்க்கிறதுக்கு எனக்கு அம்மாவின்ரை சீலைதான் வேணும். வெங்காய வாசனை வாற அந்தச் சீலையைப் போர்க்காட்டி எனக்கு நித்திரை வராது. அம்மா சம்பளத்துக்கு வெங்காயம் ஆயப் போறவ. எப்பிடித்தான் தோய்ச்சாலும் அந்த வெங்காய மணம் போகாது. நித்திரை வரேக்க அந்த மணம் என்னை மயக்கும். கனகாலமா அதுதான் என்ர சொர்க்கம். நித்திரையில அந்த சேலைக்குள்ளே காலைச் செருகிச்செருகிப் படுக்கேக்க 'தம்பி டேய் காலை அங்கயிங்க ஓட்டி சீலையக் கிழியாதையடா' எண்டு செல்லமாக கத்துவா. ஊரை விட்டு வெளிக்கிடும் மட்டும் அம்மாவின் இரண்டு மூன்று சீலைகளை மாத்திமாத்திப் போர்த்திக் கொண்டுதான் படுத்தேன்.

இந்தமுறை ஊருக்குப் போன முதல் நாள் இரவு படுக்க முதல்ல அவவின்ர அலுமாரியைத் திறந்து எஞ்சியிருந்த அந்த ரெண்டு சீலைகளை தொட்டுப் பாத்திட்டுப் போய் படுத்தன். பிரயாணக் களை, உடனே அயர்ந்திட்டேன். அம்மா நடந்து வந்து என்னை எழுப்பி 'சாப்பிட்டுட்டுப் படடா' எண்டு செல்லமாகச் சொன்னா, திடுக்கிட்டு எழும்பினேன். உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. மனிசி இன்னமும் வீட்டைச் சுத்திக்கொண்டு தான் திரியுது எண்டு நினைச்சுக்கொண்டு படுக்கையில குந்தியிருந்தன். தனியப் படுக்க பயமாயிருந்தது. நித்திரை வராமல் உடம்பு உழண்டு பிரண்டு கொண்டிருந்தது. தூரத்தில் மாதகல் பக்கமாய், 'நதியில் விளையாடி கொடியில் தலை சீவி வளர்ந்த இளம் தென்றலே' எண்ட அம்மாவுக்குப் பிடிச்ச 'பாச மலர்' பாட்டு மெல்லிசாய்க் கேட்டுக் கொண்டிருந்தது. இப்ப இந்தப் பாட்டைக் கேக்க அம்மா இல்ல. அவ நேசிச்ச அண்ணன் - என்ர மாமா இல்ல. பாடின சொந்தரராசன், எழுதின கண்ணதாசன், நடிச்ச சிவாஜி ஆருமில்ல. எல்லாரும் போயிட்டினம்.//

தமிழில் அம்மாவின் ஓர்மைகளைப் பற்றியான உணர்வுப்பூர்வமான கட்டுரைகளில் இதுவும் ஒன்று. இம்மானுவேல் பற்றியான கதை வேறோரு இடத்திலிருந்து தொடங்குகிறது. யுத்தத்திற்கு பிறகு இயக்கத்திடம் இருந்த பணம் எங்கு போனது என்ற விவாதத்தில் அந்தக் கதை தொடங்குகிறது. இம்மானுவேல் பொறியாளராக கடலுக்கு நடுவே பிளாட்பாரம் போட்டு எண்ணெய் எடுக்கும் ஒரு கம்பெனியில் முக்கியப் பதவியில் இருந்தான். இம்மானுவேலின் அண்ணன் ராணுவத்துடன் நடந்த யுத்தத்தில் இறந்து போக, இயக்கத் தலைமையிடம் தன்னையும் இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளும்படி மன்றாட, இயக்கம் 'இப்போதைக்கு வெளிநாட்டில் வேலை செய்துகொண்டு எங்களுக்கு உதவு. இக்கட்டான சமயங்களில் அழைக்கிறோம்' என்று சொல்லி அனுப்புகிறார்கள்.

2006-ல் இயக்கத்திலிருந்து அழைப்பு வருகிறது. சண்டைக்குத் தேவையான ரசாயனப் பொருளை அந்த நாட்டில் வாங்கி படகில் பாதுகாப்பாக அனுப்ப வேண்டும். இம்மானுவேல் பொறுப்பேற்று அந்த நாட்டிற்குச் சென்று அந்த நாட்டில் உள் நாட்டில் சிலபேரைக் கண்டுபிடித்து, அதில் ஓர் இளம் கணவனும் இருக்கிறான். அவன் மனைவிக்கு அவன் இந்த வேலையில் ஈடுபடுவது பிடிக்கவில்லை. அந்த இளைஞனும் இன்னும் இரண்டுபேரும் ரசாயனம் ஏற்றிய படகில் புறப்படுகிறார்கள்.

இம்மானுவேல் தலைமையோடும், படகில் இருப்பவர்களோடும் தொடர்பில் இருக்கிறான். படகு நடுக்கடலில் வெடிக்கிறது. மூவரும் இறந்து போகிறார்கள். பேய் பிடித்தவளாய் அவன் இளம் மனைவி அழுகிறாள். தலைமை உடனடியாக இம்மானுவேலை ஐரோப்பாவிற்கு திரும்பச் சொல்கிறது. இம்மானுவேலால் நிம்மதியாக இருக்கமுடியவில்லை. அவன் கனவில் அந்தப் பெண்ணும், குழந்தையும் வந்து கொண்டேயிருக்கிறார்கள். மறுபடியும் அந்த நாட்டிற்குச் சென்று அந்தப் பெண்ணைப் பார்த்து பணம் கொடுத்து விட்டு வருகிறான். இரண்டாவது முறை கொடுக்கும்போது அந்தப்பெண் மறுக்கிறாள். முடிந்தால் என்னையும், குழந்தையும் ஐரோப்பாவிற்கு கூட்டிச் செல்லுங்கள் என்கிறாள். இம்மானுவேல் யோசித்து உங்களுக்கு விருப்பமென்றால் என்னைத் திருமணம் செய்து கொள்ளுங்கள் என்று சொல்ல, அந்தப் பெண் சம்மதிக்க. திருமணம் செய்துகொண்டு ஐரோப்பாவில் நிம்மதியாக வாழ்கிறார்கள். வெளிநாட்டுப் பெண்ணை திருமணம் செய்ததால் ஊர்க்காரர்கள் என்னென்னவோ பேச தன் நிலையைப் பற்றி தன் அப்பாவிடம் விளக்குமாறு செல்வத்திடம் சொல்கிறான். செல்வம் அவனுடைய கதையை அவனின் தந்தையை இலங்கையில் தேடிப்பிடித்து சொல்கிறார்,

//''இம்மானுவேலின்ர விசயங்கள் ஒவ்வொண்டாய்ச் சொன்னன். ஒண்டும் கதைக்காமக் கவனமாய்க் கேட்டார். என்ர கையப் பிடிச்சுக் கொண்டு மெல்லமெல்ல நடந்தார். திடீரெண்டு நிண்டார். மூத்தவனை அநியாயமாய் ஆமிக்காறங்கள் கொண்டாங்கள். அந்தத் துயர் முடிய முதல்ல உன்ரை சிநேகிதன் அது தான் என்ர இரண்டாவது மகன், போரிலை செத்ததைக் கேள்விப்பட்டபோது இரண்டு மூண்டு மாசம் துக்கம் தாங்கமுடியேல்லை. பிறகு அதே ஒரு பெருமையா போச்சு. இப்ப என்ர கடைசி ஆசை மகனைப் பற்றி நீ சொல்லேக்கை அதைவிடப் பெருமையாய் இருக்கு எண்டு சொன்ன பண்டிதர் எனக்காகக் காத்திருக்காமல் விறுவிறு வெண்டு நடக்கத்தொடங்கினார்".//

இந்தக் கட்டுரையை கூர்ந்து அவதானிப்பவர்களுக்கு வேறொரு அர்த்தத்தைத் தரும்.

நாயகத்தின் வாழ்வு வேறு விதமானது. அபாரமான திருப்பங்களைக் கொண்டது. வீட்டிற்குப் பின்னால் இருக்கும் ஆனைக்கோட்டை போலிஸ் ஸ்டேசன் போராளிகளால் தாக்கப்பட, நாயகத்தின் அப்பா ராணுவத்திடமிருந்து தப்பிப்பதற்காக கொழும்பில் இருக்கும் அண்ணன் வீட்டில் விடுகிறார். நட்சத்திர ஹோட்டலில் வேலைக்கு சேர்ந்து அங்கு வந்த ஒரு பிரெஞ்ச் குடும்பத்திற்கு நெருக்கமாகி அவர்களால் தத்தெடுக்கப்பட்டு பிரெஞ்குடிமகனாகி அங்கு ஓர் ஆங்கிலக் காதலி கிடைக்க பிரெஞ்ச் சரளமாகப் பேசுபவராக நாயகம் மாற, தற்செயலாக இயக்கத்தின் தொடர்பு கிடைக்க, இயக்கம் அவனை லெபனானுக்கு சில ஆட்களைக் கொண்டு சென்று விட்டுவரச் சொல்கிறது. பிரெஞ்ச் வளர்ப்புத் தாய் தந்தையிடம் இலங்கையிலிருக்கும் தந்தையை பார்க்கப் போவதாக பொய் சொல்லிவிட்டு லெபனான் போய் வெற்றிகரமாக அசைமெண்ட்டை முடிக்கிறார். மறுபடியும் டெல்லி போகச் சொல்கிறார்கள். டெல்லியில் இறங்கியவுடன் இயக்கத்தின் தலைமை இவருடைய பாஸ்போர்ட்டை வாங்கிக் கொள்கிறார்கள். சிலரை சென்னையில் கொண்டு போய் சேர்க்க வேண்டும். வெற்றிகரமாக நாயகம் இதைச் செய்கிறார். பாஸ்போர்ட்டை கேட்க, வந்து விடும் என்கிறார்கள். இயக்கத்தில் உட்பூசல் வர சிக்கலாகிறது. பாஸ்போர்ட் ஒரு பொழுதும் கிடைக்காது என்ற நிலை வருகிறது. திருச்சியில் ஒரு நண்பர் வீட்டில் இருக்கிறார். பிரான்ஸ் வளர்ப்பு பெற்றோர்கள் தொலைபேசி எண் ஞாபகத்திலே கொண்டு வரமுடியவில்லை. ஒரு நாள் சினிமா பார்த்து வரும் போது துலக்கமாக எண் ஞாபகத்திற்கு வருகிறது. அவர்களை தொலைபேசியில் அழைக்க. நீ போதைப் பொருள் கடத்தினாய் என்று மூன்றுமுறை போலிஸ் வந்து சென்றது. இனி எங்களைத் தொடர்பு கொள்ளவேண்டாம் என்கிறார்கள். இலங்கைக்குத் திரும்புவது என்று முடிவு செய்கிறார்.

//"இங்கை இருந்தும் என்ன? ஏதேனும் சாதிக்கவா போறன்? ஊருக்குப் போறதெண்டு முடிவுக்கு வந்தன். அப்பாவுக்கும் தங்கச்சிக்கும் பொருளாதார பலத்தைக் கொடுக்கேலாது எண்டாலும் மனசுக்கு ஆறுதலைக் கொடுக்கலாம் எண்டு நினைச்சன்.

அடுத்தநாளே சில ஒழுங்குகளச் செய்து யாழ்ப்பாணக் கரையொண்டில போய் இறங்கினன். கனகாலத்துக்குப் பிறகு அந்த மண்ணில கால்பட்டதில் மனசில ஒரு மகிழ்ச்சிவந்தது. ஆசையா வீட்டை நோக்கி நடந்தன். வீடு வெறிச்சோடிக் கிடந்தது. ஒரு சொறி பிடித்த நாய் என்னைச் சுற்றிச்சுற்றி வந்துது. அதன் நிறத்தை உத்துப் பார்க்க, ஞாபகம் வந்தது. அது தங்கச்சிமார் ஆசையா வளர்த்த நாய். அப்ப அது அழகான குட்டி. இப்ப சாப்பாடும் இல்லாமல் கவனிப்பாரும் இல்லாமல் சொறிப்பிடிச்சு அலைஞ்சு திரியுது. எனக்கு என்ர வாழ்வுதான் ஞாபகம் வந்துது"//

செல்வம் துரைசிங்கம் அண்ணனிடம் கேட்கிறார்.

//"இந்த முப்பது வருச யுத்தத்தில உங்களை மிகவும் பாதித்த சம்பவம் எது அண்ணை?" என்றேன். "சொல்லுறேன் சொல்லுறேண்டா சொல்லுறேன்" எண்டார். கறுப்பு வேலை (black label) தொடங்கிட்டுது. இன்றுவரை விளங்காமலும் விளங்க முயற்சித்தால் அழுகை வருவதை தவிர்க்க முடியாமலும் இருக்கிற சம்பவம் அது. சம்பவத்தை முழுசா உள்வாங்குற மாதிரி கொஞ்ச நேரம் மௌனமா இருந்தார். பிறகு மெல்லத் தொடங்கினார்.

என்ர வீட்டிலை செல் விழ நான் அந்த ஊரிலை போய்க் கொஞ்ச நாள் இருந்தனான் 'ஒரு பெடியனைப் பிடிச்சுச் சந்திக்குக் கொண்டு போறாங்கள்' எண்டு பரபரப்பா ஓடிக் கொண்டிருந்த ஒருவர் சொல்லிப் போட்டுப்போக எனக்கு மனம் கேக்கேல்ல. என்னவெண்டு பாக்குறதுக்கு நானும் சந்திக்குப் போனன். என்னை மாதிரி கொஞ்சப்பேர் அங்க நிண்டிச்சினம். விடுப்பு பாக்க நிக்கிறாங்களா? இல்ல விறைச்சுப் போய் நிக்கிறாங்களா எண்டு எனக்குத் தெரியேல்ல. அதில நானும் ஒருத்தனா நிண்டன் ஒரு சுவர் ஓரத்தில பிடிச்சுக் கொண்டுபோன பெடியனை நிப்பாட்டியிருந்தாங்கள். நெடுநெடுவெண்டு உசந்த பொடியன். நல்ல சடைச்ச தலை மயிரும் ஒளி நிறைஞ்ச கண்ணுமா பாக்க நல்ல அழகாய் இருந்தான். இவனை பிடிச்சுக்கொண்டு வந்தவங்கள் அவனை சுவரோட சாத்தி நிப்பாட்டினாங்கள். அவங்களில் ஒருத்தன் அந்த கும்பலுக்குத் தலைவனா இருப்பான்போல. பக்கத்தில நிண்ட தங்கள விடச் சின்னவன் ஒருவனை கூப்பிட்டான். அவனும் வேடிக்கை பாக்க வந்த பெடியன் மாதிரித்தான் இருந்தான். கூப்பிட்டவன் அவன்ர கையில துவக்கைக் குடுத்தான் 'இது உனக்கு ரெயினிங். எங்க இவனைச் சுடு பாப்போம்' என்றான். வேடிக்கை பாக்க வந்தவன் மாதிரியிருந்த சின்னவன் கையில துவக்க வாங்கினவுடன் உசாராகி வேற மாதிரியாயிட்டான். ஆரோ சொல்லிக் குடுத்ததை ஞாபகத்தில் வச்சு துவக்க லோட் பண்ணினான். சுவரோட நிண்டவனை பார்த்துக் குறி வைச்சான். அவனை இழுத்துக் கொண்டுவந்த கும்பலில ஒருவன் என்ன நினைச்சானோ தெரியேல்ல 'சுடாதை நிப்பாட்டு' எண்டு சின்னவனை மறிச்சுப் போட்டு 'சுட முதல்ல அவனிட்ட கேள், உன்ர கடைசிஆசை என்னவெண்டு' எண்டு சொல்லிப்போட்டு பெருமையா நிண்டான். சின்னவன் படங்களில் பாத்திருப்பான் போல ஒரு ஜட்ஜ் மாதிரித்தான் கேட்டான் 'உன்ர கடைசி ஆசை என்னடா?' சாவுக்கான எந்தக் கலக்கமும் அவனிட்டத் தெரியேல்ல அவன் தயக்கமே இல்லாமல் கேட்டான் 'நான் ஒரு சிகரெட் பத்த வேணும்' சின்னவன் சீனியர்மாரைப் பாத்தான். சம்மதம் கிடைச்சிருக்கும் போல. பிறகு சுத்தி நிண்ட ஆட்களிட்டப் போய் ஒரு சிகரட் ஒண்டு வாங்கினான். இன்னுமொருவர் நெருப்புப் பெட்டி குடுத்தார். சுவரோட நிண்டவன் மிக இயல்பாய் சிகரட்டைப் பத்த வைச்சான். புகையை இழித்து மூக்காலையும் வாயாலையும் அனுபவிச்சு விட்டான். பாதி சிகரட் முடிஞ்ச பிறகு அதை எறிஞ்சான். 'இப்ப சுடுங்கோ' எண்டு சொல்லிப்போட்டு சிரிச்சான். சுத்தி நிண்ட எல்லாருக்கும் கேக்கிற மாதிரி சத்தமாத்தான் சிரிச்சான். ஒத்த வெடிக்கு பிறகு அவன்ர தலை கவிழேக்க நான் மனிசனாப் பிறந்ததுக்காக வெட்கப்பட்டன். எனக்குள்ள இருந்த வார்த்தைகளும் செத்துப் போச்சுது. இனி யாரோடையும் கனக்கக் கதைக்கப்படாது எண்டு வெத்தில பாக்கை குதப்பத் தொடங்கினன்' என்றார்.//

நான் செல்வத்தின் எழுத்துக்களை இப்படித்தான் சொல்வேன், வெற்றிலை இலையாக பச்சைதான். மென்று துப்பினால் சிவப்பு. ரத்தம். அந்த ரத்தம்தான் செல்வத்தின் எழுத்து. குதப்பிய வாய்களுக்குள்தான் எத்தனை கூறாத சரித்திரம்!

samraj@thaiveedu.com

'கற்க கணிதம் கசடற'

மாணவர்களின்
வீட்டுக்கு வருகைதந்து
தனித்தனி வகுப்புகள் எடுக்கப்படும்.
CALCULUS, VECTORS, ADVANCED FUNCTION, TRIGONOMETRY Etc. Etc.

Math Tutoring
A. Puranthagan (Puran) BSc. Eng.
Specializing in tutoring Math from Gr. 10 - 12.
Available for home visits and one-on-one sessions.
C: 416-819-7923
1629 Winville Rd.,
Pickering, ON L1X 0C8

கடன் தொல்லையா?



பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com

Ceycan Transhipping Inc.

INTERNATIONAL FORWARDING LOGISTICS

EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA

REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA

For Shipping Schedule Visit
www.ceycantranship.com
For further information contact
Kumar (905) 673-9873

SRI LANKA'S BEST CLEARING FACILITIES

COLOMBO
Ceylon Shipping Lines Ltd
760 Dr Danister De Silva Mw,
Colombo 9
Tel : 2680301 – 308

KANDY
Ceylon Shipping Lines Ltd
175 Parangantota Road
Mavilmada - Kandy
Tel : 812 234356/57/59

BATTICALOA
Ceylon Shipping Lines Ltd
134 Main Street
Addalachenai - 09
Tel : 067 2277302

OUR AGENTS ACROSS CANADA

Head Office
(905) 673-9873

Toronto/ New Market/Durham region
Sam (647) 986-2393

Brampton/Mississauga/Halton /Peel region
Neel (647) 891-9445

Ottawa
Iggy - 613 799 3519 /613 237 3569

Hamilton/Waterloo /St Catherines
Dharmaweera (519) 760-1280

Montreal
Gana (514) 573-0093

Edmonton/Calgary
Randy (604) 399-8785
Email : randy.kulasekare@kmrgloballogistics.com

Vancouver/British Columbia
Randy (604) 273-4911
KMR Global Logistics Ltd.
135 & 140 - 14480 Knox Way Richmond
British Columbia, V6V 2Z5
Email : admin@kmrgloballogistics.com

United Kingdom :
Atlas Shipping 430 High Rd
Willesden London NW10 2HA
Tel: 02024596633 - Mobile 07949143535

1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com

Oshawa - Affordable Investments

ஒஷாவா நகரில் குறைந்த விலையில் தரமான முதலீடு!

Oshawa பல்கலைக் கழகத்துக்கு அருகாமையில்

New Town Homes From $400s
Easy Deposit Structure

Modern Free Hold Town Homes

From $500s - Freehold
Flexible Deposit Structure

முற்பதிவுக்கு இன்றே அழையுங்கள்:

கமல் நவரட்ணம்
KAMAL
NAVARATNAM
Sales Representative

RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage

Direct:
416-450-2424
E mail:kamal@kamalrealtor.ca
www.kamalrealtor.ca

KAMAL NAVARATNAM REAL ESTATE

Trusted and reliable services

Independently Owned and Operated

காஞ்சனையும் புகையில் தெரிந்த முகமும்

- மைதிலி தயாநிதி -

இக்கட்டுரை தமிழக எழுத்தாளரான புதுமைப்பித்தன் (1906-1948) எழுதிய 'காஞ்சனை' எனும் சிறுகதையையும் யாழ்ப்பாணம் அளவெட்டியைச் சேர்ந்த எழுத்தாளர் அ.செ.முருகானந்தன் (பிறப்பு: 1921) எழுதிய 'புகையில் தெரிந்த முகம்' எனும் குறுநாவலையும், அவற்றில் இடம் பெறும் மனித அறிவினால் விளக்கவியலாத அமானுஷ்ய(supernatural) நிகழ்வுகளின் அடிப்படையில் ஒப்பிடுகின்றது. இப்புனைவுகளில் எவ்வாறு அமானுஷ்யம் கட்டமைக்கப்படுகின்றது? எவ்வாறு தொழிற்படுகின்றது? எனும் கேள்விகளுக்கு விடைகாணு முகமாகவே இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோற்றம் பெற்றதும், அமானுஷ்ய நிகழ்வுகளைக்கொண்டதுமான, 'கோதிக்'(Gothic) எனும் திகில் உணர்வு எழுப்பும் ஆங்கில மொழியில் அமைந்த மர்ம இலக்கியவகை தமிழில் இத்தகைய புனைவிலக்கியம் படைத்தற்கு உந்துதலாக விளங்கி யது. 'கோதிக்' எனும் இலக்கியவகையானது பதினெட்டாம் நூற்றாண்டில் பெரும் செல்வாக்குடன் திகழ்ந்ததும், பகுத்தறிவிற்கு முதன்மையளித்ததும், நவீனத்துவத்தின் கால்கோள் என்று அடையாளப்படுத்தப்பட்டதுமான Enlightenment எனும் அறிவுசார் இயக்கத்திற்கு எதிராகத் தோன்றியது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அறிவுசார் இயக்கத்திற்கு முரணான போக்கானது சிந்தனையாளர்களிடையே யும், எழுத்தாளர்களிடையேயும் வலுப்பெற்றதுடன் பகுத்தறிவுக்கு முரணான, உணர்ச்சிகளை எழுப்ப வல்ல மர்மங்கள் நிறைந்த வினோதமான ஆக்கங்களும் படைக்கப்பட்டன. புதுமைப்பித்தனின் 'காஞ்சனை' இத்தகைய 'கோதிக்' இலக்கியத்தின் செல்வாக்கினால் தமிழில் உருவாகிய கதையாகும். இது 1943 ஜனவரி கலைமகள் இதழில் வெளிவந்தது. முருகானந்தனின் 'புகையில் தெரிந்த முகம்' எனும் குறுநாவலை கொழும்பு நவலட்சுமி புத்தகசாலை 1950ம் ஆண்டு வெளியிட்டது. முதலில் சிறுகதையாக எழுதப்பட்ட இக்கதை, பின்னர் பத்திரிகாசிரியர் வேண்டிக்கொண்டதன் பிரகாரம் நெடுங்கதையாக மாற்றப்பட்டு, சுதந்திரன் ஞாயிறு வார இதழில் தொடர்ச்சியாக வந்தது என நாவலின் முன்னுரையில் முருகானந்தன் குறிப்பிடுகின்றார்.

புதுமைப்பித்தனின் காஞ்சனையில் உண்மைக்கும், அதீத கற்பனைக்கும் இடையிலான ஊசலாட்டத்தை அவதானிக்கக்கூடியதாயுள்ளது. எது உண்மை?எது மாயம்? என்று கதை நெடுகிலும் நிச்சயப்படுத்திக் கொள்ளமுடியாத தன்மை இழையோடிக் கொண்டிருக்கிறது. அத்துடன், அமானுஷ்ய சம்பவங்களின் அடிப்படையில் தோன்றும் திகில், குழப்பமான உணர்வுநிலைகளே கதை முழுவதிலும் வியாபித்து நிற்கின்றன. Enlightenment எனும் அறிவுசார் இயக்கம் கொண்டாடும் பகுத்தறிவு மற்றும் தர்க்கம் மூலமாக வாழ்க்கையையோ அல்லது வாழ்க்கை பற்றிப் பேசும் இலக்கியத்தையோ விளங்கிக்கொள்ள முடியாது என்பதற்கிலக்கணமாக இக்கதை விளங்குகிறது, இதற்கு மாறாக, முருகானந்தனின் புகையில் தெரிந்த முகம் எனும் குறுநாவலில் உண்மைக்கும் பொய்ம்மை அல்லது மாயத்திற்குமிடையிலான ஊசலாட்டம் என்பது அறவே இல்லை. தொல்குல மரபுக்குழுக்களால் கட்டமைக்கப்பட்ட அமானுஷ்யத்தின் மீதான நம்பிக்கை எனும் அத்திவாரத்தில் கதை புனையப்பட்டுள்ளது. எனவே, அமானுஷ்யமானது இக்குறுநாவலில் உண்மையை உணர்த்துதற்கான ஓர் ஊடகமாகத் தொழிற்படுகின்றது. யாழ்ப்பாண ஆணாதிக்க சமூகம் பெண்களுக்கு இழைக்கும் கொடுமை அமானுஷ்யம் மூலமாக வெளிப்படுத்தப்படுகின்றது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது, அமானுஷ்யம் புதுமைப்பித்தனின் காஞ்சனையில் தனிமனித இருப்பு, அறிநிலை(consciouness) குறித்ததாயும், முருகானந்தனின் புகையிற் தெரிந்த முகத்தில் சமூகம் குறித்ததாயும் விளங்கக் காணலாம்.

புதுமைப்பித்தனும் முருகானந்தனும் பன்முக ஆளுமையுடையவர்கள் எனினும், மிகச்சிறந்த சிறுகதை எழுத்தாளர்களாகவே கணிக்கப்படுபவர்கள். இருவருமே தம் வாணாளை இலக்கியத்திற்காக அர்ப்பணித்தவர்கள். ஜீவனோபாயத்திற்கு தமது எழுத்தை மட்டுமே நம்பியிருந்தவர்கள். இதனால் வறுமைப்பிணியால் பீடிக்கப்பட்டுக் காலம் கழிக்கும் துர்ப்பாக்கியத்திற்காளானவர்கள். பத்திரிகைத்துறையுடன் மிக நெருங்கிய தொடர்பு பூண்டிருந்தவர்கள். புதுமைப்பித்தன் எழுதிய சிறுகதைகள், கவிதைகள், இலக்கியம், கலை தொடர்பான கட்டுரைகள், அரசியல் சார்ந்த நூல்கள் அச்சேறியது போன்று, முருகானந்தனின் எழுத்துகளில் அரைவாசியேனும் அச்சேறவில்லை. முருகானந்தன் ஒரு முழுநாவலையும், ஒரு குறுநாவலையும், ஏறத்தாழ நூறு சிறுகதைகளையும், ஏறத்தாழ ஐந்நூறு கட்டுரைகளையும், ஐந்து இலக்கிய நாடகங்களையும், பத்து மொழிபெயர்ப்பு ஆக்கங்களையும் படைத்துள்ளதாகத் தெரிகிறது(இலங்கைக் கலாசாரப் பேரவையின் தமிழிலக்கிய விழா மலர் 1972). எனினும் நூலுருவில் வெளிவந்தவை புகையிற் தெரிந்த முகம் எனும் குறுநாவல், மனிதமாடு எனும் 24 சிறுகதைகளை உள்ளடக்கிய தொகுப்பு என இரண்டு நூல்கள் மட்டுமே.



காஞ்சனை:

புதுமைப்பித்தன் சமூகப் பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தி எழுதும் எழுத்தாளர்களுக்கு முன்னோடியாகத் திகழ்பவர் என்று விதந்து கூறப்படுபவர். புதுமைப்பித்தன் பாரதிபோன்று கலகக்காரனாகச் செயற்பட்டுள்ளார் என்றும், அவரது கலகக் குரல் சமூகநோக்குச் சார்ந்தது என்றும் 'புதுமைப்பித்தனின் இலக்கியநோக்கு' எனும் தனது கட்டுரையில் எம்.ஏ. நுஹ்மான் குறிப்பிடுகின்றார். புதுமைப்பித்தன் சமூகத்தின் அடித்தட்டு மக்களைப்பாத்திரங்களாக வைத்துப் பல கதைகள் புனைந்துள்ளார் எனினும், அவரின் இலக்கிய எழுத்தின் பரிமாணத்தை அம்மட்டோடு குறுக்கி விடமுடியாது. தமிழிலக்கிய மரபில் வரும் சம்பவங்களை அவர்தனது சில சிறுகதைகளுக்குப் பொருளாகக் கொண்டதுடன், தமிழிலக்கிய நிகழ்வுகள் சில வற்றைப் புதிய கண்ணோட்டத்தில் பார்த்து விளக்கமும் அளித்துள்ளார் என சிவத்தம்பி 'தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்' நூலிற் குறிப்பிடுகின்றார். அத்துடன், மனித அறிவுகெட்டாத அமானுஷ்ய சம்பவங்களை மையமாகக் கொண்டும் புதுமைப்பித்தன் கதைகள் புனைந்துள்ளார். அவற்றுள் ஒன்றே காஞ்சனை கதையாகும்.

புதுமைப்பித்தன் 'கோதிக்' இலக்கியம் எனும் திகிற்கதைகளை வாசிப்பதில் பெரும் விருப்பம் கொண்டிருந்தார் என்று தொ.மு.சி. ரகுநாதன் தான் எழுதிய புதுமைப்பித்தன் கதைகள்: சில விமர்சனங்களும் விஷமத்தனங்களும் எனும் நூலில் குறிப்பிடுகின்றார். அதில் புதுமைப்பித்தனின் செவ்வாய்தோஷம் எனும் கதை தழுவல் கதை எனும் கருத்தை மறுதலிப்பதுடன், புதுமைப்பித்தன் வாசித்த அமானுஷ்ய நூல்களின் பட்டியல் ஒன்றினையும் தருகிறார். இதில் Mary Shelley (1797-1851), Bram Stoker (1847-1912), Joseph Sheridan Le Fanu (1814-1873), Edgar Allan Poe (1809-1849), Wilkie Collins (1824-1889), W.W. Jacobs (1863-1943) Algernon Blackwood (The empty house and other ghost stories), M.R. James (Ghost stories of an Antiquary) எனும் மேனாட்டு ஆசிரியர் பெயர்கள் காணப்படுகின்றன. (பக்கம்: 128).

திகிற்கதைகளை வாசிப்பதில் மட்டுமன்றி, அத்தகைய கதைகளை எழுதுவதிலும் புதுமைப்பித்தன் ஆர்வம் கொண்டிருந்தார். 'மேலைநாட்டு திகில் கதை ஆசிரியர்களிடமிருந்து சிறுகதைத்துறையில் திகில் கதைகளை எழுதுகின்ற உத்திமுறைகளைத் தெரிந்து கொண்டு அவற்றைத் தமது கதைகளில் தம்வழியில் செம்மைப்படுத்திப் புதுமைபித்தன் பயன்படுத்திக்கொண்டார்' என்று கொள்வதே பொருத்தமானது என்பது ரகுநாதனின் கருத்து(பக்கம்: 116-117).

திகிற்கதைகளின் முக்கிய அம்சங்களான மர்மம் மற்றும் பய உணர்ச்சியைத் தூண்டல், சகுனங்கள், இயற்கைக்கு அப்பாற்பட்ட அமானுஷ்ய செயற்பாடுகள், மனச் சஞ்சலத்தை ஏற்படுத்தும் சூழலும் களமும், மன உளைச்சல்கள், பயங்கரக்கனவுகள் என்பனவற்றைக் காஞ்சனையிலும் அவதானிக்கலாம். எடுத்துக்காட்டாக ஒரு சிலவற்றை நோக்குவாம்:

1. அமானுஷ்யத்திற்குரிய காலமான நள்ளிரவு இவ்வாறு வர்ணிக்கப்படுகின்றது:

'எங்கோ ஒரு கடிகாரம் பன்னிரண்டு மணி அடிக்கும் வேலையை ஆரம்பித்தது. பதினோராவது ரீங்காரம் ஓயவில்லை... எங்கோ கதவு கிரீச்சிட்டது.'

2. சில சகுனங்கள் மூலமாக அமானுஷ்யத்தின் வருகை உணர்த்தப்படுகின்றது. எடுத்துக்காட்டு:

'உள்ளங்கையில் கொட்டி வைத்திருந்த புகையிலையைப் பவித்திரமாக வாயில் போட்டுக் கொண்டேன். சீ! என்ன நாற்றம்! ஒரேயடியாகப் பிணவாடை அல்லவா அடிக்கிறது? குமட்டல் எடுக்க, புகையிலையின் கோளாறோ என்று ஜன்னல் பக்கமாகச்சென்று அப்படியே உமிழ்ந்து, வாயை உரசிக் கொப்புளித்துவிட்டு வந்து படுக்கையின் மீது உட்கார்ந்தேன்.'

'என்ன அதிசயம்! நாற்றம் இப்பொழுது ஒருவித வாசனையாக மாறியது. ஊதுவத்தி வாசனை. அதுவும் மிகவும் மட்டமான ஊதுவத்தி. பிணத்துக்குப் பக்கத்தில் ஏற்றி வைப்பது.'

3. வௌவால் (இரத்தம் குடிக்கும்) அமானுஷ்யத்தின் குறியீடாகக் கதையில் பயன்படுத்தப்படுகின்றது.

(அ) 'லேசாக வீட்டிலிருந்த ஜன்னல், வாசல், கதவுகள் எல்லாம் படபடவென்று அடித்துக்கொண்டன. ஒரு வினாடிதான். அப்புறம் நிசப்தம். பூகம்பமோ? நட்சத்திர வெளிச்சத்தில் பழந்தின்னி வௌவால் ஒன்று தன் அகன்ற தோல் சிறகுகளை விரித்துக் கொண்டு பறந்து சென்று எதிரில் உள்ள சோலைகளுக்கு அப்பால் மறைந்தது.'

(ஆ) 'மனித நடமாட்டம் இல்லை. எங்கோ ஒரு நாய் மட்டும் அழுது பிலாக்கணம் தொடுத்து ஓங்கியது. பிரம்மாண்டமான வௌவால் ஒன்று வானத்தின் எதிர் கோணத்திலிருந்து எங்கள் வீடு நோக்கிப் பறந்து வந்தது.'

தொடர்தல் 69ம் பக்கம்

காஞ்சனையும்...

68ம் பக்கத் தொடர்ச்சி...

4. அமானுஷ்ய நிகழ்வுகள்:

(அ)'நான் கண்களைத் துடைத்துக்கொண்டு அவள் பாதங்களையே பார்த்தேன். அவை தரைக்குமேல் ஒரு குன்றிமணி உயரத்துக்கு அந்தரத்தில் நடமாடின... மறுபடியும் எட்டி அவள் பாதங்களைப் பார்த்தேன். எல்லோரையும் போல் அவள் கால்களும் தரையில்தான் பாவி நடமாடின. இது என்ன மாயப்பிரமை!'

(ஆ) 'என்ன அதிசயம்! நான் அவள் சொல்லிக்கொண்டிருக்கும் கதையைக் கேட்டுக்கொண்டிருக்கிறேனா அல்லது கையில் உள்ள புஸ்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கிறேனா?'

(இ) 'திடீரென்று ஒரு பேய்ச் சிரிப்பு! வெடிபடும் அதிர்ச்சியோடு என் மனசை அப்படியே கவ்வி உறிஞ்சியது. அதிர்ச்சியில் தலையை நிமிர்த்தினேன். எனது பார்வை நிலைக் கண்ணாடியில் விழுந்தது. அதனுள், ஒரு கோர உருவம் பல்லைத் திறந்து உன்மத்த வெறியில் சிரித்துக் கொண்டிருந்தது.'

(ஈ) 'என் வீடே கிடுகிடுத்துப் போகும்படியான ஓர் அலறல்! கதவுகள் படபடவென்று அடித்துக்கொண்டன. பக்கத்தில் படுத்திருந்தவள் அமானுஷ்யக் குரலில் வீரிட்டுக் கத்தினாள்... சட்டென்று விளக்கைப் போட்டுவிட்டு அவளை எழுப்பி உருட்டினேன். பிரக்ஞை வரவே, தள்ளாடிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். 'ஏதோ ஒன்று என் கழுத்தைக் கடித்து ரத்தத்தை உறிஞ்சின மாதிரி இருந்தது' என்றாள் கண்களைத் துடைத்துக் கொண்டு. கழுத்தைக் கவனித்தேன். குரல்வளையில் குண்டூசி நுனி மாதிரி ரத்தத்துளி இருந்தது.

ஏலவே குறிப்பிட்டது போன்று, இக்கதையில் கூறப்படும் விஷயத்தைவிட எவ்வாறு கூறப்படுகின்றது என்பதே முக்கியம். இலக்கியம் தர்க்கத்திற்கு அடங்கியதன்று என்பதைக் 'காஞ்சனை' கதை புலப்படுத்துகிறது. 'கடவுளின் கனவும் கவிஞனின் கனவும்' எனும் கட்டுரையில் புதுமைப்பித்தன் கூறுவதை இதற்கு ஆதாரமாக எடுத்துக்காட்டுவது பொருத்தமானது:

'இலக்கியத்தைப் பற்றி விஸ்தரிக்கலாம். விவாதிக்கமுடியாது. சூத்திரத்தால் விளக்க முடியாது. தர்க்கத்திற்கு அடங்கியதல்ல. சிருஷ்டிவகையே அப்படித்தான். தர்க்கத்தின் வழியாக இலக்கியத்தைப் பார்க்க முடியாது. இலக்கியம் சிருஷ்டியின் மேதைமையுடன் எதிரெதிரான விஷயங்களை உள்ளடக்கியிருக்கலாம். தர்க்கம் ஒரு படிக்கட்டு வழியாக, ஒரு பரிசோதனை வழியாக விஷயங்களை நோக்க முயலுகிறது. அதற்குச் சரி என்று பட்டுவிட்டால் மற்றவை இருக்க நியாயமில்லை. இருக்காது என்ற கொள்கை. ஆனால், இந்த வாழ்க்கை அவ்வளவு லேசான கட்டுக்கோப்பில் சிருஷ்டிக்கப்படவில்லை. தர்க்கத்தின் பிரியமான அந்தரங்கமான கொள்கைகளைச் சிதறடிக்கும்படி வாழ்க்கை இருந்து வருகிறது. அதே மாதிரித்தான் இலக்கியமும். வாழ்க்கைதான் இலக்கியம் இலக்கியம்தான் வாழ்க்கை.' மேலும், 'புதுமைப்பித்தனின் காஞ்சனை' எனும் வலைப்பதிவில் தெகார்த்தே (Descartes) போன்ற தத்துவ அறிஞர்கள் முன்வைத்த மனிதசுயத்தின் இருப்புக் குறித்த ஐயப்பாட்டினை இக்கதை எழுப்புகின்றது என பெருந்தேவி கூறுவதும் இங்கு கவனிக்கத்தக்கது.

புகையில் தெரிந்த முகம்:

ஏறத்தாழ 1940களில் தொடங்கியதாகக் கொள்ளப்படும் இலங்கைத் தமிழிலக்கிய வரலாற்றின் மறுமலர்ச்சிக்காலத்தில் இலக்கியத்தில் முனைப்புடன் ஈடுபட்டோர் புதுமைப்பித்தனின் எழுத்துகளால் பாதிப்புற்றிராது இருக்க முடியாது. அவரின் கதைகளில் காணப்படும் புதுமையான கருத்துகளாலும், கம்பீரமான நடையாலும் ஆட்கொள்ளப்பட்டதாகக் கூறும் தி.ச. வரதராசன், அ.செ.முருகானந்தன், நாவற்குழியூர் நடராசன் முதலாய எழுத்தாளர் நண்பர்களுடன் இணைந்து தோற்றுவித்த சங்கத்திற்குப் 'புதுமைப்பித்தர்கள் சங்கம்' என்றே பெயரிட அவாவியதாயும், அது கைகூடாமற்போகவே 'தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம்' என அதற்கு நாமம் சூட்டப்பட்டது என்றும் கூறுகிறார். (தெல்லிப்பழை அம்பனை கலைப்பெருமன்றம் 'மறுமலர்ச்சிக்காலம் இலக்கியச்சிறப்பிதழ்' எனும் தலைப்பில் வெளியிட்ட உழவர்விழா மலர், 1973). இச்சங்கம் வெளியிட்ட மறுமலர்ச்சி இதழுக்கு வரதரும், அ.செ.முருகானந்தனும் இணையாசிரியர்களாகப் பணியாற்றினர். புதுமைப்பித்தன் காலமான போது மறுமலர்ச்சிச் சஞ்சிகை 'மறுமலர்ச்சித் தமிழின் இலக்கிய வானிலே ஒற்றைத் தனிவிண்மீனாக விளங்கியவர்' என்றும், 'வார்த்தைகளுக்கு உயிர் கொடுத்துத் துடிக்க வைத்த இலக்கிய பிரம்மா' என்றும் அவருக்குப் புகழாரம் சூட்டியது.

1930 தொடக்கம் உருவப் பிரக்ஞையுடன் இலங்கையில் சிறுகதைகள் எழுதப்பட்டதாகக் குறிப்பிடும் சிவத்தம்பி 'ஏறத்தாழ 1940ம் ஆண்டு முதல் 1945ம் ஆண்டு வரை முக்கிய இலக்கிய நிறுவனமாக விளங்கிய மறுமலர்ச்சிக்குழு ஈழத்துச் சிறுகதைகள் ஈழத்துப் பிரச்சினைகளைப் பற்றியனவாக இருத்தல் வேண்டும் எனும் மரபை உண்டாக்கிற்று. அத்துடன் ஈழத்து இலக்கிய வளர்ச்சியின் பின்னர் முக்கிய இடம் பெறவிருக்கும் கூட்டுமுயற்சி, சகோதர விமர்சனம் ஆகியன வளர்வதற்கும் வித்திட்டது. இலங்கைக்கெனத் தனிச்சிறுகதை மரபு தோன்றுவதற்கான வித்து இக்காலப்பிரிவில் இடப்படுகின்றது' என்று கூறுகின்றார். (தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், பக்கம் 146-47).

புதுமைப்பித்தன் தனக்கென இலக்கியக் கொள்கையை வகுத்துக்கொண்டதுபோன்று முருகானந்தனும் இலக்கியம் எவ்வாறிருக்க வேண்டும் எனச் சிந்தித்திருந்தார். 17.05.1942 ஈழகேசரி இதழில் 'தமிழில் கதை இலக்கியம்' எனும் தலைப்பில் அவர் இவ்வாறு கூறுகின்றார்: 'தமிழிலுள்ள கதை இலக்கியத்தில் இப்போது காணப்படும் முக்கிய குறை இதுதான். அதாவது இலட்சியக் கதைகள், சீர்திருத்தக் கதைகள் மிகவும் குறைவு. அத்தியாவசியமாக வேண்டப்படுபவனவும் அவைதாம். பொழுதுபோக்குக் கதைகள் போதுமென்றபடி ஏராளமாகச் சேர்ந்து விட்டன. இனி அவற்றுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு எமது நாட்டை அப்படியே தூக்கிக் காட்டும் தேசத்தின் வறுமை, துன்பம், அரசியல் நிலைமை முதலியவற்றை உணர்ச்சியூட்டக்கூடிய முறையில், மாற்றக்கூடிய முறையிற் சித்திரிக்கும் இலட்சியக் கதைகள் பெருக வேண்டும்.'

முருகானந்தனின் மேற்படி கூற்றை அடிப்படையாகக் கொண்டு அவர் பிரசாரக் கதைகளை ஆதரிப்பவர் என்று கருதுவதற்கிடமில்லை. கதை சொல்லும் முறையிலும் அவர் கவனம் செலுத்தியவர். 'சிற்பி' சரவணபவன் முருகானந்தனின் சிறுகதைகள் குறித்து இவ்வாறு கூறுகின்றார்: 'வெவ்வேறு உத்திகளைக் கையாண்டு சுவையாகக் கதை சொல்லும் அவர், பிரசார வாடை சிறிதுமின்றி, அழகான உண்மைகளை மிக நளினமாக வாசகர் நெஞ்சிற் பதித்துவிடுகிறார். சாதாரண சம்பவங்கள் அவர் சொல்லும் முறையால் இலக்கியமாகின்றன. அவருடைய தமிழ் நடை தெளிவான இலகுநடை. தேவையான இடங்களில் அவர் கையாளும் பேச்சுத்தமிழ் அதற்கு உயிரூட்டுகின்றது. இலக்கியத் தொடர்களும் அளவான பிறமொழிச் சொற்களும் மெருகூட்டுகின்றன. மெல்லிய நகைச்சுவையும் 'நாசூக்'கான கிண்டலும் இடையிடையே உண்டு. தனித்துவம் மிக்க அவருடைய வர்ணனைகள், அழகு மயிலின் ஆனந்த நடனமாய்க் கதைகளுக்கு எழிலூட்டுகின்றன. கதைகளில் வீசும் கிராமிய மணம் வாசகர்களை இதமாக வருடுகிறது.' (மனிதமாடு, பக்கம் xix).

புதுமைப்பித்தனின் காஞ்சனை, 'நாங்கள் [எழுத்தாளர்கள்] உண்டாக்குவது போல், அந்தப் பிரமனின் கைவேலையும் பொய் தானா? நான் பொய்யா?' என்று சுயஇருப்புக்குறித்த ஐயப்பாட்டுடன் தொடங்கும். ஆனால் முருகானந்தனின் புகையில் தெரிந்த முகம் மானிடலோகம், அமானுஷ்ய லோகம் எனும் இருவேறு உலகங்களினதும் இருப்பில் உள்ள உறுதியான பண்பாட்டு நம்பிக்கையில் முளைத்தது. பொதுவாக அமானுஷ்ய லோகத்தைச் சேர்ந்த ஆவி, பேய் என்பன மனிதர்களுக்குத் தீங்கு புரிய வல்லவை. அதற்காக அவர்கள் மீது ஏவி விடப்படுபவை. எனும் நம்பிகைகள் உண்டு. உதாரணமாக, நீலகேசி எனும் தமிழ்க்காப்பியத்தில் சமண முனிவர் முனிச்சந்திரன் பிடாரி தெய்வத்திற்கு மக்கள் கொடுக்கும் நிணப்பலியைத் தடுத்து நிறுத்தியமையால் ஆத்திரமுற்ற பேய்க்கணம் அம்முனிவருக்குத் தீங்கிழைக்க நீலகேசி எனும் வல்லமை வாய்ந்த பேயை ஏவி விட, முனிவர் தன் தவபலத்தால் அதை அடக்கி அதற்கு சமணமதபோதனைகளை அறிவிக்க, அது பின்னர் பௌத்தர்களை வாதில் வெல்கிறது. ஆனால், புகையிற் தெரிந்த முகத்தில் வரும் காந்திமதிப்பேய் தனித்துவமானது. (புதுமைப்பித்தனின் சொந்தவூரான திருநெல்வேலியில் இருக்கும் நெல்லையப்பர் கோயிலில் எழுந்தருளியிருக்கும் அம்மன் காந்திமதி என்றழைக்கப்படுபவள் என்பது இங்கு நோக்கத்தக்கது.) நிகழ்ந்த உண்மையைக் கூறவும், தன்னுடையதும், தனது காதலனினதும் கொலையின் பின்னணியில் உறைந்திருக்கும் ஆதிக்க சமூகத்தின் கொடுவியல்பினையும் வெளிப்படுத்தவே தோன்றுகிறது. பழி வாங்குவது அதன் நோக்கமன்று. தன்னைப் பேயாய் அலைய விட்ட சமூகத்தின் ஈனத் தனத்தைச் சுட்டிக்காட்டுவதே அதன் நோக்கம். அவ்வகையில் காந்திமதிப்பேய் யாழ்ப்பாண சமூக அறச்சிதைவின் அடையாளமாக விளங்குகின்றது. ஷேக்ஸ்பியரின் ஹம்லட் எனும் நாடகத்தில் Marcellus எனும் காவலாளி, ஹம்லட்டின் தகப்பனாரின் ஆவியின் தோன்றுகை குறித்து 'Something is rotten in the state of Denmark.' என்று கூறுவார். அதுபோலக்கதை சொல்லியின் கண்களுக்கு அமானுஷ்யத்தின் புலப்பாடானது யாழ்ப்பாணச் சமுதாயத்தின் அவலநிலையைக் குறிப்பதாகவே கொள்ள வேண்டும்.

மேலும், புதுமைப்பித்தனின் காஞ்சனையில் அமானுஷ்யம் குறித்த கதைசொல்லியின் அனுபவ எண்ண அலைகளாகக் கதை விரிகின்றது. ஆனால் முருகானந்தனின் புகையிற் தெரிந்த முகத்தில் அமானுஷ்யமே கதையை நகர்த்திச் செல்கிறது. இதில் காந்திமதியும் அவள் காதலன் முருகேசனும் கூறும் சுயவரலாறும், கதை சொல்லி இராமலிங்கத்தின் சிந்தனையும் இரட்டைச் சரடுகளாக ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. விசேடமாக, காந்திமதியின் பேச்சு கதைசொல்லியின் பழைய நினைவுகளைக் கிளறுகின்றன. அவர் நினைவில் விரியும் வண்டிச்சவாரி, கிராமச்சங்கத் தேர்தல், திருவிழா பற்றிய வர்ணனைகள் காந்திமதியின் தந்தையின் குணக்குறைகளை புரிந்து கொள்வதற்கு ஏதுவானவைகளாகவும், கிராமிய வாழ்வையும், அவ்வாழ்வில் ஏற்படும் மாறுதல்களையும் பிரதிபலிப்பனவாயும் விளங்குகின்றன. யாழ்ப்பாணப் பெண்ணடிமைத்தனத்தின் உச்சநிலையாக வலுக்கட்டாயமாக நிறைவேற்றப்படும் ஏற்பாட்டு விவாகங்கள் அமைதலையும், குடும்ப அதிகாரத் தானத்தில் இருக்கும் ஆண் தனது அதிகாரத்தை வெளிப்படுத்துவதற்குச் சாதகமானவையாக இத்தகைய விவாகங்கள் இருக்கின்றமையையும் நாவல் காட்டுகின்றது. காந்திமதியின் காதல் விவகாரத்தையும், தகப்பன் பொன்னுச்சாமியின் நிலைப்பாடு குறித்தும் ஊர் பல்விதமாக அலசுகின்றது. 'எல்லாச் சங்கதியும் அறிஞ்சுதான் பேசுகிறேன். தகப்பன்மார்கள் கீறுகிற கோடு வெறும் கோடுகளாயில்லாமல் அகழிகளாய்ப் போய்விடுகிற சமயத்தில் பிள்ளைகள் அதில் விழாமல் தப்ப மார்க்கம் தேடாமல் வேறு என்ன செய்வார்கள்?... வீட்டில் நிற்கும் ஆட்டுக்கும், மாட்டுக்கும் சோடி சேர்ப்பது போல கல்யாணம் செய்து வைக்க இந்தக்காலத்துப் பிள்ளைகள் சம்மதப்படுகிறதாமோ?' (பக்கம்: 30). அதற்குச் சம்மதப்படாமையினால் 'பொல்லாப்பிள்ளை இல்லாப் பிள்ளையாகப் போகட்டும்' என்று புகையிலைக் கன்றுகளுக்குத் தண்ணீர் பாய்ச்சப் பயன்படும் மண்வெட்டியைத் தனது மகள் மீதும், தங்கை மகன் மீதும் வீசி அவர்களைக் கொன்று, புகையிலைத் தோட்டத்தில் புதைத்து விடுகிறார் பொன்னுச்சாமி. அந்தப் புகையிலைத் தோட்டத்தில் விளைந்த புகையிலைச் சுருட்டைப் பிடிக்கும் இராமலிங்கத்தின் கண்களுக்கு சுருட்டுப்புகையில் மாண்டவர் முகங்கள் தெரிகின்றன.

நிறைவாக, வெறுமனே திகிலுணர்ச்சி ஊட்டும் கதையாக மட்டுமிராது, தர்க்கரீதியாக இலக்கியத்தைப் புரிந்துகொள்ள முடியாது என்பதற்கு நல்லதொரு எடுத்துக் காட்டாகப் புதுமைப்பித்தனின் காஞ்சனை விளங்குகின்றது. காஞ்சனையில் அமானுஷ்யம் என்பது உண்மையா? அதீத கற்பனையா? திரிபுக்காட்சியா? அல்லது எல்லாவற்றினதும் கலவையா? என காண்பான், காட்சி என்பவற்றின் உண்மை குறித்த நிச்சயப்படுத்திக்கொள்ள வியலாத கேள்விகள் தொக்குநிற்கின்றன. காஞ்சனையை வாசித்த இலக்கியப்பக்குவம் மிக்க நண்பர் ஒருவர் ஜேம்ஸ் ஜோய்ஸ் மாதிரி கதை எழுதியிருப்பதாகவும், 'கயிற்றரவு' என்று சொல்வார்களே ஒரு மயக்கநிலை, அதை அழகாக வார்த்திருப்பதாகவும் சொன்னார் என்று புதுமைப்பித்தன் கூறுகின்றார். ஆனால், முருகானந்தனின் புகையில் தெரிந்த முகம் குறுநாவல் அமானுஷ்யம் குறித்த எந்தவொரு ஐயத்தையும் எழுப்பவில்லை. 'காண்பானும் உண்மை, காட்சியும் உண்மை' எனும் தத்துவ எடுகோளை அடிப்படையாகக் கொண்டது. காலனிய ஆட்சியில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் கிராமத்தினரின் வாழ்வில் ஊடுருவி அவர்களின் தனிப்பட்ட வாழ்வை எவ்வாறு பாதிப்புள்ளாக்குகின்றன என்பதைக் காட்டும் சமூகப்பதிவாக விளங்குவதுடன், சமூகத்தின் எண்ணத்திற்கும் செயலுக்குமான வேறுபாடு குறித்தும் சிந்திக்கத் தூண்டுகின்றது.

'அரசியல்வாதி சுதந்திரம் சுதந்திரம் என்று பிரசங்க மேடையிலே கூச்சல் போடுகிறான். வீட்டிலே அவன் குடும்பத்தில் எந்த அளவுக்கு சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று போய்ப்பார்' (பக்கம்: 35),

'சுபத்திரையை அர்ச்சுனன் களவாகக் கூடிக்கொண்டு ஓடியகாட்சி நாடகத்தில் நடிக்கப்பட்டபோது கொட்டகைக்குள் இருந்த பொன்னுச்சாமியார் இருப்புக்கொள்ளாமல் எழும்பிநின்று சீட்டி அடித்து சந்தோஷ ஆரவாரம் செய்வதை இதோ இந்தக் கண்களாலே பார்த்தேன். ஆனால் வீட்டிலே அவரது மகள் இஷ்டமில்லாத ஒருவனைக் கட்டிக்கொள்ள மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தபோது அவர் எப்படி நடந்து கொண்டார்?' (பக்கம்: 36) என்று முருகேசன் பேய் வினாக்கள் தொடுக்கின்றது. எம்.ஏ. நுஹ்மான் 'நம் கற்பனைக்கும் யதார்த்தத்துக்கும் இடையே உள்ள நீண்ட இடைவெளியை, நம் மதிப்பீடுகளின் பொய்ம்மையை நம் முகத்தில் ஓங்கி அடிக்கும் கலகக் குரல்தான் இது' என்று புதுமைப்பித்தன் பற்றிக் குறிப்பிடுவது முருகானந்தனுக்கும் பொருந்தும்.

maithilithayanithy@thaiveedu.com

அநுராதபுர இராசதானி காலத்தில் எல்லாள மன்னன் வெளியிட்ட தமிழ் நாணயம்

- ப. புஸ்பரட்ணம்

இலங்கையின் பூர்வீக மக்கள், அவர்களது பண்பாடு தொடர்பாக கூறப்பட்டு வந்த நீண்ட பாரம்பரிய வரலாற்று நம்பிக்கைகள் சமீபகால தொல்லியல் ஆய்வுகளால் மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்டு வருவதைக் காணலாம். விஜயன் வருகைக்கு முன்னரே இலங்கையில் நாகரிகயுகம் தோன்றிவிட்டதாகக் கூறும் இலங்கையின் மூத்த தொல்லியல் அறிஞர்களில் ஒருவரான பேராசிரியர் சேனக பண்டாரநாயக இலங்கை மக்களின் வரலாற்றையும், பண்பாட்டையும் விஜயன் வருகைக்கு முந்திய பண்பாடுகளில் இருந்து ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டும் எனக் கூறுகின்றார். இதற்கு விஜயன் தலைமையில் வடஇந்தியக் குடியேற்றம் நடந்தாகக் கூறப்படும் கி.மு. 6ம் நூற்றாண்டுக்கு முன்னரே இலங்கையில் நாடோடிகளாக வாழ்ந்த கற்காலப் பண்பாட்டு மக்களும், நாகரிக உருவாக்கத்திற்கு காரணமான பெருங்கற்கால மக்களும் வாழ்ந்து வந்ததை நம்பகரமான தொல்லியற் சான்றுகள் உறுதிப்படுத்தி உள்ளதே காரணமாகும்.

இந்நிலையில் இலங்கையில் புழக்கத்தில் இருந்த தொன்மையான மொழிகளை அடையாளப்படுத்தும் முக்கிய சான்றான எழுத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஆராய்ந்த பேராசிரியர் சத்தமங்கல கருணாரட்னா (1962), பெர்ணாந்தோ (1969), ஆரிய அபயசிங்க (1975) போன்ற அறிஞர்கள் வடஇந்தியாவிருந்து பௌத்த மதத்துடன் வடஇந்தியப் பிராமி என்ற எழுத்து வடிவம் இலங்கையில் அறிமுகமாவதற்கு முன்னரே தமிழ் மொழிக்குரிய தமிழ்ப் பிராமி என்ற எழுத்து வடிவம் புழக்கத்தில் இருந்ததாகக் கூறுகின்றனர். இத்தமிழ்ப் பிராமி எழுத்தின் பயன்பாடு இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இலங்கையில் பயன்பாட்டிலிருந்து வந்ததைப் பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டச்சாசனங்கள் உறுதிசெய்கின்றன. இவ்வாதாரங்கள் இலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாற்றை மட்டுமன்றி அவர்களிடையே தோன்றியிருக்கக் கூடிய அரச மரபு பற்றிய பாரம்பரிய நம்பிக்கைகளையும் மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றன. இதற்கு இலங்கையில் புழக்கத்தில் இருந்த தொன்மையான தமிழ் நாணயங்களை முக்கிய சான்றாகக் காட்டலாம்.

நாணயங்கள் இலக்கியங்கள், கல்வெட்டுக்களைப் போல் விரிவான வரலாற்றுத் தகவல்களைத் தரக்கூடியவை அல்ல. ஆயினும், ஆட்சியில் இருந்த ஓர் அரச வம்சத்தால் அல்லது ஒரு மன்னனால் வெளியிடப்படும் நாணயங்கள் அவர்களின் சமகாலத்திற்குரியதால் அவை நம் பகரமான சான்றுகளாகப் பார்க்கப்படுகின்றது. இதற்குப் பண்டைய இந்திய இலக்கியங்களில், கல்வெட்டுக்களில் சொல்லப்படாத சில அரச வம்சங்களை, மன்னர்களை, மற்றும் சிற்றரசர்களை நாணயங்களால் வெளிச்சத்திற்கு கொண்டுவரப்பட்டதை உதாரணமாகக் குறிப்பிடலாம். இந்தநோக்கில் இலங்கையில் புழக்கத்தில் இருந்த பண்டைய தமிழ் நாணயங்கள் இதுவரை ஆராய்ந்து பார்க்கப்பட்டதாகத் தெரியவில்லை.

எல்லாளன் வெளியிட்ட நாணயம்?

வரலாற்றுத் தொடக்ககாலத்தில் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட நாணயங்கள் தமிழகத்தில் சங்ககால மூவேந்தர் வெளியிட்ட சதுரவடிவ நாணய மரபை ஒத்ததாகக் காணப்படுகின்றது. சதுரவடிவில் நாணயங்களை வெளியிடும் மரபு சங்ககாலத்திற்குரிய தனிச் சிறப்பம்சமாகக் கூறப்படுகின்றது. இதனால் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட சதுர வடிவிலமைந்த நாணயங்கள் தமிழக மரபைப் பின்பற்றி

தொடர்தல் 71ம் பக்கம்

அநுராதபுர...

70ம் பக்கத் தொடர்ச்சி...

வெளியிடப்பட்டவை எனக் கூறலாம். இலங்கையில் பயன்படுத்தப்பட்ட இந்நாணயத்தின் முன்பக்கத்தில் கோட்டுருவில் அமைந்த சதுரமான பெட்டிக்குள் நிற்கும் நிலையில் காளை உருவமும், அதன் தலைப்பகுதிக்கு கீழே பலிபீடம் போன்ற உருவமும் காணப்படுகின்றது. நாணயத்தின் பின்பக்கத்தில் சதுரமான கோட்டுக்குள் வட்டமும், அவ்வட்டத்திற்குள் சில வற்றில் மூன்றும், வேறுசில நாணயங்களில் நான்கு புள்ளிகளும் காணப்படுகின்றன. இந்நாணயங்கள் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் பலரும் நாணயத்தின் வடிவமைப்பு சமகாலத்தில் சங்ககால மூவேந்தர்கள் வெளியிட்ட நாணய வடிவமைப்பை ஒத்திருப்பதால் இவை தமிழகத்துடன் கொண்டிருந்த அரசியல், வாணிபத் தொடர்பால் இலங்கைக்கு வந்ததாகக் கூறுகின்றனர். அவ்வாறு கூறியமைக்கு யாழ்ப்பாண அரசு தோன்றுவதற்கு முன்னர் இலங்கைத் தமிழரிடையே அரச உருவாக்கம் தோன்றவில்லை என்ற நம்பிக்கையும் முக்கிய காரணமாகும்.

ஆயினும் இவ்விடத்தில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய அம்சம் தமிழகத்தில் சங்ககால மூவேந்தர் வெளியிட்ட நாணயங்களின் பின்பக்கத்தில் பாண்டியருக்கு மீனும், சோழருக்குப் புலியும், சேரருக்கு அம்பும் வில்லும், அதியமான் போன்ற குறுநில அரசுக்கு ஆற்றுச் சின்னமும் அரச இலட்சனைகளாகப் பொறிக்கப்பட்டுள்ளன. ஆனால் இலங்கையில் பயன்பாட்டிலிருந்த சதுர நாணயங்களின் பின்பக்கத்தில் இச்சின்னங்களைக் காண முடியவில்லை. மாறாக நாணயத்தின் பின்பக்கத்தில் சதுரமான கோட்டுக்குள் வட்டமும், அவ்வட்டத்திற்குள் நான்கும் சில நாணயங்களில் மூன்று புள்ளிகளும் காணப்படுகின்றன. தமிழகத்தில் சங்ககாலம் தொட்டு வெளியிடப்பட்ட நாணயங்கள் சமகாலத்தில் இலங்கையில் உபயோகத்தில் இருந்ததற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. ஆனால், இலங்கையில் பயன்படுத்தப்பட்ட மேற்குறித்த நாணயம் ஒன்றுதானும் தமிழகத்தில் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. உண்மையில் இந்நாணயம் சங்ககால மன்னர்களால் வெளியிடப்பட்டிருந்தால் இலங்கையைக் காட்டிலும் தமிழகத்திலேயே அதிக எண்ணிக்கையில் கிடைத்திருக்க வேண்டும். இந்நாணயத்தில் காணக்கூடிய இன்னொரு அம்சம் பிற்பட்டகாலத்தில் அநுராதபுர ஆட்சியாளராக இருந்த சில சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் முன்பக்கத்தில் சிங்கமும், இந்நாணயத்தின் பின்பக்கத்தில் காளை உருவம் பொறித்த நாணயத்தின் பின்பக்கத்தில் காணப்படுவதை ஒத்த சின்னங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் இருந்து அநுராதபுரத்தில் ஆட்சி செய்த தமிழ் மன்னர்கள் காளை உருவத்தையும், சிங்கள மன்னர் சிங்க உருவத்தையும் தமது குலச் சின்னமாக அல்லது அரச சின்னமாக பயன்படுத்தியுள்ளனர் எனக் கூறலாம். நாணயங்களின் பின்பக்கத்தில் இரு மன்னர்களும் ஒரேவகையான சின்னங்களைப் பயன்படுத்தியமைக்கு இவை அநுராதபுர அரசை அல்லது நாட்டைக் குறிப்பதற்காக இருக்கலாம்.

சிங்கள மன்னர்கள் சிங்கத்தை தமது குலமரபாகவும், அரச சின்னமாகவும் கருதும் மரபு விஜயன் வருகை பற்றிய கதையுடன் இணைந்த ஒன்று. இச்சின்னத்தைப் பிற்கால சிங்கள மன்னர்களும் நாணயங்களில் பயன்படுத்தியுள்ளனர். ஆனால் அவர்கள் வெளியிட்ட நாணயங்களில் காளையை அரச சின்னமாகவோ, புனித சின்னமாகவோ பயன்படுத்தியமைக்கு ஆதாரங்கள் காணப்படவில்லை. மாறாக அச்சின்னத்தை பௌத்த சிங்களப் பண்பாட்டில் ஒரு கலைவடிவாகவே பயன்படுத்தியுள்ளனர். இதற்கு உதாரணமாக பௌத்த ஆலயங்களில் வாசல் பகுதியில் காணப்படும் சந்திரவட்டக்கல்லில் மலர்கள், பறவைகள், மிருகங்கள் முதலான சின்னங்களுடன் காளையும் ஒரு சின்னமாகச் செதுக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம். ஆனால் தமிழர் பண்பாட்டில் காளைப் புனிதச் சின்னமாகக் கருதும் மரபு நீண்டகாலமாக இருந்து வருகின்றது. இதற்கு யாழ்ப்பாண அரசு காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில் காளை (நந்தி) ஒரு புனித சின்னமாகவும், அரச இலட்சனையாகவும் பயன்படுத்தி உள்ளதை உதாரணமாகக் குறிப்பிடலாம். இந்நிலையில் அநுராதபுர அரசில் ஆட்சி புரிந்த தமிழ்கள் வெளியிட்ட நாணயங்களில் காளை உருவம் பொறிக்கப்பட்டிருப்பது யாழ்ப்பாண இராசதானிக்கு முன்னரே அம்மரபு இலங்கையில் ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்களால் பயன்படுத்தி வந்துள்ளதைக் கோடிட்டுக்காட்டுவதாக உள்ளது.

அநுராதபுர இராசதானியில் முதல் 200 ஆண்டு காலப்பகுதியில் ஆட்சியிலிருந்த பத்து தமிழ் மன்னர்கள், எண்பது ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி புரிந்துள்ளனர். அவர்களுள் எல்லாள மன்னன் 44 ஆண்டுகள் (கி.மு 161-105) நீதி தவறாது ஆட்சி புரிந்தவன் எனப் பாளி இலக்கியங்கள் கூறுகின்றன. இவனே இலங்கையில் நீண்ட காலம் ஆட்சிபுரிந்த முதல் மன்னனாவான். ஆயினும், தேரவாத பௌத்த மதத்தை முதன்மைப்படுத்திக் கூறும் பாளி இலக்கியங்கள் அம்மதத்திற்குப் பணி செய்த மன்னர்களின் வரலாற்றையே முதன்மைப் படுத்திக் கூறுகின்றன. உதாரணமாக 26 ஆண்டுகள் மட்டும் ஆட்சி செய்த துட்டகாமினி மன்னனின் வரலாற்றை 821 செய்யுளில் கூறும் மகாவம்வம் 44 ஆண்டுகள் ஆட்சி செய்த எல்லாள மன்னனின் வரலாற்றை வெறும் 21 செய்யுளில் மட்டுமே கூறுகின்றது. இதனால் பாளி இலக்கியங்களில் இருந்து எல்லாளனின் வரலாற்றையும், அவனது வரலாற்றுப் பணிகளையும் குறைந்தளவுதானும் அறியமுடியவில்லை. ஆயினும் அவனது நீண்டகால ஆட்சிக்கு பலதரப்பட்ட மக்களின் ஆதரவு கிடைத்தமைக்கு அவன் மக்களுக்கு ஆற்றிய பணிகளே காரணமாக இருந்துள்ளது எனக் கூறலாம். இதனால்தான் எல்லாளனை வெற்றி கொண்ட துட்டகாமினி அவன் இறந்த இடத்தில் சமாதி எழுப்பி அச்சமாதியை மக்கள் வழிபடவேண்டும் என ஆணை பிறப்பிக்க காரணமாகும்.

அண்மையில் தென்னிலங்கையில் அக்குறுகொட என்ற இடத்தில் 2200 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்ப் பிராமியில் எழுதப்பட்ட சில நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு நாணயத்தில் திஸபுரம் என்ற இடத்தில் ஆட்சிசெய்த சடநாகராசன் என்ற வாசகம் காணப்படுகின்றது. இவற்றில் இருந்து தென்னிலங்கையில் தமிழ்ச் சிற்றரசர்களின் ஆட்சி இருந்தமையும், அவர்கள் நாணயங்கள் வெளியிட்டமையும். தெரியவந்துள்ளன. மகாவம்சத்தில் கூட எல்லாளன் ஆட்சிக்கு சார்பாக தென்னிலங்கையில் 32 தமிழ்ச் சிற்றரசர்களின் ஆட்சி இருந்தது பற்றிக் கூறுகின்றது. தென்னிலங்கையில் சிற்றரசர்களாக இருந்த சிலரே பின்னர் அநுராதபுர மன்னர்களாக ஆட்சியைக் கைப்பற்றியதற்கு மகாவம்சத்தில் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. இங்கே எல்லாள மன்னன் அநூராதபுரத்தில் ஆட்சியிலிருந்த காலமும் காளை உருவம் பொறித்த நாணயம் பயன்பாட்டிலிருந்த காலமும் ஏறத்தாழ ஒரே காலமாகக் காணப்படுகின்றது. இதனால் இந்நாணயத்தை எல்லாள மன்னன் அநுராதபுர மன்னனாக இருந்து வெளியிட்ட நாணயமாகக் கொள்வதே பொருத்தமாகும்.

தென்னிலங்கையில் 2200ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்ச் சிற்றரசர்களின் ஆட்சி - வரலாற்று வெளிச்சத்திற்கு வந்திருக்கும் புதிய ஆதாரங்கள்:

தென்னிலங்கையில் அக்குறுகொட என்ற இடத்தில் 1999ம் ஆண்டு வீடு கட்டுவதற்காக அத்திவாரம் வெட்டிய போது எதிர்பாராதவகையில் நூற்றுக்கணக்கான 'ஈய' நாணயங்கள் வெளிவந்துள்ளன. இவற்றை முதலில் அவதானித்த அவ்வூர் மக்கள் அவற்றின் வரலாற்றுப் பெறுமதியை உணராது அந்நாணயங்கள் பலவற்றை பழைய பொருட்களை வாங்கும் கடைகளுக்கு கொண்டு சென்று விற்பனை செய்தனர். இந்நிலையில் இது பற்றிய செய்தி நாணயவியல் அறிஞரும், 1990 காலப்பகுதியில் யாழ்ப்பாண மாவட்ட இராணுவ தளபதியாகவும் இருந்த திரு. ராஜாவிக்கிரமசிங்கா அவர்களின் கவனத்திற்குகொண்டு செல்லப்பட்டது. அவர் பிரான்ஸ் நாட்டு நாணயவியல் ஆய்வுநிறுவனத்தின் தலைவராக கடமையாற்றி வரும் எமது நாட்டுப் பேராசிரியர் பொபேஆராய்ச்சியுடன் இணைந்து மக்களால் விற்பனை செய்த கடைகள், நாணயங்கள் வெளிவந்த இடங்கள், அவ்வூர் மக்கள் எனப் பல இடங்களில் இருந்து இந்நாணயங்கள் பலவற்றை சேகரித்து அவற்றைச் சிறந்த முறையில் ஆவணப்படுத்தி Ruhuna an Ancient Civilization Revisit என்ற நூலில் வெளியிட்டிருந்தனர்.



இந்நாணயங்கள் பலவற்றின் முன்பக்கத்தில் பிராமி எழுத்தில் அதை வெளியிடக் காரணமாக இருந்தவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருப்பது இந்நாணயங்களின் சிறப்பான அம்சமாகக் காணப்படுகின்றது. இவை பண்டைய இலங்கையில் வழக்கில் இருந்த எழுத்து, மொழி, ஆட்சியில் இருந்த சிற்றரசர்கள் முதலானவற்றை அறிந்து கொள்ள நம்பகரமான சான்றாகக் காணப்படுகின்றன. நாணய மற்றும் சாசனவியல் அறிஞர்கள் இந்நாணயங்களில் தெளிவாக காணப்படும் எழுத்துக்களின் எழுத்தமைதியைக் கொண்டு இவை 2200 ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிடப்பட்ட நாணயங்கள் என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். இவை தென்னிலங்கையிலேயே வெளியிடப்பட்ட நாணயங்கள் என்பதை, நாணயங்கள் காணப்பட்ட இடத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட சுடுமண் நாணய அச்சுக்கள் உறுதிப்படுத்துகின்றன. இதனால் நாணயங்களும், நாணய அச்சுக்களும் காணப்பட்ட இடம் பண்டைய காலத்தில் நாணயங்களை உற்பத்தி செய்யும் தொழிற்கூடமாக இருந்திருக்க வேண்டும் என்ற கருத்துகளும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்நாணயங்கள் பற்றி முதலில் ஆய்வு செய்த பேராசிரியர் பொபெயாராச்சி மற்றும் ராஜாவிக்கிரமசிங்கே ஆகியோர் நாணயங்களில் உள்ள எழுத்து வடிவத்தை வடபிராமியாகவும், அவற்றின் மொழியைப் பிராகிருதமாகவும் பார்த்தனர். ஆயினும் இரண்டு நாணயங்களில் தமிழ்ப் பிராமி எழுத்து பயன்படுத்தப்பட்டுள்ளதை முக்கிய அம்சமாகக் சுட்டிக்காட்டிய அவர்கள் தமிழ் மொழியில் புலமையற்ற காரணத்தால் அவற்றின் பெயர்களை பிராகிருத மொழியாகவே பார்த்தனர். இந்நிலையில் இந்நாணயங்கள் தொடர்பாக கொழும்பில் நடந்த கருத்தரங்கில் கலந்து கொண்ட தென்னிந்தியத் தொல்லியல் அறிஞர் பேராசிரியர் வை.சுப்பராயலு அவர்கள் இந்நாணயங்கள் பற்றிய நூலை என்னிடம் தந்து நாணயங்களில் பொறிக்கப்பட்ட பெயர்களை மீள்வாசிப்பு செய்யுமாறு கூறியிருந்தார். இதற்கு வேண்டிய நாணய மூலப் பிரதிகளையும் (Coins Replica), நாணயங்களுக்குரிய அரிய புகைப்படங்களையும் பேராசிரியர் பொபேயாராச்சி மற்றும் ராஜாவிக்கிரமசிங்கே ஆகியோர் வழங்கியிருந்தனர். இந்நாணயங்கள் அனைத்தும் ஈயத்தில் வெளியிடப்பட்டிருப்பதால் கணிசமான நாணயங்களில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் தேய்வடைந்து வாசிக்கப்படமுடியாத நிலையில் உள்ளன. ஆயினும் தேய்வடையாத நாணயங்களைக் கொண்டு அவற்றில் பொறிக்கப்பட்ட பெயர்கள் தமிழ் மற்றும் பிராகிருத மொழிகளுக்கு உரியவை என்பது தெரிகின்றது. அவற்றுள் ஐந்து நாணயங்களில் உதிரன், மஹாசாத்தன், கபதிக ஜபன், தஜபியன், திஷபுர சடணாகராசன், சோழ(ட)ணாக(ன்) முதலான பெயர்கள் தமிழ்ப் பிராமியில் எழுதப்பட்டுள்ளது. இப்பெயர்களின் பின்னொட்டு சொல் தமிழில் ஆண்மகனைக் குறிக்கும் 'அன்' என்ற ஆறாம் விகுதியில் முடிவதால் இவை தமிழ்ப் பெயர்கள் என்பதில் ஐயமிலை. இந்த வாசிப்பை பேராசிரியர் சுப்பராயலு, தமிழ்ப் பிராமியின் தந்தை என அழைக்கப்படும் ஐராவதம் மகாதேவன் உட்பட தென்னிந்திய, இலங்கை சாசனவியல் அறிஞர்கள் பலரும் தமது ஆய்வுகளில் பொருத்தமானதாக எடுத்துக் கொண்டுள்

தொடர்தல் 72ம் பக்கம்

அநுராதபுர...

71ம் பக்கத் தொடர்ச்சி...

ளனர்.

பண்டையகால நாணயங்கள் பொதுவாக அரசனால் அல்லது சிற்றரசனால் வெளியிடப்பட்டவை. ஆனால் சில சந்தர்ப்பங்களில் அரசனின் அனுமதி பெற்ற வணிகர்களும், மதநிறுவனங்களும் நாணயங்கள் வெளியிட்டதற்கு ஆதாரங்கள் உண்டு. இது பற்றிக் கௌடில்லியனின் அர்த்த சாஸ்திரத்திலும் குறிப்புக்கள் உள்ளன. இந்நிலையில் இந்நாணயங்களில் ஒன்றில் தமிழில் 'திஷபுர சடணாகராசன்' என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் விளக்கம் தென்னிலங்கையில் திஷபுரம் என்ற இடத்தில் ஆட்சிபுரிந்த சடணாகராசன் (அரசன்) வெளியிட்ட நாணயம் என்ற பொருளில் அமைந்துள்ளது. இந்நாணயங்களில் இருந்து இற்றைக்கு 2200 ஆண்டுகளுக்கு முன்னர் தென்னிலங்கையில் தமிழர்கள் வாழ்ந்து வந்துள்ளமையும், அவர்களிடையே தமிழ் அரச மரபு தோன்றியிருந்தமையும் தெரியவந்துள்ளது. சமகாலத்தில் இலங்கையின் பல பிராந்தியங்களில் இனக்குழுத் தலைவர்கள், சிற்றசர்கள், குறுநிலத் தலைவர்கள் ஆகியோரின் ஆட்சி இருந்ததற்கு நம்பகரமான ஆதாரங்கள் காணப்படுகின்றன. இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட 22 பிராமிக் கல்வெட்டுக்களில் 'வேள்' என்ற தமிழ்ச்சொல் காணப்படுகின்றது. இச்சொல் சிற்றரசன், தலைவன், உயர் அதிகாரி ஆகிய உயர் பதவியில் இருந்தவர்கள் பயன்படுத்திய ஒரு பட்டப் பெயராகும். பேராசிரியர் றோமிலாதபார் வடமொழியில் 'ராஜா' என்ற பட்டம் என்ன பொருளைக் குறித்ததோ அதே பொருளை தமிழில் 'வேள்' என்ற பட்டம் குறிப்பதாகக் கூறுகின்றார். அண்மையில் சங்ககால அரச உருவாக்கம் பற்றி ஆய்வு செய்த கலாநிதி பூங்குன்றன் சங்க காலத்தை ஒத்த வேளீர் ஆட்சி சமகாலத்தில் இலங்கையிலும் இருந்தற்கு பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் 'வேள்' என்ற பட்டத்தைச் சான்றாகக் காட்டியுள்ளார். இவ்விடத்தில் ஏறத்தாழ இந்நாணயங்களின் சமகால வரலாறு கூறும் மகாவம்சத்தில் துட்டாகாமினி மன்னன் அநுராதபுரத்தில் எல்லாள மன்னனை வெற்றி கொள்வதற்கு முன்னர் அவனுக்குச் சார்பாகத் தென்னிலங்கையில் ஆட்சிபுரிந்த 32 தமிழ்ச் சிற்றரசர்களை வெற்றி கொள்ளவேண்டி இருந்ததாகக் கூறியிருப்பது சிறப்பாக நோக்கத்தக்கது. இவ்வாதாரங்கள் சங்ககாலத்தின் சமகாலத்தில் இலங்கைத் தமிழரிடையேயும் அரச மரபு தோன்றியிருந்ததை உறுதி செய்வதாக உள்ளன.

யாழ்ப்பாண இராசதானி காலத்தில் வெளியிடப்பட்ட முருகப் பெருமானைக் குறிக்கும் அரிய நாணயங்கள்:

யாழ்ப்பாண அரசு கால நாணயங்கள் பற்றி ஆராய்ந்த பலரும் அவர்கள் சேது என்ற மங்கல மொழி பொறித்த நாணயங்களை மட்டுமே வெளியிட்டனர் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். ஆனால் எமது தொல்லியல் ஆய்விற் கண்டுபிடித்த நாணயங்களில் இருந்து யாழ்ப்பாண மன்னர்கள் கந்தன், ஆறுமுகன் ஆகிய பெயர்கள் பொறித்த நாணயங்களையும் வெளியிட்டுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. அவற்றுள் முதலாவது வகை நாணயத்தில் இடப்புறம் பார்த்த நிலையில் உள்ள மயில் சின்னம் காணப்படுகிறது. ஏனைய நாணயங்களில் 'மயிலின் வாயில் பாம்பு'ச் சின்னம் காணப்படுகின்றது. ஆனால் இந்நாணயத்தில் உள்ள சின்னம் பாம்பு உருவத்திலிருந்து சற்று வேறுபட்ட உருவமாக உள்ளது. மயிலுக்கு மேலே விளிம்பை ஒட்டியவாறு பிறைச்சந்திரன், சூரியன் என்பன காணப்படுகின்றன. நாணயத்தின் பின்புறத்தில் வேல் சின்னத்துடன் தமிழில் 'கந்'(தன்) என்ற பெயர் காணப்படுகின்றது. இதன் கீழ் கால்களைக் குறிக்கும் இரு கோடுகள் காணப்படுகின்றன. இரண்டாவது வகை நாணயத்தில் உள்ள மயில் இடப்புறம் பார்த்த நிலையில் காணப்படுவதுடன் அதன் வாயில் காணப்படும் பாம்பும் தெளிவாகத் தெரிகின்றது. நாணயத்தின் பின்புறத்தில் 'ஆ' என்ற எழுத்துக் காணப்படுகிறது. இதனுடன் இணைந்த நிலையில் முதலாவது நாணயத்தில் வருவது போல் மனித வடிவில் அமைந்த கால் உருவங்கள் காணப்படுகின்றன. இதற்கு இடது, வலது புறமாக முதலாவது நாணயத்தில் வரும் சின்னங்கள் காணப்படுகின்றன. இவ்வகை நாணயங்கள் வடஇலங்கையைத்தவிர இலங்கையின் ஏனைய பாகங்களிலோ தென்னிந்தியாவிலோ இதுவரை

கண்டுபிடிக்கப்படவில்லை. தமிழக நாணயங்களில் முக்கிய சின்னமாக இடம்பெறும் அரச இலட்சனை எதுவும் இந்நாணயங்களில் காணப்படவில்லை. ஆகவே, இந்நாணயங்கள் யாழ்ப்பாண இராசதானி காலத்தில் வெளியிடப்பட்டதென்பதில் ஐயமில்லை.

மேற்குறிப்பிட்ட இரு நாணயங்களில் ஒன்றில் மயில், வேல் சின்னத்தோடு 'கந்' என்ற பெயரும், மற்றையதில் இதே சின்னங்களுடன் 'ஆ' என்ற எழுத்தும் இடம் பெற்றுள்ளன. இரு நாணயங்களிலும் உள்ள மயிலின் தோற்ற அமைப்பு, சின்னங்களிடையேயும் காணப்படும் ஒற்றுமைகள், நாணயங்களின் வடிவமைப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது இவை குறிப்பிட்ட காலப் பகுதியில் குறிப்பிட்ட ஒரு வம்சத்தால் அல்லது மன்னர்களால் வெளியிடப்பட்ட நாணயங்கள் என்பது தெரிகின்றது. இரு நாணயங்களிலும் மயில், வேல் ஆகியவை முக்கிய சின்னங்களாக இடம்பெற்றிருப்பதைக் கொண்டு இந்நாணயங்களை வெளியிட்ட மன்னர்களும், அவர்களின் ஆட்சிக்குட்பட்ட மக்களும் முருக வழிபாட்டில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பது தெரிகின்றது. சேது மொழி பொறித்த நாணயத்தில் உள்ள நந்திக்கு முன்னால் சிறு உருவமாக வடிவமைக்கப்பட்ட மயில் இவ்விரு நாணயங்களிலும் பிரதான சின்னமாகப் பொறிக்கப்பட்டுள்ளது. அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள 'கந்', 'ஆ' என்பவை கந்தன் ஆறுமுகன் ஆகிய தெய்வப் பெயர்களின் குறுக்கமாகும். அப்பெயர்கள் இறைவனின் தலைப்பாகத்தையும், கீழ் உள்ள பாகம் இறைவனின் உடற்பாகத்தையும் குறிக்கின்றது. இம்மரபில் நாணயங்கள் வெளியிடும் முறை இடைக்காலத் தென்னிந்தியாவில் இருந்துள்ளது. இதற்கு சேரமன்னர் நாணயங்களில் பயன்படுத்திய 'ச' என்ற எழுத்தையும் (Mitchiner 1998 : 160 - 1). மூன்றாம் வல்லாள மன்னன் ஆட்சியில்(கி.பி.1292 - 1345) வெளியிட்ட நாணயங்களில் வரும் 'ப' என்ற எழுத்தையும் குறிப்பிடலாம். இங்கே 'ஆ' என்ற எழுத்திற்கும், 'கந்' என்ற பெயருக்கு கீழே நடுவில் உள்ளபகுதி இறைவனின் இடுப்புடன் இணைந்த காற்பகுதியாகத் தோன்றுகின்றது. இதை 'ஆ' என்ற எழுத்துப் பொறித்த நாணயங்களில் தெளிவாகக் காணமுடிகின்றது.

இந்த இடத்தில் யாழ்ப்பாண அரசு காலத்தில் நல்லூரில் அமைக்கப்பட்ட கந்தன் ஆலயம் தொடர்பாக கைலாய மாலையில் வரும் குறிப்பை மேற்கூறப்பட்ட நாணயங்களுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் போது இந்நாணயங்களை வெளியிட்ட மன்னன் யார் என்பது ஓரளவுக்குத் தெரியவரலாம். கைலாயமாலையில் வரும் தனிச் செய்யுள் நல்லூரில் கந்தன் ஆலயத்தையும், யாழ்ப்பாண நகரத்தையும் அமைத்தவன் புவனேகபாகு எனக்கூறுகின்றது. இச்செய்யுள் குறிக்கும் காலத்தைச் சக வருடம் எண்ணூற்றெழுபதாக எடுத்துக் கொண்டு பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் மந்திரி புவனேகபாகு காலத்தில் அரசும், கந்தன் ஆலயமும் தோன்றியதாக முதலியார் இராசநாயகம் அவர்கள் கூறுகின்றார். ஆனால், இக்கூற்றை ஏற்கக்கூடிய அளவுக்குச் சான்றுகள் கிடைக்கவில்லை. இலங்கையில் புவனேகபாகு என்ற பெயரில் 7 மன்னர்கள் ஆட்சி புரிந்துள்ளனர். இவர்களுள் 6ம் பராக்கிரமபாகு தென்னிலங்கையில் ஆட்சி செய்த காலத்தில் அவன் வளர்ப்பு மகனாகிய சபுமால்குமர என்ற மலையாள இளவரசன் செண்பகப்பெருமாள் 1540ல் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றி 17 ஆண்டுகள் புவனேகபாகு என்ற பெயருடன் ஆட்சிபுரிந்துள்ளான். இதை யாழ்ப்பாணத்தின் பிரதான வீதியில் கிடைத்த இவன் காலத் தமிழ்க் கல்வெட்டும் உறுதிப்படுத்துகின்றது. இக்கல்வெட்டு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் இருந்த தேநீர் சாலையில் வாசல் படியாகப் பயன்படுத்தப்பட்ட கற்தூணில் எழுதப்பட்டிருந்தது. 25 வரிகளில் பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டில் 15 வரிகளே ஓரளவு தெளிவாகக்காணப்பட்டன. 1968ம் ஆண்டு இலங்கைத் தொல்லியற் திணைக்களம் இக்கல்வெட்டைப் படியெடுத்திருந்தாலும் 1969ம் ஆண்டு பேராசிரியர் இந்திரபாலா அவர்கள் மீளப்படியெடுத்து அவரால் வாசிக்கப்பட்டதன் பின்னரே இக்கல்வெட்டின் வரலாற்று முக்கியத்துவம் வெளிச்சத்திற்கு வந்தது. அக்கல்வெட்டிலிருந்து யாழ்ப்பாண வைபமாலை, கைலாயமாலை முதலான நூல்கள் குறிப்பிடும் புவநேகபாகு கி.பி. 15ம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் ஆட்சி புரிந்த செண்பகப்பெருமாள் என்பதும் அவனே கோட்டை மன்னன் ஆறாம் பராக்கிரமபாகுவின் பெயரில் இக்கல்வெட்டை வெளியிட்டான் என்பதும் தெரியவந்துள்ளது. மேலும் இக்கல்வெட்டு ஒரு கட்டடத்தின் பாகமாக இருப்பதால் அது புவநேகபாகு கட்டிய நல்லூர் கந்தன் ஆலயமாக இருந்திருக்கலாம் எனப் பேராசிரியர் இந்திரபாலா கூறுகின்றார்.

இந்நாணயங்கள் சேதுமொழி பொறித்த நாணயமரபில் இருந்து வேறுபட்டு இருப்பதைக் கொண்டு யாழ்ப்பாண அரசை ஆட்சிபுரிந்த செண்பகப்பெருமாளே இந்நாணயங்களை வெளியிட்டுள்ளான் என்ற முடிவுக்கு வரமுடிகின்றது. இம்முடிவைப் பொருத்தமானதெனக் கூறியுள்ள பேராசிரியர் பத்மநாதன் இந்நாணயங்களின் வரலாற்று முக்கியத்துவம் பற்றிய தனது கருத்தையும் அண்மைக்கால ஆய்வொன்றில் பின்வருமாறு கூறுகிறார்:

'கந்' என்ற எழுத்துக்கள் கந்தசாமியினது பெயரையும், 'ஆ' என்ற எழுத்து ஆறுமுகசுவாமியினது பெயரையுங் குறிப்பனவாதல் வேண்டும். அவ்வாறாகில் இந்த நாணயங்கள் கந்தக் கடவுளின் பெயரால் வழங்கப்பட்டவை. அவற்றைச் செண்பகப்பெருமாள் வெளியிட்டான் என்று கொள்ள முடிகின்றது. ஆதியான கந்தசாமி கோயிலை அவனே அமைத்தான் என்பது பல நூற்றாண்டுகாலமாக நிலவி வரும் ஐதீகம் என்பது குறிப்பிடற்குரியது. இந்த அடிப்படையில் நோக்குமிடத்து யாழ்ப்பாண தேசத்தவரது சமய வழிபாட்டு மரபுகளுக்கும் மொழி வழக்கிற்கும் ஏற்றவகையிலேயே தனது பதவிக்கும் அதிகாரத்திற்கும் உரிய சின்னங்களை அமைத்துக்கொண்டான் என்பது தெளிவாகிறது. அது பிரமிக்கத்தக்கவொன்று. அது குடியாட்சி அரசியல் நெறி புரிந்துணர்வின் வழி ஏற்பட்ட நல்லெண்ணத்தின் அடையாளம். நல்லெண்ணத்திற்கு நல்ல தொரு உதாரணம்.

இந்நாணயங்களின் வரலாற்று முக்கியத்துவம் தொடர்பாக ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கட்டுரையைப் படித்த தென்னிலங்கை நண்பர் ஒருவர் தன்னிடம் உள்ள இவ்வகை நாணயங்களின் புகைப்படங்களை அண்மையில் எனக்கு அனுப்பி வைத்தார். அவரிடம் இந்நாணயங்கள் எங்கிருந்து கிடைத்ததென வினாவிய போது அவர் யாழ்ப்பாணத்தில் உள்ள நகைக் கடையொன்றில் பணம் கொடுத்து வாங்கியதாகக் கூறினார். ஆனால் விலை மதிக்க முடியாத இந்நாணயங்களை தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் அருங்காட்சியகத்தை தவிர இலங்கையின் எந்த பல்கலைக்கழகத்திலோ, அருங்காட்சியகத்திலோ காணமுடியவில்லை.

மன்னன் பெயருடன் கண்டுபிடிக்கப்பட்ட யாழ்ப்பாண இராசதானிகால முதல் நாணயம்:

இலங்கைத் தமிழர் வரலாற்றில் நல்லூ

தொடர்தல் 73ம் பக்கம்

அநுராதபுர...

72ம் பக்கத் தொடர்ச்சி...

ரைத் தலைநகராகக் கொண்டு ஏறத்தாழ 350 ஆண்டுகள் ஆட்சி செய்த பெருமை யாழ்ப்பாண அரசிற்கு உண்டு. ஆயினும் அதன் சமகாலத்தில் தோன்றியிருக்கக் கூடிய வரலாற்று இலக்கியங்கள் எவையும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இதனால் இவ்வரசில் ஆட்சிபுரிந்த மன்னர்களின் பெயர்கள், அவர்கள் ஆட்சி செய்த காலங்கள், அவர்களின் வரலாற்றுப் பணிகள் முதலானவற்றை கால ஒழுங்கில் எடுத்துக் கூறமுடியவில்லை. இதுவரை இவ்வரசு காலத்தில் வெளியிடப்பட்ட இரண்டு கல்வெட்டுக்கள் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் இவ்வரசால் வெளியிடப்பட்ட ஆயிரக்கணக்கான நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை இலங்கைத் தமிழரின் அரச உருவாக்கம், தமிழ் நாணயங்களின் பயன்பாடு தொடர்பான பாரம்பரிய கருத்தில் இருந்து விலகி நம்பகத்தன்மையுடைய பிற தொல்லியல், நாணயச் சான்றுகளுடன் ஒப்பிட்டு ஆராயப்பட்டால் யாழ்ப்பாண அரசு பற்றிப் பல வரலாற்று உண்மைகள் வெளிவர இடமுண்டு. இதற்குப் பின்வரும் நாணயம் ஒரு உதாரணமாகும்.

இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் நாணயவியல் அறிஞர் திரு. கொட்றிங்ரன் யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட அரிய நாணயங்கள் பற்றி தனது நூலில் குறிப்பிட்டுள்ளார் (Codrington 1924:90). அந்நாணயங்களின் முன்பக்கத்தில் மூன்று கோடுகள் கொண்ட பீடத்தின் மேல் இடது அல்லது வலப்பக்கம் பார்த்த நிலையில் நந்தியும், நந்திக்கு இரு மருங்கிலும் குத்துவிளக்கும், நந்தியின் தலைப்பகுதிக்கு மேல் பிறைச் சந்திரனும், நாணய விளிம்பை ஒட்டி வட்டமாகச் சிறு புள்ளிகளும் காணப்படுகின்றன. நாணயத்தின் பின்பக்கத்தில் நாணய விளிம்பை ஒட்டி வட்டமாகச் சிறு புள்ளிகளும், இரு பக்கங்களில் குத்துவிளக்கும் அவற்றிற்கு இடையே தேவநாகரி எழுத்தில் நாணயத்தை வெளியிட்ட மன்னன் பெயரும் காணப்படுகின்றன. பிற்காலத்தில் இந்நாணயத்தில் உள்ள பெயரை ஆராய்ந்த பிரிசெப் அதை 'ஸ்ரீவி..கச' என வாசித்தார் (Prensep 1958:424). ஆயினும் இவ்வாசிப்பை இலங்கை நாணயவியல் பற்றிய ஆய்வுகளில் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. 1970 களின் பின்னர் இவ்வகை நாணயங்கள் சிலவற்றை பூநகரி உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு. கிருஸ்ணமூர்த்தி, நிலஅளவையாளர் திரு. சேயோன் போன்ற ஆய்வாளரும் வடஇலங்கையில் கண்டுபிடித்துள்ளனர்.

இவர்களைத்தொடர்ந்து இவ்வகை நாணயங்கள் சிலவற்றை நாம் வடஇலங்கையில் பூநகரி, மாதோட்டம், கந்தரோடை முதலான இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் போது கண்டுபிடிக்க முடிந்தது. இந்நாணயங்களின் முன்பக்கத்தில் உள்ள நந்தியின் வடிவமைப்பு 'சேது' மொழி பொறித்த யாழ்ப்பாண அரசு கால நாணயங்களை ஒத்திருப்பதும், தமிழகத்தில் கண்டுபிடிக்கப்படாத இந்நாணயங்கள் அதிக எண்ணிக்கையில் வடஇலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டமையும் இந்நாணயங்கள் வடஇலங்கையில் ஆட்சிபுரிந்த தமிழ் அரசால் வெளியிடப்பட்டிருக்கவேண்டும் எனத் தோன்றியது. இதனால் இந்நாணயத்தில் உள்ள மன்னன் பெயரை வாசிப்பதற்கு இடைக்காலத் தேவநாகரி வரிவடிவத்தில் புலமையுள்ள தமிழகக் கல்வெட்டு அறிஞர்களான ஐராவதம் மகாதேவன், பேராசிரியர் இராசு, கலாநிதி நாகசுவாமி போன்றவர்களின் உதவியை நாடினேன். அவர்கள் இரு நாணயங்களில் உள்ள பெயர்களை 'ஸ்ரீசாகவன்' என வாசித்துள்ளனர். இவ்வாசிப்பை தென்னிலங்கைகை அறிஞர்கள் சிலர் பொருத்தமானவை என ஏற்றுக்கொண்டாலும் வேறு சில அறிஞர்கள் புதிய வாசிப்பைக்கொடுக்க முற்பட்டுள்ளனர். இந்நிலையில் அண்மையில் (2018)கட்டுக்கரை அகழ்வாய்விலும் இவ்வகை நாணயங்கள் மேலும் கண்டுபிடிக்கப்பட்டதால் இந்நாணயங்களின் வாசிப்புக்களை மீளாய்வு செய்யத்தூண்டின. இதற்காக இந்நாணயங்களின் புகைப்படங்களை தமிழகத் தொல்லியற் திணைக்களத்தின் மூத்த கல்வெட்டு அறிஞரான கலாநிதி இராஜகோபால் அவர்களுக்கு அனுப்பியிருந்தேன். அவர் மைசூர் சாசனவியலாளர் திரு. முனிரத்தினம் அவர்களுடன் இணைந்து நாணயங்களில் உள்ள பெயர்களை நந்தி நாகரி வரிவடிவத்தில் எழுதப்பட்ட 'ஸ்ரீபுவனேகபாகு' என வாசித்துள்ளனர். இந்த வாசிப்பை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக கல்வெட்டுப் பேராசிரியரான இராஜவேலு அவர்களும் பொருத்தமானதென உறுதிப்படுத்தி உள்ளார்.

இந்நாணயங்களின் வடிவமைப்பு, நாண



> "வட இலங்கையில் கிடைத்துள்ள பல்வேறு காலகட்டங்களுக்கு உரிய தமிழ் நாணயங்களை ஆராய்ந்து பார்த்தால் அவை தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டதற்கோ, தமிழக அரச வம்சங்களால் வெளியிடப்பட்டதற்கோ ஆதாரங்கள் காணப்படவில்லை. தமிழக நாணயவியல் அறிஞர்கள் அவற்றை இலங்கைக்குரிய தனித்துவமான நாணயங்களாகவே பார்க்கின்றனர்."

யத்தின் முன்பக்கத்தில் உள்ள நந்தியின் தோற்ற அமைப்பு, யாழ்ப்பாண அரசு கால வரலாற்றுப் பின்னணி என்பவற்றை வைத்துப் பார்க்கும் போது இந்நாணயங்களில் உள்ள பெயரை 'ஸ்ரீபுவனேகபாகு' என வாசித்துள்ளமை பொருத்தமாகவே தோன்றுகின்றது. கி.பி.15ம் நூற்றாண்டில் கோட்டை மன்னன் ஆறாம் பராக்கிரமபாகு சார்பாக அவனின் வளர்ப்பு மகனும், மலையாள இளவரசனுமான செண்பகப்பெருமாள் யாழ்ப்பாண அரசின் மீது படையெடுத்தது பற்றிக் கோகிலசந்தேஸய என்ற சிங்கள இலக்கியம் கூறுகின்றது. இவன் இலங்கை வரலாற்றில் செண்பகப்பெருமாள் என்ற பெயருடன் சபுமல்குமாரயா, புவனேகபாகு என்ற பெயர்களாலும் அழைக்கப்பட்டான். யாழ்ப்பாண அரசு தொடர்பாக பிற்காலத்தில் எழுந்த யாழ்ப்பாண வைபமாலையும், கயிலாயமாலையும் புவனேகபாகு என்னும் அமைச்சனே நல்லூர் நகரத்தையும், நல்லூர்கந்தசாமி கோவிலையும் கட்டுவித்தான் எனக் கூறுகின்றன. இதை நல்லூர் ஆலயத்தில் இன்றுவரை ஓதப்பட்டு வரும் கட்டியம் மேலும் உறுதிசெய்கின்றது. இவனே 1450 தொடக்கம் 1467 வரை யாழ்ப்பாண அரசில் புவநேகபாகு என்ற பெயரில் ஆட்சி செய்த செண்பகப்பெருமாள் என்பதை பேராசிரியர் இந்திரபாலா அவர்கள் யாழ்ப்பாண பிரதான வீதியில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டின் மூலம் உறுதிசெய்துள்ளார். இதைப் புவனேகபாகு என்ற பெயரில் வெளியிட்ட நாணயங்கள் மேலும் உறுதிசெய்வதாகக் கூறலாம்.

செண்பகப்பெருமாள் கோட்டை மன்னன் சார்பாக யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றி 17 ஆண்டுகள் புவநேகபாகு என்ற பெயருடன் ஆட்சி செய்த போதும் அவன் தனது ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த தமிழ் மக்களின் மத நம்பிக்கைகளையும், பண்பாட்டையும் பெரிதும் அனுசரித்து ஆட்சி செய்த மன்னனாகவே காணப்படுகின்றான். இதற்கு இவன் வெளியிட்ட தமிழ்க் கல்வெட்டும், கந்தன், ஆறுமுகன் பெயரில் வெளியிட்ட நாணயங்களும் உறுதிசெய்கின்றன. மேலும் யாழ்ப்பாண இராசதானியைத் தோற்றுவித்த பாண்டியரின் படைத்தளபதிகளான ஆரியச்சக்கரவர்த்திகளின் அரச இலட்சனையாக நாணயங்களில் பயன்படுத்திய நந்தியை புவனேகபாகு தனது நாணயங்களிலும் பயன்படுத்தியதன் மூலம் இது மேலும் உறுதியாகின்றது.

ஆயினும் சேது மொழி பொறித்த நாணயங்களுக்கும் புவனேகபாகு வெளியிட்ட நாணயங்களுக்கும் இடையே சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. அந்த வேறுபாடுகள் இலங்கைத் தமிழர்களின் பாரம்பரிய நாணய மரபை நினைவுபடுத்துவதாகவே உள்ளன. ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்கள் அறிமுகப்படுத்திய நாணயங்களில் நந்திக்கு கீழே 'சேது' என்ற மங்கல மொழி காணப்படுகின்றது. இம்மொழி யாழ்ப்பாண இராசதானியைத் தோற்றுவித்த ஆரியச்சக்கரவர்த்திகளுக்கு தமிழ் நாடு இராமேஸ்வரம் சேது தலத்துடன் கொண்டிருந்த தொடர்பைக் காட்டுகின்றது. ஆனால் புவனேகபாகபாகு வெளியிட்ட நாணயங்களில் சேது மொழிக்குப் பதிலாக நந்திக்கு கீழே மங்கலத்தைக் குறிக்கும் மூன்று கோடுகளால் வடிவமைக்கப்பட்ட பீடம் காணப்படுகின்றது. இப்பீடம் இலங்கைக்குரிய தனித்துவமான அம்சமாகும். தென்னாசியாவில் பெருங்கற்காலப் பண்பாடு நிலவிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டங்கள் சிலவற்றில் சுவஸ்திகா ஒரு முக்கிய புனிதச் சின்னமாகக் காணப்படுகின்றது. ஆனால் இலங்கைப் பெருங்கற்கால மட்பாண்டங்களில் மட்டும் இச்சுவஸ்திகா பீடத்துடன் காணப்படுகின்றது. இம்மரபு பிற்காலத்தில் தமிழ், சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களிலும் காணப்படுகின்றன. இதற்கு கஜலட்சுமி உருவம் பொறித்த நாணயம் சிறந்த சான்றாகும். ஆயினும் இம்மரபு பிற்கால சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் மறைந்த போது அம்மரபு தமிழ் நாணயங்களில் தொடர்ந்தும் பின்பற்றப்பட்டதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. இதற்கு யாழ்ப்பாண இராசதானிக்கு முன்னர் வடஇலங்கையில் இருந்த அரசால் காலத்திற்கு காலம் வெளியிடப்பட்ட நாணயங்களை உதாரணமாகக் குறிப்பிடலாம். அம்மரபு யாழ்ப்பாண இராசதானி காலத்திலும் தொடர்ந்ததற்கு புவனேகபாகு வெளியிட்ட நாணயங்களை ஆதாரமாகக் கொள்ளலாம்.

சேது மொழி பொறித்த எல்லா நாணயங்களிலும் படுத்திருக்கும் நந்தி வலப்பக்கம் பார்த்த நிலையிலேயே காணப்படுகின்றது. ஆனால் புவனேகபாகு வெளியிட்ட நாணயங்களில் உள்ள நந்தி வலப்பக்கமாக மட்டுமன்றி இடப்பக்கமாகவும் பார்த்தநிலையில் காணப்படுகின்றது. இம்மரபு யாழ்ப்பாண இராசதானிக்கு முன்னர் வடஇலங்கையில் இருந்த அரசுகளால் வெளியிடப்பட்ட நாணயங்களிலும் காணப்படுகின்றது. இதனால் இம்மரபை புவனேகபாகு தான்வெளியிட்ட நாணயங்களிலும் பின்பற்றியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. சேது மொழி பொறித்த நாணயங்கள் தமிழ் மொழியிலேயே வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் புவனேகபாகு நாணயம் வடமொழியில் வெளியிடப்பட்டுள்ளது. சமகாலத்தில் தென்னாசியாவில் கல்வெட்டுக்கள் சுதேச மொழியில் வெளியிட்டாலும் நாணயங்களை வடமொழியில் வெளியிடும் மரபே பெரும்பாலும் காணப்பட்டது. இதற்கு பல்லாயிரக்கணக்கான கல்வெட்டுக்களைத் தமிழில் வெளியிட்ட சோழர் நாணயங்களை வடமொழியில் வெளியிட்டதை உதாரணமாகக் காட்டலாம். இவர்களைப் பின்பற்றியே சிங்கள மன்னர்களும் கல்வெட்டுக்களைச் சிங்களமொழியில் வெளியிட்டபோது நாணயங்களை வடமொழியில் வெளியிட்டுள்ளனர். இதற்கு நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தில் வடமொழி பொது மொழியாக இருந்ததே காரணம் என அறிஞர்கள் கூறுகின்றனர். இந்த நோக்கத்திலேயே புவனேகபாகுவும் தனது நாணயங்களை வடமொழியில் வெளியிட்டான் எனக் கருத இடமுண்டு.

பண்டுதொட்டு இலங்கையில் புழக்கத்தில் இருந்த தமிழ் நாணயங்கள் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் பலரும் 'சேது' மொழி பொறித்த நாணயங்களைத் தவிர ஏனைய தமிழ் நாணயங்கள் தமிழகத்துடனான அரசியல், வாணிபத் தொடர்பால் இலங்கைக்கு வந்ததாகவே பார்த்துள்ளனர். ஆனால் இலங்கையில் குறிப்பாக வடஇலங்கையில் கிடைத்துள்ள பல்வேறு காலகட்டங்களுக்கு உரிய தமிழ் நாணயங்களை ஆராய்ந்து பார்த்தால் அவை தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டதற்கோ, தமிழக அரச வம்சங்களால் வெளியிடப்பட்டதற்கோ ஆதாரங்கள் காணப்படவில்லை. தமிழக நாணயவியல் அறிஞர்கள் அவற்றை இலங்கைக்குரிய தனித்துவமான நாணயங்களாகவே பார்க்கின்றனர். அந்நாணயங்களை ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் இலங்கையில் தோன்றி வளர்ந்த தமிழ் அரச மரபிற்கு புது வெளிச்சம் பாய்ச்சலாம்.

1972ல் யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம் பற்றி அறிவியல் பூர்வமாக ஆராய்ந்த பேராசிரியர் இந்திரபாலா அவர்கள் தனது நூலின் முன்னுரையில் யாழ்ப்பாண இராசதானியில் ஆட்சி புரிந்த ஒரு மன்னன் பெயர் கூட கல்வெட்டில் பேணப்படவில்லை என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார். இந்நிலையில் புவனேகபாகுவின் பெயர் கொண்ட நாணயங்கள் முதன்முறையாகக் கிடைத்திருப்பது யாழ்ப்பாண இராசதானி பற்றிய எதிர்கால ஆய்வுகளுக்கு நம்பிக்கையூட்டுவதாக உள்ளது

pushparatnam@thaiveedu.com

இலெமூரியா கண்டம் அல்லது குமரிக் கண்டம்

- அ. கணபதிப்பிள்ளை -

பகுதி: 2

இலங்கைக்குக் மேற்காகத் தொடங்கி ஆபிரிக்காவின் கொம்பென வர்ணிக்கப் படும் சோமாலிய முனையிலிருந்து மட கஸ்கார் வரையில் காணப்படும் பிரதாக தீவுகள் இந்து சமுத்திரத்தின் பிரதான கண்டத்திட்டாகக் காணப்படுகிறது.

இக்கண்டத்திட்டானது பிரித்தானியாவின் மேற்கில் வடகடலில் காணப்படும் டொக் கர் கண்டத்திட்டுக்கு (Dogger Bank) ஒப் பானதாகவும் பனியுகத்தில் நிலப்பகுதி யாயிருந்த அறலான்ரிஸ் நாகரிகத்தின் தொட்டிலாகவும் ஒப்பிட்டு நோக்கத்தக்க தாக இருந்தது. 2017ல் இப்பகுதியில் 9,000 வருடங்களுக்கு முன்னைய புதை பொருட்களை விஞ்ஞானிகள் கண்டெடுத் திருக்கிறார்கள். 12,000 ஆண்டுகளுக்கு முந்திய பிளைஸ்ரோசின் பிரதான பனிக் காலத்தில் பிரித்தானியா தீவாக இல்லா மல் ஐரேப்பாவுடன் இணைந்து தொடர் நிலப்பரப்பாக இருந்ததாகச் சொல்லப் படுகிறது.

இலங்கைக்குக் கிழக்காக அவுஸ்திரேலி யாவுக்கு வடக்கிலும் கிழக்கிலும் தென்ன மெரிக்கா வரையிலான தீவுகள் பசுபிக் சமுத்திரக் கண்டத்திட்டாக அவதானிக் கத்தக்கதாக இருக்கிறது.

கிழக்கு இலெமுறியாவானது இந்தோனீ சியவின் தெற்காக இருக்கும் கிறிஸ்மஸ் தீவிலிருந்து தென்னமெரிக்காவின் ஈஸ்டர் தீவு வரையிலும் பரவியிருந்தது. இந்த மீயூ என்ற கண்டமானது நாகரிகம் உடைய பெருங்கண்டமாகவிருந்து கடலுள் மூழ் கியிருக்க வேண்டும் என்ற கருத்தானது, இலெமுறியாவின் பரம்பலானது ஆபி ரிப்காவிலிருந்து தென்னமெரிக்கா வரை யில் நீண்டிருக்கக்கூடிய சாதகநிலைமை யைக் காட்டிநிற்கிறது.

பழைய காலத்தில் இலெமூரியா பிதிர்கள் மறுபிறவியெடுத்து வந்து ஆக்கிரமித்த பிரதேசமாக வர்ணனை செய்யப்பட்டிருந் ததால் இன்றைய மனிதரைவிடச் சக்தி வாய்ந்த மனிதரின் வாழிடமாக அது இருந் ததாகச் சொல்லப்பட்டது. உண்மையில் இவர்கள் வேற்றுக்கிரகவாசிகளாகப் பய ணஞ்செய்து வர்தவர்களா அல்லது பூமி யின் சூழலுக்கு இனமாகிப் பிறந்தவர்களா என்பதனை அமானுஸ்ய சக்தியில் நம் பிக்கை கொண்டவர்களே விடையளித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் இவை யாவும் விஞ்ஞானத்துக்கு ஒவ்வாதவை களாகத் தூக்கி எறிந்துவிட முடிகிறது.

குமரிக்கண்டம் எது:

இலக்கியங்கள் அச்சூழலில் வாழ்ந்த மக் களின் வாழ்வியலைப் பிரதிபலிப்பதாக இருந்த பொழுதிலும் அவர்களது முன் னோரது பாரம்பரியத்தினையும் ஆங் காங்கே தெளிவுபடுத்தித் தமது இனத்தின் இருப்பையும் பெருமையையும் பதிவு செய்வதில் முக்கியபங்கினை ஆற்றிவந் திருப்பதனைக் காணமுடிகிறது.

தமிழிலக்கியங்களில் காணப்பட்ட செய் திகள் பல நமது முன்னேரது பங்களிப் பினை வெளியிட்டு இனத்தைப் பெரு மைப் படுத்தியிருந்தமையைக் காணமுடி கிறது. சில இலக்கியச்செய்திகள் விதந் துரைப்பன போலக் காணப்பட்டாலும் அவற்றில் எங்காவது அறிவுசார் நிகழ்வு கள் காணப்படுகின்றனவா எனத் தெரிந்து கொள்வதில் அதேயினத்தைச் சார்ந்த இலக்கிய மாணவர்களால்தான் சாத்திய மாகும் என்ற உண்மையினைக் கீழடி ஆய்வுகள் துலாம்பரமாகக் காட்டி நிற் கின்றன.

சிலப்பதிகாரத்தில் காணப்பட்ட சில சொற் களைக் கொண்டு அன்றைய பாண்டிய நாட்டுக்குத் தெற்கே கடல்கோளுக்குப் பலியாகிப்போன நாடென்றிருந்தது என்ற வரலாற்றுச் செய்தியும் வடக்கே கங்கை யும் இமயமும் தெற்கே கடலையும் எல் லைகளாகக் கொண்ட பரந்த பிரதேசத் தில் பாண்டிய மன்னர்களது ஆட்சியிருந் தது என்ற அன்றைய செய்தியும் பதிவு செய்யப்பட்டிருப்பதனைக் காணமுடிகி றது.

பஃறுளி ஆறு, பன்மலை அடுக்கம் (மலைத் தொடர்) (Ridges), குமரிக்கோடு, கொடுங்கடல்கொள்ள. என்ற சொற்கள் காலம்கடந்து வழிவந்த வரலாற்றினைக் குறிப்பனவாகக் கொள்ளமுடிகிறது. (பஃறு ளியாற்றுடன் பன்மலை அடுக்கத் துக் குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு தென்திசையாண்ட தென்னவன் வாழி - சிலப்பதிகாரம்: 11,17.22).

தென்னிந்தியாவின் தொடர்ச்சியாக இலங்

தொடர்தல் 75ம் பக்கம்

இலெமூறியா...

74ம் பக்கத் தொடர்ச்சி...

கையினையும் உள்ளடக்கித் தெற்கில் மடகஸ்கார் முதல் அவுஸ்திரேலியா வரையிலாக பரந்திருந்த நிலப்பகுதிதான் குமரிக்கண்டமாக வரையறை செய்யப்பட்டிருந்தது. 1903ல் பரிதிமால்கலைஞர் (சூரியநாராயண சாஸ்திரிகள்) தேவநேயப்பாவாணர் போன்றோர் குமரிக்கண்டமிருந்ததனைத் தெளிவுபடுத்தியிருந்தனர். நாவலந்தீவு, தென்புலம் தென்நாடு (தென்நாடுடைய சிவனே போற்றி)போன்றன தென்னிந்தியாவைக் குறிப்பிட்டு நிற்பதனை விடவும் தென்பகுதியிலிருந்து கடலால் உள்வாங்கப்பட்ட பெரிய கண்டத்தினைக் குறிப்பிடுவதாகவே எண்ணமுடிகிறது.

குமரிக்கண்டம் என்பது தமிழர்களின் உணர்வுபூர்வமாக எழுந்த கற்பனை நிலம் என எளிதில் தூக்கி எறிந்து விடுகிறார்கள். ஆதாரங்கள் உறுதிப்படுத்தாத வரையில் எல்லாமே கற்பனைபோல்தான் தெரியும். சிலப்பதிகாரத்திலிருந்து குமரிக்கண்டம் ஒன்றிருந்ததாக ஊகித்தவர் இலங்கையைச்சேர்ந்த விஸ்வானந்த கனகசபைப் பிள்ளை (1855-1906) எனக் குறிப்பிடப்பட்டிருந்தமை நோக்கற்பாலது. அதுபோலவே கந்தப்புராணத்திலிருந்து வி.ஆர். இராமச்சந்திர தீட்சிகரும் (1896-1953) குமரிக்கண்ட ஆதாரத்தினைக் கொடுத்திருந்தார்.

இத்தகைய இலக்கிய ஆதாரங்களினை ஆதாரமாகக் கொண்டு வேறும் பொருத்தமான ஆதாரங்களைக் கண்டுகொள்ள முடியுமா என்றறிவதற்கு பொருத்தமான ஆய்வாளர்களும் ஆய்வுக்கான பெரு நிதியும் தேவையாக இருக்கிறது என்பது இங்கு நினைவுகூரத்தக்கது. இந்த ஆய்வுகளில் புவியலாளர்கள், சமுத்திரவியலாளர்கள், புவிச்சரிதவியலாளர்கள், கால நிலை மற்றும் வானிலையாராய்சியாளர்கள், வரலாற்று மற்றும் தொல்லியல் துறையினர், பௌதிக இரசாயன மரபியல் துறைகளை உள்ளடக்கிய பல்துறை விற்பன்னர்களின் பங்களிப்பானது அவசியமாகிறது.

இன்றைய இலங்கையின் மத்திய மலை நாட்டின் மலைகளின் தொடர்ச்சியாக பன்மலை அடுக்கு காணப்பட்டதாகக் கொள்ளமுடிகிறது. அவற்றிலிருந்து ஆறுகள் தோன்றிப் பலதிசைகளிலும் ஓடிக் கடலுள் கலந்திருக்கவேண்டும். அவற்றுள் பஃறுளி என்ற ஆறு வடக்குநோக்கி ஓடியிருக்கக்கூடும். அதன் கழிமுகத்தில் ஒரு கிளையானது மன்னார்ப் பிரதேசத்தினூடாக ஓடிக் கடலுள் கலந்தமைக்கான வாய்ப்புக் காணப்படுகிறது.

இருபதாம் நூற்றாண்டின் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் புவிச்சரிதவியல், காலநிலையியல், வளிமண்டலவியல், புவிநிலவுருவவியல், மண்ணியல் (பாறையியல்) ஆகிய துறைகளில் முதல்தலை முறைப் பேராசிரியர்களாக இருந்த தமிழர்களில் பேராசிரியர் க. குலரத்தினம், பேராசிரியர் ஜோர்ஜ் தம்பையாப்பிள்ளை, பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம், பேராசிரியர் கந்தையா போன்றோரது பங்களிப்பு கவனிக்கற்பாலது. இவர்கள் மேலைத்தேயப் புவியியலாளர்களின் கல்விச் சிந்தனைகளினால் ஈர்கப்பட்டவர்களாக இருந்த பொழுதிலும், இலங்கைப் புவியலுக்கான ஆய்வுகளில் அவர்களை எவராலும் புறந்தள்ளிவிடமுடியாது.

அடுத்த தலைமுறைத் தமிழர்களான துறைசார் பேராசிரியர்களும் ஆய்வாளர்களும் பலதுறைகளிலும் இலங்கை தொடர்பான ஆய்வுகளில் முக்கியத்துவம் பெற்றவர்களாக இருந்துவந்தமையைக் காண முடிகிறது. குறிப்பாக வரலாற்றுத்துறை, தொல்லியல்துறை போன்றவற்றினூடாக இலங்கையில் தமிழரது இருப்பும் தொன்மையும் பற்றிய புதுப்புதுத் தகவல்கள் வெளிவந்து கொண்டிருப்பதனைக் காண முடிகிறது. அதில் பேராசிரியர் இந்திர பாலா, பேராசிரியர் பத்மநாதன் வழிவந்த பலரும் தமிழர் நாகரிகத்தினைக் காலங்களூடாக எடுத்து வந்துகொண்டிருக்கிறார்கள்.

1974ல் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழப்பாணவளாகம் தொடக்கப்பட்டகாலமுதற் கொண்டும் பின்னர் தனித்துவம்மிக்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டதிலிருந்தும் வரலாற்றுத்துறையும் தொல்லியற்துறையும் தமிழர்களின் பூர்வீகத்தையும் கலாச்சாரத் தொன்மையினையும் வெளிக்கொணர்வதில் பிரதான பங்களிப்பினைச் செய்துவருகின்றன.

பேராசிரியர் பரணவிதான போன்ற பௌத்த சிங்கள ஆர்வங்கொண்ட சிங்கள ஆய்வாளர்களை அடியொற்றிய தொல்லியலாய்வாளர்கள் மகாவம்சம் போன்ற இலக்கியங்களுக்கு ஆதாரந் தேடுபவர்களாகவும் இனியெழுதப்போகும் மகாவம்சத்தொடருக்கு ஆதாரமளிக்கும் பௌத்த சின்னங்களுக்காகவும் அரச உதவியுடன் ஆய்வுசெய்து வருகிறார்கள். இலங்கையின் தொல்லியல்துறையும் வனபரிபாலனத்துறையும் இராணுவமும் அண்மைக்காலங்களில் தமிழர்பிரதேசத்தில் பௌத்தமத ஆதாரங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். தமிழரின் புராதனத்தை மறைத்து எழுப்பப்படும் எத்தகைய கட்டுமானங்களும் தமிழர் பாரம்பரியத்தை மறைக்கும் திரையாகவே கொள்ளமுடிகிறது.

யாழ்ப்பாணத்தில் யாழ்பாணப் பல்கலைக்கழக வரலாற்று மற்றும் தொல்பொருட்துறையினர் பெரும்பாலும் தமது பொருட்செலவிலேயே ஆய்வுகளை மேற்கொள்வதனைக் காணமுடிந்தது. குறிப்பாக கந்தரோடை ஆய்வுகளில் பேராசிரியர் இந்திரபாலவின் பங்களிப்பும் மீளாய்வும் முக்கியம் வாய்ந்தது. வழுக்கையாற்றுக் கரையோர ஆய்வில் பேராசிரயர் சிற்றம்பலமும் ஆனைக்கோட்டை புதைமேட்டாய்வில் விரிவுரையாளர் இரகுபதி பேராசிரியர் சத்தியசீலன் அன்று மாணவர்களாகவிருந்த பேராசிரியர்கள் புஸ்பரத்தினம், கிருஸ்ணராசா போன்றோர் முக்கியத்துவம் பெற்றிருந்தனர். இவ்வாய்வுகளில் புவியியற் துறையினரும் குறிப்பிடத்தக்க வகையில் பங்காற்றியிருந்தனர்.

யாழ்பாணப் பல்கலைக்கழகத்தில் தொல்லியற்துறை தனித்துவமாக இயங்கத் தொடங்கவும் குடாநாட்டுக்கு வெளியில் இலங்கையின் பலபாகங்களிலும் தமிழர் கலாசாரத்தை ஒட்டிய தொல்லியல் வெளிக்கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் தலைமை தாங்கியவர்களில் பேராசிரியர் புஸ்பரத்தினம், பேராசிரியர் கிருஸ்ணராசா போன்றோர் சிறப்பிடம் பெறுகிறார்கள். குமரிக்கண்டத்தில் எஞ்சியிருக்கும் துண்டான இலங்கையில் ஆதாரந்தேடுவதில் தமிழ்த் தொல்லியலாளர்களின் அர்ப்பணிப்பும் அவசியமாகிறது. அதற்குச் சமகால ஆய்வுக்களம் இடமளிப்பதாகத் தெரியவில்லை.

வளிமண்டலத்து நிகழ்வுகளுக்கும் புவிமேற்பரப்பு நிலவுருவம், பாறையியல், சமுத்திரவியல், நிலநடுக்கம் போன்ற இயற்கைச் செயற்பாடுகள் அத்தனைக்குமான தொடர்புகளிருப்பதனால், ஒன்றின் தாக்கம் மற்றொரு நிகழ்வில் செல்வாக்குச் செலுத்துவதே இயற்கை விதியாக மாறிவிட்டது. இச்செயற்பாடுகள் வழிவந்த நிகழ்வுகளைத் தொடர்ந்து பார்க்கலாம்.

(தொடரும்)

kanapathipillai.a@thaiveedu.com

புதிதாகச் சொத்து வாங்குகின்றீர்களா?

நீங்கள் புதிதாகச் சொத்து வாங்குபவர்களா? அவதானமாக இருங்கள்.

நீங்கள் புதிதாக ஒரு வீட்டையோ,

தொடர்மாடிக் குடியிருப்பையோ வாங்குவதானால்,

'Leaseback' எனப்படும்

குத்தகை உடன்படிக்கையில் கையெழுத்து இடாதீர்கள்.

கனடா வருமானவரித் திணைக்களத்தின் (Canada Revenue Agency) புதிய நடைமுறைகளுக்கு அமைய, இந்த உடன்படிக்கையில் கையெழுத்து இட்டுவிட்டால், வரிக்கழிவுகள் உங்களுக்குக் கிடைக்காது. அத்துடன், நீங்கள் கனடா வருமானவரித் திணைக்களத்துக்கு மேலதிகமாக 3,400 டொலர் செலுத்த வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு:

Peter Justin

B.Comm., CGA, CPA

Chartered Professional Accountant

11-1415 Kennedy Road,
Toronto ON M1P2L6

416-321-3100

தமிழ் நிகழ்வுகளின் சங்கமம்

inayam

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்,

inayam.net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே **inayam.net**இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது. இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே **www.inayam.net** முயற்சி செய்யுங்கள்!

முற்றிலும் இலவசம்

www.inayam.net

info@inayam.net 416.400.6.406

AJAX CREMATORIUM & VISITATION CENTRE

THE SYMBOL OF PEACE

உங்கள் உறவுகளின் இழப்பில்
உங்களுடன் இணைந்து உங்களுடன் ஒருவராக
உங்களுக்காக சேவைபுரிய

Easy Access to all Major Highways
250முதல் 500 பேர் வரை அமரக்கூடிய 5 மண்டபங்கள்
தாராளமான வாகன தரிப்பிடங்கள்
அனுபவம் மிக்க தமிழர்களின் சேவை
இறுதிச்சடங்கு முதல் அந்தியேட்டி வரையான ஒழுங்குகள்
இறுதிச் சடங்கை நேரடியாகப் பார்க்கும் வசதிகள்
இறுதிச்சடங்கு முதல் ஈமைக்கிரியை வரை ஒரே இடத்தில்
இந்து, கிறிஸ்தவ அந்திமச் சடங்குகளுக்கான ஒழுங்குகள்
Funeral Church arrangements with choir

Scarborough, Markham, Stouffville பகுதியில்
உள்ளோருக்கு வசதியாக 10-20 நிமிட தூரத்தில்
Ajax, Pickering, Whitby, Oshawa பகுதியில்
உள்ளோருக்கு வசதியாக சில நிமிட தூரத்தில்

AJAX CREMATORIUM & VISITATION CENTRE
384 Finley Avenue
Ajax, ON

BRAMPTON CREMATORIUM & VISITATION CENTRE INC
30 Bramwin Ct,
Brampton, ON L6T 5G2

Tharma Stanislaus.BCom
Funeral Counselor
416-655-6164

"Saying Goodbye is so hard
Let us make it easy for you "

இலங்கையின் தொல்லியல் வரலாறு - முக்கியமான ஆய்வு நூல்கள் சிலவும் கட்டுரைகளும்

- க. சண்முகலிங்கம் -

இலங்கையின் தொல்லியல் வரலாறு பற்றி டி.ரி. தேவேந்திர, சதாமங்கல கருணாரத்தின, ஆர்.எச்.டி சில்வா, எஸ். பரணவிதான, சி.ஈ. கொடகும்புர போன்ற அறிஞர்கள் எழுதியிருக்கிறார்கள். இவர்கள் யாவரும் தொல்லியல் திணைக்களத்தில் பணியாற்றிய அனுபவம் மிக்க அறிஞர்களாவர்.

டி.ரி. தேவேந்திர: இவர் 1959ம் ஆண்டில் 'இலங்கையின் தொல்லியல் - எழுபது ஆண்டுகள்' (Seventy years of Ceylon Archaeology) என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக்கட்டுரையை எழுதினார். இக்கட்டுரை நியூயோர்க் பல்கலைக்கழகத்தின் 'Artibus Asiae' என்னும் பருவ இதழில் வெளியாயிற்று. இப்பருவ இதழ் சுவற்சர்லாந்தின் அஸ்கொனாவில் வெளியிடப்பட்டது. தேவேந்திர அவர்கள், H.C.P. பெல் அவர்கள் 1819ம் ஆண்டில் இலங்கையின் முதலாவது தொல்லியல் ஆணையாளராக நியமனம் பெற்றதுடன் இலங்கையின் தொல்லியல் வரலாறு ஆரம்பிப்பதாகக் கூறினார். இக்கட்டுரையை அவர் 1969ம் ஆண்டில் ஒரு சிறுநூலாக 'இலங்கையின் தொல்லியலின் கதை' (The story of Ceylon Archaeology) என்ற தலைப்பில் வெளியிட்டார். இச்சிறுநூல் H.C.P.பெல் நியமனம் முதல் 1968 வரையான வளர்ச்சிகளை ஆராய்வதாக இருந்தது. இதை இலங்கை தொல்லியல் சங்கம் வெளியிட்டது. அச்சங்கத்தின் உப தலைவராக திரு.தேவேந்திர பதவி வகித்தார். ஆரம்பமுதல் அவரது அகால மரணம் வரை அச்சங்கத்தின் உப. தலைவராக இருந்து தேவேந்திர அரும்பணியாற்றினார்.

சதாமங்கல கருணாரத்தின: சதாமங்கல கருணரத்தின அவர்கள் 1956ம் ஆண்டில் சிங்கள மொழியல் இலங்கைத் தொல்லியலின் வரலாறு என்ற நூலைப் பிரசுரித்தார். இப்புத்தகத்தை எழுதிய கருணாரத்தின ஒரு சுருக்கமான கட்டுரையொன்றையும் 1937ம் ஆண்டில் எழுதினார். இக்கட்டுரை அவ்வாண்டு இலங்கைப் பொறியியலாளர் சங்கத்தின் 15வது ஆண்டு மலரில் வெளியாயிற்று.

ஆர்.எச்.டி. சில்வா: 'இலங்கையில் கல்வி' என்ற தலைப்பில் இலங்கையின் கல்வி கலாசார அமைச்சு 1969ம் ஆண்டில் மூன்று தொகுதிகள் கொண்ட நூல் ஒன்றை வெளியிட்டது. கல்வித் திணைக்களத்தின் நூறாண்டு நினைவு குறித்த இந்நூலின் 3ம் தொகுதியில் ஆர்.எச்.டி. சில்வா அவர்களின் கட்டுரையொன்று இடம் பெற்றிருந்தது. இந்த நீண்ட கட்டுரையில் பிரித்தானிய காலத்தில் இருந்து அன்று வரை தொல்லியல் கல்வி பற்றிய வளர்ச்சி எடுத்துக் கூறப்பட்டிருந்தது. இக்கட்டுரையில் லெப்டினன்ட் எம்.எச். பகன் (M.H. Fagan) 1818ம் ஆண்டில் பொலன்நறுவ அழிபாடுகள் பற்றிய கண்டுபிடிப்பைப் பற்றிய குறிப்புடன் இலங்கையின் தொல்லியல் வரலாறு ஆரம்பிப்பதாக கூறப்பட்டது. பொலன்நறுவ புகழ்பெற்ற மகாபராக்கிரமபாகு (1153 -1186) மன்னனின் தலைநகராக விளங்கியதோடு பதினோராம் நூற்றாண்டில் சோழர் ஆட்சியின் போது சில ஆண்டுகள் காலம் இலங்கையின் தலைநகராகவும் விளங்கியது. ஏறக்குறைய 500 ஆண்டுகள் காலம் இந்நகரம் மண்மூடிப்போய் மறைந்து கிடந்தது. போத்துக்கீசரும் டச்சுக்காரரும் இதன் மகிமை பற்றி அறிந்திருக்கவில்லை.



SOME ASPECTS
OF THE
HISTORY OF ARCHAEOLOGY
IN
SRI LANKA

Presidential Address
by
JAMES T. RUTNAM

9 November 1974

JAFFNA ARCHAEOLOGICAL SOCIETY
6 SIXTH LANE, PALALY ROAD
JAFFNA, SRI LANKA

சி.ஈ ஹொடகும்புற: ஆசிய வேத்தியல் கழகத்தின் இலங்கைக் கிளையின் கூட்டத்தில் 1968 நவம்பர் 29ம் திகதி நிகழ்த்திய தலைமை உரையில் சி.ஈ. ஹொடகும்புற அவர்கள் 'இலங்கைத் தொல்லியலின் வரலாறு' என்ற தலைப்பில் உரையாற்றினார் ஹொடகும்புற அவர்களின் வேறு சில கட்டுரைகள் சிலோன் ருடே (Ceylon Today) என்னும், இலங்கைத் தகவல் திணைக்களச் சஞ்சிகையிலும் வெளியாயின. அச்சஞ்சிகையின் 1965ம் ஆண்டு இதழில் ஹொடகும்புற அவ்வாண்டு வரை இலங்கையில் நிறைவேறிய தொல்லியல் ஆய்வு வேலைகள் குறித்த சுருக்கத் தொகுப்புரையை வழங்கியிருந்தார்.

1967ம் ஆண்டில் 'சிலோன் ருடே' இதழ் 'இலங்கையின் வடபகுதியின் தொல்லியல்' என்ற தலைப்பில் ஹொடகும்புறவின் மூன்று கட்டுரைகளைத் தொடராக வெளியிட்டது. 1966 ஆகஸ்ட் 24ம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட அகழ்வாய்வு வேலை பற்றிக் குறிப்பிட்ட அவர் 'அதுவே வடமாகாணத்தில் முதன் முதலாக செய்யப்பட்ட ஒழுங்கமைப்புடைய அகழ்வாய்வு வேலை' எனவும் குறிப்பிட்டார். 1968ம் ஆண்டு நவம்பர் - டிசம்பர் 'சிலோன் ருடே' இதழில் ஹொடகும்புற 'இலங்கையில் கல்வெட்டியல் ஆய்வுகள்' என்ற தலைப்பில் ஓர் கட்டுரையை எழுதினார். அக்காலத்தில் பிரசுரிக்கப்பட்ட வேறு இருவரின் கட்டுரைகளையும் தொல்லியல் பற்றிய ஆய்வுகளுடன் சேர்த்துக் கொள்ளவேண்டும். 'சிலோன் ருடேயில் விசேட நிருபர்' என்ற பெயரில் 'இலங்கையில் தொல்லியல் ஆய்வுகள்' என்ற தலைப்பில் ஒருவரும், 'E.R' என்ற முதல் எழுத்துக்கள் கொண்ட பெயரில் 'டைம்ஸ் ஒவ் சிலோன்' பத்திரிகையில் A Profile on Dr. S. Paranavitana' என்ற கட்டுரையும் 1956 செப்டம்பரில், முறையே 25, 27 ஆம் திகதிகளில் வெளியாயின. டாக்டர் பறணவித்தானவின் வாழ்க்கைக் குறிப்புகள் (A Profile) கட்டுரை அவர் தொல்லியல் திணைக்கள ஆணையாளர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றமையை முன்னிட்டு வெளியிடப்பட்டது.

தொல்லியல் திணைக்களத்தில் ஆணையாளர்களாகப் பணியாற்றியவர்களின் ஆண்டு அறிக்கைகளை மேற்கூறிய எழுத்தாளர்கள் தமது ஆய்வுக் கட்டுரைகளை எழுதுவதற்குப் பயன்படுத்தினார். இன்னொருவரின் நூல் ஒன்றைப் பற்றியும் இங்கு குறிப்பிடுதல் அவசியம். ஆர்.டபிள்யு. ஐவர் (R.W. Iever) அவர்களால் எழுதப்பட்ட இலங்கையின் வடமத்திய மாகாணத்தின் கையேடு (Manual of the North Central Province Ceylon) என்ற நூலில் (1899) வடமத்திய மாகாணத்தின் தொல்லியல் வரலாறு விபரிக்கப்பட்டிருந்தது.

காலனித்துவ ஆட்சிககாலத்து இலங்கைத் தொல்லியலாளர்கள்:

தொல்லியல் என்னும் ஆய்வுத்துறை, தொடர்புடைய பல கல்வித்துறைகளுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டது. இவற்றுள் கல்வெட்டியல் முதன்மை வாய்ந்த உப கல்வித்துறையாகும். இதை விட காசுஇயல், கட்டடக்கலை, இரசாயனம், புவிச்சரிதவியல், தொல்லுயிரியல், மானிடவியல், இனவியல், இனவரைவியல், சமூகவியல், புகைப்படவியல், மொழியியல், காபன் ரேடியொ கதியியக்கம் போன்ற விஞ்ஞானங்கள், சமூக விஞ்ஞானங்கள் என்பனவற்றுடனும் தொல்லியல் தொடர்புடையதாய் இருந்து வருகிறது. தொல்லியல் என்பது அதன் குறுகிய அர்த்ததில் பண்டைய அழிபாடுகள் சின்னங்கள் என்பவற்றை அகழாய்வு செய்தல் என்று கருதப்படினும், அது பல கல்வித்துறைகளுடன் தொடர்புடைய விரிந்த ஓர் ஆய்வுத் துறையாகும் என்பதைக் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

இக்காரணத்தினாலேயே இலங்கையின் தொல்லியல் திணைக்களத்திலும் தற்போது இரசாயனம், கல்வெட்டியல், கட்டடக்கலை, கீழைத்தேச மொழிகள் என்பனவற்றில் சிறப்புப்பட்டம் பெற்றவர்களும் பயிற்சி பெற்றவர்களும் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இன்று தொல்லியல் ஓர் விஞ்ஞானத்துறையாக வளர்ச்சி பெற்றுள்ளது. காலனிய ஆட்சிக்காலத்தில் தொல்லியல் திணைக்கள ஆணையாளர்களாக நியமிக்கப்பட்டோரில் பெரும்பான்மையினர் சிவில் சேவை அதிகாரிகளே ஆவர். அவர்கள் எல்லாம் தெரிந்த நிபுணர்களாக இருந்தனர் என்று கூறுவது இகழ்ச்சியாக அல்ல. அவர்கள் உண்மையில் வியத்தகு ஆற்றல் உடையவர்களே. சிவில் சேவை உத்தியோகத்தர்களில் சிலர் ஆளுநர்களாகவும் உயர் நீதிமன்ற நீதிபதிகளாகவும் இருந்துள்ளனர். உணவுக் கட்டுப்பாட்டாளர், சந்தைப்படுத்தல் ஆணையாளர் போன்ற பல்வேறு பதவிகளையும் அவர்கள் வகித்திருக்கிறார்கள். அதுபோலவே தொல்லியல் ஆணையாளர்களாக சிவில் சேவை உத்தியோகத்தார்கள் கடமையாற்றினர். இலங்கையின் முதலாவது தொல்லியல் ஆணையாளர் ஹரி சாள்ஸ் பேர்விஸ் பெல் (H.C.P.Bell) சிவில் சேவை உத்தியோகத்தரே ஆவர். கேகாலையில் மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றிய பெல் தொல்லியல் திணைக்கள ஆணையாளராக இடமாற்றம் செய்யப்பட்டார். அவ்விடமாற்றம் அவரது விருப்புடனேயே செய்யப்பட்டது. நீதிபதியாக இருந்தவர் அனுராதபுரப் பகுதியின் காடுகளை வெட்டித்துப்புரவாக்கி நிலத்தை தோண்டும் பணியை ஆரம்பித்தார்.

தொல்லியல் பற்றிய முறைப்படியான பயிற்சியில்லாத ஒருவராகவே பெல் இருந்தார். இலங்கையில் மட்டும் அல்ல, உலகம் எங்கிலும் ஆரம்ப காலத்தில் தொல்லியல் பணியைத் தொடக்கி வைத்தவர்கள் அத்துறை பற்றிய விசேட பயிற்சி

தொடர்தல் 79ம் பக்கம்

இலங்கையின்...

78ம் பக்கத் தொடர்ச்சி...

இல்லாதவர்களே. டி.ரி. தேவேந்திர எழுதிய நூலில் இத்தகையோர் பலரின் பெயர்களைப் பட்டியல் இட்டுள்ளார். பொன் னம்பலம் அருணாசலம், ஆனந்த குமாரசுவாமி, சி. இராசநாயகம், போல் ஈ பீரிஸ், சி.எச். கொலின்ஸ், பி.ஈ.பி. தெரணியகல, ஆர்.எல். புரோகிர், சி.டபிள்யு. நிக்கலஸ், ஏ. நெல், டி.யி.இ. ஹெட்டி ஆராய்ச்சி என்ற பெயர்களை அடுக்கிச் செல்லும் தேவேந்திர இப்பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியவர்கள் இன்னும் பலர் உள்ளனர் என்று கூறுகிறார். ஏ.எம். ஹோகார்ட்(A.M. Hocart) என்பவர் தொல்லியல் ஆணையாளராகப் பதவி வகித்தவர். இவர் இனவியல் (Ethnology) என்ற துறைவல்லுநர். இவர் சொலமன் தீவுகளில் ரிவர்ஸ் (Rivers) நடத்திய ஆய்வின் ஆய்வாளர் குழுவில் ஒருவராக இருந்தார். ஏ.எச். லோங்ஹேர்ஸ்ட் (A.H.Longhurst)இலங்கைக்கு தொல்லியல் ஆணையாளராக வருவதற்கு முனனர் இந்தியாவின் தென்மண்டல தொல்லியல் ஆய்வுத் துறையின் மேலாளராக (சுப்பிரின்டென்ட்) பணியாற்றினார். இவர் புகழ்பெற்ற யோன் மார்ஷல் என்ற இந்தியத் தொல்லியலாளரின் மைத்துனர் உறவுடையவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. பி.சி. சேஸ்திரி என்னும் தொல்லியலாளரை இலங்கை மாணவர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்காக யுனெஸ்கோ நிறுவனம் அனுப்பி வைத்தது. அவர் மாணவர்களுக்கு பயிற்சி அளித்ததோடு அவர்களோடு இணைந்து வேலையும் செய்தார். சேர். வில்லியம் ஹென்றி கிரகரி என்ற ஆளுநர் இலங்கையின் கல்வெட்டுக்களை வாசித்து அறிவதற்காக போல் கோல்ட் ஷிமித் என்பவரை இங்கு வரவழைத்தார். அவர் இலங்கையின் காடுகளுக்குள் பணியாற்றியதால் மலேரியா தொற்றுக்கு ஆளாகி தமது 27 வயதில் மரணத்தைத் தழுவினார். அவர் மரணித்த போது காலியில் இருந்தார். அவருக்குப்பின்னர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட முல்லர் (E. Muller) கல்வெட்டியல் நிபுணராவர். அவர் Ancient Inscriptions in Ceylon என்ற அரிய நூலை இரண்டு தொகுதிகளாக 1883ல் இலண்டனில் பதிப்பித்து வெளியிட்டார்.

ஏ.ஜி. புறோடி, டபிள்யு.ஏ.எஸ். போக், ஆர்.டபிள்யு. ஐவர்ஸ், எஸ்.எம். பறோஸ், யோசப் பியர்சன், ஹென்றிபார்க்கர், யோன் ஸ்ரில், ரி.டபிள்யு. றிஸ் டேவிட்ஸ் என்போர் அரசாங்க உத்தியோகத்தார்களாவர். இவர்கள் தொல்லியல் வேலையில் ஆர்வத்தோடு ஈடுபட்டவர்களாவர். எட்வாட் ஆர். அய்ர்டன் (E.R.Ayrton) என்பவர் தொல்லியலாளராக நியமிக்கப்பட்டவர்களில் பயிற்றப்பட்ட தொல்லியலாளராக விளங்கினார். துரதிஷ்டவசமாக இவர் நியமிக்கப்பட்ட ஒருவருட காலத்திற்குள் 1914 மே 18ம் திகதி திஸ்ஸமகாராமவில் உள்ள திஸ்ஸவாவியில் நீரில் மூழ்கி விபத்துக்கு உள்ளாகி மரணித்தார். இவர் ஓர் இளம் எகிப்தியவியலாளர். சிங்ஸ் அற்தீபஸ் பள்ளத்தாக்கில் (Valley of the Kings of Thebes) பிஸின்டர்ஸ் பெற்றி (Flinders Petrie) என்ற தொல்லியலாளரின் மேற்பார்வையில் பணியாற்றிக்கொண்டிருந்த போது இலங்கைக்கு வரும் முடிவை மேற்கொண்டார். அவர் எகிப்தில் தொடர்ந்து பணியாற்றியிருப்பாரேயானால் 'Tutankhaman' என்ற இடத்தில் இருந்த புதையாலைக் கண்டுபித்த கர்ணவொன் பிரபு (Carnarvon) கௌவார்ட் கார்ட்டர் (Howard Carter) குழுவினரில் ஒருவராக இருந்திருப்பார். இக்கண்டுபிடிப்பு நவம்பர் மாதம் 1922ல் நிகழ்ந்தது. எகிப்தின் பறோக்களின் (Pharaohs) ஆவிகள், இவரை இலங்கைவரை தொடர்ந்து அவரின் உயிரைக் குடித்தனவோ என டி.ரி. தேவேந்திர ஏங்குகிறார். அவர் விதி அவ்வாறாயிற்று.

எகிப்தில் கடமையாற்றியவரும் புகழ்பெற்ற கண்டுபிடிப்பைச் செய்தவருமான சேர் ஒஸ்டின் ஹென்றி லயார்ட் (இவரின் கண்டுபிடிப்பு 'Nineveh' என்ற இடத்தின் Library of Cuneiform Tablets ஆகும்) இலங்கையில் கடமையாற்றிய சிவில் சேவையாளர் ஒருவரின் மகன் ஆவர். பிரித்தானியர் இலங்கையின் கரையோர மாகாணங்களைக் கைப்பற்றிய சிறிது காலத்தின் பின்னர் ஹென்றி பீட்டர் யோன் லயார்ட் மற்றும் அவரது சகோதரர் சாள்ஸ் லயார்ட் என்போரை அவரது தந்தை (இவர் பிறிஸ்டல் நகரத்தலைவராக இருந்தவர்) இலங்கைக்கு அனுப்பி வைத்தார்.

> **கல்வெட்டு வாசகங்களிற்கு இடையில் தெரியும் பொறிப்புகளைக் கொண்டு பரணவிதான தெரிவிக்கும் விடயங்களை பிறவரலாற்றுச் சான்றாதாரங்களோடு ஒப்பிட்டு ஆராய்ந்த குணவர்த்தன 'வரலாற்றைத் திருத்தி எழுதுவதற்கு இவை நம்பத்தகுந்த சான்றுகள் அல்ல என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினார். ஆயினும் பரணவிதான தன் வாழ்வின் இறுதி நாட்கள் வரை தம் கருத்தில் விட்டுகொடுப்பின்றி இருந்தார்.**

இலங்கையின் நிர்வாக மற்றும் நீதி சேவைப் பதவிகளை லயார்ட் குடும்பத்தைச்சேர்ந்த பலர் அலங்கரித்தனர். இன்றும் கூட (பம்பலப்பிட்டியின்) 'லயார்ட்ஸ் வீதி', லயார்ட் பெருந்தெரு என்பன லயார்ட் குடும்பத்தின் நினைவுச் சின்னங்களாக உள்ளதைக் காணலாம். லயார்ட் வெள்ளவத்தை கால்வாயில் ஒரு பாலத்தைக்கட்டுவித்தார். அவரைக் கேலி செய்யும் முறையில் வெள்ளவத்தைப் பாலத்திற்கு லயார்ட்ஸின் முட்டாள்தனம் (Layard's Folly) என்று இடப்பட்ட பெயர் நிலைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் தொல்லியல் வரலாற்றை நாம் நுணுக்கமாக பரிசீலித்தால் இரு தொல்லியலாளர்கள் தலைசிறந்த ஆளுமைகளாக உயர்ந்து நிற்பதைக்காணமுடியும். 1890 முதல் 1956 வரையான காலத்தில் (முதலாம் யுத்த காலத்தின் சில ஆண்டுகள் நீங்கலாக) கடடையாற்றிய எச்.சி.பி. பெல் இவர்களில் ஒருவர். மற்றவர் சேனரத் பரணவிதான ஆவர். பெல் 1851ல் பிறந்து 1937ல் காலமானார். சேனரத் பரணவிதான 1896ல் பிறந்தவர், 1972ல் காலமானார். இவர்கள் இருவரோடு கல்வெட்டியல்துறை அறிஞரான டொன் மார்டினோ டி சில்வா விக்கரமலிங்க அவர்களையும் குறிப்பிடுதல் வேண்டும். M.De.Z. விக்கிரமசிங்க அவர்கள் எபிகிராபியா சிலனியா (Epigraphia Zeylanica) நூலின் முதல் இரு தொகுதிகளையும் பதிப்பித்து வெளியிட்டார்.

மேற்குறித்த மூவரில் சேனரத் பரணவிதானவின் பங்களிப்பு தனியாக நோக்கப்படுதல் சாலவும் பொருத்தமானது.

சேனரத் பரணவிதானவும் தொல்லியல் ஆய்வுகளும்:

எச்.சி.பி. பெல் தொல்லியல் துறைக்கு வருவதற்கு முன்னர் அத்துறைபற்றிய பயிற்சி உடையவராகவோ பெற்றவராகவோ, புலமைத்துவ அறிவு உடையவராகவோ இருக்கவில்லை. அவ்வாறே சேனரத் பரணவிதானவும் புலமைத்துவ அறிவோடு அத்துறைக்குள் புகுந்தவரல்லர். ஆயினும் இருவரும் தொல்லியல் துறை நிபுணத்துவம் மிக்கவர்களாய் பல ஆய்வுகளையும், கட்டுரைகளையும் எழுதி அத்துறையின் வளர்ச்சிக்கு உதவினார்கள். இருவரிடமும் ஒரு பொதுப் பண்பும் இருந்தது. தாம் கூறிய கருத்துக்களை விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டிருத்தலும், பிறரால் தவறுகள் கூட்டிக் காட்டப்பட்ட போதும், அவற்றை ஏற்க மறுத்தமையும் அவர்கள் இருவரிடமும் காணப்பட்ட குணப்பண்புகளாகும். எச்.சி.பி. பெல் யேதவன, அபயகிரி என்ற இரு விகாரைகளை அடையாளம் காட்டுவதில் தவறிழைத்தார். அவர் யேதவன என்று கூறியதை அபயகிரி என்றும், அவர் இது தான் அபயகிரி என்று கூறியதை யேதவன என்றும் இன்று நாம் அறிந்துள்ளோம். ஹியு நெவில் 1888லும், ஹென்றி பார்க்கர் 1909லும் இதனைச் சுட்டிக்காட்டினார். ஆயினும் பெல் தம் கருத்தை மாற்றவில்லை.

சேனரத் பரணவிதானவும் தனது கொள்கைகள், கருத்துக்கள், ஊகங்கள் என்பனவற்றை விடாமல் பற்றிப் பிடித்தபடி, இறுதிவரை பிறரது விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளாதவராக இருந்தார். பரணவிதானவின் கருத்துக்களைப் பல அறிஞர்கள் பகிரங்கமாகவே கண்டனம் செய்தனர். குறைகளை எடுத்துக் காட்டினர். J.E. Van Lohizen de leeuw, ஆர்.எச்.டி. சில்வா, ஏ.டி.ரி. பெரரா, சிறிகுணசிங்க, பி.சி. ஷேஸ்திரி, ஆர்.எல்.எச்.ஏ. குணவர்த்தன என்போர் இவரின் கருத்துக்களை விமர்சித்து எழுதினர்.

இலங்கை வரலாற்றை மீள எழுதுதல்:

இலங்கை வரலாற்றின் பண்டைக் காலம், இடைக்காலம் என்ற காலப்பகுதிகளின் பெரும் பகுதியினை பரணவிதான திருப்பி எழுத (Rewriting) முயன்றார் என்று ஆர்.எல்.ஏ.எச். குணவர்த்தன குறை கூறினார். இலங்கை வரலாறு பற்றிய எழுத்துக்களில் காணப்படும் 'இந்திய மைய வாதத்தை'(Indo - Centrism) ஏற்றுக்கொள்ளாத பரணவிதான, அதன் எதிர்த்துருவ நிலைக்குச் சென்றார். இந்தியாவுடன் இலங்கை கொண்டிருந்த பொருளாதார, பண்பாட்டு உறவுகளையே, அதன் அடிப்படைகளையே, நிராகரிக்கும் எல்லைக்குச் சென்றார் என குணவர்ந்தன விமர்சித்தார். பரவணவித்தானவின் 'இலங்கையும் மலாசியாவும்' '(Ceylon And Malasysia)பற்றிய கருத்தைக் குறித்து ஆதாரபூர்வமான மறுப்புரையை எழுதிய குணவர்த்தன, பரணவிதானவைப் பற்றி விமர்சித்தவர்களில் குறிப்பிடத்தக்கவர். அவரது விமர்சனக் கட்டுரை 1967ம் ஆண்டு ஏப்பிரல் - ஒக்டோபர் University of Ceylon Review (தொகுதி xxv இல் 1,2 பக் 1 - 64) ல் வெளியாயிற்று. பரணவிதான இலங்கை வரலாற்றில் மலேசியாக் காலம் (Malay Period of Ceylon History) என ஒன்று இருந்ததெனக் கூறுமளவிற்கு சென்றார். முதலாம் பராக்கிரமபாகுவின் மரணத்திற்கும், இரண்டாம் பராக்கிரமபாகு அரசனாகப் பதவி ஏற்பதற்கும் இடைப்பட்டகாலத்தையே அவர் மலோசியா காலம் என்றார் என்று குணவர்த்தன எடுத்துக் காட்டியதோடு அதனை பரணவிதானவின் அபத்தமான திருத்தம் என்றார், பரணவிதான கல்வெட்டுக்களை வாசித்து அவற்றில் உள்ள வாசகங்களுக்கு இடையே தெரியும் பொறிப்புகளையும் (Interlineal Inscriptions) தாம் வாசித்ததாக எழுதினார். குணவர்த்தன அவர்கள் இது உண்மையா என்பதை அறிவதற்காக பரணவிதான குறிப்பிடும் கல்வெட்டுகளை அவதானமாகப் படித்துப் பார்த்தார். பரணவிதானவின் கூற்று நம்பத்தக்கதன்று (Unreliable) என்பதே குணவர்த்தனவின் முடிவாகும். கல்வெட்டு வாசகங்களிற்கு இடையில் தெரியும் பொறிப்புகளைக் கொண்டு பரணவிதான தெரிவிக்கும் விடயங்களை பிறவரலாற்றுச் சான்றாதாரங்களோடு ஒப்பிட்டு ஆராய்ந்த குணவர்த்தன 'வரலாற்றைத் திருத்தி எழுதுவதற்கு இவை நம்பத்தகுந்த சான்றுகள் அல்ல என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினார். ஆயினும் பரணவிதான தன் வாழ்வின் இறுதி நாட்கள் வரை தம் கருத்தில் விட்டுகொடுப்பின்றி இருந்தார்.

தென்னிந்தய வரலாற்றாசிரியரான கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியுடனும் பரணவிதான கடுமையான விவாதப் போரை நடத்தினார். தன் நூல்களிலும் கட்டுரைகளிலும் தமது விநோதமான கருத்துக்களையும் புகுத்தினார்.

இலங்கையின் சுருக்க வரலாறு பாடநூல்:

பரணவிதான அவர்கள் சி.டபிள்யு. நிக்கலஸ் அவர்களுடன் இணைந்து 'இலங்கையின் சுருக்க வரலாறு' (Concise History of Ceylon) என்ற பாடநூலை 1961ம் ஆண்டில் எழுதிப் பிரசுரித்தார். விமர்சனர்களின் கண்டனங்களைச்சிறிதும் பொருட்படுத்தாதவராக தன் புதுமையான கருத்துக்களை அப்பாடநூலில் பரணவிதான சேர்த்துவிட்டார். 1961ல் பிரசுரமான மேற்குறித்த பாடநூல் இலங்கைப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டது.

புதுமையான 25 கல்வெட்டுகள்:

இலங்கையின் வெவ்வேறு இடங்களிலும் தென்னிந்தியாவின் இராமேஸ்வரத்திலும் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இருபத்தைந்தில், பரணவிதான பொறிப்புகளுக்கு இடையிலான அதாவது வரிகளுக்கு இடையிலான எழுத்துக்களைத் தாம் வாசித்ததாகக் கூறினார். இவருடைய வரிகளுக்கு இடையிலான எழுத்துக்கள் (Inter Linear Writing) என்ற இந்த விநோதமான கண்டுபிடிப்பே, வரலாற்றைத்

தொடர்தல் 80ம் பக்கம்

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail: info@thaiveedu.com
Fax: 416-849-0594 Tel: 416-646-3422

இலங்கையின்...

78ம் பக்கத் தொடர்ச்சி...

திருப்பி எழுதும் பணிக்கு சான்றாதாரமாக இருந்தது. இந்த இருபத்தைந்து கல்வெட்டுகளிலும் உள்ள வரிகளுக்கு இடையிலான வாசகங்களை தொகுத்தால் அதுவே தனித் தொகுதியாகிவிடும்.

'பரம்பர புஸ்தக' - அதிசயமான ஒரு நூல்:

'பரம்பர புஸ்தக' (பரம்பரையைக் கூறும் புத்தகம்) என்ற நூலைத் தாம் படித்ததாக பரணவிதான கூறினார். சமஸ்கிருத மொழியில் செய்யுள் நடையில் அமைந்ததும் பத்தர (Bhadra) என்ற புத்தபிக்குவால் எழுதப்பட்டது எனவும் அவர் கூறிய இந்நூலில் இருந்து செய்யுட் பகுதிகளை அவர் மேற்கோள் காட்டி எழுதினார். பத்தர என்ற பிக்குவின் வரலாறு அவர் கூறியபடி பின்வருமாறு அமைந்தது. சிறி விஜய தேசத்தில் இருந்து 'பத்தர', விக்கிரமபாகு மன்னன் (111 - 1132) காலத்தில் இலங்கைக்கு கல்வி கற்பதற்காக வந்தார். அவர் அபயகிரி விகாரையில் மாணவராகத் தங்கியிருந்து படித்தார். சிறிவிஜய தேசத்தின் சிறவணபுர என்ற இடத்தில் சங்க அமைப்பின் தலைவராக இருந்த ஒரு குருவின் சீடரே இந்த 'பத்தர' என்னும் பெயரினர். அவரே 'பரம்பர புஸ்தக' நூலை எழுதினார். இந்த நூலை விட பிறர் எவரும் அறிந்திராதனவும் கிடைத்தற்கு இயலாதனவுமான வேறு சில நூல்களில் இருந்தும் பரணவிதான மேற்கோள்களை எடுத்தாண்டுள்ளார்.

பரணவிதானவின் மாயத்தோற்றங்கள்:

பரணவிதானவின் குணஇயல்புகளை அறிந்தவர்கள் அவரின் நேர்மையைச் சந்தேகிக்க மாட்டார்கள். அவரின் எழுத்துக்களை குறித்து குணவர்த்தன தெரிவித்திருக்கும் விமர்சனங்களின் பின்னணியில் பார்க்கும் போது அவரது ஆக்கங்களை 'வியத்தகு புனைவுகள் (Maruellous Piece of Fiction) என்றே கூறவேண்டும். அவருக்கு வரலாற்றின் நுணுக்க விபரங்கள் அனைத்தும் தெரியும். அப்படிப்பட்ட வியத்தகு அறிவு படைத்த ஒருவராலேயே இது போன்ற வியத்தகு புனைவுகளையும் எழுதியிருக்க முடியும். ஆயினும் அவர் தனது விபரீதமான கற்பனைகளை உண்மையெனவே நம்பினார். ஆகையால் அவர் ஒருவகையான மாயத்தோற்றத்தின் பாதிப்புக்கு ஆளானவர் (The Victim of some sort of Hallucination). உண்மையில் இத்தகைய பாதிப்பு தனக்கு ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தை அவரது 'The Greeks and Mauriyas' என்ற 1971ம் ஆண்டு நூலின் பக்கம் 5ல் அவரே குறிப்பிட்டுள்ளார்.

கா. இந்திரபால:

பேராசிரியர் கா. இந்திரபால பேராதனையில் இளம் விரிவுரையாளராக இருந்த போது வேத்தியல் கழகத்தின் இலங்கைக் கிளையின் பருவ இதழில் பரணவிதானவின் 'இலங்கையும் மலாசியாவும்' (Ceylon and Malaysia) நூல் பற்றி ஒரு விமர்சனத்தை எழுதினார். ஆர்.ஏ.எல்.எச். குணவர்த்தன என்ற இளம் விரிவுரையாளரின் விமர்சனம் வெளிவருவதற்கு முன்னரே பரணவிதானவை விமர்சிக்கும் துணிச்சல் கா.இந்திரபால அவர்களிடம் இருந்தது. இந்த விமர்சனத்தைக் கண்ணுற்ற சேனரத் பரணவிதான அவர்கள் கா. இந்திரபால அவர்களைக் கடுமையாகச் சாடி ஒரு மறுப்புரையை எழுதி அப்பருவ இதழுக்கு அனுப்பிவைத்தார். அப்பருவ இதழின் பதிப்பாசிரியர் அதனைப் பிரசுரிக்க மறுத்துவிட்டார். (கா. இந்திரபால மீதான தாக்குதல் பிரசுரத்திற்கு ஏற்றதல்ல என அவரின் பதிப்பாசிரியர்தர்மம் தடுத்ததுபோலும்). 1972ம் ஆண்டில் ஹொடகும்புற அவர்கள் 'இலங்கையில் கல்வெட்டியல் ஆய்வுகள்' (Epigraphical Studies in ceylon) என்ற கட்டுரையை எழுதினார் 'சிலோன் ருடே' சஞ்சிகையில் பிரசுரமான அக்கட்டுரையில் இருந்து ஒரு பந்தியை கீழே தந்துள்ளோம், ஹொடகும்புற அவர்களின் கூற்றை இங்கே பதிவு செய்தல் தக்கது எனக்கருதினோம்.

'பரணவிதானவின்' இலங்கையும் மலாசியாவும் நூலுக்கான விமர்சனத்தை பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் எழுதினார். நூலின் ஆசிரியர் (பரணவிதான) அவ்விமர்சனம் நியாயமற்றது எனக் கருதினார். உண்மையில் விமர்சனத்தை எழுதியவர் சில நூல்களினதும் இடங்களினதும் பெயர்களைத் தவறாகவே குறிப்பிட்டார். பரணவிதான மறுப்புரை எழுதினார். ஆனால் பருவ இதழின் பதிப்பாசிரியர் மறுப்புரையை பிரசுரிக்க மறுத்துவிட்டார். அதற்குப் பின் குறித்த பருவ இதழுக்கு எழுதுவதையே பரணவிதான நிறுத்திவிட்டார்.

ஹொடகும்புறவின் மேற்படி குறிப்பில் பரணவிதானவின் கல்வெட்டு வரிகளுக்கு இடையிலான எழுத்துக்களின் வாசிப்பு பற்றி எதனையும் குறிப்பிடாமல் விட்டமை புதிராகவே உள்ளது.

பரணவிதானவை விமர்சித்த பிறர்:

ஏ. லியனகமகே என்ற விரிவுரையாளர் பரணவிதானவின் கருத்துக்களிற்கு மறுப்பாக ஒரு கட்டுரை வரைவை எழுதினார். ஆயினும் அவர் தாம் எழுதிய கட்டுரையை தமது கலாநிதி பட்டத்திற்கான ஆய்வேட்டில் சேர்த்துக் கொள்ளவில்லை. ஏ. லியனகமகே அவர்கள் பின்னர் 'பொலன்நறுவவின் வீழ்ச்சியும் தம்பதெனியாவின் எழுச்சியும்' (The Decline of Polonnaruwa and the rise of Damba deniya) என்ற தமது நூலிலும் இதனைச் சேர்த்துக் கொள்வதைத் தவிர்த்தார். இவரின் இம்முடிவை கா. இந்திரபால அவர்களுக்குக் கிடைத்த அனுபவத்தின் பின்னணியிலேயே புரிந்து கொள்ளலாம்.

யேம்ஸ். ரி. ரத்தினம் அவர்களும் பொத்துஹல் விகாரை தொடர்பான தமது கட்டுரையில் பரணவிதானவின் கருத்துக்களை மறுத்து எழுதினார். கல்வெட்டு வரிகளுக்கு இடையில் உள்ள எழுத்துக்களைப் படித்து அவற்றின் ஆதாரத்தின் அடிபடையில் தம் கருத்துக்களை பரணவிதான நிறுவ முனைந்தமையை அவர் கண்டித்தார். ஆயினும், பரணவிதான தமது கடும் உழைப்பு, புலமை, எழுத்தாற்றல், வாதத்திறன் ஆகியவற்றால் தொல்லியல் துறையில் உயர் நிலையைப் பெற்று ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவராகத் திகழ்ந்தார் என்று யேம்ஸ். ரி. ரத்தினம் பாராட்டுகிறார்.

உசாத்துணை:

• James. T. Rutnam : (1975) Some Aspects of The History of Archaeology in Srilanka. யாழ்ப்பாணத் தொல்லியல் கழக வெளியீடு.

• இலங்கையின் தொல்லியல் வரலாறு. ஆங்கில மூலம் : யேம்ஸ். ரி. ரத்தினம். தொகுப்பும் தமிழாக்கமும்: க. சண்முகலிங்கம்

• 1974ம் ஆண்டு நவம்பர் 9ம் திகதி யாழ்ப்பாணம் தொல்லியல் கழகத்தின் கூட்டத்தில் யேம்ஸ். ரி. ரத்தினம் அவர்கள் 'Some aspects of the history of archaeology in Srilanka' என்ற தலைப்பில் ஆற்றிய தலைமையுரை பின்னர் 1975ல் சிறு நூலாக வெளியிடப்பட்டது. அந்நூலின் கருத்துக்களை தொகுத்தும் சுருக்கியும் இக்கட்டுரை அமைந்துள்ளது.

shanmugalingam@thaiveedu.com

Mega Financial Group

WE ARE PROVIDING A LIFETIME
FAMILY PROTECTION

SAVE BIG
ON COVERAGE FOR YOUR MOST PRECIOUS ASSET

OUR PRODUCTS AND SERVICES

- Life Insurance products
- Critical Illness Insurance
- Disability Insurance
- Dental & Drug Insurance
- Travel Insurance
- Non-Medical Insurance
- Mortgage Insurance
- RRSP's Investments
- RESP-Education Saving Plan
- Final Expense Products (Through Funeral Homes)

INDUSTRIAL ALLIANCE
Canada Life
Sun Life Financial
UL Mutual
OBF
La Capitale
Assumptions Life
RBC Insurance
Empire Life
Desjardins
Manulife Financial

www.megafinancial.ca

RAJ NADARAJAH
President & CEO
Dir: 416-666-1120
raj@megafinancial.ca

Office: 416-293 5559 • Fax: 416-293 9409
PH28 -4168 Finch Ave. E., Scarborough, ON., M1S 5H6

அகஸ்தியர் இரண்டாயிரமும் செகராசசேகரமும்

- பால. சிவகடாட்சம் -

தமிழ்நாட்டின் பழம்பெரும் நூலகமான தஞ்சை சரஸ்வதி மஹால் நூல் நிலையம் 1958ம் ஆண்டில் அகஸ்தியர் 2000 என்னும் பெயரில் தமிழ் மருத்துவ நூல் ஒன்றை வெளியிட்டது.

சரஸ்வதி மஹால் நிலையத்தின் அப்போதைய கௌரவ காரியதரிசியாகவிருந்த திரு. எஸ். கோபாலன் அவர்கள் அகஸ்தியர் 2000 நூல் பற்றி அந்நூலின் முகவுரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

‘அகஸ்தியர் வைத்திய நூல்கள் பல இதுவரையில் அச்சிடப்பட்டிருக்கின்றன. இன்னும் சில சுவடிகளிலேயே கிடைக்கின்றன. ஆனல் இந்த நூல் இதுவரையில் அச்சிடப்படவில்லை. சுவடிகளிலும் நமது சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தைத் தவிர வேறு இடத்தில் இருப்பதாகவும் தெரியவில்லை’.[1]

திரு. கோபாலன் அவர்களின் கூற்று மிக மிக முக்கியமான செய்தி ஒன்றை எமக்கு உணர்த்தி நிற்கின்றது. தஞ்சை சரஸ்வதி மஹால் நிலையத்தாருக்குக் கிடைத்த அகஸ்தியர் 2000 என்னும் நூலின் ஒரே ஒரு பிரதி இலங்கையில் இருந்தே சென்றிருக்க வாய்ப்புண்டு. பல்வேறு சான்றுகள் மூலம் இதனை உறுதிப்படுத்த முடிகின்றது.

முதலாவதாக, அகஸ்தியர் இரண்டாயிரத்தில் இடம்பெற்றுள்ள பாடல்களை உள்ளடக்கிய ஏட்டுச்சுவடிகளை இலங்கையில் இன்றும் காணக்கூடியதாக உள்ளது. இவற்றுள் ஐந்து ஏட்டுப்பிரதிகளை 1975க்கும் 2020ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நான் நேரடியாக வாசித்தறிந்துகொள்ள முடிந்தது. இவை அனைத்துக்கும் பொதுவான மூல நூல் இலங்கையிலேயே தோன்றியிருக்க முடியும். ஈழத்தில் இந்தத் தமிழ் மருத்துவநூல் செகராசசேகரம் என்றே அறியப்பட்டுவந்துள்ளது.

இற்றைக்கு நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர், யாழ்ப்பாணத்தின் மேற்கே உள்ள தீவுக்கூட்டங்களில் ஒன்றான வேலணைத் தீவில் உள்ள ஒரு கிராமமான சரவணையில் வாழ்ந்த வைத்தியர் அருளம்பலம் என்பவரிடம் இருந்த ஏட்டுச்வடி ஒன்றைப் பார்வையிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இச்சுவடி பற்றி 1978ல் நான் எழுதி-வெளியிட்ட ‘பண்டைய மருத்துவமும் பயன்தரு மூலிகைகளும்’ என்னும் நூலில் குறிப்பிட்டிருந்தேன்.[2]

வைத்தியர் அருளம்பலத்தின் ஏட்டுச்சுவடியில் உள்ள பாடல்களுட் மிகப் பெரும்பாலானவை சரஸ்வதி மஹால் வெளியீடான அகச்தியர் இரண்டாயிரத்தில் இருப்பதை அவதானித்தேன். அதேசமயம் ஒரு மிக முக்கியமான விடயத்தையும் என்னால் அவதானிக்க முடிந்தது. வைத்தியர் அருளம்பலத்தின் ஏட்டுச்சுவடியில் இடம்பெற்றுள்ள மன்னன் செகராசசேகரன் புகழ்பாடும் பாடல்களுள் ஒன்றையேனும் அகஸ்தியர் இரண்டாயிரத்தில் காணமுடியவில்லை. இவற்றுள் இரண்டு பாடல்களை மட்டும் முதலில் இங்கு நோக்குவோம்.

ஆக்கியே திப்பலியுடன்
அருந்தப்போகும் ஆமசுரம்
நோக்கிய வாகடம் பயின்று
நோயதுயிருண் காலனையும்
நீக்கியே ஆருயிரை நிலையாக்கும்
நரபாலன்
சேக்கொடியோன் செகராசசேகரனை
வணங்கிடுமே.[3]

காதலித்து இருகையால் பருகிடின் அரச
கங்கைக்கரை வேந்தர் தம்பிரான்
வேதமொத்த செகராச சேகரன்
வேங்கை யாளி மிகையாய் உலவவே
ஓதமுற்றும் புவி ஓடுமாறு
உள்ளே காய்ந்து சேர்
வாதபித்த சுரமோடும் என்றுதான்
வாகடத்தை வல்லோர் மொழிவரே.[4]

மேற்காணும் இரண்டுபாடல்களும் தவிர்ந்த குறிப்பிட்ட பாடத்துக்குரிய ஏனைய பாடல்கள் சரஸ்வதி மஹால் நூல்நிலையத்தவரால் வெளியிடப்பட்டுள்ள அகஸ்தியர் இரண்டாயிரத்தில் இடம்பெற்றுள்ளன.

செகராசசேகரம் என்னும் ஈழத்துத் தமிழ் மருத்துவ நூலின் ஒருசில பாகங்களே இதுவரை அச்சில் வெளிவந்துள்ளன. இவற்றுள் ஒன்றுதான் 1932ம் ஆண்டில் ச. தம்பிமுத்துப்பிள்ளை என்பவர் பதிப்பித்து வெளியிட்ட ‘செகராசசேகர வைத்தியம்’. இந்நூலின் அங்காதிபாதம் பற்றிய பாடத்தில் செகராசசேகரமன்னன் புகழ் பாடும் பாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சிங்கை நாட்டு மன்னன் செகராசசேகரன் தன்னோடு போர்புரிந்து இறந்துபோன எதிரிகளின் உடல்களின் உதவியோடு மனிதரின் உள்ளுடல் அங்கங்களின் அளவுகள் குறித்து ஆராய்ந்ததாகக் குறிப்பிடுகின்றது.

இயம்பிய குடலும் ஊனும்
என்புநாடிகளும் மற்றும்
செயம்பெறு சிங்கை நாடன்
செகராச சேகரன் தான்
உயர்ந்தவாள் வடக்கர் ஆகம்
உருட்டிய களத்தின் மீதே
அயஞ்சிறி துளது தீர அளந்து
கண்டறிந்த தாமே.[5]

ஐ.பொன்னையாபிள்ளை என்பார் பதிப்பித்த செகாராசேகர வைத்தியம் என்னும் நூல் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணத்தின் சுகாதார அமைச்சினால் 2000ம் ஆண்டில் மீள்பதிப்பு செய்யப்பெற்றது. இப்பதிப்பில் மேற்கண்ட பாடலுடன் கூடவே சிங்கைச் செகராச மன்னன் புகழ்பாடும் மேலும்பல பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

அகஸ்தியர் இரண்டாயிரத்தில் செகராசசேகரன் பெயரை உள்ளடக்கிய பாடல்கள் சில முற்றாகத் தவிர்க்கப்பட்டுள்ளதுடன் மற்றும் சிலபாடல்களில் செகராசசேகரன் பெயர்வரும் இடங்களில் வேறு பெயர்கள் இடம்பெற்றிருப்பதையும் காணமுடியும்.

இலங்கை ஆயுர்வேதத் திணைக்கள வெளியீடான செகராசசேகரப் பதிப்பில் ‘விஷசுரத்துக்கு நெய்’ என்னும் தலைப்பில் பின்வரும்பாடல் இடம்பெற்றுள்ளது.

கரைத்தரைத்துப் பதந்தனிலே
வடித்துநேரங்
கழஞ்சுநெய்தா னருந்துவீரேற்
கமலமானே
வரைத்தடந்தோள் மன்னவர்கள்
வணங்குகின்ற
செகராசசேகரன்றான் மனதிலோர்ந்து
தரைக்குளவன் தனக்கடங்காச்
சத்துருக்க
டங்களைக் காய்ந் திடுவதென்னத்
தரணிமீதில்
விரைக்கு விஷமவனடக்குவதேபோல
விஷசுரத்தை மாற்றுமிந்த மருந்துபாரே.[6]

இதேபாடல் சரவணையூர் வைத்தியர் அருளம்பத்தின் செகராசசேகர ஏட்டுப்பிரதியிலும் நூலக இணையத்தளம் சேகரித்த செகராசசேகரம் ஏட்டுச்சுவடியிலும் (இல. EAP1056_CO12_F017) பின்வருமாறு காணப்படுகின்றது.



ஏட்டில் ஆறாவது வரி: தம்பிரான் வேதமொத்த செகராசசேகரன் வேங்கை செகராசசேகரம் வாகடத் தொகுப்பு. ஓலைச்சுவடி. EAP1056_C012_F017, ஏடு 26, பாடல் எண் 12 (நூலக நிறுவனம்)

கரைத்து எரித்துப் பதந்தனிலே வடித்து
நேரங்
களஞ்சுநெய்தான் அருந்துவீரேற் கமல
மான
விரைத்தொடையிற் செகராச சேகரன்சீர்
மெய்கருணை யெனக்குளிர்ந்து மெள்ள
வரைத்தடந் தோளவன்மதி போலே
யாராய்ந்து
வஞ்சரைத்தானவன் காய்வதெனவே
தரைதானுளோர் விஷமடக்குந் தன்மை
போலத்
தானடக்கும் விஷசுரந் தன்னைத்தானே.[7]

மேற்காணும் பாடல் அகஸ்தியர் இரண்டாயிரத்தில் பின்வருமாறு காணப்படுகின்றது. இப்பாடலில் செகராசசேகரன் என்னும் பெயர் திருமாலன்பர் என்று மாற்றம் பெற்றுள்ளதைக் கவனிக்கலாம்.

கரைத்தரைத்துப் பதத்தினிலே
வடித்துத்தோரங்
கழஞ்சு நெய்தா னருந்துவீரே
கமலமாதின்
விரைத்தோ டையற் புயமேவு
திருமாலன்பர்
மெய்க்கருணை யெனக்குளிர்ந்து
மெள்ள மெள்ள
விரைத்தடந்தோள் வனமதிப்போ
மேலாராய்ந்து
வஞ்சரைத்தானசாய்வ தெனவே சாய்ந்து
தரைக்குள் ளோர் விஷனவனடக்
குவதேபோலத்
தானடக்கும் விஷமசுரந் தன்னைத்தானே.[8]

செகராசசேகரத்தில் ‘முழுத்த சுரத்திலெண்ணெய்’ என்னும் தலைப்பில் பின்வரும் பாடல் காணப்படுகின்றது.

புகலும் முழுத்தசுரம் வரட்சி
போகாப் பித்தமுள்ளுழுலை
இகலும் பழைய வெதுப்பிவைதான்
எட்டினுடனே இரண்டென்னும்
திசையும் புகழும் செகராச
சேகரனின் செற்றார் எனப்போய்
அகலுமெனவே வாகடநூல்
அறிந்தே புகன்றார் அவனியிலே.[9]

‘முழுத்த சுரம்’ என்பது எதனைக் குறிக்கின்றது என்பது அறியப்படவில்லை. எனினும் இந்தக் காய்ச்சலுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள எண்ணையைப் பூசிவர நோயானது பத்துத் திசையும் புகழும் செகராசசேகர மன்னனின் பகைவர்கள் போல் ஓடிப்போய்விடும் என்று இப்பாடலில் கூறப்படுகின்றது.

இதே பாடல் அகஸ்தியர் இரண்டாயிரத்தில் ‘முழுத்த சுரத்திற்குச் சகதேவி எண்ணெய்’ என்னும் தலைப்பின்கீழ் ஒரு சிறு மாறுதலுடன் இடம்பெற்றுள்ளது.

புகலு முழுத்தச் சுரவரட்சி
போகாப்பித்த முள்வெட்கை
இகலும் பழய வெதுப்பிதுதான்
எட்டினுடனே யிரண்டொன்று
திசையும் புகழுந் திருஞான
சம்மந்தன் தான் துதித்திடவே
அகலுமெனவே வாகடநூல்
அறிந்தே புகன்றார் அவனியிலே.[10]

மேற்காணும் பாடலில் செகராசசேகரன் என்னும் பெயருக்குப் பதிலாகத் திருஞானசம்மந்தன் என்னும் பெயர் இடம்பெற்றிருப்பதைக் கவனிக்கலாம்.

செகராசசேகரத்தில் பரிதாபசுரம், பித்தசுரம், விஷசுரம், சன்னிசுரம் என்பவற்றுக்கு மருந்தாகப் பயன்படும் முலைப்பாலெண்ணெய் தயாரிக்கும் முறைபற்றிக் கூறும் இருபாடல்களை அடுத்து நோக்குவோம்.

மங்கையர்பால் நானாழி
இருநாழி பசுப் பால்
வளர் இளநீர் இருநாழி
ஒருநாழியெண் ணெய்
செங்கைகொடு பிடுங்கும்
வேர் சிற்ற மட்டி
சீதேவியார் முத்தக்காசோ
டிருவேரி யிலாமிச்சு
சங்கைபெறு நன்னாரி
அமுக்கிரா யரத்தை
சதகுப்பை நாகம்பூச்
சந்தமகில் கோட் டஞ்
சிங்கைவளர் செகராச
சேகரன் புகலும்
சித்திதரு வெண்கார
மரமஞ்சள் கொள்ளே.

கொள்ளு மதிமதுரங் கச்சோலஞ்
செவ் வள்ளிக்
கொடியேலங் குரோசனி வேற்கொம்போ
டிலவங்கம்
விள்ளு மரமஞ்ச ளுடனே தேவதாரமிக
வொன்றிரு கழஞ்சு வேற்கொம்
பைங்கழஞ்சு
மெள்ள வரைத்துக் கரைத்துப்
பதந்தனிலே வடித்து
மேலிலும் பூசித் தலைதனிலும்
வார்த்திடவே
துள்ளு பரிதாபசுரம் விஷசுரஞ் சன்னி
சுரம்பித்தசுரம் சன்னி வாதசுரம்
போமே.[11]

சிங்கைநகர் வாழும் செகராசசேகரன் கூறியவாறு சிற்றமட்டி, சீதேவியார், முத்தக்காசு (கோரைக்கிழங்கு), இருவேரி,

தொடர்தல் 83ம் பக்கம்

அகஸ்தியர்...

82ம் பக்கத் தொடர்ச்சி...

இலாமிச்சு, நன்னாரி, அமுக்கிராய், அரத்தை, சதகுப்பை, நாகம்பூ, சந்தனம், அகில், கோட்டம், வெண்காரம், மரமஞ்சள் அதிமதுரம், கச்சோலம், செவ்வள்ளிக் கொடி, ஏலம், குறுசானி ஓமம், வேர்க்கொம்பு, இலவங்கம், தேவதாரம் இவற்றைச் சேகரித்துக்கொள்ளவும். இவற்றுள் ஒவ்வொன்றும் இரு களஞ்சும் வேர்க்கொம்பு ஐந்து களஞ்சும் சேர்த்து இவற்றுடன் முலைப்பால் நான்கு நாழியும் பசுப்பால் இரன்டு நாழியும் இளநீர் இருநாழியும் சேர்த்து கரைத்து எரித்துப் பதத்தினிலே காய்ச்சி வடித்து எடுத்த எண்ணெயை உடல்மேல் பூசியும் தலையில் வார்த்துத்தேய்த்தும் வரப் பரிதாபசுரம், விஷசுரம் சன்னிசுரம் பித்தசுரம் வாதசுரம் ஆகிய நோய்கள் மாறிவிடும் என்பது மேற்காணும் இரு பாடல்களிலும் கூறப்படுகின்றது. இப்பாடல்கள் சரஸ்வதி மஹால் வெளியிட்ட அகஸ்தியர் இரண்டாயிரத்திலும் இடம்பெற்றுள்ளன. எனினும் இங்கும் மன்னன் செகராசசேகரன் பெயர் மட்டும் தவிர்க்கப்பட்டிருப்பதை அவதானிக்கலாம்.

மங்கையர் பால் நானாழி பசுப்பால்
வளரிள நீரும்நாழி ஒருநாழியெண்ணெய்
வேங்கை கொடு பிடுங்கும்
வேர் சிற்ற மட்டி
சீதேவியார் முத்தக்காசு
காற்றோட்டிலா மிச்சு
சங்கை பெறுநன்னாரி
அமுக்கிரா யரத்தை
சதகுப்பை நாகம்பூச்
சந்தமகில் கோட்டஞ்
திங்களணி சடைமுடியா
ரருள்சேரு மருந்து
சித்திக்க வென்றே பச்சிலை
மாஞ்சில் கொள்ளே.

கொள்ளு மதுரங் கச்சோலஞ்
கொண்டே செவ்வள்ளிக்
கொடி யேலமு ரோகணிவேர்க்
கொம் போடிலவங்கம்
வுள்ளு மரமஞ்ச லுடனே
தேவதாரம் வோரொன்
றிரு கழஞ்சு வேர்க்கொம் பைங்கழஞ்சு
மெள்ளவரைத்துக் கரைத்துப்
பதத்திலே வடித்து
மேலும் பூசித் தலைமேலும் வார்த்திடவே
துள்ளுபரி தாபசுரம் விஷசுரம் சன்னி
வாதசுரந் தணிந்து போமே.[12]

'முழுத்தசுரத்திற்கு முந்திரிகைப்பழக்குடி நீர்' செய்யும் முறைபற்றி செகராசசேகரம் ஏட்டுப்பிரதி (EAP1056_CO12_F017) ஒன்றில் காணப்படுகின்றது, இப்பாடலின் முதல் இரண்டு வரிகளைக் கொண்ட ஏடு தொலைந்துவிட்டது.

பெயர்த்தோரொன்றிரு களஞ்சாகவே
பொருந்து நீர் இருநாழி கொண்டங்கிதிற்
போட்டெரித் தெட்டில் ஒன்றான
போது தான்
அருந்துவோர் அருந்திற் தீருமென்றுதான்
ஆன சேகரன் வாகடம் சொல்லுமே.[13]

ஏட்டில் தவறிப்போன முதலிரண்டு வரிகளுடன் கூடிய முழுப்பாடலும் அகஸ்தியர் 2000 நூலில் கிடைக்கின்றது. அதே சமயம் பாடலின் இறுதிவரியில் வரும் 'சேகரன் வாகடம் சொல்லுமே' என்பது 'சேவற்காந்தன் சொன்ன வாகடம் சொல்லுமே' என்று மாற்றம் பெற்றுள்ளது.

அருந்து முந்திரிகைப்பழம் பேய்ப்பீர்க்கு
நற்சந்தம் இருவேலி சுக்குடனே
பெருங்குரும்பை மரமஞ்சள்
நன்னாரிவேர்
போர்த்தோரொன்றிரு களஞ்சாகவே
பொருந்து நீர் அங்கிருநாழி
கொண்டங்கிதிற்
போட்டெரித் தெட்டிலொன்றானபோது
வருந்துவோருகிற் தீருமென்று
சேவற்காந்தன்
சொன்ன வாகடம் சொல்லுமே.[14]

தமிழில் மருத்துவ நூல்களை ஆக்கும் முயற்சிகள் சில பொதுசகாப்தம் 16ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் 17ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டன. தனி ஒரு புலவரால் இயற்றப்படாது அரசனால் தெரிவு செய்யப்பட்ட பாவலர் குழு ஒன்றின் கூட்டு முயற்சியில் உருவான தமிழ் மருத்துவ நூல்கள் ஆக்குவித்தோரின் பெயரால் செகராசசேகரம் என்றும் பரராசசேகரம் என்றும் அறியப்பட்டன.

வாகடம் தமிழ் செய்யும் முயற்சிகளுக்கு வேண்டிய ஊக்கமும் ஆதரவும் கொடுத்தவர்கள் அப்போது யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்டு கொண்டிருந்த தமிழரசர்களாவர். இம்மன்னர்கள் செகராசசேகரன், பரராசசேகரன் என்னும் அரியணைப் பெயர்களைச் சூடியிருந்தனர். யாழ்ப்பாண மன்னர்கள் தாம் ஆட்சி செலுத்திய பிரதேசத்தை 'சிங்கை' என்று குறிப்பிட்டனர். பொ.ச. 1500ம் ஆண்டளவில் நல்லூரில் இருந்து ஆட்சி செலுத்திய மன்னன் ஒருவன் சிங்கைச் செகராசசேகரன் என்னும் பெயரால் அறியப்பட்டான். இலங்கையில் தமிழ்நூல்கள் பல தோன்றுவதற்குக் காரணமாய் இருந்தவன் இம்மன்னனே ஆவான்.



ஏட்டில் மூன்றாவது வரி: மொளிதவறாத பெருமானெங்கள் செகராசசேகரன்றான் செகராசசேகரம் வாகடத் தொகுப்பு. ஓலைச்சுவடி. EAP1056_C012_F017, ஏடு 20, பாடல் எண் 9 (நூலக நிறுவனம்).

போர்த்துக்கேயரால் 'செகராஜ' என்றும் 'சிங்கையாரி' (சியங்கெரி) என்றும் அறியப்பட்ட இம்மன்னன் பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தவன். இம்மன்னனுக்கு முற்பட்ட ஈழத்தின் தமிழரசர்களுள் எவரும் தமிழில் நூல்களை ஆக்குவதற்கு ஊக்கமளித்தார்கள் என்பதற்கான வலுவான சான்றுகள் எதுவும் இற்றைவரை கிடைக்கவில்லை.

சிங்கைச் செகராசசேகரன் மிகுந்த தமிழ்ப் பற்று உடையவன் என்றும், செந்தமிழை வளம்படுத்த உதவும் நூல்களை இயற்றும் பாவலர்கட்கு அவரவர் தகுதிக் கேற்ப பொன்னிறைந்த வெற்றிலைத்தட்டம், கெண்டி, பொன்னாபரணம் என்று பரிசில்களை வாரி வழங்குபவன் என்றும் இம்மன்னன் காலத்தில் ஆக்கப்பெற்ற செகராசசேகர மாலை என்னும் சோதிட நூலின் ஆசிரியர் புகழ்மாலை சூட்டியுள்ளார்.

மன்னர் மன்னுசெக ராசசேகரன்
மணவை யாரியவ ரோதயன்
பன்னு செந்தமிழ் வளம் பெறற்குதவு
பரிசிலங்கவர் சித்தியாம்
பொன்னின் மிஞ்சிய
காளாஞ்சி கெண்டிகை
பொலங் கலன் பிறவு மாம்பரிச்
சின்ன முள்ளதொகை யாவுமிவ்விதி
சிறந்த றிந்துரை சேயிழையாய்.[15]

சிங்கைச் செகராசசேகரன் ஆயுள்வேதம், சோதிடம் ஆகிய துறைகளில் விசேட தேர்ச்சி பெற்றிருந்தான் என்னும் செய்தியை இவனது காலத்தில் ஆக்கப்பெற்ற ஒன்றுக்கு மேற்பட்ட தமிழ்நூல்கள் வலியுறுத்துகின்றன. முத்தமிழ் வித்தகன் செகராசசேகரன் ஆயுள்வேதம், சோதிடம் உள்ளிட்ட பல்வேறு துறைகளையும் கற்றறிந்தவன் என்று 'தட்சண கைலாச புராணத்'தின் சிறப்புப் பாயிரத்தில் கூறப்பட்டுள்ளது.

சிங்கையாரியன் சேதுகாவலன்
கங்கைநாடன் கற்றவர் திலகன்
ஆயுள்மறையுடன் அரியநற் சோதிடம்
பாய்திரைக் கடலுட் பலவுமுணர்ந்தோன்
ஒப்பிலா முத்தமிழோர்ந்த
செப்பருஞ் செகராசசேகரனே.[16]

எருதுக்கொடியுடைய செகராசசேகரன் வாகடத்தை (ஆயுள்வேத மருத்துவ நூலினை) நன்கு பயின்று மக்களின் நோய் தீர்த்துப் பல உயிர்களைக் காப்பாற்றினான் என்று இம்மன்னன் பெயரில் ஆக்கப்பெற்ற மருத்துவ நூலான செகராசசேகரம் கூறுகின்றது.[17]

சிங்கைநாடாளும் செகராசசேகரன் போர்க்களத்தில் இறந்து கிடந்த எதிரிகளின் உடல்களை ஆராய்ந்து மனித உடலில் உள்ள எலும்புகள், நாடிகள் போன்ற பலவற்றையும் ஐயத்துக்கு இடமின்றித் தானே அளந்து கண்டறிந்துகொண்டதாக செகராசசேகரத்தின் அங்காதிபாதப் பிரிவில் வரும் பாடல் ஒன்று தெரிவிக்கின்றது.[18]

செகராசசேகர வாகடத்தொகுப்பின் சர்ப்ப சாஸ்திரப்பிரிவில்வரும் பாடல் ஒன்று இம்மன்னன் இலங்கையின் பிறபகுதிகளை ஆட்சிபுரிந்துவந்த மன்னர்களிடம் திறை வாங்கும் அளவுக்கு வலிமை பெற்றிருந்தான் என்பதை உணர்த்துகின்றது.

பாரிலுள்ள சூத்திரனாம் பாம்பு புற்றிற்
பரிந்திருக்கும் இரையெடுக்கிற்
பலவும் தின்னும்
மேருடனே தானாடிற் பத்மராக
மிலங்குமணி முடிபுனையும்
இலங்கை வேந்தர்
சீரியபொன் திறையளக்கச்
செங்கோலோச்சும்
செகராசசேகரமன் சிங்கை மேவும்
ஆரியர்கோன் வெண்குடையில்
நிழலே செய்யும்
அவனிதனைப் பார்த்து நின்றே
அமர்ந் தாடும்மே.[19]

சிங்கைச் செகராசசேகரன் கொடுத்த ஆதரவின் மூலம் செகராசசேகரமாலை என்னும் ஒரு சோதிட நூலும் செகராசேகரம் என்னும் தமிழ் வாகடமும் (மருத்துவ நூலும்) யாழ்ப்பாணத்தில் ஆக்கப்பெற்றன.

செகராசசேகர வாகடத் தொகுப்பு காலப் போக்கில் சிதைவுண்டு நூலின் பாகங்கள் பல்வேறு திசைகளிலும் சிதறுண்டு போய்விட்டன. ஒருசிலர் தமக்குத் தேவையான பகுதிகளை மட்டும் மூல ஓலைச் சுவடிகளில் இருந்து எடுத்துப் பிரதி பண்ணிவைத்துக் கொண்டார்கள். பல பகுதிகள் உள்நாட்டுப்போர்களின் காரணமாக முற்றிலும் அழிந்துப்பொயின. மற்றும் பலபிரதிகள் மேலைத்தேய மருத்துவம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட மாற்றங்களினால் பேணுவாரற்று மறைந்து போயின.

செகராசசேகரத்துக்குரிய பொதுமருத்துவம் தொடர்பான பகுதிகள் பலவும் யாழ்ப்பாணத்துப் பாரம்பரிய மருத்துவர்களிடம் ஏட்டுச்சுவடிகளாகவே இன்னமும் உள்ளன. இவற்றுள் ஒருசில பகுதிகளே செகராசசேகர வைத்தியம் என்னும் பெயரில் அச்சில் வெளிவந்துள்ளன. செகராசசேகரத்தின் அங்காதிபாதப் பிரிவும் சர்ப்ப சாஸ்திரப் பிரிவும் இன்று முழுமையாகக் கிடைக்கப் பெறவில்லை.

யாழ்ப்பாணத்து அரசர்கள் காலத்தில் ஆக்கப்பெற்ற தமிழ் மருத்துவ நூல்கள் தஞ்சாவூர் சரபோஜி மகாராசாவின் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டதாக டாக்டர் ஜோன் முத்தையா என்னும் சுதேச மருத்துவர் 1972ம் ஆண்டில் தாம் எழுதி வெளியிட்ட சித்தவைத்திய சிகிச்சைக்கிரமம் என்னும் நூலில் குறிப்பிட்டிருப்பது இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று.[20]

தஞ்சையை ஆண்ட கடைசி மராட்டிய வம்சத்து அரசனாகிய இரண்டாம் சரபோஜி (1798-1832 CE) சம்ஸ்கிருதம், தமிழ், மராட்டியம், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய பலமொழிகளில் தேர்ச்சி பெற்றவர். மருத்துவத் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். கண் அறுவைச் சிகிச்சை செய்வதில் நிபுணத்துவம் பெற்றவர். தன்வந்தரி மஹால் என்னும் பெயரில் ஒரு வைத்தியசாலையை நிறுவியதோடு இந்தியா முழுவதிலும் இருந்தும் பிறநாடுகளில் இருந்தும் ஏட்டுசுவடிகளையும் நூல்களையும் தருவித்துத் தஞ்சாவூரின் புகழ்பெற்ற பழைய நூலகமான சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தை வளம்படுத்தியவர். இவரது காலத்தில் இலங்கையில் இருந்தும் ஏட்டுச்சுவடிகள் பெறப்பட்டு சரஸ்வதி மஹால் நூல்நிலையத்தில் பேணப்பட்டதில் ஆச்சரியம் இல்லை. இத்தகைய சுவடிகளுள் ஒன்றே அகஸ்தியர் 2000 என்னும் பெயரில் இன்று அறியப்படும் தமிழ் மருத்துவநூலாகும்.

மேற்படி நூலில் செகராசசேகரமன்னன் பெயர் நீக்கப்பட்டு அதற்குப்பதிலாக வேறுபெயர்களைத் திணிக்கும் முயற்சி ஒருசிலரால் இலங்கையிலேயே மேற்கொள்ளப்பட்டிருத்தல் கூடும் என நம்புவதற்கும் இடமுண்டு. இலங்கையில் உள்ள ஏட்டுச்சுவடியொன்றில் இத்தகைய திருத்தங்களைக்காணமுடிந்தது.

அச்சில் வெளிவந்துள்ள செகராசசேகரத்தில் 'புகலு முழுத்தசுரம் என்னும்' என்று தொடங்கும் பாடலில் வரும் 'செகராசசேகரனின் செற்றார் எனப்போய் அகலுமெனவே' என்பதற்குப்பதிலாக அகஸ்தியர் இரண்டாயிரத்தில் 'திருஞானசம்மந்தன் தான் துதித்திடவே' என்னும் சொற்றொடர் இடம்பெற்றுள்ளதை ஏற்கெனவே சுட்டிக் காட்டியுள்ளேன். நூலக இணையத்தளத்தை நடத்துபவர்களால் சேகரிக்கப்பட்ட EAP1056_CO12_F001 இலக்க ஏட்டுச் சுவடியில் இதே பாடலில் செகராசசேகரம், திருஞானசம்மந்தன் ஆகிய இரண்டு பெயர்களுமே தவிர்க்கப்பட்டு அவ்விடத்துக்கு 'திருச்சிற்றம்பலவன் திருத்தாள் தொழுதிடவே' என்னும் தொடர் இடம்பெற்றிருப்பதைக் காணலாம்.[21]

EAP1056_CO12_F001 போன்ற, செகராசசேகரன் பெயர் நீக்கப்பட்ட ஏட்டுச்சுவ

தொடர்தல் 84ம் பக்கம்

அகஸ்தியர்...

83ம் பக்கத் தொடர்ச்சி...

டியொன்றே தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் நூல்நிலையத்தினரைச் சென்றடைந்திருக்க வேண்டும். செகராசசேகரன் பெயர் நீக்கப்பட்டபின்னர் இந்த மருத்துவ நூலுக்கு அகஸ்தியர் நூல் என்னும் பெயரோ, வேறு எந்தப் பெயரோ வழங்கப்படுவதில் எந்தக் கேழ்வியும் எழாது.

செகராசசேகர மன்னனை எதிர்த்தவர்கள் ஓடி ஒளிந்தமை பற்றியும் அவர்கள் தமது செயலுக்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்ட பின்னர் அவர்கள் துயரம் நீங்கப்பெற்றமை குறித்தும் கூறும்பாடல்கள் செகராசசேகரத்தில் காணப்படுகின்றன. நூலக இணையத்தலத்தோரால் சேகரிக்கப்பட்ட EAP1056_CO12_F017 இலக்க செகராசசேகரம் ஏட்டுச்சுவடியில் இதுவரை வெளிவராத பாடல் ஒன்று முழுமையாகக் கிடைக்காவிடினும் ஒரு சிறு வரலாற்றுக் குறிப்பொன்றைத் தந்துள்ளது.

அருந்தும் வொடி புரிவாரை சா.....களு
கிறுந்.....ணிச்செயத்
திருந்து மொழி தவறாத பெருமான் எங்கள்
செகராசசேகரன்றான் சீறிவரவே
பொருந்து.....திரிந்துள்ள வருந் தேடும்
பொன்னடியைத் தொழத் துயரமற்றாப் போலே
வருந்து முடலுள வுதிரம் பருகுஞ் சேட்டும
சுரத்தோ டிளைப்பிருமல் மாறிப் போமே.[22]

செகராசசேகரமன்னனுக்கு எதிரிகள் பலர் இருந்தார்கள் என்பது தெரிகின்றது. இவர்களுள் இம்மன்னனது உறவினர் சிலரும் சிற்றரசர்கள் சிலரும் இருந்தனர். போர்த்துக்கேயரின் முழு எதிரியாகவும் இம்மன்னன் செயல்பட்டான். போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைத் தம் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவந்த பின்னர் அவர்களால் மிகவும் வெறுக்கப்பட்ட சிங்கைச் செகராசசேகரன் பெயரைச் சொல்லவே பலரும் பயப்பட்டிருத்தல்கூடும். இக்கால கட்டத்தில் சிலர் தம் வசமிருந்த செகராச சேகர வாகடப் பிரதிகளில் இம்மன்னனின் பெயருக்குப் பதிலாக பொருத்தமான வேறு பெயர்களை எழுதிச் சேர்த்திருக்க வாய்ப்புண்டு.



ஏட்டில் முதலாவது வரி: புகலும் திருச்சிற்றம்பலவன் றிருத்தாள்தொளு செகராசசேகரம் வாகடத் தொகுப்பு. ஓலைச்சுவடி. EAP1056_C012_F001, பாடல் 108, (நூலக நிறுவனம்)

கடைக்குறிப்புகள்:

முதன்மை நூற்பட்டியல்:

- 1. அகத்தியர் 2000, (பதிப்பாசிரியர் எஸ். வெங்கடராஜன்), சரஸ்வதி மஹால், தஞ்சாவூர், 1958, பாகம் 1 mukavurai.
- 2. செகராசசேகரம் ஏட்டுப்பிரதி (பாலசுப்பிரமணியம் சிவகடாட்சம் ஆக்கிய பண்டைய மருத்துவமும் பயன் தரு மூலிகைகளும் என்னும் நூலில் (1979) பக்கம் 58 எடுத்துக்காட்டப்பட்டுள்ளது).
- 3. சிவகடாட்சம் பால, தமிழர் மருத்துவம் அன்றும் இன்றும், வானவில் வெளியீடு, திருகோணமலை 2006, பக்கம் 75.
- 4. செகராசசேகரம் வாகடத் தொகுப்பு. ஓலைச்சுவடி. EAP1056_C012_F017 (நூலக நிறுவனம்) ஏடு 26, பாடல் எண் 12.
- 5. செகராசசேகர வைத்தியம், (முதற்பதிப்பாசிரியர் ஐ. பொன்னையாபிள்ளை,) (மீள்பதிப்பு: மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம், சுகாதார அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், இலங்கை 2000, பக்கம் 3 பாடல் 22.
- 6. செகராசசேகர வைத்தியம், (முதற்பதிப்பாசிரியர் ஐ. பொன்னையாபிள்ளை,) (மீள்பதிப்பு: மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம், சுகாதார அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், இலங்கை 2000, பக்கம் 19 பாடல் 10.
- 7. செகராசசேகரம் வாகடத் தொகுப்பு. ஓலைச்சுவடி. EAP1056_C012_F017 (நூலக நிறுவனம்).
- 8. அகத்தியர் 2000, (பதிப்பாசிரியர் எஸ். வெங்கடராஜன்), சரஸ்வதி மஹால், தஞ்சாவூர், 1958, பாகம் 1 பக்கம் 171 பாடல் 149.
- 9. செகராசசேகர வைத்தியம், (முதற்பதிப்பாசிரியர் ஐ. பொன்னையாபிள்ளை,) (மீள்பதிப்பு: மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம், சுகாதார அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், இலங்கை 2000 பக்கம் 21 பாடல் 12.
- 10. அகத்தியர் 2000, (பதிப்பாசிரியர் எஸ். வெங்கடராஜன்), சரஸ்வதி மஹால், தஞ்சாவூர், 1958, பாகம் 1 பக்கம் 166 பாடல் 139.
- 11. செகராசசேகர வைத்தியம், (முதற்பதிப்பாசிரியர் ஐ. பொன்னையாபிள்ளை,) (மீள்பதிப்பு: மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம், சுகாதார அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், இலங்கை 2000 பக்கம் 24 பாடல் 1, 2.
- 12. அகத்தியர் 2000, (பதிப்பாசிரியர் எஸ். வெங்கடராஜன்), சரஸ்வதி மஹால், தஞ்சாவூர், 1958, பாகம் 1 பக்கம் 143, 144 பாடல் 86, 87.
- 13. செகராசசேகரம் வாகடத் தொகுப்பு. ஓலைச்சுவடி. EAP1056_C012_F017 (நூலக நிறுவனம்).
- 14. அகத்தியர் 2000, (பதிப்பாசிரியர் எஸ். வெங்கடராஜன்), சரஸ்வதி மஹால், தஞ்சாவூர், 1958, பாகம் 1 பக்கம் 163 பாடல் 132.
- 15. செகராசசேகரமாலை, (பதிப்பாசிரியர் பொ. இரகுநாதையர்), கொக்குவில். 1942, பலவினைப்படலம் பாடல் 10.
- 16. தட்சிணகைலாசபுராணம், (பதிப்பாசிரியர் பொ. வைத்தியலிங்க தேசிகர்), பருத்தித்துறை, 1916, சிறப்புப்பாயிரம்.
- 17. சிவகடாட்சம் பால, தமிழர் மருத்துவம் அன்றும் இன்றும், வானவில் வெளியீடு, திருகோணமலை 2006, பக்கம் 75.
- 18. செகராசசேகர வைத்தியம், (முதற்பதிப்பாசிரியர் ஐ. பொன்னையாபிள்ளை,) (மீள்பதிப்பு: மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம், சுகாதார அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், இலங்கை 2000, பக்கம் 3 பாடல் 22.
- 19. பால. சிவகடாட்சம், தமிழர் மருத்துவம் அன்றும் இன்றும், வானவில் வெளியீட்டகம், திருகோணமலை, இலங்கை, 2006 பக்கம் 84.
- 20. முத்தையா ஜோன், ஏ., சித்தவைத்திய சிகிச்சைக்கிரமம், கலாபவன் அச்சகம், பருத்தித்துறை, 1972 பக்கம் 15.
- 21. செகராசசேகரம் வாகடத் தொகுப்பு. ஓலைச்சுவடி. EAP1056_C012_F001 (நூலக நிறுவனம்), பாடல் எண்108.
- 22. செகராசசேகரம் வாகடத் தொகுப்பு. ஓலைச்சுவடி. EAP1056_C012_F017 (நூலக நிறுவனம்) ஏடு 20, பாடல் எண் 9.

Sivakadadcham@thaiveedu.com

வீட்டுக்கடன், வியாபாரக்கடன், தனிப்பட்டகடன் தேவைகளுக்கு என்னை முதலில் அழையுங்கள்

வருமான உத்தரவாதம் இல்லாமலே பெற்றுக் கொடுக்கப்படும்

Mortgage for:

- Self Employed
- New Immigrant
- Investment
- Transfer between family
- Bad Credit
- Second Mortgages

Business Mortgage & Loan :

Personal Line of Credit & Loan

* some conditions apply

KAPITAL CARE MORTGAGE INC. Lic:-12623

416.873.5780

கேதீஸ்

சிவசுப்பிரமணியம்

Mortgage Agent - (Lic # M08006105)

5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5

Proud to be serving you through these two Funeral Homes!

GTA EAST

OGDEN
FUNERAL HOMES
4164 Sheppard Ave E,
Scarborough, ON M1S 1T3.
www.ogdenfuneralhome.com

GTA WEST

LOTUS
Funeral and Cremation Centre Inc.
121 City View Dr,
Etobicoke, ON M9W 5A8.
www.lotusfuneralandcremation.com

:: Family owned and operated for over 70 years
:: East Toronto location just off Hwy 401, between Kennedy Road and Midland Ave
:: Affordable funeral plans to meet your budget

:: On-Site Crematorium
:: West Toronto location just off Hwy 401,410, 427 & 407 North of Belfield Rd and East of Hwy 27
:: Beautiful Facility With Up To 500 Seating

State of the art technology
Financing plans available for both preplanned funerals and at-need funerals
Diverse staff to care for your needs, honour your traditions and speak your language
Travel Repatriation Insurance available (**$495.00 only**) for your lifetime coverage

Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director
Licenced Insurance & Investment Advisor

Direct: **416-834 5753**
Email: advisorpat10@gmail.com

"Serving With Dignity, Compassion and Excellence"

புதிய உலக ஒழுங்கில் தமிழ்த் தேசியத்தின் வகிபாகம்

- ந. இரவீந்திரன் -

இன்று முகங்கொடுத்தவாறுள்ள புதிய கொரோனா நோய்க்கு எதிரான பேராட்டத்தின் முடிவுடன் ஒரு புதிய உலக ஒழுங்கு ஏற்படச் சாத்தியம் உள்ளதாகப் பரவலான அபிப்பிராயம் நிலவுகின்றது. சீனாவில் முதலில் கண்டறியப்பட்ட போதிலும் மேற்குலகில் - குறிப்பாக அமெரிக்காவில் மிகப்பெரும் சேதத்தை இந்நோய் ஏற்படுத்திவிட்டிருப்பது வணிகமயப்பட்ட மருத்துவமுறையின் காரணத்தினால் என்பது உலகறிந்த உண்மை. ஆயினும் அதனை மூடி மறைத்துக்கொண்டு சீனாவுக்கு எதிரான அரசியல் யுத்தமாக மாற்றுவதற்கு மேற்குலக அரசியல்வாதிகளும் அவர்களுக்கு சார்பான ஊதுகுழல்களாய் உள்ள தொடர்பு சாதனங்களும் முற்பட்டு நிற்கின்றன.

உண்மையை மறைத்து அரசியலாக்கும் தேவை ஏகாதிபத்திய நாடுகளுக்கு ஏன் ஏற்படுகின்றது? முன்னதாக நோய்க் கொடூரம் உணரப்பட்ட போது ஐரோப்பிய நாடுகளுக்கு சீனா பேருதவியை நல்கியது. அமெரிக்கா எந்த உதவியையும் செய்யாதது மட்டுமன்றித் தட்டிப்பறிப்பதாகவும் நடந்து கொண்டிருந்தது. இதன் எதிர்வினையாக அமெரிக்காவுக்கு எதிராக பல ஐரோப்பிய நாடுகள் சீனாவுடன் பொருளாதார உறவுகளை வளர்க்கும் நிலை ஏற்படலாம் என்ற தோற்றம் உருவாகத் தொடங்கி இருந்தது. இப்போக்கு தமது ஏகாதிபத்திய நலனுக்கு ஆபத்து எனத் தெரிந்ததும் அமெரிக்கத் தரப்பின் பாரதூரமான தவறுகளை காணவொட்டாமல் தடுக்கும் வகையில் முதலாளித்துவக் கும்பல் ஒன்று திரண்டு சீன எதிர்ப்பு அரசியலை முடுக்கிவிடத்தொடங்கி விட்டுள்ளது.

சீனா பற்றி மக்களுக்கு நல்லபிப்பிராயம் வளர்வது, கெடுவார்த்தையாகக் காட்டப்பட்டுள்ள சோசலிசத்தின் மீது நாட்டம் கொள்ள வகை செய்துவிடும் என்பதனாலாகும். இத்தனைக்கும் சீனா முழுநிறைவான சோசலிச முன்னெடுப்புடன் இல்லை. சந்தை சோசலிசம் எனும் புதிய வடிவத்தை முன்னிறுத்தி இயங்கி வருகிறது. அண்மையில், சீனாவின் சுகாதாரத்துறை நோய்த்தொற்றினை இன்னும் துரித கதியில் தடுக்கத்தவறியதில் மருத்துவத்துறை பொதுத் துறையாக்கப்படாதிருந்த கால தாமதம் காரணமாகி இருந்தது எனும் சுயவிமரிசனத்தை வெளியிட்டிருந்தது. அவ்வாறு மாற்றப்பட்ட பின்னரே நோய் கட்டுக்குள் கொண்டுவரச் சாத்தியம் ஏற்பட்டிருந்தது.

தமது பொருளாதார விருத்திக்கு அவசியப்படுகிற அளவில் சந்தை நிலவரத்துடன் இசைவதும் மக்கள் நலன் என வருகிறபோது சோசலிசக் கட்டமைப்புக்கு வேகமாக எந்தத் துறையையும் மாற்ற ஏற்றதான அரசியல் தலைமையைக் கொண்டிருப்பதும் சீனாவுக்கு சாதகமான அம்சமாயுள்ளது. சோலியத்யூனியன் இருந்த காலத்தில் ஐரோப்பிய நாடுகள் பலவும் பொதுத்துறையை இயக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தன. இன்றைய கொள்ளை நோயில் அந்தப் பண்பினைத் துரிதமாக நடைமுறைப்படுத்திய நாடுகள் நோய்த் தாக்கத்தை மட்டுப்படுத்த வல்லமை கொண்டிருந்தன. இன்னும் சிறப்பாக மக்கள் நலன் பேணப்பட ஏற்ற அரசியல் வடிவத்தில் நாட்டம் கொள்ளும் நிலை தமது நாடுகளில் எழுந்து விடக் கூடாது என்பதனாலேயே பலவீனமான தர்க்க நியாயங்களோடு சீன எதிர்ப்பை முன்னிறுத்த முனைகின்றனர்.

இத்தகைய சீன எதிர்ப்பு பெரும்பான்மையான தமிழ் தேசியர்களுக்கு உவப்பான ஒன்று தான். கூடவே ஏகாதிபத்தியத்துடன் ஒட்டுறவாட ஏற்றதான மேலாதிக்கத் தேசிய முனைப்பே நீண்ட காலமாக ஈழத் தமிழ் தேசியத்தின் இயக்கு சக்தியாக இருந்து வந்துமுள்ளது. விடுதலைத் தேசிய உணர்வுடைய பலரும் இத்தகைய பண்புக்கூறுடன் இயங்கிவருவது பற்றிய புரிதலின்றி அதற்கு ஆகுதியாகத் தமது இன்னுயுரை காணிக்கையாக்கி வந்துள்ளனர். விடுதலைத் தேசிய நாட்டமுள்ளவர்கள் வரலாற்றுச் செல்நெறியைப் புரிந்து



கொண்டு இன்றைய மாறிவரும் உலகில் தமது முற்போக்குப் பங்களிப்பை எவ்வகையில் ஆற்ற இயலும் என்பதன் அடிப்படையில் சிந்திப்பது அவசியமாகிறது.

முதலாம் உலக யுத்தமும் சோசலிச சகாப்தமும்:

இன்று மேலெழுந்து வரும் அமெரிக்க - சீன இடையிலான 'புதிய பனிப்போர்' பற்றிய புரிதலை எட்டுவதற்கு முன் தேவையாக ஏற்கனவே இடம்பெற்றிருந்த பழைய பனிப்போர் குறித்த அடிப்படை விளக்கத்தை எட்டும் அவசியம் உள்ளது. முதலாம் உலக யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பொழுது புதிய போக்கு ஒன்று உலகை மாற்றிப் புனையும் வகையில் எழுந்திருந்தது. ஒக்டோபர் புரட்சி வாயிலாக ரஷ்ய ஏகாதிபத்தியம் வீழ்த்தப்பட்டு, அதனால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த தேசங்களையும் ஒன்றிணைத்ததான 'சோவியத் சோசலிச குடியரசுகளின் ஒன்றியம்' தோற்றம் பெற்றிருந்தது. பாட்டாளி வர்க்கப்புரட்சிகளின் கொந்தளிப்பு மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து கிழக்கு ஐரோப்பாவுக்கு மாறிய சூழலில் ரஷ்யப் பாட்டாளி வர்க்கம் தலைமை தாங்கி முன்னெடுத்த அந்தப் புரட்சியில் ஒடுக்கப்பட்ட தேசங்களின் இணைப்பு வகித்த பங்குப்பாத்திரம் போதிய கவனிப்பை ஈர்த்திருக்கவில்லை.

ரஷ்யப் புரட்சிக்குத் தலைமை தாங்கியதோடு அதற்கான சித்தாந்தப் பரிணமிப்பை மார்க்சியத்தினின்றும் விருத்தி பெறச் செய்த லெனின், ஒடுக்கப்பட்ட தேசங்கள் இணைந்து புரட்சியை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஏற்றதான சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை முன் வைத்திருந்தார். வரலாற்றுச் செல்நெறி பாட்டாளிவர்க்கப் புரட்சியால் அன்றி, பாட்டாளி வர்க்கச் சிந்தனை முறையைக் கையேற்று இயங்கும் தேச விடுதலை வாயிலாக சோசலிசத்தை வென்றெடுப்பதாக மாறுதலடையும் சத்தியாக சோவியத் யூனியன் உருவாக்கம் அமைந்திருப்பதற்கான கோட்பாட்டு முன்வைப்பு ஒன்றினை லெனினால் முன்வைக்க இயலாமல் போய்விட்டது. புரட்சிக்குப் பின் ஒரு தசாப்தம் வரை அவரது வாழ்நாள் நீடித்திருப்பின் அத்தகைய முன்வைப்பு சாத்தியப்பட்டிருக்கும்.

இவ்வாறு சொல்வதற்கான முகாந்திரம் என்ன? சோவியத் சோசலிசம் குறைவிருத்திப் பொருளாதார நிலையிலுள்ள ரஷ்யாவில் முன்னெடுப்பதனைக் கவனத்தில் எடுத்த லெனின் 'புதிய பொருளாதாரக் கொள்கை' ஒன்றை முன்வைத்தார் அதனை முன்னெடுத்த ஸ்டாலின் 1928 உடன் அதற்கான தேவை முடிவடைந்து விட்டதாக கருதி மேற்கொண்டு மேற்கு ஐரோப்பிய நாடொன்றின் பாட்டாளி வர்க்கம் முன்னெடுத்திருக்க ஏற்ற சோசலிசக் கட்டமைப்பு முறைக்கு மாறியிருந்தார். அகநிலைக் கோட்பாட்டை விடவும் புறநிலையின் கோரிக்கைகளைக் கவனத்தில் எடுத்து ஏற்ற புதிய கோட்பாடுகளை முன்னிறுத்தி இயங்குவதற்கு அழுத்தம் கொடுப்பவரான லெனின், ஆசிய உற்பத்தி முறையைக் கொண்டுள்ள ஒடுக்கப்பட்ட தேசங்களையும் சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியத்துக்குத் தொடர்ந்தும் 'புதிய பொருளாதாரக் கொள்கை' பின்பற்றப்படும் அவசியம் நீடித்திருப்பதனை வலியுறுத்தி இருப்பார்.

ஆசிய நாடுகளில் நிலவியது வெறும் குறைவிருத்திப் பொருளாதார முறையல்ல. ஐரோப்பாவினின்றும் மாறுபட்ட தான 'ஆசிய உற்பத்திமுறை' எனும் வேறுபட்டதானதொரு வடிவம் இது. வர்க்க சமூக முறையுடைய ஐரோப்பாவை விடவும் நிலப்பிரபுத்துவ கால விருத்தியில் அதிக வளர்ச்சி நிலைகொண்ட உலகின் முதல் நிலை நாடுகளாக இந்த ஆசிய உற்பத்தி முறை உடைய நாடுகளே திகழ்ந்திருந்தன. அந்த உச்சத்தின் சீரழிவுச்சிதைவுகளில் நிலப்பிரபுத்துவம் 'கொடுங்கோல் ஆட்சியை' சமூகப் பிளவுகளைப் பயன்படுத்தி முன்னெடுத்தமையால் முதலாளித்துவ மாற்றம் துரிதப்படாமல் போக, பின்தங்கிய நாடுகளாக இருந்து வளரத் துடித்த வேகத்துடன் முன்னேறி வந்த ஐரோப்பிய நாடுகளுக்கும் அவர்களது மூலதனத்துக்கும் அடிமைப்பட நேர்ந்தது.

எமது நாடுகளைச்சுரண்டி உச்ச வளர்ச்சி அடைந்த அதே மேலை நாடுகள் சோசலிசம் எனும் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு முன்னேற இயலாதிருக்கும் இன்றைய 'குறை விருத்தியுடன்' அந்தக்கால எமது தேசங்களின் நிலப்பிரபுத்துவப் பொருளாதார 'நிலையின் வீழ்ச்சியை' ஒப்பு நோக்க இயலும்.

இத்தகைய மாறுபட்ட சமூக - பொருளாதார அமைப்புடைய சீனா ஏகாதிபத்தியப் பிணைப்பைத் தகர்த்து சோசலிச மாற்றத்துக்கு முற்பட்ட போது பாட்டாளி வர்க்கப் புரட்சியாக அன்றித் தேசவிடுதலை வாயிலாகப் பெறும் மாற்றம் என்ற வகையில் 'பாட்டாளி வர்க்க சர்வாதிகராம்' என்பதற்கு மாறாக 'மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம்' எனும் அரசியல் வடிவம் கையேற்கப்பட்டிருந்தது. ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் எனும் எதிரிகளைத் தகர்த்து பாட்டாளி வர்க்கம், சிறு முதலாளி வர்க்கம், தேசிய முதலாளி வர்க்கம் என்ற பிரிவுகளை ஐக்கியப்படுத்திய விவசாயிவர்க்கப் புரட்சியாகவே அந்தச் சீனப்புரட்சி திகழ்ந்தது. ஏகாதிபத்தியத்துடன் உறவாடும் பெரும் தரகு முதலாளி வர்க்கம், நிலப்பிரபுத்துவ வர்க்கம், ஏகாதிபத்தியம் என்பவற்றை 'எதிரி' எனக் கணித்து ஏனையவர்களை 'மக்கள்' எனப் பரந்துபட்ட ஐக்கிய முன்னணியுடன் கூடிய 'கூட்டரசாங்கம்' 1949 விடுதலையுடன் மக்கள் சீனக் குடியரசை நிறுவியிருந்தது. அரசு ஒரு வர்க்கத்துக்கான கருவி எனும் லெனினது கருத்தில் கூட்டரசாங்கம் எனும்

தொடர்தல் 88ம் பக்கம்

புதிய உலக...

87ம் பக்கத் தொடர்ச்சி...

கோட்பாட்டை ஏற்க இயலாது. மாஓ சேதுங் சிந்தனை முன்னிறுத்திய கூட்டர சாங்கக் கோட்பாடு தனியே தேச விடு தலை பெறுவதற்கான அரசியல் வடிவம் மட்டுமல்ல 'ஆசிய உற்பத்தி முறை' எனும் வேறுபட்ட சமூக அமைப்பு வடிவத்துக்கும் உரியதாகும். இதனைக்கவனத்தில் கொள்ள இயலாத தடை நிலவியது. லெனி னிசம் 'ஏகாதிபத்தியத்தினதும் பாட்டாளி வர்க் கப் புரட்சிகளினதும் சகாப்தத்துக்கான மார்க்சிசம்' எனக் கருதப்பட்ட தவறு இன் னமும் நீடிக்கிறது. 'ஏகாதிபத்தியத்தொ டக்க காலத்தின் பாட்டாளி வர்க்கப் புரட்சி வடிவத்தை நடைமுறையாக்கிய அதே வேளை தேசவிடுதலைப் புரட்சிகளுக்கான வடிவமாற்றக் காலகட்டத்தின் இணைப் புச் சந்திக்கு உரிய மார்க்சியமே லெனி னிஸம்' என்ற புரிதல் எட்டப்படாமலே போனது. இதன் பேறாக 'தேசிய விடு தலை வாயிலாக வென்றெடுக்கப்படும் சோசலிசத்துக்கான மார்க்சிஸ - லெனினி ஸமே மாஓயிஸம்' எனும் பரிணமிப்பை எட்ட இயலாது 'மாஓசேதுங் சிந்தனை' என்பதான அரைக்கிணறு தாண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இன்றைய சீனாவும் புதிய கோட்பாட்டு உருவாக்கத்தை முன் வைக்க முற்படவில்லை. இருந்தபோதிலும், மார்க் சிய வழிகாட்டலை முன்னிறுத்த முயல்வ தனால் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தை அனுமதித்து ஏகாதிபத்திய சகாப்தத்தில் முன்னெடுக்கத்தக்கதான 'சந்தை சோசலி சம்' எனும் வடிவத்தைப் பரீட்சித்து வரு கிறது.

மேலாதிக்க வல்லரசுகளின் போட்டிக்களம்:

இதுவரையான உலகப் போக்கில் வல்ல ரசுகளின் போட்டாபோட்டியானது நாடுக- ளின் அரசியல் சமூகபொருளாதார நிலைப் பாடுகள் மீது தாக்குறவு செலுத்துவதாக இருந்து வந்துள்ளது. இனியும் அமெ ரிக்கா - சீன வல்லசுகளின் போட்டிக்கள மாக உலக இயக்கம் அமையப் போகி- றதா? இந்தியா 2020ல் வல்லரசாகும் என்ற அப்துல்கலாம் கனவு பலிக்கும் வகை யில் சீனாவில் இருந்து பல்தேசக் கொம் பனிகள் வெளியேறி இந்தியாவில் முதலி டப் போகின்றன என்பதான ஆரூடங்கள் இன்று பெருமளவில் பேசுபொருளாகி உள்ளன.

இந்தியா எப்போது - எப்படி வல்லரசாகும் என்பது பற்றிய சர்ச்சைக்குள் இப்போது நாம் போக வேண்டியதில்லை. எமது தெற்காசியப் பிராந்தியத்தில் ஏற்கனவே இந்தியா பிராந்திய மேலாதிக்க வல்லர சாக இயங்கியவாறு அயல் நாடுகளின் அரசியல் மீது தலையீடுகளை மேற்கொண் டபடி இருக்கிறது என்பது தான் இங்கே எமது அக்கறைக்குரிய விடயம். சிங்கள ஊடகம் ஒன்றுக்கு எம்.ஏ. சுமந்திரன் வழங்கிய பேட்டி பெரும் சர்ச்சையை ஏற் படுத்தி இருப்பதும் சம்பந்தனுக்கு 'நாங் கள் உங்களுடன் இருக்கிறோம்' என இந்தியத் தரப்பு சொல்லியிருப்பதும் எதிர்கட்சிகள் அனைத்தும் பிரதமரின் அலரி மாளிகைக்கான அழைப்பை நிராகரித்த போதிலும் கூட்டமைப்பினர் சென்று பிரத மரோடு உரையாடித் திரும்பி இருப்பது மான நிகழ்வுகள் இனிவரும் காலத்துக் கான வரலாற்றுச் செல்நெறியை உய்த்து ணர வைத்துள்ள சமிக்ஞைகள் என்பது கவனிப்புக்குரியதாகும்.

இன்று தமிழர் தலைமையெனக் கூட்ட மைப்பு இவ்வாறு இயங்குவதற்கு எதிர்ப் புத் தெரிவித்து தீவிரவாத தமிழ் தேசியம் பேசுவோர் பாராளுமன்றத் தலைமையைப் பெறும் எத்தனத்துடன் மே 18ல் களத்தில் இறங்கியுள்ளனர். சுமந்திரன் புலிகளது ஆயுதப் போராட்டத்தைக் கொச்சைப்ப டுத்தி விட்டதாகக் கூறுகின்ற இவர்கள் ஏதோவொரு ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கும் இலட்சிய வெறியோடு களத்தில் குதிப்பதான மயக்கம் எவருக் கும் இல்லை. பாராளுமன்ற ஆசனத்தில் ஏறிக்குந்தும் ஆவலின் பேரிலான புலிப் பாசம் அது என்பதில் எவருக்கும் சந்தேகம் இருக்கப்போவதில்லை. இலங்கை அர சுக்கோ சிங்கள மக்களுக்கோ விளக்கம் சொல்லவோ, அவர்களுடன் உரையாடவோ தமிழ் தேசியத்துக்கு அவசியமில்லை. சர் வதேசக் கவனத்தை ஈர்த்து எமக்கான தீர்வை வென்றெடுப்பதே அவசியம் என் பதால் அதற்கு உரியவர்களான தம்மைப் பாராளுமன்றம் அனுப்ப வேண்டும் என் பதே இந்த எதிர்ப்பாளர்களின் குரல். ஒற் றுமையுடன் இவர்களைப் பாராளுமன்றம் அனுப்பிவிட்டால் உடனே சர்வதேசம் தமிழீழத்தைக் கூட இவர்களிடம் கைய ளித்துச் சிங்களப் பாராளுமன்றத்தில் போய் வெட்டிப்பேச்சுப் பேச அவசிய மில்லாத நல்லதொரு முடிவைத் தந்து விடும் என்பது போன்ற பழம்பெரும் கன வையே இவர்கள் தருவதற்கு முற்படுகின் றனர்.

> **"மூன்றாம் உலக யுத்தம் ஒன்று ஏற்படும் பட்சத்தில் தேச எல்லைகள் இருக்கப்போவதில்லை என்ற வகையில், கேந்திர முக்கியத்துவமிக்க தளங்களில் எவரது படைகளும் காலூன்ற இடமுள்ளது. யுத்தம் மூளும் பட்சத்தில் எவ்வாறு இயங்குவது என்ற தூரநோக்குடன் செயற்பட இடமிருந்தாலும், இன்றைய செயற்பாட்டில் இருதரப்பு நலன் பேணப்படுகிறதா என்பதையும் கவனங்கொள்ள வேண்டியுள்ளது."**

இனவாதத்தை வைத்து இவர்கள் மட்டுமே பிழைப்பு நடத்த உரிமை உடையவர்கள் இல்லை. சிங்களப் பேரினவாத இனவெ றியை முன்னிறுத்தி ஜனாதிபதி ஆகி விட்டவர், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற் காக மே 19 வெற்றித்திருநாள் உரை யைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். உள்நாட்டு யுத்தத்தை எண்பதாம் ஆண் டுகளின் தொடக்கத்தில் முன்னெடுப்பதற்கு ஏற்றதாக 'யுத்தம் என்றால் யுத்தம், சமா தானம் என்றால் சமாதானம்' எனப் பிரக டனப்படுத்திய ஜே.ஆரின். முழக்கத்துக் குச் சமனாக 'போர்க்குற்ற விசாரணைக்கு முற்படும் சர்வதேச அமைப்புகளில் இருந்து இலங்கை வெளியேறும்' என்பது போன்ற பிரகடனத்தை மே19 உரையில் இன்றைய ஜனாதிபதி முன் வைத்துள் ளார். சர்வதேச விசாரணை என்பதை ஐ.நா. சபையில் முன்வைக்கப்பட்டால் முன்னர் போல சீனா, ரஷ்யா, கியூபா போன்ற நாடுகள் எதிர்க்கும் எனும் துணிச்சல் ஜனாதிபதிக்கு. சரியான போட்டி. தமிழ் தேசியம், அமெரிக்க 'சர்வதேசக்' கவன ஈர்ப்பில் - சிங்களப் பேரினவாதம் சீன அனுசரணையில். சீனத்தரப்பில் அதீத நம்பிக்கைகொண்டு இந்தியாவுடனான ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டதனை மறந்து மஹிந்த ராஜபக்ஷ செயற்பட முனைந்ததன் பேறாகவே 2015 தேர்தலில் தோற்கடிக்கப்பட்டார் என்பதனை இன் றைய ஜனாதிபதி மறந்திருக்க நியாய மில்லை. மறந்திருந்தாலும் கூட 23ம் திகதி இந்தியப் பிரதமர் தொலைபேசி உரையாடலில் தொடர்பு கொண்டு 'கொ- ரோனா ஒழிப்புக்கும் இலங்கை அபிவி ருத்திக்கும் நாங்கள் இருக்கிறோம்' எனச் சொல்லி எதைப் புரிந்து கொள்ள வேண் டுமோ அதை உணர்த்திவிட்டுள்ளார்!

ஐ.நா. சபையிலிருந்து கூட இலங்கையை வெளியேற்றிவிட இயலும். தெற்காசியப் பிராந்தியப் புவியரசியலில் இருந்து நாட்டை விடுவிக்க இன்றைய ஆட்சியா ளர்களுக்குத் திராணியில்லை. இந்திய மேலாதிக்கத்துக்குப் பணிய வேண்டிய அவசியமில்லை என கூறிவிட இயலாத வகையில் இன மோதலைப் பயன்படுத்தி இந்தியா பணிய வைத்த 16 ஒப்பந்தங் களில் மூத்த ராஜபக்ஷ கைச்சாத்திட்டுள் ளார். மேலும் திமிறும் நோக்கம் இருக்கும் பட்சத்தில் இளைய ராஜபக்ஷவை வழிக் குக் கொண்டுவரும் வகையில் இனப் பிரச்சினையின் தொடர்ச்சி விட்டுவைக்கப் பட்டுள்ளது.

'புவியரசியலில் இருந்து இலங்கையை இன்றைய அரசால் மீட்க முடியாது' என் றால், வேறு எவராவது மீட்டிருந்தனரா - இனியும் எவராலும் மீட்க இயலுமா? உள்நாட்டு யுத்தப் பிரகடனத்தை முன் மொழிந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா 1977ல் ஆட்சிக்கு வந்த பின்னரே பிராந்திய மேலாதிக்க உணர்வுடன் இந்தியா இலங் கையின் இனப்பிரச்சினையைக் கையாண்டு 1987ன் ராஜீவ் - ஜே.ஆர். ஒப்பந்தம் மற் றும் 2010ன் 16 ஒப்பந்தங்கள் வாயிலாக இலங்கையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டியக்கும் பொறியை ஏற்படுத்தி இருந்தது. அதற்கு முன்னர் இலங்கை இறைமையும் சுயாதீனமும் உடைய நாடாக இயங்க முடிந்தது. அணி சேரா நாடாக இருந்த நம்பிக்கை காரணமாக இந்தியா சந்தேகம் கொள்ள அவசியமின்றி இலங் கையின் இறைமையை மதித்து நடந்தது. பங்களாதேஷ் பாகிஸ்தானிலிருந்து தனி நாடாகப் பிரிவதற்கான போராட்டத்தில் இந்தியா பங்களாதேசுக்கு ஆதரவாக தனது இராணுவத்தை அனுப்பிய நிலை யிலும் பாகிஸ்தானின் விமானங்கள் கொழும்பில் தரையிறங்கி எரிபொருள் நிரப்புவதற்கு இலங்கை அனுமதித்திருந் தது. இந்தியாவின் இன்னொரு எதிரி நாடான சீனா 'பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தை' கொழும்பில் கட் டித் தருகிற அளவில் சீனாவுடன் வலு வான நட்புறவை இலங்கை பாராட்ட முடிந்தது. அப்போது அமெரிக்காவே இந்தியாவின் பிரதான எதிரி நாடு என்ற வகையில் இந்தியாவுக்கு எதிராக அமெ ரிக்க சார்பு கொள்ளப்போவதில்லை என்ற நம்பிக்கை இருந்தது. அந்த நம்பிக்கை யின் வெளிப்பாடாக இந்திராகாந்தி கச்ச தீவை இலங்கைக்கு உரியது என ஒப் பந்தமும் செய்து கொண்டார்.

அதே இந்திராகாந்தி பிரதமராக இருந்த பொழுதுதான் ஈழப்போராட்ட இயக்கங் கள் இந்தியாவைப் பின் தளமாக கொண் டியங்குவதற்கு அனுசரணையாக உள்ளீர்க் கவும் செய்தார். ஏன் இந்த மாற்றம்? இலங்கை அணிசேராக் கொள்கையைக் கைவிட்டு அமெரிக்காவுக்கு இலங்கை யைத் தளமாக்க 1977ல் அதிகாரத்துக்கு வந்திருந்த ஜே.ஆர். இடமளித்ததன் பேரிலானது இந்த மாற்றம், பின்னரான யுத்தம், ராஜீவ் காந்தி அமைதிகாக்கும் படையை அனுப்பி ஈழப்போராட்டம் இனித்தேவையில்லை எனக்கூற வைத்தது, அதே ஜே.ஆர். பணிந்ததன் காரணத் தால். முழுச் சிங்கள மக்களும் இந்திய மேலாண்மையைப் புரிந்துகொள்ள வேண்டி இருந்தமையால் மேலும் நீடித்த யுத்தம் 16 ஒப்பந்தங்கள் வாயிலாக இலங்கை யின் இறைமையைப் பூரணமாக இந்தி யாவிடம் தாரைவார்த்துவிட வகை செய் தது.

இப்போது இந்தியா அமெரிக்காவுடன் கூட்டிணைந்துள்ள நிலையில், சீனாவுக்கு இலங்கை எவ்வகையிலும் தளமாக ஆகி விடக்கூடாது என்ற அக்கறை இந்தியா வுக்கு. இலங்கையின் அபிவிருத்திக்கு சீனா உதவுவது பற்றிய திட்டங்களை இதுவரை இந்தியா தடுக்கவில்லை. இதே நிலை தொடரும் என்பதற்குமில்லை. இலங்கை இறைமை மிக்க நாடாக இன்று இல்லை என்பது இலங்கை - இந்திய ஒப்பந்தங்களின் உள்ளடக்கம். இந்தியா மேலாதிக்கப் பண்புடன் இயங்கி வரும் நாடு என்பது சார்ந்த விடயம் அது. ஒரு வல்லரசாக, ஏகாதிபத்தியமாக இந்தியா வளர்க்கப்படும் தேவை இந்திய ஆளும் தரப்பின் அபிலாசை மட்டுமல்ல, உலக மூலதனமும் அதற்கான அவசியத்துடன் இன்று இயங்கியபடி!

வரலாற்றுப் போக்கின் புதிய தடம்:

இந்தியாவுடன் ஒப்பந்தங்கள் செய்யப்பட் டுள்ளதைப் போலவே சீனாவுடன் அபிவி ருத்திக்கான ஒப்பந்தங்களை மேற்கொள்ள இலங்கைக்கு இயலுமாக இருக்கும் போது, இலங்கையின் இறைமை இழக்கப்பட்டுள் ளதாகக் கூற இயலுமா?

சீனா எந்தவொரு நாட்டின் உள்விவகா ரங்களிலும் தலையிடுவதில்லை. இரு நாடுகளது பொருளாதார நலனே அந்த ஒப்பந்தங்களின் மூலவிசை. இந்தியா அயல் நாடுகள் அனைத்தையும் கட்டுப் படுத்தி உள்நாட்டு அரசியலைத் தீர்மானிக் கும் தலையீட்டுடனான ஒப்பந்தங்களை அடிப்படையானதாக கொண்டு இயங்கி வருகிறது.

சீனாவின் துரித வளர்ச்சியை முறியடிப் பதே, கொரோனா மரணங்களைத் தனது நாட்டில் கட்டுக்குள் கொண்டு வருவதை விட அவசியப்பணி என இயங்கும் அமெ ரிக்காவுடன் இந்தியா அனைத்து வகைக ளிலும் இணைந்து இயங்கி வருகிறது. உலக மேலாதிக்கத்தை இழந்துவிடக்கூ டாது என்பதற்காக தென்சீனக் கடற்பரப் பில் அமெரிக்கா நேரடியாக இயங்கிவரு கிறது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கு வளர்த்துவிடக் கூடாது என்பதன் பொறுப்பை இந்தியா ஏற்க வேண்டியுள்ளது. இரு பகுதிகளிலும் சீனாவின் பொருளாதார நலன்கள் முதன் மையாக உள்ள போதிலும், உலக யுத் தம் ஒன்று மூளும் பட்சத்தில் இராணுவ கேந்திர முக்கியத்துவம் மிக்கனவாக இக் கடல் பிராந்தியங்கள் திகழும் என்பதிலும் ஐயமில்லை. யுத்தம் ஏற்படாதவரையில் எந்த வகையிலான இராணுவ நடவடிக் கைகளையும் எமது நாடுகளில் சீனா மேற்கொள்ளவில்லை என்பதற்காக, அது அபிவிருத்திக்கு உதவிய தளங்களில் போர்க்காலத்தில் இலகுவாகக் காலூன்றி இயங்கக் கூடியதாக இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க இயலாது.

அத்தகைய ஒரு யுத்த நலனை மனதில் கொண்டுதான் சீனா இயங்கி வருகிறது எனும் சந்தேகம் பலரிடமும் இருப்பதனை நியாயமற்றது எனக்கூறிவிட முடியாது. மூன்றாம் உலக யுத்தம் ஒன்று ஏற்படும் பட்சத்தில் தேச எல்லைகள் இருக்கப்

தொடர்தல் 89ம் பக்கம்

புதிய உலக...

87ம் பக்கத் தொடர்ச்சி...

போவதில்லை என்ற வகையில், கேந்திர முக்கியத்துவமிக்க தளங்களில் எவரது படைகளும் காலூன்ற இடமுள்ளது. யுத்தம் மூளும் பட்சத்தில் எவ்வாறு இயங்குவது என்ற தூர நோக்குடன் செயற்பட இடமிருந்தாலும், இன்றைய செயற்பாட்டில் இருதரப்பு நலன் பேணப்படுகிறதா என்பதையும் கவனங்கொள்ள வேண்டியுள்ளது.

யுத்தம் ஏற்படாமலே போகலாம் அல்லவா? இப்படிச் சொல்வது ஏகாதிபத்தியச் செல்நெறியைப் புரிந்து கொள்ளாத அறிவீனம் எனக்கணிப்பிட இடமுள்ளது. இரண்டு உலக யுத்தங்களும் புதிய வல்லரசுகளாக எழுச்சி கொள்ள முனைந்த ஏகாதிபத்திய நாடுகள் உலகை மறுபங்கீடு செய்து தங்களுக்கான சுரண்டல் தளங்களை விரிவுபடுத்தும் தேவையை நிறைவு செய்வதற்கானவையாக இருந்தன. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் அமெரிக்க ஏகாதிபத்தியம் முதல் நிலை வல்லரசாக இருந்தபோது இன்னொரு ஏகாதிபத்திய நாடு மறுபங்கீட்டுக்காக முனையும் வகையில் வளர இயலவில்லை. சோசலிச முன்னெடுப்புடன் இருந்த சோவியத் யூனியன் முதல் நிலைக்கான வளர்ச்சியுடன் இருந்தது. முதலாளித்துவ - சோசலிச முகாம்களிடையேயான போட்டாபோட்டி நிலவியபோது ஏனைய மூன்றாம் உலக நாடுகள் அணிசேராக் கொள்கையுடன் இரு தரப்புடனும் தொடர்புற ஏற்ற அளவில் இரு முகாங்களும் ஏறத்தாழச் சமபலத்துடன் இயங்கின.

இன்று சோசலிச முகாம் இல்லை. சோசலிச முன்னெடுப்புப் பலவீனப்பட்டு சந்தைச் சோசலிசம் என்ற பின்னடைவுக்கு சீனா சென்றுள்ள நிலையில் ஓரிரு சிறிய நாடுகளே சோசலிசத்தை முன்னெடுக்க சிம்மப்பிரயத்தனம் மேற்கொண்டபடி. சீனா, முதன்மை நிலைப் பொருளாதார வளர்ச்சியை இன்னும் பதினைந்து வருடங்களில் எட்டிவிடுவோம் என்ற தனது வளர்ச்சிக் குறிக்கோளைக் கடந்த வருட இறுதியில் கூறியிருந்தது. இந்தியா கூறிவருவதைப் போல ஒருபோதும் சீனா வல்லரசாக ஆகுவோம் எனக்கூறியதில்லை. சோசலிசப் பொருளாதாரம் முதல் நிலையை எட்டுமாயின் அதனை ஆதர்சமாகக் கொண்டு ஏனைய நாடுகளும் அத்தகைய பொருளாதார - அரசியல் சமூக கட்டமைப்புக்கு மாறும் உத்வேகம் ஏற்படுத்துவதாக அமையும் என்றே அந்நாடு கூறிவருகிறது.

ஏகாதிபத்திய மேலாதிக்கத்துக்கு ஈடு கொடுத்தாகவேண்டும் என்பதற்காக தனது இராணுவ வல்லமையைச் சீனா பெருக்கி வந்தபோதிலும், எந்த ஒரு நாட்டின் மீதும் வலிந்த யுத்தத்துக்கு சென்றதில்லை. யுத்த முன்னெடுப்பு தமது பொருளாதார விருத்திக்குச் சேதாரமாக அமையும் என்றே சொல்லி வருகின்றது. போர்மேகம் சூழ்ந்த பல சந்தர்ப்பங்களிலும் போரிட நேர்ந்தால் பலமான பதிலடி தருவோம் என அனைத்து முஸ்தீபுகளையும் எடுத்த வண்ணம் யுத்தத்தைத் தவிர்த்த மாற்று வழிகளை இதுவரை சாத்தியப்படுத்தி வந்துள்ளது.

அந்தவகையில், ஒரு உலக யுத்தம் ஏற்பட இடமில்லாமலே புதிய உலக ஒழுங்கு ஒன்று சாத்தியப்பட வாய்ப்புள்ளது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் கொலனித்துவ நாடுகள் இல்லாது பெரும்பாலும் அனைத்துமே பெயரளவிலான சுதந்திரத்தைப் பெற்ற பின்கொலனித்துவச் செல்நெறி இன்றுள்ளது. சோசலிச - முதலாளித்துவ முன்னெடுப்பிலுள்ள எந்தவொரு நாட்டுடனும் உறவு கொள்ள இயலுமாயுள்ளது. இந்தியாவிடம் இறைமையை இழந்துள்ள இலங்கைகூட இந்தியாவின் 'மௌன அச்சுறுத்தலை' கனம் பண்ணியபடியே சீனாவுடனும் உறவு கொள்ள வாய்ப்பிருக்கிறது. முதலிரு உலக யுத்தங்களும் புதிதாக எழுச்சி பெற்ற ஏகாதிபத்திய நாடுகள் வலிந்து போரை உருவாக்கி அழிந்தது போல இன்று எழுச்சி பெறும் சீனதேசம் இல்லை. தனது சோசலிச முன்னெடுப்புக்கு யுத்தம் தீங்கு விளைவிக்கும் என்பதால் போர் சூழலைத் தவிர்ப்பதையே முதற்குறிக்கோள் ஆக்கி வருகிறது.

முதல் நிலையை இழந்துவிடக் கூடாது என்ற அந்தரத்தில் உள்ள அமெரிக்காவே, இன்று யுத்தத்தை முடுக்கிவிட வேண்டும் என்ற அவதியில் இருக்கிறது. அவ்வாறு யுத்தம் ஒன்று ஏற்படும் பட்சத்தில் உலகமே நாசமாகிவிடும் எனும் போது அதன் வாயிலாக அமெரிக்கா பெற இருக்கும் ஆதாயம் கழித்தல் பெறுமானத்துக்கு உரியது என்ற வகையில் அமெரிக்க மக்கள் அத்தகைய யுத்த முனைப்புக்கு எதிராகவே இருப்பர். இப்போதுங்கூட, கொரோனாவைத் திட்டமிட்டு சீனா பரப்பியது என்ற ஜனாதிபதியின் குற்றச்சாட்டுக்கு எதிராகப் பல குரல்கள் அமெரிக்க மக்களிடம் இருந்தே எழுந்துவரக் காண்கிறோம்.

இத்தகைய சூழலில் தமிழ் தேசியம் தனக்கான விடுதலையை இன்னமும் அமெரிக்க 'சர்வதேசத்திடம்' யாசித்துக் கொண்டு இருக்க வேண்டுமா? நூறாண்டுகளாக சோசலிசமா முதலாளித்துவமா உலக மீட்சிக்கு அவசியமான பாதை என்ற போராட்டம் நடந்து வருகிறது. சோவியத் யூனியன் தகர்க்கப்படுவதில் சோசலிச ஆதரவாளர்களில் ஒரு தரப்பினரும் தம்மை அறியாமலே உதவுகிற தவறைச் செய்திருக்கிறோம். இனியும் முதலாளித்துவம் மீட்சி தரும் என்ற நம்பிக்கையில் மாய வேண்டியதில்லை. சோசலிசத்தை நாடாத தேசியம் வெற்றிபெற இயலாதது. அமெரிக்க மேலாதிக்கத்துக்குத் துணைபோகத் தமிழ் தேசியம் முற்படுமாயின் உலக நாசத்துக்கு வழிகோல உதவுவதாகவே அமைய இயலும். இனியேனும் மேலாதிக்க உணர்வுகளை மூட்டைகட்டி வைத்து விட்டு விடுதலை எண்ணத்தை முன்னிறுத்திய ஈழத் தமிழ் தேசியத்தை வடிவமைக்க முற்படுவோம்!.

raveendran.n@thaiveedu.com

YOGA CLASSES SCHEDULES AS FOLLOWS

யோக அமிர்தம்

FOR ADULT
RICHMOND HILL
MONDAY AND WEDNESDAY
6:30 PM TO 8:00 PM
10865 bay view ave. Richmond hill , Hindu Temple

FOR CHILDREN
RICHMON HILL
MONDAY AND WEDNESDAY
5:00 PM TO 6:00 PM
10865 bay view ave. Richmond hill , Hindu Temple

FOR ADULT
AJAX
THURSDAY AND FRIDAY
6:00 PM TO 7:30

FOR ADULT
NORTH YORK
SATURDAY
8:00 AM TO 9:30
1290 finch ave, west unit 22 . keele and finch

OSHAWA
SUNDAY AND WEDNESDAY
8:00 AM TO 9:30 AM .
1211 Harlstone cresent

Please Contact at
416 729 3419
further more information.

வேரறுந்த நீரின் வரலாறு

- உமை பற்குணரஞ்சன் -

கண்ணுக்கு எட்டிய தூரம் வரை நீலமாக நீண்டு நெடிந்து அலையெழுப்பிக் கொண்டிருக்கும் கடல் பூமிப் பந்தின் 70 சதவீதத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக் கிறது. அதன் பரந்துபட்ட விசாலங்களுக் கேற்ப தன்னுள்ளே பல சுவாரஸ்யங்க ளையும் கொண்டுள்ளது. கோரக் கரங் கொண்டு ஊரைக் காவுகொண்ட கதைக ளோடு கொஞ்சம் கொஞ்சமாய் காய்ந்து காணாமல் போன சோகங்களும் கடல்க ளுக்கு உண்டு.

பாண்டிய மன்னர்களின் குதிரைப்படை-களுக்காக ஆண்டு தோறும் கொற்கைத் துறைமுகத்தில் ஆயிரக்கணக்கான பாய் மரக்கப்பல்களில் பல்லாயிரம் அரேபியக் குதிரைகள் வந்திறங்கின என்கிறது வர லாறு. தாமிர பரணி, தான் கடலில் கலக் கும் முன்பு அள்ளி வாரிக்கொண்டு வந்த முத்துக்களால் பிரசித்தி பெற்ற கொற் கையின் சிறப்பை சங்க இலக்கியங்கள் பாடுகின்றன. ஒரு காலத்தில் பெரிய துறை முக நகரமாக இருந்த கொற்கை இன்று ஒரு சிற்றூராக சுருங்கியிருக்கிறது. தாமி ரபரணி முன்னொரு காலத்தில் கொற்கை வழியாக ஓடித்தான் வங்கக் கடலில் சங் கமமானது. காலமாற்றமும் கடல்கோள் மாற்றமும் கொற்கையைத் தூர்த்து விட்டு, நிலப்பரப்பிலிருந்து கடல் இன்னும் கிழக்கு நோக்கி உட்சென்று விட்டது. ஊருக்குள் எங்கு தோண்டினாலும் கடல் அலைய டித்தற்கான சாட்சியாக, சங்கு, சிப்பி, உப்பு மண் என கடல் சார்ந்த தடயங் கள் இன்னமும் புதையலாகக் கிடைக் கின்றன.

ஸஹாராப் பாலைவனம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கடலாக இருந்து வற்றிப்போனதாய் வரலாறுகளும் ஆராய்ச்சி முடிவுகளும் கூறுகின்றன. அதுமட்டுமன்றி எகிப்தின் பண்டைய காலத்திற்கும் புரா தன இந்தியாவுக்கும் இணைப்பு இருந்த தென ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளார் கள். சாகரம் என்னும் சொல்லே ஸஹாரா என்று மருவுற்றிருத்தல் வேண்டும். இவ் வாறு இந்த நாடுகளுக்கும் இடையே இருந்த தொடர்பை அங்கு காணப்படும் சில சின்னங்கள் சான்று பகர்கின்றன.

நதி நீர் கடலில் கலப்பது இயற்கையின் நியதி. மழை நீர் மண்ணின் தேவைக்குப் போக, எஞ்சியது கடலுக்குச்செல்ல வேண் டும். அது மறுபடியும் ஆவியாகி மழை யாகப் பெய்வதால் நீரியல் சுழற்சி பூர ணத்துவம் பெறுகிறது. கடல் என்ற மிகப் பெரிய இயற்கைச் சூழல் அமைப்பின் இயக்க விதியை மாற்றி அமைத்தால் கடல் மரணமடையும் அல்லது கடலே காணா மல் போகும்.

உலக வரலாற்றில் கண் முன்னே காணா மல் போன ஏரல் கடல் இதற்கு சான்று பகர்கிறது. இரண்டாம் உலகப் போரில் ஹிட்லரை எதிர்கொள்ள ரஷ்யா ஏராள மான போர்க்கப்பல்களை நிலை நிறுத்தி வைத்திருந்த ஏரல் கடல் (இது, உண்மை யில் கடல் அல்ல, கடலளவுக்கு காட்சிய ளிக்கும் பெரிய ஏரி இதனால் ஏரல் கடல் என அழைக்கப்பட்டது) சுமார் 68,000 சதுர கிலோமீட்டர்கள் பரப்பளவில் பரந்து

விரிந்திருந்தது. இதன் பொதுவான ஆழம் 43 மீட்டர் ஆகும்.

நான்கு பக்கமும் நிலத்தால் சூழப்பட்ட இந்த பிரம்மாண்டமான உவர் நீர்ப்பரப்பு ஒரு காலத்தில் உலகில் உள்ள 4 மிகப் பெரிய ஏரிகளில் ஒன்றாக கருதப்பட்டது. 1960 களில் சராசரி ஆண்டுக்கு 48,000 தொன் வரையான மீன்கள் பிடிப்பட்ட இந்த ஏரல் கடல் இன்று காய்ந்து காணா மல் போய் பாலைவனமாக மாறியுள்ளது. மிகவும் தொன்மையான இந்த நீர்ப்பரப்பு 1100 குட்டித் தீவுகளை கொண்டிருந்தது என்றால் அதன் பிரமாண்டம் எவ்வாறி ருக்கும் எனக் கூறத் தேவையில்லை.

ஏரல் கடல் வடக்கில் கஜகஸ்தான் (Kazakhstan) மற்றும் தெற்கில் உஸ்பெக்கிஸ் தான் (Uzbekistan) ஆகிய இரண்டு நாடு களுக்கும் நடுவே மூன்று புறமும் பாலை வனங்களால் சூழப்பட்டு அமைந்துள்ளது. அமுதர்யா. (Amu Darya), ஸைர்தர்யா (Syr Darya) எனும் இரண்டு ஆறுகள் ஆஃப்கனிஸ்தான், தஜ்கிஸ்தான் மற்றும் க்ரிஜிஸ்தான் மலைத் தொடர்களில் உரு வாகி ஓடி வளம் கொடுத்து இந்த கட லில் சங்கமித்தன. இதற்கு அடுத்தபடி யாக தஜிக்கிஸ்தானிலும் கிஜிக்கிஸ்தானி லும் உள்ள பமிர் மற்றும் தியென்ஷான் மலைகளிலிருந்த பனிக்கட்டிகள் உருகி யும் ஏரல் கடலில் கலந்து வந்தன. இத னால் ஏரல் தனது உவர் தன்மையையும் அதேசமயத்தில் நதிகளும் பனிக்கட்டிக ளும் உருகி உருட்டிவரும் எண்ணற்ற கனிமங்களின் மூலம் உருவாகும் வேதியல் தன்மையையும் கட்டுப்பாட்டில் கொண்டி ருந்தது. ஏரல் கடலானது வெப்பத்தினால் நீராவி ஆவதும், அது பின்னர் மழை பொழிவாகி கடலில் கலப்பதுமான நீர் சுழற்சியானது அந்தப் பகுதியில் தட்ப வெப்பநிலை மாற்றங்களினால் ஒரே சீர்த் தன்மையைக் கொண்டிருந்தது.

'வளர்ச்சி' என்கிற மோசமான மந்திரச் சொல்லுக்கு அன்றைய சோவியத்தும் விதி விலக்கல்ல. முந்தைய வல்லரசான சோவி யத் ரஷ்யாவின் பொருளாதார வல்லுநர் கள் மத்திய ஆசியாவின் வரண்ட நிலப் பரப்பை வளமாக்க வேண்டுமானால் அந்த பகுதியில் பருத்தி செடிகளை விளைவித்து பசுமையை வரவழைத்து பஞ்சத்தை பஞ் சாக பறக்க வைக்கமுடியும் எனும் நோக் கத்தில் பருத்தி உற்பத்தியை ஊக்குவித் தனர். இந்தப் பகுதியின் ஈரப்பதம் அதிக வெப்பமில்லாத தட்ப வெப்பம் நீர்ப்பா சன வசதி போன்றவை பருத்தி உற்பத் திக்கு ஆதாரமாக விளங்கின.

ஒரு காலத்தில் ஏரல் கடல் பகுதியைச் சூழ்ந்து முன்னேற்றமடைந்த மீன்பிடித் தொழில்துறை காணப்பட்டது. அதைத் தொடர்ந்து கடலைச் சுற்றியிருந்த மக் கள் தொகையும் 2.7 கோடியாக உயர்ந்

தொடர்தல் 91ம் பக்கம்

www.inayam.net
தமிழ் நிகழ்வுகளின் சங்கமம்
கலை விழாக்கள்
எழுச்சி நிகழ்வுகள்
மாச்சாக ஒன்றுகூடல்கள்
திருவிழாக்கள்
கொண்டாட்டங்கள்
நடன, நாடக, இசை விழாக்கள்
மரணச் சடங்கு நிகழ்வுகள்
எதுவானாலும்.
இணையம் ஊடாக எவ்வாறாக தெரியப்படுத்துவீர்கள்.
உங்களுக்கு அருகாமையான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.
முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபற்றும் மக்களின் அருகாமை முக்கியமானது.
இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்பு தளமே inayam.net
முயற்சி செய்யுங்கள்!
முற்றிலும் இலவசம்
inayam

DEBT FREE CREDIT SOLUTION

Seeking freedom from DEBT?

We offer Total Debt FREE SOLUTIONS

Elankeeran .T

Certified Insolvency Counsellor

By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.
  We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com

Head Office:
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

Branch Office:
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

www.TotalDebtFree.ca

வேரறுந்த நீரின்...

90ம் பக்கத் தொடர்ச்சி...

தது. 1960ல் 4 மில்லியன் பாசனப் பரப்பு 1980ல் இரண்டு மடங்காக அதிகரித்தது. ஆறுகளின் 90 சதவீத தண்ணீர் பருத்தி பயிர் விளைவிப்பதற்காக உபயோகிக்கப் பட்டன. நிலத்தால் சூழப்பட்ட இக்கடலினைச் சென்றடையும் ஆறுகளான அமு தர்யா மற்றும் சிர் தர்யா எனும் ஆறுகள் நீர்ப்பாசனத்திற்காக திசை திருப்பப்பட்டன. நிலமெங்கும் ஓடி வளம் சேர்த்து வந்த சின்னச் சின்ன ஆறுகள் சுரண்டப்பட்டு, அதற்காகக் குறுக்குநெடுக்காக வெட்டப்பட்ட கால்வாய்கள், மற்றும் மோசமான முறையில் வடிவமைக்கப்பட்ட கழிவு நீர் கால்வாய்கள் காரணமாக கடலுக்குச் செல்லும் நீர் தடைப்பட்டுத் தேங்கத் தொடங்கியது, மட்டுமன்றி உப்புச் செறிவும் கடலில் அதிகரித்தது. ஏரல் கடலின் பரப்பும் படிப்படியாகச் சுருங்கத் தொடங்கியது. 1987ம் ஆண்டில், தொடர்ச்சியான சுருக்கம் ஏரல் கடலை இரண்டு பகுதிகளாகப் பிரித்தது. வடக்கு ஏரல் கடல் சிறிய பகுதி (லெஸ்ஸர் கடல் என்று அழைக்கப்படுகிறது), மற்றும் தெற்கு ஏரல் கடல் ஏரியின் பெரிய பகுதி (கிரேட்டர் கடல்) ஆனது. இவற்றையெல்லாம் தாண்டி ஒரு சில மீன் இனங்கள் ஏரலில் தாக்குப் பிடித்தன ஆனால் 1980ற்குப் பின்னான காலப்பகுதியில் அவையும் முற்றிலும் அழிந்து போயின. இதன்காரணமாக மீன் பிடி கப்பல் போக்குவரத்து மற்றும் படகு கட்டும் கட்டுமானத் தொழிற்சாலைகள் நின்று போயின. 1960களிலிருந்து தொடங்கி படிப்படியாக மீன்பிடிப்பு நின்று போனதால் ஏரல் மண்டலத்தில் மட்டும் 60,000 பேருக்கு வேலை இழப்பு ஏற்பட்டது. சோவியத் ஒன்றியத்தின் மொத்த மீன் பிடிப்பில் ஆறிலொரு பங்கு, மீன் ஏரல் கடலிலிருந்தே கிடைத்தது. இந்நிலை இன்று மாறி மீன் பிடிப்புக்குப் பயன் படுத்தப்பட்ட பெரும் படகுகள் இன்று வறண்டு விட்ட ஏரல் ஏரியின் தரையில் துருப்பிடித்து சாய்ந்து கிடக்கின்றன

அதுமட்டுமன்றி விவசாயத்தில் அதிகரித்த பூச்சிக்கொல்லி மற்றும் உரப் பயன்பாடு காரணமாக நிலப்பரப்பு மாசுபட்டது. இதனால் ஏனைய விவசாய பயிர்கள், நெல் வயல்கள் பாதிப்படைந்தன.

சோவியத் நாட்டின் நீர்ப்பாசனத் திட்டமிடல் துறையின் அதிகாரிகள் ஆரம்பத்திலேயே நீர்ப்பாசன முறைகளை விரிவுபடுத்தி நதிகளைத் திசை திருப்பினால் அது கடலில் மாறுபட்ட தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்தனர், அதாவது, ஏரல் கடலின் நீர் ஆவியாதலைத் தடுக்க முடியாது என்பது அனைவரும் முன்கூட்டியே அறிந்திருந்த ஒன்று தான் எனக் கூறியிருக்கிறார்கள். இருப்பினும் அந்த விளைவுகள் குறித்து சோவியத் அரசிடம் கேள்வி எழுப்பும் துணிவு அக்கால கட்டத்தில் எவருக்கும் இருக்கவில்லை எனக் குறிப்பிடுகின்றனர். அண்மையில் ஏரல் கடலில் பரிதாப நிலையை நாசா எடுத்த செயற்கைக்கோள் புகைப்படம் ஒன்றில் தெளிவாக காணலாம். முழுவதுமாக வறண்டு போன கடலின் கிழக்குப்பகுதி, இன்று புவியில் புதிதாகத் தோன்றிய பாலைவனமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பாலை நிலத்தின் பெயர் 'அரால்கம்' (Aralkum) பாலைவனம். இது, மனிதர்களால், செயற்கையாக உருவாக்கப்பட்ட பாலைவனம் என்பதால் உயிர்ச்சூழலைப் பாதித்தது.

இவ்வாறு காய்ந்து வறண்டு விட்ட ஏரல் கடலில் இன்று முப்பது லட்சம் ஹெக்டேர் அளவுக்கு உப்பு படிந்து கிடக்கிறது. இப்பகுதியில் ஏற்படும் புழுதிப்புயலால் இந்த உப்புகள் தொன் கணக்கில் வெகு தொலைவு வரை அடித்துச் செல்லப்படுகின்றன. இதனால், பல நூறு கிலோ மீட்டர் தொலைவு வரையுள்ள பயிர் விளையும் வளமான நிலங்களிலும் உப்பு படிந்து வேளாண்மைக்கு உவப்பற்ற உவர் நிலமாகி விட்டன. இந்த தூசி புயல்களில் சோடியம் குளோரைடு மற்றும் சோடியம் சல்பேட் ஆகியவை தாவரங்களுக்கு நச்சுத்தன்மையுள்ளவை. அடிக்கடி வீசும் காற்று, மெல்ல மெல்ல வலுப்பெற்று புழுதிப் புயலாக மாறும்போது அங்கு வசிக்கும் மக்களுக்கு பெரும்பாதிப்பை ஏற்படுத்த, மணல் புயலால் வாரியிறைக்கப்படும் நச்சுப்புழுதிக்கு அஞ்சி அங்கு வாழ்ந்த மக்கள் தங்கள் வாழ்விடங்களை விட்டு வெளியேறினார்கள். அடிக்கடி ஏற்படும் தூசிப் புயல் இப்பகுதியில் வசிக்கும் மனிதர்களின் உடல் நலத்தையும் பாதித்துள்ளது. புற்றுநோயிலிருந்து நுரையீரல் நோய் வரைக்கும் இதன் தாக்கம் இருந்தது. இப்பகுதியின் காலநிலையும் பாதிக்கப்பட்டது. ஏரல் கடல் பகுதி நீர் நிரம்பி இருந்தவரை மத்திய ஆசியாவில் சீராக இருந்த தட்பவெப்ப நிலை இப்போது முற்றிலும் நீர் வற்றிவிட்டதால் அது அடியோடு மாறிவிட்டது. குளிர்காலம் பனிக்காலமாகவும், கோடைக்காலம் தாங்கமுடியாத அனல்காற்று வீசும் காலமாகவும் ஆகிவிட்டது. ஏரல் கடலின் அழிவை 1988ம் ஆண்டில் இயற்கைப் பேரழிவாக ரஷ்யா அறிவித்தது.

1991ல் சோவியத் யூனியன் பிளவுபட்ட போது ஏரல் கடல் உஸ்பெகிஸ்தான், கஜகஸ்தான் கைகளுக்குள் வந்தது. ஆனாலும் சோவியத்தின் விவசாய திட்டமிடலை கை விடாமல் அந்நாடுகளும் பின் பற்றியதால் ஏரலுக்கு சாவு மணி அடித்தன.

1994ம் ஆண்டில், கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான், தஜிகிஸ்தான், கிர்கிஸ்தான் மற்றும் துர்க்மெனிஸ்தான் போன்ற நாடுகள் கடலின் மறுமலர்ச்சிக்காக ஆரல் கடல் பேசின் (Aral Sea Basin Program) திட்டத்தை ஏற்றுக்கொண்டன. சுற்றுச் சூழலை உறுதிப்படுத்துவதோடு, ஆரல் கடலைச் சுற்றியுள்ள பேரழிவுப் பகுதியை மறுவாழ்வு செய்வதையும் இத்திட்டம் நோக்கமாகக் கொண்டது. தற்போது கசகஸ்தான் அரசு இந்தக் கடலை மீண்டும் புதுப்பிக்க பல திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக 2005ல் உலக வங்கி நிதியுதவிடன் கட்டி முடிக்கப்பட்ட கோக்-ஆரல் டைக் (Kok-Aral dike and dam) அணையினால் ஏரல் கடலின் சில பகுதிகளைக் காப்பாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அப்பகுதியில் நீர் நிலைகள் அதிகரித்ததால் கடல் நீர் மட்டம் 2003 உடன் ஒப்பிடும் போது 12 மீட்டார் அளவுக்கு உயர்ந்துள்ளது. தற்போது உப்புத் தன்மையும் கொஞ்சம் குறைவடைந்து மீன்கள் மீண்டும் வந்துள்ளதாகவும் மீன் பிடி தொழில் சிறியளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றன.

இயற்கையின் ஒரு சிறு அங்கமாகிய மனிதர் அதைத் தனது முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முனையும் போது இயற்கையின் தொடர் சங்கிலியை உடைக்கிறனர். இயற்கைச் சங்கிலியில் ஒரு சிறு பகுதி விடுபடும்போது ஒட்டுமொத்தச் சங்கிலி அமைப்புமே சிதைந்துவிடும் என மனிதருக்குப் புரிவதில்லை. 20ம் நூற்றாண்டில் மனித சமுதாயத்தால் தூண்டப்பட்ட சுற்றுச்சூழல் சீர்குலைவு மற்றும் மாற்றத்திற்கான முன்னணி எடுத்துக்காட்டுகளில் ஒன்றாக அமைந்துள்ள ஏரல் கடலின் மறைவு இயற்கையிலிருந்து நீரைப் பிரித்தெடுப்பதற்கும் இயற்கையின் வேலையை இயற்கையே செய்வதற்கு அனுபதிப்பதற்கும் இடையில் உள்ள உகந்த சம நிலையைக் கண்டறிய வேண்டிய அவசியத்தினை உணர்த்தி நிற்கிறது.

umai.p@thaiveedu.com

வீடு வாங்க விற்க...

10 வருட வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்

வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

வாங்கப் போகிறீர்களா?

- தரமான வீடு தவறிப்போகாது
- பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
- வாங்கியபின் ஏமாற்றங்கள் இல்லை
- பெருவருவாய் தரும் முதலீடு

விற்கப் போகிறீர்களா?

- இலவச வீட்டுப் பரிசோதனையும் ஆலோசனைகளும்
- விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
- சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
- உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்

★ Cash incentive for referrals

For Sellers
Free Home Inspection!
Free Market Evaluation!
Free Home staging Cosultation!

Pickering

www.vela4homes.com

Detached
Apr. 3,300 sft
4+1 Bedrooms,
4 WR
Fully upgraded
Possible Sep. Entrance

Detached.
3 Bedrooms,
4 WR
Fully Upgraded
Finished Bsmt

Chairman's Club Award Winner 2015
Chairman's Club Award Winner 2017
Chairman's Club Award Winner 2016
HOMELIFE HIGHER STANDARDS

Vela Subramaniam

Experienced Home Inspector
Sales Representative

Dir: **416-786-0760**
info@vela4homes.com
www.vela4homes.com

Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8

$864,500
723 Ashprior Ave.
Mississauga
3 Bedroom town house
2 Bedroom Bsmt Apt.
2 Close to All Amenities

$1,899,000
1748 Spruce Hill Rd.
Pickering
4 BR 5 WR Custom Built
4100 Sqft In 60 Ft Lot
Great Location

$1900.00
275 Village Green Sq.
Scarborough
1+Den Condo Apartment
2 Washroom & 1 Parking
Close to all amenities

$2200.00
275 Village Green Sq.
Scarborough
2 Br Condo Apartment
2 Washroom & 1 Parking
Close to all amenities

$2250.00
852 Audley Rd N.
Ajax
3 Bedroom Semi Detached
3 Washroom3 Storey
Great Location

$2500.00
48 Saratoga Rd.
Scarborough
3 Bedroom Main Floor
1 Washroom 2 Parking
Close to all amenities

$3600.00
3 Lord Roberts Dr
Scarborough
3 Bedroom Semi Detached
4 Washroom 3 Level Home
Great Location

$2500.00
2466 Eglinton Ave # 919.
Toronto
2 + Den Condo Apartment
2 Washroom & 1 Parking
Close to GO and all amenities

$2,499,000
122 Euclid Ave.
Scarborough
4 BR & 5 WR Custom Built
2 BR Bsmt Apt w/ 2 Full WR
4100 Sqft. Great Location

$1700.00
2 Adam Sellers St.
Markham
1+Den Condo Apartment
1 Washroom & 1 Parking
Close to all amenities

Gnani Narasingham
Owner / Sales Representative
416-937-8090
Judy Gnanendran B.Com (Hons)
Owner / Sales Representative
416-629-9797

Move On With Re/On

www.reongtacondos.com
www.reongtahomes.com

RE/ON
Homes Realty Inc.
Brokerage

25 Karachi Dr # 15
Markham On. L3S 0B5
905-209-8080

பிராணஜீவ
சர்வ ரோக நிவாரணி

200 வருடங்களுக்கு மேலான மரபார்ந்த மூலிகை மருந்து. இதய வியாதிகள், சலரோகம், உயர் இரத்த அழுத்தம், புற்றுநோய் போன்ற வியாதிகளுக்கான நிவாரணியாகவுள்ளது.

Pranajeewa is a traditional herbal medicine that has passed down from generation to generation. It is over 200 years old and is a proven cure for many kinds of diseases including Heart disease, Diabetes, hypertension, Cholesterol and Cancer. Sethuwa Pranajeewa's miraculous properties has made it the ideal cure for a multitude of other ailments and conditions, known among them are paralysis, Asthma, Catarrh, Skin diseases.

எலும்பு, மூட்டு ஆரோக்கியத்திற்கு!!

NanoCal is a supplement that has been approved by the US FDA as a **CURE for osteoporosis and osteoarthritis.**
NanoCal can actually reverse and cure these conditions!

The **ERVAMATIN™**

முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது. கபாளத்தில் பொடுகைப் போக்குவதுடன் முடியை செழிப்பாக வைத்திருக்க எவமாட்டின் மூலிகைக் கலவை உதவுகிறது.

Amazon Organic Shampoo is for all hair types is rich yet mild, cleans well and leaves hair full bodied lustrous and manageable. முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது.

மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட தலைமுடி மை.

Dreamron Semi-Permanent **Eco Hair Color** is the newest innovation that is specially formulated for the people who are allergic to normal oxidative hair colorants which contain PPD & Ammonia. This is a gentle blend of unique herbal powders with HC colorants.

Turmeric & Sandalwood Day Cream
Turmeric & Sandalwood Day Cream Whiter and Beautiful Skin. Protects the skin year round from the elements Prevents pimples and acne Removes blemishes and evens skin tone. Brightens skin Works as an antiseptic.
சருமத்தை பாதுகாப்பாகவும் பொலிவாகவும் பேண நம் முதாதையர் பாரம்பரியமாக பயன்படுத்திய கஸ்தூரி மஞ்சள் கொண்டு தயாரிக்கப்பட்ட முக சரும பராமரிப்பு!

SABONA & Gift
2466, Eglinton Ave East Unit 12A (@ Midland) Scarborough, ON. www.sabona.ca 416•264•8787

ஈழத்துத் துறைமுக இலக்கிய மரபு

- செல்லத்துரை சுதர்சன் -

அறிமுகம்:

பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்ப் புலமைமரபினை, அக்காலத்தில் நிலவிய கிறிஸ்தவக் காலனியக் கருத்தியலும் சைவத்தமிழ்ச் சுதேசிகளின் காலனிய எதிர்ப்புக் கருத்தியலுமே பெரிதும் தீர்மானித்தன. சுதேசிகள் நடத்திய மதக் காலனிய எதிர்ப்புக் கருத்தியல் போரில், மொழியிலிருந்து சூழல்வரையுமான பண்பாட்டு அம்சங்கள் முக்கிய நியமங்களாகத் தொழிற்பட்டன. சைவத்தமிழ் அடையாள அரசியலை இயக்கரீதியாக முன்னெடுப்பதில், இந்த நியமங்கள் பிரதான பங்கேற்றன. அந்த அடிப்படையில் இந்த ஆய்வானது; யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவக் காலனிய எதிர்ப்பானது, தீபகற்ப இயற்கைமீதான உபாசிப்பு அரசியலை எவ்வாறு நிகழ்த்தியது என்பதை முதன்மைப் படுத்தியது. யாழ்ப்பாணத் தீபகற்பத் துறைமுகங்கள்மீதான உபாசிப்பு அரசியலைச் சைவத்தமிழ்ப் புலமையாளர்கள் மேற்கொண்டவற்றை, காலனிய காலத்தில் எழுதப்பெற்று, காலத்தாற் கிடைக்கப்பெறும், 'வல்வைக் கலித்துறை', 'பருத்தித்துறைக் கலித்துறை' ஆகிய துறைமுகப் பிரபந்தங்களை முன்னிறுத்திய உரையாடலாக இந்த ஆய்வு அமைகிறது. 'ஈழத்துத் துறைமுக இலக்கிய மரபு' எனும் பொருள் குறித்த இந்த அறிமுக ஆய்வு, முதன்முயற்சி எனும் நிலையில், காலனியகாலத் ஈழத்துத் துறைமுக இலக்கியங்கள் குறித்த விரிவான உரையாடலுக்கான புதிய வெளியொன்றைத் திறப்பதாகவும் அமையும்.

யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவக் காலனிய எதிர்ப்பு:

யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த ஐரோப்பியக் காலனியம், யாழ்ப்பாணத்தின் மரபார்ந்த கட்டமைப்பைப் பாதுகாக்காது, அதனைத் தமது இயைபுக்கு ஏற்றதாய் மாற்றுவதும் விரிந்த ஐரோப்பிய ஆட்சியின் ஒருங்கிணைந்த பகுதியாக்குவதும் அதன்மூலம் காலனியக் கட்டமைப்பை ஐரோப்பிய உலக முதலாளித்துவ அமைப்பின் கீழ் இணைப்பதுமான தன்மையுடையதாக இருந்தது. ஐரோப்பியமைய முதலாளித்துவம் தனது நலனுக்காக, ஒடுக்குமுறை வடிவில் மேற்கொண்ட ஆட்சி, அதிகாரம் சார் செயற்பாடுகளையும் வளச் சுரண்டல்களையும் பண்பாட்டுத் திணிப்புகளையும் கிறிஸ்தவம் எனும் போர்வையில் முன்னெடுத்தது. கிறிஸ்தவக் காலனியம் மரபார்ந்த யாழ்ப்பாணத்தை நவீன யாழ்ப்பாணமாக மாற்றுவதிலும் உலக வரைபடத்தில் யாழ்ப்பாணத்தை அறிவுச் சமூகமாக நிலைநிறுத்தியதிலும் ஆற்றிய பங்களிப்பு வரலாற்று முக்கியத்துவமுடையது. எனினும், கிறிஸ்தவக் காலனியம் - கிறிஸ்தவக் காலனிய எதிர்ப்பு எனும் இரு கருத்தியல்சார் முரண்நிலைப்புள்ளியில் வைத்து, ஈழத்துத் துறைமுக இலக்கிய மரபின் தோற்றப் பின்புலத்தைப் புரிந்துகொள்ள இக்கட்டுரை முயல்கிறது.

'பாவிகளை இரட்சிக்கும் மதம்', 'அஞ்ஞானிகளின் மீட்பு நெறி', 'குணப்படுத்தல் வேண்டியவர்களின் நல்மேய்ப்பனுடைய வழி' (ஹரியட் வின்சிலோவின் தொடர்கள்) போன்ற பல கருத்தியல்சார் விம்பங்களைக் கிறிஸ்தவம் தொடர்பாக உருவாக்கி, யாழ்ப்பாணச் சுதேசிகளின் சைவ வெளியில், கிறிஸ்தவத்தை நிலைநிறுத்தும் முயற்சியை, கிறிஸ்தவப் பிரசாரகர்கள் முன்னெடுத்தனர். யாழ்ப்பாணத்தில் நிலவிய சைவத்தைக் 'காட்டுமிராண்டிகளின் மதம்' எனவும் விமர்சித்தனர். (பார்க்க: ஹரியட் உவின்ஸ்லோவின் நாட்குறிப்புகள்) இதனால், சைவத்தமிழ்ப் பிரசாரகர்கள், தமது சைவத்தமிழ்க் கருத்தியலை மேலும் தீவிரமாகவும் பரந்த அளவிலும் புதுமையான பாங்கிலும் முன்னெடுக்கத்தலைப்பட்டனர். அவர்கள் 'சைவத்தின்மேல் சமயம் வேறில்லை அதில்சார் சிவமாம் தெய்வத்தின்மேல் தெய்வம் இல்லெனும் நான்மறைச் செம்பொருள் வாய்மை' எனும் அடிப்படையில், 'சைவ சமயமே மெய்ச்சமயம்' என வாதிட்டாலும் 'புதுச் சைவம்' ஒன்றையே நிறுவிக் காட்டினர். யாழ்ப்பாணத்தில், இருந்த மதமும் வந்து புகுந்த மதமும் ஒன்றையொன்று எதிர்கொண்டு நிகழ்த்திய கருத்தியற் போரில், சைவசித்தாந்தக்கருத்தியல் - கிறிஸ்தவ இறையியற் கருத்தியல், சிவாகம விதிகள் - புரட்டஸ்தாந்து ஒழுக்கநியமங்கள், சிவாலய வழிபாடுகள் - கிறிஸ்தவத்தேவாலய வழிபாடுகள், புராண இதிகாசக் கதைகள் - வேதாகமக் கதைகள் முதலியவை எதிரெதிர் நிலையில் மோதிக்கொண்டன. தமிழ் மொழி வழியாக நிகழ்ந்த இத்தகைய மத மோதல்களின் அடிப்படையில், தமிழானது 'சைவத்தமிழ்' என்றும் 'கிறிஸ்தவத்தமிழ்' என்றும் மத அடையாளம் சூடும்நிலையை யாழ்ப்பாணத்தில் எய்தியது.

யாழ்ப்பாணச் சைவத்தமிழ்ச் சுதேசிகள் முன்னெடுத்த கிறிஸ்தவக்காலனிய எதிர்ப்பு என்பது மத ரீதியான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிரான சமூகபண்பாட்டு அரசியல்சார் செயற்பாடுமாகும். ஆறுமுக நாவலர் முதலியோர் முன்னெடுத்த கிறிஸ்தவ மத எதிர்ப்பு நடவடிக்கையின் அடிப்படை நோக்கம், சைவத்தைத் தளமாகக் கொண்டு சைவ மேட்டுக்குடிகளுக்கான சைவத்தமிழ்நிலைப்பட்ட சமூக அந்தஸ்தை அவாவுதலாகும். இது யாழ்ப்பாணத்தின் பூர்விகமான கிராமியக் கடவுளரையும் அக்கடவுளருக்கான வழிபாடுகளையும் சிதைப்பதாகவும் ஆகமமயமாக்கம் செய்வதாகவும் அமைந்திருந்தது. ஒரு புறம் கிறிஸ்தவக் காலனிய எதிர்ப்பையும் மறுபுறம் பாரம்பரியமாக வழிபடு கடவுளரையும் வழிபாட்டு மரபுகளையும் கொண்ட யாழ்ப்பாண விளிம்புநிலைச் சமூகத்தினரின் அடையாள அழிப்பை, ஆகம ஆசாரப் போர்வையில் திட்டமிட்டு நிகழ்த்தியும், நாவலரது யாழ்ப்பாண மேட்டுக்குடிகளுக்கான 'சைவமறுமலர்ச்சி' இயக்கம் தமது 'புரட்டஸ்தாந்துச் சைவத்தை' நிலைநிறுத்தியது. நாவலர் மேற்கொண்ட கிறிஸ்தவக் காலனிய எதிர்ப்பு என்பது பெரிதும் யாழ்ப்பாணத்தை மையப்படுத்திய, 'யாழ்ப்பாணச் சைவசமயிகளே!' எனும் விளிப்புநிலையுடைய, மேட்டுக்குடி நலன்பேணும், சைவத்தமிழ்நிலைப்பட்ட யாழ்ப்பாணத் தேசியவாதமாகவும் கருதத்தக்கது.

யாழ்ப்பாணத்தை மையப்படுத்திய ஆதிக்கக் கருத்தியல் சார்ந்த சைவத்தமிழ் நிலைப்பட்ட பண்பாட்டு உள்ளடக்கபலமே கிறிஸ்தவக்காலனியத்தின் தோல்வியைத் தீர்மானித்தது. இத்தோல்விக்கு, காலனிய எதிர்ப்பானது கருத்தியற் போராட்ட வடிவம் எடுக்கத் தொடங்கிய போது, அது இயக்கநிலைத் தன்மை (Nature of Movement) பெற்று, அடையாள அரசியல் இயக்கமாக (Identity Political Movement) அதற்குரிய பண்புகளோடு இயங்குநிலை கொண்டமை முக்கிய காரணியாயிற்று.

அதிகார மையத்துக்கு எதிரான எதிர்ப்பின் அதிகாரமும் தந்திரோபாயங்களும் மூன்று விதமான எதிர்ப்பு வடிவங்களைச் சார்ந்து அமையும் என எதிர்ப்பிலக்கியக் கோட்பாட்டு ஆய்வாளரான ஷாய் டிவோன் (Shai Divon) தமது சமீபத்திய ஆய்வொன்றில் குறிப்பிட்டுள்ளார். (04.04.2018) டிவோன் குறிப்பிடும் Visible Resistance, Invisible Resistance, Hidden Resistance ஆகிய எதிர்ப்பு வடிவங்களை முறையே புலப்படு எதிர்ப்பு, புலப்படா எதிர்ப்பு, கரந்துறை எதிர்ப்பு (புலப்படுவதை மறைத்துச் செய்யும் எதிர்ப்பு) எனத் தமிழில் குறிப்பது பொருத்தமானது. இவை அதிகார மையங்களுக்கு எதிராகப் போராடும் சமூகங்கள் எல்லாவற்றிலும் நிகழும் எதிர்ப்பு வடிவங்கள் என டிவோன் அடையாளங்காட்டுகிறார்.

டிவோனின் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு யாழப்பாணத்தில் நிலவிய கிறிஸ்தவக் காலனிய எதிர்ப்பினை நோக்கினால், அவர் குறிப்பிடுவனவற்றுள் முதலிரு எதிர்ப்பு வடிவங்களில் யாழ்ப்பாணச் சைவத்தமிழ்ப் பிரசாரகர்களின் எதிர்ப்பு நிகழ்ந்ததை அவதானிக்க முடிகிறது. புலப்படு எதிர்ப்பினைவிடவும் புலப்படா எதிர்ப்பானது கலாசாரத் தளத்தில் வலிமைமிக்கது. எதிர்க்கும் குழுமத்தின் பண்பாட்டுத் தளப் பேணுகையைச் சமூகவெளியில் கரிசனையுடன் தக்கவைக்கப் பொருத்தமானது. கருத்து வெளியீட்டுக்கான சுதந்திரம் அதிகம் மேலோங்கிய சூழலில் புலப்படு எதிர்ப்பு வெளிப்படும் எனினும், புலப்படா எதிர்ப்பு என்பது தமது உரிமைக்கான தன்னுணர்வு நிலையைக் கிறிஸ்தவக் காலனிய எதிர்ப்பாளர்களுக்குச் சதா காலமும் வழங்க வல்லது. யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவக் காலனிய எதிர்ப்பை நாவலரும் அவர் மரபினரும் புலப்படு எதிர்ப்பு நிலையிலும், சிவசம்புப்புலவரும் அவர் மரபினரும் புலப்படா எதிர்ப்பு நிலையிலும் மேற்கொண்டனர். இருவகையான எதிர்ப்பாளர்களுக்கும் அவர்கள் கருதிய 'சைவத்தமிழ்ப் பண்பாடு' தளமாக அமைந்ததெனினும், அவர்களது காலனிய எதிர்ப்பு அரசியல்சார் அணுகுமுறைகள் வேறுபட்டிருந்தன.

சிவசம்புப்புலவர் மரபினர் கிறிஸ்தவக் காலனியாதிக்க நீக்கத்தையும் பண்பாட்டுப் பேணுகையையும் ஒன்றிணைத்து வினையாற்றினர். இவர்களது சைவத்தமிழ்சார் சுதேச பண்பாட்டைத் தற்காத்தல் (natives defensing indigenous culture) என்பது கிறிஸ்தவம்சார் விதேச பண்பாட்டை எதிர்த்தல் (encounting foreign culture) என்னும் நிலையிலான புலப்படா எதிர்ப்பாக அமைந்தது. இரு மதங்கள் கருத்தியல் நிலையில் மோதிக்கொள்ளும் பண்பாட்டுக் களரியில், 'சைவத்தமிழ்ச் சுதேசிகளான' புலவர் மரபினர், தமது பண்பாட்டுப் பேணுகையின் உள்ளார்ந்த நலனாக, கிறிஸ்தவக் காலனிய நீக்கத்தினைக் கொண்டிருந்தனர். இவர்கள், எதிர்ப்புச் சூழல் பற்றிய விமர்சன உணர்வுநிலையைச் (Critical Consciousness) சைவத்தமிழ்ப் பண்பாட்டைப்பேணும் நோக்கில், காலச்சூழலுக்கேற்ப அதிக பெறுமதியுடையதும் செயலாற்றுதிறன் மிக்கதுமான 'புலப்படா எதிர்ப்பை' மொழிவழி முன்னெடுத்தனர். இந்த முன்னெடுப்பு, மதக்காலனியத்துக்கு எதிரான ஒரு மௌனப் பண்பாட்டு நடவடிக்கையாகவும் அமைந்தது. இதற்குச் சாட்சிகளாய் அவர்களது இலக்கியப் பிரதிகள் விளங்குகின்றன.

கிறிஸ்தவப் பிரசாரகர்கள் யாழ்ப்பாணச் சைவப் பண்பாட்டை மிகவும் தாழ்ந்தது என்றும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினால் மட்டுமே யாழ்ப்பாணச் சைவ சமயிகளுக்கு உய்வுண்டு என்றும் வெளிப்படையாகக் கூறினர் எனினும், மறைமுகமாகப் பொருள் வயப்பட்ட பண்பாட்டிற்கே முதன்மையளித்தனர். புலவர் மரபினர் பொருள்வயப்பட்ட பண்பாட்டைவிடவும் ஆன்மிகவயப்பட்ட தமது பண்பாட்டிற்கு முதன்மை

தொடர்தல் 95ம் பக்கம்

ஈழத்துத் துறைமுக...

94ம் பக்கத் தொடர்ச்சி...

கொடுத்தனர். இன்னும், பண்பாட்டு வெளி முழுவதையும் அவர்கள் ஆன்மிக மயமாகவே கண்டனர். அவர்கள் யாழ்ப்பாணத் தீபகற்பத்துச் சூழல் முழுவதையும் சைவத் தமிழ் வெளியாகவே கருதினர். அந்த அடிப்படையில், அவர்கள் தமது கருத்தியல் நோக்கிற்கேற்ப, தமது தேச நலனுக்காக, தாம் முன்னெடுக்கும் தேசியத்தை, தம்மளவில் ஒரு தெய்வீக மதமாக நம்பி, திடமாகச் செயலாற்றினர்.

தீபகற்ப இயற்கை மீதான உபாசிப்பு அரசியல்:

புலமைமரபு என்பது அறிவார்ந்த தளத்தில் இயங்குநிலை உடையது எனினும், அதன் உருவாக்கமும் நிலைபேறும் சமூக, பண்பாட்டு அரசியலினூடாகவே நடைபெறுகிறது. இதற்குச் சூழலும் அதன் இருப்பும் அவசியமானவை. சூழல் அடையாள அரசியல் இயக்கச் செயற்பாட்டில் முக்கியமான பங்காற்றுகிறது. காலனியகால ஈழத்தின் சைவத்தமிழ் இயக்கச் செயற்பாட்டினர், தமது மதம், மொழி முதலாய பண்பாடுகள் நிலவிய சூழலை, 'பவ்வியமான சைவத்தமிழ்ச் சூழல்' எனக் கண்டனர். மதக் காலனிய எதிர்ப்பை மேற்கொண்ட சிவசம்புப்புலவர் புலமைமரபினர், தீபகற்ப இயற்கையின் உபாசகர்களாகவும் அதன் காப்பாளர்களாகவும் விளங்கியது மட்டுமன்றி, வளமிகு இயற்கையின் வரலாற்றுப் பதிவாளர்களாகவும் விளங்கினர். யாழ்ப்பாணப் பண்பாட்டின் அனைத்துக் கூறுகளிலும் ஊடுருவிய தீபகற்பத்து இயற்கைச் சூழலைத் தமது கருத்தியலுக்கேற்ப அவர்கள் பதிவு செய்தனர். கிறிஸ்தவக் காலனியாதிக்க காலத்தில் இயற்கையின் முதன்மையை விளக்கும் வகையில் பிரதிகளைப் படைப்பதில் அவர்கள் அக்கறை காட்டினர். யாழ்ப்பாணப் பண்பாட்டு வேரிலும் அதன் விழுதுகளிலும் ஒட்டி வளர்ந்து செழிப்புற்ற இயற்கையின் செழுமையை, வரலாற்று வெளியில் 'சைவத்தமிழ்' முலாம்பூசி, மீளவும் நிறுவுவதில் தம்மளவில் வெற்றியும் பெற்றனர்.

சிவசம்புப்புலவரும் அவரது மரபினரும் தமது படைப்புகளில்...

- சுதேச இயற்கையை இறைவனாகப் பதிவு செய்தல்,
- சுதேச இயற்கையில் அமைவு பெற்ற தலங்களையும் கல்விச்சாலைகளையும் தருமச்சாலைகளையும் அவற்றின் சூழலையும் பதிவு செய்தல்,
- சுதேச இயற்கையினின்றும் முகிழ்த்த மரபுகளைப் பேணும் பிரபுக்களையும் முதலிமார்களையும் பதிவு செய்தல்,
- சுதேச இயற்கையையும் அதன் தனித்தன்மைகளையும் ஓம்பும் புலவர்களையும் அரசியலறிஞர்களையும் பதிவு செய்தல்,
- சுதேசத் தெருக்கள், வீதிகள், துறைமுகங்கள், துறைமுகப் பட்டினங்களைப் பதிவு செய்தல்,

ஆகியவற்றின் அடிப்படையில் மதக்காலனியத்துக்கு எதிராகச் செயலாற்றினர்.

மதம் இறங்கிய துறைமுகங்கள்:

இந்து சமுத்திரத்தின் மையத்தில், நித்திலமாக இலங்கை விளங்குகிறது. அதில், 'மணற்றி' எனும் பண்டை நாமம் பூண்ட யாழ்ப்பாணத் தீபகற்பம், யாழில் வல்ல பாணனுக்குப் பரிசளித்தமையினால் யாழ்ப்பாணம் ஆயிற்றென்பர். (முத்துத்தம்பிப் பிள்ளை, ஆ.1912:1) யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் இயற்கை அமைவு, யாழ்ப்பாணத்தின் தமிழ்ப் புலமைமரபிலும் பொருளாதாரவளச் செழுமையிலும் கலாசார ஊடாட்டத்திலும் முக்கியமானது. குறிப்பாக, யாழ்ப்பாணத்து இயற்கைத் துறைமுகங்கள் பண்டப் பரிவர்த்தனைத் துறைகளாக மட்டுமன்றிப் பண்பாட்டுப்பரிவர்த்தனை மையங்களாகவும் விளங்கின. (சைமன் காசிச்செட்டி:1834) இலங்கையின் வடபகுதித் துறைமுகங்களில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, காங்கேசன்துறை, சம்பில்துறை (ஜம்புகோளப் பட்டினம்), ஊர்காவற்றுறை, மாந்தை, கச்சாய்த்துறை, கொழும்புத்துறை, பூநகரி, அல்லைப்பிட்டித்துறை முதலாய பல துறைகள் முதன்மையானவை. வடபகுதித் தமிழரின் வரலாற்றுரீதியான நிகழ்வுகளுடன் பின்னிப்பிணைந்தவை. (கணபதிப்பிள்ளை, க., 2001:58-58).

மேற்குறித்த யாழ்ப்பாணத் துறைமுகங்கள், பண்டங்களின் அல்லது நபர்களின் இறங்குதளம் மட்டுமன்றிப் பண்பாட்டம் சங்கள் உள்ளேகுவதும் வெளியேறுவதுமான இறங்குதுறைகளாகவும் ஏறுதுறைகளாகவும் அமைந்தன. (இராசநாயகம்,செ., 1934:74-78) பத்தொன்பதாம் நூற்றாண்டில்,

காலனிய அரசின் பண்டங்கள் கப்பல்களில் பயணம் செய்து தரையிறங்கிய இத்தகைய துறைமுகங்களில்தான், அதே கப்பல்களில் ஐரோப்பிய முதலாளித்துவமும் அதன் கலாசார அம்சங்களும் சமநேரத்தில் பயணம் செய்து தரையிறங்கின. யாழ்ப்பாணச் சுதேசிகள், முக்கியமாக இந்தியாவின் தமிழ்நாட்டோடும் பிறபகுதிகளோடும் இன்னும், தென் கிழக்காசியாவின் மலேசியா முதலிய நாடுகளோடும் தொடர்ச்சியான பண்பாட்டு ஊடாட்டங்களை மேற்கொள்ள, இத்துறைமுகங்கள் எப்போதும் திறந்த வாயில்களாக இருந்தன. காலனிய கால யாழ்ப்பாணத்தைப் பிரித்தானியர் மதராஸ் மாகாணத்தின்கீழ் (Medras Presidency) நிர்வகித்தவேளை, யாழ்ப்பாணத்துடனான அவர்களது நிர்வாக இணைப்பினை, இத்துறைமுகங்களே மேற்கொண்டன. இத்துறைமுகங்கள் துறைமுக நகரங்களான துறைமுகப் பட்டினங்களையும் கொண்டிருந்தன.

காலனியத்துக்கு முந்திய யாழ்ப்பாணத் துறைமுகங்கள் தொடர்பான பதிவுகளைத் தொன்மக் கதைகளாகவும் வரலாற்றுச் செய்திகளாகவும் அறியமுடிகிறது. காங்கேயன் எனும் பெயருடன் முருகன் ஏமகூடமாகிய கதிர்காமம் செல்வதற்கு வந்திறங்கிய துறையே காங்கேயன்துறை என்பதை, தட்சிண கைலாச புராணம், தட்சிண கைலாச மான்மியம், கதிரை யாத்திரை விளக்கம் ஆகியனவும் ஈழமண்டலச் சதகமும் குறிப்பிடுகின்றன. கி.மு.3ம் நூற்றாண்டில், பௌத்த மதத்தைப் பரப்பும் நோக்குடன் அசோகன் தனது மகள் சங்கமித்தையை, வெள்ளரசு மரக்கிளைகளுடன், பரிவாரங்கள் புடைசூழ, இலங்கைக்குக் கடல் மார்க்கமாக அனுப்ப, அக்குழு, யாழ்ப்பாணத்தின் ஜம்புகோளம் (சம்புக கோவலாம், சம்பில்துறை) எனும் துறைமுகத்தில் (முன்னர் துறைமுகப் பட்டினமாக விளங்கியது) இறங்கி, 'தரித்திருந்து', யாழ்ப்பாணத்தின் பல பகுதிகள் ஊடாக, பௌத்தம் தென்னிலங்கைக்கு வரலாற்று 'நடைப் பயணம்' செய்தது என்பது வரலாறு. யாழ்ப்பாணத்தில் பண்டுதொட்டு இருந்த துறைமுகங்களையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் தமிழ் இலக்கியம், வரலாறு முதலியவற்றின் துணைக்கொண்டு கிறிஸ்தவர்கள்கூட நிறுவியுள்ளனர். உதாரணமாக டானியல் ஜோன் எழுதிய 'கந்தபுராண மறைபொருள்' எனும் நூல், யாழ்ப்பாணத்தின் பல துறைமுகங்களையும் அவற்றின் தோற்றம், வரலாறு ஆகியவற்றைக் குறிப்பிடுவதோடு, கந்தபுராணத்தில் வரும் பெரும்பாலான நிகழ்ச்சிகள், யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் பிற பாகங்களிலும் நடைபெற்றன என்பதை நிறுவுகிறது.(டானியல் ஜோன்., 1-90) இவை யாவும் காலனியத்துக்கு முந்தைய காலத்தில் யாழ்ப்பாணத் துறைமுகங்கள் பண்டங்கள் வந்திறங்கும் துறைகளாக மட்டுமன்றி, மதங்கள் வந்திறங்கிய துறைகளாகவும் விளங்கியதைக் காட்டுகின்றன.

காலனிய காலத்தில் யாழ்ப்பாணத் துறைமுகங்கள் காலனியாதிக்க அரசியலிலும் காலனிய எதிர்ப்பு அரசியலிலும் முக்கிய பாத்திரமேற்றன. காலனிய காலத்தில் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் யாழ்ப்பாணத் துறைமுகங்களைப் பயன்படுத்தி அரசியல், பொருளாதாரம், மதம் முதலிய செயற்பாடுகளில் ஈடுபட்டனர். குறிப்பாக 1540களிலிருந்து யாழ்ப்பாணத் துறைமுகங்களில் போர்த்துக்கீசரின் வணிகக் கப்பல்கள் முதன்முதலாகத் தரை தட்டியதாக வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன. போர்த்துக்கீச ஆட்சியாளர்சார்பில் கத்தோலிக்க மதத்தைப் பிரசாரம் செய்வதற்காக, கி.பி. 16ம் நூற்றாண்டில் இலங்கை வந்த பிரான்சிஸ் சேவியர் என்னும் பெயருடைய மதகுரு யாழ்ப்பாணத்தின் ஊர்காவற்றுறைத் துறைமுகத்தில் பிரசாரகர்கள் சகிதம் தரையிறங்கினார். ஒல்லாந்த மாலுமியான பெற்ரே என்பவர் இலங்கையின் வடமுனைக் கடலில் பயணிக்கும்போது பருத்தித்துறை முனையைக் கண்டு அதற்குப் Point Pedro எனக் கிறிஸ்தவச் சாயம் கொண்ட (Pedro - பேதுரு) பெயரிட்டார். ஐரோப்பாவில் ஐந்தாம் வில்லியத்தின் ஆட்சிக் காலத்தில் இலங்கையின் திருகோணமலைத் துறைமுகம் கைப்பற்றப்பட்ட பின்னர், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்காக, கரையோரப் படைகளின் கட்டளைத் தளபதியான பிராற்வெயிற் என்பவரின் கட்டளைப்படி, இசுற்வோர்ட் என்னும் பெயருடைய தளபதி, கனகரக ஆயுதங்களுடனும் இரு பெரிய படைப்பிரிவுகளுடனும் 24.09.1795 அன்று பருத்தித்துறையில் தரையிறங்கினார். இங்கிருந்து சென்றே ஒல்லாந்தரின் யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்றினர், ஆங்கிலேயர். இதன் பின்னர் மதம் பரப்பும் நடவடிக்கைகள் மேற்கோள்ளப்பட்டன. இவையாவும், காலனிய காலத்தில் யாழ்ப்பாணத் துறைமுகங்கள், காலனிய மதங்களதும் அவற்றினைச் சார்ந்த ஆட்சியாளரதும் இறங்குதுறைகளாக விளங்கியதைக் காட்டுகின்றன. யாழ்ப்பாணத் துறைமுகக் கரையோரங்களில் கிறிஸ்தவ மதம் பரப்பப்பட்டு வேரூன்றியமைக்குச் சாட்சியாக, காலனிய காலத்தில் கட்டப்பட்ட கிறிஸ்தவ தேவாலயங்கள் விளங்குகின்றன. துறைமுகங்களும் அவற்றை அண்டிய பகுதிகளும் கிறிஸ்தவ மதத்தினதும் அதன் ஆட்சியினதும் ஆதிக்கத்துக்குட்பட்ட இந்தப் பகைப்புலத்திலேதான், சிவசம்புப்புலவர் பாடிய 'வல்வைக் கலித்துறை', 'பருத்தித்துறைக் கலித்துறை' ஆகிய இரு துறைமுகப் பிரபந்தங்களையும் புரிந்து கொள்ள வேண்டும்.

துறைமுகப் பட்டினங்கள்: வல்வெட்டித்துறையும் பருத்தித்துறையும்:

காலனிய காலத்தில் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய துறைமுகங்களின் மூலமான கப்பலசைவுச் செயற்பாடுகள், இவ்விடங்களின் சமூக அசைவியக்கத்திலும் பல மாற்றங்களை ஏற்படுத்தின. அந்த மாற்றங்கள் பொருள்சார், பொருள்சாராப் பண்பாடுகளில் பிரதிபலித்தன. பண்டைக் காலத்தில் தென்னிந்திய நகரங்களுக்குப் பருத்தி ஏற்றுமதி செய்யும் துறைமுகமாக விளங்கியதால் பருத்தித்துறை எனப் பெயர் பெற்றது. (இரகுவரன்,பா., 2012) வல்லி என்பவன் ஆடுகளைப் பட்டியாக வளர்த்து அவற்றை வியாபாரத்திற்காக ஏற்றுமதிசெய்யும் துறை வல்லிபட்டித்துறை என்றிருந்து வல்வெட்டித்துறையாகியது.(நீலகண்டன்,கா., 1999:6) இத்துறைமுகங்கள் கப்பல் தரைதட்டும் துறைமுகங்களாக மட்டுமன்றிக் கப்பல் கட்டும் (கப்பல் கட்டி உருவாக்கப்படும்) துறைமுகங்களாகவும் விளங்கின. (மீனாட்சிசுந்தரம்,பா., 2006)

பத்தொன்பதாம் நூற்றாண்டில் காலனிய மதமான கிறிஸ்தவத்தின் பிரசாரகர்கள், இப்பிரபந்தங்கள் சுட்டும் துறைமுகங்களை அண்மித்த பகுதிகளில் பல நூற்றுக்கணக்கானோரை மதமாற்றம் செய்தனர். கடற்கரைத் தேவாலயங்களைக் கட்டினர். கிராமியரீதியிலான அமெரிக்க மிஷன் பாட

தொடர்தல் 96ம் பக்கம்

ஈழத்துத் துறைமுக...

95ம் பக்கத் தொடர்ச்சி...

சாலைகளை நிறுவினர். நாவலரது சைவத் தமிழ் இயக்கம் சைவவேளாள மேட்டிமை மனோபாவத்துடன் சாதிநிலையில் விளிம் புநிலையுடையோரைப் புறக்கணித்துப் புறமொதிக்கியமையும் அம்மக்கள் கிறிஸ் தவத்தைத் தழுவ ஏதுவாயிற்று. நாவல ரின் பிரசுரங்கள் பலவற்றில் கரையார் சமூகத்தை வெளிப்படையாக இழிவுபடுத் துவதைக் காணமுடியும். (பார்க்க: கரை யார் வழக்கு, சைவசமயி, சைவ விரோதம், யாழ்ப்பாணச் சமயநிலை). சைவவேளாள உணர்வினைச் சைவாகமத்தில் ஏற்றிய நாவலரது இயக்கச் செயற்பாடுகளால், கரையோர மக்கள் கிறிஸ்தவ வேதாகம உணர்வும் அதனூடான சமூக அந்தஸ்தும் பெற முயன்றமை தவிர்க்கவியலாததே.

துறைமுக இலக்கியங்களின் பின்புலம்:

சிவசம்புப் புலவரும் அவரது மரபினரும் நாவலரது நிலைப்பாட்டிலிருந்து வேறு பட்டவர்கள். அவர்கள் சாதி, மத பேதம் அற்றும் பால்நிலை பேதம் அற்றும் புல மைத்தொழிலாற்றியவர்கள். தருமப் பாட சாலை ஒன்றை, நாவலருக்கு முந்தைய கல்வி முயற்சியாக, சாதி பேதம் பார்க் காது, உடுப்பிட்டி அருளம்பல முதலி யார் நடத்தியதை உதயதாரகை குறிப்பி டுகிறது.(17.06.1841) சிவசம்புப்புலவரின் மாணாக்கராக வல்வை வைத்தியலிங்கம் பிள்ளை விளங்கினார். இத்தகைய நில-வரங்களால் புலவரும் புலவர் மரபினரும் யாழ்ப்பாணச் சைவத்தமிழர்களைப் பேதம் பாராட்டாத நிலையில் அணுகினர் எனத் துணியலாம். அதன் விளைவுகளில் ஒன் றாகவே சைவத்தமிழ் உணர்வுடன் எழு தப்பட்ட மேற்குறித்த இரு துறைமுக இலக்கியங்களையும் நோக்க முடிகிறது.

இத்துறைமுகங்களை அண்மித்த கடற்க ரையோரத்தின் பல பகுதிகள், கரையோ ரத்தில் அமைந்த சைவ ஆலயங்களின் தீர்த்தமாடும் புண்ணிய நீர்நிலைகளாவும் சில பகுதிகள் சைவர்களின் சிரார்த்தக் கடமை நிறைவேற்றும் புண்ணிய நிலைக ளாகவும் பண்டைக் காலத்திலிருந்து விளங்குகின்றன. இவ்விரு துறைமுகங்க ளைச் சேர்ந்த புலோலி, தும்பளை, அல் வாய், திக்கம், பொலிகண்டி, ஊரணி, வல்வெட்டி, நெடியகாடு முதலாய பல ஊர்கள் மரபார்ந்த சைவத்தமிழ்க் கிரா மங்களாகவும் விளங்கின. இவ்விடங்களில் பழுதடையாத பல உணவுப் பொருள் (பருத்தித்துறை வடை, எள்ளுப்பாகு, பொரிமா) உற்பத்திக்கு, நீண்டநாட்களாக மேற்கொள்ளும் கப்பற் பயணம் காரண மாகியது. பனைமரம் தொடக்கம் புகை யிலைவரை இத்துறைமுகங்களில் ஏற்று மதி செய்யப்பட்டன. தென்னிந்தியாவுட னான தொடர்புகள் இப்பிரதேச வீடுகளின் அமைப்பிலும் (நாற்சார வீடுகள்), கோயில் களின் அமைப்பிலும் (வல்வெட்டித்துறைச் சிவன் கோயில், பொலிகண்டிக் கந்தவ னக் கடவை) செல்வாக்குச் செலுத்தின. இறங்குதுறைகளாக இருந்தமையால், அன்னதான மடங்களும் தெருமூடி மடங் களும் அப்பக் கடைகளும் இருந்தன. வாணிபச் செழிப்போங்கிய இவ்விடங்க ளில் தமிழுலகில் கோலோச்சிய புலவர்க ளும் (ச. வைத்தியலிங்கம்பிள்ளை, வ. குமாரசாமிப் புலவர், தி. செவ்வந்திநாத தேசிகர், முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் முதலியோர்) புலமையாளர்களும் (தும் பளை வே. சுப்பிரமணிய சாஸ்திரிகள், வைமன் கதிரைவேற்பிள்ளை, சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளை, தில்லைநாத நாவலர் முதலியோர்) வாழ்ந்தனர். இன் னும், முக்கியமான புலமை நிலையங்களும் (புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை முதலியன), புகழ்பெற்ற அச்சியந்திரசா லைகளும் (கலாநிதி யந்திரசாலை முத லியன) இருந்தன. அத்துடன், சைவத்த மிழ் பரப்பிய பத்திரிகைகளும் (சைவாபி மானி முதலியன)வெளிவந்தன. (மீனாட்சி சுந்தரம்,பா .2006., இரகுவரன், பா. 2012)

மேற்குறித்த இடங்களில் வரலாற்றுத் தொன் மைமிக்க ஆலயங்கள் (அருணகிரிநாதர் திருப்புகழ் பாடிய கந்தவனக் கடவை முதலியன) பலவும் இருந்தன. இத்துறை முகங்களை அண்டியுள்ள ஆலயங்கள் சைவத்தமிழ்ப் புலமைமரபின் அடையா ளங்களாகவும் விளங்கின. உதாரணமாக, பருத்தித்துறைத் துறைமுகப் பட்டனத்திற்கு மிக அருகில் அமைந்த பசுபதீசுவரர் ஆலயத்தில் நாவலரும் சிவசம்புப்புலவ ரும் புராண படனம், பிரசங்கம் முதலிய வற்றை நிகழ்த்தியுள்ளதைக் குறிப்பிடலாம். நாவலர் இவ்வாலயச் சிவன்மீது பசுபதீசு வரர் ஊஞ்சல் பாடியுள்ளார். சிவசம்புப்பு லவர் இவ்வாலய உமைமீது பருவதவர்த் தனி அம்மை ஊஞ்சலும் இவ்வாலய முரு கன்மீது பசுபதீசுவரர் ஆலய முத்துக் குமார சுவாமி ஊஞ்சலும் இவ்வாலயச் சிவன், உமை, விநாயகர், முருகன் ஆகிய நால்வர்மீதும் புலோலி நால்வர் நான்ம ணிமாலையும் பாடியுள்ளார். இத்துறை முகப் பட்டினங்கள் வாய்ப்பான கப்பற் துறைகளைப் பெற்றிருப்பதால் பொருளி யல் வாழ்வோடு சைவத்தமிழ்ப் புலமை வாழ்விலும் உயர்ந்து விளங்கின. (சிவ லிங்கராஜா, எஸ்.,1984:6)

துறைமுகப் பிரபந்தங்கள்: வல்வைக் கலித்துறையும் பருத்தித்துறைக் கலித் துறையும்:

சிவசம்புப்புலவர் வல்வெட்டித்துறைத் துறை முகம், துறைமுகப் பட்டினம் அவற்றைச் சுற்றிய ஊர்கள்மீது பாடிய 'வல்வைக் கலித்துறை' (வ.க.துறை), பருத்தித்துறைத் துறைமுகம், பருத்தித்துறைத் துறைமுகப் பட்டினம், அவற்றைச் சுற்றிய ஊர்கள் மீது பாடிய 'பருத்தித்துறைக் கலித்துறை' (ப.க.துறை) ஆகிய இரண்டும் காலனிய எதிர்ப்புப் பிரதிகளாக அடையாளங் காணத்தக்கவை. வல்வைக் கலித்துறை யில் பதினொரு கலித்துறைச்செய்யுட்களும் பருத்தித்துறைக் கலித்துறையில் பன்னி ரெண்டு கலித்துறைச் செய்யுட்களும் ஒரு வெண்பாவும் இடம் பெற்றுள்ளன. புலவர் 1880ல் பாடிய இவ்விரு பிரபந்தங்களும் முன்னர் ஏட்டு வடிவில் இருந்தன என்றும் அவற்றைப் புலவரின் மாணாக்கரும் மரு-கருமான வித்துவான் ஆறுமுக உபாத்தி யாயர் படியெடுத்து, புலவரின் மாணாக்க ரும் ஆரிய திராவிட பண்டிதருமாகிய செவ்வந்திநாத தேசிகருக்கு வழங்கிய-தாகவும் செவ்வந்திநாத தேசிகரின் மறை வின் பின்னர், 1939ல் வெளிவந்த புலவ ரின் சில பிரபந்தங்கள் அடங்கிய தொகுப் பில் வெளிவந்தது என்றும் கூறுவார், புல வரின் பூட்டனாரும் ஆறுமுக உபாத்தி யாயரின் மாணாக்கருமான புலவர்மணி கா. நீலகண்டன். (இக்கட்டுரை ஆசிரிய ரின் ஆசிரியரான புலவர்மணி கா. நீல கண்டன் தெரிவித்த தகவல் - 03.05.2013).

புலவரின் இரு கலித்துறைப் பிரபந்தங்க ளும் இலங்கைத் தமிழ் இலக்கியச் செல் நெறியில் முதலில் வெளிவந்த துறைமுக இலக்கியங்களாகக் கருதத்தக்கவை. இப் பிரபந்தங்களின் முக்கியமான சூழலியல் அம்சங்களை இங்கு சற்று விரிவாக நோக் கலாம்.

சுதேச மையச்சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, கிராமங்களையும் சிறு ஊர்களையும் நக ரங்களையும் மையங்கொண்டு எழுப்பப்ப டுவது போன்று, இங்கு துறைமுகப் பட்டி னங்களை மையங்கொண்டு எழுப்பப்படு வதை அவதானிக்கலாம். புலவரின் செய் யுட்களில் துறைமுகங்கள் குறித்துப் பாடல் பாடுவதற்கான அருள் வேண்டல் பகுதி கள், சைவத்தமிழ்நிலைப்பட்ட சூழல்மையக் கொள்கை ('செந்தமிழ்', 'சிவபக்தி' - சி.பி.பெ.தி.,2014:445) ஒன்றினைக் (religion and language ecocentrism) காட்டி நிற்கிறது.

'ஆறு வதனப் பிரானன்பர்க்
கெய்ப்பில் வைப்பன்னவன்வா
னேறு மதிற்பருத் தித்துறைச்
செல்வ ரிதயம்புக்கு
வீறு மகிழ்வி னெனைக்காக்க...'

- சி.பி.பெ.தி., 2014:446

எனத் தொடங்கும் செய்யுளைக் குறிப்பி டலாம்.

பருத்தித்துறைத் துறைமுகப் பகுதியில் வாழும் செல்வச் செழிப்புள்ள மக்களது இதயங்களில் ஆறுமுகப்பிரான் புகுந்து எனையும் எனது சைவத்தையும் தமிழை யும் காக்க வேண்டும் எனப் பதிவு செய் கிறார், புலவர்.

யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவக் காலனியம் நிகழ்ந்தபோது, சுதேச மையச்சுற்றுச் சூழல் (national eco-centric) பற்றிய விழிப்பு ணர்வை, துறைமுகச் சூழலை மையமா கக் கொண்டு, சைவத்தமிழ் அடிப்படையில் ஏற்படுத்த முயல்வதை இப்பிரபந்தங்க ளின்வழி அறிய முடிகிறது.

'கலச்செல்வம் வாணிகச் செல்வங்
கொடைச்செல்வங் காணிச்செல்வஞ்
சலச்செல்வந் தானதருமச் செல்வங்கல்
விச் சாலைச்செல்வங்
குலச்செல்வ மக்கண் மனைச்செல்வஞ்
சீர்ச்செல்வங் கொண்டதபோ
பலச்செல்வ மாய்வல்வை யூருக்கு முற்
றும் பலித்தனவே'

- சி.பி.பெ.தி., 2014:444

'சங்க வளம்பிர சங்க வளங்கல்விச்
சாலைவளந்
தங்க வளம்வண் கொடைவளந் தான
தருமவளம்
வங்க வளம்பன் னிலவளம் பூந்திரு
வாழு மனைத்
துங்க வளம்வள முற்றும் பருத்தித்
துறைக்கண்ணவே'

- சி.பி.பெ.தி., 2014:446

மேற்குறித்த இரு செய்யுட்களிலும் கப் பல், கொடை, காணி, நீர், தான தருமம், கல்விச்சாலை, குலம், மக்கள், மனை, தமிழ் வளர்க்கும் சங்கம், பிரசங்கம் முத லிய அம்சங்கள் இரு துறைமுகப் பட்டி னங்களுக்கும் இயல்பாக வாய்த்துள்ளன என்பதை அவதானிக்க முடிகிறது. 'வல் வையூருக்கு முற்றும் பலித்தனவே', 'முற் றும் பருத்தித்துறைக் கண்ணவே' எனும் ஈற்றடிகளில் வரும் 'முற்றும்' என்பது 'இயல் பாக முழுமை நிறைந்தது' என்பதையும் 'பலித்தனவே', 'கண்ணவே' என்பன 'செயற் கையற்று இயற்கையாகவே அமைந்தது' என்பதையும் புலப்படுத்துகின்றன. இயற்கை தன்னிலையில் சுதந்திரமானது (independent of the subject) என்பதை இவை காட்டிநிற்கின்றன.

சூழல் காப்புணர்வு (eco care) என்பது சூழலை அதற்கேயுரிய தன்மையுடன் பாது காத்தல் என்பதாக இருப்பினும் மதம், மொழி முதலாய பெறுமதிகளை அதன் மேலேற்றிச் சொல்வதென்பது, மக்கள் மத்தியில் சூழல் பற்றிய அக்கறை பெறு மதிமிக்கதாகக் கருதப்படும் எனும் நிலைப் பாடு சார்ந்தது. சூழல் பற்றிய அறிவி யல்ரீதியிலான விளக்கங்களைவிடவும், மக்களிடம் மரபுரீதியாக ஊறியிருக்கும் மதம், மொழி ஆகியவற்றின் உணர்வுநிலை யூடாகச் சூழல் அக்கறையைக் கூறுதல் பெறுமதிமிக்கது. அது சூழல் பற்றிய அவர்களது உணர்வார்ந்த செயற்பாடுக ளுக்கு வாய்ப்பாக அமைவதோடு, சூழற் காப்புநிலையை மக்களின் பிரிக்க இய லாத அனுபவமாகவும் மாற்ற ஏதுவாகும். இதன் காரணமாகவே புலவரது செய்யுட் களில் சைவாகமம், சைவ சித்தாந்தம், புராண இலக்கியம் முதலியவற்றைத்தாங் கியதாகத் துறைமுகச் சூழல் சித்திரிக்கப் பட்டது. துறைமுக இயற்கையின் உள் ளார்ந்த மதிப்புக்களுக்குப் புலவர் சைவத் தமிழ் நிலைநின்றே அழுத்தம் தருவதும் துறைமுக இயற்கையின் உள்ளார்ந்த மதிப்புக்களைச் சைவத்தமிழ்ப் பெறுமதி யாகக் காணுவதும் இதன்பாற்பட்டதே. இவற்றுக்குச் சான்றாகப் பின்வரும் செய் யுளைக் குறிப்பிடலாம்.

'கோவிற் சிறப்பு மடச்சிறப்
போடை குளச்சிறப்புக்
காவிற் சிறப்புப் புராணச்
சிறப்புக் கனிந்தவருட்
பாவிற் சிறப்புவெண் ணீற்றுச்
சிறப்பி சைப் பண்சிறப்பாற்
பூவிற் சிறப்புமுற் றும்வல்வை
யூரிற் பொலிந்தனவே'

- சி.பி.பெ.தி., 2014:444

யாழ்ப்பாணத்தில் நிலவிய கிறிஸ்தவக் காலனியம், யாழ்ப்பாணச் சைவத்தமிழ்ச் சுதேசிகளின் கலாசார, வரலாற்றுப் பெறு மதிகளைச் சிதைத்தும் அழித்தும் உரு மாற்றியும் செயலாற்றிய வேளையில், புலவர் இத்துறைமுகப் பட்டினங்களின், பண்பாடு, வரலாறு ஆகியவற்றுடன் இணைந்த மதிப்பினைப் (cultural value and historical value) பதிவுசெய்ய முனை கிறார்.

இப்பிரதேசங்களின் கலாசார, வரலாற்றுச் சார்புடைய பெறுமதிகள் (cultural and historical related qualites) பழமையானது, தூய்மையானது, புனிதமானது எனவும் புலவர் கருதினார். இதற்கு உதாரணமாக, புலவர் கலாசார வரலாற்றுப் பெறுமதி-மிக்க துறைமுகப்பட்டின ஆலயங்களை யும் அவற்றைச் சார்ந்த குளங்கள், மடா லயங்கள், மருத்துவச் சாலைகள், தண் ணீர்ப் பந்தல்கள் முதலாயவற்றைத் தனது பாடல்களில் சூழமைவுபடுத்துவதைக் குறிப்பிடலாம். இதற்குப் பின்வரும் செய் யுட்களை இங்கு சான்று காட்டலாம்.

'கந்த வனநடு வாம்பருத் தித்துறை
காணுங்கிழக்
கந்த ணலர்ப்பொழில் வல்வை
குடக்கி லணிவிளைத்துச்
சிந்துவின் றென்கரைப் பாலுற்ற
மூன்று மெய்ச் சீர்பயக்கு
மிந்து வகைநய மேனையெந்
நாட்டிலி சைந்ததுவே'

- சி.பி.பெ.தி., 2014:444

'விருத்தரைப் பாலரை வான்கவி
வாணரை மெய்த்தவரை
யருத்தியிற் காத்திடுங் கூவல்
குளமட மாலயங்க
டிருத்து மருத்துவச் சாலைதண்
ணீர்ப் பந்தல் சேர்வித்திடும்
பருத்தித் துறைப்புரு டோத்தமர்
தேக்கிய பாக்கியமே'

- சி.பி.பெ.தி., 2014:446

கிறிஸ்தவக் காலனியத்திற்கு எதிரான போரில், இத்தகைய துறைமுகப் பிரபந் தங்கள் மூலம் இயற்கைச் சூழலுக்குப் புலவர் ஓர் உயரிய அறவியற் பரிமா ணத்தை (ethical dimension) அளித்துள் ளார். வளங்குன்றாச் சமூகமொன்றை உரு வாக்க அறங்களின் பங்களிப்பு எந்த அளவிற்கு உதவுகிறது என்பது பற்றிய அவரது நோக்குநிலையை இதன்மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. சுற்றுச் சூழல் அறவியல் (environmental ethics) என்பது இயற்கைக்குப் பங்கமில்லாத வகையில் இயற்கையோடு இயைந்திருத் தலை அடிப்படையாகக்கொண்டது. முக் கியமாக, 'இயற்கை எமக்குரியது' என்ற எண்ணப் பாங்கிலிருந்தும் மாறுபட்டு 'நாமே இயற்கைக்குரியவர்' என்ற நிலை யில் இயற்கைக்கு நம்மைக் கடமைப்பட் டவராக்குவதும் அதன் ஒழுங்கு குறையா மல் சேவகம் புரிபவராக்குவதும் சூழல் சார் ஒழுக்கவியலின் பாற்பட்டது.

புலவர் துறைமுக இயற்கையின் உள் ளார்ந்த மதிப்புக்களைப் (intrinsic value) போற்றுதல் முக்கியமானது. அதற்காக நீர்நிலைகள், மரங்கள், பசுக்கள் முதலி யவற்றின்மீது புலவர் தாம் கருதிய சைவத் தின் புனிதத்தை ஏற்றுவது தவிர்க்க முடியாது அமைந்து விடுகின்றதெனினும், அது பாதுகாப்பு உணர்வு சார்ந்தது.

தொடர்தல் 97ம் பக்கம்

ஈழத்துத் துறைமுக...

96ம் பக்கத் தொடர்ச்சி...

சூழல் ஒழுக்கத்திற்கும் பாதுகாப்புக்குமாக இயற்கையில் மதக் கருத்தியல்களை ஏற்றுதலிருந்து, மதம் என்ற கற்பிதம் இயற்கையின் சேவகனாதலைப் புரிந்து கொள்ள முடியும். கிறிஸ்தவக் காலனிய எதிர்ப்பாளரான புலவரும் துறைமுக இயற்கையின் பாடல்வழிச் சேவகனாகிறார். மரங்களைப் பாதுகாப்பதிலிருந்து பசுக்களை ஓம்புதல்வரை மக்களிடம் இந்தச் சூழல் ஒழுக்கம் இருக்க வேண்டும் என்ற புலவரின் மனப்பாங்கு அவர் பாடல்களில் தொனிக்கிறது. பசுக்கள், மரங்கள் முதலியவற்றைப் பாடும் செய்யுட்களில் பிணியாளர்களையும் மருத்துவசாலைகளையும் இணைத்துப் பாடுவதிலிருந்து சூழல் ஒழுக்கப் பாதிப்பின் மறுபக்கத்தையும் புலவர் காட்டி விடுகிறார்.

தெய்வம், பிதிர், ஒக்கல், விருந்தினர் ஆகியோருக்குரியன செய்தலில் இயற்கைச் சூழல் முக்கியம் என்பதால் அவற்றையும் பாடுகிறார். *'தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு ஐம்புலத்தார் ஓம்பல் தலை'* எனும் வள்ளுவரின் அறவியல் கருத்தைச் சூழலுக்குப் பொருத்தி சூழலியல் ஒழுக்கத்தை வலியுறுத்துகிறார். புலவரின் பாடல்களில் இயற்கைக்கும் மனிதருக்கும் சேவை செய்தல் தொடர்ச்சியாக வலியுறுத்தப்படுகிறது. அந்தச் சேவை எப்போதுமே முழுமைக்குமான ஒரு பாதுகாப்பை உருவாக்குவதாகப் புலவரின் பாடல்களில் பதிவாகியுள்ளது. சுதேசச் சூழலில் பாரம்பரிய இயற்கை அறிவுடன் (traditional ecological knowledge) புலவர் செயற்பட்டதை, துறைமுக இலக்கியங்களில் காணப்படும் சூழல் பயன்பாடு பற்றிய அவரது பதிவுகள்வழி அறியமுடிகிறது. இவற்றுக்குப் பின்வரும் செய்யுட்களைச் சான்று காட்டலாம்.

'மருத்துவ சாலைதண் ணீர்ப்பந்த
ரானிரை வைப்புநிரைத்
தருத்திகழ் நீழல் வழியா
வணமன்ன சத்திரநோய்
விருத்த ரநாதர் பிணியினர்
சாலை மிகக்குழுமக்
கருத்தொடு கண்புய்க்க லாதுறும்
வல்வைக் கடிநகர்க்கே'

- சி.பி.பெ.தி., 2014:445

'அருந்துதிக் கற்பி னரிவைய
ரோடில் லறத்திலென்றும்
பெருந்துதி மேவர வாழ்ந்தருட்
டெய்வம் பிதிரரொக்கல்
விருந்து பசுமட வார்பிணி
யாளர்கள் வேதியரைத்
திருந்துறக் காப்பர் பருத்தித்
துறைப் பெருஞ் செல்வர்களே'

- சி.பி.பெ.தி., 2014:445

இரு துறைமுகப் பட்டினச் சூழலுடனும் புலவர் கொண்டிருந்த பரந்த உறவு செய்யுட்களில் புலனாகிறது. மனிதர்கள் மனிதர்களுடன் உறவும் உரிமையும் கொண்டாடுமளவிற்குச் சூழலுடன் கொண்டாடுவதில்லை. புலவர் 'உறவு' என்பதை விரிந்த அர்த்தத்தில் கொண்டார் என்பதற்கான சான்றாகப் பின்வரும் கூற்றினைக் குறிப்பிடலாம்.

'உலக வாழ்வு ஒரு சில மனிதரோடு அன்பாக வாழ்வதோடு மட்டும் மட்டுப்படுத்தக் கூடியது அன்று. வாழ்க்கை என்பது ஒரு சில அறிந்த மனிதர்களுக்கு இடையே மட்டும் நிலவுகின்ற அன்பில் மட்டும் தங்கியிருப்பதில்லை. ஒரு மனிதருக்கும் ஏனைய மனிதருக்கும் விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் இயற்கைக்கும் மலைகளுக்கும் நதிகளுக்கும் மரங்களுக்கும் செடிகளுக்கும் என எல்லாவற்றுக்கும் இடையேயுள்ள பரந்த உறவு என்று ஜிட்டு கிருஸ்ணமூர்த்தி அவர்கள் விபரிப்பார்கள். வாழ்க்கை என்பது உறவே (Life is Relationship) என்பது அவரது புகழ்மிக்க ஒரு பொன்மொழியாகும். சிவசம்புப்புலவரிடம் உள்ள இவ்வாறான பரந்த உறவை வல்லைக் கலித்துறை, பருத்தித்துறைக் கலித்துறை என்பவற்றில் விரிவாகக் காணலாம்.' (சோதிநாதன், பூ. 2004:51)

புலவரின் துறைமுக இலக்கியங்களில் சூழல் முழுமையுடனும் அவர் கொண்டிருந்த பரந்த உறவு புலப்படுகிறது. புலவர், சூழலுடன் கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாடு அவரது செய்யுட்களில் ஆழ்ந்த ஈடுபாட்டு அழகியல்நிலையில் (Aesthetics of Engagement) வெளிப்படுகிறது. கற்பனை மேலிட்ட குணங்கள் (Imaginative Qualities) அதிகம் மேலெழாது, யதார்த்தத்தோடு ஒட்டியனவாகப் புலவரது செய்யுட்கள் அமைந்திருப்பதற்குச் சூழலின் அனைத்துக் கூறுகளுடனான புலவரின் பரந்த உண்மையான உறவு முதன்மைக் காரணமாகும்.



புலவரது செய்யுட்களில் துறைமுக இயற்கையின் அழகியற் பெறுமதிகள் (Aesthetic Qualities) வெளிப்படுமுறையில், ஒருவிதப் புலமைசார்நிலையை (Intellectual Condition) அவதானிக்க முடிகிறது. அந்தநிலை புலவரது செய்யுட்களில் இருவிதங்களில் அமைகிறது. ஒன்று பாடு முறையால் அமைவது, மற்றையது பாடப்படு பொருளில் அமைவது.

புலவர் தமது பாடுமுறையால், நிகழ்வொன்றைப் புலமைசார் அழகியலாக மாற்றிவிடுகிறார். இதனைப் பின்வரும் செய்யுளின் அடியொன்றினூடு தெளிவுபடுத்தலாம்.

'முன்னிற்ப ரீய வுலோபர்க்கு மீயு முறை
கற்பிப்பார்
பின்னிற்பர் பாவம் பழிக்கென்று மோருரை
பேசுவர்வான்
மன்னிற் பலதிறப் போகந்துய்ப் பார்
மழை வண்ணனெனப்
பொன்னிற் பிறங்குரத் தார்பருத் தித்து
றைப் புண்ணியமே'

- சி.பி.பெ.தி., 2104:447

பருத்தித்துறைத் துறைமுகக் கொடையாளர்களின் கொடைத்திறன் பற்றிய இச் செய்யுளின் *'முன்னிற்ப ரீய வுலோபர்க்கு மீயு முறைகற்பிப்பார் பின்னிற்பர்'* எனும் முதலடி நோக்கத்தக்கது. *'முன்னிற்பர், ஈய உலோபர்க்கு ஈயும் முறை கற்பிப்பார் பின்னிற்பர்'* என்பது பதப் பிரிப்பு. 'முன்னிற்பர்' (பெறுவதற்காகக் கொடுப்பவர் முன்னால் நிற்கும் ஏழைகள்), 'பின்னிற்பர்' (தனக்கு முன்னால் நிற்கும் ஏழையிடம் கொடுக்கும் கொடையாளர்). கொடையாளி முன்னால் ஏழை நிற்கிறான். கொடையாளி கொடுக்கிறான். இது ஒரு செய்தி மட்டுமே. ஆனால், புலவர், கொடையாளியைப் புலமையாளராக்குகிறார். எவ்வாறெனில், கொடை செய்தவர் அச்செயலைப் புரியும்போது, கொடை செய்யாத உலோபிகளுக்கு கொடை செய்வது பற்றிய கல்வியைப் போதிக்கிறார் என்கிறார், புலவர். 'உலோபர்க்கு ஈயும் முறை கற்பிப்பார்' என்கிறார். இங்கே புலவரின் பாடுமுறையால், கொடைகூட ஒரு புலமைக் கல்வியாகிறது.

பாடப்படு பொருளில் அமையும் புலமை நிலைகளை நோக்கும்போது அவற்றை

- மொழிவழிப் புலமைச் செயற்பாடுகளின் சிறப்பு ('புராணச் சிறப்பு' - சி.பி.பெ.தி., 2014:444, 'பாவிற் சிறப்பு' - சி.பி.பெ.தி.,2014:444, 'பிரசங்க வளம்' - சி.பி.பெ.தி.,2014:446, - 'மெய்ப்புராணத் துண்மை தேற்றியற் செல்வம்' - சி.பி.பெ.தி., 2014:447),
- புலமை நிறுவனங்களின் சிறப்பு ('கல்விச்சாலைச் செல்வம்' - சி.பி.பெ.தி., 2014:444, 'குருகுல மாக்களிருஞ்சபை' - சி.பி.பெ.தி., 2014:444, 'கல்விச்சாலை வளம்' - சி.பி.பெ.தி., 2014:444),
- புலமையாளர்களின் சிறப்பு ('முத்துக் குமாரசுவாமிக் குருமதி' - சி.பி.பெ.தி., 2014:447, 'குமாரசுவாமிப் புலவன்' - சி.பி.பெ.தி.,2014:447, 'வான்கவி வாணர்' - சி.பி.பெ.தி.,2014:446, 'வேதியர்' - சி.பி.பெ.தி.,2014:446, 'வாணிகச் சால்பின் மிக்கார்' - சி.பி.பெ.தி.,2014:446),
- புலமை நூலுக்கு ஒப்பான சிறப்பு ('எடுத்துமுன் னூருணி நீர்நிறைந் தற்றே யெனவள்ளுவர் தொடுத்த தொடர்புக் கிலக்கியமாகத் துணிந்து சொல வடுத்த பன்னற்றுறை' - சி.பி.பெ.தி.,2014:447)

ஆகிய நான்கு அம்சங்களாக அவதானிக்க முடிகிறது.

கிறிஸ்தவக் காலனியத்தை எதிர்த்துச் செயலாற்றிய பெரியோரினால் துறைமுகப் பட்டினங்களுக்குப் பெருமை சேர்க்கிறார், புலவர். வல்வெட்டித்துறைச் சிவன் கோவிலைக் கட்டிய திருவேங் கடாசல பிள்ளை பற்றிய பதிவுகளை இங்கே சான்று காட்டலாம்.

'நீதி மரபிற் றிருத்தொண்ட
ரோடு நிகரும்பத்திச்
சோதி மலர்முகச் சீர்வேங்க
டாசலத் துங்கவள்ளல்
பாதி மதிச்சடை யான்றேவி
யோடு பயி லத்தந்த
சேதிம மொன்றமையும் வல்வைச்
சீரைத் தெரித்திடவே'

- சி.பி.பெ.தி., 2014:445

'விண்ணியல் செல்வத்தின் மண்ணியல்
செல்வ மிதக்கத்துய்த்த
புண்ணிய சீலத் திருவேங்
கடாசலப் பூபன்வந்து
நண்ணிய வான்குலத் தார்வாழும்
வல்வை நகரினினூங்
கெண்ணியல் போக நகர்வேறிங்
கியாவ திசைத்திடவே'

- சி.பி.பெ.தி., 2014:445

கீரிமலை ஆறுமுகசுவாமி கோயிலைக் கட்டிய கந்தசுவாமிப் பெரியார்மீது புலவர் பாடிய 'பிரபாவப் பாமாலை' எனும் பிரபந்தத்தில் வல்வெட்டித்துறைத் துறைமுகத்தினை அழகுறப் படம் பிடித்துக் காட்டுகிறார். அப்பகுதி வருமாறு,

'ஊரெல்லாம் பண்டிதரு
மோங்குகொடைச் செல்வரும்வாழ்
பேரெல்லாம் கொண்டு பிரிவின்றிப்
- பாரெல்லாம்
பன்னியிட நின்றொளிர்யாழ்ப்
பாணத்தி னுத்தரத்தின்
மன்னியிடும் வல்வை வளம்பதியிற்...'

- சி.பி.பெ.தி., 2014:410

சிவசம்புப் புலவரின் வல்வைக் கலித்துறை, பருத்தித்துறைக் கலித்துறை ஆகிய இரு பிரபந்த இலக்கியங்களும் ஈழத்தின் முன்னோடித் துறைமுக இலக்கியங்களாக அமைகின்றன. காலனிய கால யாழ்ப்பாணத்தின் இரு முக்கிய துறைமுகங்களான வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகியவற்றினையும் அவற்றினைச்சார்ந்த துறைமுகப்பட்டினங்களையும் பாடுபொருளாக்கியுள்ளார், புலவர். பத்தொன்பதாம் நூற்றாண்டு இலங்கைத் தமிழ்க் கவிதையின் பிரதான இரு போக்குகளாக, சமயநெறி போற்றும் போக்கு, பிரபுத்துவத்தைப் போற்றும் போக்கு ஆகியவற்றை ஈழத்து இலக்கிய வரலாற்று ஆய்வாளர் குறிப்பிடுவர். ஆனால், சிவசம்புப் புலவர் அவ்விரு போக்குகளோடு மட்டும் நின்றுவிடவில்லை. அவர் ஒரு கிறிஸ்தவக் காலனிய எதிர்ப்பாளர் என்றவகையில், துறைமுகங்கள் சுவீகரிக்கப்படுவதை எதிர்க்கும் நோக்கில், வல்வைக் கலித்துறை, பருத்தித்துறைக் கலித்துறை ஆகிய துறைமுகப் பிரபந்தங்களைப் படைத்தார். அவை, பத்தொன்பதாம் நூற்றாண்டுச் சமூக, பண்பாட்டு அசைவியக்கத்தில்,

தொடர்தல் 98ம் பக்கம்

ஈழத்துத் துறைமுக...

97ம் பக்கத் தொடர்ச்சி...

அத்துறைமுகங்களின் முக்கியத்துவத்தை அடையாளப்படுத்துவதோடு, கவிதைப் போக்கிலும் முக்கியமான புதிய திசையைக் காட்டுகின்றன.

முடிவுரை:

சிவசம்புப்புலவரின் துறைமுக இலக்கியங்கள், ஈழத்து இலக்கிய மரபில் பெறும் முக்கியத்துவத்தை,

- மதக் காலனிய எதிர்ப்பில் உருவாகிய துறைமுக இலக்கியங்களுக்கு முன்னோடியான முதல் முயற்சிகளாக அமைதல்,
- காலனியகாலத்தில் கிறிஸ்தவ மதம் இறங்கிய வாயில்களான துறைமுகங்களைச் சைவத்தமிழ்க் கருத்துநிலை முலாம் பூசப் பெற்றனவாகச் சித்திரிப்பனவாக அமைதல்,
- இயற்கைத் துறைமுகத்தின் சூழலியல் தன்மை பற்றிய அக்கறையுடன் கூடிய காப்புணர்வு புலப்படுவதாகப் பாடுதல்,
- மதக் காலனியப் புலப்படா எதிர்ப்பின் பண்பாட்டுப் பிரதிகளாக அமைதல்,
- கலாசார, வரலாற்றுப்பெறுமதி கொண்டதாக அமைதல்,
- அறவியற் பரிமாணம் உடையதாய் அமைதல்,
- பாரம்பரியமான சூழலியல் அக்கறை காணப்படினும் சுதேசச் சைவப் பண்பாட்டுப் பயில்நிலம் எனும் உணர்வு கொண்டதாக அமைதல்,
- மனிதருக்கு அப்பாலும் கொள்ளும் பரந்த உறவினை அவாவுவதாக அமைதல்,
- காலனிய எதிர்ப்புத் தேவை கருதிய அழகியல் சித்திரிப்பாக அமைதல்,
- பாடுமுறையிலும் பாடப்படு பொருளிலும் புலமை மரபின் செழிப்பினைக் காட்டுவதாக அமைதல்,
- காலனிய எதிர்ப்பு உயர் குழாத்தினரைப் பதிவு செய்வதாக அமைதல்

எனும் பதினொரு அம்சங்களாகக் குறிப்பிடலாம். இவையனைத்தும் 'சைவத்தமிழ்' எனும் கருத்துநிலையைத் தளமாகக் கொண்டவை. இதன்வழி, 'யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவக் காலனிய எதிர்ப்பில், யாழ்ப்பாணத் தீபகற்ப இயற்கைத் துறைமுகங்கள்மீது, சைவத்தமிழ்க் கருத்துநிலை ஏற்றப்பெற்றது' என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணத்தின் கிறிஸ்தவக் காலனிய எதிர்ப்பியக்க அரசியலில் துறைமுகங்களின் இயங்குநிலைப் பாங்கைக் கண்டறிவதிலும் மொழிவழிச் செயற்பாடுகளில் அதன் புலப்பாட்டை அடையாளம் காட்டுவதிலும் புலவரது துறைமுக இலக்கியங்கள் தனித்துவமானவை.

தவிர்க்க முடியாதவை. கா. சிவத்தம்பி அவர்களின் பின்வரும் கூற்றுடன் இக்கட்டுரையை நிறைவு செய்யலாம்.

'உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவரது வரலாறு பேசப்படாமல் போனால் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் நாம் எதனை இழக்கிறோம் என நோக்குதல் அவசியமானதாகும். அவ்வாறு நோக்கும்போது, சிவசம்புப்புலவரின் வாழ்க்கை வரலாற்றை, தரவுக் களஞ்சியமாகப் பார்க்காமல், வரலாற்றுத் தொடர்ச்சிக்கு எவ்வாறு உதவுகின்றது என நோக்குவது பயனுடையது.'

- சிவத்தம்பி,கா. 2010:4

உசாத்துணை:

- *அனந்தராஜ், ந., வல்வையின் முதுசொம், பருத்தித்துறை: வடமராட்சிவடக்குப் பிரதேச செயலகம். 2016.*
- *இரகுவரன், பா., பருத்தித்துறையூராம் - பருத்திநகர் பற்றிய சமூகவியல் வரலாற்று ஆவணமாக்கலும் ஆய்வும், பருத்தித்துறை: தேடல் வெளியீடு, 2012.*
- *இராகவன், அ., நம் நாட்டுக் கப்பற் கலை - தொழில்நுட்ப வரலாறு - நூற்களஞ்சியம் - தொகுதி ஏழு, சென்னை: அமிழ்தம் பதிப்பகம். 2005.*
- *இராசநாயகம், செ., யாழ்ப்பாணச் சரித்திரம் - ஆங்கிலேயர் காலம், கொழும்பு, 1934.*
- *எட்வர்ட் கிண்டர்ஸ்லி நதானியல்., அதிகாரமும் தமிழ்ப் புலமையும் (மொ.பெ: ந. கோவிந்தராஜன்), அதிகாரமும் தமிழ்ப் புலமையும், சென்னை: க்ரியா. 2016*
- *கணபதிப்பிள்ளை, க., ஈழத்து வாழ்வும் வளமும், கொழும்பு- சென்னை: குமரன் புத்தக இல்லம், 2001.*
- *கப்ரால், அமில்கர்., விடுதலைப் போராட்டத்தில் பண்பாட்டின் பாத்திரம் (மொ.பெ.), சென்னை: பாரதி புத்தகாலயம். 2012.*
- *கருணாநிதி, நாகேந்திரம்., வீரமாணிக்கதேவன் துறை, பெரியநாட்டான்தேவன் துறை - மயிலிட்டி வரலாறு, யாழ்ப்பாணம்: குரு பிறின்டேர்ஸ். 2019.*
- *கிருஷ்ணராசா, செ., தொல்லியலும் வடமராட்சியின் பண்பாட்டுத் தொன்மையும், கோண்டாவில்: பிறைநிலை வெளியீட்டகம். 2015.*
- *சனாதனன், தா., அகிலன், பா., இலங்கைச் சமூகத்தையும் பண்பாட்டையும் வாசித்தல்: தெரிவு செய்யப்பட்ட கட்டுரைகள் - இரண்டாவது தொகுதி (1980-1999), கொழும்பு: சமூகப் பண்பாட்டு உயர் கற்கைகளுக்கான நிறுவனம். 2005.*
- *சிவத்தம்பி, கா., யாழ்ப்பாணம்: சமூகம் - பண்பாடு - கருத்துநிலை, கொழும்பு-சென்னை: குமரன் புத்தக இல்லம், 2000.*
- *..... யாழ்ப்பாணத்தின் புலமைத்துவ மரபு - ஓர் இலக்கிய வரலாற்றுக் கண்ணோட்டம், கொழும்பு: சுதந்திர இலக்கிய விழா அமைப்புக் குழு. 1995.*
- *சிவலிங்கராஜா, எஸ்., வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும் இலக்கிய வளமும், பருத்தித்துறை: வடமராட்சிக் கல்வி வட்டம், 1984.*
- *சோதிநாதன், பூ., 'உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரின் பிரபந்தப் பெருந்திரட்டு', கலைமுகம், யாழ்ப்பாணம், 2014.*
- *தாப்பர், ரொமீலா., வரலாறும் வக்கிரங்களும், (மொ.பெ.), சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2008.*
- *தியாங்கோ, கூகிவா., அடையாளமீட்பு - காலனிய ஓர்மை அகற்றல் (மொ.பெ.), புதுவை: வல்லினம், 2004.*
- *நீலகண்டன், காங்கேயன்., சுதர்சன், செல்லத்துரை.(ப.ஆ) உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவர் பிரபந்தப் பெருந்திரட்டு - தேவபாகமும் மானுடபாகமும், (சி.பி.பெ.தி.)இலங்கை - உடுப்பிட்டி: புலவரில்லம், 2014.*
- *நீலகண்டன், கா. நமசிவாயம் சோமசுந்தரம் நினைவு மலர், கரணவாய்: கணாதிபன் அச்சகம், 1999.*
- *மீனாட்சிசுந்தரம், பா., வரலாற்றில் வல்வெட்டித்துறை, வல்வெட்டித்துறை: அரும்பொருள் காப்பகம், 2006.*
- *முத்துத்தம்பிப்பிள்ளை, ஆ., யாழ்ப்பாணச் சரித்திரம், கொழும்பு: சேமமடு பதிப்பகம். 2008.*
- *முத்துமோகன், ந., தமிழ் அடையாள இயங்கியலின் அரசியல், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2011.*
- *ஜெபநேசன், எஸ்., தமிழின் நவீனமயமாக்கமும் அமெரிக்க மிஷனும், கொழும்பு - சென்னை: குமரன் புத்தக இல்லம், 2007.*
- *Brady, Emily., Aesthetics of Natural Environment, Edinburgh: Edinburgh University Press, 2003*
- *Eckersly, R., Environmentalism and Political Theory, London: UCL Press, 1992.*
- *Gosling, David L., Religion and Ecology, London: Routledge, 2001.*
- *Harlow, Barbara., Resistance Literature, New York and London. 1987.*
- *Kohn, Margaret., Mcbride, Keally. Political Theories of Decolonization - Postcolonialism and Problem of Foundations, New York: Oxford University Press, 2011.*
- *Panikkar, K.N. Colonialism, Culture and Nationalism, India: Oxford University Press, 2009.*
- *Said, Edward W. Cultural and Imperialism, London: Vintage Books. 1994.*
- *Simon Casie Chitty. The Ceylon Gazetteer: Containing an Accurate Account of the Districts, Provinces, Cities, Towns, Principal Villages. Harbours, Rivers, Lakes, &c, of the Island of Ceylon together with Sketches of the Manners, Customs, Institutions, Agriculture, Commerce, Manufactures, Revenues, Population, Castes, Religion, History of the various inhabitants, Ceylon: Gotta Church Mission Press, 1834.*
- *Winslow, L. Harriet., A Memoir of Mrs. Harriet W. Winslow Combining a Sketch of the Ceylon Mission, Sydney: Wentworth Press. 2019.*

(இக்கட்டுரையில் பயன்படுத்தப்பெற்ற துறைமுகங்களின் ஒளிப்படங்கள், ஈழகேசரி ஆண்டு மடல் - 1935, ஈழகேசரி ஆண்டு மடல் - 1936, ஈழகேசரி வெள்ளிவிழா மலர் - 1956 ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டவை.)

sutharsan.s@thaiveedu.com

JUST LINK

Real Estate
Residential
Commercial
Investment
Property Management
Custom Houses
HomeLife Today Realty Ltd., Brokerage
Office: 416-298-3200
Insurance
Life & Health
Travel
Key Person
Buy & Sell
RESP
iNFORCE LIFe
Financial Services Inc.
Office: 416 880 6051
Tax
Personal
Self Employed
Corporate
Estate
Company Registration
MVK TAX Consultants
Office: 647-947-8449
FOR ALL YOUR
REAL ESTATE | INSURANCE | TAX
NEEDS...!
Vallikkannan (MVK) Maruthappan
Direct : 416 880 6051 | www.mvkhome.ca
25 Years of Experience | Qualified and Well-Known | Award Winning Businessman
HONESTY
RELIABILITY
INTEGRITY

ஒளிமயமான எதிர்காலம்

பன்னிரண்டுவருட ஒலிபரப்பு வாழ்க்கைக்குப் பின்னர் எனது அடுத்தகட்ட நகர்வாக ஒளிபரப்புத் துறைக்குள் நுழைகிறேன். அதுவும் இலங்கையில் முதல்முதலாகத் தேசிய தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்டபோது அதன் முதற்தயாரிப்பாளர்களில் ஒருவராக இணைந்து கொள்ளும் வாய்ப்புக்கிடைத்தமை நான் எள்ளளவும் எண்ணிப்பார்த்திராத ஒன்று. நான் ஏற்கனவே சொன்னதுபோல் எப்படி எனது பள்ளிப்பருவத்தில் நான் ஒலிபரப்புத் துறையில் பணியாற்றுவேனென்று எண்ணியிருக்கவில்லையோ அதேபோல்த்தான் இப்போது நான் மட்டுமல்ல இலங்கையில் அதுவரை யாரும் எண்ணிப்பார்த்திருக்காத புதிய துறையாகிய ஒளிபரப்புத் துறைக்குள்ளும் நுழைகிறேன். அறுபதுகளின் நடுப்பகுதியில் இலங்கைக்குத் தொலைக்காட்சி சேவையைக் கொண்டுவர ஆலோசிக்கப்பட்டதாகவும் அப்போது இலங்கை வானொலியின் பணிப்பாளர் நாயகமாக இருந்த பிரசித்திபெற்ற நிர்வாகசேவை அதிகாரி நெவில் ஜயவீர அவர்கள் தொலைக்காட்சியை வெள்ளை யானை(White Elephent) என்று வர்ணித்து அதைப் பராமரிக்கும் சக்தி இலங்கைக்கு இல்லை என்று அந்த யோசனையை நிராகரித்துவிட்டதாகவும் ஒரு பேச்சுண்டு. இலங்கையில் தொலைக்காட்சி சேவை எனக்கான காலத்தில் ஆரம்பிக்கப்பட்டமை எனது அதிர்ஸ்டம் என்றுதான் சொல்வேன்.

என் வாழ்க்கையின் மிகச்சிறந்த ஆண்டாகிய 1981ம் ஆண்டின் இறுதியில் மலேஷியாவில் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பில் பயிற்சியை முடித்துக்கொண்டு வந்தவுடனேயே ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தொடர்ந்து ஜப்பானிய நிபுணர்களின் பயிற்சி நடைபெற்றது. அதில் பங்குபற்றிய எமக்குப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ரூபவாஹினிக் கலையகத்திலேயே செயல்முறைப் பயிற்சிகள் அமைந்ததால் அந்தப் பயிற்சி எனது தன்னம்பிக்கைக்கு உரம்சேர்ப்பதாக அமைந்தது.

எமது பயிற்சி நவம்பர் மாத இறுதியில் முடிவடையும்போதே ரூபவாஹினியில் நிர்வாகக் கட்டமைப்பு மெல்லமெல்ல உருவாகத் தொடங்கியது. அப்போது கட்டடம் மட்டுமே இருந்தது, தளபாடங்கள் எவையும் இருக்கவில்லை. இப்போது முன்னால் இருக்கும் பிரதான கட்டடம் மட்டுமே இருந்தது. கட்டடத்தின் இடது பகுதியில் பெரியதும் சிறியதுமாக இருண்டு கலையகங்கள், இவற்றோடு இணைக்கப்பட்டதாக இரண்டு கலையகங்களுக்கும் பொதுவான பெரிய அரங்க அமைப்புக் கூடம், பிரதான கட்டுப்பாட்டறை (master control room), ஒப்பனைக் கலையகம் போன்ற நிகழ்ச்சித் தயாரிப்புக்கு வேண்டிய பகுதிகள் அமைந்திருந்தன. இடது பகுதியிலுள்ள மூன்றாம் இலக்கக் கலையகமும் அதனோடு சேர்ந்த ஒப்பனையறைகள், படத்தொகுப்பு அறைகள், பெரிய வரவேற்புக்கூடம் அனைத்தும் பின்னர் கட்டப்பட்டவை. இப்போது அவற்றில் சில மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதாக அறிகிறேன். அதேபோல் பிரதான கட்டடத்திற்குப் பின்புறமாகவுள்ள நீளமான மாடிக்கட்டடமும் பின்னர் கட்டப்பட்டது.

பிரதான கட்டடத்தின் வலதுபுறத்திலிருக்கும் கிழக்குமேற்காக நீண்டபகுதியில் மேற்பகுதி முழுவதும் நிகழ்ச்சி, கல்விநிகழ்ச்சி மற்றும் செய்தித் தயாரிப்பு, நிர்வாகம், பொறியியற்பிரிவு ஆகியன அமைந்திருந்தன. அந்த நீளமான பகுதியின் மேற்குப்புறத்தில் கூட்டுத்தாபனத் தலைவரின் அறையும் அதையொட்டி ரூபவாஹனி நிர்வாகசபைக் கூட்டங்கள் மற்றும் ரூபவாஹினித் தலைவர் நடத்தும் நிர்வாகக் கூட்டங்கள் நடைபெறும் அறை (board room) ஆகியவை இருந்தன. இந்த மேற்தளத்தின் கீழ்த் தரைமட்டத்திலிருந்த நீளமான பகுதி தூண்கள் மட்டுமேகொண்ட வாகனத் தரிப்பிடமாக இருந்தது. இது தான் 1981ம் ஆண்டு ரூபவாஹினி இயங்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டபோதிருந்த ரூபவாஹினி நிலையம்.

1981ம் ஆண்டு டிசம்பர்மாத முதற்பகுதியிலிருந்து ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தலைவர் எம்.ஜே. பெரேரா அவர்கள் அப்போது மிகச்சிறிய தொகையினராக இருந்த அதிகாரிகளையும் மற்றும் பணியாற்றத் தெரிவுசெய்யப்பட்டவர்களையும் அழைத்து ஆலோசனைக் கூட்டங்கள் நடத்த ஆரம்பித்தார். நாம் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் எமது அலுவலகங்களிலேயே இருந்து பணியாற்றினோம். ரூபவாஹினியில் கூட்டம் இடம்பெறும் போதெல்லாம் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் இயக்குனர் நாயகமாகவும், ஐ.ரி.என். தொலைக்காட்சி சேவையின் தகுதி வாய்ந்த அதிகாரியாகவும் பணியாற்றிய குருகே அவர்கள், ஒலிபரப்பில் சிங்கள சேவை ஒன்றின் இயக்குனராக இருந்து பின்னர் பயிற்சிக்கூடத்தின் இயக்குனராகப் பணியாற்றிய எச். எம். குணசேகர, தமிழ்ச்சேவை ஒன்றின் மேலதிகப் பணிப்பாளராக இருந்த திருமதி. ஞானம் இரத்தினம், கல்விச்சேவைப் பணிப்பாளராக இருந்த திருமதி. குணரட்ண ஆகியோர் ரூபவாஹினிக்குச் செல்வார்கள். சில கூட்டங்களுக்கு லூஷன் புலத்சிங்கள, பந்துல விதானகே, நான் மற்றும் வெளியேயிருந்து தெரிவுசெய்யப்பட்டிருந்த தம்மஜாகொட என எல்லோரும் அழைக்கப்பட்டோம். ரூபவாஹினி ஜப்பானின் நன்கொடையாக இலங்கைக்கு வழங்கப்பட்டது. அப்படி வழங்கப்பட்டபோது அது இலங்கையின் கல்வி அபிவிருத்திக்கான உதவி என்று காரணம் சொல்லப்பட்டது. எனவே, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கல்விச்சேவைப் பணிப்பாளராகவிருந்த திருமதி. குணரட்ண ரூபவாஹினி கல்விச் சேவை நடத்துவதற்கான ஒரு நிலையம் என்ற தோரணையுடனேயே நடந்துகொள்வார். தயாரிப்பாளர்களாக நாங்கள் பங்குபற்றிய கூட்டங்களில் தொலைக்காட்சிச் சேவையில் செய்தியும் கல்விச்சேவைக்கான நிகழ்ச்சிகளும் பிரதானமானவையாக இருக்கும். பொது நிகழ்ச்சிகளாக செவ்வி போன்ற நிகழ்ச்சிகளை நீங்கள் தயாரிக்கலாமென்று எமக்குச் செல்லப்பட்டது.

பெரும் தயாரிப்புக் கனவுகளுடன் சென்றிருந்த எமக்கு இது பெரும் ஏமாற்றமாக இருந்தது. ஆனால் நடைமுறையில் அப்படி இருக்க முடியாதென்று நாம் திட்டவட்டமாக நம்பியிருந்தோம். தம்மஜாகொட உட்பட சிங்களத் தயாரிப்பாளர்களாகப் பொறுப்பேற்றிருந்தவர்கள், இப்படியொரு தேசியத் தொலைக்காட்சிச் சேவையை ஆரம்பித்து அதில் செய்திகளும் கல்வி நிகழ்ச்சிகளும் மட்டுமே பிரதானமாக ஒளிபரப்புவதென்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்று பேசிக்கொண்டார்கள்.

ரூபவாஹினி கல்விநிகழ்ச்சிகளுக்காக ஆரம்பிக்கப்பட்டதென்றால் அதை ஒரு தேசிய தொலைக்காட்சிச்சேவையாக ஆரம்பித்திருக்கமாட்டார்கள். கல்வியமைச்சின் கீழ் பாடசாலை மாணவர்களுக்குத் தொலைக்காட்சிமூலம் பாடம்சொல்லிக் கொடுக்கும் ஒரு சேவையாக ஆரம்பித்திருப்பார்களென்றும் ஜப்பான் இலவசமாகத் தொலைக்காட்சி நிலையத்தைக் கொடுத்துவிட்டுத் தமது தொலைக்காட்சி உபகரணங்களை விற்பதற்கான ஒரு சந்தையை உருவாக்குகிறதென்று அதிருப்தியாளர்கள் கூறுவார்கள். எனவே தான் அப்படியான குற்றச்சாட்டுகள் எழாமல் இலங்கையின் கல்வி விருத்திக்கென்று கொடுப்பதாக அதற்கு ஒரு மகத்துவத்தைக் கொடுத்திருக்கிறார்களென்றெல்லாம் பலவிதமான கருத்துகள் முன்வைக்கப்பட்டன. எது எவ்வாறிருப்பினும் இலங்கை மக்களிடையே குறிப்பாக சிங்களக்கலைஞர்களிடையே தேசிய தொலைக்காட்சியால் தாம் அடையப்போகும் நன்மைகள் பற்றிப் பெரிய எதிர்பார்ப்பிருந்தது.

மேலதிகாரிகள் கூட்டத்தில் செவ்வி, கலந்துரையாடல்கள் போன்ற நிகழ்ச்சிகளே பொதுநிகழ்ச்சிகளாக இடம்பெறுமென்று கூறப்பட்டாலும் ரூபவாஹினி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கு முன்னரே நிகழ்ச்சி நிர்வாகக் கட்டமைப்பு தயாரிப்பாளர்கள், உதவியாளர்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புக்கு வேண்டிய பல துறைசார்ந்தவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே சென்றதைப் பார்த்தபோது ரூபவாஹினிக் கூட்டுத்தாபனமும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் போன்றே கலை, கலாச்சாரம் சார்ந்த பூரண சேவையை வழங்க ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறதென்பதை எம்மால் உணரக்கூடியதாக இருந்தது. இதேவேளை, பொது நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பான இணை இயக்குனர் நாயகமாக எச். எம். குணசேகர நியமிக்கப்பட்டார். திருமதி. ஞானம் இரத்தினம் பொதுநிகழ்ச்சிகளுக்கான இயக்குனராக நியமிக்கப்பட்டார். ஆரம்பத்தில் ரூபவாஹினியில் மொழிவாரியான நிகழ்ச்சிப்பிரிவு இருக்கவில்லை. திருமதி. ஞானம் இரத்தினம் சகல மொழி நிகழ்ச்சிகளுக்குமான இயக்குனர். அதேவேளை தமிழ் நிகழ்ச்சிகளில் அதிகம் கவனம் செலுத்த வேண்டிய பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த இரண்டு பதவிகளுக்குரியவர்களையும் 1981ம் ஆண்டு டிசம்பர்மாத நடுப்பகுதியிலேயே அறிவித்துவிட்டதால் பொதுநிகழ்ச்சிகளுக்குப்பொறுப்பானவரென்ற வகையில் திருமதி. ஞானம் இரத்தினம் என்னை அழைத்து உடனடியாகத் தமிழ் நிகழ்ச்சிகளைத் தயாரிக்கத் தொடங்குமாறு கூறினார். 1982ம் ஆண்டு ஃபெப்ரவரி மாத்தில் ரூபவாஹினி உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்படும்பொழுது கையிருப்பில் நிகழ்ச்சிகள் இருக்கவேண்டுமென்ற அவரது பணிப்புரைக்கமைய நான் தயாரிப்பு வேலைகளில் மும்முரமாக ஈடுபடத்தொடங்கினேன். நான் தயாரிப்புவேலைகளில் ஆயத்தமாகிக்கொண்டிருந்த நேரத்திலே ரூபவாஹினிக் கட்டமைப்பும் வளர்ந்துகொண்டிருந்தது. இவ்வளவும் நடைபெற்றுக்கொண்டிருந்தபோதும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்து ரூபவாஹினிக்குச் சென்றவர்கள் தமது ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அலுவலகத்திலிருந்தே பணியாற்றிக்கொண்டிருந்தார்கள். வளர்ந்துகொண்டிருந்த நிர்வாகக் கட்டமைப்பில் நாடகப் பிரிவின் தலைவராக இலங்கையின் சிங்கள மேடைநாடகத் துறையில் பிரபலம்பெற்று விளங்கிய தம்மஜாகொட, இசைப்பிரிவின் தலைவராக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் சிங்கள வாத்தியப் பிரிவில் வயலின் இசைக் கலைஞராகப் பணிபுரிந்துகொண்டிருந்த இலேசிங்ஹ, விவரண நிகழ்ச்சிப் பிரிவின் தலைவராக அரச திரைப்படப்பிரிவில் படத்தொகுப்பாளராக நீண்டகாலம் பணியாற்றிய கமூர், சிறுவர் நிகழ்ச்சிப் பிரிவின் தலைவராக நாடகத்தில் ரூமேனியா நாட்டில் கலாநிதிப்பட்டம்பெற்ற டொக்டர். சொலமன் ஃபொன்சேகா, விளையாட்டு நிகழ்ச்சிப் பிரிவின் தலைவராக சேன கொத்தலாவல ஆகியோர் நியமிக்கப்பட்டனர். நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பான இணை இயக்குனர் நாயகம் எச்.எம். குணசேகரவுக்குக்கீழ் செய்திப்பிரிவும் இயங்கியது. செய்திப்பிரிவுக்குப் பொறுப்பான இயக்குனராக திரு. பத்திரன நியமிக்கப்பட்டார். செயற்பாட்டுப்பிரிவின் (Director Oppration) இயக்குனராக இலங்கை அரச திரைப்படப்பிரிவில் மூத்த படப்பிடிப்பாளராகப் பணியாற்றிய சனத் லியனகே நியமிக்கப்பட்டார். அவருக்குக் கீழ் கமராப் பிரிவு, வெளிப்புறப் படப்பிடிப்புப் பிரிவு, வரைகலை(graphics), ஒப்பனை, அரங்க நிர்மாணம் ஆகிய பிரிவுகள் இயங்கின.

1982 ஜனவரி நடுப்பகுதியளவில் இக்கட்டமைப்புகள் அனைத்தும் உருவாக்கப்பட்டுவிட்டன. கல்விநிகழ்ச்சிகள், நிர்வாகம், நிதி, தொழில்நுட்பம் என்று சகல பிரிவுகளும் கட்டமைக்கப்பட்டன. 1981ம் ஆண்டு ஜனவரி முதற்பகுதியில் வெறிச்சோடிக் கிடந்த கட்டிடத்தினுள் அலுவலக மேசைகள், கதிரைகள் முதலான தளபாடங்கள் வந்துசேரத் தொடங்கின. ரூபவாஹினி ஆரம்பகாலத்தில் பாதணிகளை முன்னாலிருந்த வரவேற்புக்கூடத்திற்குள் செல்லு முன்னரே வெளியே கழற்றிவைத்து விட்டுச் செல்லும் வழக்கம் இருந்தது. பாதணிகளுடன் எடுத்துச்செல்லப்படும் தூசி இலத்திரனியல் சாதனங்களைப் பழுதடையச்செய்துவிடுமென்று அப்போது காரணம் கூறப்பட்டது. ஆரம்பத்தில் மிகச் சிறுதொகையாக இருந்த பாதணிகளின் எண்ணிக்கை ஜனவரிமாத நடுப்பகுதியளவில் பெருந்தொகையாக முன்புறத்தில் குவியத் தொடங்கியதிலிருந்து ரூபவாஹினியின் பணியாளர்தொகை அதிகரித்து வருவதை அறியமுடிந்தது. இப்படிப்பாதணிகளைக் கழற்றிவைக்கும் நடைமுறை பின்னர் கலையகப் பகுதிகளுக்குச் செல்வோருக்கு மாத்திரம் என மட்டுப்படுத்தப்பட்டது. கலையத்திற்கு வெளியில் பாதணிகள் நிறைந்திருந்தன. காலப்போக்கில் அந்த நடைமுறை கைவிடப்பட்டுப் பாதணிகளுடன் எல்லா இடமும் செல்லும் வழக்கம் ஏற்பட்டுவிட்டது.

1981ம் ஆண்டு டிசம்பரிலேயே தமிழ் நிகழ்ச்சிகளைத் தயாரிக்கத் தொடங்குமாறு திருமதி. ஞானம் இரத்தினம் சொல்லிவிட்டார். அதுவரை நிகழ்ச்சித் தயாரிப்புப் பற்றி திருமதி. இரத்தினம் அவர்களுடன் பலவற்றைப் பேசியிருந்தாலும் நிகழ்ச்சிகளைச் செய்யவேண்டுமென்று வந்ததும் என்ன நிகழ்ச்சி தயாரிப்பதென்று தெரியவில்லை. அதைப்பற்றிய எண்ணம் ஒரு குழப்பம் நிறைந்ததாகவும் மிகப் பொறுப்புமிக்கதாகவும் இருந்தது. சிங்களத்தில் அப்போது மேடைநாடகத்துறை, சினிமாத்துறை என்பன நன்கு விருத்தியடைந்திருந்தமையால் அவர்களுக்கு நிகழ்ச்சிகளுக்கும் நடிகர்களுக்கும் மற்றும் பல்வேறு கலைஞர்களுக்கும் பஞ்சமிருக்கவில்லை. வானொலிமூலமும் சினிமாமூலமும் பொதுமக்களிடையே மிகப் பிரபலமடைந்த பாடகர்கள் இருந்தார்கள். அவர்கள் வந்து ரூபவாஹினியில் பாடினால் அவர்களைப் பார்ப்பதற்கு, இரசிப்பதற்கு பெரும் மக்கள் கூட்டம் இருந்தது. அவ்வாறு பிரபலமானவர்களைப் பேட்டி எடுத்தால்கூட அவற்றை ஆவலுடன் பார்ப்பதற்கு மக்கள் இருந்தார்கள். எங்கு தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்டாலும் அதிலே மக்களைக் கவரும் அம்சமாக

தொடர்தல் 101ம் பக்கம்

ஒளிமயமான...

100ம் பக்கத் தொடர்ச்சி...

சினிமா சார்ந்த நிகழ்ச்சிகளே இருக்கும். உதாரணமாக, இந்தியத் தொலைக் காட்சிகளைப் பார்ப்பீர்களேயானால் அவை பெரும்பாலும் சினிமாவை நம்பியே இயங்குகின்றன. சினிமா நடிகர்கள், பாடகர்கள் மற்றும் கலைஞர்களின் பேட்டி நிகழ்ச்சிகள், காட்சிகளுடன் சேர்ந்த சினிமாப்பாடல்கள், சினிமாவின் நகைச்சுவைக் காட்சிகளென்று ஜனரஞ்சகமான நிகழ்ச்சிகளாக சினிமா சார்ந்த நிகழ்ச்சிகள் தொலைக்காட்சிக்குப் பெரும் பலத்தை அளிக்கின்றன. அவை எதுவுமே இல்லாத இலங்கைத் தமிழச் சூழலில் தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் தயாரிக்கத் தொடங்குவது மிகுந்த மன அழுத்தத்தைத் தருகின்ற ஒரு செயற்பாடாக உணர்ந்தேன். எம்மிடையே அவ்வாறு மக்களைக் கவரக்கூடிய தரத்தில் இருந்தவர்கள் அப்போது மிகமிகக் குறைவானவர்கள். அவர்களைக்கூட சிங்கள, இந்தியக் கலைஞர்களின் பிரபல்யத்தோடு ஒப்பிட்டுவிட முடியாது. இந்தியத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பற்றி எமது மக்கள் அறிந்திராத அந்தக் காலகட்டத்தில் இலங்கைத் தொலைக்காட்சியின் தமிழ் நிகழ்ச்சிகள் சிங்களத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுடனேயே ஒப்பிட்டுப் பார்க்கப்படும் நிலை இருந்தது. இந்த நிலையில் தேசியத் தொலைக்காட்சி ஆரம்பமாகும் போது அதன் முதல்த் தயாரிப்பாளர்களில் ஒருவனாகப் பொறுப்பேற்ற எனக்கு முன்னால் விரிந்துகிடந்த பாரிய பொறுப்பை உணர்ந்துகொண்டேன். இந்தப் புதிய ஊடகமாகிய தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகளைப் படைத்து இலங்கைத் தமிழர்களைத் திருப்திப்படுத்தவேண்டிய பெரும் பொறுப்பு எமக்கு. எனக்கு அப்போது முப்பத்தொரு வயது. நிலமையின் தீவிரத் தன்மையை உணர்ந்தாலும் எனக்கு ஏற்கனவே ஒலிபரப்பில் கிடைத்த பன்னிரண்டு ஆண்டுகால அனுபவம் தந்த இலங்கையின் கலை, இலக்கியத் துறைபற்றிய விரிந்த அறிவும் வானொலி நிகழ்ச்சிகள் செய்து மக்களிடையே அறிமுகமானவனென்ற எண்ணம் தந்த மனத் தைரியமும் மக்களைத் திருப்திப்படுத்தும் விதத்தில் நிகழ்ச்சிகளைச் செய்யலாமென்ற மனத்துணிவைத் தந்தன. ஆனால் அது படிப்படியாகச் செய்யப்படவேண்டிய, நீண்டகால செயல்முறையென்பதையும் அந்தக் காலகட்டத்தில் பலவித விமர்சனங்களுக்குள்ளாகவேண்டியேற்படுமென்ற யதார்த்தத்தையும் உணர்ந்து கொண்டேன். இவைபற்றியெல்லாம் திருமதி. இரத்தினம் அவர்களுடன் மிகவிரிவாகக் கலந்தாலோசித்து 'கலையரங்கம்' என்ற பொதுத் தலைப்பின்கீழ் கிழமைக்கு ஒரு நிகழ்ச்சி செய்யலாமென்றும் அதில் இலங்கைத் தமிழர்கள் ஆற்றக்கூடிய சகல கலைகளையும் நேர்த்தியாகத் தயாரித்து வழங்குவது என்றும் முடிவெடுத்தோம். நடனம், இசை, நாடகம், நாட்டியநாடகம், கிராமியக் கலைகள் என்று சகல கலைகளையும் மக்களுக்கு வழங்கும் பிரதான கலாச்சார நிகழ்ச்சியாக அது அமைய வேண்டுமென்று திட்டமிட்டு அந்தத் திட்டத்தை எம்.ஜே. பெரோ அவர்களிடம் தெரிவித்தபோது, அவர் யதார்த்தத்தில் அதுதான் செய்யக்கூடிய ஒரே வழியென்று கலையரங்கம் நிகழ்ச்சியை வரவேற்றார். திருமதி. ஞானம் இரத்தினம் அவர்கள் எம். ஜே. பெரேரா அவர்களைச் சந்தித்து மிக நிதானமாகத் தெளிவான ஆங்கிலத்தில் நீண்டநேரம் தமிழ் நிகழ்ச்சிகள் பற்றி அவருடன் உரையாடியபோது, கலையரங்கத்தைச் செய்யவிருக்கும் தயாரிப்பாளராக நானும் அந்த சந்திப்பில் கலந்துகொண்டேன். பின்னர் எமது நிகழ்ச்சி பற்றி நிகழ்ச்சிகள் திட்டமிடும் கூட்டத்தில் விபரித்தபோது அனைவரும் அதனை ஆமோதித்தார்கள். நான் எனக்கேயுரிய பாணியில் மிகத் தீவிரமாக செயற்படத் தொடங்கினேன்.

ஜப்பானியப் பயிற்சிநெறியின் இறுதித் தயாரிப்புக்கு நடனமாடிய விஜயாம்பிகை இந்திரகுமார் அவர்களை அழைத்து, எனது முதல் அரைமணிநேர கலையரங்கம் நிகழ்ச்சி ஒளிப்பதிவைச் செய்யலாமென்று கருதி திருமதி. இரத்தினம் அவர்களிடம் தெரிவித்தபோது அவர் அதற்கு அனுமதித்தார். இதற்கு முன்னரே நாம் மலேஷியாவில் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோதும் பின்னர் இலங்கை திரும்பிய பின்னரும் ரூபவாஹினி நிகழ்ச்சிகளை எவ்வாறு செய்யப்போகிறோமென்று ஞானம் இரத்தினம் அவர்களுடன் கலந்துரையாடியபோதெல்லாம் ஒரு ஊடகத்தின் சமூகப் பொறுப்புப் பற்றிய எனது பார்வை விரிவடைவதை உணரமுடிந்தது.

ரூபவாஹினி
தொலைக்காட்சி நிலையத்தின்
ஆரம்பத் தோற்றம்

நாட்டு மக்களுக்கான அரச ஊடகமொன்றில் அந்த நாட்டு மக்களுக்கான மொழி, கலை, கலாச்சாரம் சம்பந்தமான விடயங்களைக் கையாள்வதில் இருக்கும் பொறுப்பும் சிக்கல்களும் சாதாரணமானவையல்ல. திருமதி. இரத்தினம் அவர்கள் ஏற்கனவே வானொலியில் பல வருடங்கள் நிர்வாகப் பொறுப்பில் இருந்தமையால் அவைபற்றி அதிகம் பேசினார். எமது நிகழ்ச்சிகளுக்கான அடிப்படைத் தகைமையாகத் தரம் மட்டுமே இருக்க வேண்டுமென்பதில் உறுதியாக இருந்தோம். திருமதி. ஞானம் இரத்தினம் தனது பதவியைத் தனது சொந்தச் செல்வாக்கை வளர்த்துக்கொள்வதற்குப் பாவிக்காதவர். எனவே கலைஞர்களை, நிழ்ச்சிகளைத் தெரிவுசெய்வதற்குத் தரத்தை மட்டுமே அளவுகோலாகக்கொள்வதில் எந்தவித பிரச்சினையோ அழுத்தமோ இருக்காதென்பதில் எனக்குப் பூரண நம்பிக்கையிருந்தது.

கர்நாடக சங்கீதம் எமது சாஸ்திரியக் கலை. அக்கலையை முறைப்படி பல இலங்கைத் தமிழர்கள் கற்றிருக்கிறார்கள். ஒரு கலையைக் கற்பதென்பது வேறு, அக்கலையைத் திறம்பட ஆற்றி, மக்களை மகிழ்விக்கும் ஆற்றலைக்கொண்டிருப்பதென்பது வேறு. கர்நாடக சங்கீதம் கற்றவர்களின் ஆற்றலைக் கண்டறிந்து தரப்படுத்தும் நடைமுறை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கடைப்பிடிக்கப்பட்டது. அதனால் கர்நாடக இசைக் கலைஞர்களில் யாரை நிகழ்ச்சிக்கு அழைப்பதென்பதில் பிரச்சினை இருக்கவில்லை. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அதியுயர் தரத்தில் (super grade) இருப்பவர்களை மட்டுமே முதலில் அழைப்பதென்று தீர்மானித்தோம். ஆனால் இலங்கையில் நடனக் கலைக்கு அப்படித் தரப்படுத்தும் அவசியமோ செயல்முறையோ அப்போது இருக்கவில்லை. நடனத்துறையில் ஒருவருக்கிருக்கும் அறிவு பற்றிய பரீட்சைக்கான தேர்வுபற்றி இங்கே நான் குறிப்பிடவில்லை. ஒரு சிறந்த கலைஞராகப் பார்ப்பவர்கள் பாராட்டும்படி தமது ஆடல்திறமையை வெளிப்படுத்தும் தரத்தெரிவையே இங்கே குறிப்பிடுகிறேன். ஒரு தெரிவு முறை இல்லாத பட்சத்தில் அப்போது கொழும்பில் ஓரளவு மக்கள் அறிந்த, பொதுவாக சிறந்த நடனக் கலைஞர்களென்று மேடையில் நடனமாடிக்கொண்டிருந்தவர்களையே தெரிவுசெய்யவேண்டியிருந்தது. பல சிறந்த நடன ஆசிரியர் இருந்தார்கள். ஆனால் அவர்கள் மேடையில் நடனமாடும் கலைஞர்கள் அல்ல. அந்த அளவுகோல் கொண்டு பார்த்தபோது அப்போதுதான் நடனத்துறைக்கு வந்த ஒருசில கலைஞர்களும், ஏற்கனவே நடனமாடி நடனத்தால் மட்டும் மக்களால் அறியப்பட்ட இரண்டு கலைஞர்களும் இருந்தார்கள். ஒருவர் விஜயாம்பிகை இந்திரகுமார். மற்றவர் ரங்கா விவேகானந்தன். அப்போது கொழும்பில் நடன நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய பலரும் பிரபல நடன ஆசிரியர்களின் மாணவிகள் என்றுதான் அறியப்பட்டார்களே தவிரத் தனித்துவமான நடனக் கலைஞர்கள் என்று இனங்காணப்படக்கூடியவர்கள் இருக்கவில்லை. நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒரு புதிய ஊடகத்திலே தமிழ்க் கலைஞர்கள் என்று நாம் காட்டும் கலைஞர்கள் தொழில்த்தரம் வாய்ந்த கலைஞர்களாக சகலராலும் இரசிக்கப்படவேண்டும், ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். ரூபவாஹினி மொழிவாரியான ஒளிபரப்பாக இல்லாமல் சிங்கள, தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளுக்குமான ஒரே ஒளிபரப்பாகத்தான் ஆரம்பிக்கப்பட்டது. ஆங்கிலத்தில் பெரும்பாலும் இறக்குமதி செய்யப்பட்ட நிகழ்ச்சிகளே ஒளிபரப்பாகின. சிங்கள, தமிழ் நிகழ்ச்சிகள் சகல இன மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க தரத்தில் இருக்கவேண்டுமென்பது மிக அவசியமான தகுதியாக இருந்தது. எனவே எமது இனத்தின், எமது கலைஞர்களின் திறமைபற்றிய நற்பெயருக்கு இழுக்கு ஏற்படாதவாறு எமது நிகழ்ச்சிகளைத் தயாரிக்கவேண்டிய பொறுப்பும் கடமையும் எமக்கு இருப்பதை நான் பூரணமாக உணர்ந்துகொண்டேன். மேற்கூறிய சகல விடயங்களும் ஒரு எழுதப்படாத நிகழ்ச்சிக் கொள்கையாக எம்மிடம் இருந்தது. அதனடிப்படையிலேயே திருமதி. ஞானம் இரத்தினம் நிகழ்ச்சிகளுக்கு அனுமதி வழங்கினார்.

நான் மேலே சொன்னவற்றுக்கமைய எமது முதல் ஒளிப்பதிவை விஜயாம்பிகை இந்திரகுமாரைக்கொண்டு செய்விப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. அப்போது கொழும்பு மேடைகளில் பிரபலமாக இருந்த விஜயாம்பிகை, அந்தக் காலகட்டத்தில் ரஷ்யாவின் மிகப்பிரபலமான 'ஸ்வான் லேக்' நாட்டிய நாடகத்தைக் கீழைத்தேய நடனங்களை உபயோகித்துத் தயாரித்து கொழும்பு மக்களிடையே அறியப்பட்டவராகவும் இருந்தார். ரங்கா விவேகானந்தனும் அப்போது கொழும்பு மேடைகளில் பிரபலமாக இருந்தார். இருவருமே குச்சுப்புடி நடனத்தில் திறமைவாய்ந்தவர்களாக இருந்தார்கள்.

1981ம் ஆண்டு டிசம்பர்மாத நடுப்பகுதியில் விஜயாம்பிகை இந்திரகுமாரின் நடனத்தை ஒளிப்பதிவு செய்யும் ஆயத்தங்களை மேற்கொண்டேன். அரங்க நிர்மாணப் பகுதி அப்போது ஆரம்பிக்கப்படவில்லை. அர்த்தசாத் என்ற வரைகலைஞர் (graphic artist) ஒருசில வரைகலைஞர்களுடன் வந்து அந்த அரங்க நிர்மாணப்பிரிவில் தமது அலுவலகத்தை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். அரங்குகளை அமைப்பதற்கான எந்தவித பொருட்களும் அங்கு இருக்கவில்லை. நான் அப்போது கொழும்புத் தமிழ் நாடகங்கள் மற்றும் நடன நிகழ்ச்சிகளுக்கு அரங்கம் அமைக்கும் கதிர்காமத்தம்பி அவர்களை நாடினேன். அவரிடம் ஐந்தடி அகலம் பத்தடி உயரத்தில் ஆறு தட்டிகள் செய்து அதில் மஞ்சள், ஒறேஞ்ச் வர்ணக் கலவையில் வர்ணம் தீட்டி, அதில் மறுபக்கம் தெரியக்கூடியதாக நீளப்பாட்டுக்கு ஒரு சித்திர வடிவில் வெட்டித் தரும்படி கேட்டு அதை வரைந்தும் காட்டினேன். இதை கோபோ (GOBO) என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். அப்படியான சித்திரங்கள் நான் சிறுவயதில் பார்த்த திரைப்படங்களிலிருந்து எனது மனதில் நின்றவை. அவரும் அவ்வாறே செய்து தருவதாகச் சொன்னார். இது முதல் நிகழ்ச்சி. எந்தவித தடுமாற்றமுமில்லாமல் படப்பிடிப்பாளர்களை நெறிப்படுத்தவேண்டுமென்பதால் ஒத்திகைகள் பார்த்து என்னைத் தயார்ப்படுத்த விரும்பினேன். பயிற்சிகளின்போது

தொடர்தல் 102ம் பக்கம்

ஒளிமயமான...

101ம் பக்கத் தொடர்ச்சி...

பயிற்றுனர்களின் மேற்பார்வையில் தயாரிப்புகளை மலேஷியாவிலும் ரூபவாஹினிக் கலையகத்திலும் ஏற்கனவே செய்திருந்தாலும் முதல்முதலாக நானே முழுப் பொறுப்பெடுத்துத் தொலைக்காட்சி நிகழ்ச்சியைத் தயாரிப்பதை நினைக்கும்போது பதற்றமாக இருந்தது.

ரூபவாஹினியில் உத்தியோகபூர்வமாகக் கலையரங்கம் நிகழ்ச்சியில் ஒளிபரப்புவதற்கான முதல் தமிழ் நிகழ்ச்சியை நான் செய்தாலும் ரூபவாஹினிக் கலையகம் தயாரானதும் தொழில்நுட்பவியலாளர்கள் அங்கு பொருத்தப்பட்டிருந்த கருவிகளை இயக்குவதற்கான பயிற்சிகளுக்காக திருமதி. பொன்மணி குலசிங்கம் அவர்களின் புதல்விகளான மனோரமா, அனுஷியா ஆகியோரது நடனங்களை ஒளிப்பதிவு செய்திருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும்.

ரூபவாஹினியின் பரீட்சார்த்த ஒளிபரப்பு 1981ம் ஆண்டு ஜுலையிலிருந்து ஆரம்பமாகிவிட்டது. பிரதான கட்டுப்பாட்டறை இயங்கத் தொடங்கும்போதுதான் பரீட்சார்த்த ஒளிபரப்பை மேற்கொள்ளமுடியும். பிரதான கட்டுப்பாட்டறை, நுவரெலியாவிலும் கொக்காவில்லிலும் ஒளிபரப்பிக் கோபுரங்கள் முதலியன மே, ஜுன் மாதமளவிலேயே தயாராகிவிட்டன. பரீட்சார்த்த ஒளிபரப்பில் தொடர்ந்து அப்போது உலகளாவிய ரீதியில் மக்கள் பார்த்துப் பிரமித்த இளவரசர் சாள்ஸ் - தயானா ஆகியோரது திருமண நிகழ்ச்சி இடைவிடாது ஒளிபரப்பாகிக்கொண்டிருந்தது. இடையிடையே ஒளிப்பதிவு செய்யப்பட்ட சில சிங்கள மேடைப்பாடல் நிகழ்ச்சிகளும் மற்றும் சில உள்ளூர் ஒளிப்பதிவுகளும் இடம்பெற்றன. கொழும்பில் ஐ.ரி.என். தொலைக்காட்சிச் சேவையைப் பார்ப்பதற்கெனத் தொலைக்காட்சிப்பெட்டிகளை வாங்கியவர்கள் இவற்றைப் பார்த்து மகிழ்ந்தார்கள்.

நிகழ்ச்சித் தயாரிப்புக் கலையகங்கள் அதேயாண்டு ஒக்டோபர் பிற்பகுதியில் தயாராகிவிட்டன. நான் மலேஷியாவிலிருந்து வந்தபின்னர் இலங்கையில் ஜப்பானிய வல்லுனர்களிடம் அடுத்தகட்டப் பயிற்சிக்குச் சென்றுகொண்டிருந்தபோது ரூபவாஹினிக் கலையகத்தில் ஒரு பரதநாட்டிய நிகழ்ச்சி தயாரிக்கப்படுவதாக அறிந்தேன். அப்போது தயாராகிவிட்ட கலையகங்களில் அவற்றை இயக்குவதற்குத் தொழில்நுட்ப வியலாளர்கள் ஜப்பானிய நிபுணர்களிடம் பயிற்சிபெற்றுக் கொண்டிருந்தார்கள். அந்தப் பயிற்சிக்கு ஏதாவது நிகழ்ச்சிகள் செய்தால் நல்லதென்று கருதிய தொழில்நுட்பவியலாளர்களுக்கு உதவுவதற்காகத் யாரோ திருமதி. பொன்மணி குலசிங்கம் அவர்களிடம் ஆலோசனை கேட்டிருக்கிறார்கள். அப்போது திருமதி. ஞானம் இரத்தினம் நாட்டில் இல்லை. அவுஸ்திரேலியாவில் மேலதிக பயிற்சிக்காகச் சென்றிருந்தார். பொன்மணி குலசிங்கம் அவர்கள் தனது இருபுதல்வியரையும் பரதநாட்டியம் ஆடுவதற்கு ஏற்பாடுசெய்து அதைப் படம்பிடித்திருக்கிறார்கள்.

பொன்மணி குலசிங்கம் அவர்களுக்கு அரசியல்ச்செல்வாக்கிருந்தமையால் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தமிழ்ச்சேவைப் பணிப்பாளராக அமர்த்தப்பட்டவர். திருமதி. ஞானம் இரத்தினம் கல்வித் தகைமை மற்றும் அனுபவம் முதலியவற்றால் தனக்குத்தான் தமிழ்ச்சேவைக்கு இயக்குனராகும் தகைமை இருப்பதாகக் கருதியிருந்தபோதும் பொன்மணி குலசிங்கம் அவர்களுக்கு அந்தப்பதவி கொடுக்கப்பட்டது. இருப்பினும் ஞானம் இரத்தினம் அவர்களுடைய தகைமைகளைப் புறக்கணிக்க முடியாத நிர்வாகம் தமிழ்ச் சேவை மேலதிகப் பணிப்பாளர் பதவியை அவருக்கு வழங்கியதென்று ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன்.

இவையனைத்தும் அப்போது இயக்குனர் நாயகமாக தேமிஸ் குருகே அவர்கள் பொறுப்பிலிருந்தபோது நடந்தவை. குருகே அவர்கள் நீண்டகால ஒலிபரப்பாளர். அங்கு பணியாற்றும் அனைவரையும் நன்கறிந்தவர். அவரும் யூ.என்.பீ. அரசாங்கத்தினால் இயக்குனர் நாயகமாக நியமிக்கப்பட்டவர். எனவே, பொன்மணி அவர்களுக்கு இயக்குனர் பதவியை வழங்கவேண்டி இருந்தது. இருந்தபோதும் திருமதி. இரத்தினம் அவர்களைப் புறக்கணிக்க இயலாமல் அவரை மேலதிக பணிப்பாளராக்கியிருந்தார். ஆனால் ஒரு சேவைக்கு இரண்டு பணிப்பாளர்கள் அவசியமில்லையென்று அவருக்குத்தெரியும். ஒருவருக்கும் பாதகமில்லாமல் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு சிறந்த வழி அவருக்குத் தோன்றியிருக்கவேண்டுமென்று நான் நினைக்கிறேன்.

அவர் ஐ.ரீ.என். தொலைக்காட்சிச்சேவையின் பொறுப்புவாய்ந்த அதிகாரியாகவும் இருந்ததால் அதன் தமிழ் ஒளிபரப்பு சம்பந்தப்பட்ட சில பொறுப்புகளைத் திருமதி. ஞானம் இரத்தினம் அவர்களிடம் கொடுத்து ரூபவாஹினி ஆரம்பிக்கப்பட்டதும் அவரை ரூபவாஹினி பொது நிகழ்ச்சிப் பிரிவு இயக்குனராக நியமித்து ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்ச்சேவையின் இயக்குனராக பொன்மணி அவர்கள் போட்டியின்றிச் செயற்பட வழிவகுத்தாரென்று அப்போது பலராலும் பேசப்பட்டது. குருகே அவர்கள் திருமதி. பொன்மணி அவர்களுக்குச் சார்பானவரென்பது பலரது கருத்தாக இருந்தது. ஆனாலும் அவர் திருமதி. இரத்தினம் அவர்களையும் புறக்கணிக்க இயலாமல் இருந்தமைக்கு ஊடகவியலாளருக்கு இருக்கவேண்டிய நியாய உணர்வுதான் காரணம் என்று சொல்லலாம். இந்தப் பின்னணியில் திருமதி. குலசிங்கம் அவர்கள் தமது மகள்மாரைவைத்து ரூபவாஹினியில் நிகழ்ச்சி செய்தமையை அவுஸ்திரேலியாவிலிருந்து திரும்பிய திருமதி. இரத்தினம் அவர்கள் அறிந்து குருகே அவர்களிடம் கேட்டிருக்கவேண்டுமென்று நினைக்கிறேன். பொன்மணி அவர்கள் அரசியற் செல்வாக்கும் ஆளுமையும் மிக்கவர். ரூபவாஹினியிலும் வந்து தனது பணிகளில் குறுக்கிட்டுப் பிரச்சினைகள் தரலாமென்று திருமதி. இரத்தினம் அவர்கள் நினைத்திருக்கலாம். உடனே குருகே அவர்கள் பொன்மணி அவர்களிடம் ரூபவாஹினியில் இன்னமும் சரியான நிர்வாகக் கட்டமைப்பு ஏற்படவில்லை, அங்கு போய் நிகழ்ச்சிகள் செய்யவேண்டாமென்று அவரைத் தடுத்துவிட்டதாகப் பின்ன நான் அறிந்தேன். அந்த நடனங்கள் ஒளிபரப்பப்படவில்லை. ரூபவாஹினி ஸ்தாபிக்கப்பட்டு ஒழுங்காக இயங்கத் தொடங்கியபின்னர் சிறீலங்கா ஃபவுண்டேஷன் நிறுவனம், இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம், ரூபவாஹினி என்பன இணைந்து விசேட நாட்களில் ஒரு நிகழ்ச்சியைத் தயாரித்தார்கள். இந்த நிகழ்ச்சி சவசங்கீத என்று அழைக்கப்பட்டது. அந்த நிகழ்ச்சிகளுக்கு பொன்மணி குலசிங்கம் அவர்கள் தமிழ்க்கலைஞர்களை ஏற்பாடு செய்யும் பொறுப்பில் இருந்தார்கள்.

அந்தவகையில் ரூபவாஹினியில் பூரணமான நிகழ்ச்சியென்று சொல்லமுடியாவிட்டாலும் பயிற்சிக்காகப் படப்பிடிப்பு நிகழ்த்தப்பட்ட பரதநாட்டியம் பொன்மணி குலசிங்கம் அவர்களின் புதல்வியருடையதென்று சொல்லலாம். பின்னர் ஜப்பானிய நிபுணர்களின் தொலைக்காட்சி நிகழ்ச்சிப் பயிற்சிக்காக நான் ஒளிப்பதிவுசெய்த விஜயாம்பிகை இந்திரகுமார் அவர்களின் மயில் நடனத்தைத் தொடர்ந்து ரூபவாஹினியில் செய்தித் தயாரிப்பாளராகவிருந்த அருணா செல்லத்துரையும் ஒரு பயிற்சிபோல் திருவாளர்கள் பரராஜசிங்கம், குலசீலநாதன் ஆகியோரது சில மெல்லிசைப்பாடல்களையும் ஒளிப்பதிவுசெய்தார். பின்னர் ரூபவாஹினி ஒரு முழுமையான நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் இயங்கத்தொடங்கியதும் அவர் செய்திப் பிரிவில் பணியாற்றினார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பென்பதும் வானொலி நிகழ்ச்சித் தயாரிப்புப் போன்றே கலையகத்திற்குள் நிகழ்ச்சியொன்றைத் தயாரிக்க நுழைந்தால் வெளியேவரும்போது பூரணமாகத் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சியோடு வெளியே வரவேண்டுமென்பதே அப்போதைய எதிர்பார்ப்பாகவும் விதியாகவும் இருந்தது. வானொலியின் அடுத்தகட்ட வளர்ச்சியே தொலைக்காட்சி. நிகழ்ச்சிகளின் அமைப்பு, அவற்றை வழங்குதல், நிகழ்ச்சி நிர்வாகம் என்று சகலவற்றிலும் தொலைக்காட்சி, காட்சியென்ற ஒரு பரிமாணத்தைவிட வானொலியினின்றும் வேறுபட்டதல்ல. தொலைக்காட்சிக்குக் காட்சி வானொலி என்ற ஒரு பெயரும் உண்டு.

தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பென்பது திரைப்படம் தயாரிப்பது போன்றதல்ல. காட்சியாகத் தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்ப்பதால் அநேகமாகத் தொலைக்காட்சி நிகழ்ச்சியை எல்லோரும் சினிமாவோடுதான் ஒப்பிடுவார்கள். நிகழ்ச்சியைக் காட்சிப்படுத்துவதற்கான சில தொழில்நுட்பங்களைத் தவிரத் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளின் தயாரிப்பும் திரைப்படத் தயாரிப்பும் ஒன்றல்ல. திரைப்படம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் ஒன்று.

தொலைக்காட்சிக் கலையகங்கள் சகல வசதிகளுடனும் நிர்மாணிக்கப்படுகின்றன. காட்சிப்படுத்தலுக்கான கமரா மற்றும் ஒளியமைப்பு வசதிகள், ஒலிகள்- ஒலியைப் புதிதாகத் தயாரிப்பதென்றாலும் இசைத்தட்டு, ஒலிநாடா, அல்லது வேறு தொழில்நுட்ப சாதனங்களிலிருந்து பெற்றாலும் அவற்றைப் பாவிக்கக்கூடிய வசதிகள், நிகழ்ச்சிகளின் டைட்டில்கள் மற்றும் தேவையானவற்றை எழுத்துருவில் காட்டவேண்டுமானால் அவற்றுக்கான வசதி, ஏற்கனவே ஒளிப்பதிவு செய்யப்பட்டிருப்பவற்றைச் சேர்க்கவேண்டுமாயின் அந்த ஒளிப்பதிவு நாடாக்களை இயக்கி அவற்றை நிகழ்ச்சியில் சேர்த்துக்கொள்ளக் கூடிய வசதி, வேறொரு இடத்தில் நடைபெறும் நிகழ்ச்சி கலையகத்தில் தயாரிக்கப்படும் நிகழ்ச்சியின் ஒரு அம்சமாக இருந்தால் அதை நேரடியாகவே சேர்த்துக்கொள்ளும் வசதி என ஒரு பூரணமான நிகழ்ச்சியைத் தயாரிக்கக்கூடிய சகல வசதிகளையும் உள்ளடக்கியதாக ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புக் கலையகம் அமைந்திருக்கும். நான் இங்கே குறிப்பிட்ட சகல அம்சங்களும் இடம்பெறும் சஞ்சிகை நிகழ்ச்சிகளைக் கூட ஒரே தடவையில் செய்துவிட முடியும். ஏதோ, அப்போதைக்கு இருப்பவற்றை ஒளிப்பதிவு செய்துவிட்டு அல்லது தவறுகளுடன் ஒளிப்பதிவு செய்துவிட்டுப் பின்னர் எடிற்றிங் செய்துகொள்ளலாமென்று நினைக்கக்கூடாது. அப்படிச்செய்வது அத்தனை வசதிகளுடனும் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கலையகங்களை முறையாகப் பயன்படுத்தாது விரயமாக்கிப் பின்னர் எடிற்றிங்கிற்கும் நேரத்தையும் பணத்தையும் செலவிடும் ஒரு செயற்பாடாக அமைந்துவிடும். ஒரு பூரணமான தொலைக்காட்சிக் கலையகத்தில் ஆகக்

முதலாவது படப்பிடிப்பின்போது உப கட்டுப்பாட்டறையில் (sub control room).
சிறீஸ்கந்தராஜா, குமார் கனகரட்ணம், நான்.
நிற்பவர் - சில்வெஸ்டர் பாலசுப்ரமணியம்

தொடர்தல் 103ம் பக்கம்

ஒளிமயமான...

102ம் பக்கத் தொடர்ச்சி...

குறைந்தது ஒலியமைப்பாளர் ஒருவர், தயாரிப்பாளர் அல்லது நெறியாளர் ஒருவர், தயாரிப்பு உதவியாளர் ஒருவர், விஷன் மிக்ஸர் எனப்படும் வேண்டிய காட்சிகளைத் தொகுக்கும் ஒருவர், ஒளியமைப்புச் செய்யும் ஒருவர், மூன்று படப்பிடிப்பாளர்கள், ஒரு அரங்க இயக்குனர் என்று ஒன்பதுபேர்வரை பணியாற்றுவார்கள். ஒப்பனை, அரங்க அமைப்பு, மற்றும் வரைகலைக் கலைஞர்கள் ஆகியோர் இந்த எண்ணிக்கையில் சேர்க்கப்படவில்லை. மிகப்பெரிய கலையகங்களில் இன்னும் அதிகமானோர் பணிபுரிவார்கள். ரூபவாஹினி ஆரம்பிக்கப்பட்ட போது கலையகத்தில் நான் மேற்கூறிய அனைவரும் பணியாற்றும் வகையிலேயே அவை அமைக்கப்பட்டிருந்தன. சகல வசதிகளும் நிறைந்த ஒரு முழுமையான கலையத்தையும் அவ்வளவு தொழில் நுட்பவியலாளர்களையும் வைத்துக்கொண்டு ஒரு நிகழ்ச்சியைப் பூரணமாகச் செய்து முடிக்காது பின்னர் எடிற்றிங் செய்து பூரணப்படுத்துவது நேரம், பணம், மனிதவளம் என்பவற்றை விரயமாக்கும் செயல். எனவேதான் எமக்கு மலேஷியாவில் பயிற்சியளிக்கும்போது ஒரு பூரணமான நிகழ்ச்சியை ஒரேமுறையில் செய்துமுடிக்கும்விதத்திலேயே பயிற்சியளிக்கப்பட்டது. பயிற்சியின்போது அது மிகப்பெரிய வேலையாகத் தெரிந்தது. அவ்வாறு நிகழ்ச்சி தயாரிப்பதற்கு மிக நுட்பமாகத் திட்டமிடவேண்டும். ஒரு நிகழ்ச்சியில் இடம்பெறும் அனைத்தும் விநாடிக்கணக்கில் கணிக்கப்பட்டு எல்லா விபரங்களுடனும் கூடிய பூரணமான தயாரிப்புப் பிரதி (production script) எழுதப்படவேண்டும். படப்பிடிப்பாளர் ஒவ்வொருவருக்கும் அவரவர் எடுக்கவேண்டிய காட்சிகளும் அந்தக் காட்சிகளுக்குரிய தொடர் இலக்கமும் குறிப்பிடப்பட்ட ஷொட் லிஸ்ட் (shot list) கொடுக்கப்பட வேண்டும். இப்படித் திட்டமிட்டு செய்வதுதான் உண்மையான தொலைக்காட்சித் தயாரிப்பு முறை. இப்படித்தான் எமக்குப் பயிற்றப்பட்டது. இப்படித்தான் நாம் முதலில் ஆரம்பித்தோம். காலப்போக்கில் அவையெல்லாம் கைவிடப்பட்டு எப்படியும் பார்த்துக்கொள்ளலாமென்ற மனநிலையில் நிகழ்ச்சிகள் செய்யும் வழக்கம் ஏற்பட்டுவிட்டது. உண்மையில் ஒரு தொழில் முறைத் தொலைக்காட்சி நிலையத்தில் நிகழ்ச்சித் தயாரிப்புச் செயற்பாடுகளை நன்கறிந்த மேலதிகாரிகள் இருந்து சரியான தயாரிப்பு நடைமுறைகள் பின்பற்றப்பட்டால் பாரிய அளவில் தயாரிப்புச் செலவைக் கட்டுப்படுத்த முடியும்.

மேற்கூறியமுறையில் பயிற்றுவிக்கப்பட்ட நான் எனது முதல் நிகழ்ச்சியைச் சரியாகச் செய்துவிடவேண்டுமென்று தீவிரமாக ஆயத்தங்களைச் செய்தேன். ஒரேயொரு கலைஞர் நடனமாடுகிறார். மூன்று கமராக்கள்கொண்டு படம்பிடிக்கப்போகிறோம். நாடகம், மற்றும் பல கலைஞர்கள் பங்குபற்றும் நிகழ்ச்சிகளைப்போல் படம்பிடிப்பதற்குச் சிரமமான தயாரிப்பாக இந்த நிகழ்ச்சி இருக்காது. இருந்தபோதிலும் இலங்கைக்குப் புதிதான ஊடகம் ஒன்றின் ஆரம்ப தயாரிப்பாளனாக இருந்து ஒரு முழு நிகழ்ச்சியை ஒளிபரப்புக்கெனத் தயாரிக்கப்போகிறேன், எனது ஆரம்பத் தயாரிப்புகளிலேயே ஒரு திறமைமிக்க தயாரிப்பாளனென்ற பெயரைப் பெற்றுவிடவேண்டும். ஆரம்ப தயாரிப்புத்தானே, தடுமாற்றங்கள் பிரச்சினைகள் இருக்கத்தான்செய்யுமென்று சமாதானங்களை நம்பி இலகுவாகக் கையாளக்கூடாது. முதல் நிகழ்ச்சியிலேயே எனது ஆளுமையை சக தொழில்நுட்பவியலாளர்கள் பாராட்ட வேண்டுமென்பதே எனது குறிக்கோள். நான் எனது பள்ளிக்கூட நாட்களில் ஒரு தடகள விளையாட்டு வீரனென்பதை ஏற்கனவே கூறியிருக்கிறேன். நான் நெடுந்தூர ஓட்டங்கள் ஓடுவதில்லை. அவற்றில் முதலில் பின்னுக்குச் சென்று இறுதியில் முன்னுக்குவந்து வெற்றிபெறலாம். ஆனால் நான் நூறு மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் பங்குபற்றியவன். எடுத்தவீச்சிலிருந்து முழுமூச்சுடன் இறுதிவரை ஓடினால்தான் வெற்றிபெற முடியும். அத்துடன் நீளம், உயரம், கெந்தி மிதித்தில் பாய்தல் முதலிய விளையாட்டுகளில் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெறும் போட்டிகளில் வெற்றிகளைப் பெற்றவன். எவ்வளவு நீளத்துக்குப் பாயமுடியுமோ அல்லது எவ்வளவு உயரத்துக்குப் பாயமுடியுமோ அவ்வளவுக்குப் பாய்வதில்தான் எமது வெற்றி தங்கியுள்ளது. ஒரு விளையாட்டு வீரனின் தீவிரமனநிலை எனக்கு எப்போதுமே இருந்தது. ஒலிபரப்புத்துறையென்பது முன்னோடிகளால் வளர்க்கப்பட்ட நிலையில் அதில் நான் பின்னர் இணைந்து செயற்படடவன். எத்தனையோ சாதனையாளர்கள் ஏற்கனவே இருந்தார்கள். அவர்களது பெயர்களின் மத்தியில் எனது பெயரும் இடம்பெற வேண்டுமானால் கடுமையாக உழைக்க வேண்டுமென்ற சவால் இருந்தது. தொலைக்காட்சி புதியது. நான் ஆரம்பத்தில் அதில் இருக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். ஆரம்பத்திலிருந்தே அசுரத்தனமாக இயங்கினால்தான் எனக்கென்ற ஓர் இடத்தை மட்டுமல்ல, தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புக்குமான ஓர் இடத்தை அல்லது அளவுகோலை (bench mark) ஸ்தாபிக்கமுடியும். அதற்கான அசுரப் பாய்ச்சலுக்குத் தயாரான மனநிலையில்தான் ஒளிபரப்புத்துறைக்குள் நுழைந்தேன். நான் ரூபவாஹினி தொடங்கிய காலம்முதல் அதைவிட்டு வெளியேறும்வரை அந்தத் தீவிரம் என்னிடமிருந்தது. அந்த நாட்களில் ஒலிபரப்பில் ஆகக்கூடியது இரவு பதினொரு மணிவரைதான் பணிபுரியலாம். ஆனால் தொலைக்காட்சித் தயாரிப்புகளில் ஆரம்பத்தில் விடியவிடியப் பணியாற்றியிருக்கிறேன். இவற்றை நான் எழுதுவது என்னைப்பற்றி எழுதுவதற்கு என்பதைவிட இந்தத் துறைக்குவரும் புதியவர்கள், இந்தத் துறைக்குவேண்டிய உழைப்பு எவ்வளவு, எத்தகைய தீவிரத்தன்மையுடையது என்பதை அறிந்துகொள்வதற்காகவே எழுதுகிறேன்.

விஜயாம்பிகை மட்டுமே ஆடும் நடனம். இருந்தபோதிலும சரியான விதத்தில் படமாக்கப்படவேண்டும். முகபாவங்கள், முத்திரைகள், அடவுகள், பாதவேலைகள் அனைத்தும் மிகப் பொருத்தமாகப் படமாக்கப்பட்டுப் பார்ப்பவர்களுக்கு அந்த நடனத்தில் எதையுமே தவறவிடாமல்ப் பார்த்த உணர்வைக் கொடுக்கவேண்டும். சினிமாவில் படமாக்கும்போது இயக்குனரின் விருப்பப்படி நிறுத்திநிறுத்தித் துண்டுதுண்டாகக் காட்சிகளை எடுத்து எடிட்ற்றிங்கில் ஒன்று சேர்த்து முழுமையாக்குவார்கள். இத்தகைய படமாக்கும் முறையில் நடனத்தில் பார்க்கவேண்டிய எதுவும் தவறுவதற்கு வாய்ப்பில்லை. ஆனால் நடனக் கலைஞர்கள் பலதடவைகள் ஆடவேண்டியிருக்கும். ஒரு நடனக்காட்சி பல நாட்களுக்குப் படம்பிடிக்கப்படும். தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பில் நடனக்கலைஞர் ஆடிக்கொண்டிருக்கும் போதே பல கமராக்களால் அவை படம்பிடிக்கப்பட்டு, படம்பிடிக்கப்படும் போதே அவை தொகுக்கப்பட்டு ஆடி முடியும் போது முழுநடனமும் பார்ப்பதற்குத் தயாரான நிலையில் இருக்கும். எனவே, அத்தகைய படப்பிடிப்புக்கு நான் என்னை மிகுந்தளவில் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்காக நான் விஜயாம்பிகையின் வீட்டுக்குச்சென்று பல ஒத்திகைகள் பார்த்தேன். பாடல் வரிகளை ஒரு தாளில் எழுதிக்கொண்டேன். பாடல்வரிகளைத் தொடர்ந்து இசை மாத்திரம் வரும் பகுதிகளை எனக்கு விளங்கக்கூடிய விதத்தில் சில குறியீடுகளால் குறித்துக்கொண்டேன். விஜயாம்பிகை சிறிதும் சலிப்படையாது இரண்டுமூன்று நாட்கள் ஒத்திகை செய்து ஒத்துழைத்தார். எங்கெங்கு என்ன செய்கிறார் என்பதைக் கவனமாகக் குறித்துக்கொண்டேன். குறிப்பாக எந்த இடத்தில் திடீரென இருப்பார், எந்த இடத்தில் திடீரென எழுவார், எந்தெந்த இடத்தில் துள்ளிப் பாய்வார் என்பவற்றை மிக உன்னிப்பாகக் கவனித்துக் குறித்துக் கொண்டேன். ஏனெனில் இந்தத் தருணங்களில்தான் கலைஞர்கள் கமராவின் சட்டகத்துக்கு (frame) வெளியே செல்லக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகம். இது மலேஷியாவில் பயிற்சியின்போது பரதநாட்டிய நிகழ்ச்சியொன்றைத் தயாரிக்கையில் நான் அனுபவத்தில் அறிந்துகொண்டது.

அத்தோடு விஜயாம்பிகையிடமிருந்து அவர் ஆடவிருந்த மூன்று நடனங்களின் பாடல்களையும் ஒரு கஸட்டில் பதிப்பித்து வாங்கிச்சென்று வீட்டில் பல தடவைகள் அந்தப் பாடல்களைக் கேட்டு அந்தப் பாடல்களும் இசையும் மனப்பாடமாகி விட்டன. அவற்றைக் கேட்கும்போது நடன அசைவுகள் மனக்கண்ணில் வருவதால் ஒளிப்பதிவு நாள் நெருங்க நெருங்க அந்த நடனத்தின் ஒவ்வொரு அசைவும் முகபாவங்களும் அத்துபடியாகிவிட்டன. மனதிலே தைரியமும் நம்பிக்கையும் நிறைந்திருந்தன.

ஒளிப்பதிவுக்கு என்னுடன் மலேஷியாவுக்குப் பயிற்சிக்கு வந்த மூன்று படப்பிடிப்பாளர்களும் ஃளோ டிரெக்டராக ஜனக மல்லிமாராச்சியும் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். ஒளியமைப்பு வின்ஸி பெரேரா, விஷன் மிக்ஷர் குமார் கனகரத்தினம். இவர் ஒலிபரப்பிலே எனது பல தயாரிப்புகளுக்கு தொழில்நுட்பவியலாளராகப் பணியாற்றியவர். விஷன் கொன்ட்ரோலராக சிறீஸ்கந்தராஜா. இவர் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒலிபரப்புக் கருவிகள் பழுதுபார்க்கும் லாப்பில் பணியாற்றியவர். ரூபவாஹினியில் கருவிகளைப் பராமரிக்கும் பகுதிக்குப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார். ஒலியை றொஹான் என்ற புதிய தெழில்நுட்பவியலாளர் கையாண்டார். அன்று ஒலியமைப்பாளருக்குப் பெரிதாக வேலை இருக்கவில்லை. நடனத்துக்கான பாடல்கள் அடங்கிய ஒலிநாடாவை இயக்குவது மட்டுமே பணியாக இருந்தது. எல்லோருமே தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புக்குப் புதியவர்கள். அதுவரை பயிற்சிக்காகத் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகளில் மட்டுமே பணியாற்றியிருக்கிறார்கள். அனைவரும் மிக ஆர்வத்துடன் எனது அந்தத் தயாரிப்பில் பங்குபற்றினார்கள்.

மலேஷியாவிலும் இலங்கையில் ஜப்பானியர்களாலும் பயிற்றுவிக்கப்பட்ட நான் இயக்குனர்/தயாரிப்பாளர். மலேஷியாவில் பயிற்றுவிக்கப்பட்ட படப்பிடிப்பாளர்கள் மற்றும் ஃளோர் டிறெக்டர். ஜேர்மனியில் பயிற்றுவிக்கப்பட்ட விஷன் மிக்ஷர், ஒளியமைப்பாளர், மற்றும் விஷன் கொன்ட்ரோலர். இப்படி அந்தத் தயாரிப்புக்குழு பல இடங்களிலும் பயிற்றுவிக்கப்பட்டர்களின் கலவையாக இருந்தது.

மாலை ஐந்து மணியளவில் ஒளிப்பதிவை ஆரம்பிப்பதென்று விஜயாம்பிகையை

விஜயாம்பிகை இந்திரகுமாரின் நடன ஒளிப்பதிவு முடிவடைந்த பின்னர் தொழில் நுட்பக் கலைஞர்களுடன்

தொடர்தல் 104ம் பக்கம்

ஒளிமயமான...

103ம் பக்கத் தொடர்ச்சி...

அழைத்திருந்தேன். மாலை இரண்டுமணியளவில் கதிர்காமத்தம்பி அவர்கள் நான் கேட்டுக்கொண்டபடியே மிக அழகான தட்டிகளைச் செய்துகொண்டுவந்தார். நான் கேட்டுக்கொண்டதைவிட சற்று வித்தியாசமாகச் செய்திருந்தார். அவற்றைப் பின்னணியில் ஒரு அரைவட்டவடிவில் நிறுத்தி வைப்பதே அந்த நிகழ்ச்சிக்கான அரங்க அமைப்பு. புதிய கலையகம். தரை, பின்புறத்திலிருக்கும் வெள்ளைச் சுவர் (cyclorama) அனைத்தும் அப்பழுக்கில்லாமல் மிகச் சுத்தமாக, சிறு கீறல் கூட இல்லாமல் இருந்தன. அந்தத் தட்டிகளை மேலேயுள்ள கம்பிகளில் கதிர்காமத்தம்பி கட்டினார். தொழில்நுட்பவியலாளர் குமார் கனகரத்தினம் அவருக்கு உதவினார். குமார் கனகரத்தினம் ஒரு தயாரிப்புக்கு ரெக்னிக்கல் டிறெக்டராக வந்தால் அவர் விஷன் மிக்ஸிங் மட்டுமே செய்துவிட்டுப் போவதில்லை. தயாரிப்பின் சகல அம்சங்களிலும் தனது பங்களிப்பைச் செய்வார். அவர் பணியிலிருந்தால் எமக்கு மனஅழுத்தம் மிகவும் குறைவாக இருக்கும். அந்தத் தட்டிகளை அரைவட்டவடிவில் இடைவெளிவிட்டு விட்டு நிறுத்தியதுமே கலையகம் ஓர் அழகிய மண்டபம்போலக் காட்சியளித்தது. வின்ஸி ஒளியமைப்புச் செய்யத் தொடங்கினார். நடனமாடும் பகுதி முழுவதும் ஒரேசீரான ஒளி இருக்கவேண்டும். கட்டப்பட்டிருந்த தட்டிகளில் அதிகளவு ஒளி விழக்கூடாது. கீ லைட்(Key light) என்று சொல்லப்படுகின்ற பிரதான மின்விளக்கு உயரே ஒருபக்கத்திலிருந்து சற்றுச்செறிவான வெளிச்சத்தைக் கலைஞரின் முகத்திலே பாய்ச்சவேண்டும். அந்தச் செறிவான வெளிச்சம் ஒரு பக்கத்திலிருந்து பாய்ச்சப்பட்டால் கலைஞரின் முகத்தின் மறுபக்கத்தில் மூக்கிற்குக் கீழேயும் தாடையின்கீழே கழுத்துவரைக்கும் ஒரு சாய்வான கோணத்தில் கடுமையான நிழல் படியும். அந்த நிழலை மறுபக்கத்தில் சதுரவடிவான சற்றுப் பெரிதான மின்விளக்கிலிருந்து வருகின்ற செறிவுகுறைந்த பரவலான ஒளிமூலம் மென்மையாக்க வேண்டும். பிரதான மின்விளக்கை கீ லைட் என்றும் அதற்கு எதிராகப் போடப்படுகின்ற மென்மையான மின்விளக்கை ஃபில் லைட் (fill light) என்றும் அழைப்பார்கள். கீ லைட், ஃபில் லைட் ஆகியவற்றின் ஒளி மூன்றுக்கு ஒன்று என்ற விகிதத்தில் இருக்கவேண்டும். கீ லைட் மூன்று பங்கென்றால் ஃபில் லைட் ஒரு பங்கு. இவற்றை அளப்பதற்குக் கருவிகள் இருக்கின்றன. கருவிகள் இல்லாவிட்டால் கமராவில் பொருத்தப்பட்டிருக்கும் திரையிலோ தொலைக்காட்சித் திரையிலோ தெரியும் படத்தைப் பார்த்து ஒளியின் விகிதாசாரத்தைச் சரிப்படுத்தலாம். இத்துடன் கலைஞரின் பின்புறத்தில் உயரத்திலிருந்து மென்மையான வெளிச்சம் பாய்ச்சவேண்டும். அது அவரது தலையின் பின்புறம், தோள்ப்பட்டை முதலியவற்றில் விழும்போது அவரது உருவத்தைப் பின்னணியிலிருந்து (background) பிரித்தெடுத்து முப்பரிமாணத்தைக் கொடுக்கும். அதை பாக் (back) லைட் என்று சொல்வார்கள். இதுதான் அடிப்படை ஒளியமைப்பு. தளத்தின் எந்தப்பகுதிக்குக் கலைஞர் சென்றாலும் இந்த மூன்று வெளிச்ச அமைப்புகளும் இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். ஒரு நிகழ்ச்சியில் எத்தனை கலைஞர்கள் பங்குபற்றினாலும் அவர்களுக்குரிய இந்த மூன்று ஒளிகளும் பாய்ச்சப்பட வேண்டும். அதுமட்டுமல்ல, அந்த ஒளியின் அளவு அங்கு பொருத்தப்பட்டிருக்கும் மூன்று கமராக்களாலும் ஒரேயளவாகக் கிரகிக்கப்படவேண்டும். அப்படிக் கிரகிக்கப்படாவிட்டால் ஒவ்வொரு கமராவிலிருந்தும் வரும் படங்களில் நிறவித்தியாசம் தென்படும். ஒவ்வொரு கமராவும் தனித்தனியாகக் கட்டுப்பாட்டறையிலுள்ள TBC (Time Base Corrector) என்ற கருவிகளுடன் இணைக்கப்பட்டிருக்கும். கட்டுப்பாட்டறையிலுள்ள நீண்ட மேசையில் இந்த TBC களின் தொழில்நுட்பத் தரவுகளை வேவ்ஃபோம் மொனிற்றர்(Waveform monitor) என்ற திரையில் பார்த்து ஒவ்வொரு கமராவிலிருந்தும் வரும் படங்களின் தொழில்நுட்பத் தரத்தைக் கட்டுப்படுத்தலாம்.

இதைவிட ஒவ்வொரு கமராவும் தொழில்நுட்பத் தரத்திலான சரியான நிறத்தைக் காட்டுவதை உறுதிசெய்வதற்கு வைற் பலன்ஸ் (white balance) என்ற ஒரு செயற்பாட்டைப் படப்பிடிப்பு ஆரம்பமாவதற்குமுன்னர் செய்வார்கள். படப்பிடிப்பின் இடையில் ஒளியமைப்பில் மாற்றம் செய்யப்பட்டால் மீண்டும் வைற் பலன்ஸ் எடுக்கவேண்டும். மூன்று கமராக்களும் கலையகத்தில் செய்யப்பட்டிருக்கும் ஒளியமைப்புக்கமய

தூய வெள்ளை நிறத்தைக் காட்டும் வெப்பநிலையைப் அவற்றில் பதிவுசெய்வதே வைற் பலன்ஸ். ஒரே வெப்பநிலையில் அனைத்துக் கமராக்களும் தூய வெள்ளை நிறத்தைக் காட்டவேண்டும். ஒளியின் வெப்பநிலையை (light temperature) கெல்வின் (kelvin) என்ற அலகு கொண்டு அளப்பார்கள். உதாரணமாக, 2000 கெல்வினென்றால் செம்மஞ்சள் நிறம் காட்டும். படிப்படியாக இந்த வெப்பநிலை உயர்ந்து 4500 கெல்வின் அளவில் தூய வெள்ளைநிறத்தைக் காட்டும். வெப்பநிலை உயரஉயர நீலநிறம் அதிகரிக்கும். இதுபொதுவான நிலை. இதைவிட எந்தளவு வெப்பநிலையில் தூய வெள்ளை நிறத்தைக்காட்ட வேண்டுமென்றும் வைற் பலன்ஸ் மூலம் கமராவில் பதியலாம். இவையனைத்தும் இலத்திரனியல் உபகரணங்களைக்கொண்டு வர்ணத் தொலைக்காட்சிப் படங்களை எடுக்கும்போது கவனிக்கப்படவேண்டிய மிக நுட்பமான தொழில்நுட்ப விடயங்கள். ஒரு கமரா சரியான நிறத்தைக் காட்டுகின்றதா என்பதை அறிய நிகழ்ச்சியில் பங்குபற்றுபவரின் தோலின் நிறத்தை (skin tone) சரியாகக் காட்டுகின்றதா என்று பார்த்து உறுதிப்படுத்திக்கொள்வார்கள். மேலும் நாடகங்கள், சினிமாக்களைப் படம்பிடிக்கும்போது காட்சியின் தன்மைக்கேற்ப படம் எந்த நிறத்தில் அமையவேண்டுமென்று இயக்குனர் விரும்புகிறாரோ அதற்கமைய கலர் ரெம்பரேச்சரை அமைத்துக்கொள்ளமுடியும். உதாரணமாக மெழுகுதிரி வெளிச்சத்தில் காதலர்கள் உணவுண்ணும் காட்சியென்றால் அந்தக் காட்சி செம்மஞ்சள் நிறமாக இருக்கவேண்டும். வீடொன்றில் பேயுலாவும் காட்சி நீலம் கலந்த வெள்ளைநிறத்தில் இருக்கவேண்டும். இவையெல்லாம் படைப்பாற்றலுடன் சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப விடயங்கள். காட்சி ஊடகத்தில் ஒளி பிரதான பங்கு வகிக்கிறது. இந்த ஒளியைச் சரியாகக் கையாள்வது மிகுந்த தொழில்நுட்பம்சார்ந்த பணி. ஒரு இயக்குனருக்கு இவற்றைத் தானே செய்ய இயலாவிட்டாலும் இப்படியான தொழில்நுட்ப விடயங்கள் இருக்கின்றன என்ற அறிவு இருக்கவேண்டும். அதனால்தான் முறைப்படி தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புப் பயிற்சிபெறும்போது இவையெல்லாம் கற்பிக்கப்படுகின்றன. பொதுவாக நிகழ்ச்சித் தயாரிப்பின்போது நான் மேற்கூறியவற்றை ஒளியமைப்பாளர்கள் பார்த்துக்கொள்வார்கள். எங்கள் முதல் நாள் ஒளிப்பதிவில் சிறீஸ்கந்தராஜா அவர்கள் அந்தப் பணியைச் செய்தார்.

அன்று ஒளியமைப்புப் பணிகள் முடிந்து கலையகம் தயாராவதற்கு இரவு எட்டு மணியாகிவிட்டது. விஜயாம்பிகை வந்து ஆடத் தொடங்கினார். முதலில் ஒவ்வொரு நடனத்தையும் மேலோட்டமாக ஆடி ஒரு ஒத்திகை பார்த்துவிட்டுப் படப்பிடிப்பை நடத்தினோம். இப்படி ஒவ்வொன்றாக மூன்று பாடல்களும் படம்பிடிக்கப்பட்டன. அநேகமாக மூன்று நடனங்களையும் திருப்பித்திருப்பி எடுக்கவேண்டியிருந்தது. ஒளிப்பதிவு செய்துகொண்டிருக்கும்போது இடையில் ஒரு சிறு தவறேற்பட்டால் மீண்டும் முதலிலிருந்தே எடுக்கவேண்டும். தொழில்நுட்பவியலாளர்களுக்கு அனுபவம் கூடக்கூடத் தவறுகளைத் திருத்தி பிறர் கண்டுபிடிக்கஇயலாதவாறு எடிட் செய்யும் திறமை வளரும். இது முதல் நிகழ்ச்சியென்றபடியால் நான் எடிற்றிங் கைப்பற்றிச் சிந்திக்கவில்லை. முற்றுமுழுதாகப் பிழைகளின்றி ஒளிப்பதிவுசெய்வதே எமது நோக்கமாக இருந்தது. அனேகமாகப் பிழைகள் படப்பிடிப்பாளர்களினாலேயே ஏற்பட்டன. விரைந்து ஆடிக் கொண்டிருக்கும் நடனத்தை சரியாகப் படம்பிடிக்கக்கூடிய பயிற்சி அப்போது அவர்களுக்கு இருக்கவில்லை. ஃபிறேமிங்கில் தவறுகள் ஏற்பட்டுப் பல தடவைகள் திரும்பத் திரும்பப் படம்பிடிக்க வேண்டியதாகிவிட்டது. விஜயாம்பிகை சழைக்காமல் ஆடினார். பத்துமணியளவில் ஃளோர் டிறெக்டராகப் பணியாற்றிய ஜனக மல்லிமாராச்சி அனுமதிபெற்றுச் சென்றுவிட, விஜயாம்பிகை அவர்களின் கணவர் டொக்டர். இந்திரகுமார் ஃளோர் டிறெக்டராகப் பணியாற்றினார். அவரது பணி நான் உள்ளே கட்டுப்பாட்டறையினுள் இருந்து வோக்கிரோக்கியில் கூறுபவற்றை விஜயாம்பிகையிடம் தெரிவிப்பது மட்டுமே. ஒருவாறு இரவு பதினொரு மணியளவில் ஒளிப்பதிவை நிறைவுசெய்தோம். எமக்குக் கற்றுத்தந்தவாறு நேரடியாக ஒளிபரப்புக்குக் கொடுக்கக்கூடியவிதத்தில் பூரணமாகத் தயாரிக்க முடியவில்லை. காரணம், வரைகலைப்பகுதி அப்போது சரியாக இயங்கத்தொடங்கவில்லை. அதிலும் தமிழ் வரைகலைக் கலைஞர் ஒருவர் இல்லாத காரணத்தால் நிகழ்ச்சிகளின் டைட்டில்களைச் செய்ய முடியவில்லை. நடனங்களை மட்டுமே எடுத்து முடித்தோம். டைட்டில்களைப் பின்னர் எடிற்றிங்கில் சேரத்துக்கொள்வதென்று தீர்மானித்தோம். அன்று ஒளிப்பதிவு முடிய எல்லோருமே மிகவும் களைப்படைந்துவிட்டார்கள். ஆனால் மனச்சோர்வடையவில்லை. எல்லோருக்குமே நிகழ்ச்சி ஒளிப்பதிவு திருப்தியாக இருந்தது. செய்திப் பிரிவில் தயாரிப்பாளராகப் பணியாற்றுவதற்குத் தெரிவாகியிருந்த சில்வெஸ்டர் பாலசுப்ரமணியம் அவர்களும் அங்கு வந்து நிகழ்ச்சி முடிவடையும் வரை எம்முடன் நின்றார்.

எனக்கு மிகவும் களைப்பாக இருந்தாலும் பாரிய பணியொன்றைச் செய்துமுடித்த ஒரு மனஅமைதி ஏற்பட்டது. எந்த நடனநிகழ்ச்சியென்றாலும் இனி என்னால் செய்துவிட முடியுமென்ற மனத்துணிவேற்பட்டது. நான் அந்த முதல் நடன நிகழ்ச்சிக்குத்தான் தயாரிப்புப் பிரதியெழுதி ஆயத்தம்செய்தேன். பின்னர் நடன நிகழ்ச்சிகளை ஒருமுறை ஒத்திகை பார்த்தாலே போதும் எந்தெந்தக் கோணத்திலிருந்து எந்தெந்தக் கமராவினால் படம்பிடிக்க வேண்டும் என்று இயல்பாகவே மனதிற்குள் காட்சிப்படுத்தும் வல்லமை ஏற்பட்டது. இப்படிப் பிரதியில்லாமல் கலையகத்திலுள்ள திரைகளைப் (Monitor) பார்த்தபடியே எந்தக் கமரா எப்படியான ஷொட்டை எடுக்கவேண்டும், எந்தக் கமராவின் படத்தைத் தொகுக்கவேண்டுமென்று இயக்குனர் சொல்வதை அட்லிப் (ad lib)என்று சொல்வார்கள். அனுபவத்தால் இது சாத்தியமாகும். ஆனால் புதிதாகத் தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்பவர்கள் முதலில் முறைப்படி பயிற்சி செய்து, பின்பற்றி அனுபவத்தின்மூலம் தமது திறமைகளை வளர்த்துக்கொள்வதே சிறந்தது.

அன்று ஒளிப்பதிவு முடிந்து எல்லோரும் நின்று அதுபற்றிப் பேசிக்கொண்டிருக்க, கதிர்காமத்தம்பி தனது தட்டிகளை நாம் ஒழுங்குசெய்திருந்த ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்றார். நாம் நிலையத்தைவிட்டுப் புறப்படும்போது நள்ளிரவு பன்னிரண்டு மணியாகிவிட்டது. எனது முதல்நாள் படப்பிடிப்பைப் பார்ப்பதற்கு சிவசக்தியும் வந்திருந்தார். இருவரும் இரத்மலானையில் இருந்த எமது வீடுபோய்ச்சேர நள்ளிரவு ஒருமணிக்குமேலாகிவிட்டது.

தொலைக்காட்சி என்ற பெரும் வெகுஜன ஊடகத்தில் எனது பணி ஆரம்பமாகியது.

தொடரும்...

wikneswaran.p@thaiveedu.com

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.
விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான
பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail: info@thaiveedu.com
Fax: 416-849-0594 Tel: 416-646-3422

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker

Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER

தமிழ்வலை - 56

'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

பெயர்:

முகவரி:

தொலைபேசி எண்:

மின்னஞ்சல்வரி:



தமிழ்வலை-56 வினா

இடமிருந்து வலம்

2 பெருநகர முதல்வர்

6 காவிய நாயகன்

8 முதிராது பழு

9 கொடுக்கன்

10 ஒருவகைக் கூத்து

11 பண்டார வன்னியனுக்கு நினைவுச் சின்னம் பொறித்த இடம்

13 ஒருவகைக் கொக்கு

14 உழக்கு

17 கரு

18 சோமசுந்தரப் புலவரின் அடைமொழி

மேலிருந்து கீழ்

1 மட்டக்களப்பு

3 ஒருவகைத் தாது

4 இறைவனின் பாதம்

5 பூராயம்

7 தருக்க பாடம்

8 ஆநிரை கவர்தலைக் குறிக்கும் பூ

10 குண்டுப் பாத்திரம்

12 குடிவகை

15 ஏற்ப

16 தாய்

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும். அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.

பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.

விடைகளை அனுப்பவேண்டிய மினன்னஞ்சல் முகவரி
thamilvalai@thaiveedu.com
தொலைநகல்: 416 849 0594

விடைகளை அனுப்பவேண்டிய அஞ்சல் முகவரி

Thaiveedu
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

தமிழ்வலை - 55க்கான விடைகள்



தமிழ்வலை-55 பெறுபேறுகள்

முன்னணிப் போட்டியாளர்

எஸ். சிவபுரன், ஸ்காபரோ,
சபாநேசன் சின்னப்பு, ஒட்டாவா,
கீதா ராமன், மிஸ்சிசாகா
திரு. ஏ.எஸ். மகாலிங்கம் ரொறன்ரோ.
விநோதா வசீகரன், மார்க்கம்,
திருமதி. குயின் ஜெயரட்னம், ஏஜக்ஸ்

பரிசுபெறும் போட்டியாளர்

யூட் தேவதாஸ், நோத்யோர்க்

thamilvalai@thaiveedu.com

உலகின் முன்னணி காணி, வீடு விற்பனை நிறுவனமான RE/MAX முதல் தடவையாக யாழ் மண்ணில்

RE/MAX NORTH REALTY

கனடாவிலிருந்து தாயகத்தில் எங்காகத்திலும் வீடு காணி வாங்க விற்க சிறந்த ஒரு நண்பர் உங்களை வழிநடத்த

Coconut Estate for Sale in Arali road, Kakkaithevu
Total Land size- 250 Perches
LKR 25,000,000 CAD $ 182,064

House for sale in Elalai Main road, Elalai
Land Size: - 20 Perch
LKR 5,500,000 CAD $ 41,288

Land and old house for sale in Stanley Rd, Jaffna
Land Size:- 10 perch and 03 kulies
LKR 8,000,000 CAD $ 59,864

Land For Sale in Chundukuli (in front of St.Johns School)
Total Land size- 90 Perch & 10.72 Kullies
LKR 100,000,000 CAD $ 751,378

One Acre Land for sale in Kanakapuram, Kilinochchi
LKR 4,900,000 CAD $ 35,950

Beach Side Land for sale in Batticaloa Sangamam Village, Thirukovil
Land Size:- 3 Acre
LKR 30,000,000 CAD $ 216,115.06

Land for sale in Urumpirai
Total Land Size:- 30 Perch
LKR 1,500,000 CAD $ 10,973.28

Land for sale in Kattakkadu Road, Pullaveli, Iyakkachchi
Total:- 60 Acre
LKR 21,000,000 CAD $ 153,838.40

Land for sale in Kondavil
Land Size:- 4 Larcham 15.8 Kulies
LKR 8,671,815

House with Farm Land for Sale in Eeveni Road, Punnalaikattuvan
Land Size : - 250 Perch
LKR 11,500,000 CAD $ 84,172.99

Land for sale in Meesalai
Land Size :- 25 Perch
LKR 1,850,000 CAD $ 13,428.05

Land for sale in Thelipalai
Land Size:- 11.5 Perch
LKR 15,400,000

House with Land for sale in Manipay
Total Land Size:- 30 Perch
LKR 2,500,000 CAD $ 18,276.63

House with Land for Sale in Talai Mannar Station, Mannar
Land Size:- 80 Perch
LKR 5,000,000 CAD $ 36,633.34

Land for sale in Odakkarai road, Chankanai
Total Size:- 45 perch
LKR 4,050,000 CAD $ 29,649.92

Land with House for sale in Araly
Land Size :- 100 perch
LKR 4,000,000 CAD $ 29,180.50

Land for sale in Chankanai East, Kovilpattru, Chankanai, Jaffna
Total Land Size:- 87.5 Perch
Rs. 10,062,500

Land for sale in Tanankilappu, Chavakachcheri
Total Land Size :- 110 Larchams
LKR 33,000,000 CAD $ 240,751.53

Shop for sale in No- 226, Kasthooriyar Road, Jaffna
Land Size:- 2.11 Perch
LKR 22,500,000 CAD $ 164,594.41

Beautiful House for sale in Uduvil, Jaffna
Total Land Size:- 10 perch and 7 Kulies
LKR 5,800,000

Land with Old House for sale in College Road, Point Pedro
Land Size :- 4 larchchams & 5.75 kulies
LKR 11,000,000 CAD $ 80,026.95

Two shop with upstairs house for sale in Ilavalai
Land Size: - 30 perch
LKR 18,500,000 CAD $ 135,509.76

House for sale in Sivan Road, Urumpirai East
Land Size:- 20 Perch
LKR 9,000,000 CAD $ 65,847.31

Half build House for sale in Colombuthurai
Land size: - 1 larcham 4 kulies
LKR 6,500,000 CAD $ 47,572.53

Vijenthan Kunaradnam
Real Estate Representative
+94 77 227 6173
vijenthan@remaxnorth.lk

Sanmilin Rajeevan
Real Estate Representative
+94 77 227 6498
sanmilin@remaxnorth.lk

வீடு, காணி வியாபாரம் வாங்க விற்க நம்பிக்கையுடன் நாடுங்கள் நட்பான விற்பனை முகவர்கள் ஒரே முகவரியில்

www.remaxnorth.lk
+94 77 566 0000 • +94 21 468 0780
83 Kannathiddy Road, Jaffna, Sri Lanka

Lathan Varatharajah
Broker Owner
+94 76 493 3331
lathan@remaxnorth.lk

உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...

STANDARD MORTGAGES INC

- Mortgages
- Refinance
- Second Mortgages
- Short Term Secured Loans

SMI

STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial

சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட

Raj Subrayam AMP
Director

80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com

தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும்

- நா. சுப்பிரமணியன் -

இத்தொடரின் முதலிரு கட்டுரைகள் இவ்விதழின் 2020 மார்ச், ஏப்ரல் வெளியீடுகளில் பதிவாகின. சூழல்சார் காரணிகளால் மே மாத இதழுக்கான கட்டுரைப் பகுதியை எழுத முடியாது போயிற்று. ஜுன் இதழிலிருந்து இத்தொடர் மீண்டும் தொடர்கிறது.

தமிழில் ஆய்வுமுறைமைகள் உருவாகிய வரலாறு மற்றும் ஆரம்பகாலத் தமிழியலாய்வுகளின் இயல்புகள் ஆகியன தொடர்பான பொதுச் செய்திகளை முன்னைய கட்டுரைகளில் நோக்கினோம். குறிப்பாக முன்னைய இரண்டாவது கட்டுரையிலே ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் ஆய்வுநூல்கள் எழுதும் முறைமைகள் தமிழில் உருவான வரலாறு நோக்கப்பட்டது. அவ்வகையில் குறிப்பாக, 20ம் நூற்றாண்டின் தொடக்ககாலம் வரையான - தமிழ் ஆய்வியலின் பொதுவான இயங்குநிலை மற்றும் அவற்றின் பின்புலம் ஆகியன பற்றிய எனது சில அவதானிப்புகள் மேற்படி கட்டுரையில் பதிவாகியுள்ளன. குறிப்பாக, தமிழுணர்வு மற்றும் வரலாற்று ஆர்வம் ஆகியவற்றின் தளத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுவந்த சூழலை அதிலே நோக்கினோம். அத்துடன் ஆய்வுகளுக்கான வாய்ப்புகள் விரிவடைந்து வந்த நிலைகளையும்கூட மேற்படி கட்டுரையில் அவதானித்தோம். அவ்வாறு விரிவடைந்து வந்துள்ள வரலாற்றுப் போக்கின் அடுத்த கட்ட முக்கிய வளர்ச்சிநிலைகளை இக்கட்டுரையிலும் அடுத்துவரும் சில கட்டுரைகளிலும் நோக்கவுள்ளோம்.

அடுத்த கட்ட வளர்ச்சிநிலை என்றவகையில் இங்கு குறிப்பிடப்படவேண்டிய முக்கியமான செய்தி 'தமிழியல் ஆய்வுக்கு உயர்கல்விச் சூழலில் கிடைத்த அங்கீகாரம்' ஆகும். உயர்கல்விச்சூழல் என்பது இங்கு பல்கலைக்கழம் என்ற பெயர்தாங்கிய நிறுவனங்களையும் அதன் தரத்திலான உயர்கல்வி நிறுவனங்களையும் மையப்படுத்திய கல்விச்சூழலைக் குறிப்

தமிழியல் ஆய்வுகள்: 03

பதாகும். இவ்வாறான உயர்கல்விச் சூழல்களில் ஒரு கற்கைத்துறையாக ஏற்கப்படும் நிலைகள் தமிழுக்கு 1920களின் பிற்பகுதியிலே ஏற்பட்டது. சென்னைப் பல்கலைக்கழகத்திலே தமிழை முக்கிய பாடமாகக் கற்பதற்கான துறையொன்று 1927ல் நிறுவப்பட்டது. இதனை அடுத்து சிதம்பரத்தில் 1929ல் உருவான அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் தமிழ் ஒரு முக்கிய கற்கைத்துறையாக அமைந்தது. இவ்விரு நிகழ்வுகளும் தமிழ்மொழிக்கும் அது சார்ந்த சிந்தனைகள் மற்றும் பண்பாட்டு மரபுகள் ஆகியவற்றுக்கும் அன்றைய இந்திய உயர்கல்வியுலகம் வழங்கிய பெருங்கௌரவங்களாகவும் அங்கீகாரங்களாகவும் கொள்ளத்தக்கனவாகும். அவ்வகையில் தமிழ் ஆய்வியலின் வரலாற்றிலே இந்நிகழ்வுகள் ஒரு முக்கிய வளர்ச்சிக் கட்டமாக - ஒரு பெரும் பாய்ச்சல்களாக அல்லது ஒருபெரும் அடிவைப்புகளாக - கருதப்படவேண்டியனவாகும். இவ்வாறான கணிப்புக்கான காரணத்தை உரியவாறு புரிந்துகொள்ள வேண்டுமெனில் பல்கலைக்கழகமொன்றில் முக்கிய துறையாக ஒரு கற்கைநெறி ஏற்றுக்கொள்ளப்படுவதன் மூலம் எய்தக்கூடிய அதிகபட்ச நலன்கள் பற்றிய தெளிவொன்று இங்கு நமக்கு அவசியமாகிறது.

இவ்வகையில் மூன்று முக்கிய நலன்கள் இங்கு நமது கவனத்துக்குரியவை. இவற்றுள் முதலாவதாக இங்கு சுட்டத்தக்கது அறிவுலகம்சார்ந்த பொதுக்கணிப்புக்கும் கவனிப்புக்கும் உட்படும் நிலையாகும். இரண்டாவதாக இங்கு குறிப்பிடக்கூடியது அக்கற்கைத்துறையின்மீது படியக்கூடிய ஆழமான புறநிலையான பார்வைகளால் அது எய்தக்கூடிய புதிய பரிமாணங்களாகும். மூன்றாவது நலன், குறித்த கற்கைத் துறைசார் ஆய்வில் ஈடுபட விழைவோருக்கு கிட்டக்கூடிய வசதிகள் மற்றும் அவர்களின் செயற்பாடுகள், பேணப்படக்கூடிய வாய்ப்புகள் ஆகியன சார்ந்ததாகும். இவ்வம்சங்கள் தொடர்பிலான சிறு விளக்கமொன்று வருமாறு:

பல்கலைக்கழகங்கள் மற்றும் அவற்றின் தரத்திலான உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியன அறிவைத் தேடுவது, திரட்டிப் பேணிக் கொள்வது மற்றும் அவற்றை வளர்த்தெடுப்பது ஆகிய பணிகளை மேற்கொண்டுவருபவை என்பதறிவோம். இவ்வாறான இயங்குநிலைகளில் அவை அனைத்துலக மட்டத்திலான உயர்கல்விச் சூழல்களுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணிக்கொள்வதோடு மட்டுமன்றி அவற்றின் ஆய்வுத்தரங்களை உள்வாங்கிச்செயற்படுபவை என்பதும் பொதுவாக நாமறிந்த செய்திகளேயாகும். அவ்வகையில் குறித்த பல்கலைக்கழகமொன்றில் கற்கைத்துறையாக ஏற்றுக்கொள்ளப்படும் விடயமானது - அதாவது மொழி மற்றும் பண்பாட்டம்சம் ஆகியன சார்ந்த பாடப்பகுதியானது - அனைத்துலக மட்டத்திலான உயர்கல்விச் சூழல்களின் கவனிப்புகளையும் மதிப்பீடுகளையும் பெறத் தொடங்கிவிடுகிறது என்பதை உய்த்துணரமுடியும்.

இரண்டாவதான, 'புறநிலைப்பார்வைகளால் எய்தக்கூடிய புதிய பரிமாணங்கள்' என்ற வகையில் முக்கியமாக இங்கு புரிந்துகொள்ளவேண்டிய விடயம், 'அக்கற்கைத் துறையானது ஏற்கெனவே பார்க்கப்பட்ட அல்லது அணுகப்பட்ட முறைமைகளிலிருந்து வேறு புதியதளங்களுக்கு நகர்த்தப்படும் வாய்பைப் பெறுகிறது' என்பதாகும். குறிப்பாக, 'பல்வேறு பாட அலகுகளாகப் பகுத்து நோக்கப்படுதல், 'ஒத்த தன்மைகொண்ட பிற கற்கைநெறிகளுடன் அருகில் வைத்து ஒப்பு நோக்கப்படுதல்' முதலான செயற்பாங்குள் ஊடாக இவ்வாறான தளநகர்த்தல்கள் நிகழும். இவ்வகைச் செயற்பாங்குகள் அக்கற்கை நெறியானது காலத்துக்கேற்றவாறு தன்னைப் புதுப்பித்துக்கொள்வதற்கும் ஆய்வுலகில் நிலைத்து வாழ்வதற்கும் துணை நிற்பன என்பதை உய்த்துணரமுடியும்.

மூன்றாவதாக, ஆய்வாளர்களுக்குக் கிட்டக்கூடிய 'வசதி-வாய்ப்புகள்' என்ற வகையில் இங்கு முதலிற் குறிப்பிடவேண்டிய விடயம் ஆய்வொன்றை நிகழ்த்துவதற்குப் பல்கலைக்கழகம் வழங்கும் பல்வேறுபட்ட வசதிகளாகும். ஆய்வுத்தலைப்பொன்றைத் தேர்வதுமுதல் அதனை ஆய்வேடாகக் கட்டமைப்பது வரையான சகல நிலைகளிலும் ஆலோசனைகள், நூலக வசதிகள், ஆய்வரங்க வாய்ப்புகள், நிதியுதவிகள் ஆகியவற்றைப் பல்கலைக்கழகங்கள் வழங்குகின்றன. மேலும் ஆய்வாளர்களின் தகுதிக்கேற்றவாறான கௌரவங்கள், விருதுகள், பட்டங்கள் முதலியவற்றையும் அவை வழங்குகின்றன. இவை தவிர பல்கலைக்கழகச் சூழலில் பல்வேறு அறிஞர்களுடன் உரையாடக்கிட்டும் வாய்ப்புகளின் ஊடாக குறித்த ஆய்வாளர் தமது சிந்தனைகளைச் செம்மைப்படுத்திக் கொள்ளவும் விரிவுபடுத்திக் கொள்ளவும் முடிகிறது.

இவ்வாறான அம்சங்களைக் கருத்துட்கொண்டு நோக்கும் போது குறித்த ஒரு மொழியோ அல்லது பண்பாட்டம்சமோ பல்கலைக்கழகமொன்றில் முக்கிய கற்கைத்துறையாக இடம்பெறுவது என்பது எத்தகு முக்கியத்துவமுடையது என்பது தெளிவாகும். 1920களின் பிற்பகுதியில் சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழுக்கான தனித்துறைகள் அமைந்த நிகழ்வுகளின் வரலாற்று முக்கியத்துவங்களையும் இக்கோணத்திலேயே நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

1920களின் முற்பாதிவரை தமிழியலாய்வானது தமிழறிஞர்கள், ஆர்வலர்கள் மற்றும் பணம்படைத்த சில பெருமக்கள் ஆகியவர்களின் தனிப்பட்ட ஈடுபாடுகளிலும் சமய ஆதினங்கள் மற்றும் மதுரைத் தமிழ்ச்சங்கம் முதலிய நிறுவனங்களின் கூட்டுச்செயற்பாடுகள் முதலியவற்றிலும் மட்டுமே காலூன்றி நின்று இயங்கி வந்தது. ஆனால் இப்போது(அதாவது 1920களின் பிற்பகுதியில்) நிலைமை மாறத்தொடங்கியது. இப்போது அது, 'பல தலைமுறைகளுக்குத் தொடரக்கூடியனவும் உலக நிலைப்பட்ட அறிவுத் தரத்தைப் பேணி நிற்பனவுமாகிய பல்கலைக்கழகம் என்ற நிறுவன அமைப்புகளுக்குள் அடியெடுத்து வைக்கத் தொடங்கியது. இது ஒரு 'தளமாற்ற நிலை' ஆகும். இதுவே இங்கு நாம் புரிந்துகொள்ளவேண்டிய வரலாற்றுச் செய்தியாகும். மேற்படி நிகழ்வுகளை 'தமிழ் ஆய்வியலின் வரலாற்றிலே 'பெரும் பாய்ச்சல்க'ளாக அல்லது 'பெரும் அடிவைப்பு'களாக அமைந்தன' என மேலே சுட்டியதற்கான காரணிகள் இவையே.

இவ்வாறு மேற்படி நிகழ்வுகளை உயர்வாக மதிப்பிடும் நிலையில் அது தொடர்பிலான மேலதிக விளக்கமொன்றையும் இங்கு முன்வைப்பது அவசியமாகிறது. 'சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் தமிழ்த்துறைகள் 1920களின் பிற்பகுதியில் தொடங்கப்பட்டவுடனேயோ அல்லது சில ஆண்டுகளிலேயோ மேலே சுட்டியவாறான நலன்களைப் பெற்றுவிட்டன' என்பதாக நாம் கருதக்கூடாது. காரணம் ஒரு நிறுவனக்கட்டமைப்பில் புதிதாக உள்வாங்கப்படும் எந்தத் துறையும் உடனடியாக அத்தகு தகுதியை எய்துவது சாத்தியமும் அன்று. முதலில் சில ஆண்டுகள் அந்நிறுவனத்தின் கட்டமைப்புக்கு ஏற்றவகையில் தொடர்ச்சியாகவும் சிறப்பாகவும் இயங்கித் தம்மை அவை தகவமைத்துக்கொள்வதும் அதன்மூலம் தம்மை நிலைப்படுத்திக்கொள்வதுமே அவற்றின் குறிக்கோளாக அமைந்திருக்கும். அவ்வாறான இயங்குநிலைகளின் பெறுபேறுகளைத் தொடர்ந்தே மேற்சுட்டிய நலன்களை அவை எய்துவது சாத்தியம்.

மேற்படி விளக்கம் இவ்விரு பல்கலைக்கழகங்களின் தமிழ்த்துறைகளின் வரலாற்றுக்கும் பொருந்தும். தொடக்கத்தில் தமிழ் அறிவுச்சூழலில் தம்மை நிலைநிறுத்திக் கொள்வதற்கு அவற்றுக்குச் சில ஆண்டுகள் வரை சென்றிருக்கலாம். ஆனால் அவை தம்மை வெற்றிகரமாக நிலைநிறுத்திக் கொண்டன என்பதும் அதன்பேறாக பிற்காலத்தில் அவற்றை மாதிரிகளாகக் கொண்டு பல்கலைக்கழகங்கள் பலவற்றில் தமிழ்த்துறைகள் உருவாக்கப்பட்டன என்பதுமே வரலாறு தரும் செய்தியாகும்.

குறிப்பாக, மேற்படி தமிழ்த்துறைகள் உருவான காலப்பகுதியை அடுத்து, அவற்றை முன்மாதிரிகளாகக்கொண்டு தமிழகத்திலும் அதனை உள்ளடக்கிய இந்தியமண்ணிலும் தமிழர்கள் வாழும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலுமுள்ள பல்கலைக்கழகங்கள் பலவற்றில் தமிழ்த்துறைகள் உருவாகி நிலைத்துள்ளன. அவற்றினூடாகத் தமிழியலாய்வு அனைத்துலக மட்டத்தில் விரிவும் ஆழமும் எய்திவந்தது என்பதும் நாமறிந்த செய்திகளே. மேலும் தமிழுக்காகவே தனியாக ஒரு பல்கலைக்கழகம் (தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்) 1981ல் உருவானதையும் நாமறிவோம்.

அத்துடனமையாது அனைத்துலக மட்டத்தில் ஐக்கியராச்சியம், அமெரிக்கா, ஜெர்மனி முதலான மேலை நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்கள் பலவற்றிலும் தமிழைக் கற்பிப்பதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதும் இம்மேலைப் பல்கலைக்கழகங்களுள் பலவற்றுள் தமிழுக்கான தனித் துறைகளும் 'பேராசிரிய இருக்கை'களுங்கூட உருவாக்கப்பட்டுள்ளன என்பதுங்கூட நாமறிந்த செய்திகளே. (கனடாவிலுள்ள ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் ஒரு இருக்கையை நிறுவுவதற்கு தமிழார்வலர்கள் தீவிர முயற்சிகள் பேற்கொண்டுவருகின்றனர் என்பதான சமகாலச் செய்தியைக் கூட இச்சந்தர்ப்பத்தில் நினைவிற்கு இட்டுவருகிறேன்.)

இவ்வாறான நிகழ்வுகளுக்கெல்லாம் முன்னோடியாக அமைந்த வகையிலேயே மேற்படி இரு பல்கலைக்கழகங்களில்-சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் - தமிழ்த்துறைகள் உருவான நிகழ்வுகள் வரலாற்று முக்கியத்துவமுடைய 'முதல் அடிவைப்புகளாக'க் கொள்ளப்பட வேண்டியவையாகின்றன.

மேற்படி இரு பல்கலைக்கழகங்களின் தமிழ்த்துறைகள் உருவான நிகழ்வுகளின் வரலாற்று முக்கியத்துவங்களை நோக்கினோம். அடுத்து இவ்விரு துறைகளின் உருவாக்கப் பின்புலம் மற்றும் இவற்றின் இயங்குநிலைகள், இவற்றினூடாக தமிழ் ஆய்வியல் எய்திவந்த வளர்ச்சிநிலைகள் என்பனவே இங்கு நமது கவனத்துக்கு வரவுள்ளன. இவ்வகையில் முதலிலே சென்னை மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களில் தமிழ்த்துறைகள் உருவான சூழல்கள்சார் சில முக்கிய வரலாற்றுக்குறிப்புகளை முன்வைக்க விழைகிறேன்.

சென்னை மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களில் தமிழ்த்துறைகள் உருவான சூழல்கள் - சுருக்கமான ஒரு வரலாற்றுக்குறிப்பு:

சென்னைப் பல்கலைக்கழகத்திலே 1927ல் தமிழ்த்துறை நிறுவப்பட்டது என்பதை ஒரு செய்தியாக மட்டுமே மேலே நோக்கினோம். ஆனால் அச்செய்திக்குப் பிற்புலமாகத் திகழ்ந்த சூழல் பற்றியும் இங்கு சுட்டுவது வரலாற்று நோக்கில் அவசியமாகிறது. அப் பல்கலைக்கழகமானது 1857ல் நிறுவப்பட்டது. ஆயினும் அதிலே முதல் எழுபதாண்டுகாலப் பகுதியில் தமிழானது ஒரு முக்கிய கற்கைத்துறையாக இடம்பெற்றிருக்கவில்லை என்பதே இங்கு நாம் முதலில் நினைவிற் கொள்ளவேண்டிய செய்தியாகிறது.

'தமிழானது தனித்தியங்கும் தகைமை கொண்டது' என்பது உட்பட அதன் சிறப்பியல்புகள் பலவற்றையும் ஆய்வுபூர்வமாக வெளிப்படுத்தியதான 'A Comperative Grammer of Dravidian Languages' என்ற கால்டுவெல் அவர்களது நூலாக்கத்தின் முதலாவது பதிப்பானது 1856ல் வெளியானது என்பதறிவோம். அக்காலத்தையடுத்தே சென்னைப் பல்கலைக்கழகம் உருவாகியுள்ளது. ஆயினும் அப்பல்கலைக்கழகமானது மேற்படி தகுதிகொண்ட தமிழை ஒரு முக்கிய கற்கைநெறியாக மதித்து உள்வாங்கிக் கொள்வதற்குத் தமிழ் உலகம் மேலும் எழுபதாண்டுகள் காத்திருக்கநேர்ந்தது என்பது வியப்பை

தொடர்தல் 109ம் பக்கம்

தமிழியல் ஆய்வுகள்...

108ம் பக்கத் தொடர்ச்சி...

மட்டுமன்றி, மனவருத்தத்தையும் தரும் செய்தியேயாகும்.

இந்த இடைக்காலத்திலே தமிழின் தகைமையை அடையாளங்காட்டும் வகையிலான பல ஆய்வு முயற்சிகளும் ஆக்க முயற்சிகளும் நிகழ்ந்திருந்தன என்பதும் நினைவுக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை. இவ்விடைக்காலத்திலே பதிப்புப்பேரறிஞர்களான சி.வை. தாமோதரம் பிள்ளை, உ.வே சாமிநாதையர் முதலியவர்களின் பதிப்பியல் செயற்பாடுகளின் ஊடாக பண்டைத் தமிழிலக்கிய இலக்கணப்பரப்பின் பெரும்பகுதி ஏடுகளிலிருந்து பெறப்பட்டு அச்சேற்றப்பட்டிருந்தது. பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை, வீ.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் (பரிதிமாற் கலைஞர்), நாவலாசிரியர்களான எஸ். இராஜமையர், அ.மாதவையா, திறனாய்வியல் முன்னோடிகளான வ.வே.சு. ஐயர் மற்றும் தமழுக்குப் புதுநெறிகாட்டிய புலவனான மகாகவி சுப்பிரமணிய பாரதியார் முதலிய நவீன தமிழின் முன்னோடிகள் இவ்விடைக்காலத்திலே பலரும் தங்கள் சாதனைகளை நிறைவுசெய்து இயற்கை எய்தியிருந்தனர். இவ்வாறான வரலாற்றுச் சூழல்களில் சென்னைப் பல்கலைக்கழகமானது தமிழை ஒரு முக்கிய கற்கைநெறியாக ஏற்றுக் கொண்டிருக்கவில்லை என்பதே சூழற்பின்புலம் என்ற வகையில் கவனத்துக்குரிய செய்திகளாகும். இத்தொடர்பில் இங்கு பதிவுபெற வேண்டிய மற்றுமொரு முக்கிய சோகச் செய்தியுமுள்ளது. அது வருமாறு:

மேலே நோக்கிய நவீன இலக்கிய முன்னோடிகளுள் ஒருவரான அ. மாதவையா அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் ஒரு முக்கிய கற்கைநெறியாக இடம்பெறவேண்டும் என்பதை வலியுறுத்தி நின்ற சூழலில் உயிர்துறந்தார் என்பதே அச்சோகச் செய்தியாகும். (அவர் மேற்படி பல்கலைக்கழகத்தில் 1925ம் ஆண்டில் மூதவை (Senate) உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். அச்சூழலிலே அவர் தமிழை ஒரு கட்டாய பாடமாக இளங்கலை வகுப்பின் பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்பதை வலியுறுத்தி உரை நிகழ்த்தியுள்ளார். அவ்வாறு உரை நிகழ்த்திக்கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே கீழே வீழ்ந்திறந்தார். இவை அவரது வரலாறுசார் எழுத்துகள் தரும் தகவல்களாகும்.)

இவ்வாறு திரு. அ. மாதவையா அவர்களும் அவரின் சமகாலத்தவர்களும் முற்பட்டவர்களுமான தமிறிஞர்கள் பலரும் பலமுறை வலியுறுத்திவந்த நிலையில் தான் அப்பல்கலைக்கழகத்தில் 1927ல் தமிழுக்காக ஒரு தனித்துறை உருவாக்கப்பட்டது எனலாம்.

இவ்வாறாகத் தமிழுக்காக ஒரு தனித்துறை துறை 1927ல் உருவானது என நாம் அறியும் நிலையில் அதற்கு முன்பே தமிழுடன் தொடர்புடைய முக்கிய செயற்பாடுகள் நடைபெற்றுள்ளன என்பதை உணர்த்தும் வகையிலமைந்த தரவுகள் சிலவற்றையும் இங்கு கவனத்திற்கு இட்டு வருவது ஆய்வு நோக்கில் அவசியமாகிறது. அவை வருமாறு:

1912-14 காலப்பகுதியிலே அப்பல்கலைக் கழகத்தில் இந்திய வரலாறு, தொல்லியல், ஒப்பீட்டு மொழிவரலாற்றியல் (Comperative Philology) முதலிய சில துறைகள் உருவாகிவிட்டன என அறிகிறோம். இவற்றுள் ஒப்பீட்டுமொழி வரலாற்றியல் துறையிலே தமிழ்சார்ந்த ஆய்வுகளுக்கும் வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது என்ற தகவலும் உளது. அவ்வகை வாய்ப்புகள் அக்காலத் தமிழ்க் கல்வியாளர்களால் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளப்பட்டன என்பதை அறிவதற்கான தகவல்கள் எவையும் கிடைக்கவில்லை.

மேலும், 'அக்காலப்பகுதியில் சென்னைப் பல்கலைக்கழகத்திலே தமிழானது இளங்கலை மற்றும் முதுகலை ஆகிய நிலைகள்சார் பாடத்திட்டங்களில் துணைப்பாடங்களில் (Auxiliary subjects) ஒன்றாக அல்லது விருப்பப்பாடங்களில் (Optional subjects) ஒன்றாகத் திகழ்ந்திருக்கவுங்கூடும்'என்ற ஊகத்திற்கும் இடமுளது. 'இளங்கலை வகுப்பிற்குத் தமிழைக் கட்டாய பாடமாக்க வேண்டும் என திரு அ. மாதவையா அவர்கள் 1925ல் வலியுறுத்தியுள்ளார்' என்பதான மேலேசுட்டிய தகவல் இவ்வாறான ஊகத்துக்கு இடமளிக்கிறது.

இவ்விரண்டையும் தவிர மேலும் ஒரு முக்கிய தரவு உளது. அது வருமாறு, சென்னைப் பல்கலைக்கழகத்திலே தமிழ்த்துறை உருவாகும் முன்பே தமிழ் லெக்ஸிகன் (Tamil Lexicon) எனப்படும் தமிழ்ப் பேரகராதியொன்றைத் தொகுக்கும் செயற்பாடானது தொடங்கிவிட்டது என்பதே, அது. அப்பேரகராதித் தொகுப்புக்குப் பதிப்பாசிரியராகத் திகழ்ந்தவர் பேரறிஞர் எஸ்.வையாபுரிப்பிள்ளை(1891-1956) ஆவார். இந்த அகராதி முயற்சியானது 1924 முதல் 1936வரை மேற்கொள்ளப்பட்டதென்பதும் ஏழு தொகுதிகளாக வெளிவந்த இந்த அகராதி முயற்சியே இந்திய மொழிகள் பலவற்றினதும் இவ்வகை முயற்சிகளுள் முதலாவது வெளிப்பாடாகக் கொள்ளப்படுவது என்பதும் இத்தொடர்பில் பதிவாக வேண்டிய முக்கிய செய்திகளாகும்.

இவ்வாறான தகவல்களை மையப்படுத்தி நோக்கும்போது சென்னைப் பல்கலைக்கழகத்திலே தமிழ் மொழிசார்ந்த சிலதுறைகளிலான ஆய்வுச்செயற்பாடுகள் 1927க்கு முன்பே தொடங்கப்பட்டு விட்டதென்பது தெளிவாகிறது. அவ்வாறான முயற்சிகளின் தொடர் நிலைகளிலொன்றாகவே தமிழ் ஒரு தனித்துறையாக ஏற்கப்பட்ட நிகழ்வானது திகழ்கிறது என்பதே வரலாற்று நோக்கில் நாம் புரிந்துகொள்ள வேண்டிய செய்தியாகும்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகமானது 1929ல் உருவாக்கப்பட்டது. அது தொடங்கும்போதே தமிழ்த்துறையும் அதில் உருவாகிவிட்டது. அத்துடன் தமிழ் கலைமரபின் ஒரு பகுதியான இசைக்கும் அங்கு தனித்துறை தொடங்கப்பட்டது. தமிழ்ப் பண்பாட்டைப் பேணி வளர்ப்பது என்பதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டதாக இந்நிறுவனம் உருவானமையே இதற்கான காரணம் எனலாம். சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஏற்கெனவே தமிழ்த்துறை உருவாகி விட்டமையால் இங்கு உருவாவதில் நிர்வாகநிலைசார் சிக்கல்கள் எவையும் இருந்திருக்கமுடியாது என்பது இங்கு ஊகித்துணரக் கூடியதேயாம்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை உருவாக்கப்பட்டபோது அதில் திரு. K.N. சிவராசபிள்ளை (1879-1941) அவர்கள் ரீடர் (Reader) என்னும் தரத்தில் துறைத் தலைவராக நியமனம் பெற்றார். பல்கலைக்கழக மரபிலே Reader என்பது 'உயர்நிலை விரிவுரையாளர்' என்ற பொருள் தருவதாகும். (சமகாலப் பல்கலைக் கழகங்களில் இச்சொல்குறிக்கும் பதவி நிலையொன்று வழக்கிலிருந்து வருவதாகத் தெரியவில்லை.) K.N. சிவராசபிள்ளையுடன் E.V. அனந்தராம ஐயர், K வரதராஜுலு நாயுடு ஆகிய இருவர் விரிவுரையாளர்களாக அங்கு நியமனம் பெற்றனர் என அறிகிறோம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை உருவானபோது, அதில் தான் முதலில் பேராசிரியர் - அதாவது தமிழ்ப் பேராசிரியர் - என்ற பதவி நிலைக்கான இருக்கை உருவானது. பேராசிரியர் என்ற சொல்லானது பெரிய ஆசிரியர் (ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியர்) என்ற பொருள் தருவதாகும். ஆங்கிலத்தில் Professor என்பதன் தமிழாக்கமாக இது அமைந்தது. தமிழின் உரையாசிரியர்களில் ஒருவர் பேராசிரியர் என்ற பெயரில் கி.பி. 14ம் நூற்றாண்டில் வாழ்ந்துள்ளார் என்பதறிவோம். இங்கே இருபதாம் நூற்றாண்டிலே அச்சொல்லானது பல்கலைக் கழக மரபில் விரிவுரையாளர்களுக்கெல்லாம் தலைமை தாங்கும் தகுதி படைத்த ஒருவரைக் குறிக்கும் பதவிநிலைச் சுட்டாக அமைந்தது என்பது, சொற்பொருள் நிலையிலே இங்கு நாம் புரிந்துகொள்ள வேண்டிய செய்தியாகும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே இப்பதவி நிலையை முதலில் அலங்கரித்தவர் ஈழத்தவரான சுவாமி விபுலாநந்தர் (1891-1947) என்பதும் அவ்வகையில் அவரே பல்கலைக்கழக நிலைசார் தமிழ்த் துறைகளின் முதலாவது பேராசிரியர் என்ற பெருமையைப்பெற்றவர் என்பதும் பொதுவாக நாமறிந்த செய்திகளேயாம். அப்பல்கலைக்கழகத்திலே 1930-1933 காலப் பகுதியல் இப்பதவியை அவர் வகித்தார். அதன்பின் அப்பணியினின்று விலகிய அவர் 1940களின் தொடக்கத்தில் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை உருவானபோதும் முதலாவது பேராசிரியராகப் பொறுப்பேற்றார் என்பதும் 1947ல் அவர் இயற்கை எய்தும்வரை அப்பதவியிலேயே தொடர்ந்தார் என்பதையும் நாமறிவோம்.

சென்னைப் பல்லைக்கழகத்தில் தமிழ்த் துறையானது 1948 வரை ரீடர் என்ற பதவிநிலையினராலேயே தலைமை தாங்கப் பட்டு வந்தது. அவ்வாண்டில்தான் ரீடர் என்ற பதவிநிலைக்குப் பதிலாக பேராசிரியர் என்ற பதவிநிலை அத்துறையில் தோற்றுவிக்கப்பட்டது.அவ்வகையில் அங்கு முதல் தமிழ்ப்பேராசிரியராகப் பதவயேற்றவர் டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை (1896 - 1961)ஆவார்.

இதுவரை சென்னை மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களில் தமிழ்த்துறைகள் உருவான சூழல்கள் தொடர்பான சில செய்திகள் நோக்கப்பட்டன. அடுத்து, அத்துறைகளின் தமிழ் ஆய்வியல் தொடர்பான இயங்குநிலைகள் மற்றும் முக்கிய ஆய்வுச்செயற்பாடுகள் ஆகியன கவனத்துக்கு வரவுள்ளன.

> **"'தமிழானது தனித்தியங்கும் தகைமை கொண்டது' என்பது உட்பட அதன் சிறப்பியல்புகள் பலவற்றையும் ஆய்வுபூர்வமாக வெளிப்படுத்தியதான A Comperative Grammer of Dravidian Languages என்ற கால்டுவெல் அவர்களது நூலாக்கத்தின் முதலாவது பதிப்பானது 1856ல் வெளியானது. என்பதறிவோம். அக்காலத்தையடுத்தே சென்னைப் பல்கலைக்கழகம் உருவாகியுள்ளது. ஆயினும் அப்பல்கலைக்கழகமானது மேற்படி தகுதிகொண்ட தமிழை ஒரு முக்கிய கற்கை நெறியாக மதித்து உள்வாங்கிக் கொள்வதற்குத் தமிழ் உலகம் மேலும் எழுபதாண்டுகள் காத்திருக்க நேர்ந்தது என்பது வியப்பை மட்டுமன்றி மனவருத்தத்தையும் தரும் செய்தியேயாகும்."**

மேற்படி இரு பல்கலைக்கழகங்கள்சார் தமிழ்த்துறைகளின் இருகட்ட இயங்குநிலைகள்:

மேற்படி இரு பல்கலைக்கழகங்களின் தமிழ்த்துறைகளும் ஆய்வுநோக்கில் இயங்கி வந்த முறைமைகளை அவற்றின் ஈடுபாடுகள், செயன்முறைகள் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு கால கட்ட அடிப்படையில் இருவகைப்படுத்தலாம். இவற்றில் முதலாவது கட்டமானது ஏறத்தாழ 1950கள் வரையானதாகும். இரண்டாவது காலகட்டமானது, 1950களின் ஈற்றிலிருந்து தொடங்கித் தொடர்வதாகும்.

முதலாவது காலப்பகுதியில் மேற்படி இரு துறைகளின் முக்கிய கவனம் தமிழ் மரபைப் புரிந்து கொள்ளுதல் என்பதிலேயே குவிக்கப்பட்டிருந்தது. அவ்வகையில் குறிப்பாகத் தமிழகத்தை மையப்படுத்திய பார்வையாகவே அது திகழ்ந்தது. தமிழகத்தின் பண்டைய ஆக்கங்கள் - குறிப்பாக சங்கப்பாடல்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம் முதலான பண்டைய இலக்கியங்கள் தொல்காப்பியம், நன்னூல், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை முதலான இலக்கண ஆக்கங்கள், அவற்றுக்கெழுந்த உரைகள் மற்றும் பண்டைத் தமிழ்க்கல்வெட்டுகள், செப்பேடுகள் முதலியனவே அக்காலப்பகுதியின் ஆய்வு நோக்கிலே முதற் கவனத்தைப் பெற்றன. அவற்றை உரியவாறு புரிந்துகொள்ளுதல் மற்றும் சமகாலச் சிந்தனைச் சூழலுக்கு ஏற்ப அவற்றை விளக்கியுரைத்தல் என்ற வகையிலான செயன்முறைகளை மையப்படுத்தியதாகவே மேற்படி இரு துறைகளின் ஆய்வியல் இயங்குநிலையானது 1950கள் வரை தொடர்ந்தது. உயர்நிலைப் பட்டங்கள்சார் ஆய்வேடுகளுக்கான தலைப்புகளும் பெரிதும் மேற்படி பண்டைய இலக்கிய - இலக்கணப் பரப்புகள் சார்ந்தே தேர்ந்துகொள்ளப்பட்டு வந்தன.

மேற்படி நிலை 1950களின் பிற்பகுதியிலிருந்து மாறத் தொடங்குகிறது. தமிழர் பாரம்பரியம் என்பது தமிழகம், ஈழம் முதலிய அயல்நாடுகளுடன் மட்டுப்பட்டதன்று என்பதும், உலகளாவிய நிலையில் விரிந்து பரந்தது என்பதான சிந்தனை தமிழ்க்கல்விச்சூழலில் உருவாகி வளர்ந்த காலப் பகுதி, இது. மேலைநாட்டு உயர்கல்வித் துறைகளில் உருவாகி வந்த மொழியியல் மற்றும் மார்க்ஸிய நோக்கு முதலியன இக்காலப் பகுதியிலே தமிழ்க் கல்விச் சூழலில் கால்பதிக்கத் தொடங்கின. இவ்வாறான சூழல்சார் சிந்தனை மாற்றம் மற்றும் ஆய்வுநிலைகளிலான புதிய வரவுகள் என்பவற்றுக்கு ஏற்றவகையில் மேற்படி இரு பல்கலைக்கழகங்களின் தமிழ்த் துறைகளின் இயங்குநிலைகளிலும் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் நிகழத்தொடங்கின.

இவ்வாறான இரு காலகட்ட இயங்குநிலைகள் பற்றிய மேலதிக செய்திகளை அடுத்துவரும் வரும் கட்டுரைகளில் நோக்குவோம்.

(தொடரும்...)

subramanian.n@thaiveedu.com

இறுதி இலை

- ஓ'ஹென்றி

தமிழில்: என்.கே. மகாலிங்கம்

ஓ' ஹென்றியின் இயற்பெயர் வில்லியம் சிட்னி போட்டர். (1862-1910) புகழ் பெற்ற அமெரிக்க சிறுகதை எழுத்தாளர். இவரை அமெரிக்க மாபாசான் என்றும் சொல்வார்கள். நகைச்சுவை, ஆச்சரியமான திடீர் திருப்பமும் முடிவும், குறும்புத்தனம், சொல் விளையாட்டுக்கள், இதமான கதாபாத்திர வார்ப்பு, சுருக்கமான, நளினமான மொழி ஆகியவற்றுக்குப் பெயர் போனவை இவரின் கதைகள். எழுத்தாளர்கள், பொலிஸ்காரர்கள், பரிசாரகர்கள் போன்ற சாதாரண மக்களே இவரின் கதாபாத்திரங்கள். நியுயோர்க்கே பெரும்பாலான கதைகளின் பின்னணி. இவர் வங்கியில் வேலை பார்த்தபோது பணத்தைக் களவாடியதற்காக சிறை சென்றவர். இவருடைய சிறுகதைகளான The Gift of Magi, The Ransom of Red Chief, A Retrieved Reformation, The Cop and the Anthem போன்றவை சிறந்த சிறுகதைகளாக இன்றும் பேசப்படுபவை. இவரின் பெயரில் வருடாந்தம் சிறந்த சிறுகதைகளுக்கான விருது அளிக்கப்படுகிறது. அமெரிக்காவில் மிக மதிப்புள்ள விருதுகளில் அதுவும் ஒன்று. இந்தச் சிறுகதை கோவிட்-19 தொற்றுக் காலத்தில் நடைபெறும் ஒரு கதையின் அங்கமாகப் பார்க்கக் கூடிய மனிதாபிமானக் கதை.

வோஷிங்ரன் சதுக்கத்திற்கு மேற்கே உள்ள ஒரு சிறிய நகரம், அது. அதன் ஒரு சிறிய பகுதியில் வீதிகள் தாறுமாறாகச் சென்றன. அங்குமிங்கும் எல்லாப் பக்கமும் திரும்பின. சிறிய சிறிய பகுதிகளாக மாறி 'இடங்கள்' என்று சொல்லப்பட்டன. ஒரு வீதி இன்னொரு வீதிக்குள் ஒரு முறையோ இரு முறையோ சென்று முடிந்தது. ஓர் ஓவியன் அந்த வீதி மதிப்பு மிக்கது என்பதை ஒருமுறை கண்டுபிடித்தான். அவனிடம் கடனுக்கு வாங்கிய ஓவியம் தீட்டுவதற்கான பொருட்கள் இருந்தன என்று வைப்போம். அவற்றுக்கு பணம் கட்டுவதற்கு அவனிடம் பணம் இல்லை. கடன் கொடுத்தவன் வந்து அந்த வீதியால் நடந்தால் சடுதியாக அவன் திரும்பவும் அதே வீதிக்கு வந்து சேருவான். இறுதியில் அவன் ஒரு சதம் கூட பெறாமல் திரும்பிப் போவான்! அப்படியான இடம் அது.

நகரத்தின் இந்தப் பகுதியை கிறீன்விச் கிராமம் என்று அழைப்பார்கள். அந்தப் பழைய கிறீன்விச் கிராமத்திற்கு ஓவியர்கள் விரைவில் வந்து சேர்ந்தார்கள். அங்கே நல்ல வெளிச்சம் உள்ள, குறைந்த விலையில், விருப்பமான அறைகள் கிடைத்தன.

அங்கே மூன்று தளங்கள் உள்ள ஒரு கட்டடத்தில் சூவும் ஜோன்ஸியும் வாழ்ந்தார்கள். அந்த இளம் பெண்களில் ஒருத்தி மெயினிலிருந்தும் மற்றவள் கலிஃபோர்ணியாவிலிருந்தும் வந்தவர்கள். அவர்கள் இருவரும் எட்டாவது வீதியிலிருந்த ஓர் உணவகத்தில் சந்தித்து சிநேகிதமானார்கள். இருவரும் ஒரே வகையான ஓவியத்திலும் ஒரே வகையான உடுப்புக்களிலும் விருப்பமானவர்கள் என்று அறிந்து கொண்டார்கள். அதனால் ஒன்றாக வாழவும் வேலை செய்யவும் தீர்மானித்தார்கள்.

அது நடந்தது இளவேனில் காலத்தில்.

குளிர்காலம் ஆரம்பித்தபோது கிறீன்விச் கிராமத்திற்குள் இரக்கமற்ற குளிர்ந்த ஓர் அந்நியன் நுழைந்தான். அவனை ஒருவராலும் கண்ணால் காண முடியவில்லை. அவன் இங்கே ஒருவனையும் அங்கே ஒருவனையும் தன் இரக்கமற்ற விறைத்துக் குளிர்ந்த விரல்களால் தொட்டான். அவன் மோசமான ஒரு நோய். மருத்துவர் அவனை நிமோனியா என்று அழைத்தார்கள். நகரத்தின் கிழக்குப் பக்கத்திற்கு அவன் அவசரமாக வந்தான். பலரைத் தொட்டான். ஆனால் கிறீன்விச் கிராமத்தின் ஒடுங்கிய வீதிகளில் அவன் அத்தனை அவசரமாக வரவில்லை.

திரு நிமோனியா கண்ணியமான முதிய ஒரு கனவான் அல்ல. கண்ணியமான முதிய கனவானாக இருந்திருந்தால் கலிஃபோணியாவைச் சேர்ந்த பலவீனமான சின்னஞ்சிறிய ஒரு பெண்ணை துன்புறுத்தி இருக்க மாட்டான். திரு நிமோனியா ஜோன்ஸியை தன் இரக்கமற்ற குளிர்ந்த விரல்களால் தொட்டான். அசைய முடியாமல் அவள் கட்டிலில் படுத்தாள். பக்கத்து வீட்டுச் சுவரை யன்னல் ஊடாகப் பார்த்துக் கொண்டு அசையாமல் படுத்துக் கிடந்தாள்.

ஒருநாள் காலை. ஓய்வில்லாமல் இயங்கும் மருத்துவர் ஒருவர் முன் கூடத்தில் ஜோன்ஸின் காதுக்கு கேட்காத தூரத்தில் நின்று சூவுடன் கதைத்துக் கொண்டிருந்தார்.

'அவள் உயிர் வாழ்வதற்கு அதிக வாய்ப்பில்லை. அப்படி அவள் உயிர் பிழைக்க வேண்டுமென்றால் அவளுக்கு சிறியதொரு வாய்ப்புத் தான் இருக்கிறது. உயிருடன் இருக்க விருப்பம் இல்லாத ஒருத்தருக்கு என்னால் அதிகம் ஒன்றும் செய்ய முடியாது. உன் சின்னஞ்சிறிய சீமாட்டி உயிர் வாழ விருப்பமில்லை என்று தீர்மானித்து விட்டாள். அவள் மனதை ஏதாவது துன்புறுத்துகிறதா?' என்று கேட்டார் மருத்துவர்.

'அவளுக்கு இத்தாலிக்குப் போக வேண்டும், நேப்பிள்ஸ் குடாவை வரைய வேண்டும் என்று விருப்பம் பல காலமாக அவள் மனதில் இருந்தது,' என்றாள் சூ.

'ஓவியம் தீட்டுவது! ஓவியம். ஓர் ஆண் மகனை விடவும் வேறொன்றை விரும்புவது ஒரு பெண்ணுக்கு இந்த உலகத்தில் இருக்கிறதா? ஓர் ஆண்?'

'ஆணா? அவன் அப்படி பெறுமதி உள்ளவனா? இல்லை மருத்துவரே. அவளுக்கு ஆணில் விருப்பமில்லை.'

'அதுவொரு பலவீனம். எனக்குத் தெரிந்ததை நான் செய்வேன். ஆனால் ஒரு நோயாளி தான் சாகப் போகிறாள் என்று உணர ஆரம்பித்தால் என் வேலையில் அரைவாசி கூடப் பிரயோசனம் இல்லை. குளிர் காலத்துக்குரிய புதிய ஆடைகளைப் பற்றி அவளுடன் பேசு. எதிர்காலம் பற்றிய ஆர்வம் இருந்தால் அவள் தப்புவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன.'

மருத்துவர் சென்ற பின் அழுவதற்காக சூ தன் அறைக்குச் சென்றாள். பின் ஓவியம் தீட்டுவதற்கான சில பொருட்களையும் எடுத்துக் கொண்டு ஜோன்ஸின் அறைக்குச் சென்றாள். பாடிக் கொண்டு வேலை செய்தாள்.

ஜோன்ஸி அங்கே படுத்திருந்தாள், மிகவும் மெலிந்து போய், மிகவும் அமைதியாக. யன்னலை நோக்கி முகம் இருந்தது. ஜோன்ஸி தூங்குகிறாள் என்று நினைத்து சூ பாடுவதை நிறுத்தினாள்.

பின் சூ ஓவியம் கீற வெளிக்கிட்டாள். அப்போது மெதுவான ஓசை ஒன்று திரும்பத் திரும்பக் கேட்டது. அது என்ன என்று பார்ப்பதற்காக ஜோன்ஸின் கட்டிலடிக்குச் சென்றாள்.

ஜோன்ஸின் கண்கள் திறந்திருந்தன. யன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டு எண்ணிக் கொண்டிருந்தாள். பின்னிருந்து முன்னாக.

'பன்னிரண்டு,' என்றாள். சற்று நேரத்திற்குப் பின், 'பதினொன்று' என்றாள். பிறகு 'பத்து' என்றாள். பின் 'ஒன்பது,' அதன் பின் 'எட்டு,' பின் 'ஏழு.' இரண்டு எண்களையும் ஒன்றாகச் சேர்த்துச் சொன்னாள்.

தொடர்தல் 111ம் பக்கம்

இறுதி இலை...

110ம் பக்கத் தொடர்ச்சி...

சூ யன்னலுக்கு வெளியே பார்த்தாள். எண்ணுவதற்கு அங்கே என்ன இருக்கிறது? ஓரளவு தூரத்தில் அடுத்த வீட்டின் சுவர்ப் பக்கம் இருந்தது. அந்தச் சுவருக்கு யன்னல் இல்லை. முதியமரம் ஒன்று சுவருக்குப் பக்கத்தில் வளர்ந்திருந்தது. குளிர் காலத்தின் குளிர் அதைத் தாக்கியிருந்தது. ஏறக்குறைய எல்லா இலைகளும் கருமையான அந்த மரத்திலிருந்து விழுந்து விட்டன.

‘அன்பானவளே, என்ன நடக்கிறது?’ என்றாள் சூ.

‘ஆறு,’ என்றாள் ஜோன்ஸி, மேலும் மெதுவான குரலில். ‘இப்போ மேலும் வேகமாக விழுந்து கொண்டிருக்கின்றன. மூன்று நாட்களுக்கு முன் அதில் நூறு வரை இருந்தன. அதை எண்ண எண்ண எனக்குத் தலை வலித்தது. இப்போ எண்ணுவதற்குச் சுலபமாக இருக்கிறது. அந்தா இன்னொன்று விழுகிறது. இப்போ ஐந்து மட்டுந்தான் இருக்கின்றன.’

‘என்ன ஐந்து, என் அன்பானவளே? உன் சூவிற்குச் சொல்.’

‘இலைகள். அந்த மரத்திலுள்ள இலைகள். இறுதி இலை விழும்போது நானும் போய் விடுவேன். அது கடந்த மூன்று நாட்களாக எனக்குத் தெரியும். உனக்கு மருத்துவர் சொல்லவில்லையா?’

‘ஓ, நான் அதைப்பற்றிக் கேள்விப்படவே இல்லை. அதில் எந்த அர்த்தமும் இல்லை. ஒரு முதிய மரத்திற்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? அல்லது நீ குணமாவதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? முன்பு உனக்கு அந்த மரத்தை நல்லாகப் பிடிக்குமே? மடைச்சி மாதிரி கதைக்காதே. நீ தேறி விடுவதற்குள்ள வாய்ப்புக்கள் அதிகம் உள்ளது என்று மருத்துவர் இன்று காலை சொன்னார். தேறி விடுவதற்கு மிகவும் நல்ல வாய்ப்புள்ளது என்றார்! இப்போ கொஞ்சம் சாப்பிடு. நான் வரைவதற்குச் செல்ல வேணும். என் படத்தை விற்று உனக்கு உணவு வாங்கித் தருவேன். அதை உண்டு நீ பலம் பெறுவாய்.’

‘நீ எனக்காக ஒன்றும் வாங்கத் தேவையில்லை,’ என்று சொல்லிவிட்டு, ஜோன்ஸி யன்னலுக்கு அப்பால் பார்த்தாள். ‘அந்தா இன்னொன்று விழுகிறது. இல்லை, எனக்கொன்றும் சாப்பிடத் தேவையில்லை. இப்போ நாலு இருக்கிறது. இன்றிரவுக்கு முன், கடைசி இலை விழுவதை நான் பார்க்க வேணும். அதன் பிறகு நானும் போய் விடுவேன்.’

ஜோன்ஸி என் அன்பே, உன்னுடைய கண்களை மூடிக் கொள். நான் வாழ்வேன் என்று எனக்கு உறுதிமொழி தருவாயா? நான் என் ஓவியத்தைக் கீறி முடிக்கும் வரை யன்னலுக்கு வெளியே பார்க்கமாட்டேன் என்று எனக்கு உறுதி மொழி தருவாயா? நாளைக்கிடையில் இந்தப் படத்தைக் கீறி முடித்துத் தயாராக வைத்திருக்க வேண்டும். எனக்கு அந்த வெளிச்சம் வேண்டும். அதனால் யன்னல் திரையை மூட முடியாது,’ என்றாள் சூ.

‘அடுத்த அறைக்குப் போய் உன் வேலையைச் செய்ய முடியாதா?’ என்று உணர்ச்சியற்று ஜோன்ஸி கேட்டாள்.

‘நான் உன்னுடன் இருக்கத்தான் விரும்புகிறேன். நீ அந்த இலைகளைப் பார்ப்பதை நான் விரும்பவில்லை,’ என்றாள் சூ.

‘நீ அந்தப் படத்தைக் கீறி முடித்தவுடன் எனக்குச் சொல்லு,’ என்று சொல்லி விட்டுக் கண்களை மூடிக் கொண்டு வெளிறிப் போய் அசையாமல் படுத்தாள் ஜோன்ஸி. ‘கடைசி இலை விழுவதை நான் பார்க்க வேண்டும். அதற்காக நான் காத்திருந்து களைத்து விட்டேன். அதைப்பற்றி போதியளவு நினைத்துக் களைத்து விட்டேன். அந்த இலைகளில் ஒன்றைப் போல கீழே கீழே மிதந்து செல்ல வேண்டும்.’

‘நித்திரை கொள்ள முயற்சி செய். நான் பேர்மனை இங்கே வரச் சொல்லி அழைக்க வேணும். ஒரு ஆணை இந்தப் படத்தில் வரைய வேணும். அந்தப் படம் பேர்மனைப் போல இருக்க வேணும். நான் திரும்பி வர ஒரு நிமிஷத்திற்கு மேல் செல்லாது. நான் வரும்வரை எங்கும் போய் விடாதே,’ என்றாள் சூ.

முதியவரான பேர்மன் ஓர் ஓவியர். அந்த வீட்டின் முதலாம் மாடியில் வசிக்கிறார். அவருக்கு அறுபதுக்கு மேல் வயது. ஓர் ஓவியராக அவர் வெற்றி பெறவில்லை. நாற்பது ஆண்டுகளாக ஓவியம் வரைகிறார். ஆனால் ஒரு நல்ல படத்தைக் கூட அவரால் வரைய முடிந்ததில்லை. எப்பொழுதும் தலைசிறந்த பெரும் படம் ஒன்றை வரைய வேண்டும் என்று சொல்லிக் கொண்டிப்பார். ஆனால் அவர் அதை வரையத் தொடங்கவே இல்லை.

மற்றவர்கள் படம் கீறுவதற்காக அவர்கள் முன் குந்தி இருப்பதன் மூலம் அவருக்குக் கொஞ்சப் பணம் கிடைத்தது. அவரிடம் சென்றபோது அதிக மது அருந்தி இருந்தார். அது சூவிற்கு மணத்தது. அவள் ஜோன்ஸியைப் பற்றியும் மரக்கொடியில் இருந்த இலைகளையும் பற்றியும் சொன்னாள். ஜோன்ஸி இலையைப் போல மிதந்து போய் விடுவாள் என்று தனக்குப் பயமாக இருக்கிறது என்று சொன்னாள். இந்த உலகத்தில் அவளுக்குப் பிடிப்புக் குறைந்து கொண்டு போகிறது என்றாள்.

முதிய பேர்மன் அதைக் கேட்டுக் கோபத்தில் கத்தினார்.

‘என்ன? அப்படியான முட்டாள்களும் இருக்கிறார்களா? மரத்திலிருந்து இலை விழுவதற்காக ஒருத்தி சாவாளா? அப்படியான ஒன்றை நான் கேள்விப்பட்டதே இல்லை. நீ படம் வரையும் போது நான் அங்கே வந்து அதற்காக இருக்க மாட்டேன். அப்படி அவள் நினைப்பதற்கு நீ அவளை ஏன் விடுகிறாய்? பாவம், அந்த ஜோன்ஸி!’ என்று சத்தம் இட்டார்.

‘அவள் மிக மிக நோயுற்று இருக்கிறாள். நோய் அவளுக்கு இப்படியான விசித்திரமான எண்ணங்களை அவள் மனதில் ஏற்படுத்தியிருக்கிறது. திரு பேர்மன் நீங்கள் வர மாட்டேன் என்று சொன்னால் வர மாட்டீர்கள் தான். அப்படிச் சொல்வதால் நீங்கள் மிகவும் நாகரீகமானவர் அல்ல என்றே நான் நினைக்கிறேன்,’ என்றாள் சூ.

‘இது தான் பெண்!’ என்று கத்தினார் பேர்மன். ‘யார் சொன்னது நான் வர மாட்டேன் என்று? நீ போ. நான் வருகிறேன். அரை மணி நேரமாக நான் வருகிறேன் என்ற சொல்ல முயற்சிக்கிறேன். உனக்கு விளங்கவில்லை. கடவுளே! ஜோன்ஸியைப் போன்ற நல்ல பெண் சுகமில்லாமல் கிடப்பதற்கு இது நல்ல இடமில்லை. ஒரு நாள் நான் என்னுடைய தலைசிறந்த படைப்பை வரைவேன். அதன் பின் இந்த இடத்தை விட்டு நாம் எல்லோரும் சென்று விடுவோம். கடவுளே! ஓம்.’

அவர்கள் மேலே சென்றபோது ஜோன்ஸி துயின்று கொண்டிருந்தாள். சூ யன்னல் திரையை மூடி விட்டு பேர்மனை அடுத்த அறைக்குக் கூட்டிச் சென்றாள். அங்கே இருந்து யன்னலுக்கு வெளியே மரத்தைப் பயத்துடன் பார்த்தார்கள். பின்னர் பேசாமல் ஒருவரை ஒருவர் ஒரு கணம் பார்த்துக் கொண்டார்கள். குளிர்ந்த மழை விழுந்து கொண்டிருந்தது. சற்று உறைபனியும் அதில் கலந்திருந்தது.

பேர்மன் வரைவதற்காக சூ முன் குந்தினார். சூ வரைய ஆரம்பித்தாள்.

ஏறக்குறைய இரவு முழுவதும் வரைந்தாள்.

காலையில் ஒரு மணி நேர நித்திரையின் பின் ஜோன்ஸியின் கட்டிலடிக்குச் சென்றாள். ஜோன்ஸி பெரிதாகத் திறந்த கண்களுடன் யன்னல் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தாள். ‘நான் வெளியே பார்க்க வேணும்,’ என்று சூவிடம் சொன்னாள்.

சூ யன்னல் திரையை நீக்கினாள்.

இரவு முழுவதும் விடாமல் பெய்த கடும் மழையிலும் கடுமையாக அடித்த காற்றிலும் கூட, சுவருக்குப் பக்கத்தில் ஓர் இலை இன்னும் பார்க்கக் கூடியதாக இருந்தது. மரக் கிளையின் அருகில் கரும் பச்சை நிறமாக அந்த இலை இருந்து கொண்டிருந்தது. இலையின் ஓரம் முதிர்ச்சியினால் மஞ்சள் நிறமாக மாறிக் கொண்டிருந்தது. நிலத்திலிருந்து ஏறக்குறைய இருபது அடி உயரத்தில் மரக் கிளையில் அது தொங்கிக் கொண்டிருந்தது.

‘அதுதான் கடைசி இலை,’ என்றாள் ஜோன்ஸி. ‘அது நேற்றிரவு விழுந்திருக்கும் என்று நான் நினைத்தேன். காற்றடித்தது எனக்குக் கேட்டது. இன்று அந்த இலை விழும். அப்போது நானும் இறந்து விடுவேன்.’

‘அன்பே, அன்பே ஜோன்ஸி,’ என்றாள் சூ. ‘உன்னைப் பற்றி யோசிக்கா விட்டாலும் என்னைப் பற்றியாவது யோசித்துப் பார். நீ போய் விட்டால் நான் என்ன செய்வேன்?’

ஜோன்ஸி அதற்கு மறுமொழி சொல்லவில்லை. உலகத்திலேயே மிகத் தனிமையான ஒரு செயல், ஒரு ஆன்மா நீண்ட தன் இறுதிப் பயணத்துக்கு ஆயத்தம் செய்வதுதான். அவளுடனான நட்பும் உலகத்துடனான தொடர்பும் இணைத்த கட்டுக்கள் ஒவ்வொன்றாக உடைந்து கொண்டிருந்தன.

அன்றைய பகல் மெதுவாகக் கடந்து சென்று கொண்டிருந்தது. இருட்டானபோது அந்த இலை சுவருக்குப் பக்கத்தில் இருந்த மரக்கிளையில் இன்னும் தொங்கிக் கொண்டிருந்தது. இரவு வந்தபோது வட காற்று வீச ஆரம்பித்தது. யன்னலில் மழை மோதி பெய்து கொண்டிருந்தது.

அடுத்த நாட்காலையில் போதிய வெளிச்சம் வந்தது. யன்னலின் வெளியே தன்னைப் பார்க்க விட வேண்டும் என்று ஜோன்ஸி திரும்பவும் ஆணை இட்டாள்.

அப்போதும் இலை இருந்து கொண்டிருந்தது.

அதைப் பார்த்துக் கொண்டு ஜோன்ஸி அதிகநேரம் படுத்திருந்தாள். பிறகு சாப்பிடுவதற்காக, ஏதோ சமைத்துக் கொண்டிருந்த சூவை அழைத்தாள்.

‘நான் ஒரு மோசமான பெண், சூ,’ என்றாள் ஜோன்ஸி. ‘நான் எத்தனை மோசமானவள் என்று காட்டுவதற்காகத் தான் அந்தக் கடைசி இலையை அங்கே இருக்க எதுவோ வைத்துள்ளது. சாக வேண்டும் என்று விரும்புவது பிழை. இப்போ நான் சாப்பிடுகிறேன். ஆனால் முதலில் எனக்கு கண்ணாடி ஒன்றை கொண்டு வந்து தா. நான் என்னைப் பார்க்க வேணும். பிறகு எழும்பி இருந்து நீ சமைப்பதை நான் பார்க்க வேண்டும்.’

ஒரு மணி நேரத்திற்குப் பின், ‘சூ, ஒரு நாள் நான் நேப்பிள்ஸ் குடாவை வரைவேன்,’ என்றாள்.

மருத்துவர் பின் மதியம் வந்தார். சூ அவருடன் கதைப்பதற்காக அவரைப் பின் தொடர்ந்து ஜோன்ஸின் அறைக்கு வெளியே இருந்த கூடத்திற்குச் சென்றாள்.

‘இப்போ அவள் தப்பும் வாய்ப்பு அதிகம் உள்ளது,’ என்று மருத்துவர் சொன்னார். அவர் சூவின் மெலிந்த, நடுங்கும் கையைப் பிடித்து வைத்துக் கொண்டு, ‘அவளை நன்றாகக் கவனித்துக் கொள். அவள் குணமாகி விடுவாள். இப்போது நான் இன்னொரு நோயாளியை இந்த வீட்டில் பார்க்கப் போக வேணும். அவருடைய பெயர் பேர்மன். அவரும் ஒரு ஓவியர் என்று நினைக்கிறேன். அவருக்கும் நிமோனியா. மைக் ஒரு முதியவர். பலவீனமானவர். அவர் மிகவும் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளார். அவர் தப்புவார் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. அவரை இன்றைக்கு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்கிறோம். எங்களால் முடிந்தளவு அவரைக் குணமாக்க முயலுவோம்.’

அடுத்த நாள் மருத்துவர் சூவிற்குச் சொன்னார்: ‘அவளுக்கு இப்போது ஆபத்தில்லை. நீ அவளைக் காப்பாற்றி விட்டாய். இப்போது அவளுக்கு உணவும் கவனிப்பும் தான் தேவை. அவ்வளவுந் தான்.’

அன்று பின்மதியம் சூ, ஜோன்ஸ் படுத்திருந்த கட்டிலுக்கு வந்தாள். அவளை ஒரு கையால் அணைத்துப் பிடித்தாள்.

‘உனக்கு நான் ஒன்று சொல்ல வேணும். இன்று மருத்துவமனையில் பேர்மன் நிமோனியாவால் இறந்து போனார். அவர் இரண்டு நாட்களாகத்தான் நோயுற்று இருந்தார். அவருடைய அறையில் முதல் நாள் காலையில் யாரோ அவரைக் கண்டிருக்கிறார்கள். அவர் வலியால் துடித்துக் கொண்டு இருந்திருக்கிறார்.’

‘அவருடைய சப்பாத்துக்களும் போட்டிருந்த உடுப்புக்களும் நனைந்து போய் ஐஸ் மாதிரி இருந்திருக்கின்றன. அவர் எங்கே போயிருப்பார் என்று எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். முதல் நாளிரவு கடும் குளிரும் கடுமையான காற்றும் வீசியது.

‘அதன் பிறகு அவர்கள் இன்னும் சில பொருட்களைக் கண்டுள்ளனர். அவர் ஒரு வெளிச்சத்தை வெளியே எடுத்துச் சென்றிருக்கிறார். அத்துடன் வரைவதற்கான பொருட்களும் அதில் இருந்திருக்கின்றன. வண்ணச் சாயங்களும். பச்சையும் மஞ்சளும். அத்துடன்..

‘யன்னலுக்கு வெளியே பார், அன்பே. சுவரில்லுள்ள அந்தக் கடைசி இலையை. காற்று வீசும்போது அது ஏன் விழவில்லை என்பதைப் பார்த்து நீ ஆச்சரியப்படவில்லையா? ஓ, அன்பே, அது தான் பேர்மனின் தலைசிறந்த படைப்பு. இறுதி இலை விழுந்த அந்த இடத்தில் அவர் அதை வரைந்துள்ளார்.’

mahalingam.k@thaiveedu.com

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail: info@thaiveedu.com
Fax: 416-849-0594 Tel: 416-646-3422

Bringing Your Dreams To Life!

RE/MAX

மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி

RE/MAX REAL ESTATE CENTRE INC. BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED

Mahesan Subramaniam
BROKER

Free Home Evaluation with No Obligation

416-816-0141

141-1140 Burnhamthorpe Road West, Mississauga, ON L5C 4E9
Office : 905-270-2000 Fax : 905-270-0047
* Not intended to solicit properties already listed for sale, or buyers under contract.

RELAX INN
Life's better while Relaxinn

அன்பான உறவுகளே!
நீங்கள் - - -
தாயகம் செல்லும்போதும் சென்று திரும்பும் போதும் தங்கிச் செல்ல - - -
நீர்கொழும்பில் - ஓர் தரமான தங்கு விடுதி

" Relax Inn Guest House "
52/25 St' Philipneris Mawatha
Negombo – Sri Lanka
(9 km From Airport)

வசதிக்கேற்ப.சொகுசுக்கேற்ப, சுகாதாரத்திற்கு ஏற்ற அமைவிடம்.

சேவைகள் :
வாகன வாடகைகள், மற்றுமை ஒழுங்குகள், நிச மணி நேரம், தரம், வாரம்,
மாதமொரு தடவை ஒன்லைன் வாடகைகள், மலையக வாடகைகள், சுற்றுப்பயண ஒழுங்குகள், தொண்டர்ட்டப்களுக்கான பதிவுகள்

வாடகைகள் :
1 இருந்து 50 பேர் வரைக்கான தங்குமிடம், வாகனத் தரிப்பிடம், டீசல், kitchen, hot water, attached washrooms,
ஹொட்ட மற்ற சேவைகள்

மோகன் :(416) 436 0282, 94 71 214 2761 சிவா : (416) 277 9471
பதிவுகள்: *Air bnb | Info@relaxinngh.com | www.relaxinngh.com*

BUY & SELL HOMES, BUSINESS, LANDS..

PROFIT FROM MY EXPERIENCE, LISITNG.. 1% COMMISSION

Pat Pushpakanthan
Full Time Broker
416.894.1187

Century 21 Brokerage
AFFILIATE REALTY INC
80 Corporate Dr #208
Toronto
416-290-1200

nhome2025@gmail.com VISIT.. PATPUSH.COM

Brand new from builder
Oshawa. $764K

- Call for FREE Market Evaluation!
- FREE Home Staging*
- Spectacular Video
- Extensive Advertising
- Elaborate Marketing Professional Photography

Warden/
st.clair
3 Bedroom
3 Washroom
steps to
subway

CALL PAT for professional service
We helped many buyers and sellers to buy and sell homes in your area

- Sell in 10 days Program
- 100% Satisfaction.
- Pat Will Beat Any Deal
- Pat Help For Mortgages from 1.99%,
- New Home build & Home Renovation

RENTAL CORNER
1, 2, BEDROOM CONDO RENTAL FROM $1800.00, $2150
HOUSES RENTAL 2 bm 2wsrm $1700/-
Lee Centre Dr. 1+den 1950/-
CALL ME
416-894-1187

CALL PAT FOR
VVIP
Platinum
ACCESS

கடன் பிரச்சனைகளா?

- கடன் அட்டை சிக்கல்கள்
- வங்கிக்கடன் சிக்கல்கள்
- கலக்சன் கம்பனி போன் தொல்லை
- ஊதிய கையகப்படுத்தும் சிக்கல்கள்
- இது போன்ற கடன் பிரச்சனைகளால் தினந்தோறும் வீட்டில் சண்டை

நல்ல செய்தி

எம்மிடம் தீர்வு உண்டு

நம்மால் 80% வரை உங்கள் கடன்களை குறைக்க முடியும், உங்களால் முடிந்த குறைந்த மாதக்கட்டணம் மட்டும் செலுத்தலாம். இது ஒரு கடன் ஒருங்கிணைப்பு பெறுவது போல.

இலவச ஆலோசனை பெற

JANNET FINANCIAL SERVICES INC.
Ms. Jennet Sam & Mr. Stalin Dominic
Tel: 647-894-3876
FaX: 905-471-8080
Email: jennet_renni@hotmail.com

உடன் அழையுங்கள் உடனடியாக உங்கள் புதிய வாழ்க்கையை தொடங்க

PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS

OPEN HOUSE SAT & SUN 2-4 PM

19 BINGLEY RD, TORONTO
FINCH / MORNINGSIDE
4 2

FOR SALE

TORONTO
NEILSON RD / SHEPPARD AVE E
1 1

FOR SALE

TORONTO
MORNINGSIDE AVE / ELLESMERE RD
2 2

FOR SALE

TORONTO
MIDLAND / DANFORTH
2+1 2

FOR SALE

OSHAWA
DEAN / WILSON
3+2 2 SEP ENTRANCE

FOR SALE

OSHAWA
HARMONY RD / COPPERFIELD DR
3 3

FOR SALE

OSHAWA
THORNTON / ADELAIDE
3 3 FINISHED BASEMENT

FOR SALE

AJAX
WESTNEY / ROSSLAND / HARDWOOD
3+1 2 FINISHED BASEMENT

FOR SALE

TORONTO
MCCOWAN / 401
4 2

FOR SALE

TORONTO
MCCOWAN / 401
4 2

FOR SALE

TORONTO
MCCOWAN / ELLESMERE
2 2

FOR SALE

TORONTO
NEILSON / SHEPPARD
3 3 FINISHED BASEMENT

FOR SALE

TORONTO
LAWRENCE / SCARBOROUGH GOLF CL
3+2 2 FINISHED BASEMENT

FOR SALE

TORONTO
MARKHAM / LAWRENCE
3+3 2 SEP ENTRANCE

FOR SALE

TORONTO
RIVER ST TO RYNARD TO FAIRGROU
5 4

FOR SALE

TORONTO
ELLESMERE / SCARB. GOLF CLUB
3+2 2 FINISHED BASEMENT | SEP ENTRANCE

FOR SALE

TORONTO
NEILSON RD / SOUTH OF HWY 401
4 3 FINISHED BASEMENT | SEP ENTRANCE

FOR SALE

TORONTO
PORT UNION / 401
3 2 FINISHED BASEMENT W/O

FOR SALE

TORONTO
MEADOWVALE / ELLESMERE
3 4 FINISHED BASEMENT

FOR SALE

TORONTO
PORT UNION / SHEPPARD
4+1 3

POWER BROTHERS REAL ESTATE

UTHAYAN SIVARAJAH BROKER
416.301.5555
WWW.PYRAMIDGROUP.COM

SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777

ROYAL LEPAGE ignite
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
Independently Owned and Operated

பனி விழும் பனை வனம்

பகுதி: 3

- செல்வம் அருளானந்தம் -

அந்தச் சந்திப்பு நல்லாய்த் தான் போச்சுது. அடுத்த வாரமும் காணிவேலிலை சந்திக்கிறத்துக்குப் பத்மினி ஒத்துக் கொண்டா.

நான் ஆவணி 15ம் திகதி (1977) மாதா கோவில் திருவிழாவிற்கு போகவேண்டிய தாய் இருந்தது.

ஆனா, 16ம் திகதி காணிவேலுக்குப் பத்மினி வாறதாய்ச் சொன்னா. நான் நேரத்தோடு போயிருந்தேன்.

மற்ற நண்பர்களோடை ஒரு பக்கத்திலை போய் இருந்து பேசிக்கொண்டிருந்தோம். என்ர மனம் எப்படியும் வந்து விடுவா என்ற நம்பிக்கையோடு அவவை எல்லா பக்கமும் பார்த்துக்கொண்டிருந்தது. நேரம் இரவு ஒன்பது மணியாச்சு. ஆளைக் காணேல்ல. மனம் சோர்ந்து போயிற்று. காணிவேல் அமளியாய் போய்க்கொண்டிருந்தது.

பத்துமணி தாண்டியிருக்கும் என்று நினைக்கின்றேன். யோண்சன்தான் ஓடிவந்து சொன்னான்... அங்காலை கொஞ்சப் பெடியளும் பொலிஸ்மாரும் அடிபட்டுக் கொண்டிருக்கிறாங்கள் எண்டு.

வாங்கடா...போய் என்னெண்டு பார்ப்போம். நண்பர் குழாம் கிளம்ப... நான் வேண்டாம்... வேண்டாம்... மற்றப் பக்கத்தாலை வீட்டை போவோமடா எண்டன். ஒருத்தன்... இப்ப நாங்கள் ஆர் எண்டுறதைக் காட்டுவம். சிங்களப் பொலிசுமாருக்கு குடுக்க வேணும்... இதுதான்ரா சரியான சந்தர்ப்பம் எண்டு அந்தப் பக்கம் ஓடினான். பொலிஸ்மாருக்கு அடிக்க பல பெடியள் கூட, பொலிசார் ஓடத் தொடங்கினாங்கள்.

அங்க நிண்டவங்களிட்ட, என்ன நடந்தது என்று கேட்க...அங்காலை அழுது கொண்டு நின்ற நாலைஞ்சு பெண்களை காட்டி... வெறியைப் போட்டிட்டு வந்த பொலிஸ் காரங்கள் இந்தப் பிள்ளையளக் கரைச்சல் பண்ணி, அவையின்ர உடம்பை தொட வெளிக்கிடத்தான் அதில் நின்ற பெடியன் அடிபட வெளிக்கிட்டாங்கள் என்டு சொன்னாங்கள்.

பொலிசார் இரத்தம் ஒழுக ஒழுக ஓடியதை நானும் கண்டன். அவங்கள் கட்டாயம் ஆயுதங்களோட கனபேராய் வரக் கூடும் எண்ட பயம் எல்லாருக்கும் இருந்தது. கூட்டம் மெல்ல மெல்ல கலைஞ்சது. இந்தக்கலவரத்திலை பத்மினி வரேல்லை எண்ட கவலையும் கரைஞ்சு போச்சுது.

நாங்களும் மெல்லமாய் மாறி விட்டோம். அடுத்த நாள் ரவுணில ஏதோ கலவரம் என்று கேள்விப்பட்டுப் பார்க்கப் போனன். அங்கு ஏ.எஸ்.பி நுர்டினின்ட ஜீப் பஸ் நிலையத்துக்குப் பக்கத்திலை வந்த போது சில இளைஞர்களால தாக்கப்பட்டதாகவும், பொலிசார் திரும்பிவந்து ரவுணுக்க நின்ற எல்லாரையும் தாக்கியதாகவும், அப்ப... அங்க வந்த எதிரக் கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்தை ஒரு பொலிஸ்காரன் அடித்ததாகவும் நிண்டவங்கள் சொன்னாங்கள்.

ரவுண்க்குள்ள ஏகப்பட்ட பொலீஸ்காரர் வரத்தொடங்கினார்கள். நான் மணி கூண்டு வீதி பக்கமாய் போனன். அங்கேயும் பொலிசார் போற வாற எல்லாரையும் தாக்கிக் கொண்டிருந்தார்கள். பயத்தோடு திரும்பி ஆஸ்பத்திரி வீதியாலை போய்க் கொண்டிருக்கேக்கை இரண்டு மூன்று நண்பர்கள் ஒரு தேத்தண்ணிக் கடைக்கு முன்னால நிண்டாங்கள்.

‘பெரிய கலவரம் வரும்போல இருக்கு’ எண்டு அதிலை நிண்ட ஒருத்தர் சொல்ல... அங்காலை நிண்ட வேறொருவர் ‘ராத்திரி காணிவேலிலை பொலிசாருக்கு அடிச்சது மாத்திரமில்ல... இராத்திரி வடமராட்சியிலை எங்கையோ... பிராபகரனும் இன்னும் இரண்டு பேரும் பண்டா என்ற ஒரு சிங்கள பொலிசை சுட்டாங்களாம்’ எண்டார். பிரபாகரன் என்ற பெயரை நான் கேள்விப்படுறது இது இரண்டாவதோ இல்லை மூன்றாவது முறையாவோ இருக்க வேணும். முதல்ல துரையப்பா கொலையில் அந்த பெயர் அடிபட்டிருந்தது.

பிராபகரன் என்ற வல்லுவெட்டிதுறைப் பெடியன்தான் துரையப்பாவை சுட்டது எண்டும் இல்லை... இல்லை... அமிர்தலிங்கத்தின்ரை மகன் காண்டிபன்தான் சுட்டது எண்டும் வாதப்பிரதிவாதங்கள் என்ர வட்டத்துக்குள்ள எழும்பினபோதுதான் பிரபகாரன் எண்ட பெயர் எனக்குத் தெரிய வந்தது.

அண்டைக்கு இராத்திரி யாழ்பாணப் பட்டணம் எரிந்தது. 58ம் ஆண்டு நடந்த இனவழிப்பு எனக்குத் தெரியாது. 83ம் ஆண்டு அழிப்பின்போதும் நான் நாட்டை விட்டு வெளியேறி விட்டன். 77ம் ஆண்டு தமிழ் மக்களின் அழிப்பின்போது நான் ஒரு சாட்சியாய் இருந்தன். இலங்கை முழுக்கத் தமிழர்கள் வாழ்ந்த இடமெல்லாம் தமிழர்கள் தாக்கப்பட்டார்கள், பலர் கொல்லப்பட்டார்கள். சொத்துக்கள் அழிக்கப்பட்டன. குறிப்பாக மலையகத்தில் தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காகப் பலர் கொலை செய்யப்பட்டார்கள்.

இப்படி ஒரு இனத்தை மட்டுமே தாக்கின மற்ற இனம் சர்வதேசத்துக்கும் ஊடகங்களுக்கும் தமிழ், சிங்கள் இனக்கலவரம் எண்டு உள்ளூர் சிங்கள ஊடகமும் அரசாங்கமும் பொய் சொன்னாங்கள். அதுக்கு ஏற்ற மாதிரி ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனவும் மிக பெரிய இனவெறியனாய்ச்செயற்பட்டார். தமிழர்களைக்கொன்று கொண்டே போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்று பிரகடனப்படுத்தி சிங்கள மக்களைத் தூண்டி விட்டார். பெரும்பான்மை சும்மா இருக்குமோ? ஆப்பிட்ட தமிழரை தாக்கிச் சுருட்ட வேண்டியதையெல்லாம் சுருட்டிக் கொண்டு போனாங்கள்.

எனக்கொரு சிங்கள நண்பர் இருந்தவர். சில்வா எண்டுறது அவர் பெயர். அடைக்கல மாதா கோயிலுக்கு பக்கத்திலை வீடு. தாய், யாழ் சிறைச்சாலையில் ஜெயில கார்ட் வேலை பார்த்தவர். பிறகு யாழ்ப்பாணத்திலையே தங்கி விட்டவை.

இனவழிப்புத் தொடங்கி இரண்டாம் நாளோ மூன்றாம் நாளோ சில்வாவை தேடி அவர் வீட்டுக்குப் போனேன். அவர் நல்லாய்ச் சோர்ந்து போயிருந்தார். ஜே.வி.பி பிரச்சினையில் பிடிபட்டு அண்மையில்தான் விடுதலையாகி வந்திருந்தார். முதலாளித் துவத்தின் ஆகப் பெரிய கொடுமையிது. சிங்கள மக்களின் வறுமையும் வேலையில்லாக் கொடுமையும்தான் இதுக்குக் காரணம் எண்டார். அவர் கதைக்கிறதைக் கேட்கிற மனநிலையிலை நான் இல்லை.

நீங்கள் பாதுகாப்பாக இருக்கின்றீர்களோ..? கடை தெருவுக்குப் போய் வாறது ஏதாவது பிரச்சினையோ..? ஏதாவது உதவி தேவையோ... எண்டன்.

அப்படியொன்றும் இல்லை...யாழ் பொலிஸ் நிலைய அதிகாரிதான் எங்களை உடனே யாழ்ப்பாணத்தை விட்டுப் போகட்டாம். தமிழர்களை நம்ப முடியாது எண்டும், நாளைக் காலை எங்களை தயராயிருக்கச் சொல்லியிருக்கிறார் எண்டார்.

எங்களுக்கு எங்கை போறது? என்று தெரியாது. ஊரைவிட்டு வந்து கனகாலம் எண்டு சொல்லிக் கவலைப்பட்டார்.

இரண்டு நாளைக்கு பிறகு, திரும்பிப் போய்ப் பார்க்க, வீடு வெறுமையாய் இருந்தது.

ஆனா, ஒரு பத்து பதினைந்து நாளிலை சில்வா திரும்பி வந்துவிட்டார். ‘தனக்கு, தன்ரை ஊரில் நண்பர்கள் இல்லை. அங்க இருக்கிறதுக்கு வீடும் இல்லை. செத்தாலும் இனி இங்கேதான்’ என்றார்.

சில்வா எனக்கு கொஞ்ச நாள் மிக நெருங்கிய நண்பனாய் இருந்தார். இவரை பற்றிப் பல கதைகளை நண்பர்களுக்குச் சொல்லியிருக்கின்றேன். ஒருமுறை நல்லூர் திருவிழாவுக்கு எங்களுடன் வந்தார். நாங்களே லோங்சோட போக அவர் வேட்டி கட்டிக் கொண்டு வந்தார். வேட்டியும் அவருக்கு சரியாய் கட்டத் தெரியவில்லை. இடையில் சனங்களுக்குள்ள நெரிபட்டு (அதுக்குத்தானே நாங்கள் போறது) போகேக்கை. தீடிரெண்டு ‘வெயிட் மச்சான் வெயிட் மச்சான்’ எண்டு கத்தினார். என்ன பிரச்சினை எண்டு கேட்க... ‘வேட்டி உடைஞ்சான் மச்சான்... வேட்டி உடைஞ்சான் மச்சான்... ஆரும் உதவி செய்யுங்கோ என்ர வேட்டி கீழே விழ முதல்ல என்னைப் பிடியுங்கோ மச்சான்’ என்று கத்தினார். வேட்டி உரிஞ்சதைத்தான் அவர் அப்படிச் சொல்லுகிறார் எண்டுறதை விளங்கிக்கொள்ள கொஞ்ச நேரம் எடுத்தது.

கலவரம் நடந்த கொஞ்சக் காலத்தால அவருக்கு சிங்கள மாகாவித்தியலையத்திலை ஆசிரியர் வேலை கிடைச்சது. பிறகு கல்யாணம் முடிச்சு அன்ராசபுரம் போய் விட்டார், தொடர்பு இல்லாமல் போயிற்று. கொழும்பிலை வெளிநாட்டுக்குப் போக வந்து நிண்ட நேரம், என்னுடைய கல்வித் தாரதர சேட்டிபிக்கட் எடுக்க கல்வி இலாகாவுக்கு போகேக்கை... அங்கு ஏதோ அலுவலாய் வந்த சில்வா என்னைக் கண்டு விட்டார்.

கண்டவுடன் கட்டிப்பிடிச்சு அணைச்சு; பார்த்து எவ்வளவு காலம்? எண்டு மழலைத் தமிழிலிலை அன்பைச் சொரிந்தார்.

வெளிநாட்டிற்குப் போறத்துக்கு நிற்கிறன் எண்டபோது, அவர் கண்கள் கலங்கிப் போச்சு. ‘தமிழர்களுக்கு இனி கஸ்ரம் தான்... ஆயுதம் வந்துவிட்டதெல்லே’ எண்டு சொல்லிக்கொண்டு தன்னுடைய விலாசத்தை எழுதித்தாற மாதிரி அந்த

தொடர்தல் 116ம் பக்கம்

பனி விழும் பனை...

115ம் பக்கத் தொடர்ச்சி...

பேப்பரோடை சேர்த்து 50 ரூபா பணம் தந்தார். வேண்டாம் வேண்டாம் எண்டு நான் மறிக்க... 'மச்சான் எத்தனை தடவை உன்னோடு தேத்தண்ணீர் குடிச்சிருப்பன். இதை வைச்சுக்கொள்' எண்டு திணிச்சார்.

எந்த நாட்டுக்குப்போறாய்? எண்டு கேட்ட போது 'அதுதான் தெரியேல்லை... என்னை அனுப்பிற ஏஜென்சிக்குக் கூடச் சரியாய் தெரியாது. போனகிழமை ஜேர்மனி எண்டான். இரண்டு நாளுக்கு முதல்ல பிரான்ஸ் எண்டான். இண்டைக்கு கேட்கிறார் 'லண்டனுக்கு அனுப்பட்டோ...' எண்டு. 'எங்கட வருகையாலை எந்த நாடும் அதிஸ்ட்டம் பெறப் போகுதே... எதெண்டாலும் வடிவான நாட்டுக்கு அனுப்பு' எண்டு சொல்லிப்போட்டுக் காத்திருக்கிறம் எண்டன்.

'என்ன மச்சான் எப்பவும் உனக்கு பகிடி-தான்' எண்டு சில்வா சொன்னார். இப்ப அவருக்கு தமிழும் தடக்கத் தொடங்கியிருந்தது. அதுதான் நான் அவரைக் கடைசியாய் கண்டது.

தமிழ் மக்கள் மீதான காடையர்களின்ர தாக்குதல் குறைய, கொழும்பிலை இருந்து கப்பலிலை அகதிகளாகத் தமிழ்மக்கள் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு இந்தியாவின்ரை உதவியோடை வருகிறார்கள் எண்டு கேள்விப்பட்டவுடன எங்கள் சைக்கிள்கள் காங்கேசன்துறையை நோக்கிப் போனது. அங்கையும் ஒரு சம்பவம் நடந்தது. நண்பர் குலம் அங்க அடி வாங்க வேண்டியதாய்ப் போச்சு.

கப்பலிலை இருந்து இறங்கி வள்ளங்கள் வழியாய் கரைக்கு வந்த சனங்கள் பதிவு செய்ய நிரையாய் வந்து கொண்டிருக்கேக்கை...குலம் தன்ரை வசன காவியங்களை விடத் தொடங்கினான்.

அது, 1977 தேர்தல் நேரம். கூட்டணியின் பத்திரிகையான சுதந்திரனிலை வந்த தலையங்கம் சிலதை எடுத்து விட்டான்.

கூட்டணியின்ர தேர்தல் கூட்டத்துக்கு வந்த பெருவாரியான சனத்தின்ரை படத்தை பேப்பரிலை போட்டிட்டு, 'வெள்ளம் போல் தமிழர்... எங்கிருந்து வந்ததோ இக்கூட்டம்...' 'சங்கிலியன் பெரும் படையோ... சரித்திரத்தின் திருப்பமிதுவோ...' எண்ட வசனங்களும்

யாழ்ப்பாண எம்.பி.யாய் வெண்ட வெற்றிவேல் யோகேஸ்வரனின்ரை படத்தையும் பெயரையும் போட்டிட்டு, 'துள்ளி வருகுது வேல், தள்ளி நில் பகையே...' எண்டும்...

வெற்றியடைஞ்ச கூட்டணி எம்பிமாற்ரை படங்களைப் போட்டிட்டு..., 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' எண்டும் உணர்ச்சியைத் தூண்டுற வசனங்கள் அந்தப் பேப்பரிலை இருந்தது.

இந்த வசனங்களை குலத்தான் சத்தமாய்ச் சொல்லிக்கொண்டு நிண்டான். ஏன் அப்படிச் செய்தான் எண்டுறது எங்களுக்குத் தெரியேல்லை. ஆனா அதுவொரு நக்கலாய்யும் இருந்தது.

தள்ளி அங்காலை தொண்டுவேலை செய்து கொண்டிருந்த கூட்டணிப் பெடியளுக்கு இவற்றை நக்கல் விளங்கிட்டுது போல. ஓடிவந்தாங்கள். வந்தவங்கள் குலத்தை வெளுத்து வாங்கிட்டாங்கள்.

எங்களை அப்பவே துரோகியள் பட்டியலிலை சேர்த்திட்டாங்கள் போல.

இந்த கலவரம் ஏறக்குறைய கணிசமான தமிழரை ஆயுதப்போராட்டத்தை ஆதரிக்கத் தூண்டினது எண்டுறதுதான் உண்மை. கனக்க பெடியளும் அந்தப் பக்கமாய் வெளிக்கிட்டிட்டாங்கள்.

கலவரம் என்ர வாழ்க்கையையும் விட்டு வைக்கேல்லை. கொழும்பிலை கணவ-னோடை வாழ்ந்து கொண்டிருந்த பத்மினியின்ரை அக்கா அகதியா ஒரேயடியாய் யாழ்ப்பாணம் வந்துவிட்டா. 77 கலவரம் எனக்காக நடந்த மாதிரிப் போயிற்று.

இரண்டு மூன்று வருடத்துக்கு முதல் நடந்த சம்பவம் ஒண்டு ஞாபகத்திற்கு வந்தது. பண்டதரிப்பிலை இருந்து 787 இலக்க பஸ்சிலை ஏறி யாழ்ப்பாணத்துக்குப் போய்க்கொண்டிருந்தன்.

பஸ்சிலை பெரிய கூட்டம் இல்லை. பஸ் மானிப்பாய்க்கு வந்தபோது 'திடும் திடும்' எண்டு கூட்டம் ஏறிச்சுது. பஸ் நிரம்பிச்சுது. அன்டைக்கு மருதடிப் பிள்ளையார் கோயில் தேர். பஸ் ஒருமாதிரி முக்கித் தக்கி யாழ்பாணத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

மானிப்பாய் ஆஸ்பத்திரி தாண்டி ஒரு கொஞ்ச நேரத்திலை... ஒரு மனுசி 'ஐயோ.. யாரோ என்ர சங்கிலியை அறுத்துபோட்டான் ஐயோ ஐயோ... பஸ்சை நிப்பாட்டுங்கோ' எண்டு சத்தமாயக் கத்த, ட்ரைவர் திடுகிட்டுப் போய் பஸ்சை நிப்பாட்டினார்.

ஒருத்தரும் பஸ்சாலை இறங்கப்படாது... பஸ்சை ஆனைக்கோட்டை பொலிசுக்கு விடுங்கோ எண்டு நடத்துனர் ரைவருக்கு உத்தரவிட்டார்.

ஒருத்தரும் பஸ்சாலை இறங்காமல் இருக்க இரண்டு பெடியங்கள் பஸ்சின்ரை வாசல் படிக்கட்டில காவலுக்குத் தொங்கிக் கொண்டு நிண்டாங்கள்.

பஸ் ஆனைக்கோட்டை பொலிஸ் ஸ்ரேசனுக்கு போயிற்று. அங்கு பத்து இருபது நிமிசமாய் வியர்த்துக் கொட்ட பஸ்சுக்குள்ள இருந்தம். மூன்று நாலு பொலிஸ் காரர் வந்தாங்கள். ஏதோ துப்பறியும் சிங்கங்கள் மாதிரி ஒவ்வொருத்தராய் இறக்கிச் சோதித்தார்கள்.

ஒரு மணித்தியாலம் மேலை ஆகியும் திருடனைப் பிடிக்க முடியேல்லை. ஆனா பொலிஸ் ஒரு ஆளை மட்டும் பிடிச்சு வைச்சு, அங்காலை தள்ளிக் கொண்டு போய் வாய்க்கையும் செக் பண்ணிப் பார்ந்தாங்கள்.

அதற்கிடையிலை இன்ஸ்பெக்டர் வந்து சங்கிலி களவு கொடுத்த மனுசியைப் பார்த்து 'நாங்கள் வடிவாய் எல்லாம் சோதித்து போட்டம் நீ கோயிலடியிலை தான் சங்கிலியை தொலைத்திருப்பாய் பஸ்சுக்கை கழுத்தைப் பார்த்திட்டுக் கத்தியிருப்பாய்' எண்டு சத்தம் போட்டு விட்டு 'எல்லாம் பஸ்சிலை ஏறுங்கோ' எண்டார்.

நானும் இன்னொருவரும் அந்த பிடிபட்ட மனிசனுக்கு என்ன நடந்தது? எண்டு பார்க்க ஸ்ரேசனுக்குள்ள போனம். அவர் இப்ப ஒரு வாங்கிலிலை இருந்தார். என்னண்ணை நடந்தது உங்களை மட்டும் பிடிச்சு வச்சிருக்கிக்கிறாங்கள்? எண்டு கேக்க, அவர் ஒரு தயக்கமும் இல்லாமல்

'உழைப்புக் குறைவு தம்பி... மாத-கலிலை இருக்கிற ஒரு வியாபாரியிட்டப் போய் கள்ளக் கடத்தலிலை வாற 15 சங்குமார்க் சாறங்களை வேண்டிக்கொண்டு ரவுணிலை இருக்கிற ஒரு கடைக்குக் குடுத்தால் குடும்பச் சாப்பாட்டுக்கு ஐஞ்சுபத்துக் கிடைக்கும். இது இடைக்கிடை நான் செய்யிற தொழில். இண்டைக்கு இப்பிடியாகிப் போச்சு. அந்த முதலாளிக்கு எப்படி காசை கொடுக்க போறனோ தெரியாது' எண்டு அழுதார்.

'உண்மையிலை அந்த மனுசியின்ரை சங்கிலி கனவு போனதோ இல்லையோ எனக்குத் தெரியாது, ஆனா இந்தச் சம்பவம் நடந்தது என்ர சாறங்கள் பிடிபடத்தான். விதி வலியாது தம்பி' என்றார்.

77 கலவரம் எதுக்காகவும் நடந்திருக்கலாம். ஆனா அது என்ர காதலை ஒருகை பார்க்கத்தான் நடந்தது எண்ட மாதிரி இருந்தது.

selvam.a@thaiveedu.com

OUR FREE SERVICES / WHY? REALTOR KATHIR

For Home Owners

- ✓ Home Staging
- ✓ Newspaper & Flyer Advertisement
- ✓ High Resolution Picture & Virtual Tour
- ✓ Four Page Colour Feature Sheets
- ✓ Weekends Open House
- ✓ Guaranteed Weekly Feedback
- ✓ Social Media Marketing
- ✓ Full MLS Listing Service
- ✓ Sale Sign & Direction Signs
- ✓ Market Evaluation
- ✓ Radio & Web Tool Advertisement
- ✓ Professional & Friendly Service

LOW Commission

- Over 10 yrs Experience Realtor
- Multi Award Winner Since 2006
- Excellent Negotiation Skill
- Quick Sale with Low Commission
- Professional & Friendly Services
- Home Sellers' Programme
- Home Buyers' Programme
- Mortgage Brokers, Lawyers, Inspector Team.
- Getting Low Rate Mortgage

SELL WITH KATHIR
& GET MAX. PRICE

Buy with Kathir & Get Dream Home

HomeLife/Future Realty Inc., Brokerage *Independently Owned and Operated
O: (905)201-9977 F: (905)201-9229
205-7 Eastvale Dr., Markham,Ont, L3S 4N8

Kathir Kathirgamanathan B.A,
Real Estate Broker
Dir: 416-230-6462

MORTGAGE SOLUTIONS

SAVE UPTO 75% REFINANCE

MONTHLY SAVING

$ 2,409

		Before	After
Mortgage Payment	$320,000 @ 2.90%	$1,498.02	-
Auto Loan	$21,000 @ 7.50%	$764.25	$0.00
Line of Credit - 1	$16,000 @ 6.50%	$566.67	$0.00
Line of Credit -2	$12,500 @ 7.00%	$447.92	$0.00
Credit Card -1	$ 8,800 @12.00%	$352.00	$0.00
Credt Card - 2	$ 5,200 @ 19.00%	$238.34	$0.00
Store Card	$ 3,000 @ 24.00%	$150.00	$0.00
New Mortgage	$386,500 @ 2.9%		$1,605.00
Total Debt		$ 386,500.00	$ 386,500.00
Total Payment		$4,014.20	$1,524.55

KIRUBA THANABALASINGHAM

Mortgage Agent Lic# M12002440

info@mortgagesolutions.ca

www.MortgageSolutions.ca

Ultimate Mortgage and Finance Solutions Inc. Lic#11995

Prime + 1% Lower Rate

$50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

416.298.2777

$ 375 Mo.

MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

நீங்கள் ஒரு பிறைவேட் மோட்கேஜ் கொடுப்பவரா?

உங்கள் முதலீட்டை மீள பெற சிக்கலாக உள்ளதா?

அப்படியானால் இப்படிப்பட்ட சில சிக்கல்களை எதிர்கொள்கிறீர்களா?

அடமானம் எடுத்தவர்கள் மாதாந்த கட்டுப்பணம் செலுத்த தவறுதல்.

மற்றைய மோட்கேஜ்களுக்கு ஒழுங்காக பணம் செலுத்த தவறுதல்.

வீட்டுக் காப்புறுதி கட்டணம் ஒழுங்காக செலுத்த தவறுதல்.

கொண்டோ காசு, புறப்பட்டி ரக்ஸ் செலுத்த தவறுதல்.

வேறு மோட்கேஜ் கொடுத்தவர்கள் பவர் ஒப் சேல் நோட்டீஸ் அனுப்பி இருப்பது.

அடமானம் பெற்றவர்கள் மீளத்தர முடியாமல் மறுக்கும் நிலைமை.

வருமுன் காப்பதே சிறந்தது

தயா PK கந்தையா BAS, LLB (Hons)

வழக்கறிஞர்

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

416-333-1001

(மெசேஜ்சிலை விடுங்கோ, கட்டாயம் திருப்பி உங்களுக்கு போன் அடிப்பேன்)



COURT FILE NO.:

ONTARIO
SUPERIOR COURT OF JUSTICE

BETWEEN: [redacted] Plaintiff

- AND -

[redacted] Defendant

STATEMENT OF CLAIM (MORTGAGE ACTION - FORECLOSURE)

TO THE DEFENDANTS

A LEGAL PROCEEDING HAS BEEN COMMENCED AGAINST YOU by the Plaintiff. The claim made against you is set out in the following pages.

IF YOU WISH TO DEFEND THIS PROCEEDING, you or an Ontario lawyer acting for you must prepare a statement of defence in Form 18A prescribed by the Rules of Civil Procedure, serve it on the Plaintiff's lawyer or, where the Plaintiff does not have a lawyer, serve it on the Plaintiff, and file it, with proof of service in this court office, WITHIN TWENTY (20) DAYS after this Statement of Claim is served on you, if you are served in Ontario.

If you are served in another province or territory of Canada or in the United States of America, the period for serving and filing your Statement of Defence is 40 days. If you are served outside Canada and the United States of America, the period is 60 days.

SPECIMEN

NOTICE OF SALE UNDER CHARGE

TO: THE PARTIES SHOWN ON SCHEDULE "A" ATTACHED HERETO

TAKE NOTICE that default has been made respecting payments and other covenants under a certain charge of land made between [redacted] as charger and [redacted] as chargee, on the security of:

[redacted], METROPOLITAN TORONTO CONDOMINIUM [redacted] PT BLK 43 66M2331, PTS 15, 16, 17, 18 & 19 64R15561 AS DESCRIBED IN SCHEDULE "A" OF DECLARATION ID203234 SCARBOROUGH, CITY OF TORONTO

PIN [redacted] Toronto, Ontario

Municipally known as: [redacted] M1V 5E3.

and registered in the Land Registry Office for the Land Titles Division of Toronto (No. 80), on the 20th day of December, 2017 as Instrument No. [redacted] (the "Charge").

AND [redacted] hereby gives you notice that the amounts now due on the Charge for principal, interest and costs, are as follows:

Principal Balance	$70,000.00
Interest to October 22, 2019	$6,928.00
Pre-Payment Interest Penalty	$2,598.00
NSF Fee	$1,200.00
Administration Fee	$1,500.00
Statement Preparation Fee	$475.00
Legal Fees and Disbursements to be incurred in this notice	$2,500.00
TOTAL	$85,201.00

SPECIMEN

(such amount for costs being up to and including the service of this notice only, and thereafter such further costs and disbursements will be charged as may be properly together with interest at the rate of 13.00% per annum, on the principal, interest and costs hereinbefore mentioned, from May 15, 2019.

AND UNLESS the said sums are paid on or before June 20, 2019, the undersigned shall sell the property covered by the said Charge under the provisions contained in it.

THIS NOTICE is given to you as you appear to have an interest in the charged property and may be entitled to redeem the same.

DATED at Toronto, Ontario on May 14, 2019.

[redacted]

By its solicitors

[redacted]

Barrister & Solicitor

Thaya PK Kandiah BAS, LLB (Hons)
Barrister, Solicitor & Notary Public

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION

T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002

Credit Recovery - Mortgage Enforcement - Real Estate Law - Family Law

Legal Advise - Legal Research - Legal Analysis - Legal Referrals - Document Review - Document Drafting

NO MEDICAL
UP TO $500,000

- ✓ $0 first month's premium
- ✓ No medical exams
- ✓ Simple and straightforward
- ✓ 18-80 years can apply

MEDICAL INUSRANCE FOR
SUPER VISA

100%
REFUND IF VISA DENIED

Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist

Direct: **416.918.9771**
Business: **416.321.2500**

MDRT
Member of Million Dollar Round Table

Life100
INSURANCE & INVESTMENTS INC.

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca

La Capitale | iA Financial Group | Canada Protection Plan

Are you getting Million Dollar advice

- digi Media -

Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...

வீட்டுக்கடன்
வியாபாரக்கடன்
முதலீட்டுக்கடன்

வருமான உத்தரவாதம்
இல்லாமலே
பெற்றுக் கொடுக்கப்படும்

கடன் தேவையா?
என்னை அழையுங்கள்
ரம்போ தர்மலிங்கம்

KAPITAL CARE MORTGAGE INC.

Rambo Tharmalingam
Mortgage Agent

5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5

647-290-3416 / 416-543-1111

LIFEPLAN INVESTMENTS

Akilan Barachandran, CFP, CLU, CHS, EPC
Founder and CFO

WE CAN HELP BUILD YOUR FUTURE
Insurance • Investments • Tax and Estate Planning
905 294 PLAN (7526) | www.lifeploninvestments.ca | 416 894 2009

Download Free MyLIFEPLAN App
App Store | Google Play

Vaughan நகரில் புதியதோர் பல் வைத்திய நிலையம்
Dr. Annahvathany Sivakumaran, DMD
Dr. வதனி சிவகுமாரன்
Tel: 905-553-5266 | courtyardsdental@gmail.com
அனைத்து காப்புறுதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.
All Procedures including:
• Braces • Cosmetic Dentistry • Root Canal Treatment
• Implants • Wisdom Tooth Extraction • Oral Diseases
2396 Major Mackenzie Dr. W., Unit #6, Vaughan,
(Keele & Major Mackenzie) Parking available

Mega Financial Group
உங்கள் அனைத்து விதமான காப்புறுதித் தேவைகளுக்கும்.
Call Now
Raj Nadarajah
President & C.E.O.
416-666-1120
PH28 - 4168 Finch ave. E. Scarborough, ON M1S 5H6

நீங்கள் வீடு வாங்கும்போது
$8475.00
வரை அரச வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492
Swapna Chari, Broker HomeLife Galaxy Realestate Brokerage, Ltd.
301-111 Grangeway Ave, Toronto, Ontario, M1H 3E9 tel: 416-284-5555

CUSTOM BUILT HOMES COMING SOON
2019 SUMMER CLOSING • DETACHED HOMES
MEADOWVALE RD AND ELLESMERE RD
2 CAR GARAGE • 4 BEDROOMS • 4 WASHROOMS
NO HOMES AT THE BACK • 4 CAR PARKING
30 MINS WALK TO U OF TORONTO SCARBOROUGH
MORE INFO CALL 416-670-6467

Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
DIR: 416 457 4509
OFF: 416 270 1111
nandakandasamy@gmail.com
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

உங்கள் இல்லக் கனவுகளை நிஜமாக்கிட ...
GAJAN MAHAKANAPATHY
416.999.2777
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Realtorgajan.com
905.239.9222 info@realtorgajan.com

DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan BDS, MFDS, RCSD
3150 Eglinton Ave E, Unit-5
Scarborough
Markham & Eglinton
416.264.3232
8351 Markham Rd, Unit-129
Scarborough
Markham & Steeles(Red Building)
416.609.2022

Rathiga Thillaivannan BCom
Sales Representative
Buying / Selling/ Leasing/ Investing
Dir: 647.839.0079
rathiga24@hotmail.com
Homelife/Future Realty Inc.,Brokerage*
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
205-7 Eastvale Dr, Markham ON. L3S 4N8
*Independently owned And Operated

Kugaraj Ratnasabapathy
Sales Representative
Dir: 416-786-3332
RE/MAX ACE
BROKERAGE
Independently owned and operated
416-270-1111
3-1286 Kennedy Road, Toronto, ON M1P 2L5

Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com

Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5
Dir: 416-276-9999
Bus:416-270-1111 | Fax:416-270-7000
RE/MAX ACE REALTY INC., BROKERAGE
www.vaheesanrealtor.com
Email:gvaheesan@hotmail.com

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd.,
Brokerage* 31 Progress Ave, Suite 210, Toronto ON, M1P 4S6

NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
iNFORCE LIFe Financial Services Inc.
10 Milner Business Court, Suite 707
Scarborough, ON M1B 3C6
Dir: 416-909-0400 Bus: 416-321-6000 x400
career@inforcelife.com www.inforcelife.com
QUALITY ADVICE YOU CAN TRUST
CHANDRAN RASALINGAM CHS
President & CEO

Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
5215 Finch Ave. E., Suite: 203
Toronto, Ontario
Cell: 416 505 8532
Office: 416 321 6969
Fax: 416 321 6963
tharma11@yahoo.com
5215 Finch Ave. E., Suite: 203, Toronto, Ontario

DR. YALINI ARAVINTHAN BDS. DDS.
DENTIST
YA Smiles Dental Clinic
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524
7475 MCCOWAN RD, MARKHAM, ON L3S 3J6
WWW.YASMILES.CA

உலகின் முன்னணி காணி, வீடு விற்பனை நிறுவனமான RE/MAX முதல் தடவையாக யாழ் மண்ணில்
RE/MAX NORTH REALTY
077 566 0000
www.remaxnorth.lk
info@remaxnorth.lk
83 Kankesanthurai Road, Jaffna
LATHAN VARATHARAJAH
Broker Owner
+94 76 493 3331
+1 416 230 7007
lathan@remaxnorth.lk